லண்டன்

சாமர்த்தியத் திருடர்கள்.

பண்டிதர். P. R. கிருஷ்ணமாசாரியர் அவர்கள்

இயற்றியது.

முதற் பதிப்பு

சென்னை திருவல்லிக்கேணி:

ஷாறுஜால் றெரிநிப்பா அச்சுக்கூடம்.

1912.

காபிரைட்.] [விலை, ரூபா 1.

187

Y65.56
N12
170614

கடவுள் துணை.

லண்டன் சாமர்த்தியத் திருடர்கள்.

(முதல் பாகம்.)

இது
பண்டிதர்-பாலஸரஸ்வதி
P. R. கிருஷ்ணமாசாரியர் அவர்களால்
இயற்றப் பெற்று,

சென்னை - திருவல்லிக்கேணி
M. A. ஷாஹுல்ஹமீது லெப்பை அவர்களது
நன்முயற்சியால், தமது

திருவல்லிக்கேணி,
ஷாஹுல் ஹமீதிய்யா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

1912

விலை ரூபா, 1.] (COPY-RIGHT.) [தபாற்கூலி பிரத்யேகம்.

MADRAS
287
413

முகவுரை.

சென்னை, திருவல்லிக்கேணியிலுள்ள 'ஷாஹுல் ஹமீதிய்யா' அச்சுக்கூடத் தலைவராகிய ம-ா-ா-ஸ்ரீ, எம். ஏ. ஷாஹுல் ஹமீதிய்யா லெப்பை அவர்களின் வேண்டுகோட்கிணங்கி நாம் இச்சிறிய நூலை இயற்றினோம். இதில், நரைத்தலைச்சங்கம், காணாமற்போன கணவன், பயங்கரமான படுகொலை, விநோதமான வினாவிடைப் பத்திரம், ராஜாங்க உடன்படிக்கை என்ற ஐந்து கதைகள் அடங்கியிருக்கின்றன. இக்கதைகளின் வாயிலாய் உலகத்தில் அயோக்கியர்களாக வுள்ளோர் பிறரை யேமாற்றுவதற்காகச் செய்யும் பற்பலவிதமான மோசங்களின் பிரகாரத்தையும், ஹண்டர் என்னும் சிறந்த போலீஸ் வீரனொருவன் தன் துப்பறியும் சக்தியால் அம்மோசங்களைக் கண்டுபிடித்த பிரகாரத்தையும் விளக்கிக் காட்டி யிருக்கின்றோம்.

"தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற, தீயார்சொற் கேட்பதுவுந் தீதே — தீயார், குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ, டிணங்கி யிருப்பதுவுந் தீது." என்று மேலோர் கூறியபடி தீயோர்களாகிய திருடர் கொலையாளிகள் முதலியோர்களது சரித்திரமாகிய இந்நூலைப் படிப்பதனால் தீது விளையாதோ வெனில், விளையாது. 'இராவணவதம்' என்ற நூலில் துஷ்டனாகிய இராவணனுடைய பற்பல விதமான அக்கிரமச் செயல்கள் கூறப்பட்டிருப்பினும், புருஷோத்தமனாகிய சக்கரவர்த்தித் திருமகனரது திவ்ய சரித்திரமே பிரதானமாகக் கூறப்பட்டிருப்பதனால், அந்நூல் தன்னைப் படிப்பவர்க்கு நற்குண நற்செயல்களை யுண்டாக்குவதுபோல, இந்நூலில் அயோக்கியர்களுடைய சரித்திரம் கூறப்பட்டிருப்பினும் முக்கியமாய்க் கூறப்பட்டிருப்பது ஹண்டருடைய சரித்திரமே யாகையால், இந்நூல் தன்னைப் படிப்பவர்க்குத் துப்பறியும் சக்தியையும் லோக நடவடிக்கைகளையும் நன்கறிவித்து நன்மையை விளக்குமே யன்றி ஒருபோதுந் தீமையை விளக்காதென்க. மேலும்,

முகவுரை.

"இல்லது முள்ளது மாமிவ் விருநிலம்
பொல்லதும் நல்லதும் பொருந்து நீர்மையால்
நல்லது கற்றல்போல் நவையி னேங்கிய
அல்லது கற்பது மமைவ தாகுமால்."

என்று ஒரு மகாகவி கூறியபடி இருள்தருமாஞாலமாகிய இப்பூவுலகத்தில் தீச்செயல்களும் நற்செயல்களுங் கலந்திருக்கின்றபடியால், இவ்வுலகத்திலிருந்து காலங்கழிக்க வேண்டியவர்களாகிய இருவினை வசத்தர்களாய நாமும் இவ்வுலக ஸ்வபாவமாகிய நன்மை தீமைகளை யொக்க அறிந்திருக்க வேண்டுவது அவசியமே யாமென்க.

இந்நூல் பொதுவாக எல்லார்க்குமே பயன்தரக்கூடியதாயினும் முக்கியமாய்ப் போலீஸ் உத்தியோகத்திலுள்ளவர்களுக்குப் பெரிதும் பயனளிக்குமென்பது நந்துணிபு.

இதன் மறறை மூன்று பாகங்களும் ஒன்றன்பின் ஒன்றாய்ச் சீக்கிரம் வெளிவரும்.

சென்னை.
20—11—1912.

பி. ஆர். கி.

லண்டன் சாமர்த்தியத் திருடர்கள்.

முகவுரை.

லண்டன் நகரத்தைப்பற்றி நான் உங்களுக்கு அதிகமாக ஒன்றுஞ் சொல்லவேண்டுவதில்லையென்று நினைக்கிறேன். கல்வி, கைத்தொழில், வியாபாரம் என்னும் இவைகளால் நாளுக்குநாள் விருத்தியாகி இப்போது அந்த லண்டன் நகரம் ஒரு குபேரபட்டணம்போல் விளங்குகின்றது. உலகத்தில் மற்றெங்கும் காணாத அதிசயப் பொருள்களையெல்லாம் நாம் அங்கே ஒருங்கு காணலாம். "புவிகளிற் சிறந்த பொருளெலாம் பொருந்திப் போகங்களனைத்திற்கு மிடனாய்க், குவிகளிற் செல்வம் தரும்புகைக் கலங்கள் கோடியிற் குலவுறக் கொண்டு, செவிகளிற் கேட்கும் தேவர்தம் நகரச் சிறப்பெலாம் நிதர்சன மாக்கிக், கவிகளிற் புகலும் கற்பனைக் கடங்காக் கவினது லண்டன்மா நகரம்" என்று ஒரு கவிவாணர் சிறப்பித்துக் கூறியுள்ளபடி, அது ஒரு போகபூமியாக விளங்குகின்றது. அந்த லண்டன் நகரத்தைத்தான் நமது செங்கோலரசராகிய ஜார்ஜ் அரசர் தம் வாசஸ்தானமாகக்கொண்டு நீதிசெலுத்தி வருகின்றார்.

இவ்வளவு மகிமை பொருந்தியதாயுள்ள அந்த லண்டன் பட்டணம் ஒருகாலத்தில், அதாவது சற்றேறக்குறைய ஐம்பது வருஷங்களுக்கு முன்னர், ஒருவிதத்தில் சிறிது குறைவுடையதாய் இருந்தது. அது என்னவென்றால், அப்பட்டணத்தில் அஸாதாரணமாக நடந்து வந்த ஆச்சரியத் திருட்டுக்களும் கொலைகளுமேயாம். எவ்வளவுக் கெவ்வளவு ஒரு நகரம் நாகரிகத்தில் விருத்தியடைகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு கொலை களவு முதலாகிய மோசங்களிலும் அது விருத்தியடையுமென்பது நிச்சயம். அப்

படியானால், நாகரிகத்தினாலுண்டான பயன்தான் என்ன? என்று நீங்கள் வினவக்கூடும். ஜனங்கள் நாகரிகமுடையவர்களாக இருப்பதனால்மட்டும் அவர்கள் சீர்திருந்தி நற்குணமுடையவர்களாக ஆவதில்லை. நாகரிகம் வேறு; நற்குணம் வேறு. நாகரிகத்திற்கும் நற்குணத்திற்கும் யாதொருவித ஸம்பந்தமுமில்லை. ஒருவன் அநாகரிகமுடைய பட்டிக்காட்டானாக இருக்கலாம். இருந்தும், அவன் எல்லா நற்குணங்களையும் அமையப்பெற்ற ஒரு உத்தமனாக இருக்கக்கூடும். நடையுடை பாவனைகளிலும், பேச்சுவார்த்தைகளிலும் நல்ல நாகரிகமுடையவனாய்க் காணப்படும் ஒருவன் யாவராலும், 'சீ, இவ்வளவுதானா!' என்று காரியுமிழும்படி அவ்வளவு அயோக்கியனாக இருப்பதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஆனால் ஒன்று மாத்திரம் உண்டு. நாகரிகமுடையவன் செய்யும் அயோக்கியத்தனமான காரியங்கள் சீக்கிரத்தில் வெளிப்படா. அவன் செய்யும் தீயகாரியங்களும் நாகரிகமுடையனவாகவே இருக்கும். நாகரிகம் பெருத்ததான லண்டன் நகரத்தில் நடந்து வந்த மோசங்களும் அத்தகையனவாகவே இருந்தன. கொலையோ, களவோ எது நடந்தாலும் சரி, அவை சாமானியமான கொலையாகவுங் களவாகவுங் காணப்படா. எப்படிப்பட்ட புத்திமானாலும் கண்டுபிடிக்க முடியாதவண்ணம் இருக்கும். எத்தனை போலீஸ்வீரர்கள் எத்தனைநாள் ஒன்றுசேர்ந்து யோஜித்தாலும் எள்ளளவு அனுமானமும் கிடைக்காது. அப்படிப்பட்ட கொலை களவுகளின் விருத்தாந்தத்தைக் கேட்டால் ஏதோ ஒரு கட்டுக்கதை மாதிரியாகத் தோற்றுமேயல்லது உண்மையாக நடந்தவொன்றாயிருக்குமென யாருமே நம்பமாட்டார்கள். இப்படிப்பட்ட ஆச்சரியமான கொலைகளவுகள் இப்போது ஐம்பது வருஷத்திற்குப் பின்னால் அதிகமாக நடப்பதில்லை.

ஹண்டர் (Hunter) என்னும் போலீஸ் வீரனொருவன் தோன்றி அத்தகைய குற்றங்களை நடக்கவொட்டாமலடக்கிவிட்டான். ஹண்டர் ஜீவித்திருக்குங் காலத்திலேதான் லண்டனிலுள்ள திருடர் முதலிய அயோக்கியர்களுக்கு ஜீவனமில்லாமற் போயிற்று. கொஞ்சமேனும் துப்பு அகப்படாத திருட்டுக்களையெல்லாம் இந்த ஹண்டர் எப்படியோ கூட இருந்தவன்போலக் கண்டுபிடித்துவிடுவான். இந்தக்கேசில் ஹண்டர் பிரவேசித்திருக்

நரைத்தலைச் சங்கம்.

சென்ற வருஷம் வசந்தகாலத்தின்போது ஒருநாட் காலையில் நான் என் நண்பனாகிய ஹண்டரைப் பார்க்கப்போயிருந்தேன். அப்போது, அவன், தலையெல்லாம் பாவட்டம் பூவைப்போல வெளேலென வெளுத்திருந்த ஸ்தூல சரீரமுடைய ஒரு கிழவருடன் ஏதோ முக்கியமானதொரு விஷயத்தைப்பற்றி ஆழ்ந்த யோஜனையுடன் பேசிக்கொண்டிருந்தான். வழக்கம்போலவே நேராக உள்ளே போன நான், அவ்விருவர்களும் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்து, 'ஏதோ யோஜனையிலிருக்கிறீர்கள்போலத் தோன்றுகிறது, மன்னிக்கவேண்டும். சற்று நேரங் கழித்து வருகிறேன்' என்று சொல்லிக்கொண்டே அவர்கள் பேசிக்கொண்டிருந்த அறையைவிட்டுத்திரும்பி இரண்டடிவைத்தேன். உடனே ஹண்டர் ஓடிவந்து என் கையைப்பிடித்து என்னை உள்ளே அழைத்துக்கொண்டுபோய் ஒரு நாற்காலியில் உட்காரவைத்துக் கதவையும் நன்றாகத் தாளிட்டுவிட்டு, "வெப்ஸ்டர்! நல்லசமயத்தில் வந்தாய். இப்போதுதான் உன்னை நினைத்தேன். உடனே நீயும் வந்துவிட்டாய். சமயத்தில் வந்ததைப்பற்றி கிரம்பவும் ஸந்தோஷம்."

"ஏதோ முக்கியமான ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பதாக நினைத்தேன்."

"ஆம், வாஸ்தவந்தான். மிகவும் முக்கியமானதொரு விஷயந்தான்."

"அப்படியானால், என்னால் யாதொரு விக்னமும் வேண்டாம். மெதுவாகப் பேசிவிட்டு வாருங்கள். நான் அதுவரையில் பக்கத்து அறையில் படித்துக்கொண்டிருக்கிறேன்."

"வேண்டாம், வேண்டாம்; இங்கேயே இரு. வில்ஸன்! இவர்தாம் என்னுடைய நண்பர். நான் கண்டுபிடித்துள்ள அநேகங் கேஸுகளில் என்னுடன் கூடவே யிருந்து எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்திருக்கிறார். உம்முடைய கேசிலும் தம்மாலான உதவியைச் செய்வாரென்பதில் சிறிதும் ஆக்ஷேபமில்லை." என்று அங்கே உட்கார்ந்திருந்த கிழவரை நோக்கிச் சொன்னான்.

கிறன் என்றால் குற்றவாளிகளாக உள்ளவர்களுக்கெல்லாம் திகில் தான். சில சமயங்களில் குற்றவாளிகளே நேரில் வந்து தங்கள் குற்றங்களை யொப்புக்கொண்டு தங்களை மன்னிக்கும்படி பிரார்த் திப்பதுமுண்டு. சுருங்கச்சொல்லில், ஹண்டர் என்னும் இந்த வீரன் உயிரோடிருக்குங் காலத்தில் லண்டன் நகரத்தில் கொலை களவுகள் அதிகமாக நடந்ததில்லை. ஏதோ இரண்டொன்று அபூர்வ மாக நடந்ததும் இந்த ஹண்டர் என்பவனால் கண்டுபிடிக்கப்படா மற் போகவுமில்லை. நாளைக்கும் ஹண்டர் என்ற பெயரைச் சொன் னால் அயோக்கியர்களுக்கு அந்தக்ஷணமே அடிவயிற்றில் ஜுரம் உண்டாகிவிடும். அவன் காலத்தில்தான் லண்டன் நகரவாஸிகள் நிர்விசாரமாய்த் தலைவைத்துப் படுத்தார்கள்.

இந்த ஹண்டர் என்னும் போலீஸ்வீரன் யாவன்? எப்ப டிப்பட்டவன்? என்பதைப்பற்றியும் நீங்கள் முன்னாடியே சிற்சில விஷயங்கள் தெரிந்துகொள்ள விரும்புவீர்களாகையால், அதைப் பற்றியும் இங்கே சிறிது சொல்வது அநாவசிய மாகாதென நினைக் கிறேன்.

ஹண்டர் உருவமானது காண்பவர் கவனிக்கத்தக்கதாயி ருக்கும். அவன் ஆறடிக்கும் அதிகமான உயரமுள்ளவன். அவ னது தேகம் அதிக ஸ்தூலமுள்ளது மன்று. மெலிந்தது மன்று. நடுத்தரமாக இருக்கும். அவன் கண்கள் மிகப் பளபளப்பாகவும், பார்வை கூர்மையாகவுமிருக்கும். அவனது மூக்கு மிகக் கூர்மை யாகவும் வளைவாகவுமிருக்கும். அதைப் பார்த்தமாத்திரத்திலேயே அவன் மிக்க ஜாக்கிரதை யுள்ளவனென்பதும், எதிலுங் குழப்ப மில்லாத நல்ல நிச்சயஞான முள்ளவனென்பதும் யாருக்கும் நன் ருக விளங்கும். அவனது நீண்ட மோவாயானது அவனது திட மான உறுதி இப்படிப்பட்டதென்பதை யாரும் சுலபமாய் அளந் தறியக்கூடிய வண்ணமாயிருக்கும். அவனது சுபாவமோ, நெடு நாள் உடனிருந்து பழகியவர்களுக்குங்கூட அறிய முடியாதபடி பலமாதிரியாக இருந்தது. அவன் அதிகமாய்ப் படித்தவ னல் லன். என்றாலும், சிற்சில விஷயங்களில் அவனுக்குள்ள ஞானமா னது பெரிய பண்டிதர்களுங்கூட ஆச்சரியப்படத்தக்கவண்ணம் அவ்வளவு அதிசயித்ததாயுமிருக்கும். இன்னவிதமான வித்தையில்

ஹண்டர் வல்லவன் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. ஆயினும், அவனுக்கு எல்லா சாஸ்திரங்களினுடைய மரியாதையும் நன்ருகத் தெரியும் என்று சொல்லலாம். ஒவ்வொரு சாஸ்திரத்திலும் சாராம்சமான பாகம் எதுவோ அதை நமது ஹண்டர் நிச்சயம் தெரிந்திருப்பான். காலம் முழுவதையும் கேவலம் ஒரு சாஸ்திரப் பயிற்சியிலேயே போக்குவது கூடாது என்பது அவன் கொள்கை. "கல்வி கடல்போலக் கரையற்றிருப்பதையும், கற்பவரது வாழ்நாள் நிச்சயிக்கமுடியாதபடி மிகவும் அற்பமாயிருப்பதையுங்கண்டு, ஒருவன் பாலேமாத்திரம் கிரகிக்கும் அன்னப்பறவையைப்போல சாரமானதும் அவசியமானதுமான விஷயத்தையே தெரிந்து கற்கக் கடவன்" என்று அடிக்கடி நமது ஹண்டர் உபந்யஸிப்பது வழக்கம். இவ்வளவிருந்தும், சாமானிய ஜனங்களுக்குங்கூட நன்ருகத் தெரியக்கூடிய சில லௌகிக விஷயங்கள் அவனுக்குத் தெரியாது. அதைக்கண்டு ஒருசமயம் அவனது நண்பர் சிலர் அவனைப் பரிஹஸித்தார்கள். அப்போது ஹண்டர் அவர்களைப்பார்த்து, "நியாயந்தான். இந்த அற்ப விஷயங்கூடத் தெரியவில்லையே என்று சிரிக்கிறீர்கள். ஆனல், என் அபிப்பிராயம் இப்படிப்பட்டதென்பதை நீங்கள் அறியீர்கள். ஒவ்வொருவருக்கும் ஞாபக சக்தியென்பது மிகவும் சுவல்பமாகவே இருக்கின்றது. ஆகையால், அதற்கேற்றபடி அவரவர்களுக்கு அவசியமான விஷயங்களை மாத்திரம் கற்று ஞாபகத்தில் வைக்கவேண்டுமேயன்றிக் கண்ட விஷயங்களையெல்லாம் கற்க முயல்வது கேவலம் அறிவீனமேயன்றி வேறில்லை. கற்ற எல்லாவிஷயங்களுமே பயன்படமாட்டா. சிலவிஷயங்களைமட்டும் தீரக் கற்ருல் அவை சமயத்திற்கு உபயோகமாகும். ஆதலால், எனக்கு அவசியமாக வேண்டியவற்றைத்தவிர மற்றவைகளை நான் நினைவில் வைக்கமாட்டேன். இந்த க்ஷணத்தில் தெரிந்துகொண்டாலும் அடுத்த க்ஷணத்தில் அடியோடு மறந்து விடுவேன்" என்று சொன்னதாகக் கேள்வி. ஹண்டரது தேகஸ்திதியும், படிப்பு விஷயமும் இப்படிப்பட்டது. இனி, அவனது செய்கையைப் பற்றியும் ஒருசிறிது சொல்லுகிறேன்.

ஹண்டரது செய்கைகள் மிகவும் புதுமையானவைகள். அவனது செய்கைகளையெல்லாம் பார்த்தால் கேவலம் ஒரு பயித்தியக்

காரன் என்றுதான் நாம் அவனைச் சொல்லவேண்டி வரும். ஒரு சமயம் ஹண்டர் பக்ஷிகளின் இரத்தத்தையும், மிருகங்களின் இரத்தத்தையும், மனிதர்களின் இரத்தத்தையும் வைத்துக்கொண்டு அவைகளில் ஒன்றுக்கொன்று எப்படி வித்யாஸப்படுகிறது என்பதைப் பரீக்ஷை செய்துகொண்டிருப்பான். அவைகளைத் தனித் தனி வஸ்திரத்திலும் ஆயுதத்திலும் தெளித்துக் காயவைத்துப் பார்த்துக்கொண்டுமிருப்பான். மற்றொரு சமயம் வைத்திய கலாசாலையில் பிணமறுக்கும் அறைக்குட் சென்று, அங்கே கிடக்கும் பிணங்களைத் தடியாற் பன்முறையும் ஓங்கி யோங்கி அடித்துக் காயப்படுத்தி, அக்காயத்திற்கும், சாவதற்கு முன்னுலேற்படும் காயத்திற்கும் என்ன வித்தியாஸமென்பதைப் பார்த்துக் கொண்டிருப்பான். இன்னொரு சமயம் தானே பலமாதிரியாக நீட்டியுங் குறுக்கியும் சாய்த்தும் எழுதிப்பார்த்துக்கொண்டிருப்பான். பின்னொரு சமயம் தானே பிச்சைக்காரன்போலவும், பிரபுபோலவும், வியாதிக்காரன்போலவும், கிழவன்போலவும், கிழவிபோலவும் வேஷந்தரித்துக் கொண்டு, அந்த வேஷங்களைக் கண்ணுடியில் உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பான். வேறொருசமயம், முப்பதடி தூரம் வேகமாகவும், மெதுவாகவும் நடந்து, அங்கே பதிந்துள்ள அடிச்சுவடுகளையும், பாதரக்ஷை போட்டுக்கொண்டு விரைவாகவும் மெதுவாகவும் நடந்து, பதிந்துள்ள அடிச்சுவடுகளையும் ஆழ்ந்த சிந்தனையுடன் கவனித்துக்கொண்டிருப்பான். பிறிதொருசமயம் கள்ளுக்கடை, கஞ்சாக்கடை, தாசிவீடு, சத்திரம், சாவடி, ரயிலடி முதலிய இடங்களில் இடத்திற்குத் தக்கபடி தன்னை யமைத்துக் கொண்டு அங்கு நடப்பவைகளையெல்லாம் குறிப்பாக நோக்கிக் கொண்டிருப்பான். அவன் வேலைசெய்வதென்று ஆரம்பித்தாலோ ராக்ஷஸன்மாதிரியாக வேலை செய்வான். தூங்க ஆரம்பித்தாலோ கும்பகர்ணனும் அதிசயப்படும்படி தூங்குவான். சிலசமயம் பித்துப் பிடித்துள்ளவன்போல ஜாமக்கணக்காய் ஒன்றுமே பேசாமல் கண்ணைமூடிக்கொண்டு, அப்படியே நாற்காலியில் சாய்ந்தவண்ணமாக இருப்பான். இப்படியெல்லாம் அவன் செய்துகொண்டிருப்பானேன்? என்று இதைப் படிக்கும் நமது நண்பர்கள் கேட்கக்கூடும். முதலெடுப்பிலேயே இந்த ஹண்டர் என்பவன் ஒரு போலீஸ் வீரனென்றும், இவன் காலத்தில் லண்டன் நகரத்தில்

அவ்வளவாகக் கொலை களவு முதலிய மோசங்களெதுவும் நடக்க வில்லையென்றும் நாம் சொன்னது நன்பர்களுக்கு ஞாபகமிருக்கக் கூடும். போலீஸ் உத்தியோகத்தில் நல்ல பெயரெடுக்கவேண்டு மென்று விரும்புகின்றவர்களெவரும் மேற்கூறிய எல்லா விஷயங் களையும் நன்கு யறிந்திருக்கவேண்டும். கொலை களவுக்கும், குடி காரனேடும் குச்சு நுழைகிறவனேடும் கலந்துபேசி உறவாடுவதற் கும் என்ன சம்பந்தம்? என்று நீங்கள் பின்னும் வினவலாம். இதற்கு ஹண்டரே தக்கபடி ஸமாதானம் சொல்லியிருக்கிருன். அதையே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், "உற்றுநோக்குந் திறனுடைய ஒருவன் எதைப் பார்த்தபோதிலும் அதைப்பற்றிய எல்லா மர்மங்களையும் அதிசுலபமாக அறிந்து கொள்ளலாம். ஒரு வனுடைய கண்ணேக்கம், முகவாட்டம், சரீர இயக்கம்,வாய்வார்த் தை முதலியவற்றிலிருந்து அவனது அந்தரங்கமான எண்ணங்க ளைத் திட்டமாக இன்னவைதாம் என்று அறுதியிட்டுச்சொல்லுதல் ஸாத்யம். எல்லா சாஸ்திரங்களையும்போல, ஒருவனுடைய நடை யுடை பாவனைகளினின்று அவனது அந்தரங்க அபிப்பிராயங்களை யறிதலும் ஒரு பிரமாண சாஸ்திரமே யாகும். இவ்விதத் தேர்ச்சி யானது பொறுமையுடன் உழைப்பவர்களுக்கு நாளடைவில் உண் டாகுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை. ஒருவனுடைய மனேபாவங் களையும் குணநிசயங்களையும் இப்படிப்பட்டவை எனத் தெரிந்து கொள்ளும் விருப்பமுள்ளவர்கள், முதன்முதலில் ஒரு மனிதனைப் பார்த்ததும் அவன் வரலாற்றையும், உத்தியோகத்தையும் கண்டு பிடிக்க முயலலாம். ஒருவன் உத்தியோகத்தை அவனுடைய கை நகங்களினுலும், உடைகளினுலும், கைவிரல்களின் வாட்டத்தினு லும், தேக அமைப்பு, முகப்பார்வை முதலியவைகளினுலும் நிச் சயமாய்த் தெரிந்துகொள்ளுதல் கூடும். இத்தனையும் என் அநுப வத்தில் வந்தவை. இவைகளே எனக்கு இப்போது சாப்பாடு போடு கின்றன. இந்த வழியில் ஜீவிப்பவன் நான் ஒருவன் மாத்திரந் தான். இந்த வழியால் நான் செய்த நன்மைகளுக்களவில்லை. இதனுலேயே நான் அரசாங்கத்தாரால் பெரிதும் சம்மானிக்கப் பெற்று இந்த உன்னத ஸ்திதியிலிருக்கிறேன்."

இந்த வார்த்தைகளைக் கேட்டால் நீங்கள் ஹண்டர் என்பவன் தற்புகழ்ச்சியில் விருப்பமுள்ள ஒரு வீணன்போலும் என்று ஒரு

வேளை நீங்கள் ஸந்தேகிக்கக்கூடும். ஹண்டர் அப்படிப்பட்டவனல்லன். தற்புகழ்ச்சியில் அவனுக்குச் சிறிதும் விருப்பமில்லை. உலகெங்கும் கொண்டாடப்பெற்ற அந்த மதிவாணனிடத்தில் இந்தப் பெருங்குறை எப்படியிருக்கும்? தான் எளிய ஸ்திதியிலிருந்து உன்னத பதவிக்கு வந்ததற்கு வேறு ஏதோ சில மாயவித்தைகள் தாம் காரணம் என்று சங்கித்த தன் தோழனுக்கு நம்பிக்கையுண்டாகச் சொன்ன வார்த்தையென்று இதை நம்புங்கள். உண்மையில் ஹண்டர் என்னும் போலீஸ் வீரனால் உண்டான நன்மைகளுக்கும் எல்லையில்லை. இந்த ஹண்டர் ஒருவன் மாத்திரம் இல்லாதிருந்தால் எத்தனையோ மாயத்திருட்டுக்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படாமலேயிருக்குமென்பதில் சிறிதும் ஸந்தேகமில்லை. இவன் கண்டுபிடித்த பலவிதமான கேசுகளில் நானும் இந்தஹண்டருடன் கூடவேயிருந்து அவனுக்கு வேண்டிய சகாயங்களை அப்போதைக்கப்போது செய்திருக்கிறேன். எனது நண்பனுடைய சாமர்த்தியம் இப்படிப்பட்டவை என்பதை யறிவிக்கவும்,அதனால் இப்போதுள்ள போலீஸ்காரர்களுக்கு ஒருவிதமாக அறிவு புகட்டி, அவர்களைக்கொண்டு உலகிற்கு ஏதேனுஞ் சிறிது நன்மையை விளைவிக்கவும் வேண்டுமென்பது நெடுநாளாக என் உள்ளத்திற் கிடந்த விருப்பம். அவ்விருப்பத்தை நிறைவேற்றுமாறு நான் என் நண்பன் கண்டுபிடித்த சிற்சில ஆச்சரியத் திருட்டுக்களை இங்கே எழுதுகிறேன்.

உடனே அந்தக் கிழவரும் தாம் உட்கார்ந்திருந்த நாற்காலியைவிட்டுச் சிறிது எழுந்து, எனக்கு மரியாதை செய்யும் பாவனையாய்க் கொஞ்சம்புன்சிரிப்புடன் என்னைப் பார்த்து,'அப்படியா' என்று தலையை அசைத்துவிட்டுத் திரும்பவும் உட்கார்ந்தார். "நல்லது! கூடியவரையில் முயற்சிசெய்து பார்ப்போம்" என்று சொல்லிவிட்டு, ஹண்டரும் தன் கீழுதட்டை இரண்டு விரலால் பிடித்து அசைத்துக்கொண்டே தன் நாற்காலியிற் சாய்ந்தான். பெரிய விஷயங்களைப்பற்றித் தீர்க்காலோசனை செய்துகொண்டிருக்கும் சமயங்களிலெல்லாம் இவ்விதம் தன் உதட்டை விரலால் பிடித்து அசைத்துக்கொண்டே நாற்காலியில் சாய்ந்துகொண்டிருப்பது அவனுக்கு வழக்கம். ஐந்து நிமிஷம் வரையில் கொஞ்சம் யோஜித்து விட்டு, "என்ன வெப்ஸ்டர்! உனக்கும் அடிக்கடி என் கேசுகளைப் பற்றிக் கவனிப்பதில் ஸந்தோஷந்தானே. எத்தனையோ தடவை நீ என்னிலும் அதிகமான ஊக்கத்துடன் நான் எடுக்கும் கேசுகளில் கவனத்தைச் செலுத்தி வேலை செய்திருக்கிறாய். ஏதடா, இவன் இப்படிச் சொல்லுகிறானேயென்று கோபிக்க வேண்டாம். அன்னபானாதிகள்கூட இல்லாமல் மெய்ம்மறந்து, இராப்பகல் தெரியாமல் நாட்கணக்காய் உழைத்திருக்கிறாய்."

"ஆம், மெய்தான்; நீ எடுக்கும் கேசுகள் எதுவும் ஒன்றுதப்பாமல் என் மனத்தைக் கவரத் தக்கவைகளாக இருக்கின்றன நான் என்ன செய்யட்டும்?"

"சில நாளைக்குமுன் மிஸ். ஜர்மன் என்பவளது சிறிய ஒரு கேசைப்பற்றி நாம் ஆலோசித்து, அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொண்டிருக்கும்போது, நான், பெரிதும் சிக்கல் முக்கலாய்த் தலை கால் தெரியாமலிருக்கிற சிற்சில ஆச்சரியமான கேசுகளில், நாம் நமது புத்திகூர்மையினாலேயே இருந்த இடத்திலிருந்து அனுமானித்து உண்மையைக் கண்டுபிடிப்பதைக் காட்டிலும்,அது சம்பந்தப்பட்ட விஷயங்களில் மனிதர்களுடைய நடவடிக்கைகளையும் பேச்சுக்களையும் நேருக்கு நேராகக் கண்டுங் கேட்டுமே தீர்மானிப்பதுயுக்தமென்று சொல்லியிருப்பதுஉனக்கு இப்போது ஞாபகத்துக்கு வரலாமென்று நினைக்கிறேன்."

"ஆம், அப்போது நானும் நீ சொல்வது அவ்வளவு சரியாகத் தோற்றவில்லையென்று சொல்லியிருக்கிறேனல்லவா?";

"நல்லது, வெப்ஸ்டர்! எப்படியிருந்தாலும் கடைசி கடைசியாக நீயும் என் தீர்மானத்துக்குத்தான் வரவேண்டும். அப்படியில்லையோ நான் உன்னை விடமாட்டேன். அனுமானத்தினலேயே விஷயங்களைக் கண்டு பிடித்துவிடலாம் என்கிற உன்னுடைய பக்ஷம் தப்பானது என்றும், என்னுடைய தீர்மானமே சரியென்றும் நீ உன் வாயாலேயே ஒப்புக்கொள்ளும்படி செய்கிறேனு இல்லையா என்பதைப் பார். அஃதிருக்கட்டும். இங்கே சற்றுக் கவனி. இந்தஜேபஸ் வில்ஸன் என்பவர் அதிகாலையில் நான் படுக்கையை விட்டெழுந்திருப்பதற்கு முன் என்னைவந்து எழுப்பி, என்னிடம் ஒரு ஆச்சரியமான சமாசாரத்தைச் சொன்னுர். சிலகாலமாக நான் இப்படிப்பட்ட சமாசாரத்தைக் கேட்கவேயில்லை. இது மிகவும் புதுமையாக இருக்கிறது. மிக விசித்திரமாயும் அபூர்வமாயுங் காணப்படுகிற விஷயங்கள் சிறிய குற்றங்களோடு சம்பந்தப்பட்டிருக்கிற அளவு, பெரிய குற்றங்களோடு சம்பந்தப்பட்டிருப்பதில்லை யென்று நான் உனக்குப் பலதரமும் சொல்லியிருக்கிறேனல்லவா. சின்னதாகக் காணப்படும் கேசுகளிலேதான் ஆச்சரியமானசெய்திகளெல்லாம் வெளியாகின்றன. பெரிய பெரிய குற்றங்களில் உட்புகுந்து பார்த்தால் ஒன்றுமே காணப்படுவதில்லை. இது மாத்திரமா? குற்றமொன்றும் நடந்திருக்கக் காரணமில்லையே யென்று அனுமானிக்கும்படி அவ்வளவு சாதாரணமாகத் தோற்றுகிற அந்த கேசுகளிலும் சில சமயங்களில், முன்பின் கேட்டிராத புதிது புதிதான ஆச்சரியங்களெல்லாம் வெளிப்படுகின்றன. என் புத்திக்கு எட்டினவரையில், இவர் கேசில் உண்மையாகக் குற்றமேதாவது நடந்திருக்கிறதோ, இல்லையோ, எதுவும் நிச்சயமாக என்னுற் சொல்லமுடியவில்லை. ஆனலும், நடந்துள்ள விஷயங்களைப் பார்க்கும்போது, இது நான் இதுவரையில் காதாலுங் கேட்டிராத அபூர்வஸம்பவமாகத்தான் இருக்கிறது. வில்ஸன்! தயைசெய்து இன்னெருதரம் உம்முடைய கேசைச் சொல்லும்படி பிரார்த்திக்கிறேன். இவர் கேட்கவில்லையே யென்பதற்காக மறுபடியும் உம்மை நான் சொல்லச் சொல்வதாக நினைக்கவேண்டாம். இந்தக் கேசு மிகவும் புதுமையானதொன்று யிருக்கிறபடியினலே கூடியவரையில், இதில் ஒவ்வொரு விஷயத்தையும் நான் செவ்வையாகத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். நான் இவருக்குச்

சொல்ல ஆரம்பித்து இடையில் நீர், 'அது அப்படியல்ல, இப்படி' என்று திருத்துவதைக்காட்டிலும், நீரே உம்முடைய வாயாலே சொல்வது நலமாயிருக்குமென்று நினைக்கிறேன். சாதாரணமாய் ஒரு கேசைப்பற்றிக் கொஞ்சம் கொஞ்சம் வெளியானாலும் நான், அதுபோலவே நடந்துள்ள பல கேசுகளை ஞாபகத்திற்கொண்டு, இது இன்னவிதந்தான் என்று ஒருவிதமாகத் தீர்மானித்து விடுவேன். இதுவோ ஒரு கேசிலும் சேராது புதுமாதிரியான கேசாய் இருக்கிறது. எப்படிப்பட்ட கேசா யிருந்தாலுஞ் சரி, அவற்றில் ஒன்றிரண்டாவது என் அனுபவத்திற்கு வந்திருக்கும். அப்படிப் பட்ட எனக்கு இதுமட்டும் புதிதாகத்தானிருக்கிறது."

இவ்விதம் எனது நண்பனான ஹண்டர் சொல்லி முடித்ததும், நாற்காலியிற் சாய்ந்துகிடந்த ஸ்தூல சரீரமுள்ள அந்தக்கிழவர் சிறிது கனைத்துக்கொண்டு முதுகைக்கிளப்பி நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்து தமது மார்பைப் பார்த்துக்கொண்டு, தமது சட்டையின் உட்பையிலிருந்து, கசங்கி அழுக்கடைந்திருந்த ஒரு சமாசாரபத்திரிகையை யெடுத்து அதைத் தம் முழங்காலின்மேல் அகலமாக விரித்துக் கொண்டு, அதில் ஒரு பக்கம் பிரசுரித்திருந்த ஒரு விளம்பரப் பத்தியைப் பார்த்துக்கொண்டிருந்தார். அப்படி அவர் பார்த்துக்கொண் டிருக்கும்போது நானும் என் சிநேகிதனை ஹண்டரைப்போல, அந்தக் கிழவருடைய சரீரத்தோற்றத்திலிருந்தாவது அவருடைய அலங்காரத்தி லிருந்தாவது ஏதாவது கண்டுபிடிக்கக்கூடுமாவென்று அவரையே உற்றுற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதனால் அதிகமாக ஒன்றும் புலப்படவில்லை. சாதாரணமான ஒரு பிரிட்டிஷ் வியாபாரியைப் போலத்தான் காணப்பட்டார். அதிகமான சுருசுருப்பில்லாமல் சிறிது மந்த பிரகிருதியாயுள்ள நிலையில், டம்பத்தில் திருஷ்டியுள்ளவர்போலத் தெரிந்தது. கொஞ்சம் மங்கின சிவப்புக் காற்சட்டையும், அதிகச் சுத்தமில்லாத கறுப்பு உட்சட்டையும் போட்டுக்கொண்டிருந்தார். பக்கத்திலுள்ள நாற்காலியில் அவரது வெளிச்சட்டையும், தொப்பியுந் தொங்கிக்கொண்டிருந்தன. அதிகமாக விவரிப்பானேன். அவரது உடை முதலியவைகளிலிருந்து, எவ்வளவு கவனமாக நான் உற்றுப்பார்த்தும், விசேஷமொன்றும் எனக்குத் தோன்றவில்லை. உருக்கி நீட்டிய வெள்ளிக் கம்பிபோன்ற அவரது தலைமயிரும்,

வெறுப்பும் அதிர்ப்தியுமே விஞ்சியிருந்த அவரது முகமுந்தான் நான் சிறிது குறித்துக்கொள்ளத் தக்கவைகளாக இருந்தன.

நான் இங்ஙனம் அந்த நரைமயிர்த்தலையரை உற்றுற்று நோக்கிக்கொண்டிருப்பதைப் பார்த்த எனது நண்பன் சிறிது புன்னகையோடு தன் தலையைச் சிறிது அசைத்துக்கொண்டு என்னைக் குறிப்பாகப் பார்த்தான். பார்த்துவிட்டு, "ஆமாம். இவர் சிலகாலம் கைப்பாடு பட்டு வேலை செய்திருக்கிறார் என்பதையும், இவருக்குப் பொடி போட்டுக்கொள்ளும் வழக்கம் உண்டென்பதையும், இவர் ப்ரீமேஸன் (Freemason) சபையைச் சேர்ந்தவர் என்பதையும், இவர் எப்போதும் அதிகமாக எழுதிக்கொண்டிருப்பவர் என்பதையுந் தவிர, நான் ஒன்றும் அதிகமாக அறிந்துகொள்ளக்கூடவில்லை" என்று சொன்னான்.

இதைக் கேட்டதும், ஜேபஸ் வில்ஸன் சரேலென என் நண்பனது பக்கமாக நாற்காலியைத் திருப்பி இழுத்துப் போட்டுக்கொண்டு, "மெத்தவும் ஆச்சரியமாக இருக்கிறது. ஹண்டர்! உமக்கு இந்த விஷயங்களெல்லாம் எப்படித் தெரிந்தன? நான் கைப்பாடுபட்டு வேலைசெய்திருக்கிறேன் என்றீரே. அது உண்மைதான். நான் சிலகாலத்திற்குமுன் ஒரு கப்பலில் தச்சுவேலை செய்துகொண்டிருந்தேன். உமக்கு எவர் இந்த விஷயத்தைச் சொன்னார்கள்?" என்று கேட்டார்.

"யார் சொன்னார்கள் என்றா கேட்கிறீர்? ஐயா! உமது கைகள்தாம் சொல்லித் தந்தன. உமது வலது கையானது இடதுகையைக் காட்டிலும் ஒரு சுற்றுப் பருத்திருக்கவில்லையா? நீர் அந்தக் கையாலேயே அதிகமாக வேலைசெய்திருக்கிறீர். அதனால், உமது வலது தோள் முண்டானது உள்ளபடி நன்றாகப் பூரித்து வளர்ந்திருக்கின்றது."

"நல்லது; இது சரிதான். பொடிபோட்டுக்கொள்ளுகிறவன் என்றும், ப்ரீமேஸன் சபையைச் சேர்ந்தவனென்றும் சொன்னீரே. அதெப்படி?"

"தயைசெய்து மன்னிக்கவேண்டும். உமக்குத் தெரியாததொன்றை நான் புதிதாகச் சொல்லிவிடப் போகிறதில்லை. உம்மு

டைய மூக்கானது முகத்திலுள்ள மற்றைய உறுப்புக்களின் அளவுக்கு ஒத்திராமல் சிறிது வேறுபாடு தோன்றப் பெருத்திருக்கின்றது. மேலும், நீர் பேசும் மாதிரியிலிருந்து, பொடிபோடாமையினால் இப்போது கொஞ்சம் மூக்கு அடைபட்டிருப்பதாகவுந் தெரிந்தது. திசையறிகருவியின் வடிவமாக நீர் மார்பிலணிந்து கொண்டிருக்கிற குத்தூசியினால் நீர் ப்ரீமேஸன் சபையைச் சேர்ந்தவரென்று ஊகித்தறிந்தேன்.''

"ஆமாம், வாஸ்தவந்தான். நான் அதை மறந்துவிட்டேன். அது போகட்டும். அதிகமாக எழுதிக்கொண்டிருப்பவன் என்று சொன்னது?''

"வலதுகைச் சட்டையின் முன்கைப் பக்கம் ஐந்து அங்குலம் வரை அழுக்குப் படியாமல் இருப்பதனாலும், இடதுகைச் சட்டையின் முழங்கைப்பக்கம், எழுதும்போது மேஜையின்மீது ஊன்றிக் கொள்ளப்படுவதனால் சிறிது அரைந்துபோய் வில்லையாக மழமழ வென்றிருப்பதனாலும் சொன்னேன்.''

"நியாயந்தான். நான் சீனதேசத்திலிருந்திருக்கிறேன் என்ற விஷயம்?''

"வலதுகை மணிக்கட்டுக்குச் சற்று மேலாக மீன் வடிவமாக நீர் பச்சை குத்திக்கொண்டிருப்பதைப் பார்த்துச் சொன்னேன். இந்தவிதம் மீன் வடிவமாகப் பச்சைகுத்திக்கொள்வது சீனதேசத்தவரின் சம்பிரதாயம். எனக்கு இந்தப் பச்சை குத்திக்கொள்ளும் விஷயமான பல சங்கதிகள் தெரியும். நான் இது சம்பந்தமாக ஒரு சிறிய கிரந்தமும் செய்திருக்கிறேன். மீன் இறக்கைகளை இந்த விதமான நிறத்தில் இப்படி மிகவும் அழகாகக் குத்துவதற்குச் சீனதேசத்தாரைத்தவிர மற்றவர்களுக்குத் தெரியாது. மேலும், நீர் உமது கடிகாரச்சங்கிலியில் கோத்துத் தொங்கவிட்டிருக்கிற சீனதேச நாணயத்தினாலும் இவ்விஷயம் பின்னும் பிரகாசமாகத் தெரிகின்றது.''

ஹண்டர் இவ்விதஞ் சொல்லிமுடித்ததும், வில்ஸன் உரக்கச் சிரித்துவிட்டு, "இவ்வளவுதானா? என்னவோ மகா புத்திசாலித்தனமாகச் சொன்னதாய் நினைத்தேன். கடைசியாக விஷயத்

தைப் பார்த்தால் அதில் ஒன்றையுங் காணேமே" என்று சொன்னார்.

"அது கேட்டு ஹண்டர், "உம்மைச் சொல்வதிற் பயனில்லை. தப்பு என்னிடத்திலிருக்கிறது. விஷயம் இந்தமாதிரியென்று நான் சொல்லிவிட்டதனால்தானே நீர், 'இவ்வளவுதானு?' என்கிறீர். 'பிறன் தெரிந்துகொள்ளாமலிருக்கிறவரையில் தெரிந்தவன் பெரியவன்தான்.' என்கிற பழமொழி வீணுகவா போய்விடும்? வில்ஸன்! இப்படித்தான் ஐயா, எல்லாவற்றையும் ஒளியாமல் சொல்லிச் சொல்லி, ஏதோ எனக்கிருக்கிற அல்பசுவல்பம் பெருமையையும் நானுகவே கெடுத்துக்கொண்டுவிட்டேன். அதை இப்போது சொல்லிப் பிரயோஜனமென்ன? நீர் அந்த விளம்பரம் பதிப்பிக்கப் பட்டிருக்குமிடத்தைக் கண்டுபிடித்தீரா?" என்று சொன்னன். "இதோ நான் கண்டுபிடித்துவிட்டேன்" என்று சொல்லி, அந்த விளம்பரத்திற் கையை வைத்துக்கொண்டு, "இதுதான் அந்த விளம்பரம். இந்த விளம்பரத்திலிருந்துதான் இவ்வளவு தூரம் விளைந்திருக்கின்றது. தயைசெய்து தாங்களே இதைப் படித்துப் பாருங்கள்" என்று சொல்லி அந்தப் பத்திரிகையை என்கையிற் கொடுத்தார்.

நான் அதைக் கையில் வாங்கிப் படித்தேன். அதில் பின்வருமாறு ஒரு விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது:—

"நரைத்தலைச் சங்கம்: தேசாந்தரஞ்சென்று அபரிமிதமான பொருளைச் சேகரித்து வாழ்ந்திருந்து, இப்போது இறந்துபோய் விட்ட இந்நகரத்துப் பெரிய பிரபுவாகிய ஹாப்கின்ஸ் என்பவர் எழுதிவைத்துப் போயிருக்கிற ஏற்பாட்டின்படி, இப்போது இந்த நரைத்தலைச் சங்கத்தில் வாரமொன்றுக்கு அறுபதுபவுன் சம்பளமுள்ள மற்றொரு வேலை காலியாயிருக்கின்றது. திடசரீரமும், தைரியமான மனமுமுடைய இருபத்திரண்டு வயதிற்கு மேற்பட்ட நரைத்தலையார்களே இந்த உத்தியோகத்துக்கு அருகராவார்கள். அபேக்ஷையுள்ளவர்கள் அடுத்த திங்கட்கிழமை சரியாகப் பகல் பன்னிரண்டு மணிக்கு, கப்பல் தெருவில் எட்டாவது இலக்கமுள்ள கிருகத்தின் மேன்மாடியிலுள்ள இச்சங்கத்தின் தலைவராகிய டங்கன் ரோஸ் என்பவருக்கு நேரில் மனுச்செய்துகொள்ளவேண்டும்."

நான் இந்த விளம்பரத்தை ஒருமுறைக்கு இருமுறையாகப் படித்துப் படித்துப் பார்த்தேன். ஒன்றும் புலப்படாமையால், "இதென்ன புதுமாதிரியான விளம்பரமாயிருக்கின்றது! இப்படிப் பட்ட ஒரு விளம்பரத்தை நான் இதுவரையிற் கண்டதில்லையே. இதற்கென்ன அர்த்தம்? ஒன்றும் ஏற்படவில்லையே" என்றேன்.

ஹண்டர் சிரித்துக்கொண்டு, "இதற்கு முன்னே இப்படிப் பட்ட விஷயத்தைக் கேள்விப்பட்டிருக்கிறுயா? நல்லது, வில்ஸன்! இனி நீர் நெடுக வரிசையாக நடந்ததைச் சொல்லிக்கொண்டுபோம். உம்மைப்பற்றியும், உம்முடைய குடும்பத்திலுள்ளவர்களைப் பற்றியும் உமக்கு என்னென்ன தெரியுமோ அதையும் ஒன்று தப்பாமல் உள்ளதுள்ளபடியாகச் சொல்லும். இந்த விளம்பரத்தாலுமக்குக் கிடைத்த லாபத்தையும் சொல்லும். வெப்ஸ்டர்! நீ முதலில் அந்தப் பத்திரிகையின் பெயரையும், அது பிரசுரிக்கப்பட்டிருக்கிற தேதியையுங் குறித்துக்கொள்" என்ருன்.

"மார்னிங் போஸ்ட்டு பத்திரிகை. 1890-ஞ ஏப்ரல்மீ 27-ம் தேதி. சரியாக இன்றைக்கு இரண்டுமாத மாகிறது."

"நல்லது, வில்ஸன்! அதற்கப்புறம்."

"நான் உங்களிடத்திற் சொல்லிவந்தபடி நான் இந்நகரத்தின் ஆந்திக்கடைச் சதுக்கத்துக்குச் சிறிது தூரத்தில், மாதாகோவில் வீதியில், ஒரு சிறிய வீட்டில் என் நிலைமைக்குத் தக்கபடி ஏதோ சுவல்பமாக வட்டிக்குக் கடன்கொடுத்துக்கொண்டு வருகிறேன். இப்போது எங்கே பார்த்தாலும் பெரிய பெரிய பாங்குகள் ஏற்பட்டுவிட்டபடியால் சில வருஷங்களாக வியாபாரம் செவ்வையாய் நடக்கவில்லை. நிரம்பவுங் குறைவாய்ப் போய்விட்டது. வருகிற வரும்படி காலக்ஷேபத்துக்கே போதும் போதாததுமாயிருக்கிறது. என்வேலைக்கு உதவியாக முன்னெல்லாம் நான் இரண்டு பேர்களை வைத்துக்கொண்டிருந்தேன். வியாபாரம் மட்டுக்கட்டிப் போகவே ஒருவனைத் தள்ளிவிட்டு இப்போது ஒருவனை மாத்திரந்தான் வைத்துக்கொண்டிருக்கின்றேன். இப்போதிருக்கிற ஸ்திதியில் இந்த ஒருவன் கூட எனக்கு அநாவசியந்தான். வேலை கற்றுக்கொள்வதற்காக அரைச்சம்பளத்துக்கு வருகிறேன் என்று

வனுவில் வந்து ஒப்புக்கொண்ட படியால், ஒருவன் இருந்தால் இருக்கட்டுமே யென்று வைத்துக்கொண்டிருக்கிறேன்."

"இப்படிப் பாதிச் சம்பளத்துக்கு ஒப்புக்கொண்ட வேலைக் காரச் சிறுவன் பெயர் என்னவோ?" என்று ஹண்டர் கேட்டான்.

"அவன் பெயரா, அவன் பெயர் ஹக்கின்ஸ். அப்படி அவன் சிறுவனல்லன். ஆனால், அவன் வயதும் இவ்வளவிருக்குமென்று என்னால் மதிக்க முடியவில்லை. எனக்கோ அதிக புத்திசாலியாகிய வேலைக்காரன்கூடாது. புத்திசாலியாயிருந்தால், நான் அவனுக்குக் கொடுக்கும் சம்பளத்தைக் காட்டிலும் இரண்டத்தனை சம்பாதித் துக் கொள்ளும்படியான வழியிருக்கிறது. ஏதோ கிடைக்கிற சம்பளம் போதுமென்று அவன் திருப்தியாயிருக்கும்போது நான் அவனுக்கு அந்த உபாயங்களையெல்லாம் என் சொல்லிக்கொடுக்க வேண்டும்?"

"வில்ஸன்! நீர் நல்ல அதிர்ஷ்டசாலி. இந்தக்காலத்தில் உள்ள சம்பளத்தைக் காட்டிலும் இப்படிக் குறைந்த சம்பளத்துக்கு ஒரு வேலையாள் அகப்பட்டது உமது அதிர்ஷ்டந்தான். நீர் காட்டிய நரைத்தலைச்சங்கத்தாரின் விளம்பரத்தைப் பார்க்கும்போது எங் களுக்கு எவ்வளவு ஆச்சரியமுண்டாயிற்றோ அதில் சிறிது கூடக் குறைவாயிருக்கவில்லை உமக்கு இவ்வளவு குறைந்த சம்பளத்தில் நயமாக ஒரு வேலைக்காரன் அகப்பட்டான் என்கிற ஆச்சரியமும்."

"ஆனால், அவனிடத்திற் சிற்சில துர்க்குணங்களு மிருக்கின் றன. அவன் படம்பிடிக்கிறவர்களிடத்தில்தான் வேலைக்கிருக்கத் தகுந்தவன். புத்திசாலிக் கடையாளமாக ஏதேனும் புதிதாய் வேலைகள் கற்றுக்கொள்வதை விட்டுவிட்டு, அடிக்கடி குழிப்பன் றியைப்போலத் தன் கையிற் படங்களை யெடுத்துக்கொண்டு அவற்றை ஒழுங்கு படுத்துவதற்காக நல்ல இருட்டறையிற் போய் அங்கே, ஒரு ஜாமமோ, இரண்டு ஜாமமோ, உட்கார்ந்து விடுகிறான். இது ஒன்றுதான் அவனிடத்திலுள்ள முக்கியமான தோஷம். மொத்தத்தில் அவன் நல்லவேலைக்காரன்தான். யோக்யன்; பொய் புரட்டொன்றும் அவனிடத்திற் கிடையாது."

"அவன் இன்னும் உம்மிடத்தில்தான் இருக்கிறான் என்று நினைக்கிறேன்."

"ஆம். அவனும், எனக்குக் கொஞ்சம் சமையல்செய்துபோட வும், என் வீட்டைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும் பதினொன்கு வயதுள்ள ஒரு வேலைக்காரியு மிருக்கி ருர்கள். என் வீட்டிலுள்ளவர்க ளெல்லாங்கூடி இந்த இரண்டு பேருந்தாம். இவர்களைத்தவிர வேறு யாரும் என் வீட்டிலில்லை. நானோ தாரமிழந்தவன். எனக்குக் குழந்தை குட்டிகள் என்கிற சம்சார பாரமும் இல்லை. ஏதோ எங்கள் மட்டில், நாங்கள் மூவரும் அக்கம்பக்கம் ஒரு வம்பு தும்புக்கும் போகாமல் கவுரவமாகக் காலக்ஷேபஞ் செய்துகொண்டு வருகிறோம்.

"இப்படி இருந்துவரும் பொழுது, ஒருநாள், இன்றைக்குச் சரியாக எட்டுவாரத்திற்குமுன் இந்த ஹக்கின்ஸ் இந்தப் பத்திரி கையுங் கையுமாயோடிவந்து, 'ஐயோ! ஈசுவரன் என் தலையை நரைத்துப் போம்படி செய்யப்படாதா? செய்திருந்தால் எத்த னையோ சுகமாக வாழ்ந்து கொண்டிருப்பேனே" என்ருன்.

"எதற்காக அப்பா! இப்படி பிரார்த்திக்கிருய்?" என்று நான் கேட்டேன்.

"ஏன்? இதோ நரைத்தலைச்சங்கத்தில் மற்றொரு உத்தியோ கங் காலியாயிருக்கிறது. அது கிடைத்தால், கிடைக்கிறவன்பாடு சௌக்கியந்தான். அந்தச் சங்கத்திற் கிடக்கிற பணமோ வகை தொகையில்லாமல் அபாரமா யிருக்கிறது. பணத்திற்குத் தகுந்த நரைத்தலையர் கிடைக்கவில்லையாம். பணத்தை என்ன செய்கிற தென்று தெரியாமல் அந்தச் சங்கத் தலைவர்கள் தவிக்கிருர்கள். என் தலைமயிர்மாத்திரம் நரைத்துப்போயிருந்தால் ஐயோ! இன் றைக்கே அந்த உத்தியோகத்தைப் பெற்று, என் தரித்திரத்தை இன்றோடு தொலைத்துத் தலைமுழுகிவிட்டு நிர்விசாரமாயிருப்பேன். எதற்குங் கொடுத்து வைக்கவேண்டாமா?"

"என்ன அப்பா! அதென்னவேலை?" என்று நான்கேட்டேன். நானோ எப்போதும் வீட்டிலேயே இருக்கவேண்டியவனுயிற்றே. என் உத்தியோகத்தின் தன்மையோ என்னிடத்தில் பிறர்வரக்கூடி யதாயிருக்கிறதேயொழிய நான் பிறரிடத்தில் போகவேண்டிய பிர மேயமே இல்லாததா யிருக்கிறதென்பது உங்களுக்குந் தெரிந்த

விஷயம். எத்தனையோ வாரங்கள் நான் வாசற்படிகூடத் தாண்டாமல் உள்ளேயே இருந்திருக்கிறேன். ஆகையால், வீட்டுக்கு வெளியில் இன்னது நடக்கின்றது என்பதுகூட எனக்குத் தெரியாது. லோகசமாசாரம் ஏதாவது கொஞ்சம் பிறரைக்கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற விருப்பம்மாத்திரம் எனக்கு மிகுதியாக உண்டு. ஆதலால், 'அது என்ன சமாசாரம்?' என்று ஹக்கின்ஸை ஆவலுடன் கேட்டேன்.

"நரைத்தலைச் சங்கத்தாரைப்பற்றி நீங்கள் ஒன்றுங் கேள்விப்பட்டதில்லையா என்ன?" என்று தன்கண்ணை மலர விழித்துப் பார்த்து ஹக்கின்ஸ் என்னைக் கேட்டான்.

"ஒன்றுங் கேள்விப்பட்டதில்லையே."

"இதென்ன இது! மிகவும் ஆச்சரியமாய் இருக்கிறதே! நான் இத்தனைநாள் வரையில் தங்களுக்கும் அதில் ஒரு உத்தியோகம் இருக்குமென்றல்லவா நினைத்திருந்தேன். அழகு! அழகு!! தாங்கள் ஆபேக்ஷித்தால் நிச்சயம் தங்களுக்கு அதில் ஒரு உயர்ந்த உத்தியோகம் கிடைக்குமென்பதில் சிறிதும் ஆக்ஷேபமேயில்லை. தங்களுக்குக் கொடுக்காமல் வேறு யாருக்குக் கொடுக்கப்போகிறார்கள்?"

"அந்த உத்தியோகத்தில் என்ன கிடைக்கும்?"

"என்ன? வருஷத்துக்கு மூவாயிரம் பவுன் குறைந்தபக்ஷம் கிடைக்கும். பேருக்குமாத்திரம் வேலையே தவிர உள்ளபடி அதில் வேலையொன்றும் கிடையாது. சட்டையை மாட்டிக்கொண்டு பத்துமணிக்குப் போகிறதும், இரண்டு மூன்று மணிக்கெல்லாம் திரும்பி வந்துவிடுகிறதுந்தான் அதில் உத்தியோகம். சம்பளம் மாத்திரம் வாரத்துக்கு வாரம் பவுன் கணக்காய்க் கையில் போட்டுவிடுகிறார்கள். அந்த வேலையை வைத்துக்கொண்டிருப்பதனால் இதர வேலைபார்ப்பதற்கும் இடையூறொன்றுமேயில்லை. அந்த வேலையை வைத்துக்கொண்டே, சாமர்த்தியமிருந்தால், பின்னும் பத்து வேலைகளை வேண்டுமானாலும் பார்க்கலாம் இதை விடத்தான் ஒரு மனுஷ்யனுக்கு வேறு என்ன சௌகரியம் வேண்டும்?"

"கர்ணாமிர்தமான இவ்வார்த்தையைக் கேட்டவுடன் யாருக்குத்தான் ஆதுரம் உண்டாகாது? அதிலும், என் விஷயத்திலோ

சொல்லவேண்டியதே யில்லை. எனக்குப் பத்து வருஷங்களாகவே வியாபாரம் மட்டு என்பதை ஏற்கனவே நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். இந்த ஸ்திதியில், அநாயாசமாக ஒரு வேலையு மில்லாமல், இதரவேலைகளுக்குக் குந்தகமும் இல்லாமல் வருஷம் மூவாயிரம், அதாவது மாதம் ஒன்றுக்கு இருநூற்றைம்பது பவுன் கிடைக்கிறதென்றால் விட்டுவிட மனம்வருமா? ஆதலால், அவன் சொல்லி வாய்மூடுவதற்குமுன், 'சங்கதியை முழுதும் விவரமாய்ச் சொல்' என்று பரபரப்புடன் கேட்டேன்.

"இதோ அந்த விளம்பரமே என் கையிலிருக்கிறது. நீங்களே படித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். வேலை யொன்று காலியிருப்ப தாகவும், அபேக்ஷையுடையவர்கள் இன்ன இடத்தில் இத்தனை மணிக்கு நேரில் ஆஜராகி மனுச்செய்து கொள்ளவேண்டு மென்ப தாகவுங் கண்டிருக்கிறது. எனக்குத்தெரிந்தவரையில், நான் கேள் விப்பட்டமட்டில், அந்தச் சங்கம் அமெரிக்காதேசத்திலுள்ள ஒரு கோடீசுவரரால் ஏற்படுத்தப்பட்டதாம். அந்தப் பிரபுவின் பெயர் ஹாப்கின்ஸாம். அவர் ஒருமாதிரியான மனுஷ்யராம். அவருக்கு இருபத்திரண்டு பிராயத்திலேயே தலைமயிரெல்லாம் தும்பைப் பூவைப்போல வெள்ளைவெளேலென மிக நரைத்துப் போய்விட்ட தாம். அதனால், அவருக்கு நரைத்தலையார்களிடத்திலெல்லாம் கிரம் பவும் அபிமானமுண்டாம். ஆகையால், அவர் சாகும்பொழுது அவருடைய ஏராளமான சொத்து முழுமையையும் ஒரு பஞ்சாயித் தாரிடம் ஒப்புவித்து, அந்தச்சொத்திலிருந்து வருகிற வட்டியைக் கொண்டு எத்தனை பேர் நரைத்தலையர்கள் வந்தாலும் அவர்களை யெல்லாம் அன்னவஸ்திரங்கொடுத்து ஆதரிக்கவேண்டுமென்று ஒரு ஏற்பாடு செய்துவிட்டுப்போயிருக்கிறாராம். நான் விசாரித்த வரையில் சம்பளமும் நல்ல சம்பளம். வேலையும் அதிகமாக இல்லை யாம். வட்டிப்பணம் குவிந்து கிடக்கிறபோது கொடுப்பதற்கு என்ன கஷ்டம்? தர்மத்துக்கென்று வைத்தவன் எங்களைப் போன்ற இதர ஏழைகளுக்கும் கொடுக்கும்படி செய்யப்படாதா? அது எங் களைப் பிடித்த சனியன்."

"சொன்னதெல்லாம் சரிதான். எத்தனையோ லக்ஷக்கணக் கான நரைத்தலையர்கள் மனுப்போடுவார்களே. எனக்கு அந்த வேலை எப்படிக் கிடைக்கும்?"

"நீங்கள் நினைக்கிறபடி அத்தனை அதிகமாக இருக்க முடியாது. இந்த உத்தியோகம் தகுந்தபடி வயதானவர்களுக்கும், இந்த லண்டன் பட்டணத்திலேயே பிறந்தவர்களுக்குந்தான் கொடுக்கப்பட வேண்டுமென்று ஏற்கனவே ஏற்பாடாயிருக்கிறது. ஏனெனில், அந்த ஹாப்கின்ஸ் என்னும் அமெரிக்கன் பிரபு இந்த லண்டனிற் பிறந்தவர். இங்கிருந்துதான் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுப் போனார். போன இடத்தில் ஏதோ அதிர்ஷ்ட வசத்தினால் நாலும் கைகூடி வந்தது. கோடிக்கணக்காகச் சம்பாதித்தார். அவருக்கு மிஞ்சின பணக்காரர் இந்த உலகத்திலேயே இல்லையாம். ஏதோ, புறப்பட்ட வேளை நல்லவேளை. அவ்வளவுதான். எத்தனையோ பேர்கள் அவரோடு கூடவே போனார்களே; ஏதாவது கிடைத்ததா? ஒன்றுமில்லை. எதற்கும் அதிர்ஷ்டமொன்று தனியாக இருக்கின்றது. அதை யார் கண்டார்கள்? இன்றைக்கு ஆண்டி, நாளைக்கு அரசன். அந்தப் பிரவும் இங்கிருந்து போகும்போது ஒரு கிழிந்த சட்டையோடும் தொப்பியோடுந்தான் போனாராம். தொட்டதெல்லாம் பொன்னாய் விளைந்தது. அவருக்குச் சுதேசாபிமானம் மிகவும் அதிகமாம். அதனால்தான் தம்மூரார்க்கே உதவிசெய்யவேண்டுமென்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. மேலும், இளநரை, கால்நரை, அரை நரையாயிருந்தாலும் நீங்கள் மனுப்போடுவதில் பிரயோஜனமில்லை. நாணல்பூ மாதிரி அவ்வளவு வெளுப்பாயிருக்க வேண்டுமாம். அந்த நாணல்பூவில் சிறிது செம்மைநிறங் கலந்திருக்குமே அது கூட ஆகாதாம். கயல்முள்ளைப்போல் சுத்த வெளுப்பாயிருக்கவேண்டுமாம். ஏனென்றால், அந்தப் பிரபுவின் மயிர் அப்படி யிருந்ததாம். உங்களுக்கு அந்த உத்தியோகம் வேண்டுமென்ற அபேக்ஷையிருந்தால் வாருங்கள், இப்போதே போவோம். அநேகமாய் அந்த வேலை யுங்களுக்குத்தான் கிடைக்கும். இந்த மாதிரியான நரை வேறு யாருக்கு இருக்கப்போகிறது? ஆனால் ஒரு விஷயம். இந்தச் சிறிய சம்பளத்துக்காக, இருக்கிற உங்கள் வேலையை விட்டுவிட்டுப் போவதும் அவ்வளவு சரியாகத் தோற்றவில்லை" என்று ஹக்கின்ஸ் சொன்னான்.

"இதோ, நீங்கள் வேண்டுமானாலும் பாருங்கள். என் தலை தூவெள்ளையாயிருக்கவில்லையா? கொஞ்சமாவது மறு இருக்கிறதா? இதனால் யார்தாமாகட்டும், எத்தனைபேர் மனுப்போட்டாலும்

நாம் ஜயிப்போமென்று எனக்குத் தைரியமுண்டாயிற்று. எதற்கும் மனுச்செய்து பார்ப்போம் என்று ஒருவிதமாகத் தீர்மானித்துக் கொண்டேன். ஹக்கின்ஸ் சொல்லிக்கொண்டுவந்த மாதிரியிலிருந்து அவனுக்கு அந்த உத்தியோகத்தைப்பற்றி அதிகமாய்த் தெரிந்திருக்குமென்று நினைத்து, அவனையுங் கூடவே அழைத்துப் போவது நலமாயிருக்குமென்ற நம்பிக்கையினால், அவனை வீட்டைப் பூட்டிக்கொண்டு என்னோடு கூட வரும்படியாகக் கேட்டுக்கொண்டேன். அவனும் இன்று வேலையில்லையே யென்ற சந்தோஷத்துடன் உடனே கதவையெல்லாம் சார்த்திப் பூட்டிவிட்டு என் பின்னோடு வந்தான். நாங்களிருவரும் அந்த விளம்பரத்திற் கண்டிருந்த விலாசத்திற்குப் போனோம்.

"ஹண்டர்! நான் என்ன ஆச்சரியத்தைச் சொல்வேன்? அன்று நான் அங்கே பார்த்தமாதிரியான மற்றொரு காட்சியை இதற்குமுன் நான் பார்த்ததேயில்லை. இனி எந்த நாளிலும் பார்க்கப்போகிறதுமில்லை. அந்தத் தெருமுழுதும் ஜே ஜே என்று கூட்டம். எள்ளுப்போட்டால் எள் விழாது. அந்தக் கூட்டத்தில் எல்லாரும் வந்துகொண்டிருக்கிறவர்களே தவிரத் திரும்பிப்போகின்றவர்கள் ஒருவராவது இல்லை. கூட்டங்கூட்டமாய் வடக்கு,கிழக்கு, தெற்கு, மேற்கு என்கின்ற நான்கு திசைகளிலிருந்தும் கணக்கு வழக்கில்லாமல் வந்துகொண்டிருந்தவண்ணந்தான். முழுதும் நரைத்திருந்தவர்களும், அரைவாசி நரைத்திருந்தவர்களும், கால்வாசி நரைத்திருந்தவர்களும், அவர்கள் முன் எங்கேதான் இருந்தார்களோ, கும்பல் கும்பலாலாய் வந்து கூடிவிட்டார்கள். ஒரு சிறிய விளம்பரத்தைக் கண்டு அத்தனை பெயர்கள் வந்திருப்பார்களென்று நான் கனவிலும் நினைக்கவேயில்லை. அவர்களை யெல்லாம் பார்த்ததும், 'இவ்வளவு கூட்டத்தில் நமக்கு எப்படி கிடைக்கப் போகிறது?' என்று எனக்கே அதைரியமுண்டாய்விட்டது. வந்த வழியே திரும்பிப்போய்விடலாமென்றுகூட நினைத்தேன். ஆனால் என் வேலைக்காரன் அதற்கிடங்கொடுக்கவில்லை. நிச்சயம் வேலை கிடைக்குமென்று தைரியஞ்சொல்லிக்கொண்டே வந்தான். வந்தவர்களும் சும்மா இராமல் ஒருவர்மேல் ஒருவர் விழுந்துகொண்டு மனுக்கொடுத்துவந்தார்கள். நானும் ஆனமட்டும் பார்த்தேன். அவ்வளவு பெரிய கூட்டத்தை விலக்கிக்கொண்டு என்னால் உள்ளே

போகமுடியவில்லை. நான் வெளியே நின்று கொண்டிருந்தேன். சரியாகப் பன்னிரண்டடித்தது. உடனே ஹக்கின்ஸ் ஓடிவந்து, எப்படியோ அந்தக் கூட்டத்தில், ஜனங்களையெல்லாம் அப்புறமும் இப்புறமும் தள்ளிக்கொண்டு என்னை அந்த ஆபீசிற்குள் கூட்டிக் கொண்டுபோய்விட்டான். அந்த ஆபீசிற்கு இரண்டு மெத்தைப்படிகளிருந்தன. ஒன்றின் வழியாகப் பலர் தமக்குக் கிடைக்குமென்னும் நம்பிக்கையுடன் மேலே போய்க்கொண்டிருந்தார்கள். மற்ருெரு படிக்கட்டின் வழியாக வேலைக்கு எடுக்கப்படாதவர்களெல்லாம் மிக்கமுகவாட்டத்துடன் இறங்கிக்கொண்டிருந்தார்கள். நாங்களும் மெள்ள மெள்ள அந்த ஆபீசிற்குட் போய் விட்டோம்."

"உம்முடைய சரித்திரத்தையே கேட்டுக்கொண்டிருந்தாற் போதும். போது போக்குக்கு இதைவிட நல்ல கதை வேருென்றும் வேண்டியதில்லை." என்று ஹண்டர் சொன்னுன். நரைத் தலையரான அந்த வில்ஸனும் ஒரு சிமிட்டா பொடியை யெடுத்து நன்ருய் உறிஞ்சி விட்டு மீளவுந் தம் வரலாற்றைச் சொல்லத் தொடங்கினர்.

"அந்த ஆபீசில் இரண்டு மர நாற்காலிகளும், ஒரு சிறிய மேஜையும் போடப்பட்டிருந்தன. இந்த மூன்று சாமான்களையுந் தவிர அங்கு வேருென்றுமே யில்லை. அந்த மேஜையின் பக்கத்தில் என் தலைமயிரைக்கூடக் கறுப்பென்று சொல்லும்படியாய் அவ்வளவு வெண்மையாயுள்ள மயிரோடுங்கூடிய குட்டையான ஒரு மனிதர் உட்கார்ந்திருந்தார். அவர், வேலையை அபேக்ஷித்து வரும் ஒவ்வொரு மனுதாரரிடமும் சிற்சில வார்த்தைகளைப் பேசிவிட்டு, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குறைவை எப்படியாவது யாரோபித்துச் சொல்லி, 'ஐயா! உங்களுக்கு இந்த வேலையைக் கொடுக்கமுடியாமற் போனதற்காக நான் மிகவும் விசனிக்கிறேன். நான் என்ன செய்யலாம்? சங்கத்தினுடைய சட்ட திட்டங்கள் அவ்வளவு கண்டிப்பாயிருக்கின்றன. அவற்றில் ஒன்றையேனும் மீறி நடக்க எனக்கு அதிகாரமில்லை. தயை செய்து மன்னிக்க வேண்டும்' என்று உபசாரமாகவே அவர்களை யெல்லாம் அனுப்பி வந்தார். நல்லதாக ஒரு வேலை கிடைப்பதென்ருல், அதென்ன லேசிலாகக்கூடிய காரியமாகவா இருக்கும்? ஆனல், அந்தக்

குள்ளமனிதர் எங்களைக் கண்டதும் வேறு எவர்களிடத்திலுங் காட்டியிராத அவ்வளவு அதிகமான பிரீதியுடன் எழுந்து, நாங்கள் உள்ளே போனதும், எங்களுடன் அந்தரங்கமாகப் பேச வேண்டி வாசற் கதவைச் சார்த்தித் தாளிட்டுக் கொண்டார்.

"இவர்தாம் ஜேபஸ் வில்ஸன் என்பவர். தங்கள் சங்கத்தில் இப்போது காலியாயிருக்கிற வேலையைப் பெற்றுக்கொள்ள மிகவும் அபேக்ஷையுள்ளவராயிருக்கிறார்" என்று அந்த மானேஜரைப் பார்த்து என்னோடு கூடவந்த அந்த வேலைக்காரன் சொன்னான்.

"இவர்தாம் அந்த வேலைக்கு நிரம்பவுந் தகுந்தவராய் இருக்கிறார். வேண்டிய எல்லா அம்சமும் ஒன்றுதப்பாமல் இவரிடத்தில் பொருந்தியிருக்கின்றன. என் ஞாபகத்திற்கு எட்டினவரையில் இப்படிப்பட்ட மனிதர் இதற்குமுன் இங்கு நம்மிடம் வந்ததேயில்லை." என்று சொல்லிவிட்டுக் கொஞ்சம் பின்னால் நகர்ந்து, தலையை ஒருபக்கமாய்ச் சாய்த்துக்கொண்டு என் தலைமயிரை நன்றாக உற்றுப் பார்த்தார். அவர் பார்த்தபார்வையில் எனக்கே லஜ்ஜையுண்டாகிவிட்டது. இப்படி பலமுறை மேலுங் கீழுமாக என்னைப் பார்த்துவிட்டு, பின்னர் ஓடிவந்து என்கையைப்பிடித்துக் குலுக்கி, 'உமக்கு இந்தவேலை கிடைத்ததைப்பற்றி எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது' என்றார்.

"சற்று நிதானித்து என்னை நோக்கி, 'நான் உங்களை அதிகமாகப் பரீக்ஷைசெய்கிறேனென்று தாங்கள் ஒருபோதுங் கோபிக்கமாட்டீர்களென்றே நம்புகிறேன்' என்று சொல்லிக்கொண்டே என் குடுமியைத் தமது கைகளிற் சுற்றிக்கொண்டு வலுவாய்க் குலுக்கினார். நான்வலிபொறுக்கமாட்டாமல் வாய்விட்டலறினேன். உடனே அவர் என் குடுமியை விட்டுவிட்டு, 'சரி, உம்முடைய கண்ணில் ஜலம் ததும்புகிறது. ஆதலால், மோசமொன்று மிருக்கக் காரணமில்லை. எல்லாம் யதார்த்தமாகத்தா னிருக்கின்றன. இந்த விஷயத்தில் நாங்கள் மிகவும் முன்ஜாக்கிரதை யுள்ளவர்களாய் இருக்கவேண்டியிருக்கிறது. ஏனென்றால், இரண்டுதடவைகளில் நாங்கள் மோசம்போய் விட்டோம். பொய்ம்மயிர் கட்டிக்கொண்டுவந்து ஒருதடவை ஒருவன் ஏமாற்றிவிட்டான். வர்ணத்தைத் தடவிக் கொண்டுவந்து மற்றொருதடவை ஒருவன் ஏமாற்றி

விட்டான் இப்படி ஏமாந்துபோய்விட்ட விஷயத்தில், சங்கத்திற் குண்டான நஷ்டங்களை யெல்லாம் நாங்கள் எங்கள் கையிலிருந்து தொலைக்கவேண்டியதாயிருந்தது. அதுமுதல் நாங்கள் விழிப்பாகத் தானிருக்கிறோம். தவிர, மெழுகுகளைக்கொண்டு எத்தனையோவித மாகக் கண்டோர் பிரமிக்கும்படியான அற்புதங்களை யெல்லாஞ் செய்துவிடுகிறார்கள். யதார்த்த மின்னது, பொய் இன்னது என்று அவற்றைப் பரீக்ஷித்தறிந்து கொள்வதும் கஷ்டமான காரியமா யிருக்கிறது. ஒருவேளை உங்களுடைய தலைமயிரும் அப்படி இருந்திருக்குமோ வென்று பார்த்தேன். தாங்கள் அதற்காக என் மீது கோபித்துக்கொள்ளாம லிருக்கும்படி மற்றொருதரம் பிரார்த் தித்துக் கொள்ளுகிறேன்' என்று சொல்லிக் கொண்டே தெருப் பக்க மிருந்த ஜன்னலண்டையிற்போய் வீதியிற்கூடியிருந்தவர்களை நோக்கி, 'உத்தியோகத்திற்கு ஒருவரை நியமித்தாய்விட்டது. இனி நீங்கள் போகலாம்' என்று தம் முழுபலத்தையுங்கொண்டு உரக்கக் கத்தினர். கத்தவே கீழே யிருந்தவர்களெல்லாம் அதிக மனவருத் தத்துடன், 'வீணலைச்சல்,' 'அந்த வேலைக்காவதுபோயிருக்கலாம்,' 'எதற்கும் சிபார்சு வேண்டும்,' 'தங்கள் உறவிலேயே ஒருவனை நியமித்திருப்பார்கள்,' 'விளம்பரமெல்லாம் அடியோடு பொய்,' 'ஆமாம். எதற்கும் அதிர்ஷ்டமிருக்கவேண்டும்,' 'கொஞ்சம் நாம் முந்தி வந்திருக்கலாம். வண்டிக்காரப்பயல் மோசஞ் செய்வான் என்று எனக்கு அப்போதே தெரியும்' என்று இவ்விதம் பலவாறு சொல்லிக்கொண்டே நாலு பக்கங்களிலுமாகப் பிரிந்துபோய் விட் டார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு நரைத் தலையனைக்கூட அங்கே காணோம். நரைத்தலையர்களில் நானும், அந்த மானே ஜரும் மாத்திரம் இருந்தோம்.

"என்பெயர் டங்கன் ரோஸ். நான் இந்தச் சங்கத்தி லுத்தி யோகம் பார்த்து இப்போது உபகாரச்சம்பளம் வாங்கிக்கொண் டிருக்கிறேன். நல்லது, உமக்குக் கலியாணமாயிருக்கிறதா? உமக் குப் பிள்ளைகுட்டிகளுண்டா?" என்று அந்த மானேஜர் என்னைக் கேட்டார்.

"எனக்குப் பிள்ளை குட்டிக ளொருவருமில்லை. நான் மாத் திரம் ஏகாங்கியா யிருக்கிறேன்." என்றேன்.

"அதென்ன சமாசாரம்! அது நிரம்பவுங் கெடுதலாயிற்றே. நீங்கள் சொல்வதைக் கேட்கும்போது எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கின்றது. இந்தச் சங்கத்திற்காக வைக்கப்பட்டிருக்கிற மூலதனமானது நரைத்தலையர்களின் சம்ரக்ஷணத்தையும், அவர்களின் சந்தான அபிவிருத்தியையுங் கருதியன்றோ வைக்கப்பட்டிருக்கின்றது. தங்களுக்கு மனைவிமக்களெவருமில்லையென்றால் அது சிறிது யோஜனைக்கிடமாக இருக்கிறதே" என்றார்.

"ஹண்டர்! இதைக் கேட்கவும் எனக்கு எப்படியிருக்கும்? உடனே என் முகம் சுண்டிப்போய்விட்டது. ஒருவேளை நமக்கு வேலை கிடைக்காதோ என்று சந்தேகித்தேன். அவர் சில நிமிஷங்கள்வரையில் இதைப்பற்றி யோஜனை செய்துவிட்டு, 'ஆனாலும் பாதகமில்லை. எப்படியோ ஒரு சமாதானத்தைச் சொல்லிவிட்டால் எல்லாம் சரியாய்ப் போய்விடும். வேறொருவர் விஷயமாயிருந்தால் இது யோஜிக்கத்தகுந்த விஷயந்தான். யோஜனை என்ன, காரியம் பலிதமாகாது என்பதுதான். உம்முடைய விஷயத்தில் அவ்வளவாக இதை ஒருபெரிய தோஷமாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள். ஏனென்றால், கொஞ்சங்கூடக் குற்றங் கூறுதற் கிடமில்லாதபடி உம்முடைய தலைமயிர் அவ்வளவு தூவெள்ளையாயிருக்கிறது. சங்கத்தாருக்குத் தலைமயிர் வெளுப்பாய் இருக்கவேண்டியதுதான் பிரதானம். மற்றவைகளெல்லாம் அப்பிரதானந்தான். இந்தத் தலைமயிர் உமக்குப் பலமான சிபார்சு. இதற்குக் கொஞ்சங் குறைவாயிருந்தாலுங்கூட உமக்கு இந்த வேலை கிடைத்திராது. நல்லது, நீர் இந்தப் புதிய உத்தியோகத்தை என்றைத் தினம் ஒப்புக்கொண்டு வேலைபார்க்க முடியும்? சங்கத்தின் சட்டப்படி மூன்று நாளைக்கு அதிகப்படக் கூடாது. சௌகரியத்தைப் பார்த்துக்கொள்ளும்" என்றார்.

"அதுதான் கொஞ்சம் அசந்தர்ப்பமாயிருக்கின்றது. முன்னாலேயே நான் கொஞ்சங் கொடுக்கல் வாங்கல் வேலை வைத்துக்கொண்டிருக்கிறேன்." என்றேன்.

"ஓ, அதைப்பற்றி நீர் ஒன்றுங் கவலைப்படவேண்டாம். அதை என் பொறுப்பாய் விட்டுவிடும். நான் ஒழுங்காய்ப் பார்த்துக்கொள்ளுகிறேன்." என்று என்வேலைக்காரனான ஹக்கின்ஸ் சொன்னான்.

"வேலைக்குவரவேண்டிய நேரம் என்ன?" என்று கேட்டேன்.

"காலை பத்துமணிமுதல் மாலை இரண்டுமணி வரை" என்றார்.

"என் தொழிலோ பெரும்பாலும் மாலை வேளைகளில்தான். முக்கியமாய் வியாழன் வெள்ளி இந்த இரண்டு தினங்களில் மாத்திரம்,சம்பளம் போடுவதற்குமுந்தின தினமாகையால்,கொஞ்சம் அதிகமாகக் கடன்வாங்கவருவார்கள், ஆகையால், என் வேலைக்கும் குந்தகமில்லாமல் ஏதாவது காலைவேளைகளில் பத்துப் பணம் அகப்பட்டால் நல்லதுதானே என்று நினைத்தேன். மேலும், என்ன ஹண்டர்! கவனித்துக்கொண்டு வருகிறீர்களா? என்னிடத்தில் உதவியாயிருக்கும் வேலைக்காரனே நல்ல போக்யன். எவ்வளவு தொகைக்கும் அவனை நம்பலாம். வேலைகளையும் சரிவர நன்றாய்ப் பார்க்கக்கூடியவன். ஆதலால், நான் அந்த மானேஜரைப் பார்த்து, 'பத்துமணி முதல் இரண்டுமணி வரையில் என்றால், அது எனக்கு நிரம்பவும் சௌகரியந்தான். அதற்குச் சம்பளம் என்னவோ?' என்று கேட்டேன்.

"ஒரு வாரத்திற்கு அறுபது பவுன்."

"செய்யவேண்டிய வேலை?"

"வேலை யென்ற வியாஜந்தான்."

"வியாஜமென்றால் என்ன? இன்ன வேலையென்று எனக்குத் தெரியவேண்டாமா?"

"இந்தக் குறிப்பிட்ட காலம் முழுமையும், அதாவது பத்துமணிமுதல் இரண்டுமணிவரையிலும், நீர் இந்த ஆபீசிலாவது, அல்லது இந்தக் கட்டடத்திற்குள் வேறு எங்கேயாவது இருந்தே தீரவேண்டும். இந்தக் கட்டடத்தைத் தாண்டி அப்புறம் இப்புறம் நாலடி நகர்ந்தாலும் உத்தியோகம் அந்த க்ஷணமே போய்விடும். ஒருதரம் வேலையை யிழந்தவர்களுக்குத் திரும்பவும் வேறு என்ன காரணத்தைக் கொண்டேனும் வேலைகொடுக்கக் கூடாதென்பது கண்டிப்பான உத்திரவு. இந்த விஷயம் உயில் (Will) பத்திரத்திரத்தில் விபக்தமாய்க் கண்டிருக்கிறது. இதற்கு விரோதமாய் யாருமே நடக்கமுடியாது. இதை நீர் முக்கியமாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்."

"ஒரு நாளைக்கு நான்குமணி சாவகாசந்தானே? அசைவானேன்? அப்படியே செய்கிறேன்."

"அவ்விதம் போய்விட்டுத் திரும்பிவந்து என்ன சாக்குப் போக்குச் சொன்னாலும் நாங்கள் கேட்கமாட்டோம். வியாதி, அவசரகாரியம், ஆபத்து என்று எவ்வித முகாந்தரமுஞ் சொல்லக்கூடாது. ஒன்றையும் நாங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம். அதோ அந்த இடத்திலிருந்து வேலை செய்யவேண்டியது. தவறினால் உத்தியோகம் போனதுதான்."

"சரி, செய்யவேண்டிய வேலை யென்ன?"

"வேலையா? இந்த அகராதியைப்பார்த்து அதன்படி எழுத வேண்டியதுதான். இந்த அகராதியின் முதல்பாகம் இப்போது அச்சிடப்பட்டுவருகிறது. எழுத்துக் கோக்கின்றவர்களுக்குச் சங்கடம் வையாமல் தெளிவாய் எழுதிவரவேண்டும். எழுதுவதற்கு வேண்டிய காகிதம், மை, ஒற்றுத்தாள், முதலியஎல்லாம் நீரே சம்பாதித்துக்கொள்ளவேண்டும். இந்த மேஜையும், நாற்காலியும் மாத்திரந்தான் நாங்கள் தருவோம். நாளைக்கே வேலைக்குவரத் தயாரா யிருப்பீரா?"

"சரி, அந்தப்படியே."

"நல்லது, போய்வாருங்கள். ஜேபஸ் வில்ஸன்! உமக்கு இந்த உயர்ந்த ஸ்தானம் கிடைத்ததைப்பற்றி நான் உம்மைக் கொண்டாடுகிறேன். இது சாமானியமான வேலையன்று. சுலபமாய்க் கிடைக்கக்கூடியதுமன்று. உம்முடைய நல்ல காலத்தினவுடையாளம் அதிகமாக யாரும் போட்டிக்கு வரவில்லை. உம்முடைய தலைமயிரும் ஒத்திருந்தது. எப்படியோ, உமக்கு இந்த வேலைகிடைத்ததைப்பற்றி எனக்கிருக்கிற சந்தோஷம் இவ்வளவவ்வளவு என்று சொல்லிமுடியாது. காலந்தவறாமல் குறித்த நேரத்தில் ஆபீசிற்கு வந்து ஒழுங்காய் வேலைபார்த்தால் பின்னுந் திருப்திகரமாய் இருக்கும்" என்று சொல்லி மிகவும் மரியாதையுடன் வாசற்படிவரையில்கூடவேவந்து வழியனுப்பினார். நானும் ஆனந்தாதிசயத்தினால் இன்னது செய்வது, இன்னது சொல்வது என்றுகூடத் தெரியாமல் மெய்மறந்த வண்ணமாகவே என்னுடைய வேலைக்காரனோடு கூட வீடுவந்து சேர்ந்தேன்.

"அன்று பகல்முழுமையும் இந்த விஷயத்தைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தேன். அஸ்தமித்தவுடன் கொஞ்சம் இந்த விஷயத்தில் எனக்கு அசுவாரஸ்யந் தட்டியது. சங்கத்தினுடைய நோக்கந்தானகட்டும், அல்லது அந்த மானேஜரென்று சொல்லப்படும் டங்கன் ரோஸ் என்பவரின் நோக்கந்தானகட்டும் அது இன்னதுதானென்பது இப்போது நமக்குத் தெரியாமற் போனாலும் இதில் ஏதோ ஒரு பெரிய மோசம் இருக்கிறது என்று எனக்குத் தோற்றியது. இப்படி யாராவது நகரைத்தலையனைத்தேடிப் பணங் கொடுக்கும்படி உயில் எழுதி வைத்திருப்பானா? அப்படித்தான் வைத்திருப்பதாக வைத்துக்கொள்வோம். ஒரு வேலையு மில்லாமல் கண்ணைமூடிக்கொண்டு அகங்கை, அகம் என்று அகராதியைப் பார்த்து எழுதிக்கொண்டு போகிற இந்த வேலைக்கு யாராவது பவுன் கணக்காகச் சம்பளங் கொடுப்பானா? என்று யோஜித்துப்பார்த்தேன். அதிகமாக அவநம்பிக்கை யுண்டாய்விட்டது. இப்படி அவநம்பிக்கையும், அசுவாரஸ்யமும் உண்டாகிறபோதெல்லாம் ஹக்கின்ஸ் என்ற என்னுடைய வேலைக்காரன் பக்கத்திலிருந்து, 'ஏன் யோஜிக்கிறீர்கள்? நமக்கு அந்தச் சங்கத்தைப் பற்றியும், அதை யேற்படுத்தியவருடைய மதிநுட்பத்தைப்பற்றியு மாராய்ச்சிசெய்யவேண்டிய அவசியமென்ன? சொன்னவேலையைச் செய்கிறோம்;சம்பளங்கொடுத்தால் சலாம்செய்து வாங்கிக்கொண்டு வருகிறோம். இவ்வளவுதானே. இதில் நமக்கென்ன நஷ்டம்? 'கெட்டிக்காரன் பொய் எட்டு நாளைக்கு' என்ற பழமொழியின்படி எல்லாம் ஒரு வாரத்தில் மோசமோ, நிஜமோ நன்றாகத் தெரிந்து விடுகிறது. ஏழுநாளைக்கு நாம் பொறுமையாயிருக்க வேண்டும். அப்புறம், சம்பளங்கொடுக்கப் போவதிலிருந்து எல்லாந் தானே வெளிச்சமாய்விடுகிறது. இதற்காக இத்தனை கவலைப் படுவானேன்? வேறு காரியமிருந்தால் பாருங்கள்' என்று உற்சாகப்படுத்திவந்தான். அவன் என்ன சொல்லியும் எனக்குச் சமாதானமுண்டாகவில்லை. அன்றிரவுமுழுதும் இதைப்பற்றிய ஆலோசனைதான். அப்படியிருக்குமா, இப்படியிருக்குமா என்று பல விதமாகவெல்லாம் வைத்துப் பார்த்தேன். ஒருவிதமாகவும் நிச்சயிக்க முடியவில்லை. கடைசியில், இருந்தது இருக்கட்டும், காலையில் போய்ப்பார்ப்போம் என்று ஒருவாறு முடிவுசெய்துகொண்டு

படுத்தேன். தூக்கம் வரவில்லை. விடிகிறமட்டும் படுக்கையிற் புரண்டுகொண்டவண்ணமாக, எப்போது விடியப்போகிறதென்று கடிகாரத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். டங் டங் என்று ஆறுமணி அடித்ததும் படுக்கையைவிட்டெழுந்திருந்து, அன்றைக்கு ஆகவேண்டிய என் சொந்தக் காரியங்களையெல்லாம் பரபரப்புடன் பார்த்துமுடித்தேன். ஒன்பது மணிக்கெல்லாம் கொஞ்சம் ஆகாரஞ் சாப்பிட்டுவிட்டு, மானேஜர் சொல்லியபடி ஏழெட்டுக் காகிதம், பேனா, மைக்கூடு இவைகளை யெடுத்துக்கொண்டு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றேன்.

"ஹண்டர்! நான் என்ன ஆச்சரியத்தைச் சொல்வேன். அங்கே சென்றதும் எனக்கே ஒரு மலைப்புண்டாயிற்று. இதுவும் ஒரு விநோதந்தான் என்று மனத்தில் எண்ணிக்கொண்டேன். உள்ளபடி ஒரு ஆபீசு எப்படி இருக்குமோ அப்படியே அந்த ஆபீசு இருந்தது. ஒரு மேஜையும் நாற்காலியும் எனக்காகத் தனியே போடப்பட்டிருந்தன. சரியாகப் பத்துமணியடித்ததும் மானேஜராகிய டங்கன்ரோஸ் என்பவர் வந்து, என்னிடம் ஒரு அகராதியைக் கொடுத்து எழுதிக்கொண்டுபோம்படி சொன்னார். நானும் உடனே எழுதத்தொடங்கினேன். அ என்னும் எழுத்துக்குள்ள அர்த்தங்களையெல்லாம் எழுதிமுடிகிறமட்டும் அவரும் கூடவேயிருந்தார். 'இப்படித்தான் எழுதவேண்டிய கிரமம். இந்த மாதிரியே நீள எழுதிக்கொண்டுபோங்கள்' என்று சொல்லிவிட்டு அவர் அப்புறம் போய்விட்டார். ஆனால், முப்பது நிமிஷத்துக்கொருதடவை நானிருக்குமிடத்திற்கு வந்து, நான் எழுதிக்கொண்டிருக்கிறேனா, இல்லையா என்பதைக் கவனித்துப் போனார். சரியாக இரண்டுமணியானதும், 'நீர் வீட்டுக்குப் போகலாம். இன்றைக்கு இவ்வளவுதான் வேலை' என்று சொன்னார். நான் அன்றைக்கு எழுதியுள்ளதை அவரிடங் காட்டினேன். அதை அவர் பார்த்துவிட்டு, 'நீருங் கடுமையாகத்தான் வேலைசெய்திருக்கிறீர்; தினமும் இவ்வளவு எழுதிக்கொண்டுவந்தால் போதுமானதே' என்று என் வேலையைச் சிலாகித்துப் பேசினார். நான் அவருக்கு வந்தனம் செய்துவிட்டு வெளியே வந்தேன். அவரும் என் பின்னோடு வந்து, என்னை யனுப்பிவிட்டுக் கதவைச் சார்த்திக்கொண்டு உள்ளே போய்விட்டார். நானும் என் உத்தியோகத்தைப்பற்றிப்

பலவாறு வழிநெடுக என்னுள்ளுக்குள்ளேயே பரிஹஸித்துக் கொண்டு வீடுவந்து சேர்ந்தேன். இவ்விதம் மறுநாள் தொடங்கி ஒவ்வொருநாளும் சரியாகப் பத்துமணிக்குப் போகிறதும், இரண்டு மணிக்குத் திரும்பிவருவதுமாக இருந்தேன். ஒருவாரம் ஆனதும் மானேஜர் என்னிடம் வந்து அந்த வாரத்துச் சம்பளமாகிய அறுபது பவுனையும் என்னிடங் கொடுத்து ரசீது வாங்கிக்கொண்டு சென்றார். நான் அந்தப் பவுன்களைப் பெற்றுப் பெருமகிழ்ச்சி கொண்டேன். கைக்குட்டையில் முடிந்து சட்டைப்பையிற் போட்டுக்கொண்டேன். திரும்பவும் எடுத்தேன். ஒவ்வொரு பவுனை மேஜையின்மேல் போட்டு எப்படி சப்திக்கிறதென்று பார்த்தேன். கனக்கிறதாவென்று கையிலெடுத்துத் தூக்கியும் பார்த்தேன். அப்படியும் எனக்குச் சந்தேகந் தீரவில்லை. ஒரு பவுனைக் கொடுத்துச் சில பண்டங்களும், ஒரு பவுனைக்கொடுத்துச் சில்லறையும் வாங்கி வரச் சொன்னேன். வாங்கிக்கொண்டுவந்து கொடுத்தார்கள். அதன்பிறகுதான் பவுன் என்று நிச்சயித்தேன். அடுத்த வாரமும், சனிக்கிழமையன்று மாலையில் எனக்குச் சம்பளங் கொடுக்கப்பட்டது. அதற்கடுத்தவாரமும் பார்த்தேன். அந்த வாரத்திலும் அறுபது பவுன்களைக் கொண்டுவந்து என் மேஜையின் மேல் எண்ணிவைத்தார். முதலெடுப்பில் எனக்கிருந்த அவநம்பிக்கையெல்லாம் அடியோடு போய்விட்டது. போனதுமல்லாமல், எங்கே இந்த வேலை நம்முடைய அஜாக்கிரதையினாலே போய்விடுமோ என்கிற பயமும் உண்டாகிவிட்டது. நானா அசட்டையாக இருப்பவன்? சிறிதும் புகாருக்கு இடமில்லாமல் சர்வ ஜாக்கிரதையுடன் வேலை பார்த்து வந்தேன். நடுவில் ஏதேனும் தாகமெடுத்தாலும் சரி, ஜலஸ்பரிசத்துக்குப் போகவேண்டியிருந்தாலும் சரி, எங்கே உத்தியோகம் போய்விடுமோ என்கிற பயத்தினால் உட்கார்ந்த இடத்தைவிட்டு நான் அசைகிறதில்லை. இவ்விதம் பக்தி சிரத்தையோடு வேலைசெய்து வருகிற என்னை ஒவ்வொரு நாளும் நாலைந்து தடவைகளுக்குக் குறையாமல் என் யஜமானராகிய அந்த மானேஜர் பார்த்துக்கொண்டுபோவார். அவர் பார்க்கிற மாதிரியைக்கொண்டும், அப்போது அவருக்குண்டாகிற முகவிகாஸத்தைக் கொண்டும் அவருக்கு என்னிடம் பூர்ணமான திருப்தியுண்டாயிருப்பதாக நான் அறிந்துகொண்டேன். முத

லிரண்டு வாரங்களில் மாத்திரம் நாலைந்துதரம் என்னை வந்து பார்த்துக்கொண்டிருந்த என் யஜமானர் மூன்றுவது வாரத்தில் இரண்டொரு தடவைதான் வந்து பார்த்துக்கொண்டிருந்தார். அதற்கடுத்த வாரத்தில் இரண்டு தினத்திற் கொருதடவை காலையில் வர ஆரம்பித்தார். பிறகு ஒருதடவை வருவதையும் நிறுத்திவிட்டார். அவர் தாம் வரவில்லையேயென்று நான் என் வேலையில் அசட்டையாயிருப்பதுமில்லை. இவ்விதமாய் எட்டு வாரங்கள் கழிந்துவிட்டன. நானும் அந்த அகராதியில் அடை, அதிசயம், அந்தாதி, அம்மான், அழகு, அன்றில், அன்னியம் என்கிறவரையில் எழுதிமுடித்து, அடுத்த வாரத்தில் ஆ என்பதைத் தொடங்கலாமென்றும், இகரம் வருவதற்குள் குறைந்தது நானூறு பவுனாவது கிடைக்குமென்றும் இப்படியெல்லாம் பெரிதாய் மனோரதித்துக்கொண்டிருந்தேன். இங்ஙனம் எழுதிவருவதில் எனக்கு ஒரு ரீம் காகிதத்தைத்தவிர வேறு என்ன செலவு? நானும் கொஞ்சங் கொஞ்சமாக அந்த மேஜை நிறைய எழுதிக் குவித்துவிட்டேன். நேற்றைத்தினம், ஆ - ஆச்சரியக் குறிப்பு. என்று எழுதி நிறுத்தினேன். இன்று, உள்ளபடி ஆச்சரியக் குறிப்பாகவே எல்லாம் முடிந்துவிட்டது."

"முடிந்துவிட்டதா?"

"ஆமாம் ஐயா, ஆமாம். நேற்றோடு எல்லாம் முடிந்துவிட்டது. நான் வழக்கம்போலவே இன்றைக்கும் சரியாகப் பத்து மணிக்கு ஆபீசிற்குப் போனேன். என்ன வயிற்றெரிச்சலைச் சொல்வேன்! கட்டடத்தின் வாசற் கதவு சார்த்திப் பூட்டப்பட்டிருந்தது. ஜன்னற் கதவுகளும் மூடப்பட்டிருந்தன. வாசற்படிக்கு நேரே, மேல் மாடியிலுள்ள ஆபீசின் வெளிப்பக்கத்தில் ஒரு அட்டை தொங்கவிடப்பட்டிருந்தது. அந்த அட்டையும் இதோ இருக்கிறது. தாங்களே அதை வாசித்துப்பாருங்கள்."

என்று சொல்லி, அரைக்காகிதத்தின் அளவுள்ள ஒரு வெள்ளை அட்டையை யெடுத்து என்னிடங் கொடுத்தார். நான் அதை வாங்கிப்படித்தேன். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"நரைத்தலைச் சங்கம் கலைந்துபோய்விட்டது. ஜூலை மீ,

மிகவும் மரியாதையாக எழுதப்பட்டிருக்கிற இந்த விளம்பரத்தையும், பக்கத்தில் மிகுந்த விசனத்தோடு தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டிருக்கிற அந்த நரைத்தலைக்கிழவரையும் பார்த்தவுடன் எங்களுக்கு அடக்கமுடியாத பெரிய சிரிப்புண்டாகிவிட்டது. நாங்களிருவரும் வயிறு புண்ணும்படி விழுந்து விழுந்து சிரித்தோம்.

"உங்களுக்கு இது வேடிக்கையாகத்தா னிருக்கும். விஷயத்தைச் சொன்னால் ஏதாவது பரிகாரத்தைத் தேடுவீர்களென்று நினைத்து, நான் இவ்வளவுதூரம் இங்கே சிரமப்பட்டுக்கொண்டு வந்தேன். இப்படி நீங்கள் சிரித்துப் பரிஹாஸஞ்செய்வீர்களென்று தெரிந்தால் வந்திருக்கமாட்டேன். நல்லது, நான் போய் வருகிறேன். உத்திரவு கொடுங்கள்" என்று அந்த நரைத்தலைக் கிழவர் நாற்காலியைவிட்டெழுந்திருந்து சட்டையை மாட்டிக் கொள்ளப் போனார்.

"என்ன இது! நீங்கள்கூட இப்படிக் கோபிக்கலாமா?" என்று சொல்லி, ஹண்டர் அவர் கையைப்பிடித்து இழுத்து நாற்காலியில் திரும்பவும் உட்காரவைத்து, "என்ன வந்தாலும் சரி, நான் உங்கள் கேசைக் கண்டுபிடிக்காமற் போகமாட்டேன். அது மாத்திரம் நிச்சயந்தான். இருந்தாலும் உங்கள் கேசானது மிகவும் வேடிக்கையாயிருக்கிறது. கேட்டால் யாராலும் சிரிக்காமலிருக்க முடியாது. நான் இப்படி வெள்ளையாய்ச் சொல்வதைப்பற்றி மன்னிக்கவேண்டும். இது நிற்கட்டும். நீங்கள் இந்த அட்டையைப் பார்த்தபிறகு என்னென்ன செய்தீர்கள்? தயைசெய்து தெரிவிக்க வேண்டுகிறேன்"

"ஐயா! நான் இந்த அட்டையை வாசித்துப் பார்த்தேன். அப்படியே ஸ்தம்பமாய் நின்றுவிட்டேன். எனக்கு பிரக்ஞை வருவதற்கு ஒரு நாழிகை யாய்விட்டது. பார்த்தேன், இன்னது செய்வதென்று எனக்குத் தோற்றவில்லை. நான் அந்த ஆபீசைச் சுற்றிலுமுள்ளவர்களையெல்லாம் ஒருவர் தப்பாமல் விசாரித்தேன். நரைத்தலைச்சங்கம் என்று ஒரு சங்கமிருந்ததாகக் கூட அவர்களிலொருவருக்காவது தெரியவில்லை. கடைசியாக, நான் அந்தக் கட்டடச் சொந்தக்காரர் யார் என்று விசாரித்து, அவரிருக்கு

மிடத்திற்குப் போய், அவரைக்கண்டு 'நரைத்தலைச்சங்கம் இப்போது எங்கேயிருக்கிறது?' என்று கேட்டேன். அவர், 'நரைத்தலைச்சங்கமா? நான் கேட்டதில்லை. அப்படி யொருசங்க மிருக்கிறதோ?' என்று என்னைக் கேட்க ஆரம்பித்தார். சரி, இவருக்கு அந்தச் சங்கத்தைப்பற்றித் தெரியாமற் போனாலும், மானேஜரைப்பற்றியாவது தெரிந்திருக்குமே என்று எண்ணி, 'டங்கன் ரோஸ் என்பவரைப்பற்றித் தங்களுக்குத் தெரிந்திருக்கலாமே' என்று கேட்டேன். அதற்கும் அவர், 'இந்தப் பெயரே எனக்குப் புதிதாக இருக்கிறது' என்றார். இதைக்கேட்டதும் நான் இதில் ஏதோ ஒரு பெரிய மோசந்தான் நடந்திருக்கவேண்டும் என்று எண்ணினேன். துக்கமும், பயமும், கவலையும் அதிகரித்துவிட்டது. எப்படியாவது இதை விசாரித்துத் தெரிந்துகொண்ட பிறகுதான் மற்றொரு வேலையைப் பார்க்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டேன். திரும்பவும் நான் அந்தச் சொந்தக்காரரைப்பார்த்து, '4- நம்பர் வீட்டிற் குடியிருந்த அந்தப் பெரிய மனிதர் இப்போது எங்கே யிருக்கிறார்? தங்களுக்குத் தெரியுமோ?' என்று கேட்டேன். 'என்ன, ஒரு நரைத்தலை மனுஷ்யன் தானே?' என்றார். நான் 'ஆம், ஆம்; அவர் தாம்' என்றேன். 'அவரையா கேட்கிறீர்கள். அவர் பெயர் டங்கன் ரோஸ் அல்லவே. வில்லியம் மாரிஸ் என்றல்லவா அவருக்குப் பெயர். அவர் ஒரு வக்கீல். தற்காலம் குடியிருப்பதற்காக இரண்டொருமாசத்துக்கு அந்த வீடு வேண்டுமென்று கேட்டார். அவர் வீடு புதிதாகக் கட்டிமுடிந்தவிட்டதென்று சொல்லி நேற்றைத்தினம் மூன்று மணி சுமாருக்கு இங்கே வந்து சாவியையும், வாடகைப்பணத்தையுங் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்' என்றார். 'நான் இப்போது எங்கே போனால் அவரைப் பார்க்கலாம்?' என்றேன். 'அவருடைய புதிய கட்டடத்துக்குப் போனால் அங்கே பார்க்கலாம். வீட்டு விலாசமும் கொடுத்திருக்கிறார். பால் ஞானியார் தெருவுக்குச் சமீபத்தில் அட்கின்ஸன் வீதியில், 17-வது, நம்பர் வீடு. அங்கே போனால் பார்க்கலாம்' என்றார். நான் அவருக்கு வந்தன மளித்துவிட்டு, உடனே அந்த விலாஸத்திற்கு ஓடினேன். ஹண்டர்! என்ன புதுமையைச் சொல்வேன்! அது ஒரு பெரிய மரக்கடை. கட்டில் நாற்

காலிகள் வேலைசெய்து கொண்டிருந்தார்கள். நான் அங்குள்ளவர்களையெல்லாம் விசாரித்தேன், 'டங்கன் ரோஸ் என்ற பெயரையுடையவராவது, வில்லியம் மாரிஸ் என்ற பெயரையுடையவராவது இங்கே யில்லை' என்று சொன்னார்கள். உடனே யெனக்கு ஓய்ச்சலுண்டாகிவிட்டது. என்ன செய்யலாமென்று யோஜித்தேன். சரி, இங்கேயும் வேறு பெயரை வைத்துக்கொண்டிருக்கக்கூடுமோ என்று எண்ணித் திரும்பவும் அங்கிருந்த வேலைக்காரர்களை, 'யாராவது நரைத்தலையை யுடையவர்கள் இங்கிருக்கிறார்களா?' என்று விசாரித்தேன். 'அப்படி யொருவருமே யில்லை' என்று சொல்லிவிட்டார்கள்."

"அதற்கப்புறம் என்ன செய்தீர்கள்?" என்று ஹண்டர் கேட்டான்.

"அதன் பிறகு நான் வேறெங்கும் போகவில்லை. நேராக வீட்டுக்குத்தான் வந்தேன். வந்து, என் வேலைக்காரனாகிய ஹக்கின்ஸ் என்பவனோடு என்ன செய்யலாமென்று ஆலோசித்தேன். அவன் பிடிகொடுத்தே வார்த்தை சொல்லவில்லை. அவன், 'உங்களுக்கு என்ன நஷ்டமுண்டாகிவிட்டது? ஏன் இவ்வளவு பதறுகிறீர்கள்? வந்தவரைக்கும் லாபந்தானே. சங்கத்தின் முதலுக்கு ஏதாவது நஷ்டம் வந்திருக்கும். அதனால்தான் சங்கத்தை நடத்தாமல் நிறுத்தியிருக்கிறார்கள். எதற்கும் நாம் கொஞ்சம் அவசரப்படாமல் பொறுமையுடனிருந்தால் நமக்குத்தாக்கல் கிடைக்காமற் போகுமா?' என்றான். ஹண்டர்! எனக்கு அவன் சொன்னவார்த்தை பிடிக்கவில்லை. சொத்தைப் பறிகொடுத்தவனுக்குக்கூட என்னளவு துக்கமுண்டாகாது. பசுக்கறந்ததுபோல அநாயாசமாய் வாரம் வாரம் வந்துகொண்டிருந்த அவ்வளவு பெருந்தொகையை விட்டிருக்க யாரால்தான் முடியும்? இன்னமும் அதை நினைக்க, உண்மையாய்ச் சொல்லுகிறேன், பகீரென்று அடிவயிற்றில் பற்றுகிறது. ஆனமட்டும் பார்த்தேன். எனக்குக் கிடை கொள்ளவில்லை. எப்படியாவது, என்ன கஷ்டப்பட்டாவது, அந்தச் சங்கமிருக்குமிடத்தைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்று எனக்குத் தோற்றியதே தவிர, அதை எப்படி நாம் கண்டு பிடிக்க முடியும்? என்கிற யோசனை மாத்திரம்

எனக்கு உண்டாகவில்லை. இங்கிலையில், தாங்கள் என்போன்ற ஏழை எளியவர்களுக்கு இப்படிப்பட்ட சங்கடமான காலத்தில், காசுபணத்தை அபேக்ஷியாமல் யோஜனை சொல்லுகிறீர்கள் என்று கேள்விப்பட்டு நேராகத் தங்களிடத்திற்கு வந்தேன். இவ்வளவு தான். இனி, தாங்கள் தயவு கூர்ந்து சொல்லும் யோஜனையின்படி நடக்கச் சித்தமா யிருக்கிறேன்" என்று சொல்லி முடித்தார்.

"நீங்களும் புத்திசாலித் தனமாகத்தான் வேலை செய்திருக்கிறீர்கள். உங்களுடைய கேசு சாமானியமானதன்று. உள்ளபடி ஒரு பெரிய கேசாகத்தானிருக்கிறது. என்னால் இயன்ற வரையில் சந்தோஷமாய் வேலை செய்து பார்க்கிறேன். தாங்கள் இது வரையிலும் சொல்லிவந்ததைக் கொண்டு கவனித்தால் இதில் ஏதோ பிரபலமான குற்றங்கள் நடந்திருக்க வேண்டுமென்று தான் தோற்றுகிறது." என்று ஹண்டர் சொன்னான்.

"பிரபலமான குற்றமா? வாரம் அறுபது பவுனல்லவா போய்விட்டது. ஐயா! இதைக்காட்டிலும் இன்னும் என்ன குற்றம் பிரபலமாக நடந்திருக்குமென்று சொல்லுகிறீர்கள்?" என்று ஜேபஸ் வில்ஸன் சொன்னார்.

"நீர் சம்பந்தப் பட்டிருக்கிற வரையில் பார்த்தால், உமக்கு இந்த் அற்புதமான சங்கத்தினால் ஒருவித நஷ்டமும் உண்டாகவில்லை யென்று தெளிவாய்த் தெரிகிறது. தவிர, ஒரு வாரத்திற்கு அறுபது பவுன் வீதம் எட்டு வாரத்துக்குள்ள பவுனும் லாபமாய் வந்திருக்கிறது. இது மட்டுமா? அகரத்தை முதலாக வுடைய பற்பல மொழிகளின் அர்த்தத்தையும், அப்பதார்த்தங்களைப் பற்றிய எல்லா மர்மங்களையும் அறிந்துகொண்டுமிருக்கிறீர். இப்படி இருவிதச் செல்வத்திலும் லாபமடைந்திருக்கிற உமக்கு இவ்வளவு துக்கமுண்டாவதற்குச் சிறிதும் நியாயமேயில்லை."

"அப்படி யொன்றுஞ் சொல்லாதீர்கள். எனக்கு இந்தச் சங்கத்தினால் யாதொரு நஷ்டமுமுண்டாகவில்லை யென்பது உண்மையே. ஆனாலும், அவர்கள் யார்? இந்தச் சங்கத்தை யேற்படுத்தியதன் நோக்கம் என்ன? இடையில் இவ்விதமாகச் சில மாறுபட்டங்களைச் செய்ததேன்? இந்த மோசம் என்னைப் பரிஹஸிப்பதற்காகவேயா? அப்படி யிருக்குமானால்—வாரம் வாரம்

அறுபது பவுன் செலவு செய்து இப்படி வேடிக்கை பார்க்க என்ன நிமித்தம்? என்னும் இவைகளைப்பற்றித் தீரத்தெளிய விசாரிக்க வேண்டுகின்றேன்."

"உமக்குப் பதிலாக நாங்கள் விசாரித்து வந்து உமக்குத் தெரிவிக்கிறோம். ஆகையால், இனி நீர் இதைப்பற்றிக் கவலைப் படவேண்டாம். இரண்டொரு கேள்வி மாத்திரம் கேட்கிறேன். அதற்குமட்டும் பதில் சொன்னால், போதுமானது. வில்ஸன்! நரைத்தலைச் சங்கத்தைப்பற்றிய விளம்பரத்தை முதன் முதலில் உமக்குக் காட்டியது உம்முடைய வேலைக்காரனாகிய அந்த ஹாக் கின்ஸ் என்பவன் தானே?—அவன் உம்மிடத்தில் எத்தனை கால மாக இருக்கிறான்?"

"அந்த விளம்பரத்தைக் காட்டியதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு தொடங்கி என்னிடத்திலிருக்கிறான்."

"அவன் எப்படி உம்மிடத்திற்கு வந்தான்?"

"வேலைக்காரன் வேண்டுமென்று பத்திரிகைகளில் விளம் பரம் செய்திருந்தேன். அதைப் பார்த்து வந்தான்."

"இவன் ஒருவன் மாத்திரமா வந்தான்?"

"இல்லை, பன்னிரண்டு பேர்கள் அபேக்ஷகர்களாய் வந் தார்கள்."

"பன்னிரண்டு பேர்களில் இவனை நீர் தெரிந்தெடுத்ததற்கு என்ன இவனிடத்திலிருந்த விசேஷ குணங்கள்?"

"ஆள் வாட்ட சாட்டமாயிருந்தான். அத்தோடு குறைஞ்ச சம்பளத்திற்கும் வருவதா யொப்புக்கொண்டான்."

"குறைந்த சம்பளமாவது? அரைச் சம்பளந்தானே?"

"ஆம்."

"அந்த ஹாக்கின்ஸ் எப்படி யிருப்பான்?"

"குள்ளம்; கொஞ்சம் தடித்த உடம்பு; எதிலும் சுறு சுறுப்பாயிருப்பான். வயது முப்பது மதிக்கலாம். இருந்தும், முகத்தில் தாடி மீசை ஒன்றும் முளைக்கவில்லை. இவ்வளவுதான் அவனைப்பற்றி நான் சொல்லக்கூடியது."

இதைக்கேட்டதும் ஹண்டர் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, "நானும் நீர் சொன்ன அடையாளங்களை யுடையவனாகத்தான் இருப்பான் என்று நினைத்தேன். இருக்கட்டும்; அவன் காதிகளில் துவாரமிருக்கிறதாக நீர் கவனித்திருக்கின்றீரா?" என்று கேட்டான்.

"ஆம், இருக்கிறது. கடுக்கன் போட்டுக்கொள்வதற்காகக் குத்திக்கொண்ட மாதிரியாக இருக்கிறது. நானும் அதைப் பற்றி அவனைக் கண்டு கேட்டிருக்கிறேன். அவன் அதற்கு, 'நான் குழந்தையா யிருக்கும்போது யாரோ ஒரு பிச்சைக்காரன் குத்திவிட்டுப் போய்விட்டானாம்' என்று சமாதானஞ் சொன்னான்."

"அவன் இன்னமும் உம்மிடத்தில்தானே யிருக்கிறான்?"

"ஆம், என்னிடத்தில்தான் இருக்கிறான். நான் இங்கு வரும் போது கூட வீட்டில்தான் இருந்தான்."

"நீர் வெளியே போயிருக்குங் காலத்தில் உம்முடைய வேலைகளையெல்லாம் அவன் சரிவர ஒழுங்காய்ப் பார்த்துவந்திருக்கிறானா?"

"கொஞ்சங்கூடக் குறை சொல்வதற்கில்லை. மேலும், காலைவேளைகளில் எனக்கு அதிகமான வேலையுங் கிடையாது. இருந்த வேலையை அவன் பழுதுசொல்வதற் கிடமில்லாமல் தன் வேலையைப்போல் நன்றாகப் பார்த்திருக்கிறான்."

"இவ்வளவு போதும். நான் இன்னும் இரண்டொரு நாளைக்குள்ளாக உமக்கு இந்த விஷயத்தைப்பற்றிய முடிவான என் அபிப்பிராயத்தைச் சொல்லக்கூடுமென்று நினைக்கிறேன். இன்றைக்குச் சனிக்கிழமையல்லவா. திங்கட்கிழமைக்குள் நாம் ஒருவித தீர்மானத்துக்கு வந்துவிடலாம். வில்ஸன்! அதுவரை யில் பொறுத்துக்கொண்டிரும். தவிர, நீர் இங்கே வந்துபோன சமாசாரமும் உம் வேலைக்காரனுக்குத் தெரியவேண்டாம்." என்று சொன்னான்.

"சரி, அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி அந்த நரைத்தலைக் கிழவரும் போய்விட்டார். அவர் போனவுடன்

ஹண்டர் என்னைப்பார்த்து, 'நல்லது, வெப்ஸ்டர்! இந்தக் கேசைப்பற்றி உன்னுடைய அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டான்.

உள்ளபடி எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. இது ஒரு பெரிய கபடமான மோசமாக இருக்கிறது" என்று சொன்னேன்.

"அநேகமாய், கேசு எவ்வளவுக்கெவ்வளவு ஒன்றும் புரியாமல் பயங்கரமாக இருக்கிறதோ, உட்புகுந்து பார்த்தால் அவ்வளவுக்கவ்வளவு அது லேசாகவும் தெளிவாகவும் இருக்கிறது. சாதாரணமான கேசாகக் காணப்படுகிறதில்தான் பூதம் புறப்படுகிறதுபோல அதிரகஸ்யமான விநோதங்களெல்லாம் வெளிப்படுகின்றன. சாதாரணமான மனுஷ்யர்களை அடையாளங் கண்டு பிடிப்பது கஷ்டம். அதிகக் கறுப்பு, நிரம்ப வெளுப்பு, நீண்ட மூக்கு, பொட்டைக்கண் என்று இருந்தால் அடையாளங் கண்டு பிடிப்பது எளிது. அதுபோலவே, கேசிலும் ஏதாவது விசேஷமிருந்தால்தான் சுலபமாய்க் கண்டுபிடிக்கக்கூடும். இந்தக் கேசோ மேற்பார்வைக்குப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் செய்கின்ற ஒரு வேடிக்கைபோல் இருக்கிறது. இதில் அதிரகஸ்யமான விநோதம் ஏதாவது இராமற்போகாது. நான் இந்த க்ஷணமுதற்கொண்டே வேலைசெய்யவேண்டும்." என்று ஹண்டர் சொன்னான்.

"நல்லது, இப்போது என்ன செய்யப்போகிறாய்?" என்று நான் கேட்டேன்.

"என்ன செய்யப்போகிறேனா? ஹுக்கா குடிக்கப்போகிறேன். தயைசெய்து என்னோடு ஐம்பது நிமிஷம் வரையில் பேசாமல் இருக்கப் பிரார்த்திக்கிறேன்" என்று சொல்லித் தன் முழங்காலை மடக்கி மூக்கின்மேல் வைத்துக் குனிந்துகொண்டு தூங்குகின்றவன்போலக் கண்களையும் மூடிக்கொண்டான். நாற்பது நிமிஷம் வரையில் அப்படியே யிருந்தான். நான் உண்மையாக அவன் தூங்கிவிட்டான் என்றே நினைத்தேன். திடீரென்று, ஒரு விதமாக விஷயத்தைத் தீர்மானம் செய்துகொண்டவன் போல நாற்காலியை விட்டு வேகமாக எழுந்திருந்து, "இன்று மாலை 3-மணிக்கு ஜேம்ஸ் ஹாலில் ஒரு அற்புதமான சங்கீதக் கச்சேரி

நடக்கப்போகிறதாம். வெப்ஸ்டர்! நீ என்ன நினைக்கிறாய்? சாவகாசமிருந்தால், வா. இரண்டுபேருமாய்க் கேட்டுவிட்டு வரலாம்" என்றான்.

"எனக்கு இன்றைக்கு ஒரு வேலையுமில்லை. அவசியம் வருகிறேன்." என்றேன்.

"அப்படியானால், தொப்பியை யெடுத்துப்போட்டுக்கொள், போகலாம். எனக்குப் பட்டணத்திற்குள் கொஞ்சம் காரியமிருக்கிறது. ஆகையால், போகும்போது அந்தவழியாய்ப் போகலாம். வழியில் கொஞ்சம் ஆகாரமும் பார்த்துக்கொள்வோம். இன்றைத்தினம் அங்கே நடக்கும் பாட்டுக்கச்சேரியில் ஜர்மன் பாட்டுக்கள்தாம் அதிகமாகப் பாடப்படும் என்று நோட்டீசில் கண்டிருக்கிறது. அதுதான் எனக்கு நிரம்பப் பிடித்தமானது. ப்ரெஞ்சு, இட்டாலியன் பாட்டுக்களில் எனக்கு அதிக ருசியில்லை. ஜர்மன் பாடல்கள் உருக்கமுள்ளவைகளாயிருக்கும். அவைகளில் எனக்கு அதிகப் பிரியம். நாழிகையாகிறது, வா போகலாம்." என்றான்.

நாங்களிருவரும் ஒரு குதிரை வண்டியி லேறிக்கொண்டு அந்திக்கடைச் சதுக்கும் வரையில் போனோம். அங்கே போய் வண்டியை நிறுத்திவிட்டு, முன் அந்த நரைத்தலைக் கிழவனார் சொன்ன வீதியை நோக்கிச் சென்றோம். அது அதிக அகலமில்லாமல் மிகக் குறுகியதாய் இரண்டு சிறகிலும் நாலு தளங்களுக்குக் குறைவில்லாத வீடுகளையுடையதாய், ஜனநெருக்கமுள்ள ஒரு தெருவாயிருந்தது. காற்றோட்டம் சற்றுமில்லை. எங்கும் புகை சூழ்ந்துகொண்டிருந்தது. அத்தெருவின் ஒரு மூலை வீட்டின் வாசலில் ஒரு பித்தளைத் தகட்டில், ஜேபஸ் வில்ஸன் என்று விலாசம் எழுதியிருந்ததைக் கண்டோம். ஹண்டர் அந்த வீட்டிற்கு எதிரே நின்றுகொண்டு அந்த வீட்டை நன்றாகக் கவனித்துப் பார்த்தான். அந்த வீதியின் வழியாக இருமுறை தெற்கும் வடக்குமாக நடந்தான். ஒவ்வொரு வீட்டையுங் கவனித்தான். திரும்பவும் ஜேபஸ் வில்ஸன் வீட்டண்டை வந்து நின்றுகொண்டு, அங்கிருந்தபடியே எல்லா வீடுகளையும் பார்த்தான். பார்த்துவிட்டு, அந்த வீட்டின் தளவரிசையைத் தன் கைத்தடி

யால் பலமுறை தட்டித்தட்டிப் பார்த்தான். பிறகு வாசற்படி யண்டை வந்து கதவைத் தட்டினன். உடனே கதவைத் திறந்து கொண்டு குள்ளமான ஒரு அழகிய வாலிபன் வந்து, 'உள்ளே வாருங்கள், உங்களுக்கு என்னவேண்டும்?' என்று கேட்டான். ஹண்டர் அவ்வாலிபனைப் பார்த்து, 'தங்களுக்கு வந்தனம். நான் கடன் வாங்க வரவில்லை. குதிரை வாங்க வந்தேன். இங்கிருந்து குதிரை லாயத்திற்கு எப்படிப் போகவேண்டும்?' என்று கேட்கும்போதே அவனையும் நன்ருக உற்றுப் பார்த்துக்கொண்டான். அந்த வாலிபன், இங்கிருந்து நேராகப் போனல் ஹாமில்டன் தெரு. அதற்கு அடுத்த தெருவில் நாலைந்து வீடு தாண்டினல் 'குதிரை லாயம்' என்று எழுதியிருக்கும். நல்லது போய்வாருங்கள்' என்று சொல்லிக் கதவை அடைத்துக்கொண்டு உள்ளே போய்விட்டான்.

அவன் போனதும் ஹண்டர், "நல்ல வேலைக்காரன் இவன். இவனைப்போல இன்னும் மூன்று பேர்கள் இந்த லண்டனி லிருக்கிருர்கள். ஆனல் இவனத்தனை சாமர்த்தியம் அவர்களுக்கில்லை. அவர்களும் லகுப்பட்டவர்களா? மகா துணிச்சற்காரர்கள். எப்படியிருந்தாலும் இந்த ஹண்டர் கையில் ஒருநாள் அகப்படாமற் போகமாட்டார்கள்" என்று சொன்னன்.

"நீ சொன்னதிற் கொஞ்சங்கூடப் பிழையில்லை. உள்ளபடி இவன் ஒரு பெரிய அயோக்கியன்போலத்தான் காணப்படுகிருன். விநோதமான இந்த நரைத்தலைச் சங்கத்தில் நடந்திருக்கிற படுமோசத்திக்கு இந்த ஹக்கின்ஸ் ஒருவனே முக்கியகாரணமாக இருந்திருக்கிருன் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. இவன் முகந்தான் கண்ணுடிபோல நன்ருகத் துலக்கிக் காட்டுகிறதே. நீயும் இவனைப் பார்ப்பதற்காகத்தான் இவனைக்கண்டு, 'குதிரை லாயம் எங்கேயிருக்கிறது?' என்று கேட்டாயோ?"

"இல்லை, இவனைப்பார்ப்பதிற்கில்லை."

"பின்னை யாரைப் பார்ப்பதற்காக?"

"இவனது காற்சட்டையின் முழங்கால் பக்கத்தைப் பார்ப்பதற்காக."

"அப்படி அதைப் பார்ப்பதிலிருந்து என்ன தெரிந்து கொண்டாய்?"

"எதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் நினைத்தேனோ அதைத்தான் தெரிந்துகொண்டேன்."

"அது போகட்டும். நீ அந்த வில்ஸன் வீட்டுத் தளவரிசைகளை யெல்லாம் உனது கைத்தடியால் தட்டித் தட்டிப் பார்த்தாயே. அது எதற்காக?"

"வெப்ஸ்டர்! இப்படி யெல்லாம் நாம் வார்த்தை சொல்லிக் கொண்டிருப்பதற்கு இது நேரமல்ல. சீக்கிரமாக நாம் பார்க்க வேண்டியவைகளைப் பார்த்துவிட்டு ஓடிப்போகவேண்டும். இது அயோக்கியர்களும் துஷ்டர்களும் நிறைந்த இடம். இந்த அந்திக்கடைச் சதுக்கத்தைப்பற்றி நாம் வேண்டியவரையிற் கேள்விப் பட்டிருக்கிறோமல்லவா? காலதாமதம் செய்யாமல் வந்த காரியத்தைப் பார்த்துக்கொண்டு நாம் இந்த இடத்தைவிட்டுத் தாண்டி விடவேண்டும்" என்று ஹண்டர் சொன்னான்.

ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் நாங்கள் அந்த மாதாகோவில் வீதியைத் தாண்டி அடுத்த வீதிக்குட் சென்றோம். அது ஒரு பெரிய வீதி. கைத்தொழிற்சாலைகளும், மொத்தம் மொத்தமாய் வியாபாரஞ்செய்யும் பெரிய பெரிய கம்பெனிகளும், நாணயசாலைகளும், அழகழகான கடைகளுமே இரண்டுவரிசையிலும் நிறைந்திருந்தன. முன்கைக்கும் புறங்கைக்கும் போல அவ்வளவு வித்தியாஸம் இந்த இரண்டு தெருவுக்கும் இருந்தது. நாங்கள் அந்தத் தெருவுக்குப்போனதும் ஹண்டர் அத்தெருவின் ஒரு மூலையிலுள்ள கட்டடத்தின்மேல் ஏறி நின்றுகொண்டு மற்றெல்லாக் கட்டடங்களையும் பார்த்தான். "லண்டன் மெயில் ஆபீசுக் கட்டடம் அது, அதற்கடுத்தது புகையிலைக் கம்பெனி, அடுத்தது சாராயக் கிடங்கு, அதன் பக்கத்தில் நகரபரிபாலனசங்கம், அதற்கடுத்தது தோல் பதப்படுத்துகிறயந்திரசாலை, அதற்கப்பால் ஸிட்டிகிளப்பு, அதுதாண்டினால் லண்டன்பாங்கு, அதற்குப் பக்கத்தில் ஸோடா கம்பெனி இருக்கின்றது. சரி, நாம் போய்வரலாம். நமக்கு இனிமேல் காரியமில்லை. பாட்டுக் கச்சேரியும் இதற்குள் ஆரம்பமாயிருக்கும்; வா போகலாம்" என்றான். நாங்கள் இருவரும் அங்

கிருந்து புறப்பட்டு, வழியில் கொஞ்சம் காப்பியும் சிற்றுண்டியும் சாப்பிட்டுவிட்டு ஜேம்ஸ் ஹாலுக்குப் போனோம்.

ஹண்டர் சங்கீதத்தில் நல்ல ஞானமுடையவன். அவனுக்கும் நன்றாகப் பாடத் தெரியும். உலகெங்கும் கொண்டாடப்பெற்ற 'சங்கீத சந்திரிகை' என்னும் உத்தமமான நூல் அவனால் செய்யப்பட்டதென்றால் சங்கீதசாஸ்திரத்தில் நமது ஹண்டருக்கு நல்ல ஞானமும் பயிற்சியும் உண்டென்று சொல்வதில் என்ன ஆச்சரியம்? அன்றைத்தினத்துப் பிற்பகல் முழுமையும் ஹண்டர் பிரம்மானந்த ஸாகரத்தில் மூழ்கியிருந்தான். பாட்டுக்குத் தக்கபடி தாளம்போட்டுக்கொண்டும், இனிமையாகப் பாடும் ஸந்தர்ப்பங்களில் புன்னகை தோற்றித் தலையை யசைத்துக்கொண்டும், உருக்கமான இடங்களில் முகுளிதமான கண்களையுடையனாய் மனமுருகிப் பரவசமாய்ச் சிறிதும் அசைவின்றிச் சாய்ந்துகொண்டும் இருப்பான். அந்த ஸமயத்தில் நாம் அவனைப் பார்த்தால், கைதிகளோடு போராடுகிறவனும், குற்றம் நடந்த வழியைப் பளிச்சுப் பளிச்சென்று கண்டுபிடிக்கிறவனும், பயங்கரமான தோற்றத்தையுடையவனும், போலீஸ் வீரனுமாகிய அந்த ஹண்டர்தானோ இவன் என்று சந்தேகிக்கும்படியா யிருக்கும். அப்படி அவன் ஆனந்தபரவசனாய்ச் சங்கீத ரஸானுபவம் பண்ணிக்கொண்டிருப்பதைப் பார்த்ததும்,'சரி, இன்றைக்கு யாரோ சிலருக்கு அனர்த்த காலம் பிடித்திருக்கிறது' என்று தீர்மானித்தேன். ஏனெனில், ஹண்டர் சுபாவந்தான் உங்களுக்குத் தெரியுமே. ஒரு கேசைப் பிடித்தால், அது எவ்வளவு சிக்கலாய்த்தா னிருக்கட்டும், ஈசுவரனுக்குக் கூடத் தெரியாமல் எவ்வளவு ரகஸியமானதாய்த்தான் இருக்கட்டும், அதைக் கண்டுபிடிக்கிறவரையில் ஹண்டர் தூங்க மாட்டான். காலத்தில் குளித்து முழுகிச் சாப்பிடவும் மாட்டான். 'இந்தக் கேசு ரொம்பவும் ஆச்சரியமானதாய் இருக்கிறது. ஏதோ பிரபலமான மோசத்துக்கு வழிதேடியிருக்கிறார்கள்' என்று காலையிற் சொல்லிக்கொண்டிருந்தவன், அதைப்பற்றிச் சிறிதேனுங் கவலைகொள்ளாமல் சங்கீதங் கேட்டுக்கொண்டிருப்பதைக்கொண்டு இவன் இந்தக் கேசின் ரகஸ்யத்தை அறிந்துவிட்டான்போலிருக்கிறது என்று நிச்சயித்துவிட்டேன்.

கச்சேரி கலைந்ததும் ஹண்டர் என்னைப்பார்த்து, "வெப்ஸ்டர்! நீ நேராக வீட்டுக்குத்தானே போகவேண்டும்?" என்று கேட்டான். "போனால் நல்லதுதான். காரியமுமிருக்கிறது." என்றேன்.

"எனக்குக் கொஞ்சம் காரியமிருக்கிறது. இரண்டு அல்லது மூன்று மணி சாவகாசம் பிடிக்கும். இந்த நரைத்தலைச்சங்கத்தைப் பற்றிய விஷயம் நிரம்பவும் முக்கியமானது."

"என்ன அப்படி?"

"பயங்கரமான ஒரு காரியத்தைச் செய்வதற்காக, வேண்டிய ஏற்பாடுகள் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டார்கள். இன்றைக்குச் சனிக்கிழமை யாகையால் அநேகமாக அந்தக் காரியத்தை இன்றிராத்திரிக்கே செய்யக்கூடும் என்று நினைக்கிறேன். அப்படி நம்புவதற்கான அநேக அனுமானங்களு மிருக்கின்றன. ஆகையால், நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருந்து குற்றம் நடக்கவொட்டாமல் தடுத்துவிடவேண்டும். கொஞ்சம் ஆலஸ்யமாயிருந்தாலுங் காரியங் கெட்டுப்போய்விடும். வெப்ஸ்டர்! உன்னுடைய உதவியும் ராத்திரிக்கு வேண்டியிருக்குமே."

"எந்த நேரத்துக்கு?"

"பத்துமணிக்கு வந்தால் போதுமானது."

"சரி, பத்தடிப்பதற்குப் பத்து நிமிஷம் முன்னாடியே வந்துவிடுவேன்."

"நல்லது போய்வா. வெப்ஸ்டர்! இன்னொரு செய்தி சொல்ல மறந்துவிட்டேனே. இன்றிரவு நடக்கப்போவதாக எதிர்பார்க்கிறபடி ஏதாவது குற்றம் நடப்பதாயிருந்தால், நாம் எச்சரிக்கையாகவே யிருக்கவேண்டும். ஒருவேளை நமது பிராணனுக்கே மோசம் வந்தாலும் வரும். ஆகையால், வரும்போது உன் கைத்துப்பாக்கியையும் எடுத்துக்கொண்டுவா." என்று சொன்னான்.

"கொண்டுவருகிறேன்" என்று சொல்லிவிட்டு, நான் அதிக வேகமாகப் புறப்பட்டுவந்தேன். வரும்போதெல்லாம் வழிநெடுக எனக்கு யோஜனைதான். "நாம் கேவலம் முட்டாளல்ல. மிகக் கூர்மையான குசாக்ரபுத்தியை யுடையவன் என்று நம்மைச் சொல்

லாவிட்டாலும் நல்ல புத்திசாலி என்றுதான் எல்லாரும் நம்மைக் கிரகித்திருக்கிறார்கள். நாமும் கூடியவரையில் நன்றாகவே படித்துமிருக்கிறோம். இருந்தாலும், நம்முடைய புத்தியும், நம்முடைய கல்வியும், ஹண்டருடைய புத்திக்கும் கல்விக்கும் உறைபோடக் காணாது. அவன் புத்தியெங்கே? நம்முடைய புத்தியெங்கே? இக்கேசு சம்பந்தப்பட்டமட்டில் அவன் என்னென்ன கேள்விப்பட்டிருக்கிறானோ அதை நாமும் கேட்டிருக்கின்றோம். என்னென்ன பார்த்திருக்கிறானோ அதை நாமும் பார்த்திருக்கிறோம். இருந்தும், அவன் சொன்னதிலிருந்து பார்த்தால், அவனுக்கு இதுவரையில் நடந்திருப்பதெல்லாம் கரதலாமலகம்போல நன்றாகத் தெரிந்திருப்பதுமல்லாமல், இனி இன்னது நடக்கப்போகிறது என்பதும் தெரிந்திருக்கின்றது என்று தெளிவாகிறது. நமக்கோ எல்லா விஷயமும் ஒரு பெரிய அந்தகாரமாய்த்தானிருக்கிறது" என்று இப்படியெல்லாம் சிந்தித்துக்கொண்டே வீடு வந்து சேர்ந்தேன்.

அங்கேயும் நான் கவலையின்றிச் சும்மா இருக்க வில்லை. திரும்பத் திரும்ப இந்த விஷயத்தைப் பற்றியே ஆலோசனை செய்துகொண்டிருந்தேன். அடை, அப்பம் என்று அகராதியைப் பார்த்து எழுதி, அதற்காக வாரம் அறுபது பவுன் சம்பளம் பெற்ற அந்த நரைத்தலை மனிதர் எங்களிடம் வந்து தம்முடைய சரித்திரத்தைச் சொன்னது முதற்கொண்டு, நாங்கள் அந்த அந்திக் கடைச் சதுக்கத்திற்குப் போய், மாதா கோவில் வீதியிலுள்ள அவரது வீட்டைப் பார்த்துத் திரும்பினது வரையில் உள்ள ஒவ்வொரு சங்கதியையும் ஞாபகத்திற்குக் கொண்டுவந்து பார்த்தேன். ஒன்றும் எனக்குப் புரியவில்லை. இன்றிரவு என்ன அக்கிரமம் நடக்கப்போகிறது? நான் ஏன் துப்பாக்கியும் கையுமாய்ப் போகவேண்டும்? என்று ஆனமட்டும் யோஜித்துப் பார்த்தேன். தக்க சமாதானம் ஒன்றும் பிறக்கவில்லை. 'அந்த நரைத்தலை வியாபாரியினிடத்தில் வேலைக்கிருக்கும் ஹக்கின்ஸ் ஒரு பெரிய அயோக்யன்.— எந்த அநியாயச் செயலுக்கு முன்னிற்பவன்; கொலை பாதகன்' என்று ஹண்டர் குறிப்பாகச் சொன்னதையும், 'இவன்தான் உள்ளாளாக இருந்து வேலைசெய்கிறான். இவன் சம்பந்தமில்லாமல் இந்த நரைத்தலைச் சங்கம்

ஏற்படவில்லை' என்று அவன் நிச்சயித்துக் கொண்டதையும் ஞாபகப்படுத்தி, அவனால் என்ன தீங்கு விளையக்கூடும்? என்று யோஜித்தேன். பின்னுங் குழப்பமாகவே இருந்தது. சரி, இனி இதைப்பற்றி இப்படி யெல்லாம் யோஜித்துக்கொண்டிருப்பதிற் பயனில்லை. அஸ்தமித்தால் தானே எல்லா விஷயமும் வெளியாய் விடுகிறது. வீணாக நாம் நம் மனத்தைப் புண்ணாக்கிக்கொள்வானேன் என்று அதைப்பற்றி யோஜிப்பதை விட்டுவிட்டேன்.

ஒன்பது மணி அடித்ததும் நான் வீட்டைவிட்டுப் புறப்பட்டு நேராக ஹண்டரிருக்கு மிடத்திற்குச் சென்றேன். நான் அங்கே போனபொழுது அவன் வாசலில் இரண்டு குதிரை வண்டிகள் நின்றுகொண்டிருந்தன. நான் உள்ளே பிரவேசித்து மாடிப்படியி லேறிக்கொண்டிருந்தேன். அப்போது, மேன் மாடியில் யாரோ சிலர் ஹண்டருடன் பேசிக்கொண்டிருப்பதாகத் தெரிந்தது. அடிச்சத்தங் கேட்டதும் ஹண்டர் கீழே ஓடிவந்து பார்த்து, 'வெப்ஸ்டர்! வந்துவிட்டாயா? உனக்காகத்தான் நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம்.' என்று சொல்லிவிட்டு மேலேபோய் அங்கிருந்த அந்த இரண்டுபேர்களையும் அழைத்துக் கொண்டு வந்தான். அவ்விருவர்களில் ஒருவரை எனக்குத் தெரியும். அவர் பெயர் ஜோன்ஸ். போலீஸ் உத்தியோகத்தில் இருப்பவர் ஹண்டரைப்போல அவ்வளவு புத்திமான் என்று அவரைச் சொல்வதற்கில்லை. என்றாலும், அவர் மற்றுள்ள போலீஸ் உத்தியோகஸ்தரைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு ஸாமர்த்தியசாலி என்பது நிராக்ஷேபமாக யாருமே ஒப்புக் கொள்ளக் கூடிய விஷயம். மற்றொருவரையும் நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். ஆனாலும், இன்னாரென்று நன்றாகத் தெரிய வில்லை. அவருடைய நடை யுடை பாவனைகளிலிருந்து அவரை ஒரு பெருந்தனக்காரராக நினைத்தேன். நான் அவரைப் பார்ப்பதைக் கண்டு ஹண்டர் என்னை நோக்கி, "வெப்ஸ்டர்! இவரை உனக்குத் தெரியாதே. இவர்தாம் லண்டன் பாங்கின் அதிபதியாகிய ஜான் டேவிஸ் என்பவர். இன்றிராத்திரி நம்முடைய காரியங்களுக்குச் சகாயமாக இருப்பார்." என்று சொன்னான்.

"கோபுரத்தைப் பிரதிமைதான் தாங்குகின்றதோ? எங்களாலேயெல்லாம் என்ன ஆகப்போகிறது? ஆள் கணக்குக்கு

வேண்டுமானால் கூட நிற்கலாம். பிரயோஜனம் மாத்திரம் இல்லை" என்று ஜோன்ஸ் சொன்னார்.

"எல்லாம் சரிதான். இவ்வளவு ஆடம்பரமும் கடைசியில், மலைகல்லி எலி பிடிக்கிற வியாபாரமாய் முடிந்துவிடப்போகிறது என்றுதான் எனக்குத் தோற்றுகிறது."

"ஜான் டேவிஸ்! தாங்கள் அப்படி நினைக்கவே வேண்டாம். ஹண்டர் காரியத்தில் சிறிதும் பழுதென்பதே யிராது. ஹண்டர் வழிகளும், ஆலோசனைகளும் தனியாயிருக்கும். அவைகள் ஒன்றிலும் சேரமாட்டா. நமக்கு அவைகளைக் கேட்டால் நகைப்பு வரும். ஆனால் ஒன்றுமாத்திரம் நிச்சயம். எப்படியோ நமது ஹண்டர் அந்தக் குருட்டு வழிகளால் திருட்டைக் கண்டுபிடித்து விடுகிறார். எனக்குத் தெரிந்தவரையில், ஹண்டர் ஒரு கேசிற் பிரவேசித்து அதைக் கண்டுபிடிக்க முடியாமல் விட்டுவிட்டார் என்பது இதுவரையிற் கிடையாது. ஆக்ஸ்வொர்டு (Oxford) கொலைக்கேஸ், ஆக்ரா சாசுவதநிதிக் கேஸ், விண்டிபாங் (Windibank) என்பவரது கள்ளக் கையெழுத்துக் கேஸ், ஒன்ற இரண்டா சொல்வதற்கு, இந்த மாதிரி எத்தனையோ கேசுகளில் நமது ஹண்டர் மகா புத்திசாலித்தனமாய் வேலை செய்திருக்கிறார். இந்தக் கேசென்ன இவருக்கு ஒரு பெரிதா? ஓடுகிற ஓட்டத்தில் கண்டுபிடித்துவிடுவார். ஹண்டர் ஒன்று சொல்லுகிறது, அது தப்பிப் போய்விடுகிறது என்று வற்பட்டால் அப்புறம் எங்கள் போலீஸ் இலாகாவுக்கு என்ன கவுரவம் இருக்கிறது? டேவிஸ்! இனி இப்படி இவர் விஷயத்தில் அவநம்பிக்கைப்படவேண்டாம்" என்று ஜோன்ஸ் சொன்னார்.

"அப்படியானால் சரிதான்; இந்த எழுபத்திரண்டுவருஷ காலத்தில் நடக்காத ஒரு புதுமை இன்றுநடக்கப்போகிறது என்கிறீர்கள். நடக்கட்டும்; — அதைப் பார்ப்பாம் —." என்று டேவிஸ் இழுத்தாற்போல் பேசினார்.

"திட்டமாய் நடக்கப்போகிறது. அந்த ஆச்சரியத்தை நீங்களும் அவசியம் பார்க்கப்போகிறீர்கள். டேவிஸ்! உங்களுக்கு இன்று ஆயிரக்கணக்கான பவுன் லாபம். ஜோன்ஸ்! உமக்கும் ஒரு லாபம் இருக்கிறது. இது வரையில் உமது கண்ணுக்குஅகப்படாமலே ஏமாற்றிக்கொண்டுவருகிற அந்தப் பெரிய தலைவெட்டி

இன்று உமது கையிற் சிக்கிக்கொள்ளப் போகிறான். ஜான் க்ளே என்று நீங்களும் ஒருவேளை கேள்விப்பட்டிருக்கலாம். பெரிய கொலைகாரன், பெரிய திருடன், பெரிய மோசக்காரன், படுபாவி; அவன்தான் இப்போது திருடர்களுக்கெல்லாம் தலைவனு யிருக்கிறான். அவனைப் பிடித்துவிடவேண்டுமென்று நானும் நெடுநாளாய்க் குறிவைத்துக்கொண்டிருக்கிறேன். அந்தப் பயல் அகப்பட்டுக்கொள்ளுகிறதில்லை. எப்படியாவது தப்பி யோடிவிடுகிறான். அவன் தந்திரங்களையும் மாயங்களையும் இன்னதுதான் என்று சொல்லமுடியாது. இன்றைக்கு இங்கே கன்னம் வைப்பான். நாளைக் காலையில் ஒரு பெரிய கலாசாலைக்காகப் பணம் சேகரித்துக்கொண்டிருப்பான். அதற்கு மறுநாள் ஒரு ஸந்யாசிபோல் திரிவான். அவன் செய்கைகளெல்லாம் விசித்திரம் விசித்திரமாயிருக்கும். அதிகமாகச் சொல்லுவானேன். எல்லாத் தொழிலும் அந்த அயோக்கியனுக்கு நன்றாகத் தெரியும். நாம் அவனைச் சிறகொடித்துவிட்டால் மற்றைப்பேர்கள் மறுநாளே பெட்டிப்பாம்பு போல அடங்கி விடுவார்கள். இன்றைத்தினம் அந்த அயோக்கியனை நீங்களே பார்க்கப்போகிறீர்கள். ஆகையால், மற்றைப்படி அவன் தேக அமைப்பைப்பற்றி நான் உங்களுக்கு ஒன்றுமே சொல்லவேண்டியதில்லை." என்று சொல்லிவிட்டுப் பின்னரும் அவ்விருவர்களையும் நோக்கி, "நல்லது, மணி பத்தாய் விட்டது. பத்தேகால் இருக்கலாம். இனித் தாமதிப்பது கூடாது. நீங்கள் இருவரும் முதலில் இந்த வண்டியில் போங்கள். நானும் வெப்ஸ்டரும் இன்னொரு வண்டியிலேறிக்கொண்டு இதோ உங்களைத் தொடர்ந்துகொண்டே வருகிறோம்" என்று சொன்னான்.

அவ்விருவர்களும் போனபிற்பாடு, நாங்கள் மற்றொரு வண்டியிலேறிக்கொண்டு அநேகஞ் சந்து பொந்து மூலைமுடுக்குகளின் வழியாகப் போனோம். நாங்கள் போனவழியில் அந்நேரத்தில் அந்த இருட்டில் எங்களைத்தவிர வேறு யாருமே போகமாட்டார்கள். யமதூதன்கூட அந்த வழியாகப் போகப் பயப்படுவான். கொஞ்சநேரத்திற்கெல்லாம் எங்கள் வண்டி அந்திக் கடைச் சதுக்கத்தில் வந்து நின்றது. ஹண்டர் வண்டியைவிட்டுக் கீழே யிறங்கி, "நாம் சமீபமாக வந்து விட்டோம். வெப்ஸ்டர்! இந்த டேவிஸ் லண்டன் பாங்கின் தலைவரென்று சொன்னேனல்லவா;

இவருக்கு இந்தக் கேசில் அக்கறையிருக்கிறது. ஆகையால், இவரைக் கூட அழைத்துவந்தேன். ஜோன்ஸ் என்பவரால் நமக்கு அதிகலாபமில்லாவிட்டாலும், நல்ல பலசாலியாகையால், ஒரு சமயம் வேட்டைநாய்போலப் பிறர்மேல் ஏவிவிடுவதற்கு அனுகூலமாயிருப்பரென்று அவரை வரச்சொன்னேன். திருடர்கள் உயிருக்குத் துணிந்தவர்கள். நாம் அதற்குத் தக்கபடி ஜாக்கிரதையுள்ளவர்களாகவேயிருக்கவேண்டுமல்லவா? அதோ அவர்களும் வந்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். வா, போகலாம்" என்றான்.

நாங்கள் நால்வரும் மாதாகோவில் வீதிக்குப் பக்கத்து வீதியாகிய அந்தப் பெரிய வீதிக்குட் சென்றோம். அங்கே போனதும் எங்கள் வண்டிகளிரண்டையும் அனுப்பிவிட்டு, டேவிஸ் சொன்னபடி அவரைப் பின்றொடர்ந்து ஒரு குறுகலான சந்தின் வழியாக நடந்தோம். கொஞ்சதூரம் போனதும், அங்கே ஒரு சிறிய வாசற்படியிருந்தது. அதை டேவிஸ் திறந்துவிட்டார். நாங்கள் அதன் வழியாக உட்சென்று ஒரு தாழ்வாரத்தின் வழியாகப் போனோம். அந்தவழி ஒரு இருப்புக் கதவண்டைபோய் நின்றது. அதையும் டேவிஸ் திறந்துவிட்டார். அதைத் தாண்டினதும் ஒரு படிக்கட்டிருந்தது. அதன்வழியாகச் சிறிது தூரம் போனதும் மற்றொரு வாசற்படி எதிர்ப்பட்டது. அதையும் திறந்துவிட்டு எங்களை உள்ளே அழைத்துப்போனார். அங்கிருந்து சுரங்கம்போல ஒரு குறுகிய வழி கீழேபோயிற்று. டேவிஸ் கைவிளக்கின் வெளிச்சத்தை மறைத்துக்கொண்டு அவ்வழியாக எங்களைக் கீழே யிறங்கச் சொன்னார். நாங்களும் அவ்வாறே இறங்கிச் சென்றோம். அது மிகக் குறுகலான ஒரு அறையிற் கொண்டு போய்விட்டது. அந்த அறையில் மரப்பெட்டிகள் அடுக்கியிருந்தன. அங்கே போனதும் ஹண்டர் எங்களைப்பார்த்து, 'நீங்களெல்லாரும் அந்த மரப்பெட்டிகளின் மறைவில் பதுங்கி யிருங்கள்' என்று சொல்லிவிட்டுத் தன் கைத்தடியாற் கீழே தட்டினான். உள்ளெல்லாம் பொந்தாயிருப்பதுபோல 'டொம், டொம்' என்று சப்தித்தது.

அந்தச் சத்தத்தைக் கேட்டதும் டேவிஸ் மிகத் திடுக்கிட்டு, "இதென்ன அனியாயமாய் இருக்கின்றது! பொத்துப் பொத்

தென்று சப்திக்கின்றதே. ஹண்டர்! நீர் சொன்னது சரியாய்ப் போய்விட்டதே" யென்றார்.

"டேவிஸ்! இப்படி யெல்லாம் இரைச்சல் போட்டுக்கொண்டிருந்தால் காரியம் கெட்டுவிடும். பெருமூச்சுக்கூட விடாமல் தயைசெய்து அந்தப் பெட்டியடியில் மறைவாய் உட்கார்ந்துகொண்டிருக்கும்படி பிரார்த்திக்கிறேன்" என்று டேவிஸ்ஸை நோக்கிச் சொல்லிவிட்டு, ஹண்டர் தன் மூக்கண்ணாடியை யெடுத்துப்போட்டுக்கொண்டு, மெள்ள மெள்ளத் தன் முழங்கால்களினால் தவழ்ந்து, அங்கே தளவரிசைக் கற்களுக்கு மத்தியில் எங்கேயாவது இடைவெளி யிருக்கின்றதா என்பதைத்தன் கையிலுள்ள விளக்கு வெளிச்சத்தினால் கவனித்துப் பார்த்தான். அங்கோரிடத்தில் சிறிது இடை வெளி யிருப்பது தெரிந்து, 'சரி, இதுதான்' என்று தீர்மானித்துக்கொண்டு திரும்பிவந்து ஓரிடத்தில் உட்கார்ந்து என்னை நோக்கி, "வெப்ஸ்டர்! இன்னும் குறைந்தது ஒரு மணி சாவகாசம் நமக்கிருக்கிறது. நரைத்தலைக் கிழவரான அந்த வில்ஸன் தூங்குகிறவரையில் அந்தத் திருடர்கள் ஒரு காரியத்தையும் செய்யமாட்டார்கள். அவர் தூங்குவதுதான் தாமதம். அதற்கப்புறம் ஒரு நிமிஷங்கூடத் தாமதிக்காமல் வந்துவிடுவார்கள். எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரத்தில் வருகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களுக்குச் சௌகரியமுண்டு. தப்பியோடுவதற்கு அதிக சாவகாசம் இருக்குமல்லவா. வெப்ஸ்டர்! திருடர்கள் முதன்முதலில் உன் பக்கத்திலிருக்கிற பெட்டியைத்தான் திருடவருவார்கள். அதற்குள் என்ன இருக்கிறதோ அது எனக்குத் தெரியாது. வெகு துணிச்சலாய் இந்த மாதிரி சுரங்கமிட்டுக்கொண்டாவது இந்தப் பெட்டிகளைத் திருடவருவதற்கு இந்தப் பெட்டிகளில் ஏதாவது விலைபெற்ற பொருள்கள் இருக்கவேண்டும்" என்றான்.

"ஐயா! இவைகளிலெல்லாம் தங்கப் பாளங்கள் இருக்கின்றன" என்று டேவிஸ் காதோடு சொன்னார்.

"தங்கப் பாளங்களா?"

"ஆம். எல்லாம் தங்கப் பாளங்களே. நாலைந்து மாதங்களுக்கு முன்னர் நாங்கள் எங்கள் பாங்கின் தொகையை அதிகப்

படுத்தவேண்டி ஜர்மன் பாங்கிலிருந்து இந்தத் தங்கப் பாளங்களை வரவழைத்தோம். எங்களுக்கு இதிலுள்ள பாளங்களை வெளியி லெடுக்கவேண்டிய அவசியம் இதுவரையில் நேரிடாததால் அப்ப டியே வந்தபடி வைத்திருக்கின்றோம். இப்போது நான் உட்கார்ந் திருக்கிறேனே, இந்தப் பெட்டியில் மாத்திரம் இரண்டாயிரம் பாளங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஐம்பதுபவுன் நிறை யுள்ளது. இவைகளைக் கொள்ளையிடத்தான் வந்திருக்கிறார்கள்" என்று டேவிஸ் பெருமூச்சுடன் சொன்னார்.

"இப்போது சரியான காரணம் ஏற்பட்டுவிட்டது. சரி. இனி, நாமும் நம்முடைய ஆலோசனைகளைச் சரிவரச் செய்யவேண் டும். நாழிகை யாய்விட்டது. இன்னும் ஒரு மணி நேரத்தில் அவர் கள் வந்து விடுவார்கள். அதுவரையில், டேவிஸ்! அந்த விளக்கை ஒரு கறுப்புத் துணியால் மறைத்துவையும்" என்றான்.

"அதுவரையில் இருட்டிலா உட்கார்ந்துகொண்டிருக்கவேண் டும்?"

"ஆம், என்னசெய்யலாம்? வேறு கதியில்லை. நாம் இங்கே வந்திருப்பது நிலாச் சாப்பாட்டுக்காக வல்லவே. திருடர்களைப் பிடிப்பதற்காகவல்லவா வந்திருக்கிறோம். திருடர்களைப் பிடிக்க வேண்டுமானால் நாமும் பெரிய திருடர்களாகத்தான் வேஷம் போடவேண்டும். நல்லது; நீங்கள் விளக்கு வெளிச்சத்தை மறைத்துவிட்டுப் பத்திரமாய் ஒரு இடத்தில் உட்கார்ந்து கொள் ளுங்கள். நாம் அவர்களைக் கையுங் களவுமாகப் பிடித்துவிட்டால் அத்திருடர்களுக்குப் பலமெல்லாம் அடியோடு ஒடுங்கிப் போய் விடும். இருந்தாலும், அவர்கள் தைரியசாலிகள். நமக்கு ஏதா வது அபாயத்தை யுண்டுபண்ணக்கூடும். ஆகையால், நாம் கூடிய வரையில் சாவதானமாகவே யிருக்கவேண்டும். நான் இங்கே இந்தப்பெட்டியின் மறைவில் இருக்கிறேன். நீங்கள் அதோ இருக் கிற பெட்டியின் பக்கத்திலே ஒளிந்துகொண்டிருங்கள். நான் விளக்கு வெளிச்சத்தைத் தூண்டினேனோ இல்லையோ, அந்த க்ஷணத்தில் நீங்கள் எல்லாரும் என்னைவந்து கவிந்துகொள்ள வேண்டும். வெப்ஸ்டர்! துப்பாக்கி சரியாயிருக்கிறதா, பார்த்துக் கொள். ஏதாவது ஆபத்து நேரிடும்போல் உனக்குத் தோற்றி

னல், கொஞ்சமேனும் யோஜியாமல் திருடர்களை அந்த துப்பாக்கியால் பட் பட்டென்று சுட்டுத்தள்ளிவிடு" என்று சொன்னான்.

நான் அவன் சொன்னபடியே என் கைத்துப்பாக்கியை மருந்துபோட்டுத் தயார்செய்து ஒரு பெட்டியின்மேல் வைத்துவிட்டு அதன் கீழே மறைந்துகொண்டிருந்தேன். ஹண்டர் தன் கையிலிருந்த வெளிச்சத்தைத் தன் மார்புக்கு நேராகத் திருப்பி வைத்துக்கொண்டு முன் இடைவெளி காணப்பட்ட அந்த இடத்தின் பக்கத்தில் ஒரு பெட்டியின் பின்னல் மீனைப்பார்த்துக்கொண்டிருக்கும்கொக்கினைப்போல விழித்தவிழி கொட்டாமலுட்கார்ந்துகொண்டிருந்தான். விளக்கு வெளிச்சங்கள் சிறிதும் இல்லாமற் போகவே, நாங்களிருந்த அந்த இடம் மிகவும் பயங்கரமாயிருந்தது. அப்படிப்பட்ட ஒரு இருட்டை நான் எந்நாளிலும் பார்த்ததில்லை, 'பல கந்துகள் திரட்டலாகி' என்று ஒரு கவிச்சக்கரவர்த்தி வர்ணித்ததுபோல, அந்த இருட்டானது கைபாலள்ளிக் கற்றை கற்றையாகத் திரட்டிவிடலாம்படி அவ்வளவு அடர்ந்ததாயிருந்தது. ஆனல், அங்கே உண்டான ஒருவித துர்க்கந்தத்தினல் விளக்குகளவிந்து போகாமல், நினைத்த நிமிஷத்தில் வெளிச்சத்தை வீசலாம்படி சித்தமாக ஒரு இடத்தில் எரிந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் அறிந்துகொண்டேன். அந்த இடத்தை நினைத்தால் எனக்கு இன்னமும் பயமாயிருக்கின்றது. காற்றோட்டமில்லாத இருண்ட ஒரு சிறிய அறையில், ஒருபெட்டியின் பின்னே, ஒரு நடு நிசியில், திருடனை நாம்தாம் பிடிக்கப்போகிறோமோ, அல்லது அவர்கள்கையில் நாம்தாம் அகப்பட்டு இறக்கப்போகிறோமோ, எது ஸம்பவிக்குமோ என்று சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கின்ற மனத்துடனே பதுங்கிப் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருக்கிறதென்றால், அது யாரால்தான் முடியும்? ஹண்டர் ஸகாயத்துக்கு இருக்கிறன்; அவனிருக்கும்போது நமக்கென்ன பயம்? என்று தைரியப்படுத்திக்கொண்டு கிடந்தேன்.

"அவர்களுக்கு ஒரே ஒருவழிதான். அதுவும் அந்த ஜேபஸ் வில்ஸனுடைய வீட்டின் புழைக்கடைப் பக்கத்திலிருக்கிறது. அதைத்தவிர தப்பித்தோடுவதற்கு வேறு வழியே கிடையாது

ஜோன்ஸ்! நான் சொன்னபடி ஏற்பாடு செய்திருக்கிறீரா?" என்று ஹண்டர் ஜோன்ஸ் என்பவரைப்பார்த்து மெதுவாகக் கேட்டான்.

"ஆமாம். தக்கபடி ஏற்பாடு செய்திருக்கிறேன். இரண்டு இன்ஸ்பெக்டரும், நான்கு ஆபீசர்களும் துப்பாக்கியோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று ஜோன்ஸ் சொன்னார்.

அதுகேட்டு, ஹண்டர் "சரி, அப்படியானால் நாம் எல்லா வழிகளையும் அடைத்துவிட்டோம். இனி அவர்களுக்குப் போக் கிடமில்லை. நாம் மாத்திரம் வாய்பேசாமல் காத்துக்கொண்டிருக்க வேண்டும். திருடர்கள் வருகிற சமயமுமாய்விட்டது" என்றான்.

"ஐயோ, என்ன பயங்கரம்! எனக்கு அங்கே ஒரு நிமி ஷம் போவது ஒரு யுகமாகத் தோற்றியது. பின்னிட்டுக் கணக்குப் பார்க்கும்போதுதான், நாங்கள் அங்கிருந்ததெல்லாங்கூடி ஒன் றேகால் மணி சாவகாசம் என்று தெரிந்தது. ஆனால், அந்தச் சம யத்தில் எனக்கு அது ஒன்றேகால் மணியாகத் தோற்றவில்லை. ஒன்றுக்கு அஞ்சுமடங்காகத் தோற்றியது. பொழுதுவிடிகிறசம யமாய்விட்டதே. இனிமேலா திருடர்கள் வரப்போகின்றார்கள்? என்று கூட நினைத்தேன். என் கைகால்களெல்லாம் கட்டையாய் விறைத்துப் போய்விட்டன. இருந்தும், நான் முதலில் எப்படி யிருந்தேனோ அப்படியே அங்கே யிருந்தேனே யொழியக் கை கால்களைக் கூட மாற்றவில்லை. எங்கே காரியத்திற்கு விரோதம் வந்துவிடுமோ என்கிற பயத்தினால் நான் அப்படியே அங்கு ஒரு கல்லுப் பிள்ளையாரைப்போல உட்கார்ந்துகொண்டிருந்தேன். என் பிடிவாதத்திற் கிணங்கவே என் கைகால் நரம்புகளும் எப்படியோ அன்று தளர்ச்சியடையாமல் இருந்தன. எங்கும் நிச்சப்தமாய் இருந்தபடியால், ஒரு அணு அசைந்தாலும் அதுவும் என் காதுக்கு நன்றாய்க் கேட்டுக்கொண்டிருந்தது. நண்பனை ஹண்டர் மெதுவாக மூச்சுவிடுகிற அந்த சப்தமும் எனக்கு ஒரு ரயில் வண்டிச் சத்தம்போல் இருந்ததென்றால், நான் என் சுரோத் திரேந்திரியத்தின் கூர்மையைப் பற்றிப் பின்னும் என்ன சொல்ல வேண்டி யிருக்கின்றது? பாங்கின் தலைவராகிய டேவிஸ் என் பவர் கொஞ்சம் ஸ்தூல தேகக்காரராதலின் உலைத் துருத்திபோல மூச்சுவிட்டுக் கொண்டிருந்தார். நான் முதலில் அந்தச் சப்தத்

தைக் கேட்டவுடன் திருடர்கள் வருகிற சப்தமென்று பிரமித்தேன். 'அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்கிற பழமொழியின்படி நான் அங்கு ஒரு பல்லி சப்தித்தாலும் திருடன் என்று எண்ணித் துப்பாக்கியை யெடுப்பதாயிருந்தேன். இப்படி யிருக்கையில் ஏதோ ஒரு சப்தம் கீழேயிருந்து கிணுக்குக் கிணுக்கென்று உண்டாவதாகத் தெரிந்தது. நான் உற்றுக் கேட்டேன். பின்னும் இரண்டொரு தடவை அப்படியே கேட்டது. திருடர்கள் கல்லை விலக்குகிற சப்தந்தான் இது என்று நிச்சயித்துக் கொண்டேன். உடனே எனக்கு ஒருவித பயம் உண்டாயிற்று. கை கால்களும் நடுங்கின. துப்பாக்கியை யெடுக்கப் போனேன். எடுக்க முடியவில்லை. எடுத்தால் கைதவறிக் கீழே விழுந்துவிடுமென்று தோன்றிற்று. பிறகு, ஒருவாறு தைரியப்படுத்திக்கொண்டு இருந்தேன். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஒரு கல் நகர்ந்தமாதிரி சத்தம் உண்டாயிற்று. உடனே எங்களெதிரில் ஒரு மனிதன் நுழையக்கூடிய சிறிய துவாரம் ஒன்று காணப்பட்டது. அதைக் கண்ட நாங்கள் பதுங்கிக்கொண்டோம். சில நிமிஷங்களுக்கெல்லாம் அந்தத் துவாரத்தின் வழியே ஒரு வெளிச்சந் தெரிந்தது. அதைக் கண்டதும் எனக்கு நெஞ்சும் மார்பும் படபடவென் றடித்துக்கொண்டன. சற்று நேரங் கழித்து, ஒரு பெண்ணின் கைதான் என்று நினைக்கும்படியாக வெள்ளிதான மெல்லிய கையொன்று அத் துவாரத்தின் வழியாக வெளிப் போந்தது. இரண்டொரு நிமிஷம் வரையிலும் அந்தக் கை அப்படியே நீட்டினபடியாய் இருந்தது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அக்கையானது முன்பு அது எப்படி சரேலென வெளிப்பட்டதோ அப்படியே சரேலெனஉள்ளே மறைந்துபோய்விட்டது. விளக்கு வெளிச்சத்தையுங் காணோம். எங்கும் முன்புபோல இருட்டாகவே இருந்தது.

அந்தக் கை மறைந்ததுதான் தாமதம். உடனே பெரிய பாறை யொன்று பெயர்க்கப்பட்டதுபோல ஒரு கொடிய சப்தம் கேட்டது. நான் சப்தமுண்டான இடத்தை உற்றுப் பார்த்தேன். இரண்டு முழச் சதுரத்துக்கு ஒரு துவாரம் தெரிந்தது. கீழேயிருந்து கிளம்பின வெளிச்சத்தால் நான் அந்தத் துவாரத்தைக் கண்டுகொண்டேன். உடனே, அந்தத் துவாரத்தின் வழியாக

ஒருவன் முதலில், தன் கையை நீட்டிப் பார்த்துக்கொண்டு பிறகு தலையைக் கிளப்பி, அத்துவாரத்தின் பக்கங்களிற் கைகளை வைத்துக் கிளம்பி இடுப்பிற்கு மேல் வரையில் ஏறி நின்றதைப் பார்த்தேன். மற்றொருதரம் திரும்பிப் பார்ப்பதற்குள்ளாக அவன் அந்தத் துவாரத்தின் பக்கத்தி லுட்கார்ந்துகொண்டு, மற்றொருவனுடைய கையைப் பிடித்து வெளியே தூக்குவதைப் பார்த்தேன். இரண்டாந்தரம் வெளிப்போந்த அந்த மனுஷ்யனும் முதலில் வந்தவனைப்போலத்தான் சரீரக்கட்டுடையவனுயும் குள்ளமாயுமிருந்தான். ஆனால், அவன் முகம் மிக்க வெளுப்பாயும், தலைமயிர் நரைத்ததாயு மிருந்தது. அவன் வெளியே வந்ததும், "எல்லாம் சரியாய் இருக்கிறது. ஸ்காட்! (Scot) பைகளெல்லாம் தயாராயிருக்கின்றனவா? மெள்ள எழும்பிவா; எழும்பு பார்ப்போம்" என்று முதலில் வந்தவன் மெதுவாகச் சொன்னான்.

இவ்விதம் சொல்லிக்கொண் டிருக்கும்போதே எலியின்மேற் பாயும் பூனைபோல ஹண்டர் ஒரே பாய்ச்சலாக அவன்மேற் பாய்ந்து அவனை இறுகப் பிடித்துக்கொண்டான். அவன் அகப்பட்டுக் கொண்டதைத் தெரிந்து, மற்றொருவன் உள்ளே நுழைந்து ஓடிப்போய்விட்டான். ஹண்டர், 'அகப்பட்டுக்கொண்டாயா?' என்று சொல்லி அவனைப் பிடித்ததும் அவன் தன் சட்டைப்பையிலிருந்த துப்பாக்கியை யெடுத்து ஹண்டரைச் சுடப்பார்த்தான். அதற்குள்ளாக நாங்கள் விளக்கு வெளிச்சத்தைக் கண்டு ஓடி அவன் கையைப் பிடித்துக்கொண்டோம். எங்களைக் கண்டதும் அவனுக்கு அப்படியே பிராணனெல்லாம் போய்விட்டது. செயலற்று நின்றுவிட்டான்.

ஹண்டர் அவனைப் பார்த்து, "ஜான் க்ளே! இனிப் பிரயோஜன மொன்றுமில்லை. தப்பித்தோடுவதற்குக் கொஞ்சமேனும் மார்க்கங் கிடையாது. ஆகையால், அந்த எண்ணத்தை விட்டுவிடு" என்று சொன்னான்.

"ஓ, அப்படியா? நான் அகப்பட்டதனால் பாதகமில்லை. என் கூட்டாளியாகிய ஸ்டோன் தப்பித்துகொண்டு போய்விட்டானல்லவா, அது போதும்."

"அவன் எங்கே தப்புவான்? அவனுக்காக நாலைந்துபேர் அந்த வில்ஸன் வீட்டுப் புழைக்கடையில் காத்துக்கொண் டிருக்கிறார்களே."

"நீரும் அசட்டுத்தனமா யிராமல் தக்கபடி புத்திசாலித்தனமாய்த்தான் எல்லாக் காரியங்களையும் செய்திருக்கிறீர். ஹண்டர்! உம்முடைய சாமர்த்தியத்தை நான் மிகவும் கொண்டாடுகிறேன். உம்மைத்தவிர வேறு எந்தப் போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு இவ்வளவு தெரியும்?"

"நானும் உன்னுடைய சாமர்த்தியத்துக்கும் தந்திரத்துக்கும் பெரிதும் வியக்கின்றேன். க்ளே! உன்னுடைய நரைத்தலைச் சங்கம் மகா புத்திசாலித்தனமாகத்தான் ஸ்தாபிக்கப்பட்டது. இன்னும் கொஞ்ச நாளைக்கு நடத்திக்கொண்டிருந்தால் உங்கள் உத்தேசம் பலிதமாயிருக்கும். அதற்குள் அவசரப்பட்டுவிட்டீர்கள். இன்னும் இரண்டொரு தினங்கள் வரையிலாது சங்கத்தைக் கலைக்காதிருந்தால் உங்கள் திருட்டு ஒருநாளும் வெளியாகாது. கெட்டகாலத்தினடையாளம் உங்களுக்கு அந்தப்புத்தி தோன்றவில்லை. ஜோன்ஸ்! நீர் நெடுநாளாகக் கண்டுபிடிக்க வேண்டுமென்று முயற்சி செய்துகொண்டிருந்த அந்த ஜான் க்ளே இதோ இருக்கிறார். வந்து பாரும்" என்று ஹண்டர் சொன்னான்.

ஜோன்ஸ் என்பவரும், "பயலே! அகப்பட்டுவிட்டாயா? எத்தனை நாளாகத் தப்பித்துக்கொண்டிருக்கிறாய்? வா, இந்தப் பக்கம்" என்று சொல்லி அந்த ஜான் க்ளே என்பவன் கையில் விலங்கை மாட்டப் போனார்.

அப்போது அவரைப்பார்த்து ஜான் க்ளே என்னும் அத்திருடன், "தொடாதே, தூரநில். என் கையில் விலங்கைமாட்ட உனக்கென்ன அவ்வளவு ஆண்மை யுண்டாய்விட்டதா? உன் நாற்றக்கையால் என்னைத்தொடாதே. வா, போ, பயலே என்று ஏகவசனப் பிரயோகம் செய்தால் நான் உன்மானத்தைக் கெடுத்துவிடுவேன்; ஜாக்கிரதை. நான் ஒரு ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவனென்று நீ ஏன் அறியவில்லை? முட்டாள். என் தேகத்தில் அந்த நல்ல இரத்தமல்லவா இன்னும் ஓடிக்கொண்டிருக்கின்றது.

ஏ, ஜோன்ஸ்! இனி நீ என்னிடம் பேசவேண்டியிருந்தால், ஐயா என்றும் தயைசெய்து என்றும் ஆரம்பித்துச் சொல்லவேண்டும். தெரிந்ததா?" என்றான்.

"நல்லது; அப்படியே செய்கிறேன். ஐயா! தயைசெய்து தாங்கள் மேன்மாடிக்கு விஜயஞ்செய்யப் பிரார்த்திக்கிறேன். சற்று நேரத்திற்கெல்லாம் வண்டிவரும். அதிலேறிக்கொண்டு தாங்கள் காராக்கிருக பிரவேசத்திற்கு விஜயஞ் செய்யலாம்."

"சரி, அது நல்ல யோஜனைதான்" என்று சொல்லிவிட்டு அந்தத்திருடன் எங்கள் மூவருக்கும் வந்தனம்செய்யும் பாவனையாய்த் தன் தலையைச் சிறிது தாழ்த்திவிட்டு மந்தஹாஸத்துடன் அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தராகிய ஜோன்ஸ் என்பவருடன் மேன்மாடிக்குக் கம்பீரமாக நடந்து போய்விட்டான்.

அவன்போனதும் நாங்கள் மூவரும் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டு வெளியே வந்துகொண்டிருக்கும்போது டேவிஸ் என்பவர் ஹண்டரைப் பார்த்து, "ஹண்டர்! உமக்கு இந்த லண்டன் பாங்கு எல்லாவிதத்திலும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. நீர் செய்த உதவிக்குப் பிரதிபிரயோஜனமாக இன்னது செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. நீங்கள் மஹாபுத்திசாலித்தனமாய் மிகுந்த ஊக்கத்துடன் இவ்வளவு பிரயாசை யெடுத்துக் கொண்டதனால்தான் நாங்கள் தப்பிப்பிழைத்தோம். இல்லையேல் நாங்கள் நாளைக்கே பிச்சை யெடுக்கும்படி நேரிடும். திருடர்களுக்கெல்லாம் தலைவனான ஒருவனைத் தாங்கள் பிடித்துவிட்டீர்கள். ஆகையால், லண்டன் நகரமும் உங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது" என்று பலவாறு பாராட்டிப் புகழ்ந்து பேசினார்.

"டேவிஸ்! இவ்வளவு பெரிய ஸ்தோத்திரத்திற்கு நான் பாத்திரனல்லன். இது என் கடமை. எவரும் தத்தம் கடமைகளைச் செய்தே தீரவேண்டும். செய்யாவிட்டால் குற்றமுண்டு. நானும் எனக்குக் குற்றம் வராமல் என் கடமையைச் செய்திருக்கிறேன். இதைத்தவிர, புகழுக்கு உரியனும்படி யான் ஒன்றும் செய்யவில்லை. நானோ போலீஸ் உத்தியோகத்திலுள்ளவன் திருடர்

கள், மோசக்காரர்கள், கொலைபாதகர்கள் முதலிய கொடியவர்களைக் கண்டுபிடிக்கவேண்டுவது எனது கடமை. அதற்காகவே நான் சம்பளம் வாங்குகின்றேன். சம்பளத்தை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு நான் வேலைசெய்யாமலிருந்தால், பிறகு என்னைப்போன்ற அயோக்கியர்கள் வேறு யார் இருக்கிறார்கள்? என் கடமையை நான் செய்ததற்காக நீர் என்னை இவ்வளவுதூரம் புகழ்ந்துரைப்பது தகாது."

"ஹண்டர்! நீர் சொல்வது சரியல்ல. எவனொருவன் தனக்கிருக்கிற கடமையை இன்னதெனத் தெரிந்துகொண்டு, அதைச் சரிவரச் செய்துவருகிறானோ அவனைக்காட்டிலும் புகழுக்கும் சம்மானத்துக்கும் உரியவர்கள் வேறு யாருமே இல்லையென்பது என் அபிப்பிராயம். பெரியோர்களுடைய அபிப்பிராயமும் அதுவே. உமக்குள்ள கடமையை நீர் இன்னதென நன்கு உணர்ந்து அதைச் செய்துதீர்த்திருக்கின்றமையினால் நீரும் புகழுக்கு உரியவர் என்பதில் சிறிதும் ஆக்ஷேபமில்லை. உம்மைத் துதிப்பதும், உம்முடைய யோக்கியதைக்கும், புத்திநுட்பத்திற்கும், சரீரப் பிரயாஸத்திற்கும் தக்கபடி உமக்குச் சம்மானஞ்செய்வதும் பாங்கின் தலைவர்களாகிய எங்களுக்கு இன்றியமையாக் கடமையாக இருக்கின்றது. அதை நாங்கள் தீர்த்துவிட்டால் நாங்களும் புகழுக்குரியவர்வளாக ஆவோம்."

"டேவிஸ்! நீர் இவ்வளவுதூரம் மெய்யன்போடு என்னை அபிமானித்ததற்காக நான் உமக்கு வந்தனஞ்செய்கின்றேன். நீங்கள் எனக்கு யாதொரு சம்மானமும் செய்யவேண்டாம். உங்கள் அன்பே எனக்குப் பெரிய சம்மானம். டேவிஸ்! நான் இந்தக் கேசின் விஷயமாகச் சிறிது தொகை என் கையிலிருந்து செலவு செய்திருக்கிறேன். அதைமாத்திரங் கொடுக்கும்படி உத்திரவு செய்துவிட்டாற் போதுமானது."

"சரி, அந்தப்படியே செய்கிறேன். உத்திரவு கொடுங்கள்" என்று விடைபெற்றுக்கொண்டு பாங்கின் தலைவராகிய டேவிஸ் போய்விட்டார். நானும் ஹண்டரும் ஒருவண்டியிலேறிக்கொண்டு வீடுபோய்ச்சேர்ந்தோம். சேர்ந்ததும் நான் ஹண்டரைப் பார்த்து, 'இக்கேசை நீ கண்டுபிடித்த விதம் எப்படி? அதை எனக்கு விவரமாய்ச்சொல்" என்று கேட்டேன்.

"இப்போது மணி மூன்று. சொச்சப் போதையும் போக்க வழி தேடாதே. சற்றுப் படுத்துக்கொள். பொழுது விடியட்டும், பார்த்துக்கொள்வோம்" என்றான். உடனே நாங்கள் படுக்கைக்குப் போய்விட்டோம். நிரம்பவும் சிரமப்பட்டு வேலை செய்த படியினாலே, படுத்ததுதான் தாமதம், எங்களையறியாமல் உடனே தூக்கம் வந்துவிட்டது. விடிந்து எட்டுமணி வரையில் நாங்கள் மெய்ம்மறந்து தூங்கினோம்.

பிறகு எழுந்திருந்ததும் பல் துலக்கி முகங்களைக் கழுவிக் கொண்டு காப்பி சாப்பிடுவதற்காக மேஜையின் பக்கத்திற்போய் உட்கார்ந்தோம்.

ஹண்டர் என்னைப் பார்த்து, "வெப்ஸ்டர்! இந்த நரைத் தலைச் சங்கத்தின் விருத்தாந்தங்களை யெல்லாம் ஆதியோடந்த மாகச்சொல்லுகிறேன் கேள்" என்று சொல்லத்தொடங்கினான்:—

"விசித்திரமான இந்த நரைத்தலைச் சங்கத்தைப் பற்றிய விளம்பரத்தையும், அகம், அகங்கை என்று அகராதியைப்பார்த்து எழுதிக்கொண்டு போகவேண்டுவதாகிய அதன் உத்தியோகத் தையும், நன்றாய் ஊன்றிப்பார்க்கும்போது அவை தீர்ந்த புத்தி, சாலியாய் இராமல், கேவலம் பொருளாசையாலேயே கவரப்பட்ட மந்த புத்தியையுடைய அந்த நரைத்தலைக் கிழவனான ஜேபஸ் வில்ஸனை வீட்டைவிட்டுக் கிளப்பிச் சிலகாலம், அதாவது பத்து மணிமுதல் இரண்டுமணி வரையிலும், வெளியிலே யிருக்கும்படி செய்வதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட சூழ்ச்சிகள் என்பது மிகத் தெளிவாய் விளங்குகின்றதல்லவா? கிழவரை வெளிப்படுத்துவதற் காகச் செய்த இந்த உபாயங்கள் புதுமாதிரியாய், பிறர் கவனிக்கக் கூடியனவாய் இருக்கின்றனவேயெனின், ஆம், அது உண்மை தான்; ஆயினும், இதைவிடச் சிலாக்கியமான மற்றோர் உபா யத்தைக் கண்டுபிடித்துச் செய்தல் சாத்தியமில்லை யாகையால், அவர்கள் இந்தத் தந்திரத்தினாலேயே காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்த்தார்கள். ஜான் க்ளே என்பவன் அத்யாச்சரிய மான புத்தியை யுடையவனாகையால், அவனுக்குத் தன் யஜமான னாகிய வில்ஸனது தலைமயிரைப் பார்த்தவுடன் இந்த உபாயம் தோன்றியிருக்கின்றது. க்ளே ஒருவன்தான் இவ்விதமான சூழ்ச்சி

யைச் செய்யக்கூடும். வாரம் அறுபது பவுன் என்றவுடன் ஒன்றிரண்டாக வட்டி வாங்குங் கிழவனுக்குப் பேராசை பிடித்து விட்டது. ஆயிரக்கணக்கான பவுன்களின்மேல் திருஷ்டி வைத்திருக்கின்ற இவர்களுக்கு இந்த அறுபது பவுன் எம்மாத்திரம்? வரவா, செலவா? ஒரு திருடன் சங்கத்தின் மானேஜரென்று பெயர் வைத்துக்கொண்டான். மற்றொரு திருடன் வேலைக்கு அமர்ந்து கொண்டு கிழவனை அந்த உத்தியோகத்திற்குப் போம்படி விளம்பரத்தைக் காட்டி மயக்கினன். இருவருமாகக் கிழவனைக் காலை நேரங்களில் வீட்டிலிருக்கவொட்டாமற் செய்துவிட்டார்கள். அரைச் சம்பளத்துக்கு ஒரு வேலைக்காரன் அமர்ந்திருக்கிறான் என்பதைக் கேட்டது முதற்கொண்டே, எனக்கு அவன் அப்படி ஒப்புக்கொண்டதற்குச் சரியான வேறு காரணம் இருக்கவேண்டும் என்று பட்டது."

"அது சரிதான். இதிலிருந்து அவன் கருத்து இன்னதுதான் என்பதை நீ எப்படி அறிந்துகொண்டாய்?" என்று நான் கேட்டேன்.

"இது நல்ல கேள்விதான். வில்ஸனுடைய வீட்டில் அவனுடைய மனைவியோ புத்திரியோ யாராவது வனப்புடைய மங்கையர்கள் இருந்திருந்தால், கேவலம் துன்மார்க்க சிந்தனையோடுதான் இக்காரியம் செய்திருக்கிறார்கள் என்று ஒருவேளை நான் சந்தேகிக்கக்கூடும். அங்கோ ஸ்திரீகள் யாருமே இல்லை. வில்ஸனாவது பெரிய பணக்காரராயிருந்தால் அவரை மோசஞ் செய்வதற்காக என்று நான் நினைக்கவும் இடமுண்டு. அப்படியுமில்லை. இவ்வளவு பெரிய பிரயத்தனமும், இவ்வளவு பெரிய செலவும் செய்வதற்கு வீட்டுக்கு வெளியே எங்கேயாவது கொள்ளையடிக்கத்தான் உத்தேசமிருக்கக்கூடுமென்று எனக்குச் சந்தேகமறத் தோன்றிற்று. அது எப்படியிருக்கலாம்? என்று ஆலோசித்தேன். வேலைக்காரனை அந்த ஹக்கின்ஸ் என்பவன் புகைப்படம் பிடிப்பதில் விருப்பமுள்ளவன் என்று சொன்னதும், எப்போதும் ஒரு இருட்டறையில் ஜாமக் கணக்காய் இருந்துவிடுகிறான் என்று சொன்னதும் உடனே எனது ஞாபகத்துக்கு வந்தன. ஓர் இருட்டறை! இந்த இருட்டறையில்தான் காரியமிருக்கிறது என்று நிச்சயித்துக்

கொண்டேன். அதன்பிறகு அந்த வேலைக்காரனது அங்க அடையாளங்களைப்பற்றி விசாரிக்கும்போது, அவன் லண்டனிலுள்ள பக்காத் திருடர்களுக்கெல்லாம் தலைவனென்று தெரியவந்தது.

அந்த இருட்டறையில் ஏதோ செய்துகொண்டுதானே இருந்தான்—அது தினந்தோறும் நாலுமணிசாவகாசம்—அப்படி எட்டு வாரங்கள். அந்த வேலை எதுவா யிருக்கக்கூடுமென்று ஆலோசித்தேன். அந்த அறையிலிருந்து ஏதாவது மற்றொரு கட்டடத்துக்குச் சுரங்கந்தோண்டுகிறதைத் தவிர மற்றெந்தவேலையாகவு மிருக்கக் காரணமில்லை யென்று எனக்கு நன்றாகப் புலப்பட்டது. நாம் அந்த அந்திக்கடைச் சதுக்கத்துக்குப் போவதற்கு முன்னேயே இவ்வளவுதூரம் வரையில் நான் ஊகித்துவிட்டேன். வில்ஸன் வீட்டண்டைபோனதும் நான் அவன் வீட்டு அடிவாரத்தை என் கைத்தடியால் தட்டிப்பார்த்தேனே. அது எதற்காகவென்று உனக்குத் தெரியுமா? சுரங்கம் வெளிப்பக்கத்தின் வழியாகப் போகிறதா, பின்புறத்தின் வழியாகப் போகிறதா என்பதைப் பார்த்தறிந்துகொள்வதற்காகவே நான் அவ்வாறு தட்டினேன். வெளிப்பக்கத்தின் வழியாக இல்லையென்று விளங்கிற்று. உடனே கதவைத் தட்டினேன். அது அந்த வேலைக்காரனை ஹக்கின்ஸைப் பார்ப்பதற்காகச் செய்த உபாயம். அவன் வெளியில் வந்ததும் நான் அவன் முகத்தைக்கூட அதிகமாகக் கவனிக்கவில்லை. நான் முக்கியமாய்ப் பார்த்தது அவன் முழங்கால் பக்கத்தைத்தான். சுரங்கம் தோண்டுவதென்றால் காலை மட்டி போட்டுக்கொள்ள நேரிடுமல்லவா? அதனால், அவன் முழங்காற் சட்டை வில்லையாகத் தேய்ந்து போயிருந்தது. நீயும் அதைக் கவனித்திருப்பா யென்றே நம்புகின்றேன். நான் அந்த ஹக்கின்ஸைப் பார்த்தவுடன் என்னுடைய ஊகமெல்லாம் சரியானதேயென்று திடப்படுத்திக்கொண்டேன். சுரங்கம் எவ்விடத்துக்குத் தோண்டுகிறான் என்பதை மாத்திரம் கண்டுபிடிக்க வேண்டியதாய் இருந்தது. அந்த உத்தேசத்தோடு தான் நான் வில்ஸன் வீட்டுக்குப் பக்கத்திலேயுள்ள வீடுகளையெல்லாம் பார்த்தேன். பின்புறத்தில் லண்டன்பாங்கு இருப்பதைக் கண்டுகொண்டேன். விஷயம் இன்னதுதான் என்பது சந்தேகமறத் தெரிந்துபோயிற்று. பாட்டுக் கச்சேரி முடிந்து,

நீயும் வீட்டுக்குச் சென்றபிறகு நான் நேராகப்போய், லண்டன் பாங்கின் அதிகாரிகளைக்கண்டு பேசி, இந்த டேவிஸ் என்பவரை அழைத்து வந்தேன். பிறகு நடந்ததெல்லாம் உனக்குத் தெரிந்தவைகள் தாம்" என்று சொல்லி முடித்தான்.

"எல்லாம் ஒப்புக்கொண்டேன்; இன்றிராத்திரியே அவர்கள் கொள்ளை யடிக்கப் போகிறார்களென்பது உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று நான் கேட்டேன்.

"இதுவும் நல்ல கேள்விதான். 'நரைத்தலைச் சங்கம் கலைந்து போயிற்று' என்று விளம்பரஞ் செய்ததானது, ஜேபஸ் வில்ஸன் வெளியே போகாமல் வீட்டிலிருப்பதனால் யாதொரு பாதகமுமில்லை என்று அவர்கள் தீர்மானித்ததைக் காட்டுகின்றது. அதாவது, சுரங்கமிடும் வேலை பூர்த்தியாயிற்றென்பதேயாம். சுரங்க முடிந்தபிறகு எங்கே இதைக் கண்டுபிடித்து விடுவார்களோ, பாங்கின்பணம் எங்கே அப்புறப்பட்டுவிடுமோ என்கிற இரண்டு பயமும் அவர்களுக்கு இருக்குமாகையால் எவ்வளவு சீக்கிரத்தில் காரியம் முடிக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அதை முடிக்க வழிதேடுவார்களென்பது நிச்சயம். சனிக்கிழமைதான் அவர்களுக்குத்தகுந்தகாலம். திருட்டு வெளிப்பட இரண்டு நாள் பிடிக்கும். திங்கட்கிழமை பாங்கைத் திறந்து பார்த்து, திருட்டுப் போயிருப்பதைப் போலீஸுக்கு அறிவிப்பதற்குள் அவர்கள் நெடுந்தூரம் தப்பி யோடுவதற்கும் வழியுண்டு. இந்தக் காரணத்தால் சனிக்கிழமைதான் திருடப்போகிறார்கள் என்று முடிவு செய்துகொண்டேன்" என்றான்.

இதைக் கேட்டதும், நண்பர்களே! எனக்குண்டான ஆச்சரியத்திற்கு ஒரு எல்லையேயில்லை. நான் ஹண்டர் கையைப் பிடித்துக் குலுக்கி எனக்குத் தெரிந்தவரையில் அவனை வாயாரப் புகழ்ந்து, 'நெடுங்காலம் நீ சுகமாய் வாழவேண்டும்' என்று ஆசீர்வாதமும் செய்துவிட்டு, இந்த அதிசயத்தை என் மனைவி மக்களுக்குச் சொல்லி, அவர்களுடன் சந்தோஷிக்க வேண்டுமென்னுங் கருத்துடன் அவன்பால் விடைபெற்றுக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தேன்.

முற்றிற்று.

காணமற்போன கணவன்.

கேம்பிரிட்ஜ் என்னுமிடத்திலுள்ள உயர்தரக் கலாசாலையில், அதன் தலைமை உபாத்தியாயராக ஐஸா ஹோல்டர் (Isa Holder) என்பவர் ஒருவர் இருந்தார். அவர் எம். ஏ ; எல். எல். டி ; முதலிய பட்டங்களை யெல்லாம் பெற்றவர். உலக சரித்திர ஆராய்ச்சியில் நல்ல நிபுணர். அபாரமான பிரஸங்க சக்தியுள்ளவர். ஈகை, இரக்கம், அன்பு முதலிய எல்லா நற்குணங்களையு முடையவர். இத்தனையையும் பாழாக்கிக்கொள்ள அவரிடத்தில் ஒரு துரப்பியாஸம் இருந்தது. அபினியைத் தின்றுவிட்டு அவர் எப்போதும் மயங்கிக் கிடப்பார். மிதமாகத் தின்பது, காலம் அறிந்து தின்பது என்கிற நியமமும் அவரிடத்திலில்லை. அளவுக்கு மிஞ்சித் தின்றுவிட்டுப் பிணம்போலவே அவர் எப்போதும் வீழ்ந்துகிடப்பார். இந்தக் கெட்டபழக்கம் அவருக்குப் பால்யம் முதலாகவே உண்டாகிவிட்டது. டிக்குவின்ஸி (De Quincey) என்பவர் தம்முடைய சுவப்பனுவஸ்தைகளை வர்ணித்தெழுதியுள்ள கட்டுக்கதைப் புஸ்தகங்களைப் படித்ததிலிருந்து அவருக்கு இந்தக் கெட்டபழக்கம் ஆரம்பமாயிற்று. அபினி முதலிய மயக்கவஸ்துக்களை யுண்டு மயங்கிக் கிடக்கும்போது, பற்பலவிதமான கனவுகள் தோன்றுமென்றும், அக்கனவுகாணும்போது உண்டாகிற ஆனந்தத்திற்குப் பிர்ம்மானந்தமும் நிகரில்லையென்றும், யாரோ சிற்சில கட்குடியர்கள் சொன்ன வார்த்தையை அவர் முற்றிலும் நம்பி இத் தீய பழக்கத்திற்கு ஆளாகிவிட்டார். "இவரையா இந்த அபின் பிசாசு பிடிக்க வேண்டும்?" என்று இரங்கி அவருடைய நண்பர்களும் உறவினர்களும் வெகுவாய்த் துக்கித்தார்கள். எப்படியாவது இந்தப் பழக்கத்திலிருந்து நிவர்த்திசெய்து விடவேண்டும் என்று அவருடைய நண்பர்கள் ஆனபாடும் பட்டுப்பார்த்தார்கள். சிறிதேனும் பயன்படவில்லை. கஞ்சாவுக்கும் அபினிக்கும் அடிமைப்பட்டவர்களை யாரால்தான் மீட்கமுடியும்? இனி இவன் ஒழிந்துபோனன் என்று விட்டுவிடுவதைத்தவிர வேறு என்ன நிவர்த்தி யிருக்கின்றது? அவரைப் பார்க்கப்போன இரண்டொரு தடவைகளில்

நான் அவருடைய அந்தரங்க சிஷ்யர்களும் நண்பர்களும் சூழ நின்று துக்கித்துக்கொண்டிருக்க, நாற்காலியில் பிரேதம்போல் அரைவிழிப் பார்வையுடன் சாய்ந்து கிடக்கிறநிலையில் அவரைப் பார்த்தேனேயொழிய, நல்ல ஞாபகத்துடன் பேசிக்கொண்டிருப்பதை நான் பார்த்ததேயில்லை. இது நிற்க.

ஒருநாள் இராத்திரி — ஆம், ஜூன் '89'— நானும் என் மனைவியும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கும்போது, யாரோ ஒருவர் வாசற்கதவை வந்து தட்டுவதாக வேலைக்காரன் சொன்னான். அதைக் கேட்டதும் என் மனைவி, தான் பின்னிக்கொண்டிருந்த சவுக்கத்தைக் கீழே வைத்துவிட்டுக் கொஞ்சம் வெறுப்புடன், "வைத்தியர்களுக்குப் பகலேது, இரவேது? ஸதா வேலைதான். வெளியே போகவேண்டியதுதானே?" என்றாள்.

"போகத்தான் வேண்டும். என்ன செய்யலாம்?" என்று நானும் அலுத்துக்கொண்டே சொன்னேன். பகல் முழுவதும் வேலைசெய்து நிரம்பவுங் களைத்துப் போயிருந்தபடியால், நான்கூட அவ்வாறு சொல்லும்படியாய் இருந்தது. இப்படி நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே வாசற்கதவு திறக்கப்பட்ட சப்தமும், ஒரு மெல்லிய பேச்சுக்குரலும் எங்கள் காதில் விழுந்தன. க்ஷணத்திற்கெல்லாம் படபடவென்று மாடிப்படியின்மேலேறி எங்கள் கதவைத் திறந்துகொண்டு ஒரு அழகிய மெல்லியல் எங்கள் அறைக்குட் புகுந்தாள்.

"இப்படிப்பட்ட அகாலத்தில் நான், உங்களைத் தட்டியெழுப்புவதற்காக என்னை மன்னிக்கும்படி பிரார்த்திக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே அந்த மடமங்கை, தன்னுடைய ஸ்வாதீனம் தனக்கில்லாமல், வேகமாக என் மனைவியிருக்குமிடஞ் சென்று அவள் தோளின்மேல் தன் கையைப்போட்டுச் சாய்ந்துகொண்டு, "அம்மா! நான் இப்படிப்பட்ட ஆபத்திலிருக்கிறேன். இந்த சமயத்தில் நீங்கள் கொஞ்சம் உதவிசெய்யத்தான் வேண்டும். உங்களைத் தவிர எனக்கு ஆப்தமான சிநேகிதர்கள் வேறு யார் இருக்கிறார்கள்?" என்று வருத்தத்தோடு சொன்னாள்.

"என்ன இது!" என்று சொல்லி என் மனையாள் தன் தோளின்மேல் போட்டிருந்த அவள் கையை யெடுத்து, முகமூடி

யைத் திறந்து யாரென்று திரும்பிப்பார்த்து, "அன்னி ஹோல்டரா? அம்மா! திடீரென்று இந்நேரத்தில் இங்கேவரக் காரணமென்ன? அன்னி! இந்த க்ஷணம் வரையில் நீதான் வந்திருக்கிருய் என்று எனக்குத் தெரியாதே" என்ருள்.

"எனக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. ஆகையால், நேரே உன்னிடத்திற்கு வந்துவிட்டேன்" என்று அன்னி ஹோல்டர் சொன்னுள். எப்போதும் அப்படித்தான் வழக்கம். யாராயிருந்தாலும் சரி, ஏதாவது கொஞ்சம் சங்கடம் நேர்ந்துவிட்டால், உடனே அவர்கள் நேராக எங்களிடம் வந்துவிடுவார்கள். ஏழை எளியவர்களாகிற பறவைகளுக்கெல்லாம் நாங்கள் ஒரு பழுமரமாக விளங்கிவந்தோம்.

"நீ இங்கே வந்த விஷயத்தில் எனக்கு நிரம்பவும் சந்தோஷம். கொஞ்சம் சாராயம் ஊற்றித் தருகிறேன். குடித்துக் களைப்பாறி நாற்காலியிற் சாய்ந்துகொண்டு சாவகாசமாக உன் சங்கதிகளைச் சொல்லலாம். இப்போது அவசரமொன்று மில்லை. அதிக சிரமமாயிருந்தால் படுக்கையை வேண்டுமானுலும் போடச்சொல்லட்டுமா?" என்று என் மனைவி சொன்னுள்.

"வேண்டாம், வேண்டாம். எனக்கு இவ்வளவு உபசாரம் எதற்காக? வேண்டியிருந்தால் கேட்கமாட்டேனு? எனக்கு டாக்டருடைய ஆலோசனையைக் கேட்கவேண்டும்; அவருடைய உதவியையும் நான் இந்த சமயம் எதிர்பார்க்கிறேன்; எல்லாமும் ஐஸா ஹோல்டரைப் (Isa Holder) பற்றியவைகள்தாம். அவர் இரண்டு நாளாக வீட்டுக்கு வரவேயில்லை. அதைப் பற்றிய கவலையும் பயமும் எனக்கு அதிகமாக இருக்கிறது."

அன்னி ஹோல்டர் இவ்விதம் தன் புருஷனுடைய ஹிம்சைகளை, டாக்டரென்று எண்ணி என்னிடத்திலும், கூடப் படித்துப் பழகி விளையாடிய தோழியென்று மதித்து என் மனையாளிடத்திலும் சொல்லி அடிக்கடி எத்தனையோ தடவைகள் முறையிட்டுக் கொண்டிருக்கிருள். ஆகையால், அவள் அர்த்தராத்திரியில் அலங்கோலமாக வந்து சொல்லிக்கொண்டாலும், இதுதான் இவர்களுக்குத் தொழிலாய்விட்டதே என்று நாங்கள், அதைக் கொஞ்சம்

அசிரத்தையோடுதான் கேட்டோம். இருந்தாலும், வந்தவளை அதைரியப்படுத்தக்கூடாதென்று எண்ணி, அவளுக்குச் சமாதானம் பிறக்கும்படியாக இரண்டொரு இனிய வார்த்தைகளைச் சொல்லி உட்காரும்படிசெய்து, "இப்போது உன் கணவர் இன்ன இடத்திலிருக்கிறாரென்று உனக்குத் தெரியுமா? இடந்தெரிந்தாலும் அழைத்துக்கொண்டு வருவது ஸாத்தியந்தானா?" என்று அவளை நாங்கள் கேட்டோம்.

"தெரியாமலென்ன? நிச்சயமாய்த் தெரியும். பட்டணத்தின் கீழண்டைக் கோடியிலுள்ள ஓர் அபின் கடையில் ஓர் மூலையில் வீழ்ந்து கிடப்பார். அபின் நினைவு வந்தவுடன் பித்துப்பிடித்தவர்போல் ஆய்விடுவதும், உடனே அங்கேபோய் அளவுகடந்து அபினைத் தின்றுவிட்டு, வீட்டு ஞாபகமேயின்றி மெய்ம்மறந்து மயங்கிக் கிடப்பதும் வழக்கமாய்ப் போய்விட்டது. முன்னெல்லாம் போனால் ஒருநாளைக்கதிகம் தங்கமாட்டார். தட்டித் தடுமாறி வீழ்ந்து கொண்டாவது மறுநாளுதயத்திற்குள் வந்து விடுவார். இப்போது வர வர அந்தத் துர்வாடிக்கை மிகவும் அதிகமாய் விட்டது. போனவர், இரண்டு நாளைக்கு அதிகமாச்சு, இன்னமும் திரும்பி வந்தபாடில்லை. இந்த வெட்கக்கேட்டையும் வயிற்றெரிச்சலையும் நான் யாரிடத்திற் சொல்லி அழுவேன்! நிச்சயமாய்ச் சொல்லுகிறேன், அவர் அந்த அபின் குகையில் பாழான அந்த விஷத்தைச் சாப்பிட்டுப் புரண்டுகொண்டுதான் கிடப்பார். அங்கே போனால்தான் அவரைக் கண்டுபிடிக்கலாம். 'கழுதை கெட்டால் குட்டிச் சுவர்' என்னும் பழமொழியின்படி அவர் வீட்டை விட்டால் நேராக அங்கேதான் போவார். அதைத்தவிர அவருக்கு வேறு போக்கிடமில்லை. ஸ்வாண்டம் சந்தில் அந்தப் பாழுங்கடை இருக்கிறதாம். அந்தச் சுடுகாட்டிற்கு, 'சுவர்க்கானந்த நிலையம்' என்று பெயராம். போய்ப் பார்த்து அழைத்து வந்தால் உங்களுக்குப் பெரிய புண்ணியமுண்டு" என்று சொல்லும்போதே கலகலவென்று கண்ணீரை யுகுத்தாள்.

அதைப் பார்க்கவும் எனக்கு மிகத் துக்கமுண்டாய்விட்டது 'எவ்வளவு படித்திருந்தால் தான் என்ன? ஐஸாவைப்போன்ற படுமுட்டாள் தேடிப் பிடிக்கவேண்டுமானாலும் அகப்படமாட்

டான். இனி அவனைப்பற்றிச் சிந்திப்பதிலும் பயனில்லை. அது போகட்டும். அன்னியால் இப்போது என்ன செய்ய முடியும்? கோழை மனமுடைய இந்தச் சிறிய பெண் அவ்வளவு தூரத்தி லுள்ள ஆபாசமான அந்த இடத்திற்குப்போய்த் தலைமாடு கால் மாடாய் மயங்கிக் கிடக்கிற அத்தனைபேர் மத்தியில், தன் நாயக னை ஐஸாவைக் கண்டு பிடிப்பதும் எப்படி ஸாத்யம்? நாமும் இவளுக்குத் துணையாய்ப் போகவேண்டியதுதான். அதைத்தவிர வேறு வழியில்லை' யென்று எண்ணினேன். உடனே எனக்கு மற்றொரு ஆலோசனை தோன்றிற்று. 'இவள்தான் எதற்காக வர வேண்டும்? நாம் மாத்திரம் போய் அழைத்துக்கொண்டு வந்து விடுவது எளிதான காரியமாயிற்றே. ஹோல்டரை நமக்கு நன் ருய்த் தெரியும். நாம் எத்தனையோ தடவை அவனுக்குச் சிகிச்சை செய்துமிருக்கிறோம். நாம் மாத்திரம் போவதுதான் உசிதம்' என்று தீர்மானித்து, அன்னியை நோக்கி, 'நான் சொல்வதைக் கேள். இப்போதே நான் புறப்பட்டுப் போகிறேன். நீ சொன்ன அந்த இடத்தில் ஹோல்டர் இருந்தால் உடனே ஒரு வண்டியை யமர்த்தி, இரண்டு மணி சாவகாசத்திற்குள், நான் அவனை உன் வீட்டிற்கு அனுப்பிவிடுகிறேன்' என்று அவளுக்கு நம்பிக்கை வரும்படியாகச் சொல்லி அவளை அனுப்பிவிட்டு, பத்து நிமிஷத் திற்குள்ளாக நான் புறப்பட்டு, நகரத்தின் கீழண்டைப் பக்கமாக என் வண்டியை அதிவேகமாக விட்டுக்கொண்டுபோனேன். நடு நிசியில் ஒரு அற்ப காரியத்துக்காக அவ்வளவு தூரம் தனியாகப் போவதில் எனக்கு அப்போது அவ்வளவாகத் திருப்தியில்லை. ஆனால், பிறகு நடந்த காரியங்களினால், பின்னால் அது எனக்கு அதிக ஸந்தோஷகரமான பிரயாணமாகவே முடிந்தது.

அன்னி சொன்ன அந்த ஸ்வாண்டம் சந்தானது லண்டன் பாலத்துக்குக் கிழக்கே, ஆற்றங்கரை யோரத்திலுள்ள பண்ட சாலைத் தெருவுக்குப் பக்கத்திலிருந்தது. அதைப்போல அவ்வ ளவு ஆபாஸமான ஒரு தெரு லண்டன் பட்டணத்திலேயேயில்லை. அது மிகக் குறுகலாயும் அசுத்தமாயும் இருந்தது. அத்தெருக் கோடியில், இரண்டு சாராயக்கடைகளுக்கு மத்தியில் ஒரு பெரிய பிலத்துவாரம் போல அந்த அபின்கடை இருப்பதைப் பார்த் தேன். வண்டியை வெளியே நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்

தேன். கொஞ்ச தூரம், படிக்கட்டுக்களின் வழியாகக் கீழே யிறங்கினதும் ஒரு சிறிய கூடம் இருந்தது. அதன் வாசற்படி யோரத்தில் மின்மினிப் பூச்சியைப்போல ஒரு விளக்கு மட்டாய் எரிந்துகொண்டிருந்தது. அபினியின் நாற்றம் என்னுல் சகிக்க முடியவில்லை. அக்கூட்டத்தின் பக்கத்தில் நெருக்கமான ஒரு அறை காணப்பட்டது. நான் அதற்குள் நுழைந்து பார்த்தேன். அநேகம் படுக்கைகள் ஒன்றின்மே லொன்ருய் நெருக்கமாக, கப்பல், ரயில் வண்டி முதலியவற்றில் முதல் வகுப்பு இரண்டாவது வகுப்புக்களில் போடப்பட்டிருப்பது போலக் காணப்பட்டன. அப்படுக்கைகளில் சிலர் கால்களிரண்டையும் நீட்டிக்கொண்டும், சிலர் வில்லைப்போல உடம்பை வளைத்துக்கொண்டும், சிலர் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டும், சிலர் உட்கார்ந்த வண்ணமாய் அப்படியே சாய்ந்துகொண்டும், சிலர் குப்புறப் படுத்துக் கொண்டும், சிலர் பாதி விழியைத் திறந்துகொண்டும், சிலர் இரண்டு முழங்காலையும் மடக்கி மேலே நீட்டிக்கொண்டும், சிலர் காலொரு பக்கம் தலையொரு பக்கமாகக் கோணலாய்ப் படுத்துக் கொண்டும், சிலர் வாயிலுள்ள அபினியைக் குடித்தபடியாகப் படுத்துக்கொண்டு மிருந்தார்கள். அந்த இருட்டறையில் வட்டம் வட்டமாகப் பிரகாசமாயும், அப்பிரகாசமாயும், அபின் குடிக்கும் குழாயின் வாயிலுள்ள நெருப்பானது ஜ்வலித்துக்கொண் டிருந் தது. அங்குள்ளவர்களிற் பெரும்பான்மையோர் பிணம்போலக் கட்டையாகவே வீழ்ந்துகிடந்தார்கள். மற்றையோர்களிற் சிலர் சிரிப்பதும், சிலர் அழுவதும், சிலர் முணுமுணுப்பதும், சிலர் திட்டுவதும், சிலர் பரிஹஸிப்பதும், சிலர் இரைந்து கூச்சலிடுவதும், சிலர் பிறரோடு பேசுவதுமாயிருந்து, தாம் சொன்னதும் பிறர் சொன்னதும் தெரியாமல் அப்படியே பாதியில் மயங்கிப் படுக்கையில் வீழ்வதுமாயிருந்தார்கள். அந்த அறையின் ஒரு ஓரத்தில் உயரமான ஒரு மனிதன் தன் எதிரில் ஒரு மேஜையைப் போட்டுக் கொண்டு நாற்காலியிற் சாய்ந்துகொண்டிருந்தான். நான் உள்ளே பிரவேசித்ததும் அவன் என்னிடம் வந்து ஒரு படுக்கையைக்காட்டி, அபின் குடிக்கும் ஒரு குழாயையும் கொஞ்சம் அபினியையுங் கொடுக்கவந்தான்.

நான் அவனைப் பார்த்து, "ஐயா! தங்களுக்கு வந்தனம். நான் இங்கே தங்கும் உத்தேசத்தோடு வரவில்லை. என் சிநேகிதரான ஐஸா ஹேரால்டர் என்பவரைக் கண்டு, அவரிடம் சில வார்த்தைகள் சொல்லிவிட்டுப் போவதற்காக வந்தேன்" என்று சொன்னேன்.

இதைக் கேட்டதும் அங்கே ஒரு சர்ச்சை யுண்டாயிற்று. நான் அதைச் சிறிதும் லக்ஷியஞ் செய்யாமலே, அந்த இருட்டில் எல்லாப் பக்கமும் ஊடுருவிப் பார்த்துக்கொண்டே யிருந்தேன். அங்கே ஒரு இடத்தில் நண்பனை ஹேரால்டர் தேகமெல்லாம் வெளுத்துப் போய்ப் பேசவும் சக்தியின்றிப் படுத்துக்கொண்டிருந்தான். நான் அவன் சமீபத்திற்குப் போனேன். என்னைக் கண்டவுடன் அவன் திடுக்கிட்டு, "வெப்ஸ்டர், என்ன இது! இவ்வளவு தூரம் வந்த காரணம் தெரியவில்லையே. அஃதிருக்கட்டும். இப்போது மணியென்ன?" என்று கேட்டான்.

"கிட்டத்தட்டப் பன்னிரண்டாகிறது."

"என்ன கிழமை?"

"ஜூன் மீ 19-ம் தேதி, வெள்ளிக்கிழமை."

"அப்படியா? இன்று புதன்கிழமை யென்றல்லவா நினைத்திருந்தேன்! ஆம், ஆம். புதன்கிழமை தான். நீ சொன்னதும் எனக்குத் திடுக்கிட்டு விட்டது. வெப்ஸ்டர்! எதற்காக என்னை இப்படி பயமுறுத்துகிறாய்?" என்று சொல்லிவிட்டுக் கையில் முகத்தை வைத்து அமுக்கிக்கொண்டு மீளவும் படுத்துக்கொள்ளப் போனான்.

"ஐஸா! என்ன பித்துக்கொள்ளித்தனம் இது? இப்படியா மனுஷ்யன் நாட்கணக்காய் மயங்கிக் கிடப்பான்? உன் மனைவி உன்னை ஊரெல்லாந் தேடுகிறாளே. வெள்ளிக்கிழமைதான், இது. புதன்கிழமை யல்ல. அது போய் இரண்டுநாள் ஆய்விட்டது. என்ன கிழமையென்று கேட்கிறாயே, கொஞ்சமாவது வெட்கமிருந்தால் இப்படிக் கேட்பையா?"

"ஆம். வெட்கமாய்த்தா னிருக்கிறது. வந்தேன்,--ஒருதரம், இரண்டுதரம், மூன்றுதரம்—அப்புறம் எத்தனை தரமோ—குடித்தது எனக்கு ஞாபகமில்லை. வந்து இரண்டு மணி நேரந்தான் இருக்கு

மென்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். ஐயோ, பாவம்! அன்னி மிகவும் விசாரப்பட்டுக்கொண்டிருப்பாள். நான் அவளை இந்த மாதிரி இம்சிப்பதும் நியாயமன்று. நல்ல பெண். வெப்ஸ்டர்! நானும் உன்னோடு வருகிறேன். கொஞ்சங் கை கொடுத்துத் தூக்கு, பார்க்கலாம். உன்னுடைய வண்டி வந்திருக்கின்றதோ?"

"ஆம், வாசலில் வந்து காத்துக்கொண்டிருக்கிறது."

"நல்லது; நானும் அதில் ஏறிக்கொண்டு வருகிறேன். வெப்ஸ்டர்! நான் அபின் குடித்ததற்காக ஏதாவது பாக்கி கொடுக்க வேண்டியிருக்கும். அது எவ்வளவென்றுபார்த்துச்சொல். எனக்கு எழுந்திருக்கச் சக்தியில்லை. என்னால் ஒன்றும் செய்யமுடியாது" என்று ஹோல்டர் சொன்னான்.

நான், அவர்கள் தூங்கிக்கொண்டிருக்கும் இரண்டு வரிசையான தாழ்வாரத்திற் கிடையேயுள்ள ஒரு குறுகிய முற்றத்தின் வழியாய், நாற்றம் சகிக்கமாட்டாமல் மூக்கைப் பிடித்துக் கொண்டே, மானேஜ ரிருக்குமிடத்திற்குச் சென்றேன். அப்படி நான் போய்க்கொண்டிருக்கும்போது யாரோ ஒருவர் சட்டென்று என் சட்டையைப் பிடித்து இழுத்து, தணிந்தகுரலில், "என்னைத் தாண்டிப் போ. போய்த் திரும்பிப் பார்" என்று காதோடு சொன்னதாகத் தெரிந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். அவர் மிகவும் இளைத்துப்போன சரீரமுடையவராய், வயது முதிர்ந்து விட்டபடியால், கூனிக் குனிந்து நடந்துகொண்டிருந்தார். நான் அவர் சொன்னபடி நாலடி தாண்டினதும் அவரைத் திரும்பிப் பார்த்தேன். நிரம்பவும் ஆச்சரியமுண்டாய் விட்டது. வாய்விட்டு இரைந்து கூப்பிடலாம் என்றுகூட நினைத்தேன். காரியங்கெட்டு விடும் என்ற யோஜனையினால் வாயைப் பலவந்தமாக அடக்கிக் கொண்டேன். அந்த மனுஷ்யரும் நான் மாத்திரம் அவரைப் பார்க்கும்படி என் பக்கமாக முகத்தைத் திருப்பினார். உற்றுப் பார்த்தேன். நண்பனை ஹண்டர் என்று தோன்றிற்று. உடனே நான் சந்தோஷம் பொறுக்கமாட்டாமல், "ஹண்டர்! என்ன காரியத்திற்காக நீ இந்தக் குகைக்கு வந்தாய்?" என்று மெதுவாகக் கேட்டேன்.

"உன்னால் முடிந்தமட்டும் மெதுவாகப் பேசு. எவ்வளவு மெதுவாகப் பேசினாலும் எனக்குக் காது கேட்கும். நீ, அந்த

உன் சிநேகிதனை எப்படியாவது அனுப்பிவிட்டு, என்னுடன் கூடவே வரப் பிரார்த்திக்கிறேன். நான் உன்னோடு சில சமாசாரங்கள் பேசவேண்டி யிருக்கின்றன" என்று ஹண்டர் சொன்னான்.

"வாசலில் வண்டியொன்று காத்துக்கொண்டிருக்கிறதே" என்றேன்.

"நிரம்பவும் நல்ல காரியமாய்ப் போய்விட்டது. அந்த வண்டியில் உனது நண்பரை யேற்றி அனுப்பிவிடு. அவருக்குக் கை கால்களெல்லாம் தளர்ச்சியடைந்திருக்கின்றபடியால் திரும்பவும் அவர் இந்தக் குகைக்கு வந்து உபத்திரவிக்கமாட்டார். சாவதானமாய் வீடுபோய்ச் சேர்ந்துவிடுவார். உன் மனைவிக்கு மாத்திரம் 'நான் ஹண்டருடன் அவசரகாரியமாகப் போகிறேன்' என்று ஒரு கடிதமெழுதி, அதை உன் வண்டிக்காரனிடமே கொடுத்தனுப்பிவிட்டு, வாசலில் நின்றுகொண்டிரு. ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் நான் வந்து விடுகிறேன்" என்றான்.

ஹண்டர் எது சொன்னாலும், அதை மறுத்துரைக்க என்னால் இயலாது. ஏனெனில், அவன் சொல்லுங் காரியங்களெவையும் அவ்வளவு அவசியமாயும், தாமதித்துச் செய்யக்கூடாதவைகளாயும், மிக்க மனக் கவற்சியை யுண்டுபண்ணக் கூடியவைகளாயுமே யிருந்தன. ஆகவே, நான் சரியென்று ஒப்புக்கொண்டேன். ஐஸா கொடுக்கவேண்டிய தொகையைச் செலுத்திவிட்டு வெளியே வந்து வண்டிக்காரனிடம் என் மனைவிகையில் கொடுக்கும்படி ஒரு கடிதத்தை யெழுதிக் கொடுத்து, ஐஸாவையும் வண்டியிலேற்றி அனுப்பிவிட்டேன். வண்டியும் அந்த இருட்டில் மறைந்து வேகமாய்ப் போய்விட்டது.

உடனே உள்ளேயிருந்து கூனிக்கொண்டு ஒரு கிழவர் வெளியே வந்தார். நானும் அந்தக் கிழவருடன் நாலைந்து தெருவரையில் ஒன்றும் பேசாமலே நடந்து சென்றேன். அந்தக் கிழவர் கொஞ்சதூரம் போனதும் பக்கத்தில் யாராவது வருகிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, உடனே ஒரு வாலிபனைப்போல நிமிர்ந்து என்னைப் பார்த்து, 'என்ன, வெப்ஸ்டர்! கிழவன் இப்படித்தானே நடப்பான்?' என்று சொல்லி உரக்கச் சிரித்தார். நானும் கொஞ்சநேரம் சிரித்துவிட்டு, "ஹண்டர்!

MADRAS

உனக்கு இந்த வேஷம் முற்றிலும் நன்றாகப் பலித்திருக்கிறது. நீ என் சட்டையையிழுத்து, என்னைத்திரும்பிப்பார் என்று சொன்ன காலத்திலுங்கூட நான் உன்னை உண்மையாகவே ஒரு கிழவ னென்றுதான் நினைத்தேன். அஃதிருக்கட்டும்; நீ அந்தக் குகைக்கு இந்த அர்த்த ராத்திரியில் வருவதற்கு என்னகாரணம் ஏற்பட் டது?" என்று கேட்டேன்.

"அபின் குடிப்பதற்காகத்தான். எத்தனையோ துர்க்குணங் களில் இதுவும் ஒன்று. அங்கே என்னைக் கண்டிருந்தும், 'எதற் காக வந்தாய்?' என்று கேட்பானேன். அபினி தின்பதற்காக இல்லாமற் போனால், மற்றைப்படி எனக்கு அங்கே என்ன காரியம்?"

"ஹண்டர்! உண்மையாகச் சொல்லுகிறேன். உன்னை அங்கே கண்டது எனக்கு மிகவும் ஆச்சரியமாகத்தானிருந்தது."

"உன்னை நான் கண்ட ஆச்சரியத்தைக் காட்டிலும் அதிக மான ஆச்சரியமா என்ன?"

"என்ன, ஹண்டர்! பரிஹாஸம் பண்ணுகிறாய். நான் என் சிநேகிதனைப் பார்ப்பதற்காக வந்தேன்."

"நான் என் சத்துருவைப் பார்ப்பதற்காக வந்தேன்."

"சத்துருவையா?"

"ஆம். எனக்கு ஸகஜமாகவுள்ள சத்துருக்களில் ஒருவனை —சத்துரு என்றுதான் சொல்வானேன்?—என் கையால் மாள வேண்டியவர்களில் ஒருவனைப் பார்ப்பதற்காக வந்தேன். வெப்ஸ் டர்! நான் வந்த காரியத்தைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன், கேள். நான் இப்போது ஒரு பெரிய கேசின் விஷயமாக அலைந்து கொண்டிருக்கின்றேன். அந்த அபின் கடையிலே ஏதாவது துப்பு அகப்படுமென்ற நம்பிக்கையின்பேரில் நான் இந்த மாதிரி மாறு வேஷத்துடன் இந்த நடுநிசியில் வந்தேன். சாராயக்கடை, அபின் கடை, தாசிவீடு முதலியவைகளே பெரும்பாலும் துன்மார்க்கர் களுக்கு இருப்பிடமாகையால், நான் அப்படிப்பட்ட இடங்களில், 'இவை நாம் போகத்தகாத இடங்கள்' என்று எண்ணிச் சும்மா இருந்துவிடாமல், அவசியம் அப்படிப்பட்ட இடங்களில் போய்ப் பார்த்துவிட்டுத்தான் திரும்புவேன். சில சமயங்களில், என்னை

யும் தங்களைப்போல அந்த அயோக்கியர்கள் எண்ணி என்னி டத்தில் நம்பிக்கை வைக்கும்படியாக நானும் குடித்துக் கூத்தாடிக் கொண்டுமிருப்பேன். இது ஆதிமுதல் எனக்குள்ள வழக்கம். இது உனக்குந் தெரிந்ததுதான். போலீஸ் உத்தியோகத்தில் அமர்ந்த பின்னர் இரவு பகல், நல்லவன் கெட்டவன், வேண்டியவன் வேண்டாதவன், ஆசாரம் அனுசாரம் என்ப தொன்றையுமே பார்க்க முடியாது. பார்த்தால் உத்தியோகத்தில் சமர்த்தனென்று பெயரெடுப்பது கஷ்டம். நான் மாத்திரம் இந்த மாறு வேஷத்துடன் வராமல், என் நிஜரூபத்துடன் வந்திருப்பேனுனால் அரை நிமிஷத்திற்குக் கூட என்னுற் பெயர் சொல்ல முடியாது. ஆனைவாய்க் கீரையாக என்னை அடித்து விழுங்கிவிடுவார்கள். நான் இந்த மாதிரி அடிக்கடி மாறுவேஷம் பூண்டு காரியத்தை ஸாதித்துக் கொள்ளுகிறேன் என்பதாக என்மீது பெருஞ் சினங்கொண்டு, எப்படியாவது என்னை ஒழித்துவிட வேண்டுமென்று அங்கேயிருக்கிற அந்தக் காவற்காரப் பயல் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறுன். அந்தக் கட்டடத்திற்குப்பின்னுல், மிடில்மாஸ்ட்டின் பலசரக்குக் கடையின் மூலையில் ஒரு வாசற்படியிருக்கிறது. அதற்குள் நடந்திருக்கிற அக்கிரமங்களுக்குக் கணக்கு வழக்கே யில்லை. எப்போது இருட்டுநாள் வரப்போகிறது என்றுதான் காத்துக் கொண்டிருப்பார்கள். ஓசைப்படாமல் கழுத்தைத் திருகி யெறிவதும், அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போய் விடுவதுமே வழக்கமாய் இருக்கிறது."

"ஆளுக்கேயா மோசம் வந்துவிடுகிறது?"

"ஆமாம். வெப்ஸ்டர்! ஆமாம். முதலில் ஆளுக்குத்தான் மோசம் வருகிறது. ஆளையடிக்காமற் போனுல் பணஞ்சேர்ப்பது எப்படி? பத்துப்பேரைக் கொன்றுல், குறைந்தபக்ஷம் பதிற்றுப் பத்து நூறு பவுனுவது கிடைக்காமற் போய்விடுமா என்று கணக்குப் பார்க்கிறுர்கள். ஜனங்களும் பொழுது சாய்ந்தால் இந்த வழியாக வருகிறதில்லை. தப்பித் தவறி யாராவது இசைகேடாக அகப்பட்டுக்கொண்டால் ஆளின் பாடு மோசந்தான். அப்பா! நினைத்தாலும் சதை நடுங்குகின்றது. இந்த மாதிரியான அபாய ஸ்தலம் வேறெங்குமேயில்லை. ஹாதர்லி (Hatherley) என்ற

துரை,—இதற்குள் நுழைந்தவர்தாம்— இன்னமும் திரும்பிவந்த பாடில்லை. செத்தாரோ, இருக்கிருரோ, அது தெய்வத்துக்குத்தான் வெளிச்சம். நாம் என்னவோ, இன்றைக்குத் தப்பினது தம்பிரான் புண்ணியந்தான்" என்று சொல்லித் தன் விரலை வாயில் வைத்துக் கிரீச் என்று ஒரு ஊதல் போட்டான். உடனே, டக்கு டோக்கு என்ற சத்தத்துடன் ஒரு குதிரை சாரட்டு வந்து நின்றது. அப்போது ஹண்டர் என்னைப் பார்த்து, "வெப்ஸ்டர்! என்ன சொல்லுகிருய்? என்னேடு கூட வருவதற்கு இஷ்டந்தானே" என்று கேட்டான்.

"என்னுல் ஏதாவது பிரயோஜனமிருக்குமானுல் வரத் தடையில்லை" என்று சொன்னேன்.

"பிரயோஜனத்துக்கு என்ன குறைச்சல்? சிநேகிதனென்று ஒருவன் கூட இருந்தால் எப்போதும் பிரயோஜனந்தான். அதிலும், உன்னைப்போன்ற உயிர்த்தோழனுயிருக்கும் பக்ஷத்தில்,— கேட்கவேண்டுவதேயில்லை. மேலும், உனக்கும் என்னேடு வருவதில் அசௌகரியம் ஒன்றும் ஏற்படாது. ஸீடாரில் (Cedar) உள்ள அந்த வீடும் நமக்கேற்றபடி சௌகரியமாகவே இருக்கும்" என்று ஹண்டர் சொன்னுன்.

"ஸீடாரா?"

"ஆம்; அங்கேதான் ஹாதர்லி (Hatherley) என்பவரின் வீடு இருக்கிறது. நான் இந்த விஷயத்தைப்பற்றி விசாரிக்கப் போகும் சமயங்களிலெல்லாம் அங்கேதான் தங்கியிருப்பது வழக்கம்."

"சரிதான். அது இங்கிருந்து எவ்வளவு தூரமிருக்கும்?"

"லீ (Lee) என்னுமிடத்திற்குச் சமீபத்தில் இருக்கிறது. ஐந்து நாழிகைப் பிரயாணமிருக்கும். அதிகமில்லை."

"லீயாவது, ஹாதர்லியாவது, ஒன்றும் புரியவில்லையே. கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டால்போ லிருக்கிறதே" என்றேன்.

"இப்போது அப்படித்தான் இருக்கும். வண்டியில் ஏறு. எல்லாந் தானே தெரிந்துவிடும்" என்று சொல்லித் தனது கையிலிருந்த சாட்டையால் குதிரையை ஓங்கி யொரு அடி அடித்தான். அவ்வளவுதான்; அக்குதிரை வாயுவேகம் மனோ

வேகமாகப் பறந்தது. நாங்களும் ஒன்றன்பின் ஒன்றாகக் குறுகலான பற்பல வீதிகளைக் கடந்துபோய், விசாலமான ஒரு பெரிய சாலையின் வழியாக எங்கள் வண்டியை விட்டுக் கொண்டு சென்றோம். கொஞ்சதூரம் போனதும், ஒரு பெரிய வாராவதி யெதிர்ப்பட்டது. அது, மற்றை வாராவதிகளைப்போல வளைவு வளைவான பல கண்வாய்கள்வைத்துக் கட்டப்படாமல், இருப்புத் தூண்களின்மேல் மரப்பலகைகள் பரப்பி அதிவிசித்திரமாகக் கட்டப்பட்டிருந்தது. அப்பாலத்தின்கீழ்க் காக்கை யிறகு போலக் கன்னங்கறேலெனத் தெளிந்த நீரினையுடைய ஒரு மஹாநதியானது கம்பீரமான தோற்றத்தோடு மெதுவாய்ப் போய்க் கொண்டிருந்தது. நாங்கள் அவ்வாற்றைக் கடந்து, நகரின் மேற்புறமாகப் போனோம். அப்பாதையானது ஜனநெருக்கமில்லாத ஒரு வெட்டவெளியான பிரதேசத்தின் வழியாகப் போய்க்கொண்டிருந்தது. மனிதர் நடமாட்டம் கொஞ்சங்கூட இல்லை. நள்ளிரவானதால் எங்கும் நிச்சப்தமா யிருந்தது. போலீஸ்காரர்களின் காலடிச் சத்தமும், இராக்கூத்தடிப்பவர்களின் கூச்சலும் அங்கங்கே சிறிது சிறிது கேட்டுக்கொண்டிருந்தவைகூட நாங்கள் போகும்போது மெதுவா யடங்கிப்போயின. ஆகாசமும் நிர்மலமாயில்லாமல் மேகபடலங்களாற் சூழப்பெற்று இருண்டு தோன்றிற்று. அங்குமிங்கும் இரண்டொரு நக்ஷத்திரங்கள் மாத்திரம் அம்மேகங்களுக்கிடையில் பளிச்சுப் பளிச்சென்று சுவற்பமாய் மின்னிக்கொண்டிருந்தன. இப்படிப்பட்ட பயங்கரமான சமயத்தில் ஹண்டரும் வாய் பேசாமல், மௌனவிரதத்தை மேற்கொண்டுள்ள ஒரு மஹாயோகியைப்போலத் தன் தலையை மார்பிற் சேரத் தொங்கவிட்டுக்கொண்டு, ஏகாக்ரசித்தனாய், ஆழ்ந்த சிந்தனையுடன் வண்டியைச் செலுத்திக்கொண்டிருந்தான். நானும் அவன் பக்கத்தில் இவன் இப்படி தீர்க்காலோசனை செய்யும் படியான விஷயம் எதுவாயிருக்கக்கூடும்? என்பதை யோஜனை செய்துகொண்டு, நண்பனது ஆலோசனைக்குப் பங்கமுண்டாகும்படி அவனை உசாவி அறிவதிலும் விருப்பமில்லாதவனாய் ஒரு மௌனிபோல உட்கார்ந்திருந்தேன். இவ்விதம் மௌன விரதர்களாக நாங்கள் நாலைந்து மயில் தூரம் சென்று, உத்தேசித்த இடத்திற்குச் சிறிது சமீபத்தையடைந்தவுடன், ஹண்டர் தன் தலையை

கிமிர்த்து உட்கார்ந்து, ஒரு புகைச்சுருட்டை யெடுத்துப் பற்ற வைத்தான். அதைக் கண்டதும், சரி, இவன் ஒருவிதமாக விஷயத்தை இன்னதுதான் என்று தீர்மானித்து விட்டான்போ லிருக்கிறது என்று நான் நிச்சயித்துக்கொண்டு, அவனோடு சில வார்த்தைகள் பேச ஆரம்பித்தேன். அதற்குள் ஹண்டர் என்னைப் பார்த்து, "வெப்ஸ்டர்! நீ நல்ல பழக்கம் செய்திருக்கிறாய்; இத்தனை நாழிகை வரையிலும் நீ பேசாமடந்தையைப் போல வாயை மூடிக்கொண்டிருந்தாயே. ஸதா ஏதாவது ஒன்றைப்பற்றிப் புலம்பிக் கொண்டிருக்கின்ற உனக்கு இவ்விதம் எப்படியிருக்க முடிந்தது?" என்று கேட்டான்.

"இருக்கத்தான் முடியவில்லை. பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் புளியமரத்தில் ஏறித்தானே தீரவேண்டும்" என்றேன்.

"நிரம்பவும் சரி. வெப்ஸ்டர்! நாம் கையை வீசிக்கொண்டு போகிறோமே. போய்க் கதவைத் தட்டினதும் அப்பெண்பேதை, 'சமாசாரம் எந்தமட்டிலிருக்கிறது? ஏதாவது துப்பு அகப்பட்டதா? என்று கேட்டால் என்ன பதில் சொல்லுகிறது, சொல் பார்க்கலாம்" என்றான்.

"பெண்பேதையைப் பற்றியும், மற்றொன்றைப்பற்றியும் எனக்கென்ன தெரியும்? ஒன்றுமே தெரியாமலிருக்கும்போது, பதில் சொல்லுகிறவிதம் இன்னது என்று நான் எப்படிச் சொல்ல முடியும்? ஹண்டர்! எனக்கு இந்தக் கேஸைப்பற்றி— கேஸென்றுதான் எனக்கு எப்படித் தெரியும்?—எதைப்பற்றியுமே ஒன்றுந் தெரியாது என்பதை நீ மறந்துவிட்டாயோ? அல்லது தூக்கத்தில்தான் உளறுகிறாயோ?" என்று கேட்டேன்.

"தூக்கமும் இல்லை; வீக்கமும் இல்லை. நல்லபடியாய்த்தான் சொல்லுகிறேன். கேசைப்பற்றி உனக்குச் சொல்லாமலா இதைக் கேட்பேன். 'என்னகேசு?' என்று கேட்பதைவிட்டு, என்னென்னவோ, நமக்குத்தான் பேசத்தெரியும் என்று பேசுகின்றாயே. போனது போகட்டும். லீ (Lee)க்கு நாம் போய்ச் சேருவதற்குள்ளாகக் கேசைச் சுருக்கமாய்ச் சொல்லிவிடுகிறேன், கேள். கேசென்னவோ, பார்வைக்கு மிகவும் அல்பமானதாகத்தான் இருக்கின்றது. அப்படியிருந்தும்,— என்ன காரணமோ

எனக்குத் தெரியவில்லை—மேல் இன்னவிதம் செய்தால் ரகஸ்யத்தைக் கண்டுபிடிக்கலாம் என்கிற உபாயம் மாத்திரம் இன்னமும் எனக்குப் பிடிபடாமலே யிருக்கின்றது. வெப்ஸ்டர்! கேசை ஆதியோடந்தமாகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் சொல்லுகிறேன். எனக்குப் புலப்படாத பாகங்களில் உனக்கு ஏதாவது விஷயம் தோன்றினல் உடனுக்குடனே அதை எனக்குச் சொல்."

"நான் சொல்வது இருக்கட்டும். மேலே சமாசாரம் என்ன?"

"சிலவருஷங்களுக்கு முன்னே,—அதாவது 1884-ம் ஞூ மே-மாசத்தின் போது— லீ என்ற இடத்துக்கு ஒரு பெரிய மனுஷ்யர் வந்தார். அவர் பெயர் ஹாதர்லி. அவருக்கு அபரிமிதமான சொத்துக்களிருந்தன. அவர், சிங்காரவிலாஸம் என்ற ஒரு பெரிய மாளிகையை விலைக்கு வாங்கிக்கொண்டு, அதில் நிரம்பவும் சுகமாக வாழ்ந்து வந்தார். வெகு நாள் வரையில் அவரை இன்னரென்றுகூட ஒருவருக்குந் தெரியாது. அவரும் அதிகமாக மற்றவர்களோடு ஸல்லாபம் வைத்துக்கொள்ளவில்லை. நாள் ஆக ஆக, அக்கம் பக்கங்களி லுள்ளவர்களோடெல்லாம் அவருக்குப் பழக்கமுண்டாயிற்று. அநேகர் அந்தரங்கமாகவும் ஸ்நேகித்து வந்தார்கள். உள்ளபடி பெரிய மனுஷ்யராயிருந்ததோடு ஈகை, அன்பு, விசுவாசம் முதலிய பல உத்தம குணங்களையும் அவர் உடையவராயிருந்ததனல், எல்லாரும் அவரிடத்தில் மரியாதையும் பிரியமும் காட்டி வந்தார்கள். இப்படியிருக்க 1887-ம் ஞூத்தில் அந்த ஹாதர்லி என்பவர், அவ்விடத்திலேயே வஸித்து வந்த ஒரு பெரிய வைத்தியருடைய குமாரத்தியை விவாகஞ் செய்துகொண்டார். அவள் வயிற்றிலே அவருக்கு இப்போது இரண்டு குழந்தைகள் பிறந்திருக்கின்றன. அந்த ஹாதர்லிக்கு உத்தியோகம் ஒன்றும் இல்லை. ஆனலும், அவர் வீட்டிலேயே சோம்பியிராமல் பற்பல பிரபல வியாபாரிகளோடு சிநேகம் வைத்துக்கொண்டு, அது காரணமாக அடிக்கடி பட்டணத்துக்குப் போக்குவரத்துள்ளவராக இருந்தார். நாள் தப்பாமல் காலையில், 6-மணிக்கெல்லாம் புறப்பட்டுப் போவார். காரியங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டு சாயங்காலம் 4-மணிக்குள்ளாகத் திரும்பி வந்து

விடுவார். வருவது சற்று முன்பின்னாக இருந்தாலும் புறப்படுவது மாத்திரம், 6 - மணிக்கு மேல் அரை நிமிஷங்கூட அதிகப்படாது. இப்படியே தினந்தோறும் போய்க்கொண்டிருந்தார். அவருக்கு இப்போது முப்பத்தேழாவது பிராயம் நடக்கிறது. நல்ல யோக்கியர். அடக்கமுள்ளவர். கோபதாபமென்பதை இன்னதென்றே அவர் அறியாதவர். அன்புள்ள நல்ல கணவராகவும் பக்ஷம் உள்ள நல்ல பிதாவாகவும், நம்பிக்கையுள்ள நல்ல சிநேகிதராகவும், கவுரவமுள்ள நல்ல பிரபுவாகவும், இரக்கமும் இன்சொல்லுமுள்ள நல்ல கொடையாளியாகவும் அவர் விளங்கி வந்தார். அவர் குடும்ப நிர்வாகமும் குறை கூறுதற் கிடமில்லாததாய்த்தான் இருக்கிறது. நான் தெரிந்து கொண்ட மட்டில் நாளிது தேதிவரையில் அவருக்கிருக்கிற மொத்தக் கடன் முந்நூற் றெழுபத்தைந்து (375) பவுன். இதற்கு வரவேண்டிய இனங்களும் இருக்கின்றன. கைத்தொழில் நிதியில் (Industrial Bank) இருநூற்றுப் பன்னிரண்டு (212) பவுனும், விவசாய நிதியில் (Agricultural Bank) நானூற்றைந்து (405) பவுனும் இவர் கணக்கில் வரவிருக்கின்றதாகத் தெரிகின்றது. ஆகையால், ஹாதர்லி கடனுபத்திரவத்தினால் மனோவியாகூலம் அடைந்தார் என்று நம்புவதற்குக் கொஞ்சங்கூட இடமில்லை. இதுநிற்க.

"சென்ற திங்கட்கிழமை யன்று ஹாதர்லி, வழக்கம்போல் ஆறுமணிக்குப் புறப்படாமல், முக்கியமான இரண்டு விஷயங்களைப் பற்றிக் கவனிக்க வேண்டியிருக்கின்றதெனச் சொல்லி கொஞ்சம் முன்னாடியே யெழுந்திருந்து பட்டணத்திற்குப் போய் விட்டாராம். போகும்போது, குழந்தைகளுக்கு இரண்டு பெட்டி நிறைய விளையாட்டுச்சாமான்கள் வாங்கி வருவதாகவும் சொல்லிப் போனாராம். அவர் வெளியே புறப்பட்டுப்போன க்ஷணநேரத்திற் கெல்லாம் தற்செயலாய் அவர் மனைவிக்கு ஒரு தந்தி வந்ததாம். பிரித்துப் பார்த்தபோது, அதில், அவள் நெடுநாளாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த விலைபெற்ற ஒரு சிறிய பார்சல் (Parcel) அபர்டீன் கப்பற்கம்பெனி (Offices of the Aberdeen Shipping Company) ஆபீசில்வந்திருப்பதாகக்கண்டிருந்ததாம். வெப்ஸ்டர்! உனக்குத்தான் லண்டனில் அதிகமான பழக்கமுண்டே. அந்த

ஆபீசு எங்கே யிருக்கிறதென்றால், சற்றுநேரத்துக்கு முன் நீ என்னை எங்கே கண்டாயோ அந்த ஸ்வாண்டம் சந்திற்குத் திரும்புகிற இடத்தில், ப்ரஸ்னோ (Fresno Street) வீதியி லிருக்கின்றது. தந்தி சமாசாரம் தெரிந்தவுடன் ஹாதர்லியின் மனையாள் சிறிது ஆகாரம் செய்துவிட்டுப் பட்டணத்திற்குப் புறப்பட்டாளாம். அங்கே வீட்டிற்குவேண்டிய சில பண்டங்களையும், குழந்தைகளுக்கு வேண்டிய இரண்டொரு சட்டைத் துணிகளையும் வாங்கிக்கொண்டு, கப்பற் கம்பெனி ஆபீசிற்குப்போய், அங்கே வந்திருந்த பார்ஸலையும் பெற்றுக்கொண்டு, சுமார் மூன்றுமணிக்கெல்லாம் ஸ்வாண்டம் சந்தின் வழியாக வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தாளாம். வெப்ஸ்டர்! இதுவரையில் உனக்கு நன்றாகத் தெரிந்ததா?"

"செவ்வையாய்த் தெரிந்துகொண்டேன்."

"சென்ற திங்கட்கிழமை, உனக்கும் ஞாபக மிருக்கலாமென்று நினைக்கிறேன், கொடிய வெயிலாயிருந்தபடியினால் ஹாதர்லியின் மனைவி நடக்கமாட்டாமல், பக்கத்தில் ஏதாவது வண்டியகப்படுமாவென்று பார்த்துக்கொண்டே மெதுவாக நடந்துகொண்டிருந்தாளாம். இப்படி அவள் ஸ்வாண்டம் சந்தின் வழியாக வந்துகொண்டிருக்கையில், 'ஐயையோ! 'ஐயையோ!!' என்ற ஒரு கூக்குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு, அதென்னவென்று பார்த்தாளாம். பக்கத்திலேயுள்ள ஒரு மாடிவீட்டின் இரண்டாவது தளத்திலிருந்து தன் புருஷன் அங்குள்ள சாளரத்தின் வழியாகத் தன்னை நோக்கிக் கைகாட்டி அழைப்பதாகத் தெரிந்ததும், இடிவிழுந்தவள்போல அவள் அப்படியே ஸ்தம்பமாய் நின்றுவிட்டாளாம். தான் பார்க்கிற சமயத்தில் அவரது முகம் மிகவும் பயங்கரமாய் இருந்ததென்றும், அவரது பார்வை ஒத்தாசைக்கு வரும்படியாகத் தன்னை யழைத்த மாதிரியாய் இருந்ததென்றும் அவள் சொல்லுகிறாள். மேலும், அவர் தம் கைகளை அப்படியும் இப்படியுமாக முரட்டுத்தனமாய் முறுக்கிஅடித்துக்கொண்டாரென்றும், பின்னர் திடீரென்று மறைந்துவிட்டாரென்றும், அப்படி மறைந்துவிட்ட மாதிரியைப் பார்த்ததிலிருந்து, அவரை யாரோ சிலர்

கீழேயிருந்து பலாத்காரமாய் இழுத்ததுபோலத் தனக்குத் தோற்றிய தென்றும் அவள் சொல்லுகிருள். பட்டணத்திற்குப் புறப்படும்போது போட்டுக்கொண்டிருந்த அதே கறுப்புச்சட்டையை அவர் அப்போதும் போட்டுக்கொண்டிருந்தாரென்ருலும் கழுத்துப் பட்டை (Necktie) காலர் (Collor) முதலிய ஒன்றுமே யில்லாமல் அவர் கழுத்து வெறுங் கழுத்தா யிருந்ததாகவே தனக்கு ஞாபக மிருப்பதாகவுஞ்சொல்லுகிருள். அவர் அங்ஙனம் கழுத்துப்பட்டை காலர்முதலியவைகள் இல்லாமல், பயங்கரமான முகத்தோடு, 'ஐயோ' வென்று கூக்குரலிட்டுத் தன்னை யழைத்ததைக் கண்டதும், அவள் தன் நாயகனுக்குத்தான் ஏதோ அபாயம் நேரிட்டுவிட்டது என்று எண்ணி, உடனே ஒரே ஓட்டமாய் ஓடி அந்த வீட்டிற்குள் பிரவேசித்தாளாம். அந்தவீடு எது என்று நீ நினைக்கிருய்? வெப்ஸ்டர்! அது நாம் இருவரும் சென்றிருந்த அந்த அபின் குகையைத் தவிர வேருென்றுமல்ல. அவள் அந்தக் குகையின் படிக்கட்டின் வழியாகக் கீழே இறங்கி, எதிரிலுள்ள அறைக்குட் பிரவேசித்து, அங்கிருப்பதொரு வாசற்படியின் வழியாக மாடியின் முதல் தளத்துக்கு ஏறப் போனளாம். அப்போது அவ்வாசற்படியண்டை காத்துக்கொண்டிருக்கிற அந்த அயோக்கியனை வேலைக்காரப் பயல், - அவனைப்பற்றி நான் ஏற்கனவே உனக்குச் சொல்லியிருக்கிறேனல்லவா—அவனுக்குக் கீழே வேலை பார்க்கிற மற்றொரு போக்கிரியையுஞ் சகாயத்திற்குச் சேர்த்துக்கொண்டு அவளை உள்ளே பிரவேசிக்கவொட்டாமல் தெருவிலே பிடித்துத் தள்ளிவிட்டாளும். அவள் பின்னும் அதிகமான பயமும் துக்கமும் அடைந்தவளாகிப் பயித்தியங்கொண்டவள் போலப் பிரெஸ்னோ தெரு வழியாகக் குறுக்கும் நெடுக்கும் ஓடிக்கொண்டிருக்கும்போது தற்செயலாய் அங்கே வந்த சில போலீஸ் சேவகர்களையும், இன்ஸ்பெக்டரையுங் கண்டு தன் குறையைச் சொல்லிக்கொண்டாளாம். அவர்கள் க்ஷணமும் தாமதியாமல் அவள் பின்னேடு வந்து, அந்த அபின் குகையின் சொந்தக்காரர் தடுத்ததையும் லக்ஷியஞ்செய்யாமல் பலாத்காரமாய் மாடியின்மேலேறி முதலில் ஹாதர்லி காணப்பட்ட இடத்தண்டை போய்ப் பார்த்தார்களாம். அங்கே ஒருவரும் இல்லையாம். பிறகு எல்லாத்தளங்களையும் ஒன்று தப்பாமல் ஒரு முறைக்கு இருமுறையாகத் தேடிப் பார்த்

தார்களாம். அங்கே ஒருவருமே காணப்படவில்லையாம். வழக்கமாக எப்போதும் அங்கேயே வசித்துக்கொண்டிருக்கிற ஒரே ஒரு பிச்சைக்காரன் மாத்திரம் இருந்தானும். விசாரித்ததில், அந்தப் பிச்சைக்காரனைத் தவிர வேறு யாருமே அன்றைக்கு அங்கே வரவில்லை யென்று அந்த வேலைக்காரர்களும் மற்றவர்களும் சத்தியஞ் செய்கிறார்களாம். அவர்களெல்லாரும் சத்தியம் செய்து உறுதியாய்ச் சொல்லவே போலீஸ்காரர்களும் அவர்கள் வார்த்தையில் நம்பிக்கைகொண்டு 'இவள் என்னவோ கண்டு பிரமங்கொண்டிருக்கிறாள்' என்று சொல்லிக்கொண்டிருக்கையில், அவள் வேகமாகப் பாய்ந்து அங்கே கிடந்த ஒரு பெட்டியை யெடுத்து உடைத்துப் பார்த்தாளாம். அதில், அவள் கணவனை ஹாதர்லி காலையில் குழைந்தைகளுக்காக வாங்கி வருகிறேனென்று சொல்லிப்போன விளையாட்டுச் சாமான்களெல்லாம் நிறைய இருந்தனவாம்.

பெட்டியிலிருந்து குழந்தைகளின் விளையாட்டுக் கருவிகள் அகப்பட்டதையும், அங்கிருந்த பிச்சைக்காரன் முன்னுக்குப் பின் ஒட்டாமல் தாறுமாறுகப் பேசுவதையும் பார்த்தவுடன் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு ஏதோ அபாயமொன்று பெரிதாய்நடந்திருக்க வேண்டுமென்று தோன்றிற்றும். இந்த அபிப்பிராயத்தைக் கொண்டு திரும்பவும் அந்த மாடியிலுள்ள அறைகளையெல்லாம் ஒன்று தப்பாமல் கவனமாய்ப் பார்த்துக்கொண்டு வரும்போது. அங்கே காணப்பட்ட சிற்சில அடையாளங்களால் இன்ஸ்பெக்டருக்குமுதலில் தாம்கொண்ட அபிப்பிராயம் முற்றிலும்சரியென்று திடப்பட்டுவிட்டதாம். வெப்ஸ்டர்! உனக்கு அந்த அபின் கடையின் மாடிக்கட்டுக்களை யெல்லாம் இன்று பார்த்திருக்க வேண்டிய பிரஸக்தியில்லை யாகையால் நான் அதைப்பற்றிச் சிறிது சொல்லுவது இங்கே அசந்தர்ப்பமாகாதென நினைக்கின்றேன். அந்த வீட்டின் மேன்மாடியில் இரண்டு தளங்கள் இருக்கின்றன. இரண்டாவது தளத்திற்குப் போனதும் முன்னடியில் ஒரு பெரிய கூடமிருக்கிறது. அதில் இரண்டொரு நாற்காலிகள் மாத்திரம் போடப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது அது, வந்த சிநேகிதர் முதலானவரோடு உட்கார்ந்து வார்த்தை சொல்வதற்காக ஏற்பட்ட இடம் போலக் காணப்படுகிறது. அந்தக் கூடத்தின் பக்கத்தில் ஒரு படுக்கை யறையுண்டு. அதில் ஒரு கட்டிலும் நாற்காலியும் போடப்

பட்டிருக்கும். இப்போது நான் போய்ப் பார்த்தபோதுங்கூட அவைகளிருந்தன. போலீஸ் இன்ஸ்பெக்டர் சோதனைசெய்து வரும்போது அந்தக் கட்டிலில் ஹாதர்லியின் சட்டையைத் தவிர மற்றுள்ள உடுப்புக்களும், தங்கக் கடிகாரமும் இருந்ததோடு, அங்குள்ள சாளரத்தின் சட்டங்களிலும், அதன் கீழுள்ள தள வரிசைப் பலகையிலும் இரத்தத் துளிகள் வீழ்ந்து காய்ந்திருந்த அடையாளங்களும் காணப்பட்டனவாம். பாதரக்ஷை (Boots) தொப்பி, உட்சட்டை முதலிய உடுப்புக்களெல்லாம் சின்னபின்னமாக இல்லாமல், நல்ல நிலைமையில் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்ததினால் அவைகள் பலாத்காரத்தினால் வீழ்ந்து கிடக்கவில்லையென்று சந்தேகிக்கும்படியாய் இருந்தனவாம். சாளரத்தைத்தவிர வெளியிலே போகக்கூடிய வேறுவழி காணப்படாமையினாலும், பக்கத்திலேயோடுகிற ஆற்றில் அந்தச் சமயம் பிரவாகம் பூரணமாயிருந்தபடியினாலும், சாளரத்தின்கீழே இரத்தம் சிந்தியிருந்த அடையாளத்தினாலும், காணமற்போன அந்த ஹாதர்லி நீந்தித் தப்பித்துக்கொள்ளலாம் என்ற அபிப்பிராயத்துடன் அவசரத்தில் ஆற்றில் தானாகவே குதித்திருப்பானென்று ஊகிக்கக் கூடியதாயிருந்ததாம்.

" இனி, குற்றவாளிகளாக இந்தக் கேசில் சம்பந்தப்படுத்தப் பட்டிருப்பவர்களைப் பற்றியும் சிறிது சொல்லுகிறேன். காவற்காரனான அந்த லாஸ்கார் என்பவன் கொடிய அயோக்கியனென்பதும், கெட்ட நடவடிக்கை யுள்ளவனென்பதும் ஏற்கனவே எல்லார்க்குந் தெரிந்த விஷயமானாலும், ஹாதர்லியின் மனைவி சொல்லும் வார்த்தைகளைக்கொண்டு, குற்றம் நடந்ததாகக் கருதப்பட்ட அந்த க்ஷணத்திலேயே அவன் வாசற்படியண்டை யிருந்ததாகவேற்படுவதனால், அவனை இந்தக் கேசில் வேண்டுமானால் ஒரு சாக்ஷியாக மாத்திரம் நோரலாமே யல்லது, குற்றவாளியாக நிறுத்தப் போதுமான ஆதாரங்கள் இல்லை என்று இன்ஸ்பெக்டர் சொல்லுகிறார். அந்த லாஸ்கார் என்பவனோ தனக்கு யாதொன்றுமே தெரியாதென்றும், பூன் என்ற அந்தப் பிச்சைக்காரன் அடிக்கடி அங்கே வந்து தங்குவதுமாத்திரம் தனக்குத் தெரியுமேயன்றி மற்றைப்படி அவனுடைய யோக்கியதையைப் பற்றியாவது, நடவடிக்கைகளைப்பற்றியாவது சிறிதும் தெரியாதென்றும் காணமற்போன

ஹாதர்லியின் கைக்கடிகாரம் தொப்பி முதலியவைகள் கட்டிலில் காணப்பட்ட விஷயம் தனக்கும் ஆச்சரியகரமாய்த்தான் தோற்று கிறதென்றும் சொல்லுகிருனம். லாஸ்கார் என்கிற அந்தக் காவற்காரனைப்பற்றிச் சொல்லக்கூடியதெல்லாம் இவ்வளவுதான்.

இனி, அந்த அபின் கிடங்கின் இரண்டாவது தளத்தில் வஸிக்கிற வனும், காணாமற்போன ஹாதர்லியைக் கடைசியாகப் பார்த்திருக்கக் கூடியவனுமாகிய அந்தப் பிச்சைக்காரனைப் பற்றியும் சிறிது சொல்லுகிறேன். அவனுக்குப் பூன் என்று பெயர். ஹக் பூன் (Hugh Boone) என்றும் அவனை அழைப்பது உண்டு. பட்டணத்தி லுள்ளவர்களுக்கும், அடிக்கடி பட்டணத்துக்குப் போக்குவரத்துள்ளவர்களுக்கும் ஹக் பூன் என்று சொன்னால் நன்றாய்த் தெரியும். அவனுக்குப் பிச்சை யெடுப்பதுதான் தொழில். என்றாலும் வீடுவீடாய் நுழைந்து கேட்பதில்லை. 'யாரும் பிச்சை யெடுக்கக் கூடாது' என்ற கண்டிப்பான போலீஸ் உத்திரவுக்குப் பயந்து அவன், தான் ஒரு சிறிய வியாபாரிபோல இரண்டொரு சிறிய சாமான்களை மாத்திரம் வைத்துக் கொண்டு, அவைகளை விற்கிற வியாஜமாகப் பிச்சை வாங்கிக்கொண்டு காலங்கழிக்கிருன். கம்மாளத் தெருவுக்குச் சிறிது சமீபத்தில், இடதுகைப்பக்கமாகவுள்ள அந்தப் பெரிய சுவரின் மூலையில், அந்தப் பிச்சைக்காரன் ஐந்தாறு நெருப்புப் பெட்டிகளையும், ஒரு கட்டுப் புகைச் சுருட்டையும் தனக்கெதிராக வைத்துக்கொண்டு, அதிகாலையிலேயே வந்து உட்கார்ந்துவிடுவான். அவன் உட்கார்ந்திருக்கிற மாதிரியும், துரைசானிகளே! ஐயா துரைமார்களே! இந்த ஏழையின்மீது இரக்கம் வைத்து இந்தப் பொருள்களை வாங்கக் கூடாதா? என்று விநயமாய்ச் சொல்லும் மாதிரியும் அவ்வழியாகப் போகிற ஸ்திரீ புருஷர்களின் மனத்தைப் பெரிதும் உருக்குந்தன்மையவாயிருப்பதனால் அவ்வழிப்போக்கர்கள் அப்பிச்சைக்காரனுக்கு எதிரில் வைக்கப்பட்டிருக்கும் அவனது தொப்பியில், தங்களாலியன்ற அளவுக்கு ஒரு பென்னியோ இரண்டு பென்னியோ எறிந்து விட்டுப் போவார்கள். நானும் அந்த மனிதனை இரண்டு மூன்று தடவைக் கதிகமாகவே பார்த்திருக்கிறேன். இன்ன இடத்தில் பார்த்திருக்கிறேனென்று இப்போது எனக்கு ஞாபகம் இல்லை. பிச்சையெடுப்பவன் என்பதும் எனக்குத்தெரியாது. அவனுடைய

தோற்றம் நிரம்பவும் வேடிக்கையாக இருக்கும். அவனிருக்கும் அந்தக் கம்மாளத் தெருவின்வழியாகப் போகிறவர்கள் எவரும் அவனைப் பார்க்காமல் ஒருபோதும் போகமாட்டார்கள். நெருப்புப் போன்ற அவனது செம்பட்ட மயிரும், மாசு படிந்த வெள்ளிய முகமும், பருத்துயர்ந்த கபோலங்களும், மிகக் கூர்மையான கரிய கண்ணிணைகளும், ஹாஸ்ய முண்டாகும்படி பேசுகின்ற சாதுர்ய வசனமுமாகிய இவைகள் அனைத்தும் யாரும் கவனிக்கக் கூடியவைகளாக இருக்கும். விசித்திரமான இந்தப் பிச்சைக்காரன் தான் அந்த அபின் குகையின் மாடியின்மேல் வசித்துக்கொண்டிருக்கிறான். அவனைத்தவிர வேறு யாருமே நிரந்தரமாக அங்கே வஸிப்பதில்லையாம். ஆகையால், காணமற்போன அந்த ஹாதர்லியைப்பற்றித் தனக்கு யாதொன்றுமே தெரியாதென்று அவன் எவ்வளவுதான் சத்தியஞ்செய்தாலும், அது ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல வென்று இன்ஸ்பெக்டர் சொல்லுகிறார்."

"ஹண்டர்! இதென்ன அநியாயமாய் இருக்கிறது. வலியொடுங்கிக் கிடக்கிற சப்பாணியாகிய ஒரு எளிய பிச்சைக்காரன் கடுங்காளையாகிய அந்த ஹாதர்லியைத் தானொருவனாய் இருந்து என்ன செய்யமுடியும்? நீகூட இதை யோஜிக்காமற் சொல்லுகிறையே."

"ஒற்றைக்காலைச் சாய்த்துக்கொண்டு நடக்கிறான் என்பதனால் மட்டும் நாம் அவனைச் சப்பாணியென்று சொல்லலாம்; உள்ளபடி அவனுக்கிருக்கிற பலத்தைப் பார்த்தால் ஐ, அப்பா! ஒரு பெரிய வீரனென்றல்லவா அவனைச் சொல்லவேண்டும், வெப்ஸ்டர்! நீதான் பெரிய டாக்டராய் இருக்கிறயே. ஒரு அவயவத்தில் குறைவு இருந்தால் மற்றொரு அவயவத்தில் அந்தக் குறைவுக்கு ஈடாக அதிகமான சக்தியுண்டாய் விடுகிறது என்பது உன் அனுபவத்தில் தெரியவில்லையா?"

"நமக்குள் வாக்குவாதம் வேண்டாம். ஹண்டர்! உன் கதையைச் சொல்லி முடி. மத்தியில் இந்த வீண்பேச்சுக்களை ஆரம்பிக்காதே."

"ஹாதர்லியின் மனையாட்டி அந்தப் பலகணியின் பக்கத்தில் இரத்தத்துளிகள் சிந்தி யுலர்ந்திருப்பதைக் கண்டதும், அப்

படியே மூர்ச்சித்துக் கீழே விழுந்துவிட்டாளாம். என்ன பரிகாரம் செய்தும் அவளுக்கு மயக்கந் தீராததைக்கண்டு, இன்ஸ்பெக்டராகிய பார்ட்டன் (Barton) அவளை ஒரு வண்டியில்வைத்து வீட்டிற்கு அனுப்பிவிட்டு, மறுபடியும் அந்தக் கட்டடத்தைச் சோதனை செய்து பார்த்தாராம். கேசை வெளிப்படுத்தக் கூடிய துப்பு எதுவும் அகப்படவில்லையாம். நானும் சற்று முன்னாக இன்ஸ்பெக்டரைக் கண்டு பேசிக்கொண்டிருந்தேன். அவர் செய்த காரியங்களில் பழுது சொல்லக்கூடியதொன்றுமே யில்லை. ஆனாலும், முதலெடுப்பிலேயே அந்தப் பிச்சைக்காரனாகிய பூன் என்பவனைப் பிடித்துக்கொள்ளாமற் போனதுமாத்திரம் ஒரு பெரிய தவறுதான். பிடித்திருந்தால் கேசுக்கு ஸாதகமான பல தடையங்கள் அவனிடத்தில் நிச்சயம் அகப்பட்டேயிருக்கும். போன அவசரத்தில் ஒன்றும்புரியாமல் அவர்களெல்லாரும் அங்கு மிங்கும் அறைகளைப் பரிசோதித்துக் கொண்டிருந்த சமயத்தில் அந்தச் சப்பாணி எப்படியோ மெதுவாக நழுவிவிட்டான். லாஸ்கார் என்பவனைப் பற்றித்தான் நான்சொல்லவேண்டுவதில்லையே. பெரிய மோசக்காரன். அவன்தான் இந்தச் சப்பாணிக்கு இடங் கொடுத்துக்கொண்டிருக்கிறான். இன்ஸ்பெக்டர் மேன்மாடியில் இருக்கும் சமயத்தில் இந்த லாஸ்காரும்பூனும் கீழே குசுகுசென்று பேசிக்கொண்டிருந்தார்களாம். இச்செய்தி இன்ஸ்பெக்டருக்கு அப்போது தெரியவில்லை. மேலும் நீ நினைத்ததுபோலவே அந்த இன்ஸ்பெக்டரும் இந்தப் பிச்சைக்காரனுக்கும் ஹாதர்லிக்கும் என்ன ஸம்பந்த மிருக்கப்போகிறதென்று நினைத்துவிட்டார். பின்னாக இந்தச் செய்தி தெரிந்ததும் பார்ட்டன் நிமிஷமும் தாமதியாமல் அவனைப்பிடித்துப் பரிசோதனை செய்தாராம். கேசில் சம்பந்தப்பட்டவன் என்று நிச்சயிப்பதற்குப் போதுமான அடையாளமொன்றும் அவனிடங் காணப்படவில்லையாம். ஆனாலும், அவனது வலதுகைச் சட்டையின் நுனியில் இரத்தக்கறைகள் இருந்தனவென்றும், காரணங் கேட்டதற்கு அந்தச்சப்பாணி தன் கைவிரலொன்றில் நகம் பெயர்ந்திருப்பதைக்காட்டி, அது குற்றம் நடந்ததாகக் கருதப்படும் தினத்தன்று பலகணியிற் கதவுகளைத் திறந்த சமயத்தில் நசுக்குண்டதெனவும், அங்கே காணப்படும் ரத்தத்துளிகளும் அந்த விரலின் காயத்திலிருந்தே சிந்தியவை யென

வும், சட்டையின் நுனியிலும் அப்போது அந்த இரத்தம் பட்டிருக்கக்கூடுமெனவும் சமாதானம் சொன்னானென்றும் சொல்லுகிறார். மேலும், அந்தப்பிச்சைக்காரன் ஹாதர்லி அன்றைத்தினம் அங்கே வரவேயில்லை யென்றும், அவர் மனைவி கண்டதாகச்சொல்வது பொய்யாகவோ அல்லது கனவாகவோ இரண்டிலொன்றாகத் தானிருக்கவேண்டுமென்றும் ஒரே படியாய்ச் சாதித்தானாம். இன்ஸ்பெக்டர் அவன் என்னசொல்லியும் நம்பாமல் அவனைச் சிறைச்சாலையில் அடைத்து வைக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டுத் தாம் மாத்திரம் அந்த ஆற்றங்கரை யோரத்தில், வெள்ளம் வடிகிறமட்டும் இருந்து பார்த்தாராம். வெள்ளம் வடிந்தவுடன் ஏழெட்டுச் சேவகர்களும் தானுமாய் அந்த ஆற்றங்கரை யெங்கும் தேடிப் பார்த்தும் ஹாதர்லியின் பிரேதம் காணப்படவில்லையாம். பலகணிக்கு நேர்கீழாகக் கரை யோரமாய் ஹாதர்லியின் சட்டை மாத்திரம் மண்ணில் மறைந்து கிடந்ததாம். வெப்ஸ்டர்! அந்தச் சட்டையில் என்ன இருந்திருக்குமென்று நீ ஊகிக்கிறாய்?"

"எனக்கு ஒன்றுமே தோற்றவில்லை."

"ஆம். உன்னால் ஊகித்தறிய முடியாததுதான். அந்தச் சட்டையின் ஒவ்வொரு பையிலும் முழுப்பென்னியும் (Pennies) அரைப் பென்னியு (Half Pennies) மாக நிறைய இருந்தன. நானூற்று நாற்பத்தைந்து முழுப் பென்னிகளும், அறுநூற் றறுபத்தெட்டு அரைப்பென்னிகளுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். சட்டை மாத்திரம் தனியே எப்படியிருக்க முடியும் என்று நீ யோஜிக்கலாம். உள்ளிருந்த நாணயங்கள் பளுவா யிருக்குமானதால் சட்டை மாத்திரம் தனியே தண்ணீரில் அமிழ்ந்தியிருக்கிறது. ஹாதர்லியின் சரீரம் வெள்ளத்தின் வழியாய் மிதந்து சமுத்திரம் போய்ச் சேர்ந்திருக்கிறது. வெப்ஸ்டர்! இது ஸம்பாவிதமென்று உனக்குத் தோற்றவில்லையா?"

"ஹண்டர்! இது ஸம்பாவிதந்தான். தொப்பி, கடிகாரம், கழுத்துப் பட்டை முதலியவைகளை யெல்லாம் கட்டிவிற் கழற்றி வைத்துவிட்டு ஒற்றைச் சட்டையை மாத்திரம், கூடியவரையில் தக்க அந்தஸ்துள்ளவன் என்று மதிக்கப்பட்ட அந்த ஹாதர்லி போட்டுக்கொண்டிருப்பானா? இதுதான் அஸம்பாவிதமென்று எனக்குத் தோற்றுகிறது."

"நல்ல கேள்வி கேட்டாய்; வெப்ஸ்டர்! நான் ஒருவாறு இதற்குத் தக்க சமாதானம் சொல்லுகிறேன், கேள். ஹாதர் லியைப் பலகணியின் வழியாக அந்த ஹக் பூன் என்ற பிச்சைக் காரனே ஆற்றில் தள்ளிவிட்டானென்று வைத்துக்கொள்வோம். அப்படி அவன் செய்திருக்கும்பக்ஷத்தில், அந்தக் காரியம் ஒருவ ராலும் கண்டுபிடிக்க முடியாமலிருக்கும்படி அவன் அப்போது என்னென்ன செய்திருப்பான்? மேலே போட்டுக்கொண்டிருக் கிற நீண்ட சட்டையும், தொப்பி கழுத்துப்பட்டை முதலியவும் ஒருவேளை வெள்ளத்தில் மிதந்தால் காரியம் வெளிப்பட்டுவிடுமே யென்ற பயத்தால் அவைகளை முதலிற் கழற்றிக்கொண்டிருப் பான். பின்னால், கனமான வஸ்துவோடு சேர்த்துக் கட்டி ஆற்றி லெறிந்துவிட எண்ணியிருக்கும் சமயத்தில் ஹாதர்லியின் மனைவி உள்ளே வந்துவிட்டபடியால் ஹக்பூனுக்கு அதிக சாவகாசமில்லை. வெள்ளம் வடிந்தால் தேடி யெடுத்துக்கொள்ளலாமென்ற அபிப் பிராயத்துடன் தான் காலையில் சம்பாதித்துக் குவித்திருந்த நாணயங்களைப் போட்டுச் சட்டையைக் கீழே யெறிந்திருக்கிறான். இந்த மாதிரியே தொப்பி முதலியவைகளையும் மறைப்பதற்குள் ளாக போலீஸ்காரர்கள் வந்துவிட்டாரென்று கீழேயிருந்த லாஸ் கார் தெரிவித்தபடியால் ஒன்றுஞ் செய்ய இயலாமல் அவைகளைக் கட்டிலில் வைத்துவிட்டு ஒரு மூலையில் ஒன்று மறியாதவன்போல உட்கார்ந்துவிட்டான். இதைத்தவிர வேறுவிதமாக நடந்திருக்க முடியாதென்று எனக்குத் தோற்றுகிறது. வெப்ஸ்டர்! நீ என்ன நினைக்கிறாய்?"

"நீ சொல்லுங் காரணங்கள் எனக்கு அவ்வளவு சரியாகத் தோற்றவில்லை."

"இருந்தாலும் இப்படி வைத்துக்கொண்டு வேலை செய்து பார்ப்போம். சரிப்படாத பக்ஷத்தில் அப்புறம் யோசித்துக் கொள்ளலாம். வெப்ஸ்டர்! நான் முன்னே சொன்னபடி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஹக் பூனைச் சிறைச்சாலையில் அடைத்து வைத்திருக்கிறார். விசாரித்ததில், பூன் நல்ல நடவடிக்கையுள்ளவ னென்றுதான் தெரிகின்றது. அவனைக் கெட்டவன் என்று ஒருவராவது சொல்லவில்லை. சொல்லப் போனால், அவனை

அடைத்து வைத்திருக்கிற இன்ஸ்பெக்டரைத்தான் துஷ்டர் என்றும், தயை யில்லாதவரென்றும், பொய்க் கேசு சிருஷ்டிக் கிறவரென்றும், ஜனங்கள் அவதூறாகச் சொல்லுகின்றார்கள். எனக்கு ஒரு வழியிலும் போகச் சரிப்படவில்லை. ஹக் பூனைக் குற்றவாளியாகத் தீர்மானிக்காத பக்ஷத்தில் வேறுவிதமாக இந் தக் கேசைக் கண்டுபிடிக்க முடியாது. அதுமட்டும் நிச்சயம். ஊரிலுள்ள வதந்தியைக் கவனித்தால் ஹக் பூனை இன்றைக்கே விட்டுவிடுவது நலமென்றுந் தோன்றுகிறது. மொத்தத்தில் கே சென்னவோ கண்டுபிடிக்க முடியவில்லை. ஹாதர்லி அந்த அபின் குகைக்குப் போனதேன்? அங்கு அவனுக்குண்டான அபாயம் என்ன? இப்போது அவன் எங்கேயிருக்கிறான்? ஹக் பூன் அவ னைக் கொன்றிருப்பதாக வைத்துக்கொண்டால், ஹாதர்லிக்கும் அவனுக்கும் மனஸ்தாபம் என்ன? என்ற இத்தனை சங்கதிகளுள் ஒன்றுக்காவது இன்னும் சரியான சமாதானம் தோன்றவில்லை. முதலில் இதை வெகு சிறிய கேசைப்போல நினைத்தேன். இப் போது பார்த்தால் பெரிதிலும் பெரிதாக இருக்கிறது. வெப்ஸ் டர்! உண்மையாய்ச் சொல்லுகிறேன், இந்த மாதிரியான கேசு இது வரையில் என் அனுபவத்திற்கு வந்ததே யில்லை" என்று சொன் னான்.

ஹண்டர் இவ்விதம் விஸ்தாரமாக இந்தக் கேசைப்பற்றி எனக்குச் சொல்லிக்கொண்டிருக்கையில் எங்கள் வண்டியானது நகரத்தைவிட்டுத் தாண்டி வெகுதூரத்திற்கு இப்பால் ஒரு குக் கிராமத்திற்கிடையே வந்துகொண்டிருந்தது. அவனுஞ் சொல்லி முடித்தான். அதற்குள்ளாக வண்டியும் ஊருக்குச் சமீபத்தில் வந்துவிட்டது.

அப்போது ஹண்டர் என்னை நோக்கி, "வெப்ஸ்டர்! நாம் இப்போது லீ (Lee)யின் எல்லைக்குள் வந்துவிட்டோம். மிடில் ஸெக்ஸ் (Middlesex) நாம் புறப்பட்ட இடம். ஸர்ரே (Sarray) கேண்ட் (Kent) என்கிற இரண்டு மாகாணங்களைக் கடந்து வந் திருக்கிறோம். இப்போது நாம் இருப்பதையுஞ் சேர்த்தால் மூன்று இங்கிலீஷ் மாகாணங்களாகின்றன. குதிரை அதிவேக மாக வந்ததால் இவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிட்டோம். அஃது

இருக்கட்டும்; வெப்ஸ்டர்! அதோ பார். இரண்டு மரங்களுக்கு மத்தியில் ஒரு வெளிச்சந் தெரிகின்றதல்லவா? அதுதான் ஸீடார். அந்த வெளிச்சத்தின் பக்கமாக உட்கார்ந்திருப்பவள், நான் நினைக்கிறபடி, அநேகமாக ஹாதர்லியின் மனைவியாகத்தான் இருக்கவேண்டும். வண்டி வருகிற சப்தத்தைக் கேட்டு அவனுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாள் என்பதில் சிறிதும் ஸந்தேகமேயில்லை" என்று சொன்னான்.

"எல்லாம் சரிதான். இந்தக் கேசை நீ இருக்கிற இடத்திலிருந்தே ஏன் நடத்தக் கூடாது?" என்று நான் கேட்டேன்.

"இங்கிருந்தே விசாரணை செய்யவேண்டிய பலமுக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. அவற்றைப் பிறகு உனக்குச் சொல்லுகிறேன். ஹாதர்லியின் மனைவி இரண்டு அறைகளை என் ஸ்வாதீனத்தில் விட்டு வைத்திருக்கிறாள். அவள் நல்ல குணசாலியாகையால் உன்னை வெகு மரியாதையாக வரவேற்று உபசரிப்பாளென்பதிலுங் கொஞ்சங்கூடச் சமுசயமில்லை. ஆகையால், நீ லஜ்ஜைப்படாமல் தாராளமாய் வரலாம். அவளுடைய புருஷனாகிய ஹாதர்லியைப்பற்றி நான் ஒருவிஷயமும் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறபடியால், எனக்குத்தான் அவளைப் பார்ப்பதற்கு லஜ்ஜையாயிருக்கிறது. வெப்ஸ்டர்! இதுதான், வண்டியை நிறுத்து" என்றான்.

நான் உடனே வண்டியை நிறுத்தினேன். எதிரே காணப்பட்ட அந்த அழகிய மாளிகையிலிருந்து ஒரு வேலைக்காரன் ஓடிவந்து எங்கள் குதிரையைத் தட்டிக்கொடுத்து, எங்களைப்பார்த்து, "உள்ளே போகலாம் அம்மாள் தங்களை யெதிர்பார்த்துக்கொண்டே யிருக்கிறார்கள்" என்றான்.

நாங்கள் வண்டியை விட்டிறங்கிச் சிங்காரவிலாஸம் என்ற பெயரையுடைய அந்த அழகிய மாளிகைக்குட் பிரவேசித்து வாசற்படியண்டை போனோம். உடனே கதவைத் திறந்துகொண்டு தங்கப்பதுமையைப் போன்ற அழகிய ஒரு மெல்லியல் எங்களுக்கு எதிராகவந்து, 'வாருங்கள், வாருங்கள்' என்று மிக்க ஆவலோடும் அன்போடும் அழைத்தாள். தலையைச் சிறிது தாழ்த்தி வணக்கத்துடன் எதிர்கொண்டழைத்த அந்த இரண்டு வார்த்தை

களும் இன்னமும் என் செவியைவிட் டகலவில்லை. தேன்மொழி, யென்பது அவளுக்கே தகும். 'அழகு சுமந்திளைத்த ஆகத்தாள்' 'அழகிவளைத் தவஞ்செய்து பெற்றதுகாண்', 'அழகிற் கழகளிக்கும் ஆரணங்கு' என்ற புனைந்துரைகளெல்லாம் ஹாதர்ஸியின் மனையாட்டியாகிய அச்சீமாட்டியின் விஷயத்தில் இயற்கை நவிற்சியாகவே கொள்ளத் தக்கனவைகளாகும். 'வெள்ளைக் கலையுடுத்து' என்றபடி வெள்ளிய பட்டினாலாகிய ஒரு உடையைத் தரித்துக் கொண்டிருந்தாள். அவளது கரிய கண்ணிணைகளை யென்னென்று சொல்வேன்! கூரிய அம்புபோன்ற அவளது கருவிழிகள் ஆவலும் கவலையுங் கொண்டவைகள்போன்று சாஞ்சல்யத்துடன் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. அவள் ஒருவருக் கொருவராக நாங்கள் வந்திருப்பதைக்கண்டு, காரியம் அனுகூலமாய்த்தா னிருக்கு மென்ற நம்பிக்கையுடன் இரைந்து கூச்சலிட ஆரம்பித்தாள். ஹண்டர் சிறிது வெறுப்பான முகத்துடன் தனது தோள்களைச் சுருக்க ஆரம்பித்ததைக்கண்டு அவள் பெரிய கவலையை யடைந்தவளாய், நண்பனை ஹண்டரைப் பார்த்து, "நல்ல சமாசாரம் ஒன்று மில்லையோ?" என்று கேட்டாள்.

"ஒன்று மில்லை."

"பாதகமான சமாசாரமும் இல்லையே."

"இல்லை. பாதகமான சமாசாரமும் ஒன்று மில்லை."

"போகட்டும். இவ்வளவு வரையிலாவது கடவுள் கிருபை செய்தாரே. அதுவே போதுமானது. நல்லது, தாங்கள் உள்ளே வாருங்கள். நெடுந்தூரம் வந்திருக்கிறீர்கள். தவிர, பகலெல்லாம் வேலை செய்து களைத்துப் போயு மிருப்பீர்கள். வந்து சுகமாய்ப் படுத்துக் கொள்ளுங்கள். பொழுது விடிந்து நாம் மற்றவைகளைப் பார்த்துக்கொள்வோம்" என்றாள்.

இவ்விதம் மிக்க மரியாதையுடன் சொன்ன அகத மங்கைநல்லாளை ஹண்டர் பார்த்து, "இவர் என்னுடைய பிராண சிநேகிதர். டாக்டர் வெப்ஸ்டர் என்று இவரைச் சொல்வார்கள். இவர் நான் கண்டுபிடித்த எத்தனையோ கேசுகளில் என்னுடன் கூடவே யிருந்து எனக்கு வேண்டிய முக்கியமான பல உதவிகளைச் செய்திருக்கிறார். இந்தக் கேசிலும் இவர் கூடவே இருக்கும்படி

12

வதோ அதிர்ஷ்டவசத்தினுல் நேரிட்டதைப்பற்றி எனக்குண்டாயிருக்கிற சந்தோஷத்திற்கு அளவேயில்லை" என்று சொன்னுன்.

இதைக் கேட்டதும் ஹாதர்லியின் மனையாள், "நிரம்பவும் ஸந்தோஷம்" என்று சொல்லி என் கையை மிகப் பிரீதியுடன் பிடித்துக் குலுக்கி, "தங்களுக்கு நான் செய்யவேண்டிய உபசாரங்களில் ஏதாவது குறைவிருந்தாலும் தாங்கள் அதைப் பாராட்டாமல், எனக்குத் திடீரென்று இப்போது ஸம்பவித்திருக்கிற ஆபத்தை உத்தேசித்து இரங்கிப் பொறுத்தருளும்படி பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்ருள்.

"அம்மா! உம்முடைய அன்புகனிந்த இனிய இந்த வார்த்தைகளே எங்களுக்கு நீர் சகலவித உபசாரமும் செய்ததற்குச் சமானமாகும். மேலும், நான் உம்முடைய உபசாரத்தை எதிர்பார்த்து வந்திருப்பவனல்லன். என்னுல் உமக்காவது, இந்தஎனது நண்பனுக்காவது கொஞ்சமேனும் பிரயோஜனமிருக்குமானுல், அதைவிட எனக்குத் திருப்திகரமான காரியம் வேறென்றுமேயில்லை" என்று சொன்னேன்.

இவ்விதம் சொல்லிவிட்டு நாங்களிருவரும் போஜன கூடத்திற்குட் பிரவேசித்தோம். அங்கே ஒரு மேஜையின்மீது ஆறிச்சில்லிட்டுப் போயிருந்த சில ஆகாரங்கள் வைக்கப்பட்டிருந்தன. நாங்கள் அந்த மேஜையின் பக்கத்திலேயிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்தோம். உடனே ஹாதர்லியின் மனையாள் ஹண்டரைப் பார்த்து, "ஐயா, ஹண்டர்! நான் உம்மைச் சில கேள்விகள் கேட்பதாக உத்தேசித்திருக்கிறேன். தயைசெய்து தாங்கள் அவற்றிற்குச் சரியான விடையளிப்பீர்களா?" என்று கேட்டாள்.

"நல்லதம்மா! அப்படியே பதில் சொல்லுகிறேன். உமக்குக் கேட்கவேண்டியவற்றைக் கேளும்."

"சொன்னுல் மனவருத்தப்படுவாளே யென்று தாங்கள் யோஜிக்கவேண்டாம். அப்படியெல்லாம் அநாவசியமாய் நான் வருத்தப்படுபவளல்ல. ஆகையால், தாங்கள் ஒன்றையும் ஒளியாமல் உள்ளதுள்ளபடியாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

"சரி, அப்படியே சொல்லுகிறே னம்மா."

"ஹண்டர்! ஹாதர்லி இறந்துவிட்டாரென்று தாங்கள் நினைக்கிறீர்கள்?"

"ஆம்; அப்படித்தான் நினைக்கிறேன்."

"கொலையுண்டா?"

"நான் நிச்சயமாய்ச் சொல்லமாட்டேன். ஒருவேளை அப்படிக்கிருந்தாலும் இருக்கலாம்."

"இறந்திருந்தால், அது என்றைத்தினத்தில் நேர்ந்திருக்கக் கூடும்?"

"திங்கட்கிழமையில்தான் நேர்ந்திருக்கவேண்டும்."

"அப்படியானால், ஹண்டர்! அவரிடமிருந்து இன்றைக்கு இந்தக் காகிதம் வந்திருக்கிறதே. இதற்கு என்ன சமாதானத்தைச் சொல்வீர்கள்?"

இந்த வார்த்தையைக் கேட்டதும் ஹண்டர் சரேலென நாற்காலியைவிட்டெழுந்திருந்து, "என்ன அது? என்ன அது?" என்று பெரிதாகக் கூச்சலிட்டான்.

"ஆம்; இன்றைக்குத்தான் வந்தது. இதோ இந்தக் கடிதந்தான்" என்று புன்சிரிப்புடன் ஒரு கடிதத்தைக் காட்டினாள்.

"நான் அதைப் பார்க்கலாமா?"

"அதற்கு என்ன தடை இருக்கிறது? அவசியம் பார்க்கத்தானே வேண்டும்."

இப்படிச் சொன்னதும் ஹண்டர் சரேலென அவள் கையிலிருந்த காகிதத்தைப் பிடுங்கி அதை மேஜையின்மேல் பிரித்து, அங்கிருந்த விளக்கு வெளிச்சத்தில் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். நானும் என் நாற்காலியைவிட்டெழுந்திருந்து ஹண்டருக்குப் பின்னால் நின்றுகொண்டு அக் கடிதத்தைப் பார்த்தேன். கடிதம் போட்டிருந்த கூடானது (Envelope) மிக மட்டமான காகிதத்திற் செய்யப்பட்டதாயும், அழுக்கடைந்ததாயுமிருந்தது. தபால் முத்திரையைப் பார்க்கும்போது அக்கடிதம் க்ரேவிசேண்டு (Gravesend) என்னுமிடத்தில் முந்திய தேதியில் போடப்பட்டிருக்கவேண்டுமென நன்றாய் வெளியாயிற்று.

ஹண்டர் அக்கடிதத்தைச் சற்றுநேரம்வரை பார்த்துவிட்டு, "எழுத்தெல்லாம் வேண்டுமென்றே கிறுக்கப்பட்டிருக்கிறது"

என்று தனக்குள்ளே மெதுவாய்ச் சொல்லிக்கொண்டு, பின்னர் ஹாதர்லியின் மனையாளைப் பார்த்து, " அம்மா ! இது உம்முடைய கணவரின் கையெழுத்தல்லவென்று நிச்சயமாய்ச் சொல்வேன்."

"வாஸ்தவந்தான். மேல் விலாசம் அவருடைய கையெழுத் தல்ல. உள்ளேயிருக்கும் காகிதம் அவருடைய கையெழுத்தென் பதில் கொஞ்சமேனும் சந்தேகமே யில்லை."

" மேல்விலாஸம் எழுதியிருப்பவர் யாராயிருந்தாலும் சரி, அவர் உம்முடைய கணவரிருக்கு மிடத்திற்குப் போய்த்தானே இந்த விலாஸத்தைத் தெரிந்துகொண்டிருக்கவேண்டும் ?"

" தாங்கள் ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள் ?"

" அம்மா ! சொல்லுகிறேன் கேளும். பெயர்மாத்திரம் நல்ல கறுப்பு மையினால் எழுதப்பட்டுத் தானகவே காய்ந்திருக்கிறது. மற்றவைகள் அப்படிக்கில்லை. எழுதினவுடனே ஒற்றுக்காகிதம் உபயோகித்திருப்பதுகொண்டு சிறிது மங்கிய கறுப்பு வர்ண முள்ளதாக இருக்கிறது. பெயர் முதலாக எல்லாவற்றையுமே வரிசையாக எழுதியிருக்கும்பக்ஷத்தில் இப்போது காணப்படுகிற படி இரண்டுவிதமான நிறவித்யாஸங்கள் காணப்படுவதற்குச் சிறி தேனும் நியாயமில்லை. இந்த மனுஷ்யன் முதலிற் பெயரை மாத் திரம் எழுதியிருக்கிறான். பின்னர்ச்சிறிது தாமதப்பட்டிருக்கிறது. இதனால் என்ன ஏற்படுகிற தென்றால், விலாசம் தனக்குத் தெரியா மல் உம்முடைய கணவரிடம்போய்க் கேட்டிருக்கிறான் என்பதே. இவ்வளவு வரையில் நிச்சயம். இது எப்படியிருந்தால் என்ன ? இந்த அற்ப விஷயத்தால் என்ன வெளிப்பட்டுவிடப் போகிறது ? என்று ஒருவேளை நீர் கேட்கலாம். சில சமயங்களில், மிகவும் அற்பமாகக் காணப்படுகிற விஷயத்திலிருந்து பெரிய பெரிய சங் கதிகளெல்லாம் வெளிப்படுவதாக இருக்கும். ஆகையால், நான் இவ்விதம் சர்ச்சை செய்து வருவதைப்பற்றி என்மீது மனஸ்தா பப்படாமலிருக்கும்படி பிரார்த்திக்கிறேன். இருக்கட்டும், இந்தக் கடிதத்தில் ஏதோ ஒன்று வைத்து மடிக்கப்பட்டிருந்ததுபோலத் தெரிகிறதே. ஏதாவது இருந்ததா?"

" ஆம், ஒரு மோதிரம் இருந்தது. அது அவரது முத்திரை மோதிரம்."

"அது இருக்கட்டும். இது உம்முடைய கணவனாகிய ஹாதர்லியின் கையெழுத்தென்பது நிச்சயந்தானா?"

"அவர் கையெழுத்துக்களில் ஒன்றென்பது நிச்சயம்."

"கையெழுத்துக்களிலொன்று—?"

"வேகமாயெழுதுங்காலத்தில் இப்படித்தானிருக்கும். வழக்கமாக எழுதுகிறபடியில்லாமற்போனாலும், இது அவர் கையெழுத்துத்தான் என்பதை நான் உறுதியாய்ச் சொல்லக்கூடும்."

"அம்மணீ! நீர் இனிமேற் பயப்படவேண்டாம். எல்லாம் ஒழுங்காய் முடிந்துவிடும். ஒரு பெரிய பிழை நடந்திருக்கிறது. அதைச் சரிப்படுத்துவதற்குக் கொஞ்சம் அவகாசம் பிடிக்கும். அதுவரையில் நீர் பொறுமையோடிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.—ஒரு நோட்டுப் புஸ்தகத்திலிருந்து கிழிக்கப்பட்ட அரைக்கால் காகிதத்தில் பென்ஸிலால் எழுதப்பட்டிருக்கிறது. நல்லது! இன்றைத் தினம் க்ராவிசேண்டு (Gravesend) என்னுமிடத்தில் அழுக்கான கட்டைவிரலையுடைய ஒருவனால் போடப்பட்டிருக்கிறது. இதுவுமிருக்கட்டும். இந்தக் காகிதம், என்னுடைய ஊஹம் முற்றிலும் தவறிப்போகாதிருக்கும் பக்ஷத்தில், புகையிலையை ஓயாமல் மென்றுகொண்டிருக்கும் ஒருவனால் ஒட்டப்பட்டிருக்கவேண்டுமென்பதுந் திண்ணம். எல்லாம் போகப் போகத் தெரிகின்றது—அம்மா! இது ஹாதர்லியின் கையெழுத்தென்பது நிச்சயந்தானே?"

"நிச்சயந்தான். இது அவர் கையெழுத்துத்தான் என்பதில் கொஞ்சமேனும் தாங்கள் சமுசயப்படவேண்டாம்."

"க்ராவிஸெண்டு தபாலாபீசில் இன்றைத்தினம் போடப்பட்டிருக்கிறது. அதிலும் சந்தேகத்தைக் காணேம். நல்லது, அநேகமாக எல்லாம் வெளியாய் விட்டதென்றே நினைக்கிறேன். இருந்தாலும், ஹாதர்லியின் நிலைமையைப்பற்றி இன்னதுதான் என்று சொல்வதற்கு இன்னமும் எனக்குத் தைரியமுண்டாகவில்லை."

"என்ன நிலைமையில் இருந்தாலுமிருக்கட்டும். ஹாதர்லி உயிருடன்தானே யிருக்கிறார்?"

“ இந்தக் கடிதம் நம்மை ஏமாற்றுவதற்காகவேண்டி மிகச் சாமர்த்தியமாக எழுதப்பட்ட கள்ளக் கையெழுத்தாக இல்லாத பக்ஷத்தில் அவர் உயிருடன் இருக்கிருர் என்றுதான் நாம் நிச்சயிக்கவேண்டும். மற்றைப்படி இந்த மோதிரத்திஞல் எதுவுமே தெரிந்துகொள்ள முடியாது. இது அவரிடத்திலிருந்து யாராவது அபகரித்துக்கொண்டிருக்கவுங் கூடுமல்லவா ? ஆகையால்தான் நான் இந்த மோதிரத்திஞல் யாதொரு பிரயோஜனமுமில்லையென்று சொன்னேன்.”

“ ஹண்டர் ! ஏன் அடிக்கடி சந்தேகப்படுகிறீர் ? இது அவருடைய கையெழுத்தே—தான் ! ”

“ நல்லது ; அப்படியே வைத்துக்கொள்வோம். இந்தக் கடிதம் திங்கட்கிழமையன்று எழுதப்பட்டு நேற்றுத் தபாலில்போடப்பட்டிருக்கவேண்டுமென ஊஹிக்கிறேன்.”

“ அப்படியு மிருக்கக்கூடும்.”

“ அப்படி யிருக்குமாஞல், மத்யகாலத்தில் எத்தனேயோ சங்கதிகள் நடந்திருக்கலாமே? ”

“ ஹண்டர் ! தாங்கள் என்னே இவ்விதம் தைரியப்படும்படி செய்வது நியாயமன்று. என் புத்திக்கு அவர் நன்னிலைமையில் இருப்பதாகத்தான் தோற்றிக்கொண்டிருக்கிறது. அவர்மேல் ஒரு காற்றடித்தாலும் எனக்குத் தெரிந்து விடும். எங்களுடைய அந்யோந்ய ஸம்பந்தம் அப்படிப்பட்டது. ஒருநாள் ஹாதர்லி படுக்கையறையில் இருந்தார். நான் கீழே போஜன சாலேக்குட் காரியஞ் செய்துகொண்டிருந்தேன். திடீரென்று ஹாதர்லிக்கு ஏதோ ஒரு அபாயம் நேர்ந்துவிட்டதுபோல எனக்குத் தோன்றிற்று. உடனே எல்லாவற்றையும் போட்டுவிட்டு ஒரே ஓட்டமாகப் படுக்கையறைக்குட்போய்ப் பார்த்தேன். காகிதப் பென்ஸிலேச் சீவும்போது விரலில் கத்திபட்டுவிட்டதாகச் சொன்னர். இப்படிப் பட்ட அற்ப விஷயங்கூட எனக்கு நன்ருகப் புலப்படும்போது, அவர் மரணமடைந்திருந்தால், அந்தப்பெரிய—துக்ககரமான விஷயமா எனக்குத் தெரியாமலிருக்கும்? அவர் மாத்திரம் உள்ளபடி இறந்திருப்பாராஞல் இந்தப்பாவியும் இதற்குள்ளே இறந்திருக்கமாட்டாளா? ஹண்டர்! தாங்கள் இதை நன்ருய் யோஜிக்கவேண்டும்.”

"அம்மா! விஷயங்களை நன்ருய்ப் பகுத்துணரவல்ல புத்திமான்களான புருஷர்களுடைய அபிப்பிராயத்தைக் காட்டிலும் ஒரு ஸ்திரீயினுடைய ஊகமில்லாத வெறும் அபிப்பிராயம் ஒருபோதும் சிறந்ததாகாது. நான் இதை என் அனுபவ ஸித்தமாகக் கண்டிருக்கிறேன். இந்தக் கடிதத்தில் மோதிரம் ஒன்று வைக்கப்பட்டிருந்ததனுலும், அவர் கையெழுத்தாகவே உமக்குத் தோற்றுகிறபடியினுலும் நீர் உம்முடைய அபிப்பிராயத்தைப் பின்னும் உறுதியாகக் கொள்ளுதற்கு இடமுண்டு. நாயகன் உயிரோடிருந்தால், இத்தனைநாள்வரையில் ஏன் அவர் மறைந்திருக்கவேண்டும்? மறைந்துகொண்டு இந்தக் கடிதம் எழுதும்படியாக என்ன நிர்ப்பந்தம் ஏற்பட்டது? என்பதை மாத்திரம் நீர் இன்னும் யோஜிக்கவில்லை."

"நான் எப்படி யோஜிக்க முடியும்? விஷயம் அப்படி அசிந்தியமாக இருக்கிறதே."

"திங்கட்கிழமை வீட்டை விட்டுப் புறப்படும்போது உம்மிடம் ஒன்றும் சொல்லிக்கொண்டு போகவில்லையே?"

"இல்லை."

"ஸ்வாண்டம் சந்தில் நீர் அவரைப் பார்த்தபோது உமக்கு ஆச்சரியமாகத்தானே இருந்தது?"

"ஆம். உள்ளபடி பெரிய ஆச்சரியமாய்த்தான் இருந்தது."

"அப்போது சாளரம் திறந்தபடியாய்த்தானே இருந்தது?"

"ஆம்."

"அப்படியானுல் அவர் உம்மைக்கூப்பிட்டிருக்கலாமல்லவா?"

"கூப்பிட்டிருக்கலாம்."

"ஆனுல், அவர் அவ்வாறு செய்யாமல், 'ஐயோ! ஐயோ!!' என்று கூக்குரலிட்டாராமே. அது வாஸ்தவமா?"

"வாஸ்தவந்தான்."

"உம்மைச் சகாயத்துக் கழைத்த மாதிரியாகத் தோற்றியதல்லவா?"

"ஆம்; அப்படித்தான் எனக்குத் தோற்றியது. அவர் தம் கையைப் பலவிதமாக ஆட்டி அடித்துக்கொண்டிருந்தார்."

"உம்மைக்கண்டபின்னர்த்தானே அவர் அவ்வாறு கத்தினுரென்று நீர் நினைத்தீர்?"

"நான் அப்படி நினைக்கவில்லை. ஸந்தர்ப்பம் அப்படி யொத் திருந் திருக்கலாம். தாங்கள் நினைக்கிறபடி அவர் என்னைக் கண்ட வுடன் கூக்குரலிட்டிருக்கவுங் கூடும்."

"அவரை யாரோ உள்ளே இழுத்தமாதிரியாகத் தோன்றிற் றென்று இன்ஸ்பெக்டரிடம் சொன்னீராமே?"

"ஆம்; அப்படித்தான் எனக்குத் தோன்றிற்று."

"அந்தச் சமயம் நீர் வேறொருவரையும் அங்கே பார்க்க வில்லை யல்லவா?"

"இல்லை. ஒருவரையும் நான் பார்க்கவில்லை. ஆனால், அந்தப் பிச்சைக்காரன் மாத்திரம் அங்கே யிருந்ததாகச் சொல்லுகிறான். லாஸ்கார் கீழே படிக்கட்டின் பக்கத்தில் இருந்திருக்கிறான். நான் முதலில் அவர்களைப் பார்க்கவில்லை."

"நிரம்பவும் சரி; நீர் பார்த்த காலத்தில் உம்முடைய கண வர் சாதாரணமான உடையுடன் இருந்ததாகத்தானே உமக்கு ஞாபகம்?"

"ஆம்; அப்படித்தான். ஆனால், கழுத்துப்பட்டை, காலர் முதலிய ஒன்றும் போட்டுக்கொண்டிருக்கவில்லை. அவர் கழுத்து வெறுமையாயிருந்ததை நான் நன்றாகப் பார்த்தேன்."

"ஸ்வான்டம் சந்தைப்பற்றி அவர் எப்போதாவது உம் மிடம் பிரஸ்தாபித்திருக்கிறாரா?"

"இல்லை. எப்போதுமே பிரஸ்தாபித்ததில்லை."

"அபின் தின்கிற வழக்கம் அவருக்கிருப்பதாக உமக்குத் தெரியுமா?"

"இக்கெட்ட வழக்கம் அவருக்குக் கிடையவே கிடையாது. இருந்திருக்குமானால், அது எப்படியாவது எனக்குத் தெரியாமலா போகும்?"

"நல்லது, நாழிகையாகிறது. நாங்கள் கொஞ்சம் ஆகாரம் எடுத்துக்கொண்டு படுத்துக்கொள்ளுகிறோம். நாளை முழுவதும் காரியமிருக்குமென்று நினைக்கின்றேன். உம்மிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டியவைகளில் ஒன்றுகூடப் பாக்கி வைபா மல் கேட்டுத் தெரிந்துகொண்டுவிட்டேன். இவைகளைக்கொண்டு எப்படியாவது நான் உம்முடைய நாயகராகிய ஹாதர்ஸியை நாளை

அஸ்தமனத்திற்குள் கண்டுபிடித்து அவரை அனுப்பிவிடுகிறேன். உமக்கும் சிரமமாயிருக்கும். போய் நிர்விசாரமாய்ப் படுத்துக் கொள்ளும். பொழுது விடிந்து மற்றவைகளைப் பார்த்துக்கொள்ளலாம்” என்முன்.

உடனே எங்களுக்கு ஒரு வேலைக்காரன் ஆகாரம் முதலியவைகள் கொண்டுவந்து பரிமாறினுன். நாங்கள் சாப்பிட்டுவிட்டுப் படுக்கைக்குப் போனேம். மேல் மாடியில் விசாலமான ஒரு அறையில் இரண்டு படுக்கைகள் போடப்பட்டிருந்தன. ஒன்றில் நான் படுத்துக்கொண்டேன். ஹண்டர் மாத்திரம் படுத்துக் கொள்ளவில்லை. அவன் ஒரு மாதிரியான மனுஷ்யன். தான் எடுத்த கேசை முற்றிலும் கண்டுபிடிக்கிற வரையில் அவன் தூங்க மாட்டான். ஒருநாள் இரண்டுநா ளல்ல. வாரக்கணக்காய் ஆகாரம் நித்திரை முதலிய ஒன்றுமேயில்லாமல் ராக்ஷஸன் மாதிரி வேலை செய்வான். அகப்பட்ட ஆதாரங்களை யெல்லாம் ஒன்றன்பின் ஒன்முக வரிசைப்படுத்திப் பார்ப்பதும், இரண்டொரு ஆதாரங்கள் குறைவாயிருந்தால் அவற்றை யெப்படி நிரப்பலாம் என யோஜிப்பதும், மனுஷ்யர்களின் ஸம்பந்தத்தை யுத்தேசித்து ஆதாரங்களுக்குப் பலாபலங் கட்டுவதும், தான் கொண்ட அபிப்பிராயத்துக்கு மாருக அவ்வாதாரங்களை யுபயோகித்துப் பார்ப்பதுமாகத் தானிருப்பான். ஒருவிதமாக நிச்சயப் படுத்திக்கொண்டாலொழிய அவன் தன் சரீரசுகத்தைப் பெரிதாகப்பார்க்கமாட்டான். அன்றைத்தினம் அவனைப் பார்த்தபோது அவன் படுத்துக்கொள்ளப் போகிறவனுக எனக்குத் தோற்றவில்லை. அவன் முகக்குறியால், இரவெல்லாம் விழித்துக்கொண்டு வேலைசெய்யப் போகிறவனுகவே தோற்றிற்று. எனக்கோ, என்னை யறியாமல் தூக்கம் வந்துவிட்டது. நான் படுத்துக் கொண்டுவிட்டேன். ஹண்டர் தன் மேற்சட்டை, உட்சட்டை யெல்லாவற்றையுங் களைந்தெறிந்துவிட்டு, ஒரு பெரிய அங்கியை (Dressing Gown) மாத்திரம் போட்டுக்கொண்டு அந்த அறையில் நெடுநேரம் வரையிலும் உலாத்திக்கொண்டிருந்தான் பிறகு, அங்குள்ள கட்டிலிற் கிடந்த தலையணைகளை யெல்லாம் எடுத்துக் கீழே ஒரு ஆசனமாகப் போட்டுக்கொண்டு அதன்மீது ஒரு யோகிபோல இரண்டு காலையும் மடக்கிக்கொண்டு உட்கார்ந்து விட்டான். அதுவரையில்தான் எனக்கு ஞாபகம் இருந்தது.

நான் தூங்கிவிட்டேனதால் அதன் பின்னர் இன்னது செய்தா னென்று எனக்குத் தெரியாது. நல்ல தூக்கத்தின் மத்தியில், 'வெப்ஸ்டர்! எழுந்திரு, எழுந்திரு' என்று ஹண்டர் என்னைத் தட்டி யெழுப்பினன். பொழுது விடிந்துவிட்டதென் றெண்ணி நானும் சரேலெனப் படுக்கையைவிட் டெழுந்திருந்தேன். ஹண்டர் என்னைப் பார்த்து, "வெளியில் கொஞ்சதூரம் சவாரி போய் வரலாம், வருகிறாயா?" என்று கேட்டான்.

"என்ன ஆக்ஷேபமிருக்கிறது?" என்றேன்.

"அப்படியானால் உடுப்பைப் போட்டுக்கொள். இங்கே இன்னம் ஒருவரும் எழுந்திருக்கவில்லை. என்றாலும், குதிரைக் காரன் படுத்திருக்கிற இடம் எனக்குத் தெரியும். போய் எழுப்பி வண்டியைப் போடச்சொல்லுகிறேன்" என்றான்.

அப்போது அவனிருந்த மாதிரியையும், அவனது பேச்சையும், அவன் கண்களையும் பார்த்தபோது, முதனாளிரவில் யோஜித்துக் கொண்டிருந்த கேசைப்பற்றி அவன் ஒரு விதமாகத் தீர்மானித்து முடிவு செய்துவிட்டதாகத் தெரிந்தது. நான் பொழுது விடிந்து விட்டதாகவே நினைத்துக்கொண்டு உடுப்புக்களை யெடுத்துப் போட்டுக்கொண்டிருக்கையில் கைக்கடியாரத்தை யெடுத்துப் பார்த்தேன். 'ஒருவரும் இன்னும் எழுந்திருக்கவில்லை' என்று அவன் சொன்னதில் ஆச்சரியமொன்று மில்லை. அப்போதுதான் நாலடித்துப் பத்து நிமிஷங்களாயிருந்தன. 'வண்டி பூட்டியாய் விட்டது' என்று ஹண்டர் திரும்பிவந்து சொல்வதற்குள்ளாக நானும் என் உடுப்புக்களைப் போட்டுக்கொண்டு தயாராயிருந்தேன்.

"வெப்ஸ்டர்! நான் என்னுடைய ஊஹங்கள் சரியாயிருக்குமா என்பதைப் பார்ப்பதற்காகப் போகப்போகிறேன்" என்று சொல்லித் தன் உடுப்புக்களைப் போட்டுக்கொண் டிருக்கையில், "டாக்டர்! என்னைப்போன்ற அத்தனை படுமுட்டாள் இந்த ஐரோப்பா கண்டத்திலேயே இல்லையென்று நினைக்கிறேன். இருந்தாலும் இப்போதாவது திறவுகோலைக் கண்டெடுத்துவிட்டேனே என்கிற விஷயம் கொஞ்சம் மனதுக்கு ஸமாதானமாயிருக்கிறது" என்று சொன்னான்.

"அந்தத் திறவுகோல் எங்கே யிருக்கிறதப்பா?" என்று புன்சிரிப்புடன் நான் கேட்டேன்.

"ஸ்நானஞ் செய்யும் அறையில்தான் இருக்கிறது—வெப்ஸ்டர்! என்ன விழித்துப் பார்க்கிறுய்? பரிஹாஸஞ் செய்வதாக நினைக்கிறுயோ? நான் இப்போதுதான் அங்கே போயிருந்தேன். அங்கே கிடந்தது. அதை எடுத்து இதோ இந்தக் கைப்பெட்டியில் வைத்திருக்கிறேன். வா, திறவுகோல் பூட்டுக்குச் சரியாக இருக்கிறதா என்பதைப் போட்டுப்பார்ப்போம்" என்றுன்.

நாங்களிருவரும் கொஞ்சமும் ஓசைப் படாமல் மெதுவாக மாடியை விட்டுக் கீழே யிறங்கி வாசலுக்கு வந்தோம். சாலையில் வண்டி நின்று கொண்டிருந்தது. எங்களைக் கண்டதும் வண்டிக்காரன் ஓடிவந்து, வண்டியின் கதவைத் திறந்தான். நாங்கள் சரேலென ஏறிக்கொண்டு, வண்டியை விடச்சொன்னேம். வண்டி அதிவேகமாக லண்டன் சாலையின் வழியாகப் போய்க்கொண்டிருந்தது. வழியில், லண்டன் பட்டணத்தில் விற்பதற்காக ஏற்றப்பட்டிருக்கின்ற கறிகாய் வண்டிகளைத் தவிர, மற்றை வண்டிகளாவது மனுஷ்யர்களாவது வரக் காணேம். சாலையின் இருமருங்கிலுமுள்ள வீடுகளெல்லாம் திறக்கப்படாமல் அப்படியே மூடிய வண்ணமாக இருந்தன. போகும்போது, ஹண்டர் என்னை நோக்கி, "வெப்ஸ்டர்! இந்தக் கேசு என்னை நிரம்பவும் மயக்கிவிட்டது. எனக்கும் இதுவரையில் ஒன்றுமே புரியவில்லை. புரியவில்லையென்று மரியாதையாகத்தான் சொல்லிக்கொள்வானேன். நான் முட்டாள்தனமாக ஏதேதோ குருட்டு யோஜனை பண்ணிக் காரியத்தைக் கண்டுபிடிக்க முடியாதபடி செய்துவிட்டேன். என்றைக்குமே கண்டுபிடிக்க முடியவில்லையென்று போகாமல், இப்போதாவது கண்டுபிடித்துவிட்டோமே என்பது ஒருவித ஆறுதல்" என்று சொன்னுன்.

நாங்கள் பட்டணத்திற்குள் பிரவேசிக்கும்பொழுது, பொழுது நன்றுய் விடிந்துவிட்டது. முன்னுடியெழுந்திருந்தவர்கள் அரை விழித்தூக்கமும் தாழுமாய்ச் சாளரத்தின் வழியாக வீதியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நாங்கள் வாட்டர்லோ (Waterlo) வழியாக ஆற்றைக்கடந்து சென்று, வெல்லிங்டன் (Wellington)

தெருவழியாகப் போலீஸ் தெருவுக்குட் புகுந்தோம். போலீஸ் உத்தியோகத்தி லுள்ளவர்களுக்கெல்லாம் ஹண்டரை நன்றாகத் தெரியுமாகையால், அங்குள்ள போலீஸ் ஸ்டேஷன் வாசலிலிருந்த இரண்டுசேவகர்கள் ஹண்டரைக் கண்டதும் மிக்கமரியாதையுடன் வணக்கஞ் செய்தார்கள். ஒரு சேவகன் வண்டியைப் பிடித்துக் கொண்டான். மற்றொருவன் எங்களை உள்ளே அழைத்துச் சென்றான். ஹண்டர் போகும்போது, "உள்ளே இன்ஸ்பெக்டர் யார் இருக்கிறார்?" என்று கேட்டுக்கொண்டே போனான்.

அதைக் கேட்டதும், "ஐயா! நான்தான் மோபர்லி (Moberly) இருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே ஒருவர் வந்து, "உள்ளே வாருங்கள்" என்று ஹண்டரை யழைத்தார்.

ஹண்டர் அவரைப் பார்த்து, "உம்மோடு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன்" என்றான்.

"எது சொன்னாலும் கேட்கத் தயாராயிருக்கிறேன். இப்படி நான் இருக்கும் அறையின் பக்கமாக வாருங்கள்" என்று அந்த மோபர்லி சொன்னார்.

உடனே இருவரும் உள்ளே போனோம். அந்த அறையானது மிகச் சிறியதாயும் அழகாயும் சுத்தமாயுமிருந்தது. அதில் ஒரு மேஜையும் இரண்டு நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. இன்ஸ்பெக்டர் மேஜையின்மீது உட்கார்ந்துகொண்டு, எங்களை நாற்காலியில் உட்காரும்படி சொன்னார். நாங்கள் அந்தப்படியே உட்காரவும், இன்ஸ்பெக்டர் ஹண்டரைப் பார்த்து, "நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார்.

"ஹாதர்லி காணமற்போன விஷயமாகச் சமுசயத்தின் பேரில் பிடித்து வைக்கப்பட்டிருக்கிற பிச்சைக்காரனாகிய அந்த ஹக்பூன் என்பவன் இங்கேதான் இருக்கிறானோ?"

"ஆம், இங்கேதான் இருக்கிறான்."

"அப்படித்தான் நானுங் கேள்விப்பட்டேன். இப்போது அவனை எங்கே அடைத்து வைத்திருக்கிறீர்கள்?"

"காவற் கூடத்தின் நாலாவது அறையில்."

"சும்மா, துஷ்டத்தனமில்லாமல் இருக்கிறானா?"

170614

"அவனால் எங்களுக்கு யாதோ ருபத்திரவமுமில்லை. ஆனால், அவன் மிகவும் கசம்பிடித்தவனா யிருக்கிறான். நாற்றம் சகிக்க முடியவில்லை."

"அவ்வளவு நாற்றமா?"

"ஆம். என்றைக்காவது குளித்து முழுகி யிருந்தாலல்லவா நாற்றமில்லாமலிருக்கும். அவன் தேகத்தைப் பார்த்தால், முழுகி ஆறுமாசமா யிருக்குமென்று தோன்றுகிறது. உச்சந் தலைமுதல் உள்ளங்கால் வரையில் அழுக்குப் படிந்திருக்கின்றது. அவன் முகமோ சொல்லவேண்டுவதில்லை. கன்னங்கறேலென் றிருக்கின்கிறது. கேசு ஒருவிதமாக முடிந்தால், நாளைக்கே அவனைக் குளிப்பாட்டி வைக்கலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்."

"நான் அவனைப் பார்க்கவேண்டுமே."

"பார்க்கவேண்டுமா? அப்படியானால், இந்தப்பக்கம் வாருங்கள். கைப்பெட்டி யிங்கேயே இருக்கட்டும்."

"பெட்டியுங் கூடவரட்டுமே. இது ஒரு பாரமா என்ன?"

"நிரம்ப ஸந்தோஷம். தயை செய்து வாருங்கள்" என்று சொல்லி எங்களைக் காவற் கூடத்தின் நாலாவது அறையண்டை யழைத்துக்கொண்டுபோய்க் கதவைத் திறந்துவிட்டு, "இவன்தான் அந்த ஹக்பூன் என்னும் பிச்சைக்காரன். தூங்கிக்கொண்டிருக்கிறான்போ லிருக்கிறது" என்றார்.

அந்தப் பிச்சைக்காரன் இருந்த மாதிரியை என்னென்று சொல்வேன்! இன்ஸ்பெக்டர் விவரித்தமாதிரி அவன் ஒருபெரிய கசங்கொள்ளியாகவே இருந்தான். மேல் உதடு மூக்கோடு ஒட்டிக்கொண்டிருப்பதையும், இரண்டு மூன்று பற்கள் அவ்வுதட்டிலிருந்து பிதுங்கி வெளியில் தெரிந்துகொண் டிருப்பதையும், விழிகளின் கீழாக மெல்லிய செம்பட்டை மயிர்கள் சில வளர்ந்திருப்பதையும், புருவம் நெற்றி முதலிய இடங்களெல்லாம் கன்னங்கறேலென விளங்குவதையும், தலையில் நாலைந்து பிச்சமயிர் மாத்திரம் பறந்துகொண்டிருப்பதையும் பார்க்கும்போது எங்களுக்கே ஒருவிதமான நகைப்புண்டாயிற்று.

"பார்த்தீர்களா? இவன்தான் அழகின் அபராவதாரம்!" என்று இன்ஸ்பெக்டரும் வேடிக்கையாகப் பேசினார்.

"நீர் சொல்லுகிறபடி, இவனைக் குளிப்பாட்டி வைக்கவேண்டியது நிரம்பவும் அவசியமானதுதான். இவ்வளவு அசுத்தமாக இருந்தால் வியாதியல்லவா உண்டாகிவிடும். சிறைச்சாலையில் இருப்பவனைக் கூடியவரையில் சுத்தமுள்ளவனாகவும் வியாதியில்லாதவனாகவும் வைத்துக்கொள்ளவேண்டியது போலீஸ்காரர்களாகிய நமக்கு இன்றியமையாக் கடமையல்லவா? இந்த எண்ணத்தைக் கொண்டுதான் வரும்போதே நான் இவனை ஸ்நானஞ்செய்விப்பதற்கு வேண்டிய சில சாமான்களையும் கொண்டுவந்திருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே தன் கைப்பெட்டியைத் திறந்து ஒரு கடற் பஞ்சை (Sponge) யெடுத்தான்.

"ஹண்டர்! நீர் ஒரு வேடிக்கைக்காரர் என்று நான் முன்னமேயே கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போது இங்கே என்ன செய்வதாக உத்தேசித்திருக்கிறீர்?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"ஒன்றும் செய்யப்போகிறதில்லை. கறுப்பை வெளுப்பாகவும், விகார ரூபத்தை அழகிய ரூபமாகவும், பிச்சைக் காரனைப் பணக்காரனாகவும், இல்லாதவனை இருக்கிறவனாகவும் செய்யப் போகிறேன்" என்று சொன்னான்.

"நீர் சொல்வதின் தாத்பர்யம் இன்னதென்று விளங்கவில்லையே" என்று இன்ஸ்பெக்டர் மோபர்லி கேட்டார்.

"எனக்குந்தான் தாத்பர்யந் தெரியவில்லை. ஹக் பூனைக் கேட்டால் எல்லாம் விளங்கிவிடும்" என்று சொல்லிப் பிச்சைக்காரனாகிய அந்தப் பூன் என்பவன் சமீபத்திற் போய்த் தன் கையிலிருந்த கடற்பஞ்சைத் தண்ணீரில் நனைத்து அதை அவன் முகத்தில் மேலுங் கீழுமாக அழுந்தத் தேய்த்தான். ஐந்து நிமிஷம் அவ்வாறு தேய்த்துவிட்டு, 'ஐயையோ! ஹக்பூனுக்குப் பதிலாக வேறு யாரோவல்லவா இங்கே யிருக்கிறார்?" என்று உரக்கக் கூச்சலிட்டான்.

நான் என் ஆயுளில் அப்படிப்பட்ட ஒரு அதிசயமான காட்சியை எங்குங் கண்டதேயில்லை. ஹண்டர் பஞ்சை நனைத்துத் துடைத்தவுடன் மரத்திலிருந்து பட்டை யுரிவது போலக் களங்கமெல்லாம் படை படையா யகன்று போகவே, அப்பிச்சைக்கார

னுடைய முகமானது சந்திரமண்டலம்போல வேளேலென விளங்கிற்று. மேலோங்கிய உதடு கீழுதட்டுடன் பொருந்தியிருந்தது. பிதுங்கிய பற்கள் உள்ளடங்கியிருந்தன. செம்பட்ட மயிர்களைக் காணும். கறுமையெல்லாம் வெண்மையாய் மாறிவிட்டன. அதிகம் விவரிப்பானேன்? அப்பிச்சைக்காரனது விகாரமுகமும் ஒரு ராஜகுமாரனது சுந்தர முகமாக இருந்தது. இவ்விதம் தன் நிஜரூபத்தை வெளிப்படுத்தினவுடன் அந்தப் பிச்சைக்காரன் நிரம்பவும் வெட்கத்தை யடைந்து, தன் முகத்தை வெளிக்காட்டாமல், தலையணையில் குப்புறவைத்து மறைத்துக்கொண்டான்.

இன்ஸ்பெக்டர் மோபர்லிக்கு ஒன்றுமே புரியவில்லை. ஹண்டர் சொல்லியபடி ஹக்பூனின் வேஷத்தைப் போட்டுக்கொண்டு யாரோ தன்னை மோசஞ்செய்து விட்டதாகவே நினைத்துத் திகிலடைந்துவிட்டார். இந்த அபிப்பிராயத்தின்பேரில், தலையணையின் மேல் குப்புற வீழ்ந்து கிடக்கிற அந்த மனிதனை, 'யாரடா, மோசக்காரப் பயல்? எழுந்து இப்படிவா பார்ப்போம்' என்று அதட்டினார். அவன் எழுந்திருக்கவில்லை. பின்னும் இப்படி இரண்டு மூன்று தரம் சொல்லியும் அவன் எழுந்திருக்காததைக் கண்டு, இன்ஸ்பெக்டர் தாமே அவன் கையைப் பிடித்து வெளியே இழுத்துவந்து பார்த்தார். பார்த்ததும் அவர் பெரிய வியப்பை யடைந்து, "காணுமற்போன ஹாதர்லியைப்போ லிருக்கிறதே! ஹண்டர்! இவர் இங்கே யெப்படி நுழைந்தார்?" என்று ஆச்சரியம் உள்ளடங்காமல் கேட்டார்.

"ஹாதர்லிதானே, வேறு யாரோ, அவரையே கேட்டால் எல்லாம் தெரிந்துவிடுகிறது" என்று ஹண்டர் சொன்னான்.

இதைக்கேட்டதும் அக்குற்றவாளி அதிகமான துக்கத்துடன், "ஏன் வீணுகக் கூச்சலிடுகிறீர்கள்? ஹாதர்லி என்பவன் நான்தான். என்னை எதற்காக இங்கே அடைத்துவைத்திருக்கின்றீர்கள்? அதைமாத்திரம் தயை செய்து சொல்லும்படி பிரார்த்திக்கிறேன்" என்று தாழ்ந்த குரலுடன் சொன்னான்.

"குற்றம் செய்ததற்காக இல்லை. உம்முடைய மனைவிக்கு உண்மையை யொளித்த துரோக சிந்தனைக்காக உம்மை இங்கே அடைத்துவைத்திருக்கிறோம்" என்று ஹண்டர் சொன்னான்.

"ஐயா! இவ்வாறு சொல்லிப் பழி சுமத்துவதைக்காட்டி லும, குழந்தைகளுக்கு நன்மையை நாடி நடந்த ஒரு நல்ல தகப் பன் என்று என்னைப் புகழுக்குரியவனைச் செய்யலாகாதா?" என்று ஹாதர்லி விசனத்துடன் சொன்னான்.

"குழந்தைகளுக்கு என்ன நன்மை?"

"'நமது பிதா பிச்சைக்காரன். அவனுக்குப் பிறந்த நாம் எப்படி கனவான்களின் கூட்டங்களில் சேர இருக்கமுடியும்?' என்று என் குழந்தைகள் ஏங்கியிளைத்துப் பெருமைகுன்றியிராம லிருக்கும்படி செய்தது நன்மையல்லவா?" என்று சொல்லி, "என் சிரெல்லாம் இன்றோடே சிதைந்துவிட்டதே! ஆ, தெய் வமே!" என்று ஹாதர்லி அப்படியே யுட்கார்ந்துவிட்டான்.

ஹண்டர் இவ்வார்த்தையைக் கேட்டதும் சிறிது இரக்கங் கொண்டு ஹாதர்லியின் முதுகில் தட்டிக்கொடுத்து, "ஹாதர்லி! நீர் வீணாய் விசனப்படுவதில் காரியமில்லை. உமது பேரில் குற்ற மொன்றுமில்லை யென்பதை நிரூபிப்பதற்காக நீர் நியாயஸ்தலம் போகும் பக்ஷத்தில் உம்முடைய ரஹஸ்யங்களெல்லாம் பகிரங்க மாகிவிடும். அப்படிக்கின்றிப் போலீஸாருக்கு நம்பிக்கை வரும் படி உள்ளதுள்ளபடியாக எல்லாவற்றையும் சொல்லிவிடுவீரானால் ஒரு விஷயமும் நான் வெளிவாராதபடி செய்துவிடுகிறேன். 'இந்த மோபர்லியும் ஆநாவசியமாகப் பிறரைப்பற்றி நிந்தைசொல்லமாட் டார். ஆகையால், ஆதியோடந்தமாக உம்முடைய சரித்திரத் தைச் சொல்லிவிடும். இதைத்தவிர வேறு எது செய்தாலும் உம் முடைய பழிப்புக்களெல்லாம் பத்திரிகைகளில் வெளிப்பட்டு ஊரெங்கும் சிரிக்குமென்பதில் ஆக்ஷேபமேயில்லை. யோஜித்து உமது இஷ்டப்படி செய்யும்" என்று சொன்னான்.

"ஹண்டர்! கடவுள் உம்மை ஆசீர்வதிப்பாராக. ஐயா! நான் எத்தனைகாலம் வேண்டுமானாலும் சிறைச்சாலையில் அடை பட்டிருக்கலாம். அப்படிக்கின்றி, என்னைத் தூக்கிலிட்டாலும் நான் ஸந்தோஷமாகவே என் மரணத்தை யேற்பேன். என்னு டைய அந்தரங்க ரகஸ்ய நடவடிக்கைகளெல்லாம் வெளிப்பட்டு அதனால் என்னுடைய பிள்ளை, பேரன், கொட்பேரன் தலைமுறை களிலும் நீங்காத ஒரு பெரும்பழி உண்டாகி விடுமென்றால்,

அந்தோ! அதை மாத்திரம் நான் அரை நிமிஷமும் சகிக்கமாட்டேன். "மானம் படவரின் வாழாமை முன்னினிதே", "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்- உயிர்நீப்பர் மானம் வரின்" என்ற மூதுரைக்கிணங்க, நான் என் பிராணனை அந்த நிமிஷமே விட்டுவிடுவேன். என் சரித்திரத்தை முதன்முதல் கண்டு பிடித்தவர் நீர்தாம். நீர் மாத்திரம் இதைக் கண்டுபிடிக்காமல் இருந்தால் என் சரித்திரம் என்றைக்குமே வெளிவராது. என்னுடைய பரிதாப நிலைமையைக்கண்டு இரங்கி, என்னுடைய ரகஸ்யங்களை வெளியிடாமல் என்னைக் காப்பதாக நீர் வாக்களித்திருக்கின்றமையால் நீர் விரும்பியபடி நான் என் பிறப்பு வளர்ப்பு முதலியவற்றையெல்லாம் அடி முதற்கொண்டு சொல்லுகிறேன் கேளும்" என்று ஹாதர்லி சொல்லத்தொடங்கினன்:—

"என்னுடைய பிதா சேஸ்மர்வீல்டு (Chesmerfield) என்னுமிடத்தில் ஒரு உபாத்தியாயராக இருந்தார். நான் அங்கே அவரின் கீழ் நல்ல கல்வியை ஸம்பாதித்துக்கொண்டேன். நான் பால்யத்திலேயே தேசசஞ்சாரஞ் செய்யப் புறப்பட்டு, பற்பல நகரங்களைப் பார்த்துக்கொண்டு வரும்போது பாரீஸ் என்ற நகரத்தில் ஆடிக்கொண்டிருந்த ஒரு பெரிய நாடகத்தைக் கண்டு ஆச்சரியமடைந்து, எப்படியாவது இதில் சேர்ந்துவிடவேண்டும் என்று கருதி, அக்கம்பெனியின் தலைவராகிய போர்ட்டர் (Porter) என்பவரைக் கண்டுபேசி, மாதம் பதினைந்து பவுன் சம்பளம் என்ற ஏற்பாட்டுடன் அந்நாடகக் கம்பெனியில் சேர்ந்துகொண்டேன். மூன்று வருஷகாலம் நான் அந்த நாடகத்தொழிலை மிகுந்த உற்சாகத்துடன் நடத்திக்கொண்டிருந்தேன். நான் இந்தவிதமாக இளம்பிராயத்திலேயே வெளிப்பட்டுவிட்ட விஷயத்தில் என் பிதாவுக்குச் சிறிதும் ஸம்மதமேயில்லை. திரும்பிவந்து விடும்படியாக அடிக்கடி நிர்ப்பந்தயாகக் கடிதம் எழுதிக்கொண்டுவந்தார். எனக்கும் இராத்தூக்கம் விழிப்பதனால் சரீர ஆரோக்கியம் கெட்டுப் போயிருந்தபடியால் நாலாவது வருஷ ஆரம்பத்தில், நான் அந்த நாடகத்தொழிலை விட்டுவிட்டு நேராக லண்டனுக்கு வந்தேன். என் பிதாவின் சிபார்சின்பேரில் ஒரு தினசரி பத்திரிகைக்குச் சமாசாரம் எழுதியனுப்பும் ஒரு உத்தியோகத்தைப் பெற்று, நான்கு வருஷகாலம் அவ்வேலையைச் சரிவரப் பார்த்துவந்தேன்.

ஒருநாள் அப்பத்திரிகையின் யஜமானர் பிச்சைத்தொழிலைப்பற்றிப் பத்துப்பன்னிரண்டு உபந்நியாஸங்கள் எழுதியனுப்பும்படி என்னைக் கேட்டுக்கொண்டார். நான் அதற்கு ஒப்புக்கொண்டேன். இதிலிருந்துதான் என் சரித்திரமும் இல்வாழ்க்கையும் ஆரம்பமாயிற்றென்னலாம். 'பிச்சையெடுத்தல்' என்பதைப்பற்றி எழுதத் தொடங்குமுன், அதைப்பற்றிய அனுபவம் சிறிதாவது நமக்கிருந்தால் சிலாக்கியமாயிருக்குமென்றெண்ணிப் பரீக்ஷார்த்தமாகப் பிச்சை யெடுத்துப் பார்ப்போம் என்று தீர்மானித்தேன். நான் நாடகத்திலிருந்து சமயத்துக்குத் தக்கபடி பற்பல வேஷங்களை மாறிமாறிப் போட்டுக்கொள்ளத் தெரிந்துகொண்டிருந்ததாதலால், எண்ணியபடி ஒரு பிச்சைக்காரனைப்போல வேஷம் தரித்துக்கொண்டேன். உதட்டையும், பல்லையும், தலைமயிரையும்,உடுப்பையும் பார்த்தபோது எல்லாரும் என்னை ஒரு பிச்சைக்காரனென்றே மதித்தார்கள். சரி, வேஷம் நன்றாய்ப் பலித்துவிட்டதென்றெண்ணி, நான் பட்டணத்தின் ஜன நெருக்கமுள்ள ஒரு இடத்தில் நாலைந்து நெருப்புப் பெட்டிகளையும் ஒரு கட்டுப்புகைச் சுருட்டையும் வைத்துக்கொண்டு ஒரு சிறிய வியாபாரிபோல உட்கார்ந்தேன். 'துரைசானிகளே! துரைமார்களே! தயைசெய்து இந்த அநாதையின் பொருளை வாங்குங்கள். உங்களுக்குப் புண்ணிய முண்டு' என்று இப்படி நான் இரக்கம் வரும்படியாகச் சொன்னதைக் கேட்கும் வழிப்போக்கர்கள் எவரும் ஒரு பென்னியோ இரண்டு பென்னியோ ஏதாவது என்னிடம் விட்டெறியாமற் போகமாட்டார்கள். சாயங்காலம் வீட்டுக்குத் திரும்பும்போது பார்க்கையில், என்ன ஆச்சரியத்தைச் சொல்வேன், நாற்பத்தெட்டு ஷிலிங்கும், ஐந்து பென்னிகளும் இருந்தன.

பத்திராதிபர் விரும்பியபடி பிச்சைத் தொழில் என்பதைப் பற்றி நாலைந்து வியாசங்களும் எழுதியனுப்பினேன். மற்றும் சில வியாசங்கள் இவ்விஷயமாய் எழுதியனுப்ப வேண்டுமென்ற உத்தேசத்துடன் நான் இருக்கும்போது, ஒரு கடன்காரன் என்னை வாரண்டில் பிடித்துக்கொண்டான். அவனுக்கு வட்டியும் முதலுமாக நான் அறுபத்திரண்டு பவுன் கொடுக்கவேண்டியிருந்தது. என்னவிதமாய் அந்தப்பெரிய தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதென்று எனக்குத் தெரியவில்லை. இப்படி நாலைந்து நிமிஷம்

யோஜித்துக் கொண்டிருக்கையில் ஒரு உபாயம் எனக்குத் தோற்றியது. நான் அந்தக் கடன்காரனைப் பதினைந்து நாள் தவணை கொடுக்கும்படி பலவாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். அவனும் அதற்கு இணங்கி, 'இன்றைக்குப் பதினைந்தாநாளில்கொண்டு வந்து கொடுக்காத பக்ஷத்தில், நான் உன்னை லகுவிலே விடமாட்டேன்' என்று பயமுறுத்திவிட்டுப் போய்விட்டான். அவன் போனதும் நான் பழைய பிச்சைக்கார வேஷத்தைப் போட்டுக் கொண்டு பட்டணத்திற்குட் பிரவேசித்து யாசிக்கத் தொடங்கினேன். பென்னியும் அரைப் பென்னியுமாகவே பகலெல்லாம் வருஷித்துக்கொண் டிருந்தமையால் நான் நான்கு தினத்திற்குள்ளாக அந்தக் கடனைத் தீர்த்துவிட்டேன்.

"ஹண்டர்! தாங்களே யோஜித்துப் பாருங்கள். நெற்றி வேர்வை நிலத்திற் சொட்டும்படியாக நிர்ப்பந்தமாகப் பகலெல்லாம் கடுமையான வேலை செய்து வாரம் இரண்டு பவுன் வீதம் சம்பளம் பெறுவதெப்படி? ஒரு வேலையும் செய்யாமல், மாருக ஒரு வேஷத்தை மாத்திரம் போட்டுக்கொண்டு ஓர் இடத்தில் உட்கார்ந்தபடியே தினம் நாலைந்து பவுன் சம்பாதிப்பது எப்படி? "ஏற்பதிகழ்ச்சி," "ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற் - கிரவின் இளிவந்த தில்" என்ற பெரியோர் வாக்கியங்களை நினைக்குந் தோறும் அப்பிச்சைத் தொழிலில் ஒருவித அருவருப்பும், தினம் நான்கு பவுன் வருமானமாயிற்றே என்று நினைக்குந் தோறும் அப்பிச்சைத் தொழிலில் ஒருவித அபிமானமும் மாறி மாறி உண்டாய்க்கொண்டிருந்தது. இன்னவிதம் செய்வதென்று எனக்குப் புரியவில்லை. ஒருநாள் முழுவதும் பிச்சைத் தொழிலுக்கும் என் பெருமைக்கும் ஒரு பெரிய மல் யுத்தம் நிகழ்ந்தது. யுத்தாரம்பத்தில் தோல்வியும் ஜயமும் மாறிமாறி இரண்டிற்கும் வந்து கொண்டிருந்தாலும் முடிவில் என் பெருமை பீடழிய, பிச்சைத் தொழிலே தன் பணமிகுதியால் வெற்றியை யடைந்தது. நான் பத்திரிகைக் கெழுதுவதை அடியோடு விட்டுவிட்டுப், 'பிச்சைக் குடி பெருங்குடி' என்று தீர்மானத்துடன் வேஷந் தரித்துக் கொண்டு பட்டணம் போய்ப் பிச்சை யெடுப்பதும், சட்டைப்பைகள் பணத்தால் நிறைந்தவுடன் வீட்டுக்குத் திரும்புவதுமா யிருந்

தேன். இந்த ரகஸ்யம் ஒரே ஒரு மனுஷ்யனுக்கு மாத்திரந்தான் தெரியும். அவன் யாரென்று கேட்டால், ஸ்வாண்டம் சந்தி லுள்ள அந்த அபின் கடையின் காவற்காரனுகிய லாஸ்கார் என்பவன்தான். அவன் எனக்கு அந்த வீட்டின் இரண்டாவது தளத்தில் இடங்கொடுத்திருந்தான். நான் அங்கிருந்தே என் வேஷங்களை மாற்றிக்கொண்டு காலையிற் புறப்படுவேன். மாலை வேளைகளில், கிடைத்த பணத்தை அங்கே வைத்துப் பூட்டிவிட்டு ஒரு பெரிய பிரபு மாதிரியாகப் பிரம்புங் கையுமாக வெளிப் படுவேன். எனக்கு இடம் முதலியவைகள் கொடுத்து உதவி செய்வதற்காகத் தினம் நாலைந்து ஷிலிங் லாஸ்காருக்கு நான் கொடுத்துக்கொண்டு வந்தபடியால் அவன் என் ரகசியத்தை வெளியிடமாட்டான் என்கிற நம்பிக்கை எனக்குப் பூரணமாக வுண்டு.

"ஹண்டர்! நான் என்ன ஆச்சரியத்தைச் சொல்வேன்! ஒருமாதம் ஆனவுடன் நான் எனக்கு வந்துள்ள பணத்தை யெல்லாங் கொட்டி எண்ணினேன். நூற்றெழுபது பவுனும், ஏழரைப் பென்னியுமிருந்தன. எடுப்பது பிச்சை யென்றாலும், இவ்வளவு பெருந்தொகையைக் கண்டதும் எனக்கே என்னிடத்தில் ஒருவித மதிப்புண்டாகிவிட்டது. இந்தத் தொழிலை, விடாது சிலகாலம் நடத்தினல் அபரிமிதமான பொருளைச் சம்பாதித்துக் கொண்டு ஒரு சிற்றரசனைப்போல வாழலாம் என்ற எண்ணமுண்டாகவே, நான் என் தொழிலை உபேக்ஷை செய்யாமல் சிரத்தையுடன் ஒழுங்காகவே நடத்திவந்தேன். இந்த லண்டன் பட்டணத்தில்தானகட்டும், வேறு எவ்விடத்தில்தானகட்டும் இப்பிச்சைத்தொழிலில் என்னளவு சம்பாதிப்பவர்கள் ஒருவர்கூட இருக்கமாட்டார்களென்பது நிச்சயம். என் வேஷத்தையும் பேச்சையுங் கண்டால், இரங்காத கல்நெஞ்சு படைத்தவர்களுங் கூட எனக்கு ஏதாவது கொடுக்காமற் போகமாட்டார்கள். ஒரு பென்னியும் அரைப் பென்னியுமாக வாரிவாரிக் குவித்துக்கொண்டிருப்பேன். நாலு பவுனுக்குக் குறைந்த வரும்படி யுள்ளதாயிருந்தால், அது தான் எனக்கு அதிர்ஷ்டமற்ற துர்த்தினமென்று கருதத்தக்கதாயிருக்கும்.

"பணம் நாளுக்குநாள் அதிகமாகவே, நானும் பரமஸந்துஷ்டனுப் முதலில் ஒரு வீடு வாங்கினேன். பின்னர், டாக்டருடைய

குமாரத்தியையும் விவாகஞ் செய்துகொண்டேன். கலியாண காலத்தில் என்னுடைய நிஜமான விருத்தி இன்னதென்று என் மாமனர் மாமியார் முதலிய ஒருவருக்குமே தெரியாது. எல்லாரும் என்னை ஒரு பிரபுவாகத்தான் மதித்துக்கொண்டிருந்தார்கள். என் மனைவியும் நான் பட்டணத்தில் ஏதோ ஒரு விதமான வர்த்தகஞ் செய்துகொண்டிருப்பதாகத்தான் இன்னமும் நினைத்துக்கொண்டிருக்கிறாள். நான் இவ்விதம் பிச்சையெடுத்துச் சம்பாதிக்கிறேனென்கிற விஷயம் அவளுக்காவது, அவளைச் சேர்ந்தவர்களுக்காவது அணுவளவும் தெரியாது.

"சென்ற திங்கட்கிழமை யன்று நான் என் வேலையைச் செய்து முடித்து, சீக்கிரமாய் வீடுபோய்ச் சேரவேண்டுமென்ற நோக்கத்துடன், அந்த அபின்குகையின் மாடித்தளத்திலிருந்து நான் என் உடுப்புக்களைப் போட்டுக்கொண்டிருக்கையில், நன்றாக வெளிச்சந் தெரிவதற்காகப் பலகணியின் கதவைத்திறந்து பார்த்தேன். வீதியில் என் மனைவி நின்றுகொண்டு, என்னையே உற்றுப்பார்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிந்தது. உடனே பயந்து திடுக்கிட்டு, 'ஐயோ! ஐயோ!!' என்று கூக்குரலிட்டதோடு, என் மனைவிக்கு என் முகம் தெரியாமலிருக்கும்படி என் கைகள் இரண்டையும் அப்படியும் இப்படியுமாக அடித்துக்கொண்டு, வேகமாகக் கீழேயிறங்கி, என் நம்பிக்கைக் குரியவனான அந்த லாஸ்கார் என்பவனிடம் போய், யார் வந்தாலும் மேலே வரவிடாமற் பார்த்துக்கொள்ளும்படி கண்டிப்பாய்ச்சொல்லிவிட்டு, நானும் என் பழைய பிச்சைக்காரவேஷத்தையெடுத்துப் போட்டுக்கொண்டேன். எப்போதுங் கூடவேயிருந்து பழகுகிற என் அருமைக் காதலிக்கும் கண்டுபிடிக்க முடியாதபடி அத்தனை அழகாக அந்த வேஷம் எனக்குப் பலித்திருந்ததைப்பற்றி இன்னமும் எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இதற்குள்ளாக என் மனைவியும் அங்கேவந்து, கீழேயுள்ள லாஸ்கார் என்பவனோடு சண்டையிட்டுக்கொண்டிருக்கிறசத்தம் என் காதிற்பட்டது. பட்டதும், 'இனி நாம் சும்மா இருப்பது சரியல்ல; போலீஸ்காரர்களை அழைத்துக்கொண்டுவந்தாலும் வருவாள். சோதனைபோடுங் காலத்தில் நம்முடைய உடுப்புக்கள் அகப்பட்டால் விபரீதமாக முடியும். ஆகையால், நாம் அவைகளை மறைத்துவிடவேண்டும்' என்று இவ்வளவு

தூரம் யோசனைசெய்து, படுக்கையறைக்குட் போய் அங்குள்ள சாளரத்தைத் திறந்தேன். திறந்த வேகத்தில் என் கைவிரல் நசுக்குண்டு, ரத்தவெள்ளம் பெருகிற்று. நான் அதையும் பொருட்படுத்தாமல் அங்கே கிடந்த என் சட்டையை யெடுத்தேன். தோற்பையிற்கிடந்த என் பிச்சைக் காசுகளையெல்லாம் நான் அதிற் போட்டிருந்தபடியால் அது மிகவும் பளுவாயிருந்தது. வெள்ளம் வடிந்தால் பார்த்து எடுத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் நான் அச்சட்டையைக் காசுடன் அந்த தேம்ஸ் (Thames) நதியில் எறிந்துவிட்டேன். அதுவும் உடனே அமிழ்ந்து மறைந்துவிட்டது. மற்றவைகளையும் இவ்வாறே மறைப்பதற்குள்ளாக, மேலே போலீஸ் சேவகர்கள் திடுதிடென்று வருகிறசப்தத்தைக் கேட்டு, நான் அவைகளை இருந்த இடத்திலேயே போட்டுவிட்டு அங்கோர் மூலையில், என்ன நடக்குமோ என்ற பயத்துடன் உட்கார்ந்துவிட்டேன். போலீஸ்காரர் என்னை, 'இவன்தான் அந்த ஹாதர்லி' என்று கண்டுபிடிக்கமாட்டாமல், 'இவன்தான் அந்த ஹாதர்லியைக் கொலைசெய்த மகாபாதகனாய் இருக்கவேண்டும்' என்று என்னைக் குற்றவாளியாகச் செய்த விஷயம் அப்போது எனக்குச் சிறிது ஆறுதலாக இருந்தது.

"ஹண்டர்! இதுவே என் சரித்திரம். ஆதியோடந்தமாக எல்லாவற்றையும் ஒன்று விடாமற் சொல்லிவிட்டேன். இயன்ற வரையில் இந்தப் பிச்சைக்கார வேஷத்துடனேயே இருந்து தப்பித்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணம் ஆதி முதற்கொண்டே எனக்கிருந்தமையால் நான் என் நிஜரூபத்தைக் காட்டித் தப்பித்துக் கொள்ளவில்லை. நான் சொல்லக்கூடியதெல்லாம் இவ்வளவுதான்" என்றான்.

"நீர் சொன்னதெல்லாம் சரியே. நீர் உம்முடைய மனைவிக்குக் காகிதம் ஒன்று எழுதி யனுப்பியிருக்கிறீரே. அது என்றைக்கு எழுதப்பட்டது?" என்று ஹண்டர் கேட்டான்.

"ஐயா! நான் அதைச் சொல்ல மறந்துவிட்டேன். மன்னிக்கவேண்டும். போலீஸ் சேவகர்களும் மற்றவர்களும் அந்த வீட்டைச் சோதனை போட்டுக்கொண்டிருக்குங் காலத்தில் நான் ஒருவருக்குந் தெரியாமல் கீழே போய், 'எனக்கு அபாயம் ஒன்று

மில்லை. என்னைப் பற்றிக் கவலைப்படாதே' என்று அவசரத்தில் ஒரு காகிதத்தைக் கிறுக்கி அதையும் என் மோதிரத்தையும் அந்த லாஸ்கார் என்பவனிடங் கொடுத்துத் தபாலிற் போடும்படி சொன்னேன்."

"அப்படியானல், அந்தக் கடிதம் நேற்றைக்குத் தானே வந்தது. இவ்வளவு தாமதத்திற்குக் காரணமென்ன?" என்று ஹண்டர் கேட்டான்.

"ஐயோ! நான் என்ன காரணத்தைச் சொல்லப்போகிறேன்? இவ்வளவு நாள் என் மனைவி என்ன பாடு பட்டாளோ? அதை நினைக்க நினைக்க எனக்கு நிரம்பவும் துக்கமாயிருக்கிறதே" என்று ஹாதர்லி அழத்தொடங்கினன்.

"ஹண்டர்! நான் சொல்வதைக் கேளும். அந்த லாஸ்கார் என்பவனைப் போலீஸார் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அவன் தன்னல் போட முடியாதென்றெண்ணி யாரிடத்திலாவது கொடுத்துப் போடச்சொல்லியிருப்பான். அந்த மனுஷ்யன் மறந்துபோய்ப் பிறகு இரண்டொரு தினங் கழித்து நினைத்துக்கொண்டு தபாலிற் போட்டிருக்கக் கூடும்" என்று இன்ஸ்பெக்டர் மோபர்லி சொன்னர்.

"நீர் சொல்வது சரிதான். அப்படித்தான் நடந்திருக்கக் கூடும். இது நிற்கட்டும். ஹாதர்லி! நீர் இவ்விதம் பிச்சையெடுத் துக்கொண்டேயிருக்கிறீரே. போலீஸார் உம்மைப் பிடித்து நியாய ஸ்தலத்துக்கு அனுப்பினதில்லையா?" என்று ஹண்டர் கேட்டான்.

அதற்கு ஹாதர்லி, "எத்தனையோ தரம் அபராதம் கொடுத் திருக்கிறேன். அபராதம் இரண்டு மூன்று பென்னிகள் கொடுப் பது எனக்கொரு பெரிதா?" என்றான்.

இதற்குள் மோபர்லி என்பவர், "இம்மட்டோடு நிற்கட்டும். ஹாதர்லியின் ரகஸ்யங்களை வெளியிடாமல் இருப்பதானல், நாளை முதற்கொண்டு ஹக்பூன் வெளிவரக் கூடாது. வெளிவந்தால் ஹாதர்லியும் சந்தியிலிழுக்கப்படுவார் என்பது நிச்சயம்" என்று சொன்னர்.

"தெய்வத்தின்மேல் ஆணை. இனி நான் வெளிவருகிறதே யில்லை. இவ்வளவு தூரம் சிரித்ததே போதுமானது. இன்னமும் தெருச் சிரிக்க வேண்டுமா?" என்று ஹாதர்லி சத்தியம் செய்தான்.

"நல்லது! நீர் போய்வாரும்" என்று ஹாதர்லியை அனுப்பி விட்டு, இன்ஸ்பெக்டர் மோபர்லி ஹெண்டரைப் பார்த்து, "ஐயா! தாங்கள் இவ்வளவு தூரம் சிரமமெடுத்துக் கொள்ளாத வரையில் ஹாதர்லியைக் கொன்றானென்று ஹாதர்லியையே; நாங்கள் கொலை செய்திருப்போம். தங்களால் எங்கள் கவுரவம் கெடாமற் காப்பாற்றப்பட்ட விஷயத்திற்கு நாங்கள் தங்கள்பால் என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றோம். இருக்கட்டும், தாங்கள் இதன் உண்மையை எவ்வாறு கண்டு பிடித்தீர்கள்?" என்று கேட்டார்.

"தலையணையின்மேல் உட்கார்ந்து கண்டுபிடித்தேன்" என்று பரிஹாஸமாகச் சொல்லிவிட்டு என்னைப் பார்த்து, "வெப்ஸ்டர்! வண்டியிலேறு. வேகமாய்ப் போனால் காப்பிசாப்பிட வீட்டுக்குப் போய்விடலாம்" என்று சொல்ல, நாங்களிருவரும் வண்டியிலேறிக்கொண்டு நிமிஷப் போதில் வீடு வந்து சேர்ந்தோம்.

பயங்கரமான படுகொலை.

ஒருநாள், ஆம், மே - 14'87-ல், நானும் என் மனைவியுமாய் உட்கார்ந்து வம்பளந்து கொண்டிருக்கையில், லையன்ஸ் (Lyons) என்னுமிடத்திலிருந்து ஒரு தந்தி வந்தது. நான் அதை ஆவலுடன் பிரித்துப் பார்த்தேன். டூலோங் ஹோட்டலில் (Hotel-Dulong) நண்பனை ஹண்டர் வியாதியுடன் படுத்துக்கொண்டிருப்பதாகக் கண்டிருந்தது. மிக்க விசாரத்துடன் நான் ஒன்றையுங் கவனியாமல் உடனே புறப்பட்டு இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் அவன் படுத்திருக்கு மிடத்திற்குச் சென்று பார்த்தேன். மிக்க பலஹீனத்துடன் பேசவும் சக்தியில்லாமல் படுத்துக் கொண்டிருந்தான். கையைப் பிடித்துப் பார்த்தபோது அபாயத்திற்கிடமான அறிகுறிகள் ஒன்றுமில்லையென்று தெரிந்து, நான் கொஞ்சம் ஆறுதலை யடைந்தேன். இருந்தாலும், வஜ்ர சரீரமான அவனது தேகம், கண்கொண்டு பார்க்க முடியாதபடி அவ்வளவு இளைத்துப்போயிருந்தது. நெதர்லண்டு ஸுமாட்ரா கம்பெனி (Netherland-Sumatra Company) யில் நடந்த ஒரு மோசக் கேசு ஸம்பந்தமாக இரண்டுமாத காலம் இராப்பகல் இடைவிடாமல், தினம் பதினைந்து மணிக்குக் குறையாமல், இரண்டொரு தடவைகளில் ஒரே தொடர்ச்சியாக ஐந்து நாள் வரையிலுங்கூட வேலை செய்வதென்றால், எப்படிப்பட்ட கல்லான தேகமாயிருந்தால்தான் என்ன, கரைந்துவிடும் என்பதில் ஆச்சரியமென்ன இருக்கிறது? 'ஹண்டர் கண்டுபிடித்துவிட்டான், ஹண்டர் மஹா புத்திமான், ஹண்டர் ஒருவன்தான் உள்ளபடி போலீஸ் வீரன் என்று சொல்லத்தக்கவன்' என்று இப்படி யெல்லாம் ஐரோப்பா கண்டம் முழுவதிலும் அவன் பெயர் முழங்கிக்கொண்டிருந்ததனால்தான் என்ன, ஹண்டரது அத்யற்புதமான புத்தி சாமர்த்தியத்தையும், தைரியத்தையும், புகழ்ந்து புகழ்ந்து அவன் இருக்கும் அறை நிறையத் தந்திகளும் கடிதங்களும் வந்து குவிந்துகொண்டே யிருந்ததனால்தான் என்ன, மூன்று தேசத்திலேயுள்ள போலீஸ்காரர்களெல்லாம் முயன்று பார்த்துக் கை

விட்ட ஒரு கேசைக் கண்டுபிடித்துவிட்டான் என்று மெச்சிக் கவர்ன்மெண்டார் நாலாயிரம் பவுன் அவனுக்குப் பரிசளித் திருந்ததனால்தான் என்ன, இவைகளினாலெல்லாம் அவனுக்குண் டான வியாதி சிறிதும் தணிவதாயில்லை.

நான் மூன்று நாள் வரையில் ஹண்டருடன் அங்கேயிருந்து, அவனுக்குக் கொஞ்சம் அனுகூலமானவுடன், அவனையும் அழைத் துக்கொண்டு எங்கள் இருப்பிடமாகிய ரொட்டிக் கிடங்குத் தெரு வுக்கு வந்தேன். ஒரு வாரத்திற்கெல்லாம் அவனுக்கு இருந்த வியாதி அடியோடு நீங்கிவிட்டது. என்றாலும், முன்னேயிருந்த பலமும் உற்சாகமும் அவனுக்குண்டாகவில்லை. பட்டணத்தை விட்டுக் குக்கிராமத்தில் சிலகாலம் வசித்தால் தேகாரோக்கியத் திற்கு நிரம்பவும் அனுகூலமா யிருக்குமென்று டாக்டர்கள் அபிப் பிராயப்பட்டார்கள். எனக்கும் அந்த மே மாதத்தில் வெளியூர் களிற்போய் வசிக்கவேண்டுமென்ற எண்ணம் இருந்தது. நான் எங்கே போகலாமென்று யோஜித்தேன். என்னிடம் ஆப்கானிஸ் தானத்தில் சிகிச்சை செய்துகொண்டவராகிய கர்னல் ஹேய்டர் (Colonel Hayter) என்ற நண்பரொருவர், தாமிருக்கிற ரீகேட்டு (Reigate) என்னு மிடத்திற்கு என்னை வரும்படி அடிக்கடி நிர்ப்பந்தித்து எழுதிக்கொண்டிருந்தபடியால், அங்கே போவது சௌகரியமாயிருக்குமென்று எனக்குத் தோன்றிற்று. 'வருவதா யிருந்தால் ஹண்டரையும், அவருக்கு இஷ்டமிருக்கும்பக்ஷத்தில், அழைத்துக்கொண்டுவரப் பிரார்த்திக்கிறேன்' என்று அக் கர்னல் எழுதியிருந்தபடியால், நான் என் நண்பனையும் அங்கே அழைத் துக்கொண்டு போவது நலமாயிருக்குமென்று கருதி, இந்த அபிப் பிராயத்தை ஹண்டரிடம் வெளியிட்டேன். அவனும் அதற்குச் சம்மதிக்கவே நாங்களிருவரும் நாலைந்து தினங்களுக்குள்ளாக ஹேய்டர் இருக்குமிடத்திற்குச் சென்றோம். எங்களைக் கண்ட தும் அவர் பரம ஸந்தோஷத்தை யடைந்து, மிகப் பிரீதியுடன் எங்களை யுபசரித்தார். கர்னல் ஹேய்டர் என்பவர் வயது சென்ற ஒரு சிப்பாய். விசேஷ லோகானுபவம் உள்ளவர். மனுஷ்யர் களின் தராதரத்தைப் பார்த்தவுடனேயே அறிந்துகொள்ளக் கூடிய புத்திமான். ஆகையால், நான் எதிர்பார்த்திருந்தபடி,

அவர் என் சிநேகிதனை ஹண்டருடன், அவன் அவருக்குப் புதிதாயிருந்தாலும், வெகுநாட் பழகியவர்போல உரிமை பாராட்டி அளவளாவிப் பேசத்தொடங்கினர். ஹண்டருக்கும் ஹேய்டரின் ஸ்வபாவம் நன்றாகப் பிடித்திருந்தது. இருவரும் ஓயாமல் பற்பல பொதுவான விஷயங்களைப்பற்றி எந்நேரமும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

நாங்கள் அங்கே போன அன்றைத்தினம் சாயங்காலம், சாப்பாட்டுக்குப் பிறகு கர்னலின் துப்பாக்கி வைத்திருந்த அறையில் பேசிக் கொண்டிருந்தோம். ஹண்டர் ஒரு ஸோபாவில் (Sofa) சாய்ந்துகொண்டிருந்தான். நானும் ஹேய்டரும் அவரது ஆயுதங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தோம். இப்படியிருக்கையில் திடீரென்று அந்தக் கர்னல், "இந்தத் துப்பாக்கியை மாத்திரம் மேன்மாடியில் கொண்டுபோய் வைத்துக்கொள்வோம். ஏதாவது பயங்கரமான காரியங்கள் நடப்பதாயிருந்தால், இது அந்த நேரத்துக்கு உதவியாயிருக்குமல்லவா?" என்று சொல்லி ஒரு கைத் துப்பாக்கியைக் கையிலெடுத்தார்.

"பயங்கரமா? ஓ! இப்போது அதற்கென்ன பிரஸக்தி?" என்று நான் கேட்டேன்.

"ஆம். அடிக்கடி இந்தப் பக்கங்களில் திருட்டுக்கள் அஸாதாரணமாய் நடந்துகொண்டிருக்கின்றன. சென்ற திங்கட்கிழமையன்றுகூட இந்தவூர்ப் பெரியதனக்காரர்களி லொருவராகிய ஆக்டன் (Acton) என்பவர் வீட்டிற் கன்னம் வைத்தார்களாம். சொத்துக்கள் அதிகமாகக் களவு போகவில்லையென்று கேள்வி. திருடர்கள் இன்னும் அகப்படவில்லை யென்று சொல்லிக்கொண்டார்கள்."

"துப்பு ஒன்றும் அகப்படவில்லையாமோ?" என்று ஹண்டர் அந்தக் கர்னலைப் பார்த்து ஆவலுடன் கேட்டான்.

"இன்னும் ஒன்றுகூட அகப்படவில்லையாம். எப்படியிருந்தால்தான் என்ன? இந்த மாதிரியான திருட்டுக்கள் இப்படிப்பட்ட கிராமாந்தரங்களில் சர்வ சாதாரணமாக எப்போதும் நடந்துகொண்டேதானிருக்கும். மேலும், நான் அந்த ஆக்டன் வீட்டில் நடந்ததாகச் சொன்ன கன்னக் களவானது, ஹண்டர்!

உம்முடைய பரிசீலனைக்குக் கொண்டுவரக்கூடிய அவ்வளவு பெரிய களவல்ல" என்றார்.

கர்னல் இவ்வாறு தன் சாமர்த்தியத்தைப் பாராட்டியுரைத்த தில் தனக்கு விருப்பமில்லையென்று சொன்னாலும், அவனுடைய புன்னகையை நோக்கும்போது, ஹண்டருக்குக் கர்னல் சொன்ன வாக்கியம் கர்ணாமிர்தமாக இருந்திருக்க வேண்டுமெனத் தோன்றிற்று.

"அந்தக் களவில் விசேஷமொன்றும் இல்லையா?" என்று ஹண்டர் கேட்டான்.

"என் புத்திக்கேற்ப விசேஷமிருப்பதாகத் தோன்றவில்லை. வந்த திருடர்கள் வேறெங்கும் போகாமல் முதலெடுப்பில் வெகு சிரமப்பட்டுப் புத்தக சாலைக்குட் புகுந்து, அங்குள்ள அலமாரியைத் திறந்து பார்த்திருக்கிறார்கள். அதிலென்ன, பணமா? காசா? ஒன்றுங் கிடைக்கவில்லை. 'அகப்பட்டதைச் சுருட்டடா ஆண்டியப்பா' என்ற பழமொழிக் கிணங்க ஹோமர் (Homer) சரித்திர புஸ்தக மொன்று, ஒரு கட்டு மெழுகுவர்த்தி, ஒரு கண்ணாடி மைக்கூடு, ஒரு சுத்திரிக்கோல், ஒரு நூல் பந்து, இவைகளை யெடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். 'விடியா மூஞ்சி வேலைக்குப் போனால், வேலை யகப்பட்டாலும் கூலி யகப்படாது' என்றபடி சரியாய்ப் போய்விட்டது. எதிலும் அதிர்ஷ்டமொன்று தனியாயிருக்கிறதல்லவா?" என்றார்.

"திருடுவதென்றால் இப்படிப்பார்த்தல்லவா திருடவேண்டும். பேஷ், கைகாரத் திருடர்கள்!" என்றேன்.

"போகட்டும், இவ்வளவாவது அகப்பட்டதே. அவர்களுடைய அதிர்ஷ்டத்திற்கு இதுகூடக் கிடைத்திருக்க நியாயமில்லை" என்று கர்னல் சொன்னார்.

"இதைக் கேட்டதும் ஹண்டர் ஸோபாவை விட்டுச் சிறிது எழுந்திருந்து, "உங்களுடைய புத்திக்குப் பட்டதை நீங்கள் சொல்லுகிறீர்கள். போலீஸ்காரர்களை விசாரித்தாலல்லவா உள் விவரங்களெல்லாம் தெரியும். ஏன்? என்னுடைய அபிப்பிராயத்திலுங் கூட இது தெளிவாய் —" என்று மேலே சொல்லப் போனான்.

அதற்குள்ளாக நான் அவன் வாயைப் பொத்தி, "ஹண்டர்! நாம் இங்கே களவு கண்டு பிடிக்கவா வந்திருக்கிறோம்? 'சுவர்க்கம் போயும் கஷ்கத்தில் கந்தை' என்கிற விதமாகவல்லவா இருக்கிறது. பத்து நாள், எட்டு நாள், இருக்கிறவரையில் கவலையின்றிச் சுகமாக இருந்துவிட்டுப் போவோமென்றால், இங்கேயுமா ஒரு சனியனை விலைக்கு வாங்கவேண்டும்? நெதர்லண்டு-ஸுமாட்ரா கம்பெனியிற் பட்ட பாடு போதாதா? உடம்பு உருப்படியாவதற்கு இன்னும் ஆறுமாதம் பிடிக்குமே. அதற்குள்ளாக, 'எங்கே கேசு?' என்று பறக்கிறாயே. போதும் படுத்துக்கொள்" என்றேன்.

ஹண்டர், நான் இவ்வாறு அதட்டிப் பேசவும், "வாஸ்தவந்தான். வீண் விவகாரம் எதற்கு? மேலும் இந்தக் கேஸிலும் விசேஷமாக எதுவும் நடந்திருக்கக் காரணமில்லையென்று தெரிகிறது. ஆனால், ஒன்று மாத்திரம் நிச்சயம். இந்தத் திருடர்கள் பெட்டியடிக்க வந்தவர்களில்லை. அலமாரியைத் திறந்து பார்க்கத்தான் வந்திருக்கவேண்டும். வந்த காரியம் கைகூடிற்றோ இல்லையோ அது தெய்வத்துக்குத்தான் வெளிச்சம். நான் நினைக்கிறபடி இருந்தால் இந்தத் திருட்டு இவ்வளவோடு போகாது. உடம்பு சௌக்கியமில்லாத காலத்தில் இந்த வம்புப் பேச்சுப் பேசுவதில்தான் பிரயோஜனமென்ன? டாக்டரும் கோபித்துக் கொள்ளுகிறார். 'எத்தைச் சொன்னான் பரிஹாரி, அத்தைக் கேட்டான் நோயாளி' என்றபடி நான் வைத்தியர் சொன்னதைக் கேட்கவேண்டியவன் தானே" என்று சொல்லிவிட்டு, அந்தப் பேச்சை அவ்வளவோடு விட்டுவிட்டான்.

எங்கள் விரக்தியெல்லாம் மறுநாட் காலையில், எருது பரதேசம் போன கதையாய் முடிந்துவிட்டது. ஹண்டர் சொன்னபடி அந்தக் கன்னக்களவு அவ்வளவோடு ஒழியவில்லை. அதிலும் பெரிதான ஒரு கேசு உண்டாய்விட்டது. அதில் ஹண்டரைப் பிரவேசிக்கவொட்டாமல் தடுப்பதற்கும் என்னால் ஆகாதுபோயிருந்தது.

நாங்கள் என்ன உத்தேசத்தோடு க்ஷக்கிராம வாஸத்திற்கு வந்தோமோ, அந்த உத்தேசம் அடியோடு பலிக்கவில்லை. காலை

யில் நாங்கள் மூவரும் காப்பி சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது, கர்னலின் சமையற்காரன் திடீரென்று கதவைத் திறந்துகொண்டு உள்ளேவந்து மிக்க இரைப்புடன், "கேட்டீர்களா சமாசாரத்தை நேற்றிராத்திரி கன்னிங்ஹாம் (Cunningham) என்பவர் வீட்டிலே?" என்றான்.

"களவு நடந்துவிட்டதோ?" என்று கர்னல் கேட்டார்.

"கொலை, ஐயா! கொலை!!" என்றான்.

"ஐயோ, தெய்வமே! கொலையுண்டது யாரப்பா? கன்னிங்ஹாமா, அவரது மகனா?"

"அவர்கள் இரண்டுபேருமல்ல, ஐயா!— கொலையுண்டது வண்டிக்காரனாகிய வில்லியம் (Willam) என்பவன். மாரைப் பார்த்துச் சுட்டுவிட்டான். ஐயோ! அவன் கிடக்கிற அலங்கோலத்தைக் கண் கொண்டு பார்க்க முடியாதே."

"யார் கொன்றார்கள், தெரியுமா?"

"திருட்டுப் பயல்கள் தாம் சுட்டுப் போட்டிருப்பார்கள். அவர்கள் போன இடந்தான் தெரியவில்லை. அவர்கள் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வரப்பார்க்கையில், இந்த வில்லியம் என்பவன், ஐயோ! சும்மா இருக்கக் கூடாதா, அந்தத் திருடர்களைப் பிடிக்கப்போனானாம். திருட்டுப் பயல்கள் எல்லாத்துக்கும் துணிந்தவர்கள். அவர்களைத் தனியாக எதிர்த்துப் பிடிக்க யாராலுமே முடியாது. இந்த முட்டாள் வில்லியம், அவனைச் சொல்வதிற் பயனென்ன, அவனுக்கு அவ்வளவுதான் ஆயுசு,— அது தெரியாமல் அவர்களைப் பிடிக்கப் போனபோது அத்திருடர்களிலொருவன் துப்பாக்கியால் பொட்டென்று சுட்டுப் போட்டுவிட்டான். அவன் தாயார் ஒன்றுந் தெரியாத கிழவி. மகனைச் சாகக் கொடுத்துவிட்டுத் தவிப்பாய்த் தவிக்கிறாள். ஆபத்தெல்லாம் ஏழைக்குத்தானே வருகிறது."

"கதை யெல்லாம் இருக்கட்டும். எப்பொழுது கொன்றானாம்?"

"நேற்றிராத்திரி, பன்னிரண்டு மணி சுமாருக்கு."

"நல்லது. நாம் போய்ப் பார்ப்போம்" என்று சொல்லிவிட்டுக் கையிலிருந்த காப்பியைச் சாப்பிட ஆரம்பித்தார். அந்தச்

சமையற்காரன் அப்புறம் சென்ற பிறகு, "இது நிரம்பவும் விசன கரமான காரியம். கன்னிங்ஹாம் என்பவர் இந்த ஊருக்குத் தலைமையான மனுஷ்யர். நல்ல கண்ணியமுள்ளவர். வெகுகால மாகத் தம்மிடத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறவனாதலால் அந்த வில்லியம் என்பவனிடத்தில் கன்னிங்ஹாம் தம் முழுப் பிராணனையும் வைத்திருந்தார். ஐயோ, பாவம்! இப்பொழுது நிரம்பவும் வருத்தப்படுவார். ஆக்டன் வீட்டிற் கன்னம் வைத்த பயல்கள்தாம் வந்திருப்பார்கள்."

"கத்திரிக்கோலையும் புஸ்தகத்தையும் கொள்ளை யடித்துக் கொண்டு போனார்களே, அந்தப் பக்காத் திருடர்களா? இருந் தாலும் இருக்கலாம்" என்று ஹண்டர் விநயமாய்ப் பதில் சொன்னான்.

"ஏன் இருக்கக் கூடாது?"

"ஹேய்டர்! ஒருவிஷயம் கவனிக்கவேண்டும். திருடர்கள் எப்போதும் ஒரே இடத்திலேயே திருடமாட்டார்கள். இன்றைக்கு ஒரு ஊர், நாளைக்கு ஒரு ஊர் என்றுதான் பார்த்துக் கொண்டு போவார்கள். ஆக்டன் வீட்டில் இப்போது தான் திருட்டு நடந்ததென்று சொல்லுகிறீர். அதற்குள்ளாக மறுபடியும் அதே திருடர்கள் இந்த இடத்தில் திருட வருவார்களென்று என் புத்திக்குத் தோற்றவில்லை."

"ஹண்டர்! பெரிய திருடர்கள் விஷயத்தில் நீர் சொல்வதெல்லாம் சரிதான். இவர்கள், அக்கம் பக்கம் நாட்டுப்புறத்திலுள்ள சாமானியமான திருடர்கள். போயும் போயும் அவர்கள் இரண்டு பேருந்தாம் இவ்வூரில் கொஞ்சம் பசையுள்ளவர்கள் என்று தெரிந்து, கிடைத்தவரைக்கும் ஆதாயம் என்று பார்த்திருக்கிறார்கள். ஒன்றுங் கிடைக்கவில்லை."

"ஆனால், அவர் பணக்காரர்தாமோ?"

"ஆம். அவரும், ஆக்டன் என்பவருந்தாம் இவ்வூருக்கே பெரிய மனுஷ்யர்கள். ஆனால், இவ்விருவர்களும் தாயாதிகள். இவர்களுக்குள் ஒரு பெரிய வியாச்சியங்கூட இருக்கிறது. இரண்டு பக்கத்திலும் பெரிய பெரிய வக்கீல்கள் வந்து வாதிக்கிறார்கள். 'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக் கொண்டாட்டம்' என்றபடி இவர்கள்

இரண்டுபேருஞ் சண்டை போட்டுக்கொள்ள, வக்கீலென்றும் குமாஸ்தாவென்றும் வழியிற் போகிறவர்கள் எல்லாரும் இதுதான் சமயம் என்று அகப்பட்டவரையிற் கறந்து கொள்ளுகிறார்கள். வியாச்சியம் ஜயித்தால், ஆக்டனுக்குக் கன்னிங்ஹாம் சொத்தில் சரிபாதி கிடைக்குமாம். உனக்கு நான் தோற்றேனா என்று இரண்டுபேரும் போட்டி போட்டுக்கொண்டு கூசாமல் பணத்தை வாரி இறைக்கிறார்கள். குரங்கு அப்பம் பங்கிட்ட கதையாய் முடிவில் சொத்தையெல்லாம் வக்கீல்கள் சாப்பிட்டுவிடப் போகிறார்கள்."

"திருடர்கள் நாட்டுப்புறத்தார்களாக இருக்கும்பக்ஷத்தில் அவர்களைக் கண்டுபிடிப்பது ஒரு பிரயாசமான காரியமில்லை. வெப்ஸ்டர்! என்ன பார்க்கிறாய்? நீ அனுமதி கொடுத்தாலல்லது நான் இதிற் பிரவேசிக்கப்போகிறதில்லை. அது மாத்திரம் நிச்சயந்தான்" என்று ஹண்டர் சொன்னான்.

இவ்விதம் நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே, "ஐயா! இன்ஸ்பெக்டர் பாரஸ்டர் (Forrester) வந்திருக்கின்றார், பார்க்க விரும்புகிறார்" என்று சொல்லிக்கொண்டே கர்னலின் சமையற்காரன் உள்ளே நுழைந்தான். "நல்லது" என்று கூடத்திற்குள் வந்தோம். அதற்குள் சுருசுருப்பும் நல்ல லக்ஷணமுமுள்ள சிறு பிள்ளையாகிய அந்த இன்ஸ்பெக்டர் நாங்களிருக்கும் கூடத்திற்குள் வந்து, வணக்கத்துடன், "கர்னல்! நான் உங்கள் பேச்சுக்கு இடையூறாக அனுமதியின்றித் திடீரென உள்ளேவந்ததைப் பற்றி என்னை மன்னிக்கவேண்டுகின்றேன். லண்டனிலிருந்து ஹண்டர் இங்கே வந்திருக்கிறாராமே?" என்று கேட்டார்.

"ஆம். அதோ நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார்" என்று ஹண்டரைச் சுட்டிக் காட்டினார். இன்ஸ்பெக்டர் ஹண்டருக்கு வந்தனம் செய்து, "தாங்கள் இந்தச் சமயம் இங்கு இருக்கும்படி நேர்ந்தது எங்களுடைய பாக்கியந்தான். தயைசெய்து தாங்கள் கொஞ்சம் அப்படி வரலாமா?" என்றார்.

ஹண்டர் என்னைப் பார்த்துப் புன்னகையுடன். "வெப்ஸ்டர்! இப்போது என்ன சொல்லுகிறாய்? நாம் எண்ணின படி சும்மா இருக்கமுடியாதுபோல் தோற்றுகிறதே" என்றான்.

நான் இனிப்பேசுவதில் பயனில்லை யென்று சும்மா இருந்து விட்டேன். ஹண்டர் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, " இன்ஸ் பெக்டர் ! நீங்கள் வருவதற்கு முன்னெல்லாம் நாங்கள் இந்தவிஷ யத்தைப்பற்றித்தான்வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தோம். உங்களுக்குப் புதிதாக இன்னும் சமாசாரங்கள் கிடைத்திருந்தால் சொல்லுங்கள், கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு வழக்கம்போலத் தன் நாற்காலியிற் சாய்ந்துகொண்டான். அவன் அவ்வாறு சாய்ந்த மாதிரியிலிருந்து, கேசில் ஒன்றுமில்லை யென்று நான் நினைத்துக்கொண்டேன்.

" ஆக்டன் வீட்டில் நடந்த திருட்டைப் பற்றித்தான் துப் புக்களொன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்தக் கொலைக் கேசு விஷயத்திலோ உளவுகள் அநேக மிருக்கின்றன. இருக்கிற இந்த உளவுகளைக்கொண்டு கூடியவரையில் முயன்று பார்த்தால் கேசைக் கண்டுபிடித்து விடலாமென்று நினைக்கிறேன். ஆக்டன் வீட்டிற்கு வந்தவர்கள்தாம் இங்கேயும் வந்திருக்கிறார்கள். அது மட்டும் நிச்சயம். பேர்வழியையுங் கண்ணால் கண்டார்களாம்."

" ஆ! அப்படியா ?"

" ஆம். ஆனால், அவன் வண்டிக்காரனாகிய வில்லியம் கிர் வான் (William kirwan) என்பவனைச் சுட்டவுடன் ஒரு மான் குட்டியைப் போல அவ்வளவு வேகமாகத் தாவிக்குவித்து ஓடிப் போய்விட்டானும். கன்னிங்ஹாம் அவரது படுக்கையறையின் பலகணியின் வழியாகப் பார்த்தாராம். அவரது குமாரராகிய ஆலெக் கன்னிங்ஹாம் (Alec Cunningham) என்பவர் வீட்டின் புழைக்கடைப் பக்கத்திலிருந்து பார்த்தாராம். இந்தக் கொலை நடக்கும்போது பன்னிரண்டடிக்கப் பதினைந்து நிமிஷங்களிருக் குமாம். கன்னிங்ஹாம் அப்பொழுதுதான் படுக்கைக்குப் போனு ராம். அவர் குமாரர் உடுப்புப்போட்டுக் கொள்ளும் அறையிலுட் கார்ந்து சுருட்டுப்பிடித்துக் கொண்டிருந்தாராம். வண்டிக்காரனு கிய வில்லியம், " திருடன், திருடன்!!" என்று இரைந்து கூக் குரலிட்ட சத்தம் அவ்விரண்டுபேர்களுக்கும் நன்றாகக் கேட்ட தாம். உடனே ஆலெக் என்பவர் அது என்ன சமாசாரம் என்று பார்ப்பதற்காகக் கொல்லைப்புறமாக ஓடினாராம். சாயங்காலம் நன்

ருகச் சார்த்தித் தாளிடப்பட்டிருந்த புழைக்கடைக் கதவு திறந்து கிடந்ததாம். கொல்லைப்புறவாசலின் படிக்கட்டில் நின்றுகொண்டு பார்க்கையில், அங்கே இரண்டுபேர்கள் கட்டிப்புரண்டு சண்டையிட்டுக்கொண்டிருப்பது தெரிந்ததாம். சகாயத்திற்கு யாரையாவது இன்னும் நாலுபேர்களை அழைத்துக்கொண்டு வருவோம் என்று எண்ணித் திரும்புகையில், 'டப்' என்று ஒரு துப்பாக்கிச் சத்தம் கேட்டதாம். வந்த திருடன் தோட்டத்தின் வேலியைத் தாண்டிக் குதித்து ஓடிவிட்டானும். கன்னிங்ஹாம் தம் படுக்கையறையில் இருந்தபடியே அவன் சாலையின் பக்கமாய்த் திரும்பிக் கண்ணுக்கு மறைகிறவரையில் நெடுந்தூரம் ஓடிக்கொண்டிருந்ததைப் பார்த்தாராம். ஆலெக் மாத்திரம் தொடர்ந்து ஓடியிருந்தால் திருடனைப் பிடித்திருக்கலாம். அவர், கீழே விழுந்து கிடந்த மனுஷ்யனுக்கு உடனே ஏதாவது சிகிச்சைசெய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் தங்கிவிட்டாராம். ஆனதால், அந்தத் துஷ்டன் தப்பித்துக் கொண்டுவிட்டான். சுடப்பட்ட மனுஷ்யனும் பிழைத்தபாடில்லை. இருதயப் பிரதேசத்தைப் பார்த்து அடித்துவிட்டபடியால் அவன் அந்தக்ஷணமே இறந்துவிட்டான். காரியம் இப்படி இருவிதத்திலும் அஸந்தர்ப்பமாய் முடிந்துவிட்டது. ஓடிப்போன திருடன் அதிக உயரமாகவும் குள்ளமாகவுமில்லாமல் நடுத்தரமாக இருந்தானும். கறுப்புச்சட்டை போட்டுக்கொண்டிருந்தானும். கீச்சுக்குரலாம். வண்டிக்காரனோடு கட்டிப்புரளும்போது, "விட்டுவிடு, விட்டுவிடு, இல்லையோ உன்னைச் சுட்டுக்கொன்றுவிடுவேன்" என்று கீச்சுக்குரலாகச் சொன்னது தமக்கு ஞாபகமிருக்கிறதென்று ஆலெக் சொல்லுகிறார். அகப்பட்ட உளவுகள் இவ்வளவுதான். வந்தவன் உள்ளூர்ப் பேர்வழியாக இல்லாமல் அயலூர்ப் பேர்வழியாக மாத்திரம் இருந்தால் இந்த அடையாளங்களைக்கொண்டு சீக்கிரம் கண்டுபிடித்து விடலாம் என்று நினைக்கிறேன்" என்று இன்ஸ்பெக்டர் சொன்னார்.

"வில்லியம் அங்கே என்ன செய்துகொண்டிருந்தானும்? இறக்குந் தருணத்தில் அவன் ஏதாவது சொன்னனை?" என்று ஹண்டர் கேட்டான்.

"ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையாம். அவனும் அவன் தாயாரும் பக்கத்திற் குடியிருப்பவர்களாம். இந்த வில்லியம்

தன் யஜமானனிடத்தில் உள்ளபடி விசுவாசமுள்ளவனுதலால், முன் ஜாக்கிரதையாக, எல்லாம் சரியாயிருக்கிறதாவென்று பார்ப்பதற்காக வீடுமுழுமையும் சுற்றிப்பார்த்திருக்கிறுன். ஆக்டன் வீட்டில் திருட்டு நடந்தது முதல் எல்லாருமே உஷாராக இருந்து கொண்டிருந்தார்கள். வில்லியம் கொல்லைப்புறம் போனசமயமும் திருடன் கதவைத்திறந்துகொண்டு உள்ளே புகுந்தசமயமும் ஒத்திருந்த படியால் இருவரும் கட்டிப்புரண்டிருக்கிறுர்கள். இதைத் தவிர வேறுவிதமாக நடந்திருக்குமென்று நினைப்பதற்கு ஆதாரங்கள் ஒன்றுமில்லை" என்று இன்ஸ்பெக்டர் பாரஸ்டர் சொன்னுர்.

"அவன் வெளியே புறப்படும்போது எங்கே போவதாகத் தன் தாயாரிடம் சொல்லிப் போனுனும்?"

"அவனது வீட்டில் அவன் தாய் ஒருத்திதானிருக்கிறுள். அவளும் கிழவி. செவிடு. எவ்வளவு உரத்திச் சொன்னுலும் அவளுக்குக் காது கேட்காது. மேலும், மகன் கொலையுண்டதிலிருந்து அவள் சித்த சுவாதீனமில்லாதவளா யிருக்கின்றுள். எப்போதுமே அவள் தட்டுக்கெட்டுப் பேசுகிறவள். இப்போதோ சொல்லவேண்டியதேயில்லை. அவளைக் கேட்டதில் அவள் தனக்கு ஒன்றுந் தெரியாது என்கிறுள். ஆனுலும், ஒரு முக்கியமான தடையம் மட்டும் அகப்பட்டிருக்கின்றது. இதோ பாருங்கள்" என்று சொல்லி, ஒரு கிழிந்த துண்டுக் கடிதத்தை நோட்டுப் புஸ்தகத்திலிருந்து எடுத்துப் "பிரித்து, இது செத்துப்போன அந்த வில்லியம் என்பவனுடைய கட்டை விரலினிடுக்கில் இருந்தது. இது ஒரு பெரிய காகிதத்திலிருந்து கிழிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. தயை செய்து இதை வாசித்துப் பாருங்கள். இதிற் குறிப்பிட்டிருக்கிற நேரமும், வில்லியம் கொலையுண்ட நேரமும் ஒன்றுயிருக்கின்றது. ஆதலால், அவனை வரவழைத்தே கொன்றதாகவும், கொன்றவனே இக் கடிதத்தின் மற்றைப் பாகத்தையுங் கிழித்தெடுத்திருக்கவேண்டு மென்பதாகவும் ஸ்பஷ்டமாய்த் தெரிகின்றது" என்று அந்தத் துண்டை ஹண்டர் கையிற் கொடுத்தார்.

ஹண்டர் அந்தக் காகிதத்தை யெடுத்து வைத்துக்கொண்டு நெடுநேரம் வரையில் ஆழ்ந்து யோஜித்துக் கொண்டிருந்தான்.

அதில் என்ன எழுதப்பட்டிருந்ததென்றால், 'பதினொன்றே முக்காலுக்கே சரியாக, உனக்கு மிகவும் உப, தெரியவேண்டாம்' என்பதுதான். இந்த மூன்றும் தனித்தனி மூன்று வரிகளிற் காணப்பட்ட விஷயங்கள்.

இன்ஸ்பெக்டர் பாரஸ்டர் திரும்பவும் ஹண்டரைப் பார்த்து, "இந்தக் கடிதமானது, இதிற் கண்டிருக்கிறபடி பதினொன்றே முக்காலுக்கே சரியாக இங்கே வரும்படி வண்டிக்காரனுக்கு எழுதப்பட்ட கடிதமென்று நாம் வைத்துக்கொண்டு பார்த்தால், இந்த வில்லியம் கீர்வான் என்பவனே திருடனுக்கு உடந்தையாய் இருந்திருக்க வேண்டுமென்பதும், இவனே கதவைத் திறந்துவிட்டிருக்கவேண்டு மென்பதும், ஏதோ எதிர் பாராத மனஸ்தாபத்தாலோ, அல்லது ஆள்மாருட்டத்தாலோ இருவருக்கும் சண்டை நேர அதில் இவன் சுடப்பட்டிருக்க வேண்டுமென்பதும் மிகத் தெளிவாய்த் தெரிகிறது" என்று சொன்னார்.

"நிரம்பவும் விசித்திரமான கையெழுத்தா யிருக்கின்றது. கூடியவரையில் சாமர்த்தியமாகத்தான் வேலை செய்திருக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டுத் திரும்பவும் கொஞ்ச நேரம் ஆலோசனை செய்து, "இன்ஸ்பெக்டர்! நீர் சொன்னபடி திருடனுக்கும் வண்டிக்காரனுக்கும் முன்னதாகவே பேச்சு நடந்திருக்கிறதென்றும், இது அந்த வேலைக்காரனுக்குத் திருடன் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியென்றும் கொள்வது அவ்வளவு சரியானதாக எனக்குத் தோற்றவில்லை. அடியோடு அப்படி நடந்திருக்க முடியாதென்றும் நான் சொல்லத் துணியமாட்டேன். ஆனால், இந்தக் கையெழுத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடியது"— என்று பின்னரும் ஆலோசனையில் ஆழ்ந்துவிட்டான். கொஞ்ச நேரங் கழித்து நான் அவனைப் பார்த்தபோது, அவனுடைய முகத்தில் ஒருவித விகாசமும், கண்ணில் ஒருவிதமான நிச்சயக் குறிப்பும் காணப்பட்டன. ஹண்டர் தனக்கு உடம்பு அசௌகரியமாயிருந்ததற்கு முன்னுள்ள பரபரப்போடும் ஊக்கத்தோடும் எழுந்திருந்து, "என்ன விஷயம் என்பதைப் பிறகு சொல்லுகிறேன். நான் இந்தக் கேசு சம்பந்தமாகவுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் ஆரம்பமுதற்கொண்டே கவனித்துப்பார்க்கவிரும்புகிறேன். கேசு

என்னவோ அற்பமாக இருந்தாலும் இதில் ஏதோ ஒரு புதுமை யிருக்கவேண்டுமென்று எனக்குத்தோற்றுகிறது" என்று சொல்லி விட்டுக் கர்னலைப் பார்த்து, "ஹேய்டர்! நான் இப்போதே இன்ஸ்பெக்டருடன் போய் இரண்டொரு விஷயங்களை நேரில் பார்த்து வரவேண்டியவனாய் இருக்கிறேன். எனக்கு உத்திரவு கொடுங்கள். வெப்ஸ்டர் இங்கேயே யிருக்கட்டும். என்னுடைய ஆலோசனை யெப்படி யிருக்கிறதென்று பார்த்துவிட்டு அரைமணி நேரத்திற்குள்ளாகவே நான் வந்துவிடுகிறேன்" என்று சொல்லி அவரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு இன்ஸ்பெக்டருடன் போய் விட்டான்.

ஹண்டர் போய் ஒன்றரைமணி நேரங் கழித்து, இன்ஸ் பெக்டர் மாத்திரம் தனியே திரும்பிவந்து, "ஹண்டர் ஊருக்கு வெளியே வயற்காட்டில் உலாவிக்கொண்டிருக்கிறார். நாம் நான்கு பேரும் ஒன்றாய் அந்த வீட்டிற்குப் போகவேண்டுமாம். உங்க ளையுங் கூட்டிவரச் சொன்னார்" என்றார்.

"கன்னிங்ஹாம் வீட்டிற்கா?"

"ஆம். அந்த வீட்டிற்குத்தான்."

"எதற்காக?"

இன்ஸ்பெக்டர் சிரித்துக்கொண்டு, "இந்த விஷயம் நமக் குள் இருக்கட்டும். அவர் நடவடிக்கைகளையெல்லாம் பார்த்தால், அவருக்கு வியாதி இன்னும் பூரணமாகக் குணப்படவில்லை யென்றுதான் தோன்றுகிறது. என்னவோ, பைத்தியங்கொண் டவர்போல இருக்கிறார்" என்றார்.

"அதற்காக நீங்கள் பயப்படவும் வேண்டாம். அனுதாபப் படவும் வேண்டாம். அவர் காரியங்களெல்லாம் அப்படித்தான் இருக்கும். ஆயினும், கடைசியில் அந்தப் பைத்தியங் காரியப் பைத்தியமாக முடியுமென்பதில் தடையில்லை. அவர் செய்யும் ஒவ்வொரு காரியமும் ஒரு பிரயோஜனத்தை நாடியதாகத்தான் இருக்குமென்பதை நான் என் அனுபவஸித்தமாகக் கண்டறிந்தி ருக்கிறேன்" என்று நான் சொன்னேன்.

"என்னவோ என் மனத்திற்பட்டதை நான் சொன்னேன். தவறிருந்தாலும் மன்னித்துக் கொள்ளுங்கள். சரி, அவர் துரிதப்படுகிறார், வருவதாய் இருந்தால், சீக்கிரமாக வாருங்கள் போவோம்."

அப்படியே நாங்கள் புறப்பட்டு ஹண்டரிருக்குமிடத்திற்குச் சென்றோம். அவன் இன்ஸ்பெக்டர் சொன்னபடியே சட்டைப்பையிற் கைகளைப் போட்டுக்கொண்டு தலைகுனிந்த வண்ணமாய் அந்த வயல் வெளியில் அப்போதும் உலாத்திக்கொண்டிருந்தான்.

"விஷயங்கள் ஒன்றிற்குமேலொன்று வேடிக்கையாகத்தானிருக்கிறது. வெப்ஸ்டர்! நம்முடைய கிராமவாஸமும் வீணாய்ப் போகவில்லை. ஜயத்தோடுதான் இருக்கிறது. மொத்தத்தில் இன்றைத்தினம் ஒரு நல்ல சுபதினந்தான்."

"கொலை நடந்த ஸ்தலத்தைப் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்?" என்று ஹண்டரைப் பார்த்துக் கர்னல் ஹேய்டர் கேட்டார்.

"ஆம், நானும் இன்ஸ்பெக்டரும் போய்ப் பார்த்துவிட்டு வந்தோம்."

"என்ன, ஏதாவது பலனுண்டா?"

"அநேக ஆச்சரியமான காரியங்கள் நடந்திருப்பதாகத் தெரிந்துகொண்டோம். அவைகளை நாம் போம்போது சொல்லுகிறேன். முதலில் நாங்கள் அதிர்ஷ்டஹீனனான அந்த வண்டிக்காரனுடைய பிரேதத்தைப் பார்த்தோம். கன்னிங்ஹாமும் அவர் குமாரரும் சொல்லுகிறபடி அந்த வில்லியம் கிர்வான் என்பவன் குண்டுக்காயத்தினால்தான் இறந்திருக்கிறான். அதில் எனக்குச் சிறிதும் சமுசயமுண்டாகவில்லை."

"முதலில் தாங்கள் சந்தேகித்தீர்களா, என்ன?"

"சந்தேகமொன்றுமில்லை. இருந்தாலும், நேரிற் போய்ப் பார்த்துத் தெரிந்துகொள்வது நல்லதுதானே. நாங்கள் அங்கே போனதில் பிரயோஜனமில்லாமற் போகவில்லை. பிறகு நாங்கள் கன்னிங்ஹாமையும் அவர் குமாரரையுங்கண்டு பேசினோம். அவர்கள் திருடன் எந்தப் பக்கமாகக் கொல்லையின் வேலியை முறித்துத்

தாண்டிக்கொண்டுபோனனென்று அந்தப் பக்கத்தைக் காட்டினர்கள். வேலியும் சிறிது முறிந்துதான் கிடக்குகிறது. ஆனால், அதைப் பார்க்கும் பொழுது அது எனக்கு ஒரு வேடிக்கைபோலவே தோன்றிற்று."

"அப்படியா? அது நியாயந்தானே."

"பிறகு நாங்கள் அந்த வண்டிக்காரன் தாயாராகிய கிழவியைக் கண்டு, அவளுக்கு ஏதாவது தன் மகன் கொலையுண்ட விஷயத்தைப்பற்றித் தெரியுமா என்று கேட்டோம். அவள் நிரம்பவும் அசக்தியுள்ள கிழவியாயிருக்கிறபடியால், நாங்கள் அவளிடமிருந்து யாதொன்றுங் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

"விசாரித்த வரையில், பார்த்தவரையில், நீங்கள் இந்தக் கேசைப்பற்றி என்ன அபிப்பிராயப் படுகிறீர்கள்?"

"இந்தக் கொலை அதிவிநோதமாயிருக்கிறது! இன்னும் நாம் அந்த வீட்டையும் போய்ப் பார்த்தால், பின்னும் ஏதேனும் புதிதான விஷயங்கள் தெரியக்கூடும். இன்ஸ்பெக்டர்! கொலையுண்ட அந்த வண்டிக்காரன் கையிலிருந்து அகப்பட்டதாகத் தாங்கள் கொடுத்த அந்தக் காகிதத்துண்டில் கண்டிருக்கிற நேரமும், அவன் கொலையுண்ட நேரமும் சரியாக இருப்பதனால் அந்தக்காகிதம் இந்தக் கேசுக்கு முக்கியமான ஆதரவு என்று தங்களுக்குத் தோற்றவில்லையா?".

"ஏதாவது துப்புக் கிடைக்குமானால், இதிலிருந்துதான் கிடைக்கவேண்டும். இந்தக் காகிதந்தான் நமக்கு முக்கிய ஆதாரமாக இருக்கிறது."

"தடையென்ன? அதுதான் ஆதாரம். அந்தக் கடிதத்தை எழுதினவரே வண்டிக்காரனாகிய வில்லியம் கீர்வானை அந்த வேளையில் அங்கே வரவழைத்தவரா யிருக்கவேண்டும். ஆனால், அந்தக் கடிதத்தின்மற்றைப்பாகமும் அகப்பட்டாலல்லவா பிரயோஜனமாயிருக்கும். இன்ஸ்பெக்டர்! உங்களுக்கு அது கிடைக்கவில்லையோ? தேடிப்பார்த்திருந்தால் அகப்பட்டிருக்குமே."

"கிடைக்கக்கூடுமென்ற நம்பிக்கையோடுதான் நான் அந்தக் கொல்லை யெங்கும் பலமுறை தேடிப்பார்த்தேன். அது அகப்படவில்லை."

“ அது செத்தவன் கையிலிருந்து கிழிக்கப்பட்டிருக்கிறது. அதை அவ்வளவு கர்மசிரத்தையாய் ஒருவன் பரபரப்போடு கிழித்தெடுக்கக் காரணம் என்ன ? அதில் அவன் சம்பந்தம் இருந்திருக்க வேண்டும். அவன் கிழித்தெடுத்த அக்காகிதத்தை என்ன செய்திருப்பான் ? உடனே தன் சட்டைப்பையிலே போட்டுக்கொண்டிருப்பான்? ‘ஆத்திரக் காரனுக்குப் புத்திமட்டு’ என்றபடி அவன் தனக்கிருந்த அவசரத்தில், ஒரு துண்டு செத்தவன் கையில் அகப்பட்டிருக்கின்றது என்பதைக் கவனிக்கவில்லை. இருட்டு, பயம், அவசரம் எல்லாமுங் கலந்திருந்தபடியால், அவனுக்கு அப்போது ஒன்றுந்தோன்ருமற் போனது இயல்புதான். பாக்கியுள்ள அந்தக் கடிதமும் நமக்குக் கிடைத்து விட்டால் நாம் அநேகமாக இந்தக் கேசைக் கண்டுபிடித்துவிட்டோம் என்று கொஞ்சம் தைரியமாயிருக்கலாம். ”

“ ஹண்டர் ! கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்கிற சமாசாரமாயிருக்கிறதே தாங்கள் சொல்வது ! நல்ல யோஜனை செய்தீர்கள் ! திருடனைக் கண்டுபிடியாமல் இருக்கும்போது அவன் சட்டைப் பையில் இருக்கிற காகிதத்தை நாம் எப்படி எடுக்கமுடியும் ? ”

“வாஸ்தவந்தான். அது கொஞ்சம் யோஜிக்கவேண்டிய விஷயந்தான். ஆனால், இன்னுமொரு விஷயம் மிகத்தெளிவாய்த் தெரிகிறது. இந்தக் கடிதம் வில்லியம் கீர்வானுக்கே எழுதியதாய் இருக்கவேண்டும். எழுதினவனே இதை நேரிற்கொண்டுபோய்க் கொடுத்திருக்கமாட்டான். ஏனெனில், நேராகப் போவதானல் கடிதம் எதற்கு ? வாய்ச்செய்தியாகவே சொல்லியிருக்கலா மல்லவா? ஆகையால், இக்கடிதத்தை யாரிடமாவது கொடுத்தனுப்பியிருக்கவேண்டும். அது யாராயிருக்கலாம் ? இல்லையோ தபாலிற் போட்டிருக்கவேண்டும். வில்லியம் கீர்வானுக்கு நேற்று ஏதாவது கடிதம் வந்ததா என்பதை விசாரித்தால் உண்மை வெளியாய் விடும். ”

“ ஹண்டர் ! அதை நான் விசாரித்துவிட்டேன். நேற்று மாலை மூன்றுமணி சுமாருக்கு வில்லியம் கீர்வானுக்கு ஒருகடிதம் வந்ததாம். மேற்கூடு (Envelope) எங்கே யென்று கேட்ட

தற்கு, அதை அவன் உடனே கிழித்தெறிந்து விட்டானென்று, கிழிக்கும்போது பார்த்துக்கொண்டிருந்த தபாற் சேவகன் எனக்குச் சொன்னான்."

"அதுதான் புத்திசாலிக் கடையாளம். இன்ஸ்பெக்டர்! நல்ல வேலை செய்திருக்கிறீர்" என்று ஹண்டர் அவர் முதுகைத் தட்டிக் கொடுத்து, "தபாற் சேவகனையும் விசாரித்துவிட்டீரா? உம்மோடு கூட இருந்து வேலை செய்வது எனக்குப் பரம ஸந்தோஷமாயிருக்கிறது. நல்லது, கர்னல்! இதுதான் கன்னிங்ஹாம் இருக்குமிடம். தயை செய்து வரக்கூடுமானால், கொலை நடந்த ஸ்தலத்தையும் நான் உமக்குக் காட்டுகிறேன்" என்றான்.

நாங்கள் நால்வரும் கொலையுண்ட அந்த வண்டிக்காரன் குடியிருந்ததாகச் சொன்ன குடிசையைப் பார்த்துவிட்டுப் பிறகு கன்னிங்ஹாம் வீட்டிற்குள் நுழைந்தோம். சமையற்கட்டின் பக்கத்திலுள்ள வாசற்படியண்டை இரண்டு போலீஸ் சேவகர்கள் காவலாக இருந்தார்கள். ஹண்டர், "கதவைத் திறந்துவிடுங்கள்" என்று சொல்ல, அவர்கள் கதவைத் திறக்கவே நாங்கள் உள்ளே போனோம். "அந்தப் படிக்கட்டிலிருந்துதான் ஆலெக் என்பவர் திருடனும் வண்டிக்காரனும் நாம் இப்போது நின்றுகொண்டிருக்கிற இதேயிடத்தில் ஒருவரையொருவர் கட்டிப்புரண்டு மல்லுக்கு நிற்பதைப் பார்த்தாராம். அவர் தகப்பனாராகிய கன்னிங்ஹாம் இடது பக்கத்திலுள்ள அதோ அந்த இரண்டாவது அறையின் ஜன்னலில் நின்றுகொண்டு திருடன் அங்கே தெரிகிற பவழமல்லிகைச் செடியின் இடதுபக்கமாக விழுந்து ஓடிப்போனதைப் பார்த்துக்கொண்டிருந்தாராம். அவ்விதம் ஓடினது அவர் குமாரருக்குந் தெரியுமாம். திருடன் ஓடிவிட்ட பிறகு ஆலெக் தம்முடைய வண்டிக்காரன் பக்கத்திலுட்கார்ந்துகொண்டு அவனைப் பிழைப்பூட்டுவதற்கு ஏதாவது மார்க்கமுண்டாவென்று பார்த்துக்கொண்டிருந்தாராம். பூமி அழுத்தமான கெட்டித் தரையாயிருப்பதால் திருடன் ஓடின அடிச்சுவடு நமக்குத் தெரியவில்லை" என்று ஹண்டர் எங்களுக்குச் சொன்னான்.

ஹண்டர் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கும்போதே இரண்டு பேர்கள் அவ்வீட்டின் ஒரு மூலையிலிருந்து தோட்டத்திற்குள்

வந்தார்கள். அவர்களில் ஒருவர் வயோ விருத்தராயும், குரூர மான பார்வையோடு கூடிய முகத்தை யுடையவராயு மிருந்தார். மற்றொருவர் பால்யமாயும், முறுக்குத் திருப்புடையவராயும், சிரித்துச் சிரித்து வார்த்தை சொல்பவராயும், டம்பமான நடை யுடைகளை யுடையவராயு மிருந்தார். அவரைக் காணும்போது அவர் நாங்கள் போயிருக்கிற காரியத்திற்கு முற்றிலும் விரோத மான செய்கையை யுடையவர்போல எங்களுக்குத் தோன்றிற்று.

"இன்னமுங் கண்டு பிடித்தபாடில்லையா? நீங்கள், லண்டன் பட்டணத்துப் பேர்கள் அதி சுலபமாய்க் கண்டுபிடித்து விடுவீர் கள் என்று எண்ணியிருந்தோமே. ஒன்றையுங் காணோமே. "அக்கரைப் பச்சை கண்ணுக்குக் குளிர்த்தி" என்ற நியாயமாக வல்லவா இருக்கிறது. காரியத்தில் சாமர்த்தியத்தைக் காட்டக் காணோமே. என்ன, நான் சொல்வதில் கோபமுண்டோ?" என்று அங்கே வந்தவ ரிருவர்களிற் பெரியவர் ஹண்டரைப் பார்த்துச் சொன்னார்.

"தாங்கள் கொஞ்சம் அவகாசம் கொடுக்கவேண்டும். இது எங்களுக்கு வந்த இடம். முன்பின் மனுஷ்யர்களுடைய பழக்க வழக்கங்கள் ஒன்றுந் தெரியாது. இந்த நிலைமையில் எப்படி சீக் கிரத்தில் கண்டுபிடிக்க முடியும். சிறிது நேரம் பொறுத்தால் நான் லண்டன் பட்டணத்துப் பேர்வழியோ, பட்டிக்காட்டுப் பேர்வழியோ தெரிந்துவிடுகிறது. அதற்குள்ளே அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டி விடுகிறீர்களே" என்று ஹண்டர் சிரித் துக்கொண்டு பரிகாசமாய்ச் சொல்வதுபோலச் சொன்னான்.

"அவகாசம் எதற்கு? துப்பு கொஞ்சமாவது எதுவும் அகப் பட்டதாகத் தெரியவில்லையே?" என்று சிறியவராகிய ஆலெக் கன்னிங்ஹாம் என்பவர் கேட்டார்.

அப்பொழுது இன்ஸ்பெக்டர், "ஒன்றே ஒன்றுதான் இருக் கிறது. நாம் மாத்திரம் எப்படியாவது அந்த — அடடா! இதென்ன? ஹண்டர்!"

உடனே எனது நண்பனது முகமானது மிகவும் பயங்கர மாய் விகாரப்பட்டுவிட்டது. விழிகளிரண்டும் அப்படியே மலர மலர விழித்துக்கொண்டிருந்தன. வாய் கோணக் கோண

இழுக்க ஆரம்பித்தது. ஒரு நிமிஷத்திற்கெல்லாம் அவன் தன் கையையும் காலையும் உதைத்துக்கொண்டு கீழே குப்புற விழுந்து விட்டான். இருந்தாற்போ லிருந்து இவ்வளவு கடுமையான ரோகம் வந்ததைக் கண்டு பயந்து, அவனைச் சமையற்கட்டின் பக்கத்தில் போடப்பட்டிருந்த ஒரு பெரிய நாற்காலியிற் கொண்டு போய் உட்கார வைத்துக் கொஞ்சம் ஆச்சுவாசம் வரும்படி விசிறினேம். கொஞ்சநேரம் வரையில் அவன் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான். கடைசியாக, சிறிது லஜ்ஜைப்பட்ட முகத்துடன், தனது அசக்திக்காக எங்களை மன்னிப்புக் கேட்டபடியாக எழுந்திருந்து, "நான் இப்பொழுதுதான் உடம்பு சுவஸ்தமில்லாமலிருந்து தேறினேன். முற்றிலும் குணமாவதற்குள் மறுபடியும் வேலை செய்ய ஆரம்பித்தது நிரம்பவும் தப்பான காரியம். அதனுல்தான், இப்படி அடிக்கடி என்னையறியாமல் வந்துவிடுகிறது. வெப்ஸ்டரும் சொல்லியிருப்பாரே" என்று சொன்ளுன்.

"வாஸ்தவந்தான். 'சுவரை வைத்துக்கொண்டுதானே சித்திர மெழுதவேண்டும்.' வியாதியான காலத்தில் அலைச்சல் திரிச்சல் கவலை இவையெல்லாம் இருக்கவே கூடாது. நான் எனது வண்டியை வேண்டுமானுலும் வரவழைக்கிறேன். வீட்டுக்குப் போய்ப் படுத்துக்கொள்ளுங்கள். நாளைக்கோ மறுநாளைக்கோ, எப்போது அனுகூலமா யிருக்கிறதோ அப்போது பார்த்துக் கொள்ளலாம். அகப்படுகிற திருடன் என்று கூடியும் அகப்படாமற் போகமாட்டான். நீங்கள் மாத்திரம் மனது வைத்தால் ஆறு மாதமானுலும் கண்டுபிடித்து விடுவீர்கள்" என்று பெரியவரான அந்தக் கன்னிங்ஹாம் என்பவர் சொன்னுர்.

"வண்டி யெதற்காக? வந்தது வந்தாய் விட்டது. இப்பொழுது போவானேன்? இவ்வளவு தூரம் வந்தபின்னும் விஷயத்தைத் தெரிந்துகொள்ளாமற் போக எனக்கு இஷ்டமில்லை. ஒரு விஷயம் நான் நிச்சயமாய்த் தெரிந்துகொள்ள வேண்டி யிருக்கின்றது. அதையும் நாம் வெகுசுலபமாய்க் கண்டுபிடித்துவிடலாம்" என்ருன்.

"அதென்ன விஷயம்?" என்று கன்னிங்ஹாம் கேட்டார்.

"நல்லது. வண்டிக்காரனுகிய வில்லியம் கீர்வானென்பவன் திருடன் உள்ளே வந்த பிறகுதான் வந்திருக்கக்கூடும் என்று எனக்குத் தோன்றுகிறது. முன்னுடி வந்திருக்க முடியாது. வருவதற்குக் காரணமுமில்லை. பூட்டைமுறித்து உடைத்துக் கதவைத் திறந்துவிட்டானென்றாலும், திருடன் உள்ளே வரவில்லையென்றுதானே நீங்கள் சொல்லுகிறீர்கள். அப்படிக்கில்லையா?"

"அது அப்படித்தான். அதிற் கொஞ்சங்கூடச் சந்தேகமேயில்லை. ஏனென்றால், பையன் ஆலெக் அப்போதும் விழித்துக் கொண்டுதான் இருந்தான். படுக்கைக்குப் போகவில்லை. சுருட்டுப்பிடித்துக் கொண்டிருந்தான். யாராவது உள்ளே வந்திருந்தால் அடிச்சத்தங் கேட்டிருக்கவேண்டுமல்லவா?" என்று கன்னிங்ஹாம் சொன்னர்.

"ஆலெக் எங்கே உட்கார்ந்திருந்தார்?"

"நான் என் உடுப்புப்போட்டுக்கொள்ளுகிற அறையில் உட்கார்ந்து சுருட்டுப்பிடித்துக் கொண்டிருந்தேன்" என்று ஆலெக் சொன்னர்.

"அந்த அறை எது?"

"இடது பக்கங் கோடியில், என் தகப்பனுருடைய அறைக்குப் பக்கத்திலிருக்கிறது."

"உங்கள் இரண்டுபேர் அறைகளிலும் விளக்கு எரிந்திருக்குமே?"

"அதிலென்ன சந்தேகம்? எரிந்து கொண்டுதான் இருந்தது?"

"இது நிரம்பவும் ஆச்சரியமாய் இருக்கிறது! வந்ததிருடன், வீட்டினுடைய பழக்க வழக்கங்களைப்பற்றி முன்னுடி தெரிந்து கொண்டிருக்கிறவன், வீட்டிலுள்ளவர்களில் இரண்டுபேர் தூங்காமல் விழித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை விளக்கு வெளிச்சத்தின் மூலமாய் நன்றாய்ப் பார்த்துத் தெரிந்திருந்தும் இவ்வளவு தைரியமாய்ப் பூட்டை யுடைத்துக்கொண்டு உள்ளேவரப் பார்த்தானென்பது அபூர்வமான செய்கையல்லவா? கூட்டுக்கொள்ளையடிப்பவர்கள்கூட இப்படி வரமாட்டார்களே" என்றான்.

"ஆம் வாஸ்தவந்தான். நிரம்பவும் துணிச்சற்காரனாக இருந்திருக்கவேண்டும். உயிருக்குத் துணிந்தவன் மற்ற எதற்குத்தான் துணியமாட்டான்?" என்று கன்னிங்ஹாம் சொன்னார்.

"நல்லது; கேசு அபூர்வமாயில்லாமல் சாதாரணமாயிருந்தால் நாங்கள் ஏன் உங்களை ஆலோசனைகேட்கிறோம்? நிரம்பவும் ஆச்சரியகரமாயும், பார்வைக்கு ஒன்று மில்லாததுபோற் காணப்படுகிறதாயும் இருக்கிறபடியால்தானே உங்களை இவ்வளவு நிர்ப்பந்தமாக அழைத்துவந்தோம். ஆனால், வண்டிக்காரனாகிய வில்லியம் வருவதற்கு முன்னமேயே திருடன் எதையேனும் திருடிப்போயிருப்பானென்று தாங்கள் நினைப்பதுமாத்திரம் தப்பு. ஏனெனில், அப்படி அவன் திருடியிருக்கும் பக்ஷத்தில் எங்கள் பதார்த்தங்கள் அலங்கோலமாக அங்குமிங்கும் இறைந்துகிடக்கும். கிடப்பது மல்லாமல் இரண்டொரு விலைபெற்ற சாமான்களும் காணமற்போயிருக்கும். அப்படியில்லாதபடியால், திருடன் உள்ளே வந்திருப்பானென்று கொள்வது அவ்வளவு சரியான ஊஹமென்று எனக்குத் தோன்றவில்லை" என்று ஆலெக் சொன்னார்.

"அவன் என்ன பதார்த்தங்களை யெடுத்துப்போனானோ? அது நமக்கு எப்படித் தெரியும்? திருடனோ ஊரெங்கும் இல்லாத புதிய மாதிரியான திருடனாக இருக்கிறான். விலைபெற்ற சாமான்களையாவது, காசுபணம் நகை முதலியவற்றையாவது எதிர்பார்த்து வருகிறவனாக இருக்கவில்லை. இது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! பாருங்கள், அன்று ஆக்டன் வீட்டில் அவன் திருடினபதார்த்தங்களை. மைக்கூடு, கத்திரிக்கோல், புஸ்தகம், இன்னும் என்னத்தையோ இந்த மாதிரியான சாமான்களைத்தானே திருடிக்கொண்டு போயிருக்கின்றான். இங்கேயும் ஏதாவது ஒரு விளக்குமாற்றை யெடுத்துக்கொண்டு போயிருப்பான். பழஞ்செருப்பு அகப்பட்டாலும் அவனுக்குப் போதுமானதுதானே?" என்று ஹண்டர் சொன்னான்.

"நல்லது, நாங்கள் உங்கள் ஆலோசனையின்படி எது சொன்னாலும் செய்யச் சித்தமாக இருக்கின்றோம். எங்களை உங்கள் மனுஷ்யர்களாக வைத்துக்கொள்ளுங்கள். ஏதோ எங்கள் மனத்திற் பட்டதைச் சொன்னோம். மற்றைப்படி அதன்படி நீங்கள்

நடக்கவேண்டுமென்பதற்காகச் சொன்னதல்ல. உங்களுக்கு எப்படி யெப்படியெல்லாந் தோன்றுகிறதோ அவ்வப்படியே செய்யுங்கள். நாங்கள் அதிற் குறுக்கே நிற்கப்போகிறதில்லை. உங்களுக்கும் இன்ஸ்பெக்டருக்கும் தோன்றுத யுக்தி, அனுபவமில்லாத எங்களுக்கு எப்படித்தோன்றும்? உங்கள் அபிப்பிராயப் படியே வைத்துக்கொண்டு பாருங்கள்" என்று கன்னிங்ஹாம் சொன்னார்.

"நல்லது, முதலில் நீங்கள் இந்தக் கொலையாளியைப் பிடித்துத் தருபவருக்கு, அல்லது அப்படிப்பட்ட கொலையாளியின் ஊர், பேர், தொழில், அங்க அடையாளம் முதலியவற்றைப் பற்றிய எல்லாவிவரங்களையும் தெரிவிப்பவருக்கு ஒரு இனம் கொடுப்பதாகப் பிரசித்தப்படுத்தவேண்டும். அது உங்கள் கைப்படவே இருக்க வேண்டும். சர்க்கார் உத்தியோகஸ்தர்களைக் கலந்து கேட்பதாயிருந்தால் காரியம் இப்போது முடியாது. அத்தனை தொகை கொடுக்கவேண்டும், இத்தனை தொகை கொடுக்கவேண்டும் என்று தொகையைப் பற்றியும், விளம்பரத்தில் காணவேண்டிய விஷயத்தைப்பற்றியும் பலவாறு ஆக்ஷேபங்கள் செய்துகொண்டே யிருப்பார்கள். நமக்கு அவர்களாக்ஷேபத்திற்கெல்லாம் சமாதானஞ் சொல்லி முடிவதற்குள் மாதம் ஆறுகிவிடும். 'ஆறின கஞ்சி பழங்கஞ்சி' என்கிறபடி கேசும் பழைசாய்ப் போய்விடும். அதில் இப்போதிருக்கிற மாதிரி சிரத்தையும் உண்டாகாது. முடிவில் தேய்ந்து மாய்ந்து ஒன்றுமில்லையென்று போய்விடும்; தங்களுக்கு ஆக்ஷேபமில்லையானல் இதில் கையெழுத்துப் போடுங்கள். நானே விளம்பரத்தை யெழுதிக்கொண்டு வந்திருக்கின்றேன். ஐம்பது பவுன் இனம்கொடுத்தால் போதுமானது. இதைச் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள். நான் சொல்லுகிறபோது உங்களுக்கென்ன?" என்று சொல்லிப் பென்ஸிலால் எழுதிய காகிதமொன்றை ஹண்டர் கன்னிங்ஹாம் கையில்கொடுத்தான்.

"ஐம்பது பவுன் என்ன? திருடனை மாத்திரம் கண்டு பிடித்துக் கொடுக்கும் பக்ஷத்தில் ஐம்பதுக்கு ஐந்நூறுகக் கொடுக்கிறேன். ஐயாயிரம் கொடுத்தாலும் சரி, என் உயிர்க்குயிராகிய

வண்டிக்காரனைக் கொன்ற அந்தக் கொலைபாதகனை எப்படியாவது கண்டுபிடித்துச் சித்திரவதை செய்தால்தான் என் மனக்குறை நீங்கும். வண்டிக்காரனு, அவன்? என் பிராணனல்லாவா அந்த வில்லியம். அவன் என்மீது வைத்திருந்த பிரியத்துக்கும் மரியாதைக்கும் நான் என் சொத்து முழுமையையுங் கொடுத்தாற்கூடப் போதாதே. வேறு சாக்ஷியந்தான் எதற்கு? எனக்காகத்தானே இப்போது தன் பிராணனை விட்டிருக்கிறுன். பதிலுக்கு என் பிராணனை நான் கொடுக்கவேண்டியவனல்லவா? ஐம்பது பவுன் என்ன, ஒரு லக்ஷியமா?" என்று சொல்லி அக்ஷாகிதத்தை வாங்கிப் பார்த்து, "இதில் ஒரு பிழை யிருக்கிறதே" என்று சொன்னுர்.

"அவசரத்தில் எழுதினேன். கைத்தவருக இருந்திருக்கும்."

"தாங்களே பாருங்கள். 'செவ்வாய்க்கிழமை ராத்திரி சற்றேறக்குறைய பன்னிரண்டே முக்கால் மணிக்கு' என்று ஆரம்பித்திருக்கிறீர்களே. குற்றம் நடந்தது பதினென்றே முக்காலுக்கல்லவா?" என்று கன்னிங்ஹாம் சொன்னுர்.

ஹண்டர் இவ்வாறு தவறுதலாய் எழுதியதைப்பற்றி உள்ளபடி எனக்கு வருத்தமாயிருந்தது. 'என்னடா! ஒருபொழுதும் தவருமல், ஒவ்வொரு விஷயத்தையும், அது எவ்வளவு அற்பமாக இருந்தாலுங்கூட நினைவில் வைத்துக்கொள்ளக் கூடிய நமது நண்பன் இப்பொழுது தவறிப்போய்விட்டான் பார்த்தையா? சமீபத்தில் வியாதியால் மிகவும் கஷ்டப்பட்டானே. ஒரு வேளை அதனுல்தான் இந்த மாதிரி ஞாபகப் பிசகாய் எழுதியிருப்பான். இன்ஸ்பெக்டர் சொன்னதிற் குற்றமில்லை. நாம் அவரை வீணுகக் கோபித்துக் கொண்டோம். ஹண்டருக்கு இன்னும் வியாதி நன்ருகத் தெளியவில்லையென்பதில் சந்தேகமேயில்லை. என்ன வியாதியப்பா! மனுஷனுடைய பலம், தைரியம், ஞாபகசக்தி எல்லாவற்றையுமல்லவா தொலைத்துவிட்டது' என்று நான் எண்ணினேன். இன்ஸ்பெக்டர் ஏளனம் பண்ணுகிற மாதிரியாகத் தம் கண்ணைச் சிமிட்டினுர். ஆலெக் வாய்விட்டுச் சிரித்துப் பரிஹாஸஞ் செய்தார். கன்னிங்ஹாம் வாய்பேசாமல் அந்தப் பிழையைத் திருத்திக் கையெழுத்துப்போட்டு, அக்காகிதத்தை ஹண்ட

ரீடங் கொடுத்து, "சீக்கிரம் பதினாயிரம் பிரதிகள் அச்சடித்து விடுங்கள். உங்கள் யோஜனை மாத்திரம் சிறந்ததாகத்தா னிருக்கின் றது" என்று சொன்னார்.

ஹண்டர் அந்தக் காகிதத்தைப் பத்திரமாகத் தன்சட்டைப் பையில் போட்டுக்கொண்டு, எங்களைப் பார்த்து, "நல்லது, நாம் எல்லாரும் வீடு முழுமையையும் சுற்றிப்பார்த்து ஏதாவது களவு போயிருக்கிறதா என்பதைப் பார்த்துத் தெரிந்துகொள்வது நலமா யிருக்குமென்று நினைக்கிறேன். வந்தவன் பயித்தியக்காரத் திரு டனா யிருக்கிறபடியால், நமது கவனத்துக்கே வராமலிருக்கிற ஏதாவது இரண்டொன்றைத் தூக்கிக்கொண்டு போயிருக்கவுங் கூடும். எதற்கும் நாம் ஒருமுறை எல்லாவற்றையுங் கவனமாய்ப் பார்த்துவருவதில் என்ன பாதகம்?" என்றான்.

உள்ளே நுழைவதற்கு முன்னேயே ஹண்டர் கொல்லைப் புறத்துக் கதவை, அதாவது திருடனால் திறக்கப்பட்டதாகச் சொன்ன கதவைக், கவனமாய் உற்றுப் பார்த்துக்கொண்டான். அக்கதவின் உட்புறத்தில் துப்பாக்கியோ, கத்தியோ ஏதோ வொன்றைச் செலுத்திப் பூட்டைத் திறந்திருக்க வேண்டுமென்று அவன் நிச்சயித்துவிட்டான். அவன் அவ்வாறு நிச்சயிக்கும் படிக்கான அடையாளங்கள் அக்கதவில் காணப்பட்டன.

"கதவுக்கு இருப்புக் கம்பி போடுவதில்லையோ?" என்று ஹண்டர் கேட்டான்.

"அதற்கொன்றும் அவசிய மில்லாததனால் போடவில்லை" என்று கன்னிங்ஹாம் பதில் சொன்னார்.

"நாய் வைத்துக்கொண் டிருக்கிறீர்களோ?"

"ஒரு நாய் வைத்துக்கொண் டிருக்கிறோம். ஆனால், அதை எப்போதும் வீட்டிற்கு வெளியிலேதான் கட்டி வைத்திருப்பார் கள். உள்ளே கட்டிப் போடுகிற வழக்கமே யில்லை."

"தினம் வேலைக்காரர்கள் எத்தனை மணிக்குப் படுக்கப் போவார்கள்?"

"பத்துமணி சுமாருக்குப் போவார்கள்."

"வில்லியமும் பத்துமணிக்கெல்லாம் போயிருப்பானே?"

"ஆம்."

"நேற்றைத்தினம் மாத்திரம் அவன் அந்நேரத்துக்கு விழித்துக்கொண்டு இங்கே வருவானேன்? நல்லது, கன்னிங்ஹாம்! சற்றுத் தயை செய்து உள்ளே வாருங்கள், போய்ப் பார்க்கலாம். ஒவ்வொரு இடத்தையும் எனக்குக் காட்டினால் நல்லது" என்று ஹண்டர் சொன்னான்.

உடனே எல்லாரும் வீட்டிற்குள் நுழைந்தோம். சமையற்கட்டிலிருந்து கருங்கல் தளவரிசை போட்ட ஒரு அங்கணமும், அங்கிருந்து ஒரு படிக்கட்டும், அதற்குமேல் இரண்டு அறைகளும், அவைகளுக்கு முன்பக்கத்தில் நாற்காலி முதலியவைகள் போடப்பட்ட ஒரு கூடமும், அக்கூடத்தின் இரண்டு பக்கத்திலும் கன்னிங்ஹாமும் அவர் குமாரரும் படுத்துக்கொள்ளும் அறைகளும் காணப்பட்டன. போகும்போதே ஹண்டர் மாத்திரம் எங்களுக்குப் பின்னால் ஒவ்வொரு இடத்தையும் சாவதானமாகப் பார்த்துக்கொண்டு மெதுவாக வந்தான். வீட்டின் அமைப்பைப் பற்றியுங் குறித்து வைத்துக்கொண்டான். எங்கே கேசு கண்டுபிடிக்கப் போனாலும் முதலில் அந்த ஸ்தலத்தை நன்றாய்க் கவனித்துப் பார்த்துவைத்துக் கொள்ளவேண்டு மென்பது அவன் கொள்கை. அங்கே போகும்போது அவன் ஏதோ வொன்றைக் குறிப்பாகத் தேடிக்கொண்டு போகிற மாதிரியாக அவன் பார்க்கிற பார்வையிலிருந்து நான் தெரிந்துகொண்டேன். 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்' என்றபடி அவனுக்குக் காரியத்திலேதான் திருஷ்டி. பார்வைக்கு எங்களைப் போலவே பார்த்துக்கொண்டு வருவதாகத்தான் அவன் நடித்துக்கொண்டிருந்தான். நான் மாத்திரம் இதில் ஏதோ சங்கதியிருக்கிறது என்று எண்ணினேன்.

இப்படியிருக்கையில், அந்தக் கன்னிங்ஹாம் என்பவர் கொஞ்சம் அலுத்துக்கொண்டு, "ஐயா! இவ்விதம் வீடு முழுமையையும் பரிசோதிப்பது அநாவசியம். அதோ அதுதான் என் படுக்கையுள். இது என் மகனுடையது. இதில்தான் அவன் படுக்கிற வழக்கம். இங்கேயிருந்தால், திருடர்கள் எங்களுக்குத் தெரியாமல் எப்படி உள்ளே வரமுடியும்? என்பதைத் தாங்களே யோஜித்துப் பாருங்கள். இதைவிட்டு வீணுக்கு இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் காலுக்குச் சேதத்தைத்தவிர வேறு பிரயோஜன மொன்றுமில்லை" என்று சொன்னார்.

"ஹண்டர்! வீட்டைப் பார்ப்பது இருக்கட்டும். வேறு மார்க்கம் ஏதாவது இருக்கிறதா யோஜியுங்கள்" என்று சொல்லி ஆலெக் என்பவர் புன்னகை செய்தார்.

"உண்மைதான். இருந்தாலும் தயவுசெய்து என்னை என் போக்கிலேயே விட்டுவிடப் பிரார்த்திக்கிறேன். ஒவ்வொருவருக்கும் ஒரு யுக்தி தோன்றும். ஒருவருக்கு நல்லதாகத் தோன்றுகிற உபாயத்தை மற்றொருவர் பழிப்பது இயல்புதான். இவ்வளவு தூரம் பொறுமையுடனிருந்தவர்கள் இன்னும் சிலநேரம் என்னை வேண்டிப் பொறுமையுடன் இருக்கக்கூடாதா? உங்களுக்குச் சிரமமாகத்தானிருக்கும். என்ன செய்யலாம்? மன்னிக்கத்தான் வேண்டும். முதலாவது, உங்கள் படுக்கையறையின் சாளரத்திலிருந்துகொண்டு பார்த்தால் வெளியில் எவ்வளவு தூரம் தெரியுமென்று பார்க்கவேண்டும். இதுதான் தங்கள் குமாரர் அறையோ?" என்று கதவைத் திறந்துகொண்டு உள்ளே போய், "இங்கேதான் அன்றிரவு உட்கார்ந்திருந்தாரோ? எங்கே அந்தப் பலகணியின் வழியாகப் பார்த்தால் எவ்வளவு தூரம் தெரிகிறதென்று பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டே, அப்பலகணியின் கதவுகளையுந் திறந்துபார்த்தான். பார்க்கும்பொழுதே அந்த அறை முழுவதையும் குறிப்பாய்ப் பார்த்துக்கொண்டான்.

"ஏன்? பார்த்தது போதுமல்லவா? திருப்தியாச்சுதா?" என்று ஹண்டரைப் பார்த்துக் கன்னிங்ஹாம் பரிஹாஸமாய்க் கேட்டார்.

"ஆம் போதுமானதுதான். நான் பார்க்கவேண்டுமென்று விரும்பியவைகளைப் பார்த்துவிட்டேன். தங்களுக்கு இவ்வளவு தூரம் சிரமங் கொடுத்ததைப்பற்றித் தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும்."

"அவசியமானால் தாங்கள் நான் இருக்கும் அறையையும் பார்க்கலாம். அது ஒன்று பாக்கியிருப்பானேன்?"

"தங்களுக்கு அதனால் அதிக சிரமமில்லாதிருக்குமானால் நான் பார்க்கிறேன்."

கன்னிங்ஹாம் புன்னகையுடன், "இவ்வளவெல்லாங் காட்டிவந்த எனக்கு இந்த ஒரு அறையைக் காட்டுவதினாலேயே அதிக

மான சிரமம் உண்டாய்விடப் போகிறது?" என்று சொல்லிக் கொண்டே வழிகாட்ட நாங்கள் அவரது அறைக்குச் சென்றோம். அங்கே போனபொழுது நானும் ஹண்டரும் பிந்திவிட்டோம். மற்றவர்களெல்லாரும் முந்திப் போய்விட்டார்கள். அந்த அறையில் அதிகமான அலங்காரங்கள் ஒன்றுமில்லை. சாதாரணமாகத்தானிருந்தது. அந்த அறையில் ஒரு கட்டிலும் அதன் பக்கத்தில் ஒரு மேஜையும் போடப்பட்டிருந்தன. அந்த மேஜையின்மீது சில கிச்சிலிப் பழங்களும், சாராயம் ஊற்றியிருந்த ஒரு கண்ணாடிப் பேலாவும், மற்றும் இரண்டொரு தின்பண்டங்களின் தட்டும் வைக்கப்பட்டிருந்தன. அந்த மேஜையை ஹண்டர் வேண்டுமென்றே கீழே தள்ளிவிட்டான். கண்ணாடிப்பேலா ஆயிரம் சில்லிகளாக உடைந்துவிட்டது. கிச்சிலிப் பழங்கள் கீழே உருண்டோடின. அப்போது ஹண்டர் என்னைப் பார்த்து, "என்ன அஜாக்கிரதை! சாவதானமாக வரவேண்டாமா? கண்ணை மூடிக் கொண்டு இப்படியா வருவார்கள்? எத்தனை சாமான்கள் உன்னால் வீணாய்ப் போய்விட்டன?" என்றான்.

இப்படிச் சொல்லவும் நான் சிறிது நேரம் வரை அப்படியே திகைத்துப் போய்விட்டேன். பின்னர், ஏதோ காரணத்தைக் கொண்டுதான் இவ்விதம் வேண்டுமென்றே தான் தள்ளிவிட்டு நம் மீது பழி சுமத்துகிறான். ஆகையால், நாம் எதிர்க்கக்ஷி பேசாமல் குற்றத்தை யொப்புக்கொண்டிருக்க வேண்டியதுதான் என்று நினைத்துக்கொண்டு கீழே நான்கு பக்கங்களிலும் உருண்டோடிய பழங்களைப் பொறுக்கினேன். மற்றவர்களும் பழங்களையும், உடைந்த கண்ணாடிப் பேலாவின் துண்டுகளையும் பொறுக்கத் தொடங்கினார்கள். இன்ஸ்பெக்டர் மேஜையை முன்னிருந்தபடி போட்டுவிட்டு, "எங்கே ஹண்டரைக் காணோமே? எங்கேயாவது விழுந்துகிடக்கப் போகிறார், பாருங்கள்" என்றார்.

"ஐயோ! அவர் எங்கே போனாரோ தெரியவில்லையே. வியாதிக்காரரைக் கட்டி மேய்ப்பதைக் காட்டிலும் கஷ்டமான காரியம் வேறொன்றுமே கிடையாது. நாலைந்து நாழிகையாகவே பார்த்துக்கொண்டிருக்கிறேன். அவர் சித்தசுவாதீனமற்றவர் போலத்தானிருக்கிறார். என்ன விளையுமோ? நீங்கள் இங்கேயே யிருந்

கள். ஒரு நிமிஷத்தில் அவரை அழைத்துக்கொண்டு வருகிறோம். அப்பா! நீங்களும் வாருங்கள்" என்று சொல்லிவிட்டுத் தகப்பன் பிள்ளை இருவர்களும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஓடினார்கள்.

"ஆலெக் நினைக்கிறபடி அப்படியே யிருக்குமென்றுதான் எனக்குந் தோன்றுகிறது. இதெல்லாம் வியாதி படுத்துகிறபாடு. ஒரு வேளை வியாதியின்—" என்ற உடனே, "ஐயோ, கொல்லுகிறார்கள்! கொல்லுகிறார்கள்!!" என்ற சத்தம் ஆலெக் என்பவர் அறையிலிருந்து கேட்டது. அச்சத்தம் எனது தோழனை ஹண்டரது சப்தம்போல எனக்குத் தோன்றினபடியால் நான் ஒன்றுந் தெரியாமல் ஒரே ஓட்டமாக அவ்வறைக்கு ஓடினேன். மற்றவர்களுங் கூடவே வந்தார்கள். உள்ளே போய்ப் பார்த்தால் ஆலெக் என்பவன் என் சிநேகிதன் கழுத்தைப் பிடித்து அமுக்குகிறான். அவன் தகப்பன் ஹண்டரின் கை மணிக்கட்டைப் பிடித்துத் திருகுகிறான். நாங்கள் மூவரும் அவ்விருவர்களையும் பிடித்திழுத்து விலக்கினோம். ஹண்டர் களைத்துப்போய்க் கீழே விழுந்துவிட்டான். இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் அவன் எழுந்து நின்று, "இன்ஸ்பெக்டர்! இந்த இரண்டு அயோக்கியர்கள் கையிலும் விலங்கை மாட்டும்" என்றான்.

இன்ஸ்பெக்டர் ஒன்றுந் தோன்றாமல் திகைத்து நின்று, "என்ன குற்றத்திற்காக நான் இவர்களைச் சிறைப்படுத்துகிறது? காரணம் வேண்டாமா? யோஜித்துச் சொல்லுங்கள். வியாதியின் படபடப்பில் ஒன்றுஞ் சொல்லவேண்டாம். மெதுவாக—"

"விலங்கை மாட்டும் என்றால் அதற்கு இவ்வளவு தாமதமா? சீக்கிரம் மாட்டும். நம்பிக்கையுள்ள வண்டிக்காரனைக் கொலை செய்த துரோகிகள் இவர்தாம்; இந்தப் பிரபுக்கள்தாம்" என்றான்.

இன்ஸ்பெக்டர் பின்னுந் திகைத்தவராய், "ஹண்டர்! வேடிக்கையில்லையே? உள்ளபடியாய்த்தானே சொல்லுகிறீர்?" என்றார்.

"வேடிக்கை வேறு வேண்டுமா? அவர்கள் முகத்தைப் பாரும். என்ன எழுதியிருக்கிறது என்று படித்துப் பாரும்' என்றான்.

உடனே அவர்கள் முகம் கடுகளவாய்ச் சிறுத்துவிட்டது. ஒரு விதமான பயமும் விசாரமும் அவர்கள் முகத்தில் கூத்தாடின. கன்னிங்ஹாமின் அதிகாரங்களெல்லாம் அடங்கிவிட்டன. ஆலெக் என்பவருடைய படாடோபங்களெல்லாம் இருந்த இடந்தெரியாமற் பறந்துபோய் விட்டன. ஹத்தியென்னும் பிசாசு அவர்களிரண்டுபேரையுந் தன் வசமாக்கிக்கொண்டபடியால், ஒரு நிமிஷத்தில் அவர்கள் அழகிய முகம் பார்க்கப் பயங்கரமான அவ்வளவு கோரரூபத்துடன் காணப்பட்டன. கொலையாளிகளின் முகம் எப்படியிருக்குமென்பதை முதன்முதலில் நான் அப்போது தான் கண்டேன். இன்ஸ்பெக்டர் ஒன்றுமே சொல்லாமல் வாசற்படியண்டையிற்போய் நின்றுகொண்டு ஒரு விஸில் (Whistle) கொடுத்தார். உடனே இரண்டுசேவகர்கள் ஓடிவந்தார்கள்.

“கன்னிங்ஹாம்! நான் செய்யத்தக்கது ஒன்றுமேயில்லை. விஷயங்கள் ரஸாபாஸமாய் முடிந்துவிட்டன. நீங்களே என்னுடைய நிலைமையில்—‘சுடுகிறமட்டும் ஆய்விட்டதா? போடடா கீழே, அயோக்கியப் பயலே!” என்று சொல்லி ஆலெக் என்பவன் சுடத்தயாராய் வைத்திருந்த கைத்துப்பாக்கியைக் கீழே அடித்துத் தள்ளினர்.

“இன்ஸ்பெக்டர்! அதைப் பத்திரமாய் வைத்துக்கொள்ளும். விசாரணைகாலத்தில் நிரம்பவும் உபயோகப்படும். இதைத்தான் ஐயா! நான் வேண்டியது” என்று ஒரு கசங்கிய காகிதத்துண்டையெடுத்து ஹண்டர் காட்டினன்.

“அக்கடிதத்தின் மற்றைப் பாகமா?” என்று இன்ஸ்பெக்டர் ஹண்டரைக் கேட்டார்.

“அதுதான்.”

“இது உமக்கு எங்கிருந்து கிடைத்தது? எப்படிக் கிடைத்தது? எப்போது கிடைத்தது? கூடவேயிருக்கும்போது எங்களுக்குத் தெரியாமற்போகக் காரணம் என்ன?” என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

“எங்கே யிருக்குமென்று எண்ணினேனே அங்கிருந்துதான் கிடைத்தது. மற்றைவிஷயங்களையும் பிறகு உமக்கு விவரமாய்ச் சொல்லுகிறேன். கர்னல்! நீரும் வெப்ஸ்டரும் வீட்டுக்குப்

போங்கள். நான் இன்னும் ஒரு மணிநேரத்திற்கெல்லாம் வந்து சேருகிறேன். நானும் இன்ஸ்பெக்டரும் கைதிகளுடன் சில வார்த்தைகள் பேசவேண்டியிருக்கிறது. எப்படியிருந்தாலும் சாப்பாட்டு நேரத்துக்கு நான் தயாராய் வந்துவிடுகிறேன்" என்று சொன்னான்.

நாங்களிருவரும் வீட்டுக்கு வந்துவிட்டோம்.

ஹண்டர் தான் சொல்லிப்போனபடியே சரியாக ஒருமணிக்கெல்லாம் நாங்களிருந்த மேன்மாடிக்கு வந்துவிட்டான். ஆனால், அவன் தனியாக வரவில்லை. ஒரு கிழவரையுந் தன்னோடு கூட அழைத்துவந்தான். "இவர்தாம் ஆக்டன் என்பவர். முதன் முதலில் கத்திரிக்கோலையும், புஸ்தகத்தையுங் களவுபோகக் கொடுத்தவர் இவர்தாம். தக்க பெரிய மனுஷ்யர். இந்த அற்பமான கேசைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்லும்போது கூட இருந்தால் நல்லதென்றெண்ணி இவரைஇங்கே யழைத்துவந்தேன். ஏனென்றால் இவருக்குத்தான் உள்ளபடி இந்தக் கேசினுடைய ரகஸ்யங்களையெல்லாம் தெரிந்துகொள்வதில் விருப்பமும் அக்கறையும் இருக்கும். கர்னல்! உமக்கு இவையெல்லாம் உபத்திரவமாக விருப்பினும் தயை செய்து மன்னித்துக் கொள்ளும்படி பிரார்த்திக்கிறேன்" என்றான்.

"நன்றாயிருக்கிறது! தங்களுடைய அத்யற்புதமான செயல்களையும், தங்களுடைய அதிசூக்ஷமமான ஆலோசனைகளையும் கேட்கும்படியான ஒரு பாக்கிய விசேஷம் கிடைத்ததே யென்றல்லவோ தாங்கமுடியாமல் ஸந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிறேன். உங்களுடைய செயல்களும், அவற்றினின்றும் நீங்கள்கண்டுபிடித்துத் தீர்மானித்தசங்கதிகளும் எனக்குஇன்னமும்இன்னதென்றே புலப்படவில்லை" என்று ஹேய்டர் பதில் சொன்னார்.

"நான் சொல்லப் புகுவது உங்களுக்கு ஒரு மாயமாகத் தோற்றுமோ அல்லது உண்மை யென்றுதான் தோற்றுமோ, எப்படித்தோற்றினும் சரி, ஆவலுடன் கேட்பவர்களுக்கு என் நடவடிக்கைகளின் விவரங்களைச்சொல்லாமலிருப்பதில்லை. இப்போது எனக்குக் கொஞ்சம் களைப்பாயிருக்கின்றது. அந்தப் பாவிகள் என்னை வெகுவாக இமிசித்துவிட்டார்கள். இந்தமட்டில் உயிரோடு

தப்பினதே அருமையான காரியம். கொஞ்சம் தைரியமுண்டாகும்படி முதலில் ஒரு கப்பு (Cup) காப்பி கொடுங்கள்."

"அதன்பிறகு வலிப்பொன்றும் வரவில்லையே?" என்று கர்னல் கேட்டார்.

ஹண்டர் குலுங்கச்சிரித்து, "நான் அந்த விஷயத்தைப் பற்றி அந்த ஸந்தர்ப்பம் வரும்போது சொல்லுகிறேன்" என்று சொல்லிவிட்டு, கொடுத்த காப்பியைச் சாப்பிட்டான். பிறகு கர்னல் ஹேய்டரைப்பார்த்து, "கர்னல்! நான் எனக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களை இந்தக் கேசு முதலிலிருந்து வரிசையாகச் சொல்லிக்கொண்டே வருகிறேன். எந்த இடத்தில் உங்களுக்கு அவகாசப்படவில்லையோ அந்த விடத்தில் என்னைக் கேளுங்கள்" என்று சொல்லத் தொடங்கினான்:—

"இந்தத் துப்பறியும் வித்தையானது சாமானியமானதன்று. நல்ல புத்திசாலிகள்தாம் இதை அப்பியசிக்கக் கூடியவர்கள். இந்த வித்தையில் முக்கியமான ஒரு விஷயம் இருக்கிறது. அது என்னவென்றால், கிடைத்துள்ள ஆதாரங்களையெல்லாம் வைத்துக் கொண்டு அவைகளில் எது முக்கியம் எதெது அமுக்கியம் என்று கவனித்துப் பார்ப்பதுதான். இல்லாவிட்டால் நம்முடைய முயற்சியும், ஊக்கமும், கவனமும் ஒரு விஷயத்திற் கவிந்து பற்றாமல், பல முகப்பட்டுச் சிதறுண்டு போய்விடும். இந்தக் கேசில் செத்துப்போன அந்த வில்லியம் என்னும் வண்டிக்காரனது கட்டைவிரலின் இடுக்கில் அகப்பட்டதாகச் சொன்ன அந்தக் காகிதத் துண்டுதான் முக்கியமான ஆதாரமென்றும், இந்த ஆதாரத்திலிருந்து ஊஹித்து எப்படியாவது மற்றைக் காகிதப் பகுதியையுங் கண்டு பிடித்துவிட்டால் கேசையே கண்டுபிடித்ததாக ஆய்விடும் என்றும் எனக்கு ஆதி முதற்கொண்டு சந்தேகமறத் தோன்றிற்று. இந்த விஷயம் இப்படியிருக்க, இன்னொரு விஷயம் நீங்கள் அவசியம் கவனிக்கவேண்டும். கொலை செய்தவன் வில்லியம் கிர்வானைச் சுட்ட தக்ஷணமே ஓடிப்போய்விட்டானென்று ஆலெக் கன்னிங்ஹாம் சொன்ன வார்த்தை நிஜமாயிருக்குமானால், திருட வந்தவனே செத்தவன் கையிலிருந்த காகிதத் துண்டைக் கிழித்துக்கொண்டு போயிருக்கமாட்டான் என்

பது உங்களுக்கு வெளிப்படையாகத் தெரிகின்றதல்லவா? திருட னில்லையென்று ஏற்பட்டால் காகிதத்தைக் கிழித்தவன் ஆலெக் கன்னிங்ஹாமாகத்தான் இருக்கவேண்டும். அவனைத் தவிர மற் றெவரும் கிழித்திருக்க முடியாது. அவனொருவன்தான் தனி யாளாக இருந்திருக்கிறான். ஆலெக்கின் பிதா கிழித்திருக்க நியாய மில்லை. ஏனென்றால், அவன் வருவதற்குள்ளே அநேகம் வேலைக் காரர்கள் அந்த இடத்திற்கு வந்துவிட்டார்கள். கிழித்திருந் தால் அது அங்குள்ள மற்றவர்களில் பலபேருக்குந் தெரிந்திருக் கும். விஷயம், பார்க்கப் போனால், மிகவும் அற்பமாகத்தானிருக் கிறது. இருந்தும், இன்ஸ்பெக்டரால் இதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆலெக்கும் அவன் தகப்பனும் கன்னிங்ஹாமும் ஊருக்குத் தலைமையான பெரியதனக்காரராயிருப்பதால் அவர்கள் செய்திருக்க நியாயமில்லையென வைத்துக்கொண்டு வேலைசெய்த படியால் அவருக்கு இந்த விஷயம் புலப்படாமற்போயிற்று. ஆரம் பமே தப்பாய்க் கிரகிக்கப்பட்டபடியால், 'முதற் கோணல் முற் றுங் கோணல்' என்ற பழமொழியின்படி மற்ற எல்லா விஷயங் களும் மாறுகவே அவர் புத்திக்குப் பட்டுக்கொண்டிருந்தன. நானோ மனுஷ்யர்களை நல்லவர்கள் கெட்டவர்கள் என்று முன்னு டியே குருட்டுத்தனமாய்த் தீர்மானித்துக்கொள்வதில்லை. குற் றம் சம்பந்தப்பட்டவரையில் விஷயங்கள் எப்படி எப்படி யெல் லாம் போகிறதோ அந்தவழியிலேயே போய்ப்பார்ப்பது எனக்கு வழக்கம். இந்தக் கேசை நான் விசாரிக்கத் தொடங்கினபோதே ஆலெக் கன்னிங்ஹாமினுடைய முன்னுக்குப்பின் விரோதமான வார்த்தைகளையும், நடவடிக்கைகளையும், படாடோபமான தோற் றத்தையுங்கொண்டு எனக்கு அவன் பேரிலும் சிறிது சமுசயு முண்டாயிற்று. இன்ஸ்பெக்டர் செத்தவன் கைவிர லிடுக்கில் இருந்ததென்று சொல்லி நம்மிடங் கொண்டுவந்து கொடுத்த காகிதத்துண்டை நான் மிகவும் கவனமாகப் பரிசோதித்துப் பார்த்தேன். அது முக்கியமான ஒரு கடிதத்திலிருந்து வேண்டு மென்றே கிழித்தெடுக்கப் பட்டிருக்கவேண்டுமென எனக்குத் தோன்றியது. மேலும் அக்கடிதம் ஒருமாதிரி விசித்திரமாக வும் காணப்பட்டது. இதோ நீங்களும் பாருங்கள். உங்களுக்கு இதில் ஏதாவது விசேஷமிருப்பதாகத் தோற்றவில்லையா?" என்று அக்காகிதத்துண்டைக் கர்னலிடங் கொடுத்தான்.

"ஒழுங்கீனமாக எழுதப்பட்டிருக்கின்றது. அவசரத்தில் வேகமாய் எழுதியிருக்கக்கூடுமென்று நினைக்கிறேன்" என்று கர்னல் சொன்னார்.

"இந்தக் காகிதம் இரண்டுபேர்கள் சேர்ந்து எழுதியிருக்க வேண்டும் என்பதிற் சந்தேகமேயில்லை. ஒருவர் மாற்றி ஒருவர் ஒவ்வொரு வார்த்தையாக எழுதியிருக்கிறார். ஒரு வார்த்தை அழுத்தமாயும் ஒருவார்த்தை லேசாயும் எழுதியிருப்பது தெரியவில்லையா? பதினொன்றே, சரியாக, மிகவும் என்றுள்ள இவ்வார்த்தைகளையும் முக்காலுக்கே, உனக்கு, உப, வேண்டாம் இவ்வார்த்தைகளையும் ஒப்பிட்டுப்பாருங்கள். பதினொன்றே என்பது முதலிய வார்த்தைகள் அழுத்தமாகவும், முக்காலுக்கே என்பது முதலிய வார்த்தைகள் மெதுவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன என்பது தெரியும்."

"ஆமாம். தாங்கள் சொன்னபிறகுதான் தெரிகிறது. பட்டப்பகலைப்போல அவ்வளவு வெளிப்படையாயிருக்கிற இந்த விஷயங்கள்கூட எங்கள் கண்ணுக்குப் புலப்படவில்லையே. இதுதான் உமக்கும் எங்களைப்போன்ற ஆட்டுக்குட்டிகளுக்கும் உள்ள வித்தியாஸம்! அதிருக்கட்டும். இந்தக் கடிதத்தை இவ்விதம்இரண்டு பேர் சேர்ந்து எழுதுவானேன்? ஒருவரே யெழுதுவதாயிருந்தால் என்ன பாதகம் வரும்?"

"எழுதியிருக்கிற விஷயம் நல்ல காரியத்திற்காக இல்லையென்பது உங்களுக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். மோச எண்ணத்தோடு எழுதியிருப்பதனால், ஒருவரையொருவர் நம்பாமல், அகப்பட்டால் இருவரும் அகப்படவேண்டும், தப்பித்துக் கொள்வதாயிருந்தால் இருவரும் தப்பித்துக்கொள்ளவேண்டும் என்று யோசனைசெய்துகொண்டு இவ்விதம் இரண்டுபேர்கள் எழுதியிருக்கிறார்கள். இதில் பதினொன்றே, சரியாக, மிகவும் என்ற வார்த்தைகளை யெழுதியவன்தான் இதில் முக்கியமானவன். அவனுடைய தூண்டுதலின் பேரிலும், அவனுடைய யுக்தியின் பேரிலுந்தான், இந்தக் காரியமானது நடந்திருக்கிறது."

"இது எப்படி யுமக்குத்தெரிந்தது? 'தட்டிப்பேச ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்' என்றபடி, நாம்

எதைச்சொன்னாலும், 'ஆமாம்' என்று தலையை யசைக்கிறவர்களாயிருக்கிறார்களே யென்று சொல்லுகிறீர்களோ?"

"அப்பா! நீங்களா ஒப்புக்கொள்ளுவீர்கள்? காரணம் சொன்னாலுங்கூட அரை மனதாய்த்தானே, 'சரி, அப்புறம்' என்கிறீர்கள். நான் சொல்வதற்கெல்லாம் இந்தக் காகிதத்துண்டு தான் ஆதாரம். இதிலிருந்துதான் நான் இந்தக் கேசைக் கண்டு பிடித்தேன். நீங்களும் மற்றொரு முறை இதைக் கவனித்துப் பாருங்கள். அழுத்தமாய் எழுதியிருக்கிற மனுஷ்யன் முதலில் தானெழுதவேண்டியவைகளை யெழுதி, மற்றொருவன் எழுதுவதற்காக இடையிடையே ஒவ்வொரு பதத்திற்கும்அப்புறம்கொஞ்சம் இடம் விட்டிருக்கிறான். இடம் விட்டவன் தக்கபடியாக இடம் விடவேண்டுமென்பதைக் கவனிக்கவில்லை. அதனால்தான் பின்னால் எழுதியவன் நிரம்பவும் சங்கடப்பட்டிருக்கிறான். முக்காலுக்கே என்ற பதத்தை யெழுதுவதற்கு இடம் போதவில்லை. உனக்கு என்ற வார்த்தைக்கு அவ்வளவு இடம் வேண்டுவதில்லை. ஆகையால்தான் முக்காலுக்கே என்பது மற்றொன்றோடு சேராமலிருக்கும்படி நெருக்கமாகவும், உனக்கு என்பது விலாசமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. ஊன்றிப் பார்ப்பீர்களாயின் நான் சொல்வது உங்களுக்குச் சரியென்று தோன்றும். கடைசி கடைசியாக, நாம் இக்காகிதத்துண்டால் அறிந்துகொள்ளக்கூடிய விஷயம் என்னவென்றால், ஒருவன் முதன்முதலில் இக்கடிதத்தில் சிற்சில வார்த்தைகளை யெழுதி மற்றொருவனுக்கு இடம் விட்டிருக்கிறான் என்பதும், மற்றொருவன் இடம்விட்டிருக்கிற இடத்தில் எழுதத்தொடங்கி, இடம் அதிகமாகவும் போதாததாகவும் இருந்தபடியால், அதற்குத் தக்கபடியாக எழுதவேண்டுமென்று யோஜித்து, வார்த்தைகளை விலாசமாகவும் நெருக்கமாகவும் எழுதியிருக்கிறானென்பதும், இவ்விருவருமே இக் கொலைக் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்களாயினும் முதலில் எழுதியவன்தான் இதில் தலைமையாயிருந்து இத்தகைய துராலோசனையைச் செய்திருக்கிறானென்பதுமேயாம்." இப்படிச் சொன்னதும் அங்கொரு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்த ஆக்டன் என்பவர் ஆச்சரிய முள்ளடங்காமல் எழுந்துநின்று, "ஹண்டர்! உம்முடைய சாமர்த்தி

யமே சாமர்த்தியம்!!" ஆச்சரியம், ஆச்சரியம்!!" என்று கூத்தாடினார்.

ஹண்டர் அவரைப்பார்த்து, "ஆச்சரியமுமில்லை. சாமர்த்தியமுமில்லை. உட்காருங்கள். வெளிப்படையாய்த் தெரிகிற விஷயத்தைக் கண்டுபிடிப்பது ஒரு சாமர்த்தியமா? கொஞ்சம் அறிவுள்ள எல்லாருந்தான் இதைக் கண்டுபிடித்துவிடுவார்கள். 'அப்படியானால் எங்களுக்கேன் தெரியவில்லை?' என்று நீங்கள் கேட்கக்கூடும். ஆழ்ந்து கவனிக்காத தோஷமேதவிர விஷயத்திலொன்றுமேயில்லை. கவனித்துப்பார்த்தால் உங்களுக்கும் ஆயிரம் விஷயங்கள் புலப்படும். இது போகட்டும்" என்று சொல்லித் திரும்பவும் எங்களைப்பார்த்து, "இன்னொரு விஷயம் நான் உங்களுக்குச் சொல்லவிரும்புகிறேன். அநேகமாக நீங்கள் இதை அறிந்திருக்கமாட்டீர்கள். அதென்னவென்றால், ஒருவன் கையெழுத்தைக் கொண்டு அவனுடைய வயது இன்னது என்பதை நிர்த்தாரணஞ் செய்துவிடலாம் என்பதுதான். நான் சொல்வது உங்களுக்கு வேடிக்கையாக இருக்கலாம். இருந்தாலும் விஷயம் மாத்திரம் உண்மையானதுதான். இங்ஙனம் கையெழுத்திலிருந்து வயதை நிர்ணயிக்கலாமென்பதைப் புத்திமான்களாகவுள்ளவர்களிற் பலர் பலமுறை பரீக்ஷித்தறிந்து அங்கீகரித்திருக்கிறார்கள். என் அநுபவத்திலும் பெரும்பாலும் இது சரியாயிருக்கிறது. பெரும்பாலும் என்று ஏன் சொன்னேனென்றால் எழுதினவர் சிறுவயதினராக இருந்தாலும், வியாதி அசக்தி முதலிய காரணங்களால் அதிக வயதுள்ளவர் எழுதினதுபோலச் சிற்சில சமயங்களில் காணப்படுவதனால்தான். இந்தக் காகிதத்திலும் பதினொன்றே முதலிய வார்த்தைகள் அழுத்தமாகவும், முக்காலுக்கே முதலிய வார்த்தைகள் மெதுவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. ஆகையால், அவ்விருவர்களில் ஒருவன் சிறுவயதினனென்பதும், மற்றொருவன் முதிர்ந்த வயதினன் என்பதும் கரதலாமலகம் போலத் தெரிகின்றன" என்றான். இப்படிச் சொன்னதும் திரும்பவும் அந்த ஆக்டன் என்பவர் ஆவேசங்கொண்டவர்போ லெழுந்து, "ஆச்சரியம்! ஆச்சரியம்!!" என்று கூத்தாடினார்.

"இன்னொரு சூக்ஷமமான விஷயமும் இதிற் கவனிக்க வேண்டும்" என்று ஹண்டர் எங்களைப்பார்த்து, "எழுத்தைத்

கொண்டு வயதை நிர்ணயிப்பது போலவே கிரீக், ப்ரெஞ்சு, இங்கிலீஷ், ஜர்மன் முதலிய எழுதினவரது ஜாதியையும் நிர்ணயித்துவிடலாம். அழுத்தமாகவும், மெதுவாகவும் எழுதப்பட்டிருக்கிறதென்றாலும் இக்கடிதத்திலுள்ள வார்த்தைகளெல்லாம் அமெரிக்கர்கள் எழுதும் மாதிரியாகவே எழுதப்பட்டிருந்தன. ஆகையால், இந்தக் கடிதம் எழுதினவர்கள் கன்னிங்ஹாமும் அவன் மகன் ஆலெக்குமாகிய இவ்விருவர்களுமாகத்தானிருக்கவேண்டுமென எனக்குச் சந்தேகமற விளங்கிற்று.

"இவ்வளவு விஷயங்கள் தெரிந்ததன்பேரில், 'சரி, இருக்கட்டும்; குற்றம் நடந்திருக்கிற மாதிரியையும் விசாரித்துப் பார்ப்போம். அதிலும் ஏதாவது சாதகமான அம்சங்கள் கிடைக்கும்' என்ற தைரியத்துடன் ஒன்றுகூட விடாமல் கேசு சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் விசாரிக்கத் தொடங்கினேன். இன்ஸ்பெக்டர் பாரஸ்டரோடு அந்த வீட்டிற்குப்போய்ப் பார்க்கக்கூடியவைகள் அனைத்தையும் பார்வையிட்டேன். இறந்துகிடந்த அந்த வண்டிக்காரனுடைய குண்டுக்காயத்தைப் பார்த்தபோது அது குறைந்தபக்ஷம் ஆறடி தூரத்திலிருந்தே சுடப்பட்டிருக்கவேண்டுமென்றும், 'இருவருமாகக் கட்டிப் புரண்டு கிடக்கும்போது திடீரென அத்திருடன் வண்டிக்காரனைச் சுட்டுத்தள்ளிவிட்டு ஓடிவிட்டான்' என்று ஆலெக் கன்னிங்ஹாம் சொன்னது நிஜமானால், சுடப்பட்டவனுடைய உடுப்புத் துணிகளில் மருந்து படிந்த கறுப்புக் கறைகள் காணப்படவேண்டுமென்றும், அப்படிக் காணப்படாததால் ஆலெக் சொன்னது அடியோடு பொய்யென்றும் எனக்கு வெளிச்சமாயிற்று. 'வேலியை முறித்துக்கொண்டு சாலையின் பக்கமாக ஓடிவிட்டான்' என்று தந்தையும் மகனும் ஒன்று சேர்ந்து சொன்ன வார்த்தையை எவ்வளவு தூரம் நம்பலாமென்று பார்த்தேன். சாலையின் பக்கத்தில் ஒரு விசாலமான பள்ளம் இருக்கிறது. திருடன் அந்த வழியாய் ஓடியிருக்கும் பக்ஷத்தில் ஈரத்தாக்கான அந்தப் பள்ள நிலத்தில் அவனுடைய அடிச்சுவடுகள் காணப்படவேண்டும். அவ்விடத்திலோ மனுஷ்யர்கள் நடந்துள்ள அடையாளம் ஒன்றுமே காணப்படவில்லை. ஆகையால், அவ்விரண்டு பேருஞ் சொன்னது, 'முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கிறது' போல் இருந்தது.

"வேற்றுள் ஒருவரும் உள்ளே பிரவேசிக்கவில்லை என்று நிச்சயித்துக் கொண்டது மன்றி, அப்பனும் மகனும் ஒன்று சேர்ந்தே வண்டிக்காரனைக் கொலைசெய்துவிட்டார்கள் என்றும் நான் நிச்சயித்துக்கொண்டேன். அங்ஙனம் நிச்சயித்துக்கொண்ட பிறகு, என்ன உத்தேசங்கொண்டு இவனைக் கொலை செய்தார்கள் என்ற விஷயத்தை ஆராயத்தொடங்கினேன். இங்ஙனம் ஆராயும்போது ஆக்டன் வீட்டில் நடந்த கன்னக்களவு என் ஞாபகத்திற்கு வந்தது. ஞாபகத்திற்கு வரவே, ஆக்டனுக்கும் கன்னிங் ஹாமுக்கும் சொத்துவிஷயமான வியவகாரம் ஒன்று நடந்து கொண்டிருக்கின்றது எனக் கர்னல் சொன்ன விஷயத்தையும் சம்பந்தப்படுத்திப் பார்த்தேன். சரி, வியாஜ்ஜியத்திற்கு ஆதாரமாக வுள்ள முக்கியமான பத்திரமொன்றைத் திருடிப்போவதற்காகத் தான் அலமாரியை யுடைத்திருக்கவேண்டுமென உடனே எனக்குப் பளிச்சென்று தோன்றியது."

இப்படிச் சொன்னதும் ஆக்டன் என்பவர் ஹண்டரைப் பார்த்து, "தாங்கள் நினைத்தது நிரம்பவும் சரி. பத்திரத்தை அடித்துக்கொண்டு போவதற்காகத்தான் வந்திருக்கிறார்கள். அதிற் கொஞ்சங்கூடச் சந்தேகமே யில்லை. தெய்வ சந்நிதியிற் பிரமாணம் வேண்டுமானாலும் நான் செய்யத் தயாராக இருக்கிறேன். ஏதோ நல்ல வேளைக் கடையாளமாக ஒரு முக்கியமான பத்திரத்தைத் திருட்டு நடந்ததற்கு முந்திய தினத்தில்தான் வக்கீலிடங் கொடுத்துவிட்டு வந்தோம். அதுமாத்திரம் அவர்கள் கையிற் சிக்கிவிடும் பக்ஷத்தில் என் வியாஜ்ஜியம் தோற்று விடும். அப்படியே என் சொத்துக்களை யெல்லாங் கட்டிக்கொண்டு விடுவார். நான் என் சொத்தையு மிழந்து மானத்தையு மிழந்து பரதேசியாய்ப் போய்விடவேண்டியது தான்."

"அப்படிச் சொல்லுங்கள். திருட்டுப்பயல்! அந்தப் பத்திரத்தை அடித்துக்கொண்டு போகவல்லவா வந்திருக்கிறான். 'பணம் பத்துவிதஞ் செய்யும்.' பணத்தைப் பெரிதென்று நினைத்தவனுக்குக் குணமேது, மணமேது? நான் அந்த ஆலெக் கென்பவன்தான் உங்கள் வீட்டில் திருடவந்திருக்கிறான் என்று நிச்சயித்ததுமாத்திரம் நிரம்பவும் துணிச்சலான காரியம். சாக்ஷியங்களிருந்தால் நான்

சின்னவன் பெரியவன் என்று பார்க்கவே மாட்டேன். நீங்களும் யோஜித்துப் பாருங்கள். உள்ளபடி திருடனாய் இருந்தால், கத்திரிக்கோலையும், புஸ்தகத்தையும், நெருப்புப்பெட்டியையுமா திருடுவான்? பத்திரத்தைப் பார்த்திருக்கிறான். அது அகப்படவில்லை. தன்பேரில் சந்தேகியாமல் இருப்பதற்காக ஏதோ திருடன் வந்த மாதிரியாகவும், ஒன்றும் அகப்படாமற் போகவே அவன் ஏதோ கையிலகப்பட்ட இரண்டொன்றை யெடுத்துக்கொண்டு போன மாதிரியாகவும் நினைக்கும்படி செய்துவிடவேண்டு மென்று இந்த அயோக்கியப்பயல் தன் கைக்கு அகப்பட்டதை எடுத்துக் கொண்டு வந்துவிட்டான். இவ்வளவு வரையில் நான் தீர்மானித்தும், பின்னும் பலவிஷயங்களில் எனக்குக் குழப்பமானது தீரவே யில்லை. காகிதத்தின் மற்றைப் பாகத்தையும் எப்படியாவது கண்டு பிடித்து விடவேண்டுமென்று, அதற்கான யோஜனைகளைச் செய்து பார்த்தேன். ஆலெக்கே வண்டிக்காரன் பிணமாய்விழுந்த பிறகு, அவன் கையிலிருந்து எடுத்துப் போயிருக்கவேண்டுமென்றும், அவகாச மில்லாததால் அநேகமாய்த் தன் வெளிச்சட்டைக் குள் (Dressing-gown) ளேதான் போட்டிருக்கவேண்டுமென்றும் தீர்மானஞ்செய்துகொண்டேன். கிழித்தெறிய நியாயமில்லை. கையெழுத்துத் தெரிந்துவிடக்கூடுமென்று அக்காரியத்தைச் செய்ய மாட்டான். வேறிடத்தில் வைத்திருப்பானென்று எண்ணுவதற்கோ சிறிதும் இடமில்லை. கூட்டங்கூடுகிற வரையில் அவன் அப்பிணத்தின் பக்கத்திலேயே இருந்திருக்கின்றான். உடனே இன்ஸ்பெக்டரும் போய்விட்டார். ஆகையால், வைத்திருந்தால் சட்டைப்பையில்தான் அது இருக்கவேண்டுமென்று எனக்குப் பட்டது. ஆனால், அங்கேயே வைத்திருக்கிறானா, பின்னர் அவகாசங் கிடைத்தபோது எடுத்துக் கொளுத்திவிட்டானா என்பது ஒரு பெரிய யோஜனையாய்ப் போய்விட்டது. அந்த சந்தேகத்தை நிவர்த்திசெய்து கொள்வதற்காகத்தான் வீட்டையெல்லாம் சுற்றிப்பார்க்கிற வியாஜத்தை வைத்துக்கொண்டேன்.

"நாம் வீட்டையெல்லாம் சுற்றிப்பார்க்கப் போனபோது இரண்டு கன்னிங்ஹாமும் நம்முடன் கூடவே வந்தார்களென்பது உங்களுக்கு ஞாபகமிருக்குமென்று நினைக்கிறேன். அவர்களுக்குக் காகிதத்தின் நினைவே உண்டாகக்கூடாது. கடிதம் என்று

வேறு கடிதத்தைச் சொன்னாலுங்கூட அவர்கள் விழித்துக்கொண்டு விடுவார்கள். இன்ஸ்பெக்டருக்கு இது தெரியவில்லை. 'ஒரே ஒரு முக்கியமான ஆதாரமிருக்கிறது—' என்று, 'அப்பா குதிருக் குள் இல்லை' என்கிற கதையாய் ஆரம்பித்துவிட்டார். காரியம் மோசம் போய்விடப் போகிறதென்று நினைத்து நான் எனக்கு மயக்கம் வந்து விட்டது போலப் பாசாங்கு செய்து இன்ஸ்பெக் டர் வார்த்தையை மாற்றிவிட்டேன். அந்தச் சமயம் நான் அந்த மாதிரி ஒரு மாயவித்தையைச் செய்யாத பக்ஷத்தில் கேசு அடி யோடு கெட்டுவிடும்."

"நல்ல காரியத்தைச் செய்தீர்! உண்மையாகவே வலிப்பு வந்துவிட்டதாக எண்ணி நாங்கள் பட்ட விசாரம் கொஞ்சமா? பார்ப்பவருக்குப் பாசாங்காகவா இருந்தது? கண்ணிருந்த மாதிரி யையும், வாய் கோணக் கோண இழுத்த மாதிரியையும் பார்த்து, ஐயோ! நடுங்கிப்போய்விட்டோமே. இத்தனையும் மாமாலமா? பலே! இந்த வேலையுந் தெரியுமா உமக்கு?" என்று சொல்லிக் கர்னல் ஹேய்டர் விழுந்து விழுந்து சிரித்தார்.

"வேஷம் சரியானபடி பலித்திருந்ததப்பா. அவ்வளவு மாயம் பண்ணுதவரையில் உள்ளபடி காரியம் கெட்டுப்போயி ருக்குமென்பதில் தடையில்லை. இருந்தாலும் நான் மிகுந்த விசா ரத்தோடுதான் இருந்தேன். வேஷம் என்பது இதுவரையில் தெரி யாது" என்றேன்.

"சமயத்துக்குப் பெரும்பாலும் உதவுகிற வித்தை இது தான்" என்று சொல்லி ஹண்டர் திரும்பவும் எங்களைப் பார்த்து, "நான் அந்த வலிப்பு வியாதியிலிருந்து நீங்கிவிட்டதாகப் பாவனை செய்து சமத்காரமாய் மெள்ள மெள்ள எழுந்திருந்தவுடன் நான் அந்தக் கிழவனை கன்னிங்ஹாமிடம் ஒரு விளம்பரத்தைக் கொடுத்து, அதில் அவன் கைப்படப் பதினொன்றே முக்காலுக்கு என்ற வார்த்தைகளை யெழுதும்படி ஒரு தந்திரம் செய்தேன். நானெழுதியிருப்பது தப்பென்று பரிஹஸித்துவிட்டு, அவன் அக்காகிதத்தில், பன்னிரண்டே முக்காலுக்கு என்று நானெழுதி யிருந்ததை அடித்துப் பதினொன்றே முக்காலுக்கு என்று எழுதி னான். இன்ஸ்பெக்டர் கொடுத்த காகிதத்துண்டில் கண்டிருந்த

பதினொன்றே முக்கால் என்பதனோடு ஒப்பிட்டுப் பார்த்தேன். நான் நினைத்தபடி இரண்டு கையெழுத்தும் ஒரே மாதிரியாகவே இருந்தது" என்றான்.

"என்னைப்போல முட்டாள் இந்த உலகத்திலேயே இல்லை. இவ்வளவு முன்னாலோசனையோடு மகா புத்திசாலித்தனமாய் நீ வேலை செய்திருப்பதை அறியமாட்டாமல் நான், உன்னை ஏளனங் கூடப் பண்ணினேனே. வியாதி குணப்படவில்லை, அதினுடைய தோஷந்தான் என்றுகூட நினைத்தேன். இப்படியா காரியம்?" என்று நான் சொன்னேன்.

"நானும் பார்த்தேன். நான் தவறிவிட்டதாக நினைத்து நீ விசாரப்பட்டது எனக்குத் தெரியும. இன்ஸ்பெக்டர் கண்ணைச் சிமிட்டினதும், அந்த ஆலெக் என்பவன் சிரித்ததும், வியாதியின் கோளாற்றினால் நான் இவ்விதம் தாறுமாறாக நடக்கிறேனென்று நீயும் கர்னலும் அனுதாபப்பட்டதும் என் கவனத்துக்கு வராமற் போகவில்லை. உனக்கு வருத்தத்தை யுண்டுபண்ணும்படி இரண்டொரு சந்தர்ப்பங்கள் நேர்ந்துவிட்டதைப்பற்றியும் நான் துக்கித்தேன். அதையெல்லாம் பார்த்தால் காரியம் நடக்குமா? பிறகு நாமெல்லோரும் ஒன்றாக மாடிக்குப் போனபோது நான் எதிர் பார்த்த அந்த வெளிச்சட்டையானது (Dressing-gown) கதவின் பின்னால் தொங்கிக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். ஒருவருமறியாமல் தனியாக அதைப் பரிசோதித்து விடவேண்டும். இதற்கு என்ன யுக்திசெய்யலாம் என்று யோஜித்தேன். உடனே ஒரு உபாயம் எனக்குத் தோன்றிற்று. பழத் தட்டுக்களும் கண்ணாடி சாமான்களும் வைத்திருந்த மேஜையைக் கவிழ்த்து உங்களுக் கெல்லாம் இரண்டு நிமிஷம் வரையில் வேலைகொடுத்துவிட்டு, நீங்கள் பராக்காயிருக்கும்போது உங்களுக்குத் தெரியாமல் அந்த அறைக்குப்போய், அங்கே கதவின் பின்னால் தொங்கிக்கொண்டிருந்த சட்டைப் பையைப் பரபரவென்று ஒவ்வொன்றாகப் பரிசோதித்தேன். உத்தேசித்தபடி அதில் அக்காகிதத்தைக் கண்டெடுத்தேன். உடனே அப்பன் மகன் இரண்டுபேர்களும் யமகிங்கரர்கள்போல என்னைவந்து பிடித்துக்கொண்டார்கள். நீங்கள் மாத்திரம் உத்தரக்ஷணத்தில் அங்கே வராதிருக்கும் பக்ஷத்தில்,

அவர்கள் என்னைக் கொன்றேயிருப்பார்கள். வண்டிக்காரன் பக்கத்தில் நானும் பிரேதமாகக் கிடக்கவேண்டியவன்தான். கிழவன் என்னை வாய் பேசமுடியாமல் தொண்டையை இரண்டுகையாலும் அழுந்தப்பிடித்து இறுக்கினான். ஆலக்கென்ற தடியன் மணிக்கட்டைப் பிடித்துத் திருகினான். நானோ என் உயிர்போனாலும் காகிதத்துண்டை விட்டுவிடுவதாயில்லை. எனக்கு எல்லாவிஷயமும் தெரிந்துவிட்டதாகையால், இனி உயிர்தப்பிப் பிழைக்க முடியாதென்றெண்ணி அவ்விருவர்களும் என்னைக் கொன்றுவிட வேண்டுமென்றே தீர்மானித்துவிட்டார்கள். உங்களுடைய சகாயத்தால்தான் நான் பிழைத்தேன்.

"பிறகு கொஞ்சநேரத்திற் கெல்லாம் நான் அந்தக் கன்னிங்ஹாம் என்பவனைக் கண்டு பேசினேன். 'என்ன உத்தேசத்தோடு வண்டிக்காரனைக் கொலை செய்தீர்கள்? உண்மையைச் சொன்னால் அதிகமாக இமிசைப்படாமலிருக்கலாம்' என்று சொன்னேன். அவன் சொல்வதாகத்தான் இருந்தான். மகனோ கெட்டபயல். நல்ல பாம்பைப்போலச் சீறிக்கொண்டிருந்தான். துப்பாக்கி மாத்திரம் கையிலகப்பட்டிருக்கும் பக்ஷத்தில் அவன் எல்லார் மண்டையையும் உடைத்துவிட்டுத் தன்னையும் சுட்டுக்கொண்டிருப்பான். நான் அவனைக்கண்டு, 'இவ்வளவுதூரம் ஆனபிறகு இனி உண்மையை யொளிப்பதில்தான் பயன் என்ன? செய்தது செய்துவிட்டீர்கள். மெய்யைச் சொன்னால், அதற்குத் தக்க லாபம் இல்லாமற் போகாது. உங்கள் சொத்தாவது பறிமுதல் செய்யப்படாமல் இருக்கும்' என்றேன். மகனுக்கு அப்போதும் உண்மையைச் சொல்லப் பிரியமில்லை. கிழவன் சொத்துக்கு ஆசைப்பட்டவனாதலால் நாம் போனாலும் நம் பேரப்பிள்ளையாவது சுகமாகக்காலங்கழிக்குமே என்கிற எண்ணத்தின்பேரில் உள்ளது உள்ள வண்ணமாக ஆதிமுதல் நடந்ததெல்லாவற்றையும் ஒன்று விடாமற் சொல்லிவிட்டான். ஆக்டன் வீட்டில் திருடப் போனபோது வண்டிக்காரனாகிய அந்த வில்லியம் கீர்வான் எப்படியோ பார்த்து விட்டானாம். பார்த்தவன் சும்மா இருக்காமல் அந்த ரகஸ்யத்தை வெளியிட்டுவிடுவதாக அடிக்கடி சொல்லிக்கொண்டு வந்தான். இப்படி அவன் பயமுறுத்தக்கவே ஆலெக் என்பவனுக்கு அவனைக் கொன்றுவிடவேண்டுமென்று தோன்றிற்று. என்னசெய்

யலாம் என யோஜித்துப் பார்த்திருக்கிறான். நல்ல நடுநிசியில் வீட்டுக்கு வரவழைத்துக் கொன்றுவிடவேண்டுமென்றுதீர்மானித்தபடியே கொன்றும் விட்டான். பாக்கித்துண்டும் அவன் கையிலகப்பட்டிருந்து, சாக்ஷியங்கள் சொல்வதையும் கொஞ்சம் முன்னாலேயே ஆலோசித்துச் சரிக்கட்டிச் சொல்லியிருக்கும் பக்ஷத்தில் இந்தக் கன்னிங்ஹாம் இருவரும் தப்பியிருப்பார்கள். எத்தனை ஹண்டர் முயன்றாலும் கண்டுபிடித்திருக்க முடியாது. 'விதியை வெல்ல மதியுண்டோ?' காலம் குறுகிவிட்டபடியால் அதற்குத்தக்க புத்தியும் செய்கையுந்தானே இருக்கும்" என்றான்.

"எல்லாம் சரிதான். பாக்கிக்காகிதம் எங்கே?" என்று நான் கேட்டேன்.

ஹண்டர் இரண்டு காகிதத்துண்டுகளையும் ஒன்று சேர்த்து எங்கள் முன் வைத்தான். அதில் பூரணமாக எழுதியிருந்ததெல்லாங்கூடி இதுதான்.

> இன்றிராத்திரி பதினொன்றே முக்காலுக்கே சரியாகக் கொல்லைப்புறம் வந்தால் மாரிஸ் உனக்கு மிகவும் உபசாரஞ் செய்வாள். இது பிறருக்குத் தெரிய வேண்டாம்.

நான் அந்தக் காகிதத்தைப் பார்த்துவிட்டு, "ஹண்டர்! இதன் அர்த்தமென்ன? தெரியவில்லையே, என்றேன்."

"அர்த்தமென்ன? அனர்த்தந்தான். என்ன காந்தத்தை வைத்தால் வில்லியம் சீர்வானை நடுநிசியில் இழுக்கலாம் என்று யோஜனை செய்துவிட்டான். காந்தத்தைக் காட்டிலும் காந்தை (-பெண்)தான் ஆண்பிள்ளைகளை இழுப்பதில் அதிகமான சக்தியையுடையதென்பது எல்லாருக்குந் தெரிந்ததுதானே. 'பேதையாய்க் காமம் பிடித்தார் பிழைப்பாரோ.' என்றபடி மாண்டு விட்டான். கொலையெல்லாம் ஒரு ஸ்திரீயின் சம்பந்தத்தாலேயேதான் அநேகமாக நடப்பதாயிருக்கும். இங்கே ஒரு பெண்ணினது பெயர்மாத்திர சம்பந்தமே போதுமானதாய்விட்டது. வெப்ஸ்டர்! கிராமவாஸம் பயன்பட்டுவிட்டது. ஊருக்குப்போவோம்வா" என்றுசொல்ல நாங்களிருவரும் கர்னல் முதலியவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு அன்றிரவே லண்டன்வந்து சேர்ந்தோம்.

விநோதமான வினவிடைப் பத்திரம்.

ஒரு நாள் மாரிக்காலத்தின்போது நான் எனது நண்பனான ஹண்டருடன் கணப்புச் சட்டியின் பக்கத்திலுட்கார்ந்து சுகமாய்க் குளிர் காய்ந்து கொண்டிருக்கையில், நான் அவனைப் பார்த்து, "ஹண்டர்! வீட்டை இப்படித்தான வைத்துக்கொள்வது? வாயிலெடுக்க வருகின்றதே. இங்கே இரண்டு கடிதாசி, அங்கே இரண்டு புஸ்தகம், மூலையில் நாலைந்து மருந்துக் குப்பிகள், மேஜையின்மீது பத்துப் பன்னிரண்டு சாமான்; அந்த நாற்காலியில் நாலு சுருட்டு, இந்த நாற்காலியில் நாலு சட்டை, இப்படியா இறைந்து கிடக்கும்? ஒழுங்காய் எதையெதை எங்கெந்த இடத்தில் வைக்கவேண்டுமோ அப்படி வைத்தால்தானே உட்காருவதற்காவது ரம்மியமாய் இருக்கும்? அழகில்லாமற் போனாலும் ஒழுங்காயும் சுத்தமாயுமாவது இருக்கப்படாதா?" என்று கோபித்துக்கொண்டேன்.

அதற்கு ஹண்டர், "ஆமாமப்பா! நீ சொல்வது சரியான காரியம். 'சருகரிக்க நேரமிருக்கிறதே யொழியக் குளிர் காய நேரமில்லை' யென்றபடி எனக்குக் கேசைப்பற்றிப் படிக்கவும், பரிசோதனை செய்து பார்க்கவும், வெளியிலே ஓடித்திரியவுந்தான் போது சரியாயிருக்கிறது. மேலும், காலத்திற் படுத்துத் தூங்குகின்ற உன்போன்ற சுகவாசியாக நானும் இருக்கும்பக்ஷத்தில் உன்னைக் காட்டிலும் நூறுமடங்கு சுத்தமாக வைத்துக்கொண்டிருப்பேன். சாப்பிடுவது, தூங்குவது, உட்காருவது, படிப்பது முதலிய ஒன்றிலாவது எனக்கு நியமமில்லை. படித்தால் படித்தது, தூங்கினால் தூங்கினது, உட்கார்ந்தால் உட்கார்ந்தது. இப்படித்தானே போதெல்லாம் போய்விடுகிறது. திடீரென்று அவசரகாரியம் ஏதாவது வந்துவிட்டால் அப்படியே போட்டது போட்டபடியாக உடனே போய்விடவேண்டியிருக்கிறது. என் காரியம் எப்படி நிலையில்லாமல் இருக்கிறதோ அப்படித்தான் என் வீடும் இருக்கிறது. அதற்கென்ன செய்யலாம்? என்றைக்

காவது ஒழிந்தவேளைகளில் எல்லாவற்றையும் ஒழுங்காக வைத்து விடத்தான் வேண்டும். எனக்குக்கூட இங்கே உட்காரப் பிடிக்க வில்லை" என்று சொன்னான்.

"ஹண்டர்! நீ சொல்வதொன்றும் சரியான சமாதானமாக வில்லையே. 'உதட்டிலே புண் மாடுகறக்க முடியவில்லை' என்கிறாயே. வேலைக்கும் சாமான்களை ஒழுங்காய் வைப்பதற்கும் என்ன சம்பந்தம்? காகிதங்களைக் கட்டாகக் கட்டி ஒரு பெட்டியிற் போட்டுவைத்தால் கேசு நடக்காதோ? இப்படி வெளியிற் கண்ட இடத்தில் இறைந்திருந்தால் தான் சுருசுருப்பாய் வேலை நடக்கும் போலிருக்கிறது?" என்று பரிஹஸித்தேன்.

"நீ சொல்வதற்கும், பரிஹாஸஞ் செய்வதற்கும் கணக் கென்ன? மனத்திற்குத் தோன்றியதைச் சொல்லிவிட வேண்டியதுதானே. 'நோவஞ்சா தாரோடு நட்பும்' என்றபடி பிறனுடைய கஷ்டநிஷ்டூரங்களொன்றையும் அறியாத உன்னோடு பழகுவது நிரம்பவும் சிரமமான காரியம்" என்றான்.

"மன்னிக்கவேண்டுந் துரையே! இவ்வளவு கோபித்துக் கொள்ளக் கூடாது. நான் அத்தனைக்குப் பாத்திரனல்லன். உன் வீட்டை நீ சுத்தமாக வைத்துக்கொள்ளாமற்போனால் என் வீட்டு மாடு புல்லுத் தின்னுமோ? நல்லதைச் சொன்னேன். கேட்டாற் கேள். விட்டால் விடு. ஒழிந்த வேளையில் சுத்தமாக வைக்க வேண்டுமென்றையே. இன்றைக்கு என்ன நிர்ப்பந்தமோ தெரிய வில்லை. நாள் நல்ல நாளாக இல்லையோ?" என்று திரும்பவும் பரிஹஸித்தேன்.

"வெப்ஸ்டர்! விடமாட்டாய் போல இருக்கிறது. உன் மனத்திற்குத்தான் அசமாதானத்தை உண்டு பண்ணுவானேன்? இதோ பத்து நிமிஷத்தில் ஒழித்து ஒழுங்காய் வைத்து விடுகிறேன்" என்று சொல்லி உள்ளே போய் ஒரு தகரப் பெட்டியை யெடுத்துவந்து அதை நட்ட நடுவில் வைத்து எதிரே ஒரு நாற் காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு ஒவ்வொரு காகிதக் கட் டாகக் கீழே கிடந்தவற்றையெல்லாம் எடுத்து அப்பெட்டியில் வைத்தான். ஒவ்வொரு காகிதக் கட்டும் சிவப்புக் கயிற்றால் கட் டப்பட்டிருந்தது. ஒவ்வொரு கட்டின்பேரிலும் குறிப்புக்காகச்

சில சில வார்த்தைகள் எழுதப்பட்டிருந்தன. நான் அவற்றில் இரண்டொன்றைப் படித்துப் பார்த்தேன். டார்லீட்டன் கொலை (Tarleton Murder) வாம்பாரி வியாபாரி (Vamberry Merchant) ருஷியா தேசத்துக் கிழவி (The Old Russian Woman) குளோரியா ஸ்காட் (The Gloria Scott) என்று இப்படிப் பல விதமாக எழுதியிருந்தன.

ஹண்டர் என்னைப்பாாத்து, "என்ன பார்க்கிறாய்? வெப்ஸ்டர்! பெட்டிக்குள் இருப்பவைகள் எல்லாம் ஒவ்வொரு கேசின் நடவடிக்கைகளாகத்தான் இருக்கும். நான் அவற்றிலே இரண்டொன்றை உனக்குச் சொல்ல ஆரம்பித்தால், நீ இருக்கிற காகிதத்தைப் பெட்டிக்குள் வைக்கச்சொன்னது போக, பெட்டிக்குள் இருப்பவற்றையும் ஒவ்வொன்றாய் வெளியிலே யெடுக்கும்படி சொல்லுவாய் என்று நினைக்கிறேன்" என்று சொன்னான்.

"இவைகளெல்லாம் ஆரம்பகாலத்தில் நடந்த கேசுகளின் நடவடிக்கைகளோ? இவைகளைப்பற்றியும் நான் சுருக்கமாக எழுதவேண்டுமென்று அநேகந் தடவைகளில் எண்ணியிருக்கிறேன். சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. என்னென்ன கேசுகள் அபூர்வமானவைகள்? சொல் பார்ப்போம்" என்று ஹண்டரைக் கேட்டேன்.

"வெப்ஸ்டர்! நீ செய்யச் சொன்ன வேலை யென்ன? இப்போது கேட்கிற சங்கதி யென்ன? வெளியிற் கிடக்கிற சாகிதம் போதாதென்று பெட்டிக்குள் இருக்கிற காகிதத்தையும் வெளியிலெடுக்க வழிதேடிவிட்டாயே. சற்று நேரத்திற்குமுன் என்னைக் கோபித்துக்கொண்டாயே. பார்த்துக்கொள் உன் காரியத்தை" என்று புன்னகைசெய்து திரும்பவும் என்னைப்பார்த்து, "வெப்ஸ்டர்! இவையெல்லாம் நீ என் சரித்திரத்தை யெழுதி என்னைப்பெருமைப்படுத்தத் தொடங்கியதற்குமுன் நடந்த கேசுகள். இவைகள் பற்பல விஷயங்களைப் பற்றியனவாய் இருக்கும். பச்சைக் கயிற்றால் கட்டியிருப்பவைகளெல்லாம் சரித்திரசம்பந்தமானவைகள். நீலக்கயிற்றால் கட்டியிருப்பவைகளெல்லாம் திருட்டு சம்பந்தமானவைகள். இப்படி பலதிறப்பட்டிருக்கும். எல்லாவற்றையும் சொல்வதானல் அதற்கு இப்போது அவகாசமில்லை. ஒன்றே

இரண்டோ, இஷ்டப்படுவதைச் சொன்னால் நான் சொல்லுவதற் காக்ஷேபமில்லை" என்று சொன்னான்.

"சரி, சரித்திரசம்பந்தமான ஒரு கேசை யெடு. உன் வேலைத்திறம் எப்படியிருக்கிறதென்று பார்ப்போம். மற்றவை களை யெல்லாம் ஒழுங்காய் எடுத்துவைத்துப் பூட்டிப் பெட்டியை உள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டுவா" என்றேன்.

"நல்லது, அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிப் பச் சைக்கயிற்றால் கட்டியிருந்த ஒரு காகிதக்கட்டை என்னிடங்கொ டுத்துவிட்டுப் பெட்டியை உள்ளே கொண்டுபோய் வைக்கப்போ னான். நான் அக்கட்டின் மீது எழுதியிருந்ததை வாசித்துப்பார்த் தேன். 'விநோதமான வினாவிடைப் பத்திரம்' என்று எழுதி யிருந்தது. நான் அந்தக் கேசைப்பற்றி அடிக்கடி ஹண்டர்சொல் லக்கேட்டிருந்தேனாதலால், அவன் திரும்பிவந்தவுடன், "நல்ல கேசைத்தான் பொறுக்கியெடுத்திருக்கிறாய். ஹண்டர்! நீ இதற்கு முன்னே எத்தனையோதரம் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறாய். ஆனால், ஸ்தூலமாகச் சொல்லியிருக்கிறாயே தவிர விவரமாகச் சொன்னதில்லை. ஆகையால், இம்முறை விவரமாகச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக்கொண்டேன்.

"போகட்டும். இவ்வளவுதூரம் சொன்னதே பெரிய காரி யம். இங்குள்ள அசுத்தமான இடத்தைப்பார்த்து, பிடிக்காமல் எங்கேஓடிவிடப்போகிறாயோவென்று பயந்துகொண்டிருந்தேன். பொறுமையோடு சற்றுநேரம் இருந்து கதைகேட்கஒப்புக்கொண் டது என் பாக்கியந்தான்" என்று சொல்லிக் கேசை ஆரம்பித் தான்:—

"முதன்முதலில் நான் இந்த லண்டன்பட்டணத்திற்கு வந்த போது பிரிட்டிஷ் பொருட்காட்சிச்சாலை(British Museum)க்குச் சமீபமாகவுள்ள மாண்டேக் வீதியில் (Montagne Street) ஒரு வீட்டைக் குடிக்கூலிக்குப் பேசிக்கொண்டு அதில் குடியிருந்துவந் தேன். இப்போதிருப்பதுபோல முன்னம் அதிகமான கேசு கள் இல்லாதிருந்தபடியால் எனக்கு அதிக அவகாசம் இருந்தது நான் அக்காலத்தையெல்லாம் வீணாக்காமல் சாஸ்திர ஆராய்ச்சி யிலேயே செலவழித்துவந்தேன். அபூர்வமாக என்றைக்காவது

இரண்டொரு கேசுகள் வரும், காலேஜில் படிக்கும்போது துப்பறியும் விஷயத்தில் எனக்குள்ள திறமையைவியந்து பாராட்டிய எனது நண்பர்கள், தங்களுக்கு வேண்டியவர்கள் யாருக்காவது கேசு இருந்தால், அதை என்னிடம் கொடுக்கும்படி சிபார்சுசெய்து வந்தார்கள். இவ்விதமாய்த்தான் அந்த இரண்டொரு கேசுகளும் வந்தன.

"இப்போது நான் உனக்குச் சொல்லப்போகிற வினாவிடைப் பத்திரத்தைப்பற்றிய கேசும் எனக்கு என்னுடைய பள்ளிக் கூடத்துச் சிநேகிதர்களில் ஒருவராகிய மஸ்கிரேவ் (Musgrave) என்பவர் கொடுத்ததுதான். நான் பாடுபட்டுக் கண்டுபிடித்த கேசுகளில் இது மூன்றாவதாகும். இந்தக் கேசு பிறரெவராலுங் கண்டுபிடிக்கக்கூடாத அவ்வளவு தூருகமானதாயும், சங்கிலிப் பின்னலாய்ப் பற்பல கேசுகளுக்கு ஆதாரமானதாயு மிருந்தது. மஹா புத்திசாலிகளான போலீஸ் வீரர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து வேலை செய்து பார்த்து, முடிவில் இது அசாத்திய மென்று கைவிட்டுவிட்டார்கள். நான் இதை எப்படியோ கண்டு பிடித்துவிட்டேன். ஆத்ம ஸ்தோத்திரத்தில் ஆரம்பித்துவிட்டா னென்று எண்ணாதே. இந்தக் கேசைக் கண்டுபிடித்ததிலிருந்து தான் எனக்கு இவ்வளவு பிரஸித்தியும் பிரக்யாதியும் உண்டாயின.

"இந்த மஸ்கிரேவ் என்பவர் நான் படித்த காலேஜில்தான் படித்துக்கொண்டிருந்தார். படிக்குங் காலத்தில் எனக்கும் அவருக்கும் அதிக சிநேகமில்லை. இரண்டொரு தடவை மாத்திரம் தனியே சந்தித்துப் பேசியிருக்கின்றேன். அதனால், சொற்ப பரிச்சயமாத்திரம் உண்டு. படிப்பில் அவர் அத்தனையாகச் சமர்த்தர் அல்லர். அதிக புத்திசாலியாயும் இல்லாமல், மந்தமாயுமில்லாமல், நடுத்தரமாக இருந்துகொண்டிருப்பார். ஆனால், பார்வைக்கு மாத்திரம் அதிபுத்திசாலி போலத்தான் காணப்படுவார். ஆகிருதி மிகவும் அழகாயும், காம்பீர்ய முள்ளதாயுமிருக்கும். அவரை யார் பார்த்தாலும் ஒரு பெரிய மனுஷயர் என்றுதான் மதிப்பார்கள். உள்ளபடி அவர் ஒரு உயர்ந்த சந்ததியைச் சேர்ந்தவர் தாம். இங்கிலாந்தின் பழங் குடிகளில் ஒன்றாகிய மஸ்கிரேவ் வமிசத்தைச் சேர்ந்தவரென்றும், பதினாறும் நூற்றாண்டின்

தொடக்கத்தில் அவ்வமிசத்தி னின்றும் பிரிந்து ஸஸ்ஸெக்ஸ், (Sussex) என்னுமிடத்தில் குடியேறிய ஒரு கிளையின் பரம்பரையில் உதித்தவரென்றும் பின்னால் எனக்குத் தெரியவந்தது. அவர் குடியிருக்கும் வீட்டையும் நான் ஒருதரம் பார்த்திருக்கிறேன். அங்குள்ள வீடுகளிலெல்லாம் அதுதான் மிகப் பழமையானது. மஸ்கிரேவ் என்பவரைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு அவர் பழமையான வீடும் ஞாபகத்திற்கு வந்துவிடும். எடுப்பான சாளரங்களும், உன்னதமான பெரிய ஸ்தம்பங்களும், அகலமான பெரிய பெரிய கதவுகளும் இன்னமும் என் கண்ணெதிரிலேயே நின்றுகொண்டிருக்கின்றன. நானும் மஸ்கிரேவும் ஒருநாள் வெகு நேரம் வரையில் அங்குள்ள ஒரு கூடத்தின் பக்கத்தில் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்ததும், அப்போது அவர் எனது துப்பறியும் சாமர்த்தியத்தைப்பற்றிப் பலவாறு புகழ்ந்துரைத்ததும் எனக்கு நேற்று நடந்ததுபோல நன்றாக ஞாபகத்திலிருக்கின்றது. பள்ளிக்கூடத்தைவிட்டுப் பிரிந்தபிறகு எங்களிருவருக்கும் சந்திப்பு நேரவில்லை. நாலைந்துவருஷ காலமாக எனக்கு அவரைப்பற்றி ஒன்றுமே தெரிவதற் கிடமில்லாமற் போய்விட்டது.

"இப்படியிருக்கையில், ஒருநாள் அதிகாலையில் அவர் நான் இருக்குமிடத்தை எப்படியோ விசாரித் தறிந்துகொண்டு, மாண்டேக் வீதியிலுள்ள என் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். ரூபம் கொஞ்சம் மாறியிருந்தாலும் நடையுடைகளெல்லாம் முன்போலவே காணப்பட்டன. நான் அவரை அந்தரங்க விசுவாசத்தோடு எதிர்சென்று உபசரித்து நாற்காலியில் உட்காரவைத்து, "என்ன மஸ்கிரேவ்! முன்னிருந்த விமரிசையெல்லாம் போய்விட்டாற்போலிருக்கிறதே?" என்று கேட்டேன்.

"என் தகப்பனார் இறந்துவிட்ட சமாசாரத்தைக் கேள்விப்பட்டிருப்பீர்களென்று நினைக்கிறேன். அவர் போய், சரியாக இரண்டு வருஷமாகிறது. குடும்ப யோகக்ஷேமங்களைப் பரிபாலிக்கவேண்டிய பொறுப்பெல்லாம் என்னுடையதாய்ப் போய்விட்டது. பொது நன்மையான காரியங்களிலும் இரண்டொரு ஸ்தானங்களை நிர்வகிக்கவேண்டியிருக்கிறது. இப்படி நாலு பக்க

மும் வேலைகளிருந்துகொண் டிருப்பதனால் கொஞ்சம் உற்சாகக் குறைவுதான். அஃதிருக்கட்டும். நீங்கள் க்ஷேமமா யிருக்கிறீர்களா? படிக்குங் காலத்தில் எந்த சக்திகளைக்கொண்டு எங்களையெல்லாம் பிரமிக்கச்செய்தீர்களோ அந்தச்சக்தியையே இப்போது ஜீவனோபாயமாக வைத்துக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அப்படித்தானே?'' என்றார்.

"' ஆம். அதைத்தான் நான் என் பிழைப்புக்கு ஏதுவாக வைத்துக்கொண்டிருக்கிறேன். சர்க்கார்ச் சம்பளமும் சொற்பம் வந்துகொண்டிருக்கிறது'' என்றேன்.

"' கேட்கக் கேட்கச் சந்தோஷமாயிருக்கிறது. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்றபடி பள்ளிக்கூடத்திற்படித்துக் கொண்டிருக்கும் போதே நீர் ஜகத்பிரஸித்தமான ஒரு மஹாபுருஷராக விளங்குவீரென்று நாங்களெல்லாரும் பேசிக்கொள்வது வழக்கம். நாங்கள் உத்தேசித்ததற்கென்ன? நீர் இப்போது இருப்பதற்கென்ன? எண்ணியபடி நல்ல கியாதியோடுதான் பிரகாசித்துக்கொண்டிருக்கிறீர். சிநேகிதர் ஒருவர் நல்ல ஸ்திதியிலிருந்தால் அதைக்காட்டிலும் வேறு என்ன லாபம் இருக்கிறது? 'பண்புறு நேசன் ஒருவனைப் படைத்தல் பருந்தனப் பொதிபெற்றாற் போலும்' என்ற பெரியோர் வாக்கியம் பொய்யாகுமா? நீர் இந்தப் போலீஸ் உத்தியோகத்திலிருப்பது எங்களுக்கெல்லாம் ஒருவித தைரியத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. இன்றைக்கு இங்கே வந்ததுங்கூட ஒரு கேசுவிஷயமாக உம்மை ஆலோசனை கேட்பதற்காகத்தான். நான் இருக்கும் ஹர்ல்ஸ்டோன் (Hurlstone) என்னுமிடத்தில் சிற்சில அபூர்வமானகாரியங்கள்நடந்துவிட்டன. போலீஸ்காரர்களும் தங்களாலானவரையில் பாடுபட்டுப்பார்த்தார்கள். கொஞ்சமாவது வெளிப்படவில்லை. 'கண்டுபிடிப்பது அஸாத்தியமாகத் தோற்றுகிறது' என்று நேற்றைத்தினம் சொல்லிவிட்டார்கள். உம்மிடத்திலும் சொல்லிப் பார்ப்போம் என்று வந்தேன். காரியம் என்னவோ எளிதிற் கண்டுபிடிக்கக் கூடியதாகத் தோற்றவில்லை' என்று சொன்னார்.

"' வெப்ஸ்டர்! அவர் சொல்லும்போது நான் அதை எவ்வளவு ஆவலாயும் கவனமாயும் கேட்டிருப்பேனென்பதை நீயே

யோஜித்துக்கொள்ளவேண்டியது. ஒரு வேலையுமில்லாமல் சாஸ்திர ஆராய்ச்சிசெய்துகொண்டு போதுபோக்கிவந்த எனக்கு ஒரு கேசு என்றதும், உண்மையாய்ச் சொல்லுகிறேன், ஒரு புதையல் அகப்பட்டதுபோலவேதான் இருந்தது. மேலும், போலீஸ்காரர்களெல்லாரும் பிரயோஜனமில்லை என்று சொல்லிவிட்டார்கள் என்ற விஷயம் பின்னும் எனக்கு அதிக உற்சாகத்தையும் ஸந்தோஷத்தையும் உண்டுபண்ணிற்று. பிறரால் கண்டுபிடிக்க முடியாததொன்றைக் கண்டுபிடித்தோமென்கிற ஒரு பெயரை வாங்க வேண்டுமென்ற மமதை எனக்கிருந்து கொண்டிருந்தது. அதைப் பரீக்ஷைசெய்து பார்ப்பதற்குச் சரியான ஒரு ஸந்தர்ப்பம் வாய்த்ததைப்பற்றி எனக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை. ஆகையால், நான் என் நண்பராகிய அந்த மஸ்கிரேவ் என்பவரைப் பார்த்து, 'தயை செய்து விஷயங்களை விவரமாய்ச் சொல்லப் பிரார்த்திக்கிறேன்' என்று பரபரப்புடன் கேட்டேன்.

"அவர் எனக்கெதிரில் உட்கார்ந்து, என்னால் கொடுக்கப்பட்ட ஸிகரெட்டைப் (Cigarette) பற்றவைத்துப் பிடித்துக்கொண்டபடியே என்னைப்பார்த்து, 'ஹண்டர்! நான் இன்னமும் கலியாணஞ் செய்துகொள்ளாமல் பிரமசாரியாகவே இருக்கிறேனென்பது உமக்குத் தெரியுமே. அப்படியிருந்துங்கூட, நான் அநேகம் வேலைக்காரர்களை வைத்துக்கொண்டிருக்கிறேன். நான் இருக்கும் வீடு கட்டுக்கோப்பாயில்லாமல் இறைசலாயும் பெரிதாயு மிருக்கிறபடியால் எனக்கு அத்தனை வேலைக்காரர்கள் வேண்டியிருக்கிறது. சிநேகிதர்களும் எனக்கு அதிகமாயிருப்பதால் அடிக்கடி நான் அவர்களை விருந்துக் கழைப்பது வழக்கம். அப்படிப்பட்ட சமயங்களில் மனுஷ்யக் கட்டில்லாமல் நான் என்ன செய்யமுடியும்? கலியாணமாகாத எட்டுப் பணிப்பெண்கள், ஒரு சமையற்காரன், ஒரு பரிசாரகன், இரண்டு வேலையாட்கள், கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்பதற்காக ஒருபையன் இவர்கள் இருக்கிறார்கள். இதைத்தவிரத் தோட்டக்காரர்களிலும் நான்குபேர்கள் உண்டு. குதிரைகளைப் பார்ப்பதற்காகவுள்ள சிப்பந்திகள் வேறு. பிரத்தியேகமாக அவர்களுக்குச் சம்பளங் கொடுத்துவிடுகிறேன். இவ்வளவுபேர்களிலும் எங்களிடத்தில் அதிக நாளாக வேலை பார்ப்பவன் பிரண்டன் (Brun-

ton) என்ற பரிசாரகன் ஒருவன்தான். அவன் எனது தகப்பனுர் காலத்தில் வேலைக்குவந்தவன், அதற்கு முன்பு எங்கேயோ ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயாக இருந்தானும். அவன் அரை நிமிஷம் சும்மா இருக்கமாட்டான். ஏதாவதொன்றைச் செய்து கொண்டுதான் இருப்பான். சோம்பல் என்பது அவன் பெயரைச் சொன்னவர்களுக்கும் உண்டாகாது. நல்ல நடவடிக்கை யுள்ளவனுப் நம்பிக்கைக்கு யோக்கியனுகத்தான் இருந்தான். அதனுல் என் தகப்பனுருக்கு மற்றெல்லாரையும் விட அவனிடத்தில் அதிகமான பிரியம் உண்டு. வளர்ந்த பெரிய சரீரமும், பரந்த முகமும், விசாலமான நெற்றியும், நீண்ட கண்களும் உள்ளவன். அவன் எங்களிடத்தில் வந்து இருபது வருஷங்களாகின்றன. இருந்தாலும் அவனுக்கு நாற்பது வயதுக்கு அதிகம் இராது. சங்கீதத்தில் நல்ல பரிசயமுள்ளவன். கல்லுங் கரைந்து உருகும்படியாக அவ்வளவு நன்ருகப் பாடுவான். ஐந்தாறு விதமான வாத்தியங்களும் வாசிக்கத் தெரியும். பற்பல பாஷைகளை அப்பியசித்திருந்ததால் அவன் யாரோடுந் தாராளமாய்ப் பேசுவான். இவ்வளவு யோக்கியதையுள்ள மனுஷ்யன் எங்களிடத்தில் இத்தனை காலம்வரையில் வேலைக்கிருந்ததானது மிகவும் ஆச்சரியப்படத்தக்க விஷயம். பரிசாரக விருத்தியில் இருக்கிருேமேயென்று மனக்குறைப் பட்டதையாவது, வேறு நல்ல வேலைகளுக்குப் பிரயத்தனப்பட்டதையாவது நாங்கள் பார்த்ததுமில்லை, கேள்விப் பட்டதுமில்லை. கிடைக்கிற சம்பளத்தில் திருப்தியுடையவனுய் எங்களிடத்தில் பரம பிரீதியோடு கூடத்தான் இருந்தான். எங்களை யார் கண்டாலும் சரி, 'உங்களிடமிருக்கிற அந்தப் பரிசாரகனுகிய பிரண்டன் சுகமாக இருக்கிறுனு?' என்று அவனைப்பற்றி விசாரிக்காமல் இருக்கமாட்டார்கள். என்னுடைய சிநேகிதர்களுக் கெல்லாம் என்னிடத்தில் எவ்வளவு பிரியமுண்டோ அவ்வளவு பிரியம் அந்தப் பரிசாரகனிடத்திலு முண்டு.

"'ஆனுல், அந்த பிரண்டனிடத்தில் ஒரே ஒரு துர்க்குணம் மாத்திரந்தான் இருந்தது. அவன் கொஞ்சம் இடம்பத்திற்கு ஆசைப்பட்டவன். தன் விருத்திக்குத் தக்கபடி அடக்கவொடுக்கமாக இருக்கமாட்டான். பார்த்தால், அவனை யாருமே பரிசாரகனென்று மதிக்கமாட்டார்கள். புதிதாக வருபவர்களெல்லாரும்

அவனையே வீட்டிற்கு யஜமானனாக நினைத்து மரியாதைசெய்வதை நான் பலமுறையும் பார்த்திருக்கின்றேன். அவ்விதம் நினைக்கும் படி அவன் அவ்வளவு படாடோபமாக இருப்பான். படிக்க, பாட, பேச நன்றாய்க் கற்றிருக்கிற ஒருவன் கேவலம் பட்டிக் காட்டாளாக இருப்பது ஸாத்தியமா என்று நானும் அதை அவ்வளவாகக் கவனிப்பதில்லை. அவன் தன் மனைவியுந் தானுமாய் இருக்கிறவரையில் அவனால் எங்களுக்கு எவ்வித உபத்திரவமும் இல்லாதிருந்தது. இப்பால், அவன் மனைவி இறந்துவிட்ட பிறகு, தினமும் அவனைப்பற்றிய கேசுகளை விசாரிப்பதுதான் எங்களுக்கு வேலையாய்ப் போய்விட்டது. நாங்களும் பழகிய தோஷத்தால் ஆனவரையிற் பொறுத்துப் பார்த்தோம். சகிக்கக்கூடியதாயில்லை. அதனால் ஒருநாள் நான் அவனைக் கடுமையாகக் கோபித்துக்கொண்டேன். சீக்கிரம் விவாகஞ் செய்துகொள்வதாகச் சொன்னான். எங்கள் வீட்டுப் பணிப்பெண்களிலொருத்தியாகிய ராச்சல் ஹோவெல்ஸ் (Rachel Howells) என்பவளைக் அவன் கல்யாணஞ் செய்துகொள்வதாக ஏற்பாடு செய்திருந்தான். கொஞ்ச நாள் வரையில் இருவரும் பரஸ்பரம் பிரீதியோடு வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று என்ன புத்தி தோன்றிற்றோ தெரியவில்லை; அவளைக் கலியாணஞ் செய்துகொள்ளாமல், ஜேனெட் டிரிஜிலிஸ் (Janet Tregellis) என்கிற மற்றொரு பணிப்பெண்ணைக் கலியாணஞ்செய்துகொண்டான். ராச்சல் என்பவள் நல்ல பெண். அமர்ந்த ஸ்வபாவமுடையவள். பூமியதிர அவள் நடந்ததை நான் பார்த்தறியேன். மானி. பிரண்டன் தன்னை விவாகஞ் செய்துகொள்ளாமல் தன்னினும் அழகு, படிப்பு, பதவி முதலிய எல்லாவற்றிலுங் குறைந்தவளான தனக்குக் கீழ்ப்பட்ட ஒரு வேலைக்காரியை விவாகஞ் செய்துகொண்டதைப்பற்றி மிக்க விசாரமடைந்து அதுவே ஏக்கமாய்த் துரும்பாக இளைத்துப் போய்விட்டாள். அத்தோடுகூட வீட்டிலேயே வளைய வந்துகொண்டிருந்தாள். அதுவும் ஒருவாரம்முன்பு வரையில்தான். பின்னர் விசாரிக்கும்போது அவள் போன இடம் தெரியவில்லை. இது ஒரு விஷயம். இதைப்பற்றிக்கூட நாங்கள் அதிகமாகப் பாராட்டாமலிருக்கும்படி அடுத்தாற்போல மற்றொரு விஷயமும் ஏற்பட்டுவிட்டது. அதுதான் இப்போது

பெரிய விசாரமாயிருக்கிறது. நான் அந்தப் பரிசாரகனை பதினைந்து நாளுக்கு முன்னல் வேலையினின்றும் விலக்கிவிட்டேன். அதனல் தான் இத்தனைதூரம் துன்பங்களெல்லாம் விளைந்திருக்கவேண்டு மென்று ஊகிக்கும்படியாய் இருக்கிறது' என்றார்.

"நான் அவரைப் பார்த்து, 'நீங்கள் எதற்காக அவனை வேலையினின்றும் விலக்கினீர்கள்?' என்று கேட்டேன்.

"அதற்கு அந்த மஸ்கிரேவ் என்பவர், 'காரணம் சாதாரண மானதுதான். நான் அந்த மனுஷ்யன் நல்ல புத்திசாலியென்று சொல்லியிருக்கிறேனல்லவா? அவனுடைய புத்திசாலித்தனந்தான் முடிவில் அவனைக் கெடுத்துவிட்டது. அவன் தனக்குச் சம்பந்த மில்லாத விஷயங்களிலெல்லாம் தனக்குக் கொஞ்சம் ஞானமிருப் பது காரணமாகப் பிரவேசிக்கத் தலைப்பட்டுவிட்டான். அந்தப் பிரவேசமும் இவ்வளவுவரையில் உசிதம், இதற்குமேல் அனுசிதம் என்பதையும் அவன் யோஜிக்கவில்லை. அப்படி அளவுக்கு மிஞ் சிப்போன விஷயம் தற்செயலாய் ஒருநாள் நான் பார்க்கும்படி நேர்ந்துவிட்டது.

"'நான் இருக்கும் வீடானது பலகட்டுக்களாய்ப் பிரிந்திருக் கின்றது என்பது உமக்குத் தெரிந்ததுதானே. போனவாரத்தில் ஒருநாள்—ஆம், செவ்வாய்க்கிழமை யன்று இராத்திரி—நான் சாயங்காலம், தெரியாத்தனமாய்ப் பலமான காப்பியைக் குடித்து விட்டபடியால், என்ன படுத்துப் பார்த்தும் தூக்கம் வராமல் சங் கடப்பட்டுக்கொண்டிருந்தேன். மணிபன்னிரண்டாச்சு, ஒன்றாச்சு, இரண்டாச்சு, அப்போதும் தூக்கம் வருவதாயில்லை. சரி, இனித் தூக்கம் வரப் போகிறதில்லை என்று தீர்மானித்துக்கொண்டு, காலை யிற்படித்துக்கொண்டிருந்த கதைப்புஸ்தகத்தையாவது படிக்க லாம் என்ற எண்ணத்துடன் விளக்கை யேற்றினேன். புஸ்தகம் மேஜையின்மீது இல்லை. பந்தடிக்கிற இடத்தில் வைத்துவிட்ட ஞாபகமாக இருந்தது. அங்கே போய் எடுத்துக்கொண்டு வரு வோம் என்ற உத்தேசத்தோடு சட்டையைப் (Dressing-Gown) போட்டுக்கொண்டு புறப்பட்டேன்.

"பந்தடிக்கிற இடத்திற்குப் போவதானல் கொஞ்சம் கீழே யிறங்கிப் புஸ்தகசாலையையும், ஆயுதம் வைத்திருந்த கூடத்தையுங்

தாண்டிக்கொண்டுதான் போகவேண்டும். நான் கீழே யிறங்கின வுடன் புஸ்தகம் வைத்திருந்த அறையின் ஜன்னல் வழியாக ஒரு வெளிச்சந் தெரிந்தது. நான் அப்படியே திகைத்துப் போய்விட்டேன். வாசித்துக்கொண்டிருந்தவன் வரும்போது விளக்கை அணைக்காமல் வைத்துவிட்டு வந்திருப்பேனோ என்று எண்ணுவதற்கிடமில்லை. படுக்க வருவதற்கு முன்னே அவ்வறையின் கதவுகளையெல்லாம் சார்த்தித் தாளிட்டுவிட்டு விளக்கையும் அணைத்துவிட்டுத்தான் வந்தேன். விளக்கு வெளிச்சந் தெரியவே திருடன்தான் வந்திருக்கவேண்டுமென நான் பயந்துவிட்டேன். இருந்தாலும் தைரியத்தை விடாமல் ஒரு பெரிய கோடாலியைக் கையிலெடுத்துக்கொண்டு சத்தப்படாமல் அடிமேலடியாய் அவ்வறையின் பக்கத்திற்போய் எட்டிப்பார்த்தேன்.

"'பரிசாரகனாகிய பிரண்டன் என்பவன் அந்த அறையில் உட்கார்ந்துகொண்டிருந்தான். என்ன செய்கிறானென்று கவனித்துப் பார்த்தேன். அவன் நன்றாக உடுப்புப் போட்டுக்கொண்டு நாற்காலியிற் சாய்ந்தபடியே, கையில் பூகோளபடத்தைப் போன்ற எதையோ ஒரு கடிதத்தை வைத்துப்பார்த்துக்கொண்டிருந்தான். நான் என் கையிலிருந்த விளக்கை மறைத்துவைத்து விட்டு, உள்ளே மேஜையின்மேல் மினுமினு என்று எரிந்துகொண்டிருந்த விளக்கு வெளிச்சத்தால் அவன் பின்னும் என்னசெய்கிறான் என்பதை இருட்டில் ஒளிந்துகொண்டு பார்த்தேன். பத்து நிமிஷம் வரையில் அவன் ஆழ்ந்த யோஜனையில் இருந்தான். பிறகு எழுந்து, ஒரு பெட்டியைத்திறந்து, அதிலிருந்து ஏதோ ஒரு காகிதத்தை எடுத்துவந்து அதை மேஜையின்மீது பிரித்துவைத்துக் கொண்டு, ஆழ்ந்த யோஜனையுடன் அதிலெழுதியிருப்பதை மிகக் கூர்மையாகப் பார்த்துக்கொண்டிருந்தான். எங்கள் குடும்பப் பத்திரமாகிய ஒன்றை அகாலத்தில் எங்கள் அனுமதியின்றித் திருட்டுத்தனமாய் எடுத்துப் படிப்பதைக் கண்டவுடன் எனக்கு அடக்க முடியாத கோபம் உண்டாய்விட்டது. உடனே இரண்டடி வாசற்படியின் பக்கமாக எடுத்துவைத்தேன். அவன் நான் பார்த்து விட்டது தெரிந்து, முதலில் தான் பார்த்துக்கொண்டிருந்த படம் போன்ற அக்காகிதத்தைமட்டும் தன் சட்டைப்பையில் திணித்துக்கொண்டு மற்றொன்றை இருந்த இடத்தில் வைத்துவிட்டான்.

"'நான் அவனைப்பார்த்து, 'நிரம்பவும் நேர்த்தியாயிருக்கிறது! பிரண்டன், உன்னை நாங்கள் நம்பியிருந்ததற்குநீ இந்தக்காரியம் செய்யவேண்டியதுதான். நல்லது! இத்தனைநாள் வரையில் இருந்ததுபோதும். இனி அரை நிமிஷமும் உன்னுடைய ஸகவாஸம் நமக்குக் கூடாது' என்று கடுமையாய்ச் சொன்னேன்.

"'அவன் என்னைக் கண்டதும் நடுநடுங்கி என்னிடத்தில் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் என்னை வணங்குகிற பாவனையாய்த் தலையைக் கொஞ்சம் தாழ்த்திவிட்டு வெளியே போய்விட்டான். நான் மேஜையின்மீது எரிந்துகொண்டிருந்த விளக்கை யெடுத்துக் கொண்டுபோய்ப் பெட்டிக்குள் மேலாக அவன் வைத்திருந்த பத்திரத்தை யெடுத்து, அது என்னவென்று பார்த்தேன். அது அப்படியாக முக்கியமான ஒரு பத்திரமன்று. அது அவனுக்கு இலேசாக விளங்கக் கூடியதுமன்று. தவிர, அதைத் தெரிந்து கொள்வதனுலும் அவனுக்குப் பிரயோஜனமுமில்லை. அது ஒரு வினுவிடைப் பத்திரம். அதிலுள்ள கேள்விகளையும் விடைகளையும் எங்கள் குடும்பத்தார்கள் மனப்பாடஞ் செய்வது வழக்கம். 'எதற்காக மனப்பாடஞ் செய்கிறுர்கள்?' என்று நீர் கேட்கக் கூடாது. பரம்பரையாக இந்த ஸம்பிரதாயத்தை எங்கள் குடும்பத்தார்கள் அனுஷ்டித்து வருகிறுர்கள். ஒவ்வொருவரும் வயதாகிக் குடும்ப பாரத்தை வகிக்கத் தொடங்குகையில் இந்த வினுவிடைகளை யொப்பிக்கவேண்டுமென்றும், அப்படி மனப்பாடஞ் செய்வதனுல் குடும்பத்துக்கு ஒரு க்ஷேமம் உண்டாகுமென்றும் பெரியோர்கள் எழுதிவைத்திருக்கிறுர்கள். சிறப்பாக எங்கள் குடும்பத்துக்கே உரியதாய், பொருள் விளங்காததாய், பிரயோஜனமற்றதாய் இருக்கிற அந்தப் பத்திரத்தை அவன் படித்ததன் நோக்கம் மாத்திரம் இன்னதென்று எனக்கு இன்னமும் விளங்கவில்லை' என்றுர்.

"'பத்திரத்தின் விஷயத்தைப்பற்றிப் பின்னர் நாம் பரியாலோசிக்கலாம். மேல் நடந்த காரியங்களைத் தொடர்ச்சியாகச் சொல்லிக்கொண்டு போம்' என்று சொன்னேன்.

"'அவசியமாகத் தோன்றினுல் அப் பத்திரத்தையுங் காட்டுகிறேன். அதில் ஒரு விஷயமுமில்லை' என்று அலக்ஷியமாகச்

சொல்லிவிட்டுத் தமது கதையைத் தொடங்கினர். 'நான் அந்த வினவிடைப் பத்திரத்தை முன்போலப் பெட்டியில் வைத்து, பிரண்டன் போட்டுவிட்டுப்போன அந்த மறுசாவியைக்கொண்டே பூட்டிவிட்டு வெளியே வருவதற்காகத் திரும்பினேன். வாசற்படியோரமாய் அந்தப் பரிசாரகன் வந்து நின்றுகொண்டு, வெட்கமும் பயமுங் கலந்த முகத்தோடு என்னைப் பார்த்து, 'மஸ்கிரேவ், ஐயா! நான் இத்தனை காலம் வரையில் கூடியவரை மானமாகவே என் காலத்தைக் கழித்திருக்கிறேன். நீங்களும் என்னை உங்கள் புத்திரன்போல அபிமானித்து ரக்ஷித்து வந்திருக்கிறீர்கள். திடீரென்று வெளியே போகும்படி சொன்னல் இதைக் காட்டிலும் பரிபவம் வேறு என்ன இருக்கின்றது? பார்த்தவர்கள் என்ன சொல்வார்கள்? — அயோக்கியப் பயல், ஏதாவது தப்புச் செய்திருப்பான் என்றுதானே வம்பளப்பார்கள் — இவ்வித அவமானத்தை என்னல் சகிக்க முடியாது. உண்மையாகச் சொல்லுகிறேன், நான் என் பிராணனை விட்டுவிடும்படியாகத்தா னிருக்கும். ஏதோ நடந்தது நடந்துபோயிற்று. அதனல், உங்களுக்கு ஒருவித நஷ்டமும் இல்லை. இருந்தாலும், நான் செய்தது தப்பான காரியந்தான். இந்தத் தடவை மன்னித்துவிடுங்கள். அப்படி மன்னிக்க இஷ்டமில்லையானல் ஒருமாதம் அவகாசங் கொடுங்கள். எங்கேயாவது எனக்குத் தகுதியான இடத்தில் ஒரு வேலையை யமர்த்திக்கொண்டு போய்விடுகிறேன். தயைசெய்து இந்த ஒரு பிரார்த்தனையை மாத்திரம் கேட்டு இரங்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டான். அவன் என்ன சொல்லியும் எனக்கு அவனிடத்தில் நல்லெண்ணம் உண்டாகவில்லை. இரக்கமும் வரவில்லை. மிகவும் கெஞ்சிக் கேட்டதின்பேரில் நான் அவனைப் பார்த்து, 'பிரண்டன்! உன் விஷயமாக நான் என் அனுதாபத்தைக் காட்டக் கூடாதவனயிருக்கின்றேன். நீ அதற்குச் சிறிதும் அருகனல்லன். உன் நடவடிக்கை முற்றிலும் எனக்குப் பிடிக்கவில்லை. உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைப்பவன் நீதான். யஜமானத் துரோகி. உன் சகவாஸம் எனக்குக் கூடவே கூடாது. பாம்போடு பழகுவதுபோல உன்னிடத்தில் பழகுவது முடிவில் பெரிய ஆபத்துக்கே ஏதுவாய்விடும். வேண்டவே வேண்டாம். உன்னல் எவ்வளவு லாபம் இருந்தாலும் அது எனக்கு விருப்ப

மில்லை. இந்த நிமிஷத்திலேயே நீ போய்விட வேண்டியதுதான். பழகிய தோஷத்திற்காக ஒருவாரம் அவகாசம் கொடுக்கிறேன். அதற்குள் ஒரு வேலையைப் பார்த்துக்கொள். நான் உன்னுடைய செய்கையை வெளிவிடவில்லை. ஏதாவது உனக்குத் தோன்றுகிற ஒரு காரணத்தை முன்னிட்டுப் போவதுபோலப் போய்விடு' என்றேன்.

"'ஒரு வாரமா? அது எப்படி ஐயா எனக்குப் போதும்? பதினைந்துநாள்—குறைந்தது பதினைந்து நாளாவது—வேண்டாமா? இவ்வளவு கூடத் தயை செய்யக்கூடாதா?' என்றான்.

"'ஒருவாரமே அதிகம். இதுவும் தாக்ஷிண்யத்தை யுத்தேசித்தேதவிர வேறில்லை. தனியாக யோஜனைசெய்துபார்த்தால் நான் உன்விஷயத்தில் நிரம்பவும் தயைவைத்துத்தான் இவ்வளவு அவகாசம் கொடுத்திருக்கிறேனென்பது உனக்கே தெரியவரும்' என்றேன்.

"'இதைக்கேட்டதும் அவன் மனம் உடைந்துவிட்டது. தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு மெதுவாக அப்புறம் போய்விட்டான். நானும் விளக்கை அணைத்துவிட்டு என் படுக்கையறைக்குப் போய்விட்டேன்.

"'இது நடந்து இரண்டு நாளுக்குப்பிறகு பிரண்டன் முன்போலவே வேலைகளையெல்லாம் சரிவரச் சுறுசுறுப்பாய்ப் பார்த்து வந்தான். நானும் அவன் செய்த காரியத்தை யாரிடத்திலும் பிரஸ்தாபிக்கவே இல்லை. ஒருவாரத்திற்குப் பிறகு என்ன செய்யப்போகிறான் என்பதை மாத்திரங் கவனித்துக்கொண்டிருந்தேன். மூன்றுநாள் காலையில் மாத்திரம் அவன் வழக்கம்போல என்னிடம் வரவில்லை. நான் போஜன கூடத்தைவிட்டு மேலே வரும்போது அகஸ்மாத்தாய் ராச்சல் ஹோவேல்ஸ் என்பவளைச் சந்தித்தேன். அவளைப் பற்றித்தான் நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேனே. அப்போதுதான் அவளுக்குக் கொஞ்சம் வியாதி அனுகூலமாயிருந்தது. முற்றிலும் குணமாவதற்குள் வேலைக்குவந்ததைப்பற்றி எனக்குச் சிறிதும் சம்மதமேயில்லை. நான் அந்தப் பணிப்பெண்ணைப்பார்த்து, 'ஏனம்மா இதற்குள் வேலைக்குவந்துவிட்டாய்? முற்றிலும் அனுகூலமானபிறகு வரலாமே. வியாதி

திருப்பிக்கொண்டால் குணமாவது கஷ்டமாச்சே' என்று சொன்னேன்.

"'நான் இந்தவார்த்தையைச் சொன்னதும் அவள் என்னைத் திரும்பிப்பார்த்தாள். அவள் பார்த்த பார்வையிலிருந்து அவளுக்கு மூளை கெட்டுப்போயிருக்கவேண்டுமென்று எண்ணினேன். அவள் நாலைந்து நிமிஷங்கழித்து என்னை நோக்கி, 'நான் பலசாலியாகத்தான் இருக்கிறேன். வியாதியொன்று மிருப்பதாகத்தெரியவில்லையே. முன்னத்தனை பலம் இல்லையேயென்று சொல்வீர்கள்; வாஸ்தவந்தான். அந்தப்பலம் இனிமேல் எனக்கு எப்படிவரும்?' என்றாள்.

"'எதற்கும் வயித்தியரைக் கண்டு கேட்டுக்கொள்கிறேன். அவர் வேலை செய்யலாமென்றால் எனக்கு ஆக்ஷேபமில்லை. அதுவரையில் நீ வேலைசெய்யவேண்டாம். நீ கீழே போகும்போது பிரண்டனை இங்கே நான் வரச்சொன்னதாகச் சொல்லிவிட்டுப் போ' என்று நான் அந்த ராச்சல் என்பவளிடஞ் சொன்னேன்.

"'பிரண்டனா? அவன் இங்கு எங்கே யிருக்கிறான்? அவன் போய்விடவில்லையா?' என்று சொன்னாள்.

"'போய்விட்டானா? இருக்கட்டும். அவன் எங்கேபோயிருக்கிறான்?'

"'போய்விட்டது வாஸ்தவந்தான். போனதை ஒருவரும் பார்க்கவில்லை. இன்ன இடம் போனானென்பதுந் தெரியாது. அவனிருக்கும் அறையிலே அவனைக் காணோம். எங்கேயோ போய்விட்டான்; போய்விட்டது மாத்திரம் உண்மைதான். கொஞ்சங்கூடப் பொய்யில்லை. பிரண்டன் போய்விட்டான், போய்விட்டான்' என்று பித்துப் பிடித்தவள்போலச் சொன்னாள். இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும் போதே இடிஇடி யென்று சிரித்தாள். அப்படியே சுவரின்மேற் சாய்ந்து மயக்கமுற்றுக் கீழே விழுந்துவிட்டாள். சரி, இது வியாதியின் கோளாறுதான் என்று நினைத்து நான் அவளைக் கீழே எடுத்துப்போம்படி ஏற்பாடு செய்துவிட்டுப் பிரண்டனைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினேன். அவன் எங்கேயோ போய்விட்டானென்பது மாத்திரம் வெளியாயிற்று. இன்ன இடம் போனான், இப்போது போனான், என்ற விவரம்

ஏதும் புலப்படவில்லை. ஒருவருந் தனக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டார்கள்.

"'உள்ளே அவன் படுக்கைகள் சுருட்டிவைத்தபடியாக இருந்தன. முந்திய தினம் இராத்திரி அவன் படுக்கப்போனதுதான் தெரியுமென்றும், அப்பால் அவன் இன்ன இடம் போனனென்பது தங்களுக்குத் தெரியாதென்றும் அங்குள்ள வேலைக்காரர்களெல்லாரும் சொன்னார்கள். ஆனல், சாளரங்களும் கதவுகளும் சார்த்தி மூடினபடியாயிருக்கும்போது, அவன் எப்படி வெளியே போனனென்பது மாத்திரம் எனக்கு நிரம்பவும் ஆச்சரியகரமாயிருந்தது. அவனுடைய உடுப்புகள், பெட்டிகள், கைக்கடிகாரம் முதலிய எல்லாமும் வைத்தது வைத்தபடியாகக் காணப்பட்டன. பெட்டியைத் திறந்துபார்த்தோம். அதில் அவனுடைய பணங்களெல்லாமுங் கூட அப்படியே இருந்தன. ஆனல், அவன் வழக்கமாகப் போட்டுக்கொள்ளும் கறுப்புச் சட்டை, நிஜார் இவைகள் மாத்திரம் காணப்படவில்லை. ஸ்லிப்பர் (slippers) ஒன்றைத் தவிர மற்றெல்லாமும் சரியாகவே இருந்தன. பூட்ஸ் (Boots) களுங்கூடக் கதவோரத்தில் வழக்கம்போலவேதான் வைக்கப்பட்டிருந்தன. இப்படியெல்லாமிருக்க, பரிசாரகனகிய அந்த பிரண்டன் எங்கே போயிருப்பான்? போன இடத்தில் அவனுக்கு என்ன நேர்ந்திருக்கும்? நடு நிசியில் போகவேண்டிய அவ்வளவு அவசிய காரியம் என்ன ஏற்பட்டது? என்ற இக்கேள்விகளுக்கு எனக்குச் சரியான சமாதானம் ஒன்றுமே தோற்றவில்லை.

"நாங்கள் ஒரு இடம் பாக்கியில்லாமல் கீழேயுள்ள ஒவ்வொரு அறையையும் சோதித்துப் பார்த்தோம். மேன்மாடியிலும் தேடினேம். பிரண்டன் வந்து போனதாக ஒருவித அடையாளமுங் காணப்படவில்லை. நான் இருக்கும் வீடோ இடுக்குமுடுக்குமாகப் பற்பல கட்டடங்களோடு கூடியதென்பதை நான் ஏற்கனவே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேனல்லவா. பின்கட்டுக்களெல்லாம் நிரம்பவும் பழைசான கட்டடங்கள். அவற்றில் அநேகமாக யாருங் குடியிருப்பதில்லை. எப்போதும் பூட்டிய வண்ணமாகவேதான் இருக்கும். நாங்கள் அவற்றையுங் கூடத் திறந்துபார்த்தோம். அவன் அங்கே எப்படியிருப்பான்? அவ்வறைகளில் அடுக்கியிருந்த மரக்கட்டைகளையும் கற்களையுங்கூடப்

புரட்டிப் பார்த்தோம். என்ன பார்த்து மென்ன? போனவன் போனவன் தான். அவனைப்பற்றிய ஒன்றுமே எங்களுக்குப் புலப் படவில்லை. ஆனால், தன் பண்டங்களையும், பரிசாரக வேலைசெய்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தையும் வைத்துவிட்டு ஒருவ ரிடத்திலும் சொல்லிக்கொள்ளாமல் அர்த்தராத்திரியில் அவன் ஓடிப்போ யிருப்பானென்கிற விஷயத்தில் சிறிதும் எனக்கு நம் பிக்கை பிறக்கவில்லை. இருக்குமிடந் தெரியாததால் அப்படி நம்ப வேண்டியதாயு மிருந்தது. நான் இவ்விஷயத்தை அங்குள்ள போலீஸ் அதிகாரிகளிடம் அறிவித்தேன். அவர்களுக்கும் சாமர்த் தியம் போதவில்லை. என்னைப் போலத்தான் அவர்களும் மயங்கி னார்கள். அவன் காணமற்போன தினத்திற்கு முந்திய ராத்திரி யில் நல்ல மழை பெய்திருந்தபடியால், அவனுடைய அடிச்சுவடு கள் காணக்கூடும் என்ற எண்ணத்தினால் நாங்கள் கொல்லைப்புற மெல்லாம் தேடிப்பார்த்தோம். அதனாலும் பிரயோஜனமுண்டாக வில்லை. அவனைத் தேடிப் பிடிப்பதற்காக நாங்கள்செய்த பிரயத் தனங்களெல்லாம் வீணாய்ப் போயின. பரிசாரகன் விஷயம் இப்படி யிருக்க, இதைப்போன்ற ஆச்சரியமான மற்றொருவிஷயம் எங்கள் கவனத்தை முற்றிலும் தன் வசம் கவரக்கூடியதாக ஏற்பட்டு விட்டது.

"'பிரண்டன் காணமற்போனதுமுதல் இரண்டு மூன்று நாள் வரையில் ராச்சல் ஹோவெல்ஸ் (Rachal Howells) என்பவளுக் குத் தேகம் சுவாதீனப்படவில்லை. சிலசமயம் சித்தப்பிரமை (Delirium) கொண்டவள்போல வாய்க்கு வந்ததைச் சொல்வ தும், சிரிப்பதும், அழுவதும், ஐயோவென்று சொல்லி நடுங்குவ தும், எழுந்திருந்து ஓடுவதுமாக இருப்பாள். சிலசமயம் கருப்ப வாயுவினால் (Hysterics) உபத்திரவப்படுவதுபோல கையையுங் காலையும் உதைத்துக்கொள்வதாக இருப்பாள். இதை உத்தே சித்து, அவளுடன் கூடவே யிருந்து அவளை ராத்திரி வேளையிற் பார்த்துக்கொள்ளும்படியாக ஒரு தாதியை (Nurse) நியமித் திருந்தேன். பரிசாரகன் ஓடிப்போன மூன்றாம் நாள் ராத்திரி, ராச்சல் சுவஸ்தமாகத் தூங்குகிறாளென்று நினைத்து, அந்தத் தாதி யானவள் நாற்காலியிற் சாய்ந்தபடியே கொஞ்சம் கண்ணை மூடி னாள். அவ்வளவுதான். அயர்ந்து தூங்கிவிட்டாள். காலையிலெழுந்

திருந்து பார்க்கும்போது ராச்சல் படுக்கையில் இல்லை. கதவு திறந்து கிடந்தது. வியாதிக்காரியாகிய அந்த ராச்சலைத் தேடித் தேடிப் பார்த்தார்கள். ஒரு இடத்திலுங் காணப்படவில்லை. உடனே என்னை எழுப்பிச் செய்தியைச் சொல்லவே, நானும் நாலைந்து ஆள்களை அனுப்பி ஒரு இடம் பாக்கியில்லாமல் எல்லா இடத்தையும் ஒரு தரத்துக்கு இரண்டுதரமாகத் தேடிப்பார்க்கும் படி செய்தேன். அவள் இன்ன வழியாகப் போயிருக்கிறளென் பதுமாத்திரம் ஸுலபமாகக் கண்டறியக்கூடியதாய் இருந்தது. ராச்சல் படுத்துக்கொண்டிருந்த அறையின் பக்கத்தில் இருந்து தொடங்கி, நெடுக மரங்களின் மத்தியின் வழியாகக் கொல்லையி லிருந்த ஒரு குட்டை வரையிலும் அவளுடைய அடிச்சுவடுகாணப் பட்டது. அந்தக் குட்டையோ பத்தடி ஆழமுள்ளது. 'சரி, வியாதியின் ஹிம்ஸை பொறுக்கமாட்டாமல் இந்தக் குட்டையில் வீழ்ந்து, ஐயோ! ஒரு சிறுபெண் அநியாயமாய் இறந்து விட்டாளே' என்று எல்லாருந் துக்கித்தார்கள். சிலர், அஜாக்கிரதையாயிருந்து தூங்கிவிட்டதற்காகத் தாதியைப்பலவாறுதூஷித் தார்கள்,

"'போன காரியத்தைப் பற்றி இனிச் சிந்திப்பதில் பிரயோ ஜனமென்ன என்று சொல்லிவிட்டுக் குட்டைக்குள் இறங்கிப் பிணத்தை வெளிப்படுத்தும்படி ஏற்பாடு செய்தேன். மூன்று தோட்டக்காரர்கள் இறங்கித் தேடினர்கள். பிரேதம் அகப்பட வில்லை. ஆனல், பிரேதம் அகப்படுவதற்குப் பதிலாக எதிர்பாராத மற்றொரு சாமான் அதிலிருந்து கிடைத்தது. அது ஒரு சிறிய இரும்புப்பெட்டி. அதை வெளியிலே எடுத்துவந்து திறந்து பார்த்தோம். அதற்குள், நிறந்தெரியாதபடி துருப்பிடித்திருந்த சில உலோகங்களும் (metal) அழுக்கடைந்திருந்த கூழாங்கல் மாதிரியான சில கண்ணுடித் துண்டுகளும் காணப்பட்டன. நாங்கள் அன்று பகல் முழுதுந் தேடியும் எங்களுக்கு அகப்பட்டது இந்த அதிசயமான சாமான் ஒன்றுதான். எங்களாற் கூடியவரையில் தேடிப்பார்த்தும் ராச்சல் ஹோவெல்ஸின் பிரேதம் அதில் அகப்படவில்லை. பிணம் மேலேயும் மிதக்காதபடியால் அவள் அக்குட்டையில் விழுந்திருக்க நியாயமில்லையென்றுஒருவிதமாகத் தீர்மானித்துக்கொண்டோம். முடிவான செய்தியென்னவென்

ருல் ராச்சல் ஹோவெல்ஸ் என்னும் பணிப்பெண்ணும், ரிச்சர்டு பிரண்டன் (Richard Brunton) என்னும் பரிசாரகனும் போன இடம் இன்னதென்று அறியமுடியவில்லை யென்பதுதான். போலீஸ்காரர்களும் தங்கள் சக்திக்கியன்றவரையில் பார்த்துச்சலித்துவிட்டார்கள். உங்களிடத்திலும் சொல்லிப் பார்ப்போம் என்று வந்திருக்கிறேன்' என்று சொல்லித் தங்கதையை முடித்தார்.

" வெப்ஸ்டர் ! இந்த அதிசயமான சம்பவத்தை நான் எவ்வளவு ஆவலோடுங் கருத்தோடுங் கேட்டிருப்பேனென்பதை நீயே யோஜித்துக் கொள்ளவேண்டியது. நான் எல்லா விஷயங்களையுங் கேட்டபின்னர், அவைகளையெல்லாம் ஒன்றுபடுத்தி, அவைகளுக்கெல்லாம் பொதுக்காரணம் என்ன என்பதைப்பற்றியோஜிக்கத் தொடங்கினேன்.' பரிசாரகனாகியபிரண்டன் போய்விட்டான். பணிப்பெண்ணாகிய ராச்சலும் போய்விட்டாள். ராச்சல் என்பவள் அந்தப் பரிசாரகன்மேல் காதல்வைத்திருந்தாள். அவனும் காதலுள்ளவன்போல் இருந்து, பின்னர் அகாரணமாய்த் தன்னைத் தள்ளிவிட்டுத் தன்னிலும் தாழ்வான ஒருத்தியைக் கல்யாணஞ் செய்துகொண்டது காரணமாக அவனை வெறுக்கத் தலைப்பட்டாள். அந்த ராச்சல் என்பவள் வெல்ஷ் (Welsh) ஜாதியைச் சேர்ந்தவள். ஆதலால், அதிக உணர்ச்சியுடன் கோபிக்கும் ஸ்வபாவமுடையவள். பிரண்டன் காணமற் போனவுடன் அந்தப் பணிப்பெண் சித்தப்பிரமை கொண்டவள்போல ஆய்விட்டாள். கொல்லைப் பக்கத்திலுள்ள குட்டையில் விசித்திரமான சாமான்களடங்கிய ஒரு இரும்புப் பெட்டியைப் போட்டுவிட்டு, போன இடந் தெரியாமற் போய்விட்டாள்.' இவைகளே இந்தக்கேசிற்குள்ள ஆதாரங்கள். இவைகளை வைத்துக்கொண்டுதான் காணமற்போன இரண்டு ஸ்திரீபுருஷர்களை நாம் கண்டுபிடிக்கவேண்டும். எவ்வளவுதான் யோஜித்துப்பார்த்தாலு மென்ன ? இந்த ஆதாரங்கள் கேசின் மர்மத்தைப் புலப்படுத்துவனவா யிருக்கவில்லை. சங்கிலிப்பின்னலாயுள்ள இந்தக் கேசானது முதன் முதலில் எதிலேயிருந்து உண்டானது என்பதை நாம் பார்க்கவேண்டும். அதைத் தெரிந்துகொண்டதன் பின்னர் ஒவ்வொரு சிக்கலாய் அவிழ்த்துவிடவேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று.

"பின்னர் நான் அந்த மஸ்கிரேவ் என்பவரைப் பார்த்து, 'மஸ்கிரேவ்! நான் அந்தக் காகிதத்தைப்பார்க்கவேண்டுமே. தான் நெடுநாளாய் இருந்துகொண்டிருந்த ஸ்தானத்தை விடவேண்டி வருமே என்கிற நஷ்டத்தையும் பொருட்படுத்தாமல், அந்தப் பரி சாரகன் அவ்வளவு ஆவலாய்ப் பார்க்கும்படி அந்தப்பத்திரத்தில் என்ன எழுதியிருந்தது என்பதை நான் தெரிந்துகொள்வது நல்ல தல்லவா?' என்று சொன்னேன்.

"'ஏதோ ஒரு சடங்குமாதிரியாக நாங்கள் சொல்லிக்கொண் டுவருகிற அப்பத்திரத்தின் விஷயம் தங்களுக்கு மிகவும் அசங்கத மாக இருக்கும். இருந்தாலும், பூராதனமான பத்திரமாயிற்றே என்கிற காரணம்பற்றி நான் அப்பத்திரத்தை ஸர்வஜாக்கிரதை யுடன் காப்பாற்றிவருகிறேன். இதுதான் அப்பத்திரத்தில் கண்ட விஷயம். ஒருவேளை உபயோகமாயிருந்தாலும் இருக்கும் என்கிற எண்ணத்தின்பேரில் நகல் செய்துவைத்திருக்கிறேன். அவசிய மானால் பாருங்கள்' என்று சொல்லி, இப்போது நான் வைத்திருக் கிற இந்தக் காகிதத்தை அவர் என் கையில் கொடுத்தார்.

"வெப்ஸ்டர்! இந்த விநோதமான வினவிடையைத்தான் ஒவ்வொரு மஸ்கிரேவும் தங்களுக்குப் போதுமான வயது வந்து, குடும்பத்தை நிர்வகிக்க ஆரம்பிக்கும்போது நெட்டுருச்செய்து ஒப்புவிக்கவேண்டுமாம். இதிலிருக்கிறபடி வரிசையாக ஒவ் வொரு வினவையும் அதற்குள்ள விடையையும் வாசிக்கிறேன், கேள் :—

"'அது யாருடையது?

"'யார் போய்விட்டாரோ அவருடையது.

"'அதை யார் அடையவேண்டும்?

"'யார் வரப்போகிறாரோ அவர் அடையவேண்டும்.

"'அது என்ன மாதம்?

"'முதலிலிருந்து ஆறுவது மாதம்.

"'சூரிய ரஸ்மி எங்கேயிருந்தது?

"'சிந்தூர (oak) மரத்தின்மேலிருந்தது.

"'நிழல் எங்கே படிந்திருந்தது?

"'வெட்டுமரத்தின் (Elm) கீழே படிந்திருந்தது.

"'எப்படி நுழைந்திருந்தது?

"'வடக்கில் பத்துக்கும் பத்துக்கும், கிழக்கில் ஐந்துக்கும் ஐந்துக்கும், தெற்கில் இரண்டிற்கும் இரண்டிற்கும், மேற்கில் ஒன்றுக்கும் ஒன்றுக்குமாக நுழைந்திருந்தது.

"'அதற்காக நாம் எதைக் கொடுக்கவேண்டும்?

"'நம்முடையதாகவுள்ள எல்லாவற்றையுமே கொடுத்துவிட வேண்டும்.

"'நாம் ஏன் கொடுக்க வேண்டும்?

"'நம்பிக்கையைக் காப்பதற்காக.

"இதை நான் படித்துக் கொண்டிருக்கும்போது, 'மூலபத்திரத்தில் தேதி போடவில்லை. எழுதியுள்ள வாசகங்களைப் பார்க்கும்போது பதினேழாம் நூற்றாண்டின் மத்தியகாலத்தில்தான் அப்பத்திரம் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று நிச்சயமாய்த் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. எப்படி யிருந்தால் தான் என்ன? அந்த தஸ்தவேஜினால் ஒருவித பிரயோஜனமுமில்லை' என்று மஸ்கிரேவ் சொன்னார்.

"'வாஸ்தவந்தான். இருந்தாலும் இதுவும் ஒரு விசித்திரமாகத்தான் இருக்கிறது. பிரண்டன் காணமற்போனது ஒரு ஆச்சரியம். அடுத்து, ராச்சல் இருக்கு மிடந்தெரியாமல் இருப்பது அதைவிட ஆச்சரியமானது. குட்டையிற் பெட்டிகிடந்து அகப்பட்டது அவை யிரண்டையும்விட ஆச்சரியம். எல்லாவற்றிலும் ஆச்சரியமாயிருப்பது இந்த வினுவிடைப் பத்திரம். இந்த நாலில் ஏதாவது ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டால் அதுவே மற்றவைகளையும் கண்டுபிடித்ததுபோ லாகும். மஸ்கிரேவ்! நான் ஏதோ என் மனத்திற் பட்டதைச் சொல்லுகிறேன். அதற்காகத் தாங்கள் என்மீது கோபித்துக் கொள்ளக்கூடாது. தங்களுடைய பரிசாரகனுகியபிரண்டன் என்பவன்மகாபுத்திசாலியாகவே இருந்திருக்கிருனென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. படிக்க, பாட, பேச நன்ருய்க் கற்றிருப்பவனுய், எல்லாராலும் கவுரவிக்கத்தக்கவனுயிருந்த அந்தப் பிரண்டன் உங்களிடம் ஈனவிருத்தியாகிய பரிசாரக விருத்தியில் அமர்ந்திருந்ததற்குள்ள காரணம் என்னவென்ருல், பதினேழாம் நூற்ருண்டு முதல் இன்று வரையிலுமுள்ள உங்களுடைய

குலத்தவர்க்கெல்லாம் தெரியாதிருந்ததொரு அபூர்வமான விஷயத்தை அவன் தெரிந்துகொண்டிருந்ததைத் தவிர வேறில்லை' என்றேன்.

"'தாங்கள் சொல்வதை நான் நம்பவில்லை. அந்தப் பத்திரம் சர்க்கரை மடிப்பதற்குக்கூடப் பிரயோஜனமில்லை. அதை வைத்துக்கொண்டு பிரண்டன் என்ன செய்துவிடப் போகிறான்?' என்று மஸ்கிரேவ் சொன்னார்.

"'தங்களுக்கு ஏனோ பிரயோஜனமற்றதாகத் தோற்றுகிறது? எனக்குமாத்திரம் அப்பத்திரத்தில்தான் எல்லாப் பிரயோஜனங்களும் அடங்கியுள்ளனவென்று தோற்றுகிறது. பிரண்டனும் நான் கொண்ட அபிப்பிராயத்தையேதான் கொண்டிருக்கவேண்டுமென்று இப்போது எனக்குத் துலங்குகின்றது. மேலும், மற்றொருவிஷயமும் நான் ஊஹிக்கும்படியாயிருக்கிறது. அதென்னவென்றால், இந்தப் பிரண்டன் என்பவன் நீர் அவனைப் பிடிப்பதற்கு முன்னாலேயே இந்தப் பத்திரத்தைப் பார்த்திருக்கிறான் என்பதேயாம்' என்றேன்.

"'பார்த்திருக்கக் கூடும். பத்திரத்தை ஜாக்கிரதையாக மட்டும் நாங்கள் வைத்துக்கொண்டிருந்தோமேயொழிய, அதிலுள்ள விஷயங்களைப் பிறர் அறிந்துகொள்ளக் கூடாதென்று நாங்கள் மறைத்து வைக்கவில்லை. ஆகையால், இதிலுள்ள விஷயங்களைப் பிரண்டன் பார்த்திருக்கக் கூடும். அதை நான் ஆக்ஷேபிக்கவில்லை' என்றார்.

"'அன்றைத்தினம் அவன் அதையெடுத்ததுகூடத் தன் ஞாபகம் சரியாயிருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்காகத்தான் என்றும் நான் நினைக்கிறேன். நீர் அவனைக் கையுங் களவுமாகப் பிடித்தபோது அவன் தன் கையில் பூகோளப் படம் அல்லது மாலுமிப் படம்(Chart)போன்ற ஒன்றை வைத்துக்கொண்டிருந்தானென்று சொன்னீரல்லவா? அந்தப் படத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகத்தான் கடைசியாக அதையெடுத்துப் பார்த்திருக்கிறான்' என்று நான் சொன்னேன்.

"அதற்கு அந்த மஸ்கிரேவ் என்பவர், 'அப்படியே வைத்துக்கொள்ளுங்கள். எத்தனை தரம் பார்த்தால்தான் என்ன? எங்க

னுடைய குடும்பசம்பந்தமான அந்தப்பழைய பத்திரத்தைப் படித்துக் கொள்வதனால் அவனுக்குப் பயன் என்ன? தவிர, பத்திரமாவது ஒழுங்காய்ப் பிறருக்கு அவஹாகம் ஆகும்படியாக இருக்கின்றதா? அதுவுமில்லை. வெறும் பிதற்றல். இதைக்கொண்டு அவன் என்ன தெரிந்துகொண்டுவிடப் போகிறான்?' என்றார்.

"'நாம் இரண்டுபேரும் இங்கேயேயிருந்து தர்க்கிப்பதில் பிரயோஜனமொன்றுமில்லை. அவன் எதற்காக அந்தப் பத்திரத்தையெடுத்துப்பார்த்தான் என்கிற விஷயத்தை நான் அநேகமாக நாளை அஸ்தமனத்திற்குள் உமக்குக் காட்டி விடுகிறேன். தயவுசெய்து தங்களோடு கூட ஸஸ்ஸெக்ஸ் (Sussex) வரையில் நானும் வரும்படி எனக்கு அநுமதி கொடுங்கள். நான் தாங்கள் இருக்கும் விடுதியை இப்போது ஒருமுறை கவனமாய்ப் பார்க்க விரும்புகிறேன்.' என்றேன்.

"'என்ன ஆக்ஷேபமிருக்கிறது? இப்போதே புறப்படுவோம்' என்று சொல்ல, நாங்கள் இருவரும் அன்று மாலையிலேயே ஹார்ல்ஸ்டன் போய்ச் சேர்ந்தோம். வெப்ஸ்டர்! நீயும் அதன் விசித்திரமான வேலைப்பாடுகளைப்பற்றிக் கண்டுங் கேட்டுமிருப்பாயாகையால், நான் அதைப்பற்றி அதிகமாக உனக்கு வர்ணித்துச் சொல்லவேண்டிய அவசியமில்லையென்று நினைக்கிறேன். அது ட மாதிரியாகக் கட்டப்பட்டிருக்கிறது. கீழேயுள்ள நீண்ட பாகம் இப்போது புதிதாகக் கட்டப்பட்டவை. சிறிய பாகம் நெடுநாளாகவேயுள்ள கட்டடம். இந்தச் சிறிய பாகத்திலிருந்து தான் மற்றைப் பாகங்களையும் வளர்த்தி நாளடைவில் கட்டியிருக்கிறார்கள். சிறிதாகவுள்ள அப் பழைய கட்டடத்தின் மத்தியில் ஒரு வாசற்படி யிருக்கிறது. அங்குள்ள நிலைக்கதவில் 1607-ம் வருஷம் என்று உளியாற் செதுக்கப்பட்டிருப்பதினாலேயே அது மிகப் பிராசீன கட்டடம் என்பது யாருக்கும் சொல்லாமலே விளங்கும். 1607-என்று வருஷங் குறிக்கப்பட்டிருந்தாலும் உத்திரம், கற்கட்டடம் முதலியவற்றைப் பார்க்கும்போது அதற்கு முன்பேயே அக்கட்டடம் உள்ளதென்றும் கதவுமாத்திரம் 1607-ல் புதிதாகச் செய்துபோட்டதா யிருக்கவேண்டுமென்றும் சிற்பசாஸ்திரத்தில் கைதேர்ந்தவர்களான பண்டிதர்கள் சிலர் அபிப்பிராயப்படுகிறார்

கள். மிகப் பெரிதான சுவரும், மிகச் சிறிதான சாளரமுமாயிருந்தபடியால் சுகாதாரத்திற்குப் பாங்காக இல்லையென்று கருதிப் போன நூற்றாண்டில் இந்தப் புதிய கட்டடத்திற்குக் குடிவந்துவிட்டார்களென்றும், அது முதற்கொண்டு அந்தப் பழைய கட்டடம் பண்டசாலையாகவும் களஞ்சியமாகவும் உபயோகிக்கப்பட்டு வருகிறதென்றும் தெரியவருகிறது. இந்தக் கட்டடங்களைச் சுற்றிலும் பெரிய தோட்டம் ஒன்றிருக்கிறது. மஸ்கிரேவ் தெரிவித்த அந்தக் குட்டையானது அந்தத் தோட்டத்தின் மத்தியில், வீட்டிற்கு இருநூறு கஜ தூரத்தில் இருக்கிறது.

"வெப்ஸ்டர்! இந்தக்கேசில் நான்கு ரகஸ்யங்கள் இருப்பதாகக் காணப்பட்டாலும் ஒரே ஒரு ரகஸ்யந்தான் உள்ளது என்றும், அந்த ரகஸ்யத்தையும், வினவிடைப் பத்திரத்தின் தாத்பர்யத்தைக் கண்டுபிடித்துவிட்டால், இன்னதென நன்கு தெரிந்துகொண்டுவிடலாமென்றும் எனக்கு ஆதிமுதற்கொண்டே திடமான ஒரு அபிப்பிராயம் உண்டாயிருந்தது. இது மாத்திரமல்லாமல் காணமற் போய்விட்டதாகச் சொல்லப்படுகிற பரிசாரகனுகிய அந்த பிரண்டனைப்பற்றிய விவரமும் ஹோவெல்ஸைப்பற்றிய விவரமும் உள்ளங்கைநெல்லிக்கனிபோல விளங்கிவிடுமென்பதும்என் தீர்மானம். ஆனதுபற்றி, நான்என்புத்தியையெல்லாம்அவ்வினவிடைப் பத்திரத்திலேயே செலுத்தி ஆராயத்தொடங்கினேன். பரம்பரையாக மஸ்கிரேவ் வம்சத்திலுள்ள அனைவராலும் மனப்பாடஞ்செய்யப்பட்டு வருகிற அந்த வினவிடைப்பத்திரத்தில் பிரண்டனுக்கு அவ்வளவு ஊற்றமுண்டானதற்குக் காரணம், அவன் அதன் அர்த்தத்தை உள்ளபடி யறிந்திருந்ததே யாகுமென்றும், அவ்வாறு அறிந்திருந்ததிலிருந்து ஒருவித லாபத்தை அவன் அடையக்கருதியிருந்தானென்றும், அந்த லாபமும் மிக அதிகமாக இருக்குமென அவன் எதிர்பார்த்திராதபக்ஷத்தில் தன்நிலைமையைக்குறைத்துக்கொண்டு அவ்வளவுகாலம் பரிசாரகவிருத்தியில்அவன் அமர்ந்திருக்கச் சிறிதும் நியாயமே யில்லையென்றும், எனக்குச் சந்தேகமறத் தோன்றிற்று. இவ்வளவு தோன்றியதன்மேல், அவன் எதிர்பார்த்தது எவ்விதமான லாபம் என்பதையும், அந்த லாபத்தை அடையவேண்டி அவன் செய்த முயற்சியால் அவனுக்கு என்ன ஸம்பவித்ததுஎன்பதையும்நுணுக்கமாக ஆராயத்தொடங்கினேன்.

"நான் அந்த வினாவிடைப் பத்திரத்தைப் பலமுறை படித்துப்பார்த்தேன். அப்பத்திரத்தின் பிற்பகுதியிற் காணப்பட்ட அளவானது ஒரு இடத்தையே குறிப்பிடுகிறதென்றும், அந்த இடம் இன்னதென்பதைமாத்திரம் புத்திசாலித்தனமாய்முயன்று கண்டுபிடித்துவிடும்பக்ஷத்தில், பாம்பரையாக மஸ்கிரேவ் வமிசத்தார்கள் விசித்திரமான புதுவழியால் அழியாமற் காப்பாற்றிவருகிற அப்பத்திரத்தின் ரகஸ்யத்தைக் கண்டுபிடித்துவிடலாமென்றும் எனக்குத் தோன்றியது. அந்த இடத்தைக் கண்டுபிடிக்கச் சிந்தூர(oak) மரமும், வெட்டு(elm)மரமும் சிறிது உதவியாயிருந்தன. நான் அந்த வீட்டுக்குப்போய்ப் பார்க்கையில், அவ்வீட்டின் வலதுபக்கத்தில் ஒருபெரிய சிந்தூர மரங் காணப்பட்டது. அது நிரம்பவும் உயரமுள்ளதாயிருந்ததோடு நாட்பட்டதாயுமிருந்தது. அவ்வளவு பெரிய ஒரு மரத்தை நான் என்றைக்குங் கண்டதேயில்லை. பத்திரத்திற் கண்டுள்ள சிந்தூரம் என்பது பெரும்பாலும் அந்த மரமாகத்தானிருக்கவேண்டுமென்று கருதி, நான் அவ் வீட்டுக்காரராகிய எனது நண்பரை நோக்கி, 'மஸ்கிரேவ்! நீங்கள் அவசியமான சடங்குகளில் ஒன்றாக நினைத்துப் பாம்பரையாக நெட்டுருச் செய்துவருகிற அந்த வினாவிடைப் பத்திரம் எழுதப்பட்ட காலத்தில் இந்தச் சிந்தூர மரமும் இருந்திருக்குமோ?' என்று கேட்டேன்.

"'இந்த மரம் வெகுகால முதற்கொண்டே அங்கேயிருக்கிறது. நார்மன் ஜாதியார் ஜயபேரி முழக்கின காலத்திலுங் கூட இம்மரம் இன்றிருப்பதுபோல இருந்ததென்று பெரியோர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அது எப்படியிருந்தாலும், வினாவிடைப்பத்திரம் எழுதப்பட்ட காலத்தில் இது இருந்திருக்கிறது என்பதை நிராக்ஷேபமாகச் சொல்லலாம். இம்மரம் சரியாக 23-அடி சுற்றளவுள்ளது' என்றார்.

"மஸ்கிரேவ் இவ்வாறு சொல்லவும் நான் கொஞ்சம் சந்தோஷத்தை யடைந்தேன். இரண்டில் ஒன்றைக் கண்டுபிடித்து விட்டால் ரகஸ்யத்தை வெளிப்படுத்திவிடலாமென்ற நம்பிக்கையுடன் திரும்பவும் நான் அவரைப்பார்த்து, 'இந்தத் தோட்டத்தில் ஏதாவது வெட்டுமரம் (elm) நாட்பட்டதாக இருந்ததோ?' என்று கேட்டேன்.

"'அதோ அந்த இடத்தில் மிகப் பழைமையான ஒரு வெட்டுமரம் இருந்தது. பத்து வருஷத்துக்கு முன்னால் அம்மரம் இடி விழுந்து பட்டுப் போயிற்று. பிறகு நாங்கள் அதை வெட்டிவிட்டோம்' என்றார்.

"'வெட்டிவிட்டாலுங் கூட, அது இன்ன இடத்திலிருந்தது என்பதை நீங்கள் காட்டக்கூடுமல்லவா?' என்று கேட்டேன்.

"'காட்ட முடியாமலென்ன? ஒரு அங்குலம் அந்தண்டை இந்தண்டை போகாமல் காட்டுவேன்' என்றார்.

"'அந்த மரத்தைத்தவிர வேறு வெட்டுமரங்கள் (elm) ஏதாவது இருந்திருக்கிறதோ?' என்று கேட்டேன்.

"'எவ்வளவோ இருந்திருக்கின்றன. ஆனால், அவைகளெல்லாம் நான் இடிவிழுந்து பட்டுப்போனதாகச் சொன்ன அந்தமரத்தைப்போல அவ்வளவு நாட்பட்டவைகளல்ல' என்றார்.

"'நல்லது, தாங்கள் அந்த மரம் இருந்த இடத்தைக் காட்டுங்கள். நான் அதைப் பார்க்கவிரும்புகிறேன்' என்றேன்.

"'இஷ்டப்படி பாருங்கள்' என்று சொல்லித் தோட்டத்தின் மத்தியில் ஒரு இடத்தைக்காட்டினார். நான் அதைக் கவனமாகப் பார்த்துக்கொண்டேன். அந்த இடமானது சிந்தூர மரத்துக்கும் வீட்டுக்கும் சரிமத்தியிலிருந்தது. என்னுடைய ஊஹம் சரியாயிருக்குமென நினைத்துச் சந்தோஷமடைந்தவனாய் நான் மீண்டும் அவரைநோக்கி, 'மரத்தை வெட்டிவிட்டீர்களாகையால் அது எவ்வளவு உயரமிருந்தது என்பதைத் தாங்கள் இப்போது சொல்ல முடியாதல்லவா?' என்று கேட்டேன்.

"'ஏன் முடியாது? தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் சொல்லத் தடையில்லை. அது சரியாக 64-அடி உயரமிருந்தது' என்றார்.

"'அது உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"'என்னுடைய உபாத்தியாயர் மில்லர் என்று ஒருவர் இருந்தார். அவர் அடிக்கடி வீட்டுக்குவந்து பாடஞ் சொல்லிக் கொடுப்பார். அக்காலத்தில் அவர் திரிகோண சாஸ்திரத்தில் (Trigonometry) கணக்குப் போடுவது வழக்கம். அக்கணக்கு

கள் பெரும்பாலும் உயரத்தின் அளவைக் கண்டுபிடிக்க வேண்டுவதாகவே யிருக்கும். நான் சிறு பிள்ளையாயிருந்ததால் இங்கேயுள்ள மரங்களையும், வீட்டின் சுவர்களையும், கதவுகளையும் அளந்து பார்த்துக் கணக்குப் போடுவது வழக்கம். நான் அக்காலத்தில் பட்டுண்ட அந்த வெட்டுமரத்தையும் அளந்துபார்த்திருக்கிறேன். சரியாக 64-அடி உயர மிருந்திருக்கிறது' என்றார்.

"எதிர்பாராதபடி அதிர்ஷ்ட வசத்தாற் கிடைத்த இந்த சமாசாரத்தைக் கேட்டதும் எனக்குண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. இந்தமாதிரி அம்மரத்தினளவு எனக்கு அதிசுலபமாய்க் கிடைத்திராதபக்ஷத்தில் நான் அதைக் கண்டுபிடிப்பதற்காகப்பல நாள் கஷ்டப்படவேண்டிவரும். இதுவும் ஒரு நல்லகாலத்திற்கு அடையாளந்தான் என்று நினைத்துக்கொண்டு, நான் மீண்டும் அந்த மஸ்கிரேவ் என்பவரைப் பார்த்து, 'மஸ்கிரேவ்! கொஞ்சம் ஞாபகப்படுத்திக்கொண்டு சொல்லவேண்டும். தங்களிடம் பரிசாரக வேலைபார்த்த அந்த ரிச்சர்டு பிரண்டன் என்பவன் என்னைப் போல இங்கிருந்த மரத்தைப் பற்றியும், அதன் உயரத்தைப்பற்றியும் எப்போதாவது உங்களைக் கேட்டிருக்கிறானா?' என்று கேட்டேன்.

"நான் இந்தக் கேள்வியைக் கேட்டதும் அவருக்குண்டான ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. அவர் என்னைப்பார்த்து, 'ஹண்டர்! நீர் சொன்னபிறகுதான் எனக்கு ஞாபகம் வருகிறது. அவன் ஐந்தாறு மாதங்களுக்கு முன்பு என்னைக் கேட்டிருக்கிறான். நன்றாய் நினைவிருக்கிறது. ஆனால், அவன் என்னைக் கேட்டுத் தெரிந்துகொண்ட விதம் மாத்திரம் நிரம்பவும் ஆச்சரியகரமானது. எதற்காகக் கேட்கிறாய் என்று நான் அவனைக் கேளாதிருக்கும்படி அவ்வளவு சாதுர்யமாய் அவன் என்னைக் கேட்டிருக்கிறான். எப்படியோ குதிரைக்காரனும் அந்தப் பிரண்டனும் வாக்குவாதஞ் செய்து பந்தயம் வைத்துக் கொண்டு ஒருநாள் என்னிடம் வந்தார்கள். நான்அவர்களை என்ன வென்று கேட்டேன். அதற்குப் பரிசாரகனாகிய பிரண்டன், 'என்ன ஐயா! இக்குதிரைக்காரன் சொல்வது நிரம்பவும் அதிசயமாக இருக்கிறது. இங்கே ஒரு வெட்டு மரம் இருந்து பட்டுப்போயிற்றாம். அது ஐம்பதடி உயரமாமே.

அவ்வளவு உயரம் எங்கேயாவது இருக்குமா ? என்னோடு 4-ஷிலிங் பந்தயங்கட்டியிருக்கிறான். தாங்கள் சொல்லுங்கள். அது ஐம்பதடி உயரமா இருந்தது?' என்றான். நான் அவனைப் பார்த்து, ஐம்பதடியாய்ப் போவானேன், சரியாக 64-அடி உயரமிருந்தது. நானே அளந்து பார்த்திருக்கிறேன்' என்றேன். 'சரி, பந்தயம் 4-ஷிலிங் அழவேண்டியது தான்' என்று சொல்லிப்போய்விட்டான். பார்த்தீர்களா, அவன் சாமர்த்தியத்தை! உங்களுக்குக்கூட அவனத்தனை சாமர்த்தியம் இருக்காதுபோலிருக்கிறதே' என்று சொன்னார்.

"வெப்ஸ்டர்! இங்ஙனம் மஸ்கிரேவ் சொன்னவுடன் என் மனத்திற்கு ஒருவித உற்சாக முண்டாயிற்று. நாம் சரியான வழியில்தான் வேலைசெய்கிறோம் என்று எண்ணிக்கொண்டு, ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தேன். அப்போதுதான் சூரியன் மேல் பக்கமாகச் சாய்ந்திருந்திருந்தது. கணக்குப்பார்த்ததில் ஒருமணி நேரத்திற்கெல்லாம் பழைய அந்தச் சிந்தூர மரத்தின் உச்சியில் வந்து விடுமென்று தோன்றிற்று. உடனே நான் என் கையிலிருந்த இந்த வினவிடைப் பத்திரத்தை யெடுத்துப் படித்துப் பார்த்தேன். அதிற்கண்டிருந்த மற்றொரு நிபந்தனையையும் பூர்த்தி செய்து விட வேண்டுமென்று எனக்குப்பட்டது. வெட்டுமரத்தின் கீழே நிழலிருந்த தென்பது நிழலினுடைய மற்றொரு கடைசியான பாகத்தையே குறித்ததாகவேண்டுமென்றும், அப்படி யில்லாத பக்ஷத்தில் வெட்டுமரத்தின் அடிப்பாகத்தையே அடையாளமாகப் பத்திரத்தில் கண்டிருக்கலா மென்றும் நான் அறிந்து கொண்டேன். ஆகையால், சூரியன் சரியாகச் சிந்தூரமரத்தின் உச்சிக்கு வரும்போது, நிழலினுடைய கடைசியான பாகம் எதுவரையிற் போகிறதென்பதை நான் கண்டுபிடிக்க வேண்டியவனாய் விட்டேன்."

"அப்போது மஸ்கிரேவ் என்னை நோக்கி, 'ஹண்டர்! அடையாளமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாய் நீர் நினைக்கிற அந்த வெட்டு மரம் பட்டுப்போய்விட்டபடியால், இப்போது கணக்குப் பார்த்துத் தெரிந்துகொள்வது அஸாத்தியமான காரியமாயிருக்குமே' யென்று சொன்னார்.

"சரிதான், பிரண்டன் அதைத் தெரிந்துகொண் டிருப் பானுல், என் நாமும் அதைத் தெரிந்துகொள்ள முடியாது? வெப்ஸ்டர்! வாஸ்தவத்தில் அதில் அதிக சிரமமொன்றுமில்லை.

நான் மஸ்கிரேவுடன் அவருடைய புஸ்தகசாலைக்குள் சென்று முளை ஒன்று சம்பாதித்து ஒரு நீளமான கயிற்றை எடுத்து, அதில் கெஜநீளத்திற்கு ஒரு முடிச்சாகப்போட்டு, அந்தக் கயிற்றின் ஒரு நுனியை அந்த முளையில் கட்டிக்கொண்டேன். அங்கே தூண்டிற் கழி ஒன்று வைத்திருந்தது. அதையும் கையில் எடுத்துக்கொண் டேன். அது சரியாக ஆறு அடி நீளம் இருந்தது. நான் இவைகளை யெல்லாம் எடுத்துக்கொண்டு மஸ்கிரேவுடன் மறுபடியும் அந்த வெட்டுமரம் முன்பு இருந்த இடத்திற்கு வந்துசேர்ந்தேன். அப் போதுதான் சூரியன் சிந்தூர மரத்தின் உச்சிக்குநேராக வந்து கொண்டிருந்தது. உடனே நான் என் கையிலிருந்த தூண்டில் கழியை எடுத்து அதை வெட்டுமரம் இருந்தவிடத்தில் செங்குத் தாய் நிற்கும்படி புதைத்தேன். பிறகு அதன் நிழல் விழுந்திருந்த பக்கமாக அந்த நிழலோடு தரையில் ஒருகோடு கிழித்துக்கொண்டு அதன் நீளத்தையும் நான் முடிச்சுப்போட்டு வைத்திருந்த கயிற் றினுல் அளந்து பார்த்தேன். அந்த நிழலின் நீளம் ஒன்பது அடி இருந்தது.

"பிறகு வெட்டுமரத்தின் நிழல் எவ்வளவு நீளம் இருந்திருக்கு மென்பதைக் கண்டுபிடிப்பது வெகு சுலபமாய்விட்டது. ஆறு அடி நீளமுள்ள ஒரு கொம்பின் நிழல் ஒன்பது அடிதூரம் இருந் தால், அறுபத்து நான்கு அடி உயரமுள்ளதாக விருந்த அந்த வெட்டுமரத்தின் நிழல் 96-அடி நீளம் இருந்திருக்க வேண்டு மென்று நன்கு விளங்குகின்றதல்லவா? வெட்டுமரத்தின் நிழல் விழுந்திருந்தபக்கமும் இப்போது இந்தத் தூண்டிற்கழியின் நிழல் விழும் பக்கமாகத்தானிருக்கவேண்டும். உடனே நான் அந்தத் தூண்டிற் கழியின் நிழல் விழுந்திருந்த பக்கமாகவே 96-அடி தூரம் அளந்துகொண்டு சென்றேன். அது அவ்வீட்டின் சுவருக்கு மிக்க சமீபத்தில் கொண்டு போய்விட்டது. நான் அவ்விடத்தில் ஒரு முளையை அடித்தேன். வெப்ஸ்டர்! நான் முளையடித்த விடத் திற்கு இரண்டங்குலத்திற்குள்ளாகவே தரையில் முக்கோணமா யுள்ள ஒரு சிறிய பள்ளமொன்று அடையாளம் செய்யப்பட்

டிருந்தது என்றால் எனக்கு எவ்வளவு ஸந்தோஷம் உண்டாயிருக்குமென்று நீ நினைக்கிறாய்? 'பிரண்டனேதான் அளந்து கொண்டுவந்து இவ்விடத்தில் இப்மாதிரி அடையாளம் செய்திருக்கிறான். அவன் சென்ற வழியாகத்தான் நாமும் செல்கிறோம்' என்று நான் அறிந்துகொண்டேன்.

பிறகு நான் என் சட்டைப்பையில் இருந்த திசையறி கருவியை எடுத்து நான்கு திக்குகளையும் கண்டுபிடித்து அவற்றிற்கு அடையாளமாகத் தரையில் கோடு கிழித்துக் கொண்டேன். உடனே நான் நேர் வடக்குப் பக்கமாய்ச் சுவருக்கு ஒழுங்காக ஒவ்வொரு காலினாலும் பத்தடிதூரம், அதாவது மொத்தம் 20-அடி அளந்துகொண்டுபோய், அவ்விடத்திலும் ஒரு முளையை அடித்துக்கொண்டு மறுபடியும் நான் நேர் கிழக்காக ஐந்து அடியும், அங்கிருந்து தெற்கு முகமாக இரண்டு அடியும் அளந்து கொண்டு போனேன். இவ்வாறு அளந்தவுடனே அது அந்தப் பழைய வாசற்படியின் கதவண்டை கொண்டுபோய்விட்டது. அங்கிருந்து இரண்டடி மேற்கு முகமாகப் போகவேண்டுமென்றால் கருங்கல்லால் அடைக்கப்பட்டிருந்த அந்த வாசற்படியின் வழியாய் இரண்டடி அப்பாற் செல்லவேண்டும். அதுதான் வினவிடைப் பத்திரத்தினாற் குறிக்கப்பட்ட இடம். நான் செய்த வேலை முழுவதும் வீணாய்ப் போயிற்றே என்று எனக்கு மிக்க வருத்தம் உண்டாயிற்று. கருங்கல்லா லடைக்கப்பட்டிருந்த அந்த வாசற்படியின் வழியாய் எவ்வாறு அளந்து செல்வது? நான் கணக்குப் போட்டு அளந்ததுதான் பிசகாய் இருக்கக் கூடுமோவென்று எனக்குத் தோன்றிற்று. அப்போது சூரியன் நன்றாய் மேற்கே சாய்ந்துவிட்டபடியால் அந்த வாசற்படியில் சூரியரஸ்மி விழுந்துகொண்டிருந்தது. நடந்து நடந்து பள்ளமாய்த் தேய்ந்து போயிருக்கிற அவ்வறையின் தளவரிசைக் கற்கள் சிறிதும் இடைவெளியின்றிக் கெட்டியாய் ஒன்றோடொன்று பொருந்தியிருந்தமையால், அக்கற்களிலொன்றாவது இடையிலே பேர்த்தெடுக்கப்படவில்லையென்றும், வெகுகால முதற்கொண்டு கட்டினபடி அப்படியேயிருக்கின்றதென்றும் எனக்குத் தோன்றிற்று. பிரண்டன் அந்த இடத்தில் வேலை செய்திருக்கிறான் என்று எண்ணுதற்குரிய அடையாளங்களும் அங்கே காணப்படவில்லை. நான்

அவ்விடங்களையெல்லாம் என் கைத்தடியால் தட்டித்தட்டிப்பார்த்தேன். எவ்விடத்திலும் ஒரே மாதிரியான சப்தமே கேட்டது. சந்திருப்பதாகவாவது, கீழே சுரங்கம் இருப்பதாகவாவது புலப்படவில்லை. இங்ஙனம் நான் மேற்செய்வது இன்னதென்று தோன்றாமல் விழித்துக்கொண்டிருக்கையில், நான் செய்கிற காரியத்தின் நோக்கம் இன்னதென்பதைத் தெரிந்துகொண்டு, அதில் கொஞ்சம் கவுரவபுத்தியை வைத்தவரும், என்னோடு கலந்து என்னைப்போலவே வேலை செய்யத் தொடங்கியவருமாகிய மஸ்கிரேவ் என்பவர், நான் கொண்ட கணக்குச்சரிதானா என்பதை ஒப்பிட்டுப்பார்ப்பதற்காகத் தம்முடைய சட்டைப்பையிலிருந்த பத்திரத்தை எடுத்துப் படித்துப்பார்த்தார். பார்த்துவிட்டு, "எல்லாம் சரிதான்; 'ஆக, நுழைந்திருக்கிறது' என்றதன் அர்த்தத்தைத் தாங்கள் கவனிக்கவில்லையே' என்று உரக்கக்கத்தினார்.

"அவர் அப்படி இரைந்து கத்தவே, கீழே வெட்டவேண்டுமென்பது, அந்த நுழைந்திருக்கிறது என்பதன் அர்த்தமாயிருக்கவேண்டுமென்று கருதி, நான் மஸ்கிரேவைப் பார்த்து 'அப்படியானால், உள்ளே ஏதாவது சுரங்கமிருக்கிறதா? அல்லது வெட்டவேண்டுமென்று சொல்லுகிறீர்களா?' என்று கேட்டேன்.

"'வெட்டவேண்டுமா? அது யார் செய்கிறவேலை? இதன் கீழே இந்தக் கதவின் வழியாக ஒரு சுரங்கமிருக்கிறதையா, இருக்கிறது. நான் மறந்தே போய்விட்டேன். அந்தச் சுரங்கமும் இன்று நேற்று எங்களால் ஏற்பட்டதில்லை. எங்கள் முன்னோர்களால் இவ்வீடு கட்டப்பட்ட காலத்திலேயே கட்டப்பட்டிருக்கிறது' என்று பின்னையும் உரக்கக் கூவினார்.

"நாங்களிருவரும் அவ்வாசற்படியின் பக்கமாய், வளைந்து வளைந்து கீழே போகிற ஒரு கருங்கற் படிக்கட்டின் வழியாகக் கீழே யிறங்கினோம். அவ்விடத்தில் இருட்டு அதிகமாய் இருந்ததனால், மஸ்கிரேவ் ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்துக் கதவோரமாய் மாட்டியிருந்த ஒரு விளக்கைப் பிரகாசமாக ஏற்றினார். ஒரு நிமிஷத்திற்குள்ளாக நாங்கள் அந்த வினாவிடைப்பத்திரத்திற் கண்டிருந்த சரியான இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டோம். அந்த இடமானது இதற்குமுன் ஒருவரும் போகாத இடமன்று. அடிக்

கூடி அவ்வீட்டிலுள்ள வேலைக்காரர்களெல்லாரும் தாராளமாய்ப் போய்வருகிற இடந்தான் அது.

"அந்த இடத்தில், வீட்டுக்குவேண்டிய விறகுகளையெல்லாம் மொத்தமாய்ச் சேகரித்து அடுக்கிவைப்பது வழக்கம். வேறொன்றுக்கும் அந்த இடத்தை உபயோகப்படுத்துவதில்லை. ஆனால், நாங்கள்பார்த்தசமயத்தில் அந்தஅறையில் போடப்பட்டுள்ளவிறகுகள் எல்லாம் இரண்டு பக்கங்களிலும் குவிக்கப்பட்டு மத்தியில் மாத்திரம் கொஞ்சம் இடம் விடப்பட்டிருந்தது. இதற்கென்னகாரணம் என்பதை நான் கவனித்துப்பார்த்தேன். இடம்விட்டிருந்த அந்த இடத்தில் ஒரு பெரிய கருங்கற்பாறையானது துருப்பிடித்த ஒரு இரும்பு வளையத்துடன் காணப்பட்டது. அவ்வளையத்தின் மேல் கெட்டியான, கறுப்புத்துணியாற் செய்யப்பட்ட முகமூடியொன்று (Muffler) சுற்றப்பட்டிருப்பதையும் பார்த்தோம்.

"மஸ்கிரேவ் அந்த முகமூடியையெடுத்து விளக்கு வெளிச்சத்தில் உற்றுப்பார்த்தார். பார்த்துவிட்டு, 'ஐயோ, தெய்வமே! இதுபிரண்டன்போட்டுக்கொண்டிருந்தமுகமூடியல்லவா! இது இங்கேவரக் காரணமென்ன? இது பிரண்டனுடைய முகமூடிதான்! நான் எத்தனையோதரம் பார்த்திருக்கிறேன்; கொஞ்சமும் ஆக்ஷேபமில்லை. கோவிலில்வந்து பிரமாணஞ்செய்ய வேண்டுமென்றாலும், நான் இது அவனுடைய முகமூடிதான் என்று பிரமாணஞ் செய்யச் சித்தமாயிருக்கிறேன். அந்த அயோக்கியனுக்கு இங்கென்னவேலை? எதற்காக விறகுகளையெல்லாம் இப்படி மூலையிற் குவித்திருக்கிறான்? ஹண்டர்! சொல்லமாட்டீரா?' என்று உரக்கக் கூச்சலிடத் தலைப்பட்டார்.

"நான் அந்த மஸ்கிரேவைப் பார்த்து, 'மஸ்கிரேவ்! நாம் இது வரையில் செய்தது சரி; இனிப் போலீஸ் அதிகாரிகளையும் கூடவே வைத்துக்கொண்டுதான் ஒரு காரியத்தைச் செய்யவேண்டும். இதோ இந்தக் காகிதத்துண்டை உம்முடைய வேலைக்காரன் கையில் கொடுத்து அரைக்ஷணத்திற்குள் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய்க் கொடுக்கச் சொல்லும்' என்று சொல்லி ஒருகாகிதத்தையெழுதி அவர்கையில் கொடுத்தேன். அவர் அதை ஒரு வேலைக்காரனிடம் கொடுத்தனுப்பினார். ஐந்து நிமிஷத்திற்

குள்ளாக ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும், நாலைந்து சேவகர்களும் நாங்களிருக்குமிடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வந்து சேர்ந்தவுடன் நான் அந்த இரும்பு வளையத்தைப் பிடித்துத் தூக்கினேன். அந்தக் கல் சிறிதும் நகரவில்லை. பிறகு இரண்டு சேவகர்களைவிட்டு அந்தக்கல்லைப் புரட்டச் செய்தேன். அவர்களும் வெகுநேரம் வரையில் முயன்று பார்த்தும் முடியாமல், கடைசியாய் ஒரு புறமாக நகர்த்தித் தள்ளினார்கள். கீழே ஒரு இருண்ட அறை காணப்பட்டது. அதற்குள்ளாக நாங்கள் இறங்கினோம். மஸ்கிரேவ் மேலேயிருந்து மண்டிபோட்டுக் கொண்டு துவாரத்தின்வழியாக விளக்கைக் காட்டிக்கொண்டிருந்தார்.

"அந்த அறை ஏழடியாழமும் நாலடிச் சதுரமுமாக இருந்தது. அதன் ஒரு மூலையில் பித்தளைப்பட்டங் கட்டியிருந்த மரப்பெட்டியொன்று திறந்து கிடந்தது. அதன் பூட்டுத் துவாரத்தில் பழைய காலத்துத் திறவுகோலொன்று நீட்டிக்கொண்டிருந்தது. அப்பெட்டியின்மேலிருந்த மண்ணையும், அப்பெட்டின் எல்லாப் பக்கமும் செல்லரித்துத் துவாரம் துவாரமாய்ப் போயிருந்ததையும், திறவுகோலிருந்த மாதிரியையும் பார்க்கும்போது, அந்தப் பெட்டி அங்கே வைக்கப்பட்டு எத்தனையோ நூற்றாண்டுகள் சென்றிருக்குமென்று ஊஹிக்கும்படியா யிருந்தது. அப்பெட்டியின் அடியில் இதோ நான் வைத்துக்கொண்டிருக்கிற மாதிரியாய் நாணயவடிவமான சில உலோகங்கள் கிடந்தன. தவிர, அந்தப் பெட்டிக்குள் ஒன்றுமே காணப்படவில்லை.

"நாங்கள் அந்தப் பெட்டியைப் பார்த்துக்கொண்டிருக்கையில், அதன் பின்புறமாகக் காணப்பட்ட ஒரு விகாரமான வடிவத்தைக்கண்டு பயந்து விட்டோம். பூதங்காத்துக் கொண்டிருக்குமென்று கேள்விப்பட்டிருக்கிறோமே, அப்படிப்பட்ட பூதந்தானோ இது என்று நடுக்கங்கொண்டேன். காய்ந்து, எலும்புந்தோலுமாகக் காணப்பட்ட அச்சரீரம் தலையில் இரண்டு கையையும் வைத்துக்கொண்டு, பெட்டியில் காலை உதைத்து நீட்டிப்படுத்தவண்ணமாகக் காணப்பட்டது. எனக்கு உள்ளூறப் பயமிருந்தாலும் நான் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல், அங்குள்ள சேவகர்களைத் தைரியப்படுத்தி 'ஏன் பயப்படுகிறீர்கள்? இது பிரண்டன் என்னும் அந்தத்

துரோகியின் சரீரம். அதற்குக் கொஞ்சமும் சமுசயமில்லை. 'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற பழமொழியின்படி தன் யஜமானனுக்குத் துரோகம் நினைத்தமையால் இந்தக் கதிக்கு ஆளானான். இந்த நாற்றச் சரீரத்தைக் கண்டு நீங்கள் இவ்வளவு பயப்படுவீர்களானால், பின்னை உங்களுக்குப் போலீஸ் சேவகர்கள் என்ற உத்தியோகம் எதற்கு? தைரியமாய் எடுத்து மேலே கொண்டுவாருங்கள்' என்று சொன்னேன். அவர்களும் ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு அச்சவத்தை யெடுத்து வெளியிலே கொண்டுவந்து போட்டார்கள்.

"முகம், கண், முதலியவற்றைக் கொண்டு ஆள் இன்னானென்பதாகக் கண்டுபிடிக்க முடியாமற்போனாலும், தலைமயிர், சட்டை, ஆள் நீளம் முதலிய அடையாளங்களிருந்தபடியால், மஸ்கிரேவ் அந்தச் சவத்தைக் கண்ட மாத்திரத்திலேயே, 'இவன் தானையா, எங்கள் வேலைக்காரன். பிரண்டன் என்று பெயர் வைத்துக்கொண்டிருந்த ஸ்வாமித் துரோகி இந்த அயோக்கியன் தானையா. இவன் தீய நினைவுக்குக் கடவுள் சரியானபடியாகத்தான் கூலி கொடுத்திருக்கிறார். அது போகட்டும். இவன் உடம்பில் காயமாவது, இரத்தக் கறையாவது காணப்படாததால் இவனை வேறொருவர் கொலை செய்திருக்க நியாயமில்லை யல்லவா? தற்கொலை செய்துகொண்டிருப்பா னென்றாலோ, அவன் அவ்வளவுக்குக் கோழை மனமுடையவனல்லன். கழுவிலிருந்து கைகாட்டக்கூடிய பெரிய கன்னெஞ்சன். இறந்து பத்து நாளைக்கு அதிகமிருக்கலாமென்றுந் தோன்றுகிறதே. ஹண்டர்! இதன் ரகஸ்யமென்ன? எதற்காக இங்கே வந்து இப்படி இறந்து கிடக்கிறான்? நீங்கள்தாம் இதைக் கண்டுபிடிக்கக் கூடியவர்கள். எப்படியோ இங்கே வந்து இந்தச் சவத்தைக் கிளப்பிவிட்டீர்களே' என்று சொல்லி ஒன்றும் புரியாமல் தடுமாறிக்கொண்டிருந்தார்.

"வெப்ஸ்டர்! அவர் அங்ஙனங் கேட்ட கேள்விகளுக்கு எனக்குச் சரியான உத்தரம் சொல்லத் தெரியவில்லை. வினாவிடைப் பத்திரத்திற் கண்டிருந்த இடத்தை மாத்திரம் எப்படியோ சிந்தூர மரம், வெட்டுமரம் என்ற அடையாளங்களைக் கொண்டு கண்டுபிடித்தேனென்றாலும், அப்பத்திரத்தின் தாத்பர்யம் என்ன?

அந்த இடத்தில் என்ன விசேஷம்? திறந்துகிடந்த அப்பெட்டியில் என்னென்ன சாமான்கள் விலைபெற்றவைகளாயிருந்தன? பிரண்டன் என்ன உத்தேசத்தோடு அவ்வறைக்குப்போனான்? இறந்து கிடக்கக் காரணமென்ன? என்கிற இத்தனை விஷயங்களில் ஒன்றையேனும் நான் அப்போது கண்டுபிடிக்க முடியவில்லை. நான் அங்கே ஓரிடத்தில் தனியே உட்கார்ந்து ஒருவரோடும் பேசாமல் அரைமணி நேரம் வரையில் இந்த விஷயத்தைப்பற்றி மிக நிதானமாக, என் புத்தியையெல்லாஞ் செலுத்தி யோஜித்துப்பார்த்தேன்.

"வெப்ஸ்டர்! இப்படிப்பட்ட கேசுகளில் என் நடவடிக்கைகளெல்லாம் எப்படி யிருக்குமென்பதைப் பற்றி நான் உனக்குச் சொல்லவேண்டுவ தில்லையே. நான் என்னைப் பிரண்டனுடைய ஸ்தானத்தில் வைத்துக்கொண்டு, புத்திசாலியான அந்தப் பிரண்டனைப் போன்ற நாம் ஸந்தர்ப்பத்துக் கனுகுணமாக என்னென்ன செய்திருப்போம் என்பதை யோஜிக்கத் தொடங்கினேன். பிரண்டன் முதல்தரமான புத்திசாலி யாகையால், அவனைவிடக் கெட்டிக்காரத்தனமாக நாம் ஒரு காரியத்தையும் செய்யவாவது, யோஜிக்கவாவது முடியாதென்ற நம்பிக்கை எனக்கு ஆதிமுதற்கொண்டே பூரணமாக இருந்தது. ஆகையால், நான் என் புத்திக்கெட்டியவரையில் ஆழ்ந்து யோஜித்துப் பார்த்தேன். அந்த அறையில் மிக்க விலையுள்ள அருமையான பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கவேண்டுமென்று யோஜித் திருக்கிறானென்றும், அதன்பேரில் அது வைக்கப்பட்டிருக்கிற இடத்தைச் சிந்தூர மரத்தின் அடையாளத்தை வைத்துக்கொண்டு கணக்குப் பார்த்துக் கண்டுபிடித் திருக்கிறானென்றும், இடத்தைக் கண்டுபிடித்தபிறகு பாறையை யெடுக்கப் பார்த்து, முடியாததால் சகாயத்திற்கு அந்தரங்க நேசமுள்ள ஒருவரை யபேக்ஷித்திருக்கிறானென்றும், அங்ஙனம் அபேக்ஷித்தவன், எவ்வளவு உண்மையுள்ளவர்களா யிருந்தாலும், லாபநஷ்டத்திற்குப் பாத்தியப்படாத ஒருவரை நம்பக்கூடாதென்று தெரிந்து, சுகதுக்கத்திற்கு உடந்தையாயிருக்கும் மனைவியைச் சகாயத்திற்கு அழைத்திருக்கிறானென்றும், கலியாணம் செய்துகொண்ட ஜேனெட் டிரிஜெலிஸ் (Jenet Tregellis) என்பவள், பின்னர் கெட்ட நடத்தையுடையவளாய் மாறிவிட்டாளென்று தெரிந்துகொண்டிருந்ததனால், தன்

னிடத்தில் அதிக மோஹங் கொண்டிருந்த ராச்சல் ஹோவெல்ஸ் என்பவளையே, பின்னர் கலியாணஞ் செய்துகொள்வதாகச் சொல்லிச் சமாதானஞ் செய்து அவளை ஸகாயத்திற்கு அழைத்திருக்கிருனென்றும், அவளும் உடன்பட்டு வரவே இராத்திரி வேளையில் இரண்டுபேருமாக அப் பெருங்கல்லைப் புரட்டியிருக்கிருர்களென்றும் நான் தீர்மானித்துக் கொண்டேன். உடனிருந்து எல்லாவற்றையுங் கண்டவன்போல இவ்வளவு தீர்மானித்துக் கொண்ட பிறகு, எனக்குச் சிறிது ஆக்ஷேபந் தோற்றியது.

"நல்ல பலசாலியாகிய நாமும், நம்மிலும் அதிக பலசாலியாகிய ஒரு சேவகனும் ஒன்று சேர்ந்து முக்கித் தூக்கவேண்டியதாயிருந்த ஒரு பெரிய பாறையை ஒரு ஸ்திரீயும் ஒரு புருஷனுஞ் சேர்ந்து எப்படித் தூக்கியிருக்க முடியும் என்று யோஜித்தேன். ஏதாவது சகாயத்திற்கு ஒரு கருவியை வைத்துக்கொண்டு தூக்கியிருப்பார்கள் என்று தோன்றிற்று. நாமாயிருந்தால் அந்தப் பாறையைக் கிளப்புவதற்கு என்ன உபாயஞ் செய்திருப்போமென்று சிந்தித்துப் பார்த்தேன்.

நான் எழுந்திருந்து அங்கே இரண்டு பக்கங்களிலும் குவிக்கப்பட்டிருந்த விறகுகளையெல்லாம் ஒவ்வொன்ருக எடுத்துப் பார்த்தேன். நான் என்னஎண்ணத்தோடு பார்த்தேனே அந்தப்படியே இருந்தது. மூன்றடி உயரமுள்ளதான ஒரு கட்டை மாத்திரம் அடியில் கொஞ்சம் வளைந்திருந்தது. மற்றுஞ் சில கட்டைகளில் அவற்றின் இரண்டு கோடியும், அவற்றின்மேல் மிகப்பளுவான பாரம் தாக்கியிருப்பதனுல் நசுக்குண்டுபோன மாதிரியாக, தட்டையாக நசுங்கிப்போயிருந்த அடையாளங்கள் காணப்பட்டன. இவற்ருல் எனக்கு வெளிப்படையாகத் தெரிந்த விஷயம் என்னவென்ருல், பிரண்டனும் ராச்சலும் அங்குள்ள பாறையைத் தங்கள் முழுபலத்தையுஞ் செலுத்தி மிகுந்த பிரயாசத்தின் பேரில் தூக்கியெடுக்கும்போது சில கட்டைகளை அப்பாறையின் ஒரு பக்கத்தில் கொடுத்திருக்கிருர்களென்பதும், ஆனதினுல்தான் சில கட்டைகள் நசுக்குண்டிருக்கின்றன வென்பதும், இவ்விதம் கட்டைகளை அடியிற் கொடுத்துத் தூக்கி, ஒரு ஆள் நுழையும் படியான இடைவெளியுண்டான பிறகு செங்குத்தாக ஒரு கட்டை

யைப்பாறையின் மற்ெருரு பக்கத்தில் கொடுத்து அதைவிழாதபடி நிறுத்தி, விட்டு, அவ்விருவர்களிலொருவர், அதாவது பிரண்டன் உள்ளே நுழைந்திருக்கவேண்டுமென்பதுமேயாம். அதனுல்தான் மூன்றடியுயரமுள்ள ஒரு கட்டை, பாரம் தாங்கமாட்டாமல் அடியிலே வளைந்துபோயிருக்கிறது என்பதையும் நான் ஊகித்தறிந்து கொண்டேன்.

பிரண்டன் உள்ளே நுழைந்திருக்கிறுன் என்பதும் அங்கே பூட்டிக்கிடந்த பெட்டியைத் திறந்து அதிலிருந்த விலையுயர்ந்த பண்டங்களை யெடுத்து, வெளியே நின்றுகொண்டிருந்த ஹோவெல்ஸ் கையில் கொடுத்திருக்கிறுன் என்பதும் எனக்கு வெளியாயிற்று. ஆனுல், இருவரும் ஒன்று சேர்ந்து வந்திருக்கையில் பிரண்டனுக்கு அச்சுரங்கம் கல்லறையாக மாறினதற்கும், ஹோவெல்ஸ் தேசாந்தரம் போனதற்குமுள்ள காரணம்மாத்திரம்எனக்குப் புலப்படவில்லை. விலையுயர்ந்த பண்டங்களைப் பெற்றுக் கொண்ட பின்னர், அப்பொருள்களின் மேலுள்ள ஆசையால், தானே அவற்றைத் தனியே அனுபவிக்கவேண்டுமென்று கருதி, வேண்டுமென்றே கல்லைப்புரட்டிப் பிரண்டனைக் கொன்றுவிட்டு அந்த ராச்சல் ஓடிவிட்டாளா? அல்லது, பிரண்டன் முன்னுல் தன்னை அலக்ஷியஞ்செய்து வேெருருத்தியைத் தன் கண்பார்க்க விவாகஞ்செய்து விட்டதை நினைத்து, அதற்குப்பதிலாகக்கொலை வாங்கினுளா? அல்லது அந்த பாறை தானுகவே சரிந்து,வீழ்ந்து மூடிக்கொண்டுவிட, அதைத் திரும்பவும் எடுக்க வலியில்லாமற் போகவே, உண்மையான ரகஸ்யத்தை வெளியிலே பிரஸ்தாபிக்கப்பயந்து, பித்துக்கொண்டவள்போல ஓடிவிட்டாளா? இம்மூன்றில் எதுவாயிருக்கலாமென்று யோஜித்துப் பார்த்தேன். இது நடந்த மறுநாள் அந்த ராச்சல் ஹோவெல்ஸ் எனபவள் பித்துக் கொண்டவள்போற் சிரிப்பதும், மயங்கி வீழ்வதும், எழுந்து ஓடுவதும், நடுங்கிப்பயந்துகொண்டு உளறுவதுமாயிருந்தாளென்று மஸ்கிரேவ் சொன்னபடியால் கடைசியாகக் கூறியபடியாகத்தான் நேர்ந்திருக்கவேண்டுமென்று தீர்மானித்துவிட்டேன். இவ்வளவு தீர்மானித்த பிறகும், அச்சுரங்கத்தில் திறந்துகிடந்த அந்தப் பெட்டியில் என்ன இருந்திருக்கிறது என்பதை மாத்திரம் நான் எளிதில் கண்டுபிடிக்க முடியவில்லை. பெட்டியில் இருந்த பொருள்

எதுவாயிருந்தாலுஞ்சரி, அதை பிரண்டன் என்பவன் எடுத்து, வெளியே காத்துக்கொண்டிருந்த ராச்சலிடத்திலேதான் கொடுத்திருக்கவேண்டுமேயல்லது வேறு பிரகாரமாக வெளிப்படுத்த நியாயமில்லை யல்லவா? அப்படி அவன் கொடுத்திருக்கும் பக்ஷத்தில் அந்தப்பொருள், புழைக்கடையிலுள்ள குட்டையிலிருந்து கண்டெடுத்ததாகச் சொன்ன இரும்புப்பெட்டியிலிருந்த பழைய நாணயங்களும், கூழாங்கற்கள் மாதிரியாயிருந்த கற்களுமாகத்தான் இருக்கவேண்டுமென்று ஊஹித்தேன். ஆனால், இவ்வளவு பரிசிரமப்பட்டுக் கண்டெடுத்துக் கொடுத்த புதையலைக் குட்டையில் அவள் எறியக்காரணமென்ன? குற்றத்தை மறைப்பதற்காக அவ்வாறு அச்சமயம் செய்திருக்கிறாளா? நல்லனவாயுள்ளவற்றையெடுத்துக்கொண்டு, அசாரமானவையென்று பாக்கியுள்ளவற்றையெறிந்திருக்கிறாளா? விஷயம் எப்படியிருக்கக்கூடுமென்று நான் நீள யோஜித்துக்கொண்டிருக்கையில், நாடகம்போன்ற இந்த ஆச்சரியமானசம்பவங்களையெல்லாம்பார்த்து ஒன்றுந்தெரியாமல் பிரமித்துப் போய்த் தன் கையிலுள்ள விளக்கை ஆட்டியசைத்துக் கொண்டபடியே யோஜனைசெய்துகொண்டுஎன்பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மஸ்கிரேவ் என்பவர் என்னைப்பார்த்து, 'ஹண்டர்! பார்த்தீரா இந்த நாணயத்தை? இதில் சார்லஸ் (Charles I.) என்று பொறித்திருக்கிறது. வினவிடைப் பத்திரம் மிகப் பழங் காலத்தது என்று நான் சொன்னது சரியாய்ப் போய்விட்டதல்லவா?' என்று சொன்னார்.

"மஸ்கிரேவ் இப்படிச் சொன்னவுடன் அந்த வினவிடைப் பத்திரத்தில் கண்டிருந்த முதல் இரண்டு வினவிடைகளின் பொருள் எனக்கு இன்னதென்று நன்றாகப் புலப்பட்டுவிட்டது. 'முதலாவது சார்லஸ்ஸின் சம்பந்தமாகவுள்ள இன்னும் சில அரிய பொருளை நான் உமக்கு இப்போது காட்டப்போகிறேன். தயை செய்து தோட்டத்தின் குட்டையிலிருந்து கண்டெடுத்ததாகச் சொன்ன அந்தப் பெட்டியை இங்கே கொண்டு வாரும்' என்று உரக்கக் கூவினேன்.

"உடனே நானும் மஸ்கிரேவும் புத்தகசாலைக்குட் போய் உட்கார்ந்துகொண்டு பெட்டியைத் திறந்து பார்த்தோம். மஸ்கிரேவ்

மாத்திரம் நான் ஏதோ உபயோகமற்ற வேலையைச் செய்துகொண்டிருக்கிறேனென்றும், அப் பெட்டியிலுள்ள பொருள்கள் பார்வைக்குக் கன்னங்கரேலென்றிருந்தபடியால் அவைகள் உபயோகமற்றவைகளென்றும் நினைத்து என்னைப் பரிஹஸித்தார். நான் அவர் பரிகாசஞ் செய்வதைக் கொஞ்சமும் லக்ஷியஞ் செய்யாமல் அப்பெட்டியிலிருந்து ஒரு கல்லை யெடுத்து அதை என் சட்டையில் அழுந்தத் தேய்த்தேன். மேலேயுள்ள மாசு கொஞ்சம் விலகவே அக்கல்லானது நெருப்புத் துண்டம்போலப் பளீரென ஒளிவிட்டுப் பிரகாசித்தது. இருப்புத் துண்டுகள்போலக் கிடந்தவைகளையும் நான் ஒன்று சேர்த்துப் பார்த்தேன். அது இன்ன ஆபரணம் என்று எனக்குப் புலப்பட்டுவிட்டது. நான் அடங்காத ஸந்தோஷத்தை யடைந்து, 'மஸ்கிரேவ்! முதலாவது சார்லஸ் மரணமடைந்த பிறகும் அந்த ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் இங்கிலாந்திலேயே சிலகாலம் தங்கி யிருந்திருக்கிறார்கள் என்றும், கடைசியாக ஊரைவிட் டோடும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டகாலத்தில் அவர்கள் தங்கள் கைவசமாயிருந்த விலைபெற்ற பொருள்கள் சிலவற்றைப் பிறகு சமாதான காலம் வாய்க்கும்போது திருப்பிக் கொடுத்துவிடலாமென்ற எண்ணத்தினால் புதைத்து வைத்திருக்கிறார்களென்றும் நீர் அறிந்துகொள்ள வேண்டும்' என்று சொன்னேன்.

"நான் இதைச் சொன்னதும் மஸ்கிரேவ் மிகவும் ஆச்சரியப்பட்டு, 'நீர் சொல்வது முற்றிலும் சரியே. என் முன்னோர்களிலொருவராகிய ஸர் ரால்வ் மஸ்கிரேவ் (Sir Ralph Musgrave) என்பவர் இரண்டாவது சார்லஸுக்கு ஒரு கண் போன்றவராய் அவர் போனவிடங்களிலெல்லாம் தாமும் கூடவே சகாயமாய்த் திரிந்திருக்கிறாரென்றும், அவர் முதலாவது சார்லஸ் காலத்தில் பிரதானமான தளகர்த்தராய் இருந்திருக்கிறாரென்றும் எனக்குக் கேள்வியுண்டு' என்று சொன்னார்.

"'நல்ல சமாசாரம். மஸ்கிரேவ்.! இதைச் சொல்லவே எல்லாம் ஒத்துவிட்டது. இப்போதுதான் எனக்குத் திருப்தியுண்டாயிற்று. வெகு காலமாய்க் கிடைக்காத, இருப்பதாகக்கூட எண்ணப்படாத விலையுயர்ந்த ஒரு குலதனம் இன்று உமது கைக்கு

வந்த விஷயத்தில் நான் மிகுந்த ஸந்தோஷத்தை யடைகிறேன். நீர் நல்ல அதிர்ஷ்டசாலி. பரிசாரகன் இறந்ததும், பணிப்பெண் ஓடிப்போனதும் பெரிய துக்ககரமான விஷய மென்றுலும், கிடைத்த திரவியத்தின் மேன்மையைப் பார்க்கும்போது இந்தத் தினத்தை நாம் ஒருசுபதினமாகக் கொள்ளவேண்டும். இப்போது உமக்குக் கிடைத்திருக்கிற குலதனமானது அதன் விலைமாத்திரத்திறை சிறந்திருப்பதுமன்றி, உலக சரித்திர சம்பந்தமாகவும் ஏற்றமுற்றிருக்கின்றது' என்றேன்.

"'அப்படியா! அதென்ன அது? ஹண்டர்! எனக்குத் தெரியவில்லையே' என்று மஸ்கிரேவ் ஆச்சரியத்துடன் கேட்டார்.

"'இங்கிலாந்தின் பூர்விக அரசர்களின் ரத்ன கிரீடந்தான். வேறொன்று மில்லை.'

"'கிரீடமா!'

"ஆம், கிரீடந்தான். விஞவிடைப் பத்திரத்தை இப்போது வாசித்துப்பாரும். "அது யாருடையது? யார் போய்விட்டாரோ அவருடையது" என்ற விஞவிடையின் பொருள்யாது தெரியுமா? தூக்குண்டிறந்த முதலாவது சார்லஸ் என்பவருடையது என்பது இதிற் குறிக்கப்பட்ட விஷயமாகும். "யார் வரப்போகிறுரோ அவரடைய வேண்டும்" என்ற இரண்டாவது கேள்வியின் சமாதானத்திற்கு, வரப்போகிற இரண்டாவது சார்லஸ் அடையவேண்டும் என்பது பொருளாம். இதோ இருக்கிற, இரும்புபோன்ற இவைகள்தாம் இங்கிலாந்தின் அரசர்களால் தரிக்கப்பட்ட கிரீடமாகும்' என்றேன்.

"'இது எப்படி இந்தக் குட்டைக்கு வந்து சேர்ந்தது?' என்று மஸ்கிரேவ் கேட்டார்.'

"'கால வித்தியாஸத்தினுல்தான். வேறென்ன காரணம் இருக்கிறது? நீர் நினைத்ததுபோலவே அந்த ராச்சலும் இவற்றையொன்றுக்கு முதவாத பொருள்களென்று தீர்மானித்து அலக்ஷியமாய் எறிந்துவிட்டுப் போய்விட்டாள்.'

"'சரிதான், திரும்பிவந்த இரண்டாவது சார்லஸுக்கு இது கிடைக்காமற் போனதற்கு என்ன காரணம்?' என்று அந்த

ரத்ன கிரீடத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டிக்கொண்டபடியே மஸ்கிரேவ் என்னைக் கேட்டார்.

"'சரியானபடி இதற்குச் சமாதானம் சொல்லுவது சாத்தியமில்லை. இதன் உண்மைகளைத் தெரிந்தவராயுள்ள தளகர்த்தரான ஸர் ரால்வ் மஸ்கிரேவ் (Sir Ralph Musgrave) என்பவர் இடையில் இறந்திருக்கக்கூடும். இறக்கும் தருவாயில் இந்த வினவிடைப் பத்திரத்தை உங்கள் முன்னோர்களிடம் ஒப்படைத்தவர் இதன் பொருளை இன்னதென்று சொல்ல மறந்திருப்பார். அது முதற்கொண்டு அந்த பரம்பரையாக இந்த வினவிடைப் பத்திரத்தை உங்கள் குடும்பத்தார்கள் பொருள் தெரியாமலே ஒரு மதச் சடங்காக வெண்ணி மனப்பாடஞ் செய்து வருகிறார்கள். பிரண்டன் இதனுண்மையை வெளிப்படுத்தாதிருக்கும் பக்ஷத்தில் இன்னமும் அநேக தலைமுறைக்கு இப்படியே அனுஷ்டிக்கப்பட்டு வரும். இப்படி நினைக்கவேண்டியிருக்கிறதே தவிர உண்மையான காரணத்தை நாம் எப்படி கண்டுபிடிக்க முடியும்? பிரண்டனைப் பலிவாங்கிக்கொண்டு நெடுநாளாய்க் காத்துக்கொண்டிருந்த பூதம் இன்று நம்மிடம் இதை ஒப்பித்துவிட்டதென நினைக்கிறேன்' என்றேன்.

"வெப்ஸ்டர்! இதுதான் விநோதமான வினவிடைப் பத்திரத்திற் கண்ட விஷயம். 'ஓடிப்போன ராச்சல் ஹோவெல்ஸ் என்பவளின் கதி என்னயிற்று?' என்று நீ கேட்பாய். அவளைப் பற்றிய சரித்திரம் மிகப் பெரிது. அதை நான் மற்றொரு சமயம் தெரிவிக்கிறேன்" என்றான்.

நான் இந்த அதிசயமான செய்தியைக் கேட்டவுடன், அந்த ரத்தினகிரீடம் இப்போது எங்கேயிருக்கிறது.? என்று ஹண்டரைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, அதைப்பார்ப்பதற்காக ஹார்ல்ஸ்டோனுக்கு விடைபெற்றுச் சென்றேன்.

——:(*):——

ராஜாங்க உடன்படிக்கை.

——:(*):——

எனக்கு மே-மாதத்தின்போது விவாக கல்யாணம் நடந்தது. அடுத்தாற்போல் வந்த ஜூன் மாதத்தில், நான் மூன்று முக்கியமான கேசுகளில் ஹண்டருடனிருந்து வேலை செய்திருக்கிறேன். ஆகையால், அந்த ஜூன் மாதமானது எப்போதும் என் ஞாபகத்தை விட்டகலாமல் இருக்கின்றது. கலியாணமான மாசங்கூட இந்த ஜூன் மாதத்திற்கு முந்திய மாதம் என்கிற காரணத்தால் தான் எனக்கு ஞாபகத்திலிருக்கிறது. அந்த சமயத்தில்தான் நான் ஹண்டருடைய துப்பறியும் வித்தையைக் கொஞ்சம் தெரிந்துகொண்டேன். ஹண்டர் தன் முழு சாமர்த்தியத்தையுங் காட்டித் திறமையுடன் வேலைசெய்து வெற்றிபெற்ற அந்தமூன்று கேசுகளையும் நான் என் குறிப்புப்புஸ்தகத்தில் எழுதிவைத்திருக்கிறேன். முதல் கேசு, முறைக்காய்ச்சல் என்ற சங்கேதமான பெயரையுடைய அத்யபூர்வமான கேசாகும். ராஜாங்க உடன்படிக்கை என்று இரண்டாவது கேசுக்குப் பெயர் கொடுத்தேன். மூன்றுவது கேசு, களைப்படைந்த ஒரு மாலுமியைப் பற்றிய சரித்திரமாம். இம்மூன்றும் ஒன்றைவிட ஒன்று மேலானதாயிருக்கும். முறைக்காய்ச்சல் என்ற குறிப்புப் பெயருடன் நான் எழுதிவைத்திருப்பதாகச் சொன்ன அந்த முதல் கேசானது இங்கிலாந்திலுள்ள முக்கியமான சில உயர்ந்த குடும்பங்களின் ஸ்திரீ புருஷர்களுடைய அந்தரங்க நடவடிக்கைகளைப்பற்றி விவரிப்பதாயிருப்பதால் சில வருஷங்கள் வரையில் நான் அதை வெளியிடக் கூடாதவனு யிருக்கிறேன். ஹண்டர் தன் துப்பறியும் சாமர்த்தியத்தையெல்லாம் உள்ளபடி காட்டி, 'இவன் ஒரு தேவாம்சமான அவதார புருஷனேயன்றிச் சாமானியமான ஒரு மனுஷ்யனல்லன்' என்று கூட விருந்தவர்களெல்லாம் பாராட்டிப் புகழும்படி செய்தது அந்த முறைக்காய்ச்சல் என்னுங் கேசிலே தான். நான் அந்தக் கேசு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விஷயத்தையும், அது எவ்வளவு அற்பமாயிருந்தாலும் விடாமல், எழுதிவைத்திருக்கிறேன். பாரிஸ் நகரத்திலுள்ள சிறந்த போலீஸ் வீர

ராகிய டியூபூக் என்பவருக்கு ஹண்டர் அந்தக்கேசின் வரலாற்றை யெல்லாம் ஒன்றுகூட விடாமல் சொல்லிக்கொண்டு வந்தபோது நானும் கூடவே யிருந்தேன். தமக்கு மேற்பட்ட புத்திசாலி இந்தப் பூமண்டலத்திலேயே இல்லையென்று செருக்குற்றிருந்த அந்த டியூபூக் என்பவர் ஹண்டரைக் கட்டித் தழுவி அவன் கையை முத்தமிட்டு, 'உம்முடைய சாமர்த்தியமே சாமர்த்தியம்! நீர் ஒரு தெய்வப்பிறப்பு' என்று சொல்லிப் பலவாறு தோத்திரம் செய்ததுமல்லாமல், 'நான் இன்றுமுதல் உம்முடைய சிஷ்யன். நீர் காலாலிட்டதைத் தலையாற் செய்யக் காத்திருக்கிறேன்' என்று மிக்க வணக்கத்துடன் கொண்டாடினார். இங்ஙனம் பெயர் போன போலீஸ் வீரர்களாலும் கொண்டாடத்தக்க ஹண்டரின் மதிநுட்பத்தை விளக்கவல்ல அந்த முறைக்காய்ச்சல் என்னுங் கேசைப்பற்றி நான் இப்போது எதுவும் வெளியிடக் கூடாமற் போனமைக்காக பெரிதும் வியசனிக்கிறேன். ராஜாங்க உடன் படிக்கை யென்ற கேசும் சாமானியமானதன்று. அது, அக்காலத்தில் கண்டுபிடிக்கப்படாமற் போயிருந்தால், எத்தனையோ பேருக்குக் கஷ்டங்களும் நஷ்டங்களும் உண்டாயிருக்கும். அந்தக் கேசை நான் உங்களுக்கு இப்போது சொல்லுகிறேன் கேளுங்கள்:-

நான் பள்ளிக்கூடத்திற் படித்துக்கொண்டிருந்தபொழுது எனக்கு இரண்டுவகுப்புக்கு மேல் பெர்ஸிவல் (Percival) என்ற பையனொருவன் படித்துக்கொண்டிருந்தான். அவனும் நானும் சரிவயதுடையவர்கள். நாங்களிருவரும் இணைபிரியாமல் பழகி வந்தோம். நீ நான் என்கிற வித்தியாசம் எங்களுக்குள் இல்லை. நகமுஞ் சதையும்போல ஒற்றுமை யுடையவர்களா யிருந்தோம். உபாத்தியாயர்களும், இரண்டொரு மாணாக்கர்களைத் தவிர மற்றுள்ளவர்களும் எங்களை இரட்டையர்க ளென்றே வியவகாரிப்பார்கள். எங்களைப் பேர் சொல்லி யழைப்பவர்கள் வெகு சுவற்பம். அந்தப் பெர்ஸிவல் என்பவன் மகாபுத்திமான். எந்தப் பரீக்ஷையிலும் முதன்மையாகவே தேறிவந்ததுடன், அப்பரீக்ஷைகளுக்காக ஏற்பட்டுள்ள பரிசுகளையும் பெற்றுவந்தான். ஷேப்பர்டு என்ற கணிதசாஸ்திர நிபுணரொருவரால் ஏற்படுத்தப்பட்ட உபகாரச்சம்பளமும் அவனுக்குத்தான் கிடைத்தது. ஆகையால், அவன் என்னைவிட்டுப் பிரிந்து கேம்பிரிட்ஜ் என்னுமிடத்திள்ள

சர்வகலா சாலையிற் சேர்ந்து படிப்பதற்காகப் போய்விட்டான். அவன் ஒரு பெரிய குடும்பத்திற் பிறந்தவன். நாங்களெல்லாரும் சிறுபையன்களாக இருந்து பள்ளிக்கூடத்திற் படித்துக்கொண்டிருக்கும் போது, இந்தப் பெர்ஸிவல் என்பவன் தன்னுடைய தாய்மாமனைப் பற்றி அடிக்கடி பெருமையாய்ப் பேசிக்கொள்வது வழக்கம். அவர் ஒரு பெரிய பிரபுவென்றும், ராஜ்யதந்திரங்களில் மகாவல்லவரென்றும், அவர் மனது வைத்தால் எத்தனையோ ஏழைகளைப் பணக்காரர்களாகவும், எத்தனையோ ராஜாக்களைக் கைதிகளாகவும் செய்துவிடக்கூடியவரென்றும் ராஜ்யதந்திரத்தில் அவரை வெல்லுபவர் ஒருவருமே யில்லையென்றும், அப்படிப்பட்டவரொருவர் தனக்கு மாமனா யமைந்திருப்பதனால் தனக்கு யாதொரு குறைவில்லை யென்றும் என்னோடு பலமுறையும் சொல்லியிருப்பது இப்போதும் எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆனால், பள்ளிக்கூடத்திற் படித்துக்கொண்டிருக்குங் காலத்தில் அந்த மாமனுடைய உதவி அவனுக்கிருந்ததாக நினைக்கச் சிறிதும் நியாயமில்லை. 'இவ்வளவு பெருமையடிக்கிறாயே; ஏன் உனக்கு உன் மாமன் நல்ல சட்டையும், நல்ல நல்ல புஸ்தகங்களும் வாங்கித் தரக்கூடாது?' என்று நான் அவனைக் கேட்டதற்கு அவன், 'இதெல்லாம் என்ன, அற்பமான காரியங்கள். நான் கேட்பதும் நியாயமில்லை. அவரும் அவ்வளவு தூரம் கவனித்து அனுப்பவும் மாட்டார். உத்தியோகம் செய்துவைக்கும் விஷயத்தில் அவர் எனக்கு வேண்டிய உதவியைச் செய்வார். அந்த சமயத்தில் நான் அவரை எவ்வளவு நிர்ப்பந்தமாக வேண்டுமானாலுங் கேட்கலாம், அவரும் ஸந்தோஷமாகச் செய்து வைப்பார். இப்போதுபோய், சட்டையில்லை துணியில்லை என்று அவ்வளவு பெரிய மனுஷ்யரை அற்பத்தனமாய்ப் பஞ்சையைப்போலக் கேட்பதுசரியன்று' என்று பதில் சொல்லியிருக்கிறான். இது நிற்க. அவன் கேம்பிரிட்ஜ் கலாசாலைக்குப் போய்விட்டபிறகு எனக்கு அவனைப்பற்றிய சமாசாரங்களெதுவும் தெரிவதற்கிடமில்லாமற் போய்விட்டது. ஆனால் எல்லாப் பரீக்ஷைகளிலும் தேறிவிட்டானென்றும், தன்னுடைய மாமனாகிய லார்டு ஹோல்ஹோர்ஸ்டு (Lord Holdhurst) என்பவருடைய சிபார்சின்பேரில் மந்திராலோசனைசபையில் ஒரு உயர்ந்த உத்தியோகத்தி லமர்ந்து நல்ல செல்வாக்குடன் இருந்துகொண்

டிருக்கிறனென்பதை மாத்திரம் ஸ்தூலமாகக் கேள்விப்பட்டிருந் தேன். ஒரு நாள் காலையில் நான் என் படுக்கையைவிட் டெழுந் திருக்கும்போது தபாற்காரன் என்னிடம் ஒருகடிதத்தைக்கொண் டுவந்து கொடுத்தான். அதை நான் ஆவலுடன் பிரித்துப்படித் துப்பார்த்தேன். அதில் பின்வருமாறு கண்டிருந்தது:—

"பிரியார்பிரே, வோகிங்,

15. 9. 1892.

"என தன்புள்ள வெப்ஸ்டர்!

"நீ கலாசாலையில் படித்துக்கொண்டிருக்கும்போது பேர்ஸி வல் என்ற ஒருவனுடன் உயிர்த்தோழமை பாராட்டி இணைபிரியா மல் இருந்ததும், இருவரும் ஒருவகுப்பிற் சேர்ந்து படிப்பதற்கில் லாமல் ஒருவன் ஐந்தாவது வகுப்பிலும், ஒருவன் மூன்றாவது வகுப்பிலும் சேர்ந்துபடிக்கும் படியாக நேர்ந்துவிட்டதேயென்று வருத்தப்பட்டதும் இப்போது ஞாபகமிருக்கலாமென்று நினைக்கி றேன். அந்தப் பேர்ஸிவல் என்னும் தௌர்ப்பாக்கியனை நான் கலாசாலையைவிட்டு வெளிக்கிளம்பினவுடன், நான் உன்னிடம் அடிக்கடி பிரஸ்தாபித்துவந்த என் மாமனுடைய உதவியால் மந் திராலோசனைசபையில், பொறுப்பும் கவுரவமுமுள்ள ஒரு உத்தி யோகத்தைப் பெற்று எல்லாருடைய மதிப்புக்கும் உரியனாய் மிக்க ஸந்தோஷத்துடன் நாள் கழித்துவந்தேன். இடிவிழுந்தாற் போல திடீரென்று ஒரு ஆபத்து வந்துவிட்டது. என் நாணயமும், கவுரவமும், என் செல்வாக்கும், என் பெருமையும், கடைசியாக என் மானமும் அத்தோடு என் பிராணனும் போகும்படியான நிலைமையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன்.

"பயங்கரமான அந்த ஆபத்தின் விவரங்களையெல்லாம் இப் போது இங்கே எழுதிப் பயனில்லை. ஒருவேளை நீ என் பிரார்த் தனையை நிறைவேற்றும் பக்ஷத்தில் உனக்கு எல்லா விஷயங்களை யும் தெரிவிக்கும்படி நேரிடும். நான் இப்போதுதான் வியாதி யாய்க் கிடந்து எழுந்திருந்திருக்கிறேன். ஒன்றரை மாத கால மாய்ப் புத்தி ஸ்வாதீனமில்லாமல் கண்டதையெல்லாம் பிதற்றிக் கொண்டு அன்ன ஆகாரமில்லாமல் கிடந்தேன். ஒரு நாள் இராத் திரி நான் வெறிபிடித்தவன்போலப் பக்கத்தில் இருப்பவர்களை

யெல்லாம் கண்டபடி திட்டிவிட்டு வெளியே புறப்பட்டுத் திசை கெட்டவன் போல ஓடினேனும். அப்படியெல்லாம் அசாத்திய மான வியாதியால் அடிபட்டபடியால் என் தேகம உருத் தெரி யாமல் இளைத்துப்போய்விட்டது. பேசுவதற்குக் கூடச் சக்தி யில்லாதவனு யிருக்கிறேன். இந்தச் சமயத்தில் நீ உன் சிநேகித ரான ஹண்டரை அழைத்துக்கொண்டு வந்தால் எனக்குப் பர மோபகாரமாக இருக்கும். நான் ஒரு கேசு விஷயமாக ஹண்ட ருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டியவனு யிருக்கிறேன். இங்குள்ள போலீஸ் அதிகாரிகள் எல்லாம் இனி என்ன முயன்றும் பயனில்லை யென்று சொல்லிவிட்டாலும், எனக்கு மாத்திரம் இன்னும் நம்பிக்கை போகவில்லை. ஹண்ட ரைக் கலந்து பேசி அவருடைய சகாயத்தால் ஏதாவது சௌக்கிய மடையலாமென்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். ஆகையால், அவரை எப்படியாவது அழைத்துக்கொண்டு வரவேண்டும். எவ் வளவு சீக்கிரத்தில் வரக்கூடுமோ அவ்வளவு சீக்கிரத்தில் வரப் பிரார்த்திக்கிறேன். ஒருவிதமான பெரிய விபத்தில் இருக்கிற எனக்கு ஒரு நிமிஷம் போவது ஒரு யுகமாகத் தோற்றுகிறது. ஒருவேளை உன் சிநேகிதர், 'இத்தனை நாள் வரையில் ஏன் அந்தக் கேசைப்பற்றி அவர் எழுதாமல் இருந்தார்' என்று உன்னைக் கேட்கக் கூடும். நான் அவருக்குள்ள சாமர்த்தியத்தை அறிந்து கொள்ளாதவனுய் இருந்து விட்டேனென்று எண்ணவேண்டாம். இடி விழுந்ததுபோலத் திடீரென்று எதிர்பாராத பெரிய ஆபத்து வந்துவிடவே எனக்குப் புத்திகெட்டுப் போய்விட்டது. அன் றைத்தினம் படுத்தவன் தான். நேற்றுத்தான் பக்கத்திலுள்ளவர் களை இன்னாரென்று அறிந்துகொள்ளக் கூடிய நிலைமை வந்திருக் கிறது. இன்னது செய்கிறோம், இன்ன இடத்திலிருக்கிறோம், இன்னாரோடு பேசுகிறோம் என்பதுகூடத் தெரியாமல் இருந் தேன். அதனுல்தான் நான் உன் சிநேகிதர்க்கு இந்தக் கேசைப் பற்றி முன்னதாகவே அறிவிக்க முடியாமற் போய்விட்டது. இதை நீ அவரிடம் சொல்லிச் சமாதானஞ் செய்து, என்ன காரி யம் இருந்தாலும் பாராமல் அதி சீக்கிரத்தில் அவரை இங்கே அழைத்துவரப் பிரார்த்திக்கிறேன். நானே நேரில்வந்து அழைத்து வரலாமென்பதற்கு என்னுடம்பு இடங் கொடுக்கவில்லை. இந்த

கடிதத்தைக்கூடப் பிறரைக்கொண்டு எழுதும்படியாயிருந்ததென்றால் நான் என் தேகஸ்திதியைப் பற்றி அதிகமாக எழுதிவா னேன். ஹண்டரையும் உன்னையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். இதைவிட முக்கிய காரியமாக எதையும் நினைக்கக்கூடாது. அவசியம் ஹண்டரை அழைத்துக் கொண்டு வர வேண்டும்.

"உன்னுடைய பழைய சிநேகிதன்
"ஜான். பெர்ஸிவல்."

இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்ததும் எனக்குக் கிடை கொள்ளவில்லை. கைகால்களெல்லாம் தளர்ந்து போய்விட்டன. நண்பனுக்கு என்ன ஆபத்து வந்துவிட்டதோவென்று மனங் கிடந்து தவித்தது. திருப்பித் திருப்பி (பல்லவி மாதிரி) ஹண்டரைக் கூட்டிவரும்படி எழுதியிருந்ததனால், அந்தக் காரியம் எவ்வளவு அசாத்தியமாயினும் ஒரு கை பார்த்துவிடவேண்டுமென்ற எண்ணம் எனக்குண்டாயிற்று. 'ஹண்டரோ தன் முழுவித்தைகளையும் காட்டும்படியான கேசு எப்போது வரப்போகிறதென்று எதிர்பார்த்துக் கொண்டே யிருப்பவன். ஆகையால், இப்படியொரு கேசு இருப்பதாகச் சொன்னால், எங்கே யெங்கேயென்று தானே போடிவருவான். நாமும் சொன்னால் வருவதற்குச் சிறிதும் ஆக்ஷேபமேயில்லை. சந்தோஷத்துடன் துள்ளிக் குதித்துக் கொண்டு வருவான்' என்று எண்ணினேன். என் மனைவியும் அரை நிமிஷமுந் தாமதிக்கக்கூடாது என்று நிர்ப்பந்தப்படுத்தினமையால் நான் உடனே புறப்பட்டுக் காலை 7-மணிக்குள்ளாக ரோட்டிக்கிடங்குத் தெரு வுக்குப் போனேன். ஹண்டர் அப்போதுதான் படுக்கையை விட்டெழுந்து காப்பி சாப்பிடுவதற்காக உட்கார்ந்தான். அவன் பக்கங்களிலெல்லாம் மருந்துக் குப்பிகள் வைக்கப்பட்டிருந்தன. அதனால், அவன் ராத்திரி முழுதும் ஏதோ பரீக்ஷை செய்து பார்த்திருக்கிறனென்று எனக்குத் தோன்றிற்று. நான் போன சமயத்திலுங்கூட ஏதோ ஒரு கண்ணாடி டம்ளரில் ஜலத்தை யெடுத்து விளக்கிற் பிடித்துக் காய்ச்சிக்கொண்டிருந்தான். அவன் அதையே அதிகமான ஆலோசனையுடன் கவனித்துக்கொண்டிருந்தமையால்நான் அங்கே வந்ததைக்கூட அவன் கவனிக்கவில்லை. நிரம்பவும் முக்கியமான

சோதனையாக இருக்கக்கூடுமென் றெண்ணி, நானும் அவனை இடையே கூப்பிட்டுக்காரியத்தைக் கெடுக்காமல், அவன் பின்புறத்திலே போட்டிருந்த ஒரு நாற்காலியில் அவன் அறியாமல் உட்கார்ந்து ஒரு பத்திரிகையை யெடுத்துப்படித்துக் கொண்டிருந்தேன். அவன் பத்து நிமிஷத்திற் கெல்லாம் என்னைத் திரும்பிப் பார்த்து, 'வெப்ஸ்டர்! நல்ல சமயத்தில் வந்தாய்; மேஜையில் வைத்திருக்கிற காப்பியைக் குடி. எனக்குத் தயார்செய்து கொண்டு வரச்சொல். இதோ 4-நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்' என்று சொல்லிக் காகிதத்துண்டு இரண்டு மூன்றைக் கையிலெடுத்துக்கொண்டு, 'வெப்ஸ்டர்! இது இப்போதிருக்கிற மாதிரி நீல வர்ணமாகவே இருந்தால் எல்லாம் சரிதான். சிவப்பு நிறமாக மாறினல் நான்கு உயிர்களுக்குச் சேதம் வரும்' என்று அக்காகிதத் துண்டுகளைத் தனித்தனியாகத் தான் காய்ச்சிக் கொண்டிருந்த டம்ளர் ஜலத்தில் தோய்த்தான். அவைகள் நீலநிறமாகவும் இல்லாமல் செந்நிறமாகவும் இல்லாமல் ஒரு மாதிரி சாம்பல் வர்ணமாக மாறின. ஹண்டர் அதைக்கண்டு, 'பலே! நான்நினைத்தபடியே இருக்கிறதே' என்று சந்தோஷம் உள்ளடங்காமல் கூத்தாடிவிட்டு, 'வெப்ஸ்டர்! காப்பியைச் சாப்பிடு. நானும் வரவேண்டுமென்றிருந்தால் இன்னும் ஒரு க்ஷணம் பொறுத்துக்கொள்' என்று சொல்லி ஐந்தாறு தந்திகளை யெழுதி, அவற்றை அங்கே காத்துக்கொண்டிருந்த ஒரு சேவகனிடம் கொடுத்தனுப்பிவிட்டு, நாற்காலியை என் பக்கத்தில் இழுத்துப்போட்டுக் கொண்டு, 'மன்னித்துக்கொள். அரைகுறையாகவிட்டுவர மனமில்லை. மேலும் விஷயமும் சிறிது அவசரமானது. இவ்வளவுநேரம் காக்கவைத்தேனே யென்று கோபித்துக்கொள்ளாதே' என்று சொன்னன்.

"காப்பியைச் சாப்பிடு. மற்றவைகளை அப்புறம் பேசிக் கொள்ளலாம்" என்றேன்.

ஹண்டர் காப்பியைக் குடித்துக்கொண்டிருக்கும்போதே என்னைப்பார்த்து, "வெப்ஸ்டர்! நான் இப்போது ஒரு கொலைக் கேஸைக் கண்டுபிடித்துவிட்டேன். அது அவ்வளவாக நிரம்ப ஆச்சரியகரமானது அன்று. அஃதிருக்கட்டும்; உன் முகத்தைப் பார்த்தால் நீ ஏதோ ஒரு முக்கியமான கேஸைப்பற்றி என்னிடம் சொல்ல வந்திருப்பதுபோலவும், என்னை அழைத்

துப்போக வந்திருப்பது போலவும் தோற்றுகிறதே. ஏதேனும் விசேஷமுண்டா ?" என்றுகேட்டேன்.

நான் உடனே என் கையிலிருந்த கடிதத்தை அவன் கையிற் கொடுத்தேன். அதை அவன் அதிகக் கருத்துடன் படித்துப் பார்த்தபிறகு என்னிடந்திருப்பிக் கொடுத்துவிட்டு, "சங்கதி யொன்றும் விவரமாக எழுதவில்லையே. ஆனாலும், இந்த எழுத்துக் கவனிக்கத்தக்கது" என்றான்.

"அஃது அவர் எழுதியதன்று" என்றேன்.

"வாஸ்தவம். இது ஒரு ஸ்திரீயால் எழுதப்பட்டிருக்க வேண்டும்" என்றான்.

"நன்றாயிருக்கிறது! அஃது ஆண் எழுதியதுதான்" என்றேன்.

"அன்று, அன்று. ஒரு பெண்தான் எழுதியிருக்கிறாள். அவளும் சாமானியமானவளல்லள். அபூர்வமான நடவடிக்கையுள்ளவள் என்று தெரிகிறது. இத்தகைய கேசுகளை நாம் விசாரிக்கத் தொடங்கு போதே, முதலாவது. நமது கக்ஷிக்காரருடன்சேர்ந்து பழகுகிறவர்கள் எவ்வெவர்கள், அவர்களுள்ளும் எவர் எவர் தம்மிடத்துள்ள நற்குணத்தாலோ தீயகுணத்தாலோ நம்மாற் கவனிக்கத்தகுந்தவர்கள், என்று தெரிந்துகொள்வது நலம். நல்லது, இந்தக்கேசில் எனக்கு ருசியுண்டாகிவிட்டது. தயாராய் இருக்கும் பக்ஷத்தில் இப்போது வோகிங் (Woking) போகிற ரயிலுக்குப்புறப்படலாம். நான் ஸித்தமாக இருக்கிறேன். சீக்கிரம் வா, போவோம். கடிதம் எழுதச்சொன்னவர் எப்படிப்பட்டவர் ?எழுதின அந்தப் பெண்மணி எப்படிப்பட்ட குணமுடையவள் ? என்பதைத் தெரிந்து கொள்ளலாம்" என்றான்.

நாங்கள் உடனே புறப்பட்டோம். வேகமாக ரயிலடிக்கு வந்தோம். அப்போதுதான் ரயில் புறப்படுகிற நேரமாயிருந்தது. பரபரவென்று எங்கள் சாமான்களை யெடுத்துக்கொண்டு வண்டியில் உட்கார்ந்தோம். வண்டியும் உடனே புறப்பட்டு விட்டது. சாயங்காலம் மூன்றுமணிக்குச் சிறிது முன்பாகவே வோகிங் போய்ச் சேர்ந்தோம். நண்பனிருக்குமிடமாகிய அந்த பிரியார்பிரே என்பது ரயிலடிக்குக் கால் மயில் தூரத்திலிருந்தது. அந்த வீடு

மிகப்பெரியது. வீட்டைச்சுற்றிலும் விஸ்தாரமான தோட்டம். அந்தத்தோட்டத்தில் பற்பலவிதமான மலர்ச்செடிகள் இருந்தன. நாங்கள் அந்த வீட்டுக்குள் நுழைந்ததும், நாங்கள் வந்திருப்பதைத் தெரிவிக்கும்படியாக அங்கே வாயிற் படியண்டை நின்று கொண்டிருந்த வேலைக்காரனிடம் சொல்லி யனுப்பினேம். அந்த வேலைக்காரன் திரும்பிவந்து எங்களை மிகவும் அலங்காரமாயிருந்த ஒரு கூடத்திற்கு அழைத்துக்கொண்டு போய் அங்கே உட்காரும்படியாகச் சொன்னன். பத்து நிமிஷத்திற்கெல்லாம் உள்ளேயிருந்து கட்டைக்குட்டையான ஒரு மனுஷ்யர் உள்ளேயிருந்து வெளியில் வந்து, "நீங்கள் தயவுசெய்து இந்தமட்டில் வந்தீர்களே. எப்பொழுது பார்த்தாலும் பெர்ஸிவல் தங்களையே கேட்டுக்கொண்டிருந்தார். இன்று காலையிலெல்லாம் உங்கள் பேச்சுத்தான். வருகிற நேரமாச்சு, வருகிற நேரமாச்சு, என்று வழிபார்த்துக்கொண்டே யிருந்தார். ஐயோ, பாவம்! ஆற்றோடு போகிறவன் அறுகம் புல்லைப் பிடித்துக்கொள்வது போல யார் எதைச் சொன்னலும் நம்பிக்கொண்டிருக்கிறர். அவருடைய தாய் தந்தையர்களுக்கு அந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவதாயிருந்தாலும் கஷ்டமாயிருக்கிறது" என்று சொன்னர்.

அந்த மனுஷ்யருக்கு வயது முப்பதுக்கு மேல் நாற்பதிருக்கலாம். அவருடைய முகத்தையும் கண்ணையும் பார்த்தபோது அவர் சரியான மனுஷ்யராக எங்களுக்குத் தோன்றவில்லை. துஷ்டஸ்வபாவமுடையவர்போலப் பட்டது.

ஹண்டர் அவரைப்பார்த்து, "அந்தக் கேசைப்பற்றி இன்னமும் எங்களுக்கு ஒன்றுந்தெரியவில்லையே, நீங்களும் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தாமோ?" என்று கேட்டான்.

அவர் சற்று ஆச்சரியத்துடன் எனது நண்பன் முகத்தைப் பார்த்துவிட்டுக் கீழே நோக்கினவர் சிரித்துக்கொண்டு, "ஓ, என் சட்டையில் ஜோ. ஹா. (J. H.) என்ற சங்கேதப் பெயர் போட்டிருந்ததைப்பார்த்தீரோ? இவர் எப்படி நம்முடைய உருவத்தைப் பார்த்தவுடனே இவ்விதங் கேட்டாரென்று நான் பிரமித்துப்போய்விட்டேன். எனக்கு ஜோஸெப் ஹாரிஸன் (Joseph Harrison) என்று பெயர். நான் இந்தக் குடும்பத்தைச்சேர்ந்தவ

னல்லன். ஆனல் என் சகோதரியாகிய அன்னி (Annie) என்பவளைப் பெர்ஸிவல் கலியாணஞ் செய்துகொண்டிருக்கிறு ராதலின் அம்முறையில் நானும் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவனுவேன். என் சகோதரி அவருடன் கூடவே இருக்கிறுள். சென்ற இந்த இரண்டு மாதகாலமாக அவள்தான் அவருக்குப் பணிவிடைகள் செய்து உபசரித்துக்கொண்டிருந்தாள். நல்லது ; தாமதிக்கவேண்டாம். அவர் தங்களைப் பார்க்க அதிக ஆவலுடன் காத்திருக்கிறூர்" என்று சொல்லி எங்களை உள்ளே கூட்டிப்போனுர்.

நாங்கள் சென்ற அந்த அறையானது படுக்கையறை மாதிரியாகவும் உட்காருகிற கூடம் மாதிரியாகவும் காணப்பட்டது. மத்தியில் ஒரு கட்டிலும், மற்றைப்பக்கங்களி லெல்லாம் அழகழகான நாற்காலிகளும் பட்டிணலாகியமஞ்சங்களும்போடப்பட்டிருந்தன. அந்த உள் முழுமையும் புஷ்பச்செடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவ்விடத்தில் இளைத்து வெளுத்திருந்த ஒருவர் ஜன்னலருகிற் போட்டிருந்த மஞ்சத்தில் சாய்ந்து கொண்டிருந்தார். அந்தச் சாளரத்தின்வழியாகத் தோட்டத்திலிருந்து நானுவிதபுஷ்பங்களினுடைய பரிமளத்தோடு கூடிய இனிய காற்ருனது மனேகரமாக வீசிக்கொண்டிருந்தது. அவர் பக்கத்தில் தந்தப் பதுமை போன்ற லக்ஷணமான ஒரு யௌவன ஸ்திரீ யுட்கார்ந்திருந்தாள். நாங்கள் உள்ளே நுழைந்ததும் அவள் எழுந்து, "நான் உள்ளே போகவா, பெர்ஸிவல்?" என்று மஞ்சத்தில் சாய்ந்திருந்தவரைப் பார்த்துக் கேட்டாள். பெர்ஸிவல் அவள் கையைக் கெட்டியாய்ப் பிடித்து அவளை யிருத்திக்கொண்டு "வெப்ஸ்டர்! க்ஷேமமா? எது, மீசையுந் தாடியும் அடையாளமே தெரியவில்லையே! அவர் தாம் உனது நண்பராகிய புகழ்பெற்ற ஹண்டர் என்பவரோ?" என்று கேட்டான்.

நான், "ஆம்" என்று சொல்ல, எல்லாரும் உட்கார்ந்து கொண்டோம். எங்களுடன் கூடவந்த கட்டைக் குட்டையான மனிதர் வெளியே போய்விட்டார். அந்தப் பெண்பிள்ளை மட்டும் அங்கேயே யிருந்தாள். தந்தம்போன்ற நிறமும்,பவளம்போன்ற வாயும், மேகம்போன்ற கூந்தலும் துடியைப்போன்ற நுண்ணிய இடையும் பார்க்கப் பார்க்க அழகாயிருந்தன. ஸ்திரீகளின் மாயா

வலையில் சிறிதும் அகப்படாத என் நண்பனுன ஹண்டர் பின்னுல் வெளியே வந்தபோது "படிக நிறமும் பவளச்செவ் வாயும், கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்-துடியிடையும், செல்லும் வெளிருஞ் செறிகுழலுங் கண்டக்கால், கல்லுங் கரையாதோ காண்" என்ற பாட்டின்படி யல்லவா இருக்கிறது' என்று சொன்னுனென்ருல், நான் அவள் அழகைப்பற்றிப் பின்னும் அதிகமாக என்ன சொல்லவேண்டி யிருக்கின்றது. ஆனல் தேகவாட்டத்திற்குத் தகுந்த பருமனும் உயரமும் இல்லாதிருந்ததனல் கொஞ்சம் குட்டையென்றும் பருமனென்றும் சொல்லும் படியா யிருந்தாள்.

பேர்ஸிவல் படுக்கையை விட்டெழுந்திருந்து மஞ்சத்திற் சாய்ந்துகொண்டு, வந்த ஹண்டரைப்பார்த்து, "இனித் தாமதியாமல் என் விஷயத்தைச் சொல்லுகிறேன். மகா புத்திசாலியாகிய உங்களுக்குப் பீடிகை போட்டுச் சுற்றிச் சுழற்றிச் சொல்லவேண்டிய அவசியமில்லை யாகையால், விஷயத்தை மாத்திரம் சங்கிரகமாகச் சொன்னுல் போதுமென்று நினைக்கிறேன். நான் கூடியவரையில் என்னளவுக்குத் தக்கபடி செல்வாக்குள்ளவனுய்த் தான் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தேன். கவலை, துக்கம், தரித்திரம், கஷ்டம் என்கிற இந்தப் பதங்களை யெல்லாம் நான் அகராதியிற் பார்த்ததே தவிர, அநுபவித்துப் பார்த்தவனல்லன். இப்போது அப் பதங்களுக்கெல்லாம் நானே பொருளாக இருந்து கொண்டிருக்கிறேன். எனக்குக் கலியாணமாகி நாலைந்து தினங்கள் செல்வதற்குள்ளாக எதிர்பாராத ஒரு விபத்தானது தெய்வ சங்கற்பத்தால் விளைந்துவிட்டது. நீங்கள் வழிவிட்டாலல்லது மீட்சி யில்லையென்று நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

"நான் எனது தாய் மாமன் உதவியால் மந்திராலோசனை சபையில் வேலைக்கமர்ந்து, அவருடைய செல்வாக்கின் பலத்தால் அந்த ஆபீசில் தலைமையான உத்தியோகத்தை வகித்துக்கொண்டிருக்கிறேனென்பதை வெப்ஸ்டர் உமக்குச் சொல்லி யிருப்பானென்று நம்புகிறேன். என் மாமன் பிரதான மந்திரி ஸ்தானத்தை வகித்துக்கொண்டிருக்கிருர். அவர் எத்தனையோ அந்தரங்கமான விஷயங்களை என்னிடம் ஒப்பித்திருக்கிருர். ஒவ்வொரு தடவையும் நான் அவற்றைச் சரிவரச் செய்து நிறைவேற்றியு

மிருக்கிறேன். இப்படி நான் அனேகந் தடவைகளில் அவருக்குத் திருப்தியுண்டாகும்படி நடந்து வந்ததால், அவருக்கு என்னிடத்தில் அசாத்திய நம்பிக்கை யுண்டாய்விட்டது.

"சற்றேறக்குறையப் பத்து வாரங்களுக்கு முன்பு சரியாகச் சொல்லவேண்டுமானால், மே-மீ 23-ம் தேதியன்று அவர் என்னை யழைத்துத் தம்முடைய பிரத்யேகமான அறையில் உட்காரச் செய்து, மற்றை வேலைக்காரர்களெல்லாம் போன பிற்பாடு, என்னை நோக்கி, "பெர்ஸிவல்! நீ நல்ல புத்திசாலி; குணசாலி; என் வார்த்தைக்கு எதிர் வார்த்தை சொல்லாமல், நான் சொன்னபடி எதையும் செய்து எனக்கு மிகவும் திருப்தியை யுண்டாக்கியிருக்கிறாய்; இவ்வளவு யோக்கியனையும், சமர்த்தனையு மிருக்கிற நீ எனக்கு மருமகனைக வாய்த்ததைப்பற்றி எனக்கிருக்கிற சந்தோஷத்திற் களவில்லை. நல்லது, இப்போதும் ஒரு முக்கியமான காரியத்தை உன்னிடம் ஒப்படைக்கிறேன்" என்று சொல்லி. அலமாரி (Almira) யைத் திறந்து ஒரு காகிதச் சுருளை யெடுத்து வந்து, "இதுதான் இங்கிலாந்திற்கும், (England) இட்டலிக்கும் (Italy) ஏற்பட்டிருக்கிற அதிரகஸ்யமான சமாதான உடன்படிக்கை. இந்த உடன்படிக்கையைப் பற்றிப் பத்திரிகைகளெல்லாம் கொஞ்சம் விஷமமாகச் சில செய்திகளை வெளியிட்டிருக்கின்றன. அவைகளிற் கண்ட விஷயங்களெல்லாம் அடியோடு தப்பாயிருக்கிறபடியால் இரண்டு ராஜாங்கத்தாரும் அவற்றைப்பற்றிக் கவலை யெடுத்துக் கொள்ளவில்லை. உண்மையான விஷயம் எதாவது வெளிவந்து விடுமாயின், வெளிவந்த அன்றே என் தலைக்கு ஹானி வந்துவிடும். மேலும் இதிலுள்ள ஒவ்வொரு விஷயமும் அதிமுக்கியமானது. கொஞ்சமும் வெளியில் பொசியக்கூடாது. இதிலுள்ள விஷயங்களை எப்படியாவது தெரிந்துகொள்ள வேண்டுமென்று ப்ரெஞ்சுக் காரர்களும் ருஷ்யாக் காரர்களும் முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுத்து இதிலுள்ள விஷயத்தைத்தெரிந்துகொள்ளவேண்டுமென்ற அக்கரை அந்த இரண்டு ராஜாங்கத்திற்கும் உண்டு. இப்போது, இதை நகல் செய்யவேண்டிய அவசியம் ஏற்படாத பக்ஷத்தில் இது என் அலமாரியைவிட்டு வெளிக்கிளம்பி யிராது. அந்த இரண்டு ராஜாங்கத்தாரு மட்டுமல்ல. சம்பந்தப்படாத இதர

மனிதர்களுங்கூடப் பொருளுக் காசைப்பட்டுத் திருடவுங் கூடும். ஆதலால், இதை வாங்கிக்கொண்டுபோய் உன் மேஜையில் பத்திரமாய் வைத்துப் பூட்டிக்கொள். நகல் செய்யவேண்டிய பிரகாரத்தையும் சொல்லுகிறேன். சாயங்காலம் எல்லாக் குமாஸ்தாக்களும் கச்சேரியை விட்டு வீட்டுக்குப் போனபிறகு, இதையெடுத்து ஆபீசிலேயே யிருந்து ஒரு நகல் செய்து அந்த நகலையும் அசலையும் மேஜையில் வைத்துப் பூட்டிவிட்டு வீட்டுக்குப் போ. நாளைக் காலையில் அவ்விரண்டையும் நீயே என்னிடம் நேரிற் கொண்டு வந்து கொடு. தெரிந்ததா? வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்" என்று சொல்லி அதை என் கையில் கொடுத்தார்.

"நான் வாங்கிப்போய்—"

"தயை செய்து மன்னிக்கவேண்டும். நீங்கள் இவ்விதம் பேசிக்கொண்டிருந்தபொழுது, நீங்கள் இருவர் மாத்திரந்தானா அங்கே யிருந்தீர்கள்? இடையில் யாராவது அங்கே வந்ததுண்டா?" என்று ஹண்டர் பெர்ஸிவலைக் கேட்டான்.

"எங்களைத்தவிர வேறு யாரும் வரவில்லை. நாங்கள் மாத்திரந்தான் இருந்தோம்."

"அது பெரிய அறைதானா?"

"முப்பதடிச் சதுரமிருக்கலாம்."

"அந்த அறையின் நடுவிலிருந்தா பேசினீர்கள்?"

"ஆம், சிறிது ஒதுங்கியிருக்குமோ என்னவோ, அநேகமாக நடுவென்றே சொல்லலாம்.

"மெதுவாகத்தானே பேசினீர்கள்?"

"என் மாமனுடைய குரல் எப்போதும் சின்னதுதான். தவிர, அன்றைத் தினத்தில் அவர் நிரம்பவும் மெதுவாகப் பேசினார். எனக்கே காது கேட்பது அருமையாயிருந்தது. நான் வாயைத் திறந்து ஒன்றுமே பேசவில்லை. அவர் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தேன்."

"நல்லது, மேலே சொல்லிக்கொண்டு போங்கள்" என்று ஹண்டர் தன் கண்ணை மூடிக்கொண்டே கேட்டுவந்தான்.

"நான் என் மாமன் சொல்லியவண்ணமே எல்லா உத்தியோகஸ்தர்களும் வீடு போகும்வரை காத்திருந்தேன். சார்லஸ் (Charles) என்ற ஒரு குமாஸ்தாமட்டும் வேலை பாக்கி விழுந்து விட்டது என்று சொல்லி அன்றைத் தினம் வெகுநேரம் வரையில் எழுதிக்கொண்டிருந்தார். அவர் எழுதி முடிவதற்குள் வீடுபோய்ச் சாப்பிட்டு வந்துவிடலாமென்று நான் வீட்டுக்குப் போய்விட்டேன். திரும்பி வருவதற்குள் அந்தச் சார்லஸ் என்பவர் வேலையை முடித்துவிட்டு வீடு போய்விட்டார். வேலையைச் சீக்கிரத்தில் முடித்துவிட வேண்டுமென்று நான் அவசரம் அவசரமாக எழுதினேன். ஏனெனில், சற்று முன்பு நீங்கள் பார்த்த என் மைத்துனராகிய ஜோஸப் ஹாரிஸன் என்பவர் லண்டனுக்கு வந்திருந்தார். அவர் அன்றிரவு, 11-மணி வண்டியில் வோகிங் போகச் சித்தமாக இருந்தார். ஒருவேளை அந்த வேலையை அதற்குள்ளாகவே முடித்துவிட்டால் நாமும் அவருடன் போகலாமென்று எண்ணி வேலையைத் துரிதப்படுத்தினேன்.

"உடனே நான் அந்த உடன்படிக்கைப் பத்திரத்தையெடுத்துப் பார்த்தேன். அவர் சொன்னதில் சிறிதும் அதிசயோக்தியில்லையென்று பட்டது. சொன்னதெல்லாம் உண்மையாகவே இருந்தன. அப்பத்திரத்தில் கண்டிருந்த விஷயங்களை யெல்லாம் உங்களுக்கு விவரமாகச் சொல்லாமற் போனாலும், சுருக்கமாக அப்பத்திரத்தின் கருத்தை மாத்திரம் சொல்லுகிறேன் கேளுங்கள். பிரெஞ்சுக்காரர்கள் மத்தியதரைக் கடலின் வழியாக இட்டலியில் தங்கள் கப்பற் படைகளை இறக்குமென்பதை யெதிர் பார்த்து, அந்தக் காலத்தில் இங்கிலாந்து தேசம் எவ்வாறு பின் தொடர்ந்து என்ன செய்ய வேண்டுவது என்பதை அந்த உடன்படிக்கை தெரிவிப்பதா யிருந்தது. அந்த உடன்படிக்கையில் கண்டிருந்தவைக ளெல்லாம் கேவலம் சமுத்திர சம்பந்தமானவைகளைப் பற்றியனவேயாகும். அதில் எழுதப்பட்டிருந்த விஷயங்களையும் அதில் கையெழுத்துப் போட்டிருந்தவர்களுடைய பெயர்களையும் பார்க்கும்போது, அது அதிக முக்கியமானதென்பதும், ரகசியமாய் வைக்கப்படவேண்டு மென்பதும் தோன்றின. நான் அந்த உடன்படிக்கை முழுமையும் பார்த்து விட்டு நகலெழுத ஆரம்பித்தேன். அந்த உடன் படிக்கை மிகவும்

நீளமானது. ப்ரெஞ்சுபாஷையில், 26-பக்கம் எழுதப்பட்டிருந்தது. நான் கூடியவரையில் வேகமாகவே எழுதினேன். 9-மணி அடிக்கும்போது நான் அவ்வுடன்படிக்கையில் 9-பக்கந்தான் எழுதியிருந்தேன். இந்த மாதிரி மணிக்கு ஒரு பக்கமாக எழுதிமுடிவதானல் 11-மணி வண்டிக்குப்போவது அஸாத்யமென்று தோன்றிற்று. அன்றைத்தினம் பகல் முழுதும் வேலை செய்ததனுலும் வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டதனுலும் ஒருவிதமானசோர்வும் அயர்ச்சியும் எனக்குண்டாயின. ஒருலோட்டா காப்பி சாப்பிட்டால் நலமென்று தோன்றிற்று. எங்கள்கச்சேரியில் இரவில் அதிக நாழிகை வேலைசெய்யும் உத்தியோகஸ்தர்களுக்குக் காப்பி முதலிய சௌகரியங்கள் செய்துகொடுப்பதற்காக அந்தக் கச்சேரிக் காவற்காரனிடம் ஒரு இரும்படுப்பு இருப்பதுண்டு. அவனே காப்பிபோட்டுக் கொடுப்பான். அவன் மெத்தைப் படிக்கட்டின் கீழிருக்குமறையில் இருப்பான். ஆதலின், அவனைக் கூப்பிடுவதற்காக மணியை யடித்தேன்.

"காவற்காரன் வரவில்லை; யாரோ வயதுசென்ற ஒரு கிழவி வந்தாள். அவள் அந்தக் காவற்காரனுடைய மனைவியாம். நான் அவளிடத்திற் காப்பிபோட்டுக் கொண்டுவரும்படி சொன்னேன்.

"பிறகும் நான் அந்தப் பத்திரத்தில் முக்கால்பக்கம் எழுதினேன். சிரமம் மிக அதிகமாய்விட்டது. காப்பியோ வரவில்லை. உடனே எழுந்திருந்து அந்த அறையிலேயே அங்குமிங்கு முலாவிக்கொண்டிருந்தேன். அப்பொழுதும் காப்பி வாராமைகண்டு காரணம் இன்னதெனத் தெரிந்துகொள்வதற்காகக் காவற்காரன் இருக்கும் அறையை நோக்கி இறங்கிச் சென்றேன். அந்தப் படிவழியொன்றுதான் நானிருக்கும் அறையிலிருந்து வெளியே போகத்தகுந்தது. அந்தவழி மிகவும் நீளமானதாயும் காவற்காரனிருக்கும் அறையின் வழியாக வெளியே போகக் கூடியதாயுமிருக்கும். இவ்விதம்போகும் அந்தப் படிக்கட்டின் மத்தியில் விசாலமான கூடமொன்றுண்டு. அந்தப்படிக்கட்டிலிருந்து வேறொரு படிக்கட்டு கீழே யிறங்குகிறது. எங்களது கச்சேரிக் கட்டத்திற்குப் பின்புறத்துத் தெருவிலிருந்து வரும் உத்தியோகஸ்தர்கள் இதன்வழியேதான் வருவது வழக்கம்.

"நான் காவற்காரனறையிற் சென்று பார்க்கையில் அவன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். அடுப்பில் வெந்நீர் காய்ந்து நான்குபுறத்திலும் சிதறிக்கொண்டிருந்தது. நான் அவனைத் தட்டியெழுப்ப நினைத்தேன். உடனே அவன் தலைக்கு மேலேயிருந்த மணியொன்று பலமாக அடித்தது. அவனும் அதைக் கேட்டுத் திடீரென்றெழுந்து, "பெர்ஸிவல் ஐயாவா?" என்று கேட்டான்.

"'ஆம், காப்பி போட்டாய்விட்டதாவென்று பார்க்கவந்தேன்' என்றேன்.

"'நான் வெந்நீரைக் காயவிட்டுக் கொண்டிருக்கும்போது தூக்க மதிகரித்துத் தூங்கிவிட்டேன். மன்னிக்க வேண்டும்' என்று சொல்லி நாதமடங்காமல் மெதுவாகச் சப்தித்துக்கொண்டிருந்த மணியை அண்ணாந்து பார்த்து, மிக்க ஆச்சரியத்துடன் என்னை நோக்கி, 'நல்லது, நீங்கள்தாம் இங்கே யிருக்கின்றீர்களே. மணியை அடித்தது யார்?' என்று கேட்டான்.

"'மணியா! எந்த மணி யது?' என்றேன்.

"'நீங்கள் வேலை செய்துகொண்டிருந்த அறையிலே யுள்ள மணிதான்' என்றான்.

"உடனே எனக்குப் பகீரென்றது. அந்த முக்கியமான உடன்படிக்கை வைத்திருந்த அறைக்குள்ளே யாரோ பிரவேசித்திருக்கிறார்கள்போ லிருக்கிறதே என்று நினைத்துக்கொண்டு தலை தெறிக்க விழுந்தடித்து ஓடினேன். ஹண்டர்! நான் போகும் வழியிலேயும் ஒருவரும் எதிர்ப்படவில்லை. நானிருந்த அறையிலேயும் ஒருவரையுங் காணேன். எல்லாப் பண்டங்களும் வைத்தது வைத்தபடியாகவே இருந்தன. என்னை நம்பி என் மாமனால் கொடுக்கப்பட்ட உயிருக்கு ஒப்பான அந்த உடன்படிக்கை மாத்திரம் காணப்படவில்லை. நான் போகும்போது மேஜையின்மீது வைக்காமல் அதன் அறையில் வைத்தேனோ என்று அந்த மேஜையையுந் திறந்து பார்த்தேன். அகப்படவில்லை. எலி பூனை முதலிய ஏதாவது இழுத்துப் போட்டிருக்குமோ என்று அவ்வறையையெல்லாம் தேடிப்பார்த்தேன். கிடைக்கவில்லை. மேஜையின்மீது வைத்துப்போன உடன்படிக்கை கீழேயிறங்கி யேறுவதற்குள்

எப்படிக் கால் முளைத்து ஓடிவிடும் என்று திரும்பவும் அந்த மேஜையையும் அதன் அறையையும் பரிசோதித்தேன். உடன்படிக்கை ஒன்றைத் தவிர, அதற்குச் சம்பந்தப்பட்ட எல்லாக்காகிதங்களும், அந்த உடன்படிக்கையின் நகலுங்கூட அப்படியே வைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்தன."

இதைக்கேட்ட ஹண்டர் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து தனது கைகளிரண்டையும் பிசைந்துகொண்டு அதிக ஆவலுடன், "அப்புறம் என்ன செய்தீர்கள்?" என்று கேட்டான்.

"வந்த திருடன் பக்கத்துக் கதவுவழியாகத்தான் வந்திருக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டேன். மற்றொரு வழியாக வந்திருந்தால் நிச்சயம் நான் அவனைப் பார்த்தேயிருப்பேன். எனக்குத் தெரியாமல் யாரும் வரமுடியாது."

"அந்த அறையிலாவது அல்லது போகும்வழியிலாவது முன்னடியே உமக்குத் தெரியாமல் வந்து மறைந்துகொண்டிருக்கக் கூடாதா? அப்படி யாரும் வரமுடியாதென்று உம்மால் சொல்ல முடியுமா? விளக்கும் அதிகப் பிரகாசமில்லாமல் மட்டாய் எரிந்து கொண்டிருந்தது என்றுதானே இப்போது சொன்னீர். அப்படியிருக்கிறபடியால், போதோடேயே யாராவது வந்து பதுங்கிக்கொண்டிருந்திருக்கலாம் என்று நினைக்கிறேன்."

"அது ஒரு நாளும் ஸாத்தியப்படாத காரியம். அந்த அறையில் அல்லது மார்க்கத்தில் ஒரு எலிகூட மறைந்துகொண்டிருக்கமுடியாது. அங்கே மறைந்துகொள்ளத் தக்க சரியான இடமும் இல்லை."

"மத்தியில் தடுத்ததற்காக மன்னிக்கவேண்டும். மேலே சொல்லிக்கொண்டு போங்கள்."

"நான் திடுக்கிட்டுப் பயந்து ஓடிவந்த மாதிரியைப் பார்த்துக் காவற்காரனும் மேலே ஓடிவந்தான். உடனே நாங்களிருவரும் பக்கத்துக் கதவுவழியாகக் கட்டடத்திற்குப் பின்புறத்தில் இருக்கும் சார்லஸ் தெருவுக்கு ஓடினோம். கீழேயிருந்த கதவு சார்த்தியிருந்தது. ஆனால், பூட்டப்படவில்லை. நாங்கள் அதைத் திறந்துகொண்டு ஓடினோம். அப்போது பக்கத்திலிருந்த மாதா

கோயிலில், 10-மணி அடித்தான். அது எனக்கு நன்றாக ஞாபக மிருக்கிறது."

"இது நிரம்பவும் முக்கியமான விஷயம்" என்று சொல்லி ஹண்டர் அதைத் தன் கைச்சட்டையின் நுனியில் பென்ஸிலால் குறித்துக்கொண்டான்.

"அன்றைத்தினம் மிகவும் இருட்டாயிருந்தது. பக்கத்தி லிருப்பவர்கூடக் கண்ணுக்குத் தெரியவில்லை. மழையும் சுவல்ப மாய்த் தூறிக்கொண்டே யிருந்தது. அந்தத் தெருவிலோ ஜனங் களுடைய நடமாட்டமும் ஒய்ந்துபோயிருந்தது. நாங்களிருவரும் நினைந்துகொண்டபடியே ஒன்றையுங் கவனிக்காமல் ஓடினோம். அந்தத் தெரு நெடுகே செல்லவும் கோடியில் ஒரு போலீஸ் சேவ கன் நின்றுகொண்டிருந்தான்.

"'ஒரு திருட்டு நடந்திருக்கிறது. எங்கள் ஆபீசிலிருந்து ஒரு முக்கிய தஸ்தவேஜு களவு போய்விட்டது. இந்தத் தெரு வழியே இப்பொழுது யாராவது போனார்களா?' என்று கேட்டேன்.

"'நான் இவ்விடத்தில் கால்மணி நேரமாக இருக்கிறேன். ஒரே ஒரு உயரமான பெண்பிள்ளை மாத்திரம் சற்று நேரத்திற்கு முன் இந்த வழியாகப் போனாள். அவள் வயது முதிர்ந்த கிழவி. சிவப்புக் காசிப் பீதாம்பரம் போர்த்திக்கொண்டிருந்தாள். அவ ளைத்தவிர — இல்லை, வேறு யாருமே இவ்வழியாகப் போக வில்லை."

"'அவளையா சொல்லுகிறீர்கள்? அவள் என் மனைவி. அவ ளைத்தவிர இன்னும் யாராவது இந்த வழியாகப் போனார்களா? யோஜித்துச் சொல்லும்' என்று காவற்காரன் அந்தப் போலீஸ் சேவகனைக் கேட்டான்.

"'யோஜனை யென்ன வேண்டியிருக்கிறது, இந்தப் பிரமாத மான காரியத்திற்கு? அவளைத் தவிர வேறு யாருமே போகவில் லையென்றால், என் தடுத்துத் தடுத்துக் கேட்கிறீர்கள்? அந்தக் கிழவி யொருத்திதான் சற்று முன்பாக இவ்வழியாகப் போனாள். அவள் பரபரப்புடன் போனதாகவும் ஞாபகமிருக்கிறது' என்றான்.

"'அப்படியானால் திருடன் அந்த வழியாகத்தான் போயிருக்கவேண்டும்' என்று என்னிடத்திற் சொல்லித் திரும்பினான்.

"அவன் என்ன சொல்லியும் எனக்குச் சமாதானம் உண்டாகவில்லை. அவன் அடிக்கடி வற்புறுத்திச் சொன்னதைக் கொண்டு பின்னும் அதிகமான சந்தேகமுண்டாய்விட்டது. உடனே நான் அந்தப் போலீஸ் சேவகனைப் பார்த்து, 'அந்தப்பெண் பிள்ளை எந்த வழியாகப் போனாள்?' என்று கேட்டேன்.

"'அவள் எந்த வழியாகப் போனாளோ அது எனக்குத் தெரியாது. அவளைக் கவனிக்கவேண்டிய காரணம் ஒன்றுமில்லாததனால் நான் கவனிக்கவில்லை. ஆனால், அவள் அதிவேகமாகப் போனதாக மாத்திரம் ஞாபகமிருக்கிறது. அதைக்கொண்டுதான் நான் சிறிது கவனித்தேன். இராத்திரி வேளையா யிருப்பதனாலும், மழை தூறிக்கொண்டிருப்பதனாலும் வீட்டுக்கு விரைந்து போகிறாள்போலும் என்று நினைத்தேன். நீங்கள் சொல்லுகின்ற மாதிரியால் அவளிடத்தில் எனக்கும் சமுசயம் உண்டாகின்றது' என்றான்.

"'அவள் போய் எவ்வளவு நேரமிருக்கும்?' என்று கேட்டேன்.

"'இரண்டு நிமிஷங்கள்கூட ஆகவில்லை. இப்பொழுதுதான் போகிறாள்' என்று சொன்னான்.

"'நீங்கள் வீணைக் காலத்தைக் கழிக்கிறீர்கள். ஒரு நிமிஷமும் நாம் தாமதிப்பது சரியன்று; காரியங் கெட்டுப்போம். என் மனைவியின்மீது தாங்கள் சந்தேகப்படவே வேண்டாம். அவள் இப்படிப்பட்ட காரியத்தை ஒருநாளும் செய்திருக்கமாட்டாள். மேலும், தங்கள் மேஜையின்மீது தஸ்தவேஜு ஒன்று வைத்திருப்பதும், அது மிக முக்கியமானதென்பதும் அவளுக்கு எப்படித் தெரியும்? அப்படியே தெரிந்திருந்தாலும்அவள் அதை வைத்துக்கொண்டு என்ன செய்யமுடியும்? அவள்மீது ஸந்தேகப் படாமல், சீக்கிரம் அந்தப் பக்கம்போவோம் வாருங்கள்—நல்லது தங்களுக்கு வர ஸம்மதமில்லாவிட்டால் நானாவது போகிறேன்' என்று சொல்லிவிட்டு அந்தப் பக்கமாக ஓடினான்.

"உடனே நான் அவனைப் பின் தொடர்ந்து, அவன் சட்டையைப்பிடித்து இழுத்து நிறுத்தி, 'நீ எங்கே குடியிருக்கிறாய்?' என்று கேட்டேன்.

"'16-வது இலக்கமுள்ள வீடு, மணிக்கூண்டு வீதி, பிரிக்ஸ்டன்' (Clock Tower street, Prixton) என்று சொல்லிவிட்டு, 'பெர்ஸிவல்! தாங்கள் தப்பாக ஒன்றை யெண்ணிக்கொண்டு சங்கடப்படுவதில் பிரயோஜனமில்லை. வாருங்கள், அந்தப்பக்கம் போவோம். சீக்கிரமாகப்போனால் ஏதாவது உளவு அகப்படாமற் போகாது' என்று நிர்ப்பந்தப்படுத்தினான்.

"நான் அவன் என்ன சொல்லியுங் கேளாமல், அந்தப் போலீஸ் சேவகனையும் அழைத்துக்கொண்டு அவன் சொன்ன தெருவிற்குப்போய் அலைந்தேன். பயனில்லை. ஒவ்வொருவரும் மழை நன்றாகப் பலப்பதற்குள்ளாக வீடுபோய்ச் சேரவேண்டுமென்று அவசரப்பட்டுக்கொண்டு போவதும் வருவதுமா யிருந்தார்களேயொழிய, எங்கள் வார்த்தைகளுக்குப் பதில்சொல்லுகிறவர்கள் ஒருவராவது அங்கே யகப்படவில்லை.

"பிறகு நாங்கள் கச்சேரிக்குப் போய் மெத்த வீட்டையும், கீழேயுள்ளே இடங்களையும், மெத்தைக்குப் போகும் வழிகளையும் சோதித்துப் பார்த்தோம். அங்கே அடிச்சுவடுகூடக் காணப்படவில்லை."

"அன்று சாயங்காலமெல்லாம் மழை பெய்யவில்லையா?" என்று ஹண்டர் கேட்டான்.

"7-மணி முதற்கொண்டு பெய்தது."

"அப்படியானால், 9-மணிக்கு உமது அறைக்கு வந்ததாகச் சொல்லுகிற அந்தப்பெண்பிள்ளையின் கால் பூட்ஸிலுள்ள (Boots) சேறு எப்படி அங்கு விரித்திருந்த ஜமக்காளத்திற் படாதிருந்தது?"

"தாங்கள் இந்தக் கேள்வியை யெழுப்பியதற்காக நான் மிகவும் ஸந்தோஷப்படுகிறேன். எனக்கும் அப்போது அந்த எண்ணமுண்டாயிற்று. ஆனால், எங்களாபீசில் உயரவருகிற வேலைக்காரர்கள் எப்பொழுதாயிருந்தாலும், காவற்காரன் இருக்கிற இடத்

தில் தங்கள் பூட்ஸைக் கழற்றிவிட்டு ஸ்லிப்பரையே (List Slippers) போட்டுக்கொண்டு வருவது வழக்கம். ஏனெனில், விலையுயர்ந்த ஜமக்காளம் கீழே விரித்திருக்கிறது.

"நல்லது, அது நல்ல சமாதானமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும், அன்று சாயங்காலம் முழுதும் மழை பெய்தும் திருடனுடைய காலடித்தடம் படவில்லையென்பது ஒரு விசித்திரமாகத்தான் இருக்கிறது. இதுமட்டுமா? நடந்துள்ள ஒவ்வொரு விஷயமும் ஆச்சரியமாகத்தா னிருக்கின்றது. சரி, அப்பால் என்ன செய்தீர்கள்?"

"பிறகு நாங்கள் அந்த அறையையும் பரிசோதித்தோம். வேறு திருட்டுவழி யிருப்பதற்கு இடமில்லை. ஜன்னல்களோ கீழே யிருந்து 30-அடி உயரமிருந்தன. அவைகளும் நன்றாகச் சார்த்தி உள்ளே தாளிடப்பட்டிருந்தன. ஆகலால், அந்த உடன்படிக்கைப் பத்திரத்தைத் திருடியவன் அந்தஅறையின் வாசற்படி வழியேதான் வந்திருக்க வேண்டுமேயல்லது வேறு வழியாக வந்திருக்க முடியாதென்று நான் எவ்வளவு வேண்டுமானாலும் பந்தயம் வைக்கத் தயாராயிருக்கிறேன்."

"அடுப்படியைப் பார்த்தீர்களா?"

"அடுப்படி யென்பதே கிடையாது. ஒரேயொரு இரும்படுப்பு மாத்திரந்தான் உண்டு. இன்னும், மணியடிக்கவேண்டிய கயிறும் என் மேஜைக்கு மேலேதான் தொங்குகிறது. அந்த மணியை யார் அடிப்பதாக இருந்தாலும் நானிருக்கும் மேஜையண்டை வந்துதான் அடிக்கவேண்டும். ஆனல், திருடவந்தவன் ஏன் மணியை யடிக்கவேண்டும்? அதுதான் எவ்வளவு யோஜித்துப் பார்த்தும் எனக்குப் புரியவில்லை."

"நிரம்பவும் அஸம்பாவிதமாகத்தா னிருக்கிறது. அதன் பிறகு நீங்கள் செய்த வேலைகள் என்ன? வந்தவன் சுருட்டுத்துண்டு, கழுத்துப்பட்டை, குத்தூசி முதலிய ஏதாவதொன்றைப் போட்டிருக்கக் கூடுமோவென்று அந்த அறையை யெல்லாம் பலமுறை தேடிப்பார்த்தீர்களோ?"

"ஆம், தேடிப்பார்த்தோம்; ஒன்றும் அகப்படவில்லை."

"சுருட்டுப் பிடித்த நாற்றங்கூட இல்லையோ?"

"நாங்கள் அதைக் கவனிக்கவில்லை."

"இப்படிப்பட்ட விஷயங்களில் புகைச் சுருட்டு வாசனை இருந்திருக்கிறதா என்பதைக் கவனிப்பது நிரம்பவும் உபயோக மாக இருக்குமே."

"நான் சுருட்டுக் குடிக்கிறதில்லை. ஆனதால், புகைச்சுருட் டுக் குடித்திருந்தால் அந்த வாசனை உடனே எனக்குத் தெரிந்தி ருக்கும். மேலும், ஒருவிதமான தடையமும் அகப்படவில்லை. காவற்காரன் மனைவியாகிய டாஞ்சி (Tangey) என்பவள் அச்சம யம் அவ்விடத்தை விட்டு அவசரமாய் வெளியே போனுளென்பது ஒன்றைத்தவிர வேறு எந்த அனுமானமும் இல்லை. காவற்காரனே அதுதான் அவள் வழக்கமாக வீடுபோகும் நேரமென்று சொல் லுகிறானே தவிர, அவள் அப்படி அவசரப்பட்டுக்கொண்டு போன தற்குச் சரியான வேறு முகாந்தரஞ் சொல்லவில்லை. போலீஸ் சேவகனுக்கும் எனக்கும், அந்த டாஞ்சியென்பவள் உடன்படிக் கைப் பத்திரத்தை வேறுவிதமாக மறைப்பதற்குள்ளாகக் கையு மெய்யுமாய் அவளைப் பிடித்துப் பரிசோதிப்பதுதான் சரியான உபாயமென்று தோன்றிற்று.

"இதற்குள்ளாக இந்த விஷயம் எப்படியோ போலீஸ்ஸ்டே ஷனுக்கு எட்டிவிட்டது. உடனே, அட்கின்ஸன் (Atkinson) என்ற துப்பறியும் உத்தியோகஸ்தர் ஒருவர் வந்துவிட்டார். அவ ருக்கு எப்படியாவது இந்தக் கேசைக்கண்டுபிடித்துவிட வேண்டு மென்று பெரிய அக்கரை உண்டாய்விட்டது. அவரும் நானும் உடனே ஒரு வண்டியைத் திட்டம்பண்ணிக்கொண்டு அரைமணிக் குள்ளாக, அக்காவற்காரன் கொடுத்த விலாசப்படி மணிக்கூண்டு வீதியிலுள்ள 16-வது இலக்கமுள்ள வீட்டண்டை போனேம். அங்கு அக்காவற்காரன் மூத்தமகளாகிய ஒரு சிறுபெண் வந்து கதவைத்திறந்தாள். அவ்வளவு நேரமாகியும் காவற்காரன் மனைவி யாகிய அந்த டாஞ்சி என்பவள் வீட்டிற்கு வரவில்லை. நாங்கள் அவளை யெதிர்பார்த்துக்கொண்டு வெளிப்பக்கத்திலேயுள்ள ஒரு அறையில் காத்துக்கொண்டிருந்தோம். பத்து நிமிஷத்திற்கெல் லாம் யாரோ வாசற்கதவைத் தட்டினர். அப்போது நாங்கள் ஒருபெரிய மோசம் போய்விட்டோம். அட்கின்ஸனைச் சொல்லு

வதிற் காரியமென்ன? எனக்கு அப்போது புலப்படவில்லை. கத வைத்திறப்பதற்கு நான் போகாமல், டாஞ்சியின் மூத்தமகளைப் போய்த்திறக்கும்படி சொன்னது பெரிய தவறு. கதவைத்திறந்ததும் அந்தப் பெண் தன் தாயைப்பார்த்து, 'அம்மா! உன்னைப் பார்க்கவேண்டுமென்று இரண்டுபேர் உள்ளே வந்து பத்து நிமிஷங்களாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்' என்று சொன்ன சப்தம் எங்கள் காதில் வீழ்ந்தது. இரண்டுமூன்று நிமிஷங்கள் வரை இருவரும் ஏதோ பேசிக்கொண்டார்கள். உடனே உள் நுழைந்த அக்காவற்காரன் மனைவியாகிய டாஞ்சி யென்பவள் நேரே சமையலறைக்குட் புகுந்தாள். அதைக்கண்ட அட்கின்ஸன் சமையலறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார். நானும் போனேன். எங்களுக்குமுன் அவள் அங்கே போய் விட்டாள். நாங்கள் இருவரும் ஒருவர்பின் ஒருவராய்த் திடீ ரென்று கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழையவே அவள் விழித்தகண் விழித்தபடியாய்த் திடுக்கிட்டுவிட்டாள். பிறகுசிறிது நேரத்திற்குப் பின்பு என்னை இன்னாரென்று தெரிந்துகொண்டு, மிக்க ஆச்சரியத்துடன், 'பெர்ஸிவல் ஐயாவா? இந்நேரத்தில் இங் கேவரக் காரணமென்ன?' என்றாள்.

"'வா, வா. முன்னேற் சமையற்கட்டிற்கு ஓடினபோது எங் களை யாரென்று நினைத்தோடினாய்?" என்று என்னுடன் கூடவந் தவராகிய அட்கின்ஸன் கேட்டார்.

"'தரகர்கள் என்று நினைத்தேன். எங்களுக்குக் கொஞ்சம் கடனுபத்திரவம் உண்டு. இரண்டொரு வியாபாரிகளுக்கு நாங் கள் கொஞ்சம் பாக்கி கொடுக்கவேண்டும். அந்த வர்த்தகர்களிட மிருந்து வந்திருப்பீர்களென்று நினைத்துப் பயப்பட்டேன்.'

"'கடன்காரர்களிடமிருந்து வந்ததாகவே வைத்துக்கொண் டாலும் எங்களைக்கண்டு இவ்வளவுபயம் பயப்படுவதற்கு என்ன காரணம்?'

"'கேட்டதில்லையா ஒரு தமிழ்ப்பழமொழியை? 'கடன்பட் டார் நெஞ்சம்போலக் கலங்கினா னிலங்கை வேந்தன்' என்று ஒன்றுக்கு மஞ்சாத அந்த ராவணன் என்கிற ராக்ஷஸன் கலங்கி னதற்குக் கடன்பட்டவரையல்லாவா ஒரு தெய்வப்புலவர் உவமை

யாக்கியிருக்கிறூர். உண்மையாகவே சொல்லுகிறேன். யமதூதரைக் கண்டாலும் நான் அஞ்சமாட்டேன். அப்படிப்பட்ட நான் உங்களைக்கண்டதும் திடுக்கிட்டுவிட்டேனென்றால், தாங்களே பார்த்துக்கொள்ளுங்கள் கடன்காரர்களதுமிலைமையை பெர்ஸிவல் ஐயா என்று தெரிந்திருந்தால், அந்தத் திரைமகனைக் கண்டு நான் ஏன் பயப்படப்போகிறேன்? வர்த்தகர் அனுப்பிய மனுஷ்யர்களென்று தான் முதலில் உங்களை நினைத்தேன். கதவைத் திறந்து விட்ட என்மகளும் உங்கள் வருகையைப்பற்றி என்னிடம் சொல்லும்போது, 'அம்மா! யாரோ இருவர் உன்னைப் பார்க்கவேண்டுமென்று வந்து காத்துக்கொண்டிருக்கிறூர்கள். கடன்காரர்களிடமிருந்து நிலுவை வசூலுக்காக வந்திருப்பவர்களென்று தோன்றுகிறது' என்றுதான் சொன்னாள். அதனாலும் நான் அப்படித் தீர்மானித்தேன்.'

"'அதெல்லாம் சரிப்படாது. இந்தச் சாக்குப் போக்குக்கெல்லாம் ஏமாந்து விடுகிறவன் நானல்ல. நீ மந்திராலோசனைக் கச்சேரியிலிருந்து ஒரு முக்கியமான காகிதத்தைத் திருடிக் கொண்டுவந்து விட்டாய். அதை யொளிப்பதற்காகவேதான் கொட்டின தேளைப்போல ஓடிவந்திருக்கிறாய். இல்லையென்று நீ எவ்வளவு சாதித்தாலும் நான் உன்னை நம்பமாட்டேன். நீ இப்பொழுது எங்களுடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவேண்டும். உன்னைப் பரிசோதிக்க வேண்டியிருக்கிறது' என்றூர்.

"அவள் எவ்வளவுதூரம் மன்றாடியும் அட்கின்ஸன் கேட்கவில்லை. உடனே ஒரு நாலுசக்கரவண்டிக்கு ஆளனுப்பினோம். அந்த ஆள் வெளியேபோய் வண்டியமர்த்திக்கொண்டு வருவதற்குள்ளாக அடுப்பங்கறையை யெல்லாம் பரிசோதித்தோம். ஒரு வேளை அவள் தனியாயிருக்கும்போது கிழித்து அடுப்பிற் போட்டிருக்கக் கூடுமோவென்று நெருப்பைக் கிளறியும் பார்த்தோம். காகிதம் எரிந்திருப்பதாகப் புலப்படவில்லை. பிறகு நாங்கள்மூவரும் வண்டியிலேறிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், ஸ்திரீகளைப் பரிசோதனை செய்வதற்காகத் தனியே யேற்படுத்தியுள்ள ஸ்திரீயின் வசமாக அவளை யொப்பித்தோம். அவள் சிறிது நேரத்திற்கெல்லாம் வெளியே வந்து, 'காகிதம் ஒன்றும் அகப்படவில்லை' என்று சொல்லிவிட்டாள்.

"அப்போதுதான் முதன் முதலாக என் நிலைமை எனக்குத் தெரிந்தது. அதுவரையில் நான் அங்குமிங்கும் ஓடியாடித் திரிந்துகொண்டிருந்தேனாதலால் எனக்கு என் நிலைமையைப்பற்றி ஆலோசிக்கவும் அவகாசம் ஏற்படவில்லை. தேடிப் பார்த்தால் அகப்பட்டுவிடும் என்ற எண்ணமே எனக்குப் பூரணமாயிருந்தபடியால், அப் பத்திரம் அகப்படாமற் போனால் என்ன ஆகும் என்பதை நான் அந்நேரம் யோஜிக்கவில்லை. ஆனவரையில் அலைந்து பார்த்தும் பயனில்லாமற்போகவே, இனி என்ன செய்யலாம் என்று சிறிது நேரம் சிந்தித்துப் பார்த்தேன். செய்யத் தக்க தொன்றுமேயில்லையென்று முடிந்துவிட்ட பிறகுதான் என் நிலைமையைப்பற்றிச் சிந்திக்க எனக்கு அவகாசங் கிடைத்தது. பத்திரம் கைதவறிவிட்டது என்பதை நினைக்கவும் முடியவில்லை. ஐயோ! அது அவ்வளவு பயங்கரமாயிருந்தது! பள்ளிக்கூடத்திற் படித்துக்கொண்டிருக்கும்போதுகூட என்னை எல்லாரும் பயங்கொள்ளியென்று பரிஹஸிப்பது வழக்கம். ஒரு சொட்டு ரத்தத்தைக் கண்டால் நான் உடனே மயங்கிக் கீழே வீழ்ந்துவிடுவேன். ஒருதரம் நானும் வெப்ஸ்டரும் ஒரு பிரேத பரிசோதனை நடக்குமிடத்திற்குப் போய்ப் பார்த்தோம். வெப்ஸ்டர் தைரியமாய் இருந்தான். அவன் எனக்கு, 'இதுதான் ரத்தப்பை. இதுதான் மூளை' என்று இப்படிக் காட்டிக்கொண்டு வந்தான். நான் அந்த இடத்திலேயே மயங்கிக் கீழே வீழ்ந்துவிட்டேன். முன்னிருந்த நிலைமை வருவதற்கு ஒருவாரம் பிடித்தது. வெப்ஸ்டரைக் கேட்டாற்கூடச் சொல்லுவான். என்னுடைய இயற்கை இத்தன்மையது. அந்த முக்கியமான உடன்படிக்கைப் பத்திரம் கைதவறிப் போனதினால் என் மாமனுக்கும், அவரோடு சம்பந்தமுடையவருக்கும், எனக்கும் நேரிடக்கூடிய மானக்கேட்டை நினைக்க நினைக்க என் மனம் தாமரையிலைத் தண்ணீர்போலத் தத்தளித்துக்கொண்டிருந்தது. ஏதோ மதிமோசம் போய்விட்டேனென்றும், அவகேடாய்ப் போய்விட்டதென்றும் சொன்னால் யார் கேட்பார்கள்? முக்கியமான விஷயத்தில் அஜாக்கிரதையாயிருந்துவிட்டேனென்று சொன்னால் என் வார்த்தையை எப்படி நம்புவார்கள்? கெட்ட எண்ணத்தோடு வேண்டுமென்றே செய்ததாகத் தானே எல்லாரும் எண்ணுவார்கள். 'நாம் அடியோடு கெட்டு

விட்டோம்! மானபங்கம் உண்டாய்விட்டது? பரிகாரம் கிடையவே கிடையாது. தொலைந்தே போனேம்' என்று நினைத்து நினைத்துப் பார்க்கும்போது எனக்குச் சக்தி குன்றிப்போய்விட்டது. கைகால்களெல்லாந் தளர்ந்து போய்விட்டன. பிரக்ஞை தவறிவிட்டது. நான் அப்போது இன்னது செய்தேனென்பது கூட எனக்குத் தெரியாது. கச்சேரி உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் என்னைச் சூழ்ந்துகொண்டு என்னைத் தேற்றியதாகமட்டும் ஸ்தூலமாக நினைவிருக்கிறது. அவர்களில் ஒருவர் மாத்திரம் வாட்டர்லோ (Waterloo) வரையில் என்னுடன் கூடவே வந்து, வோகிங் (Woking) போகிற ரயில் வண்டியில் என்னை ஏற்றிவிட்டார். அவர் என்னிடத்தில் பிராண விசுவாசமுள்ளவர். என் பக்கத்து வீட்டுக்காரராகிய பேர்ரியர் (Ferrier) என்னும் சிறந்த வயித்தியர் ஒருவர் நானிருந்த வண்டியிலேயே யேறியிருந்தபடியினாலும், அவரும் வோகிங் ஸ்டேஷனில் இறங்குவதாகச் சொன்னபடியினாலும், அவர் என்னை அந்த வயித்தியர் வசம் ஒப்பித்துவிட்டுத் திரும்பினார். பேர்ரியர் மாத்திரம் அச்சமயம் அங்கில்லாவிடில் அந்த நண்பர் வோகிங் ஸ்டேஷன் வரையிலும் வருவதாகத்தான் இருந்தார். அவர் வாட்டர்லோ வரையில் வந்ததும் வயித்தியரிடம் என்னை ஒப்படைத்து, எனக்குத் தைரியஞ் சொல்லிவிட்டுக் கண்ணுங் கண்ணீருமாய்த் திரும்பியதுமட்டும் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. வயித்தியரும் மிகுந்த பக்ஷத்துடன் என்னைக் கவனித்துவந்தார். அவர் மாத்திரம் அந்தச் சமயத்தில் என்னுடன் வராமலிருக்கும்பக்ஷத்தில் நான் வண்டியிலேயே இறந்திருப்பேன். அடிக்கடி நான் மயங்கிப் போய் வீழ்ந்தபோதெல்லாம் அவர் தக்கபடி நல்ல ஔஷதங்கள் கொடுத்துத் தைரியப்படுத்தினார். வோகிங் ஸ்டேஷன் வந்ததும் வைத்தியர் என்னை இங்கே கொண்டுவந்து விட்டுவிட்டுப் போனாராம். அது எனக்கு அடியோடு ஞாபகமேயில்லை. வாட்டர்லோவில் ஏறினது மாத்திரந்தான் எனக்குத் தெரியும். நான் இங்கே வந்து சேரும்பொழுது பயித்தியக்காரனாகவே வந்து சேர்ந்தேன்.

"நல்ல நடுநிசியில் கதவைத்தட்டி யெழுப்பி, பிரக்ஞையற்றிருந்த என்னை அந்த வயித்தியர் வண்டியைவிட்டிறக்கி உள்ளே அழைத்துப் போனபோது, என் தாய் தந்தையர்களெல்லாரும்

எழுந்துவந்து என் நிலைமையைப் பார்த்துவிட்டுப் பெரிதும் பரிதவித்தார்களாம். இதோ என் பக்கத்திலிருக்கிற இந்த அன்னியும், என் தாயும் அப்போது என்ன பாடுபட்டிருப்பார்களென்பதைத் தாங்களே யோஜித்துக்கொள்ளவேண்டியது. அத்தகைய நிலையில் நான் இங்கே வந்தவுடன், என்மைத்துனராகிய ஜோஸப் ஹாரிஸன் என்பவர் தம்முடைய பண்டங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு வியாதிக்காரனாகிய என்னை இந்தத் திவ்யமான படுக்கையறையில் படுக்கவைத்தார். ஹண்டர்! நான் இவ்விடத்திலேயே சற்றேறக்குறைய ஒன்பது வாரங்களாக மூளை கலங்கிப் பிதற்றிக்கொண்டும், புலம்பிக்கொண்டும் நிமிஷம் ஒரு யுகமாக என் காலத்தைப் போக்கி யிருக்கிறேன். அந்த வயித்தியரும், என் ஆருயிர்க் காதலியாகிய இந்த அன்னியும் என் பக்கத்தில் இல்லாதிருந்தால் நான் இத்தனை காலம் வரையில் பிழைத்திருந்து இன்று உங்களைக் கண்டு பேசும்படியான சுகிர்தத்தைப் பெற்றிருக்கமாட்டேன். 'மணமக னுடம்புபோற்ற வல்லவள் மனைவியேயென்-றுணர்வினர் மொழியு மாற்றம்'இந்த அன்னியின் செய்கையை நோக்கியேபோலும் என்று சொல்லும்படியாக இவள் நடந்துகொண்டிருக்கிறாள். இவள், இந்த உத்தமி-பகல் முழுமையும் என் பக்கத்திலிருந்து பணிவிடை செய்து வந்தாள். இரவில் ஒரு வேலைக்காரி என்னைப் பாதுகாத்து வந்தாள். அன்னியும் இடையிடையே விழித்துக் கொள்ளுகிற போதெல்லாம் என்பக்கத்தில்வந்து உட்கார்ந்து கொண்டு வேண்டிய உதவியைச் செய்து வருவாள். நான் சித்தஸ்வாதீனமில்லாத நிலையில் எதையுஞ் செய்துவிடக் கூடுமாகையால், இங்ஙனம் ஒருவர்மாற்றி யொருவர் இராப்பகலாய் என் பக்கத்திலிருந்து என்னைப் பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியமாயிற்று. நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக எனக்குப் பிரக்ஞை வந்தது. இந்த இரண்டு மூன்று நாளாகத்தான் நான் முன்போல நல்லநினைவுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். இந்தப் பாழும் நினைவு எனக்கு வராமல் நான் சித்தஸ்வாதீனமில்லா திருந்தபடியே இறந்திருப்பேனானால், அது இப்போதுள்ள நிலைமையைக்காட்டிலும் எத்தனையோ மடங்கு சிலாக்கியமானதா யிருந்திருக்கும். போனதைச் சொல்லிப் பிரயோஜனமென்ன! நினைவு எனக்கு நல்ல ஸ்திதிக்கு

வந்தவுடன் நான் நிமிஷமுந் தாமதிக்காமல், என் கேசில் வேலை செய்துகொண்டிருந்த அட்கின்ஸனுக்குத் தந்தியடித்து அவரை வரவழைத்தேன். அவரும் உடனே வந்தார். தம்மாலானமட்டும் பார்த்தும் கொஞ்சங்கூடத் துப்பு அகப்படவில்லை யென்றும், மறுபடியும் அந்தக் காவற்காரனையும் அவன் மனைவியையும் பலவிதத்தாலும் பரிசோதித்துப் பார்த்ததிலுங் கேசு வெளியாகவில்லை யென்றும் சொல்லிவிட்டார். ஆனால், ஒன்று மாத்திரம் சொன்னார். அன்றைத்தினம் ஆபீசில் அதிக நாழிகை தங்கி வேலை செய்துகொண்டிருந்ததாகச் சொன்ன குமாஸ்தாவின்பேரில்தமக்குச் சந்தேகமுண்டென்றும், அந்தக் குமாஸ்தாவின் சகோதரர், மைத்துனர் முதவானவர்கள் பாரீஸ் நகரத்தில் சேனைத்தலைவர்களாக இருப்பதனால் ஒரு வேளை அவர்களின் தூண்டுதலுக்கிணங்கி இத்தகைய காரியத்தைச் செய்திருக்கக்கூடுமென நம்புதற்குவேண்டிய காரணங்களிருக்கின்றன வென்றும் சொன்னார். அவர் அவ்வாறு ஊகித்துச் சொன்னதை நான் அடியோடு நம்பவேயில்லை. அந்தக் குமாஸ்தா நல்ல யோக்யர். புண்ணிய பாவங்களுக்குப் பயப்படுகிற ஸ்வபாவமுடையவர். இப்படிப்பட்ட அயோக்கியமான வழிகளில் என்னதான் வருவதாயிருந்தாலும் பிரவேசிக்கமாட்டார். மேலும், நான் வேலைசெய்யும் போது அவர் இல்லை. அவர் தம் வேலையைச் செய்து முடித்துவிட்டு வீட்டுக்குப்போன பிறகுதான் நான் என் வேலையைச் செய்யத் தொடங்கினேன். என் மாமன் என்னை வேலை செய்யச் சொல்லியிருக்கிறதாவது, அன்றைத்தினம் நான் வேலைசெய்ய வரப்போகிறேனென்பதாவது அவருக்குத் தெரியாது. நான் வரப்போவதை முன்னறிந்து அவர் அதிக நாழிகை தங்கியிருந்தா ரென்று நினைப்பதற்கும் இடமில்லை. ஏனெனில், என் மாமன் என்னைக் கூப்பிட்டுச் சொல்வதற்கு முன்னேயே அவர், தாம் அன்றிரவு அதிக நாழிகை தங்கியிருந்து வேலை செய்யப்போவதாக என்னிடஞ் சொல்லியிருந்தார். அவர் இங்கிலீஷ் காரரிடத்திலேயே அதிக பக்ஷமும் பக்தியும் உள்ளவர். இங்கிலாந்துக்கு விரோதமாக எதையுமே செய்யத் துணியமாட்டார். என் மாமனுல் முன்னுக்கு வந்தவர்களில் ஒருவராகிய அவர் என் மாமனுக்கு பிராணபாயத்தையுண்டுபண்ணத்தக்க இக்காரியத்தைத் தம் சகோதரர்மைத்

துனர் முதலியோரது தாக்ஷிண்யத்திற்காகச் செய்திருப்பார் என ஊகிப்பதும் சரியன்று. ஆகையால், உம்மைப் போலவும் என்னைப் போலவும் கருதப்படவேண்டிய அவரைக் குற்றஞ் சாட்டி ஹிம்ஸிப்பதில் பயனில்லையென்று சொல்லி நான் அட்கின்ஸனை அனுப்பிவிட்டேன். அதன்பிறகு உங்களுக்குச் சொல்லியனுப்பினேன். என் செல்வம், என் புகழ், என் உயிர் எல்லாம் உங்கள் ஸ்வாதீனமாக இருக்கின்றன. தாங்கள் கை விட்டுவிட்டால் நாலைந்து குடும்பங்கள் இருந்த இடந் தெரியாமல் அழிந்துபோய் விடும். நான் தங்களைத்தான் தெய்வமாக நம்பியிருக்கிறேன்" என்று சொல்லி முடித்தான்.

இவ்வளவு நேரம் பேசினதால் பெர்ஸிவல் களைப்படைந்தவனாய், 'அப்பாடா' என்று மஞ்சத்திற் படுத்துக்கொண்டான். அன்னியென்னும் அவனது ஆருயிர்க் காதலியாகிய சுந்தரி சுடச் சுடக் கொஞ்சம் காப்பி கொண்டுவந்து கொடுத்தாள். அதை அவன் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு, ஹண்டரின் முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். ஹண்டரின் ஸ்வபாவந்தான் உங்களுக்குத் தெரியுமே. நாற்காலியில் இரண்டு கண்ணையும் மூடிக்கொண்டு நிஷ்டையிலிருப்பவன் போலச் சாய்ந்து கொண்டிருந்தான்.

"தாங்கள் தெரிவிக்கவேண்டிய எல்லா விஷயத்தையும் மிகத் தெளிவாக ஒன்றுகூட விடாமல் ஆதியோடந்தமாய்ச் சவிஸ்தாரமாகச் சொல்லிவிட்டீர்களாகையால் நான் அதிகமாகக் கேட்க வேண்டியதில்லை. இருந்தாலும், ஒரு விஷயம் மாத்திரம் நான் உங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டியவனாய் இருக்கிறேன். அது நிரம்பவும் முக்கியமானது. தாங்கள் குறிப்பிட்ட இந்த வேலையைச் செய்யப்போவதாக அன்றைத்தினம் யாரிடத்திலாவது சொன்னதுண்டோ?"

"இல்லை. நான் ஒருவரிடத்திலும் சொல்லவில்லை."

"பேச்சுக்குச் சொல்லுகிறேன், உங்களுடைய காதல் மனையாட்டியாகிய இந்த அன்னியம்மாளிடத்திற்கூடச் சொன்னதில்லையா?"

"இல்லை. நான் அந்த உடன்படிக்கைப் பத்திரத்தைப் பெற்று எழுதத்தொடங்கியதன் மத்தியில் இங்கே வோகிங்கிக்கு வரவேயில்லை."

"தங்களைச் சேர்ந்தவர்கள், தங்கள் மித்திரர்கள் இப்படிப் பட்டவர்கள் ஒருவராவது அன்றைத்தினம் உங்களைப் பார்ப்பதற் காகக் கச்சேரிக்கு வந்திருந்தார்களோ?"

"அப்படி யொருவரும் வரவில்லை."

"உங்கள் பந்துக்களில், இஷ்டமித்திரர்களில் யாருக்கா வது உங்களாபீசிற்குள் வரத்தெரியுமோ?"

"தெரியாமலென்ன? நன்றாய்த்தெரியும். நான் எனக்கு வேண்டியவர்களையெல்லாம் கூட்டிப்போய்க் காட்டியுமிருக்கின் றேன்."

"தாங்கள் அந்த உடன்படிக்கையைப்பற்றி ஒருவரிடத் திலும் பிரஸ்தாபிக்கவில்லை யென்பது நிச்சயமாயிருக்கும் பக்ஷத் தில், நான் சம்பந்தமில்லாத இக்கேள்விகளைக்கேட்க வேண்டுவ தில்லை."

"நான் ஒருவரிடமும் பிரஸ்தாபிக்கவில்லை."

"காவற்காரனைப் பற்றித் தங்களுக்கு ஏதேனும் தெரி யுமோ?"

"அவன் பட்டாளத்திற் சிப்பாயாக விருந்து உபகாரச் சம் பளம் பெற்றுவந்த ஒரு கிழவனென்பதுமாத்திரம் எனக்குத் தெரியும். அதைத்தவிர வேறொன்றுந் தெரியாது."

"எந்தப் பட்டாளத்திலோ?"

"கேட்டிருக்கிறேன்—, ஆமாம். இப்போது ஞாபகத்திற்கு வந்துவிட்டது. கோல்டு ஸ்ட்ரீம் (Coldstreem) பட்டாளத்தைச் சேர்ந்தவன்."

"நல்லது, நான் மற்ற விஷயங்களையெல்லாம் அட்கின்ஸனைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறேன். அட்கின்ஸன்தா மாகட்டும், மற்றையவர்கள்தா மாகட்டும், போலீஸ் உத்தியோகத்திலுள்ள வர்களுக்கெல்லாம் விஷயங்கள் வேண்டியமட்டுங் கிடைக்கும்.

ஆனல், அவற்றை உபயோகப்படுத்துகிற வழிமட்டும் அவர்களுக்குப் பிடிபடவில்லை. சரி, இனிமேல் நான் ஒழுங்குபடுத்திக் கொள்ளுகிறேன். அடடா! அந்த ரோஜா மலர் எவ்வளவு அழகாயிருக்கிறது! இது ராஜார்கமான பூ என்பதில் என்ன தடையிருக்கிறது. அதனுல்தான், பாடகர்கள்கூட 'ராஜா வருவாரென்று ரோஜாப்பூ வாங்கிவைத்தேன்' என்று பாடுகிறுர்கள். இதன் அழகும், இதன்மணமும் எந்தப் புஷ்பத்திற்குவரும்?" என்றுசொல்லிக்கொண்டே எதிரில் தோட்டத்திலே யிருந்த ஒரு ரோஜாபுஷ்பத்தைப்பறித்து, அதை வெகுவாகச் சிலாகித்துக்கொண்டு,

'எல்லாக் குணமும் எவர்பால் இசைந்திருக்கும்?
நல்லார்கள் பாலும் நவையுண்டே—நல்லாய்கேள்,
முண்டகமு மொவ்வா முழுமலரா மிங்கிதன்பாற்
கண்டகமு முண்டே கலந்து.'

என்று சொல்லி வேதாந்தம் படிக்கக் கிளம்பிவிட்டான். இயற்கைப் பொருள்களின் அழகையாவது குணத்தையாவது வியந்து பாராட்டிச் சந்தோஷிக்கின்ற இத்தகைய குணம் ஹண்டரிடத்திலிருப்பதாக நானும் முதன்முதல் அப்பொழுதுதான் அறிந்துகொண்டேன். ஹண்டர் இவ்விதம் அந்த வெண்பாவைச் சங்கராபரண ராகத்திற் படிக்கத் தொடங்கி, அதன் அர்த்தத்தை உபந்யஸிக்கத் தொடங்கவே, பெர்ஸிவலுக்கும் அவன் மனைவியாகிய அன்னியென்பவளுக்கும் முகத்தில் ஈயாடவில்லை. அவர்களிருவரும் ஹண்டருடைய முகத்தையே கவனித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பார்த்த பார்வையிலிருந்து அவர்களிருவருக்கும் மிகுந்த அதிருப்தியுண்டா யிருப்பதாக நான் அறிந்துகொண்டேன். "ஏதடா! இவரிடம் சொன்னுற்பயனுண்டென்று எண்ணினேமே. இவர் எல்லாவற்றையுங் கேட்டுவிட்டுக் கொஞ்சமேனும் அனுதாபமில்லாமல், இப்படி ரோஜாப் பூ ஒன்றைப் பறித்து வைத்துக்கொண்டு,' மணமும் வணமு மிணங்குமிம் மலர்தான், வணங்கி வாடிக் குணங்கெடு வதுபோல், நுணங்கிடை யணங்கும் பிணங்களோ டெண்ண, வணங்கெடப் பிணங்கும் வயினுமா ருண்டே' என்று கொஞ்சங்கூட ரஸமறியாமல் எல்லாந்

துறந்த யோகியைப்போல இப்படிப் பிதற்றிக்கொண் டிருக்கிருரே" யென்று அவ்விருவர்களும் வருந்தினர்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம், "இதை யேதேனும்கண்டுபிடிக்கலாமென்று தோன்றுகிறதா, ஹண்டர்?" என்று மிக்க மரியாதையோடு ஹண்டரை நோக்கி அந்த அன்னியென்பவள் கேட்டாள்.

"ஓ, இந்த விஷயமா!" என்று சொல்லிப் புஷ்பத்தின் மீதோடியிருந்த தனது மனதைத்திருப்பி அன்னியைப் பார்த்து, "அம்மா! இந்தக் கேசு தலைகால் புரியாமல் நிரம்பவும் சிக்கலாயிருக்கிறதென்பது வாஸ்தவம். இருந்தாலும், நான் என்னால் இயன்றவரையில் முயன்று பார்த்து எனக்குத் தோற்றிய அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன்."

"ஏதேனும் கண்டுபிடிக்க மார்க்க மிருப்பதாகத் தங்களுக்கு தோற்றுகிறதோ?"

"நீங்கள் சொன்னவற்றிலிருந்து எனக்கு ஏழு ஹேதுக்கள் இருப்பதாகக் காணப்படுகின்றன. அந்த ஹேதுக்கள் பயன் படுமோ படாவோ என்பதை ஒவ்வொன்ருகப் பரிசோதித்துப் பார்த்தபின்புதான் சொல்ல முடியும்."

"யாரையாவது நீங்கள் சந்தேகிக்கிறீர்களோ?"

"சந்தேகமா?— என்னிடத்திற் கூடத்தான் எனக்குச் சந்தேகம்."

"என்ன?"

"இவ்வளவு சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கு வரமுடியுமா என்கிற சந்தேகம்."

"அப்படியானல் லண்டனுக்குப் போயே உங்கள் ஸந்தேகத்தைத் தெளியவைத்துக் கொள்ளுங்கள்."

"அம்மா! நீர் சொல்வது சரியான யோஜனையாகத்தானிருக்கிறது. வெப்ஸ்டர்! நாம் லண்டனுக்குத் திரும்புவதைத் தவிர இந்த ஸமயம் ஒன்றும் அதிகமாகச்செய்யமுடியாது. பெர்ஸிவல்! வீணெண்ணங் கொள்வதிற் பிரயோஜனமில்லை. இந்தக் கேசைக் கண்டு பிடிப்பது அஸாத்தியமென்றுதான் எனக்குத் தோற்றுகிறது" என்று ஹண்டர் சொன்னன்.

"திரும்பவும் நீங்கள் இங்கேவந்து அனுகூலமான செய்தியைச் சொல்லுகிறவரையில் என் பிராணன் என் தேகத்திலிராது."

"நல்லது, இன்றைக்கு வந்தமாதிரியாகவே நாளைக்கும் இந் நேரத்திற்கு இங்கே வருகிறோம். அநேகமாக அனுகூலமானசெய்தியாய் இராது. கடவுள் இருக்கிறார்."

"போகட்டும், விதியின்படி நடக்கிறது. நீங்கள்தான் என்ன செய்வீர்கள்? பாலைப் புகட்டலாம். பாக்கியத்தையுமா புகட்ட முடியும்? நல்லது, இந்தமட்டும் வருவதாகவாவது ஒப்புக்கொண்டீர்களே. அது போதும். ஹண்டர்! சொல்ல மறந்துவிட்டேனே! என் மாமன் லார்டு ஹோல்ஹோர்ஸ்டு (Lord Holdhurst) என்பவரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது."

"அப்படியா! என்ன எழுதியிருக்கிறார், அதில்?"

"மனவருத்தப் பட்டுக்கொண்டுதான் எழுதியிருக்கிறார். ஆனால், அதிக கடுமையாக எழுதவில்லை. நான் இப்படி தேக சௌக்கிய மில்லாமல் படுக்கையாய்க் கிடக்கிறேனென்பதைத் தெரிந்துகொண்டிருப்பதனால் அதிகமாகக் கோபித்துக்கொண்டு எழுதுவாரா? விஷயம் நிரம்பவும் முக்கியமானதென்றும், வியாதி அனுகூலமாகும்வரை ஒன்றும் ஏற்படாதென்றும், அதற்குள்ளாகப் பத்திரத்தைக் கண்டுபிடித்துக் கொடுத்துப் பரிகாரஞ் செய்து கொள்ளாத வரையில் வேலை போவதோடு மாத்திரம் நில்லாமல் இருக்கிற சொத்துக்கும் மானத்துக்கும் கேடுவந்துவிடுமென்றும் எழுதியிருக்கிறார். இப்போது கண்டுபிடித்துவிட்டாலும் பாதகம் வராதென்று தோன்றுகிறது. கடவுள் என்னை எவ்விதம் வைத்து ஆட்டப்போகிறாரோ?"

"அவர் நியாயமாகத்தான் எழுதியிருக்கிறார். நிரம்பவும் தாக்ஷிண்யமுள்ளவரென்றுதான் தெரிகிறது. நல்லது, வெப்ஸ்டர்! ரயிலுக்கு நாழிகையாகிறதே. பட்டணத்தில் கொஞ்சம் அவசர காரியமுமிருக்கிறது. வா, போகலாம்" என்றான்.

உடனே நாங்கள் புறப்பட்டு ரயிலடிக்கு வந்தோம். ஜோஸப் ஹாரிஸன் எங்களை ரயிலடிவரையிற் கொண்டுவந்துவிட்டார். நாங்கள் நேரே பட்டணம் போகிற வண்டியில் ஏறாமல் போர்ட்ஸ்மவுத் (Portsmouth) க்குப்போகிற வண்டியில் ஏறினோம். வண்டி

யில் உட்கார்ந்ததும் ஹண்டர் தீர்க்காலோசனைக் காரம்பித்து விட்டான். வாயைத் திறக்கவேயில்லை. நானும் ஷேக்ஸ்பியர் நாடகத்திலொரு கதையைப் படித்துக்கொண்டிருந்தேன், க்ளாபாம் (Clapham) ஜங்ஷன் வந்தவுடன் ஹண்டர் திடீரென்று, "பெர்ஸிவல் குடிக்கிறவரில்லையே?" என்று கேட்டான்.

"அப்படி நினைக்கக் காரணம் இல்லை, குடிக்கமாட்டானென்றுதான் எனக்குத் தோன்றுகிறது" என்றேன்,

"குடிக்கிறவனாக எனக்குந் தோன்றவில்லை. ஆனால், இப்படிப்பட்ட விஷயங்களிலெல்லாம் நாம் நிச்சயம் தெரிந்துகொள்ள வேண்டியது அத்யாவசியம். ஐயோ பாவம்! மனுஷ்யன் அநியாயமாய் மூழ்கிப் போய்விட்டான். அவனை எப்படியாவது கரையேற்ற முடியுமா என்று பார்க்கிறேன். நல்லது, அவர் மனைவியாகிய அந்த மோகனாங்கியைப்பற்றி என்ன நினைக்கிறாய்?"

"ஹண்டரைக்கூடப் பித்துப் பிடிக்கும்படி—"

"வெப்ஸ்டர்! இதுவா சமயம் பரிகாசத்திற்கு?"

"மோகனாங்கி யென்றாயே. அதுவா அவள் பெயர்?"

"அதற்காகவா சொன்னாய். அவளைப்பார்த்தால் மோகினி போலத்தானப்பா இருக்கிறாள். அவள் எப்படியிருந்தால்தான் நமக்கென்ன? அவள் நடவடிக்கை எப்படி?"

"மனவுறுதியும் நன்னடக்கையுமுள்ளவளாகத்தான் தோன்றுகிறது. வேறுவிதமாகக் கேள்விப்படவில்லை."

"ஆம். நல்ல பிறப்புக்கூட உள்ளவளாம். அவளும் அவள் சகோதரனுமாக இரண்டு பேர்கள்தாம் உடன் பிறந்தவர்கள். அவள் தகப்பனார் நார்த்தம்பர்லண்டு (Northumberland) என்னுமிடத்திற்குப் பக்கத்தில் இரும்புச் சுரங்கத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறாராம். பெர்ஸிவல் போனவருஷம் மாரிக்காலத்தின்போது வெளியூர்களுக்குப் பிரயாணஞ் சென்றிருந்த காலத்தில் இந்த அன்னியென்பவளைப் பார்த்துக் காதல்கொண்டு அவளைக் கலியாணஞ் செய்துகொண்டாராம். கலியாணத்திற்குப் பிறகு பெர்ஸிவலின் தாய்தந்தையர்கள் முதலிய பந்துக்களுடன் இருக்கவேண்டித் தன் தமையனான ஜோஸப் ஹாரிஸனுடன்

இங்கே வந்தாளாம். வந்த இடத்தில் இவருக்கு இக்கதி நேரிட்டதனால் அவரருகிலிருந்து அன்புடன் பணிவிடை செய்துகொண்டிருக்கின்றனளாம். அவள் சகோதரனும் இடம் வாய்ப்பாய் இருப்பதனால் இருந்துவிட்டானும். நான் உன்னை யறியாமல் இவ்வளவு விசாரித்தறிந்திருக்கிறேன். இன்னும் இன்று முழுவதும் நாம் இதைக் குறித்து விசாரிக்க வேண்டியதுதான். முதன் முதலில் நாம் அட்கின்ஸனைக் கண்டு பேசவேண்டும். அவர் நமக்கு வேண்டிய சில உளவுகளையெல்லாஞ்சொல்லக்கூடும். அவர் சொல்வதைத் தெரிந்துகொண்ட பிறகுதான், நமக்கு இந்தக் கேசை எப்படித்தொடங்கலா மென்பது தெரியும்."

"நீ ஏதோ சில ஆதாரங்களைக் கண்டுபிடித் திருக்கிறதாகச் சொன்னயே?"

"சில ஆதாரங்கள் மட்டுமா? எவ்வளவு ஆதாரங்கள் வேண்டுமோ அவ்வளவு ஆதாரங்களுங் கிடைத்திருக்கின்றன. ஒவ்வொன்றின் யோக்கியதையும் விசாரித்தபிறகு தானே தெரிந்துகொள்ளவேண்டும். பிரயோஜனத்தை யெதிர்பாராது செய்யப்பட்ட குற்றமாயிருக்குமானல் அதைக் கண்டுபிடிப்பது பிரயாசமாயிருக்கும். இதுவோ அப்படியில்லை. ஒருவித நோக்கத்தை வைத்துக்கொண்டுதான் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பத்திரத்தைக் களவுசெய்வதினுல் லாபமடையக் கூடியவர்கள் யார் என்பதைப் பார்க்கவேண்டும். ப்ரெஞ்சுக்காரர்கள், ருஷ்யாக்காரர்கள், இவ்விருவர்களில் யாருக்காவது விற்கக் கூடியவர்கள், இவர்களாகத்தானிருக்கவேண்டும். இவர்களைத்தவிர அந்த உடன்படிக்கையைத் திருடி லாபமடையக் கூடியவர்கள் வேறு எவருமில்லை. லார்டு ஹோல்டுஹர்ஸ்ட்டும் ஒருவர் இருக்கிறார்."

"ஹோல்டுஹர்ஸ்ட்டா?"

"ஆம். இதிலென்ன ஆச்சரியப் படக்கூடிய விஷயமிருக்கிறது? ராஜ்யதந்திரத்தில் நிபுணராயுள்ளவர்களின் காரியங்கள் உனக்குத் தெரிய நியாயமில்லை. சமயம் வந்தால் எதுவும் செய்வார்கள். பழிபாவம் ஒன்றுக்கும் அவர்கள் பயப்படமாட்டார்கள். உற்றார் உறவினர் என்பதும் அவர்களுக்கில்லை. காரியம் சாதிக்கிற வழியில்தான் அவர்கள் புத்தியும் எண்ணமும்செல்லும்.

லார்டு ஹோல்டுஹர்ஸ்ட்டோ அபாரமான சாமர்த்திய முள்ளவர். ஒருவேளை இந்த உடன்படிக்கை தற்செயலாய் நாசமடைகிற விஷயத்தில் அவர் ஸந்தோஷப்படக் கூடியவராக இருக்கலாம். அதை யார் கண்டார்கள்?"

"ராஜ்யதந்திரத்தை நான் என்ன கண்டேன்? ஒருவேளை நீ சொல்லுகிறபடி நடக்கிறவர்களும் இருக்கலாம். அதை நான் மறுக்கவரவில்லை. இருந்தாலும் மாசு மறுவில்லாத உத்தம புருஷராகிய ஹோல்டுஹர்ஸ்ட்டை நீ சொன்ன ராஜ்யதந்திர நிபுணர்களின் வரிசையில் சேர்த்தெண்ணக்கூடாது."

"அது ஒரு ஹேஷ்யந்தானே. அவர் யோக்கியரென்று அந்த ஹேஷ்யத்தை நாம் எப்படி அவமதிக்கலாம்? எதற்கும் நாம் அந்தப் பெரிய மனுஷ்யரைக்கண்டு பேசுவோம். அவர் சொல்வதிலிருந்து ஏதாவது துப்புக்கிடைக்குமா வென்பதையும் பார்ப்போம். ஆதாரங்கள் கிடைத்தாலும்சரி, கிடைக்காவிட்டாலும் சரி, அவற்றை யெதிர்பாராமலே கிடைத்துள்ள ஆதாரங்களைக்கொண்டு நான் முன்னதாகவே விசாரணைக்குத் தொடங்கிவிட்டேன்."

"முன்னதாகவேயா?"

"ஆம். நான் வோகிங் ஸ்டேஷனிலிருந்தபடியே லண்டன் நகரத்தில் பிரசுரமாகும் எல்லாப் பத்திரிகைகளுக்கும் ஒரு விளம்பரம் அனுப்பி யிருக்கிறேன்: இதுதான் அந்த விளம்பரத்திற் கண்டிருந்த விஷயம்:— இது இன்றைத்தினமே எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்துவிடும்.

"பத்துப்பவுன் இனம். சென்ற மே-மீ, 23-ந்தேதி இரவு சற்றேறக்குறைய ஒன்பதே முக்கால் மணிக்கு சார்லஸ் வீதியிலுள்ள மந்திராலோசனைக் கச்சேரிக்குச் சமீபத்தில்சவாரிகொண்டுபோய்விட்ட ஜட்காவண்டியின் நம்பரைத் தெரிவிப்பவர்களுக்குக் கொடுக்கப்படும். அவர்கள், லண்டன் ரொட்டிக்கிடங்குத் தெரு 221-ம் நம்பர் விலாசத்திற்கு எழுதவேண்டும்."

"வந்ததிருடன் நடந்து வந்திருக்கக் கூடாதோ? வண்டியில் தான் வந்திருக்கவேண்டுமென்று நீ யெப்படி நிச்சயித்தாய்?"

"இல்லாவிட்டால் இந்த விளம்பரத்தால்வந்த நஷ்டமென்ன? பெர்ஸிவல் சொன்னபடி அவரிருந்த அறையிலேயும் மாடிச்சந்திலேயும் மனுஷ்யர்கள் ஒளிந்துகொண்டிருக்கக் கூடிய இடம் இல்லாதிருப்பது உண்மையானல், வந்ததிருடன் வண்டியிலேறிக்கொண்டுதான்வந்திருக்கவேண்டும். வெளியிலிருந்துவந்ததிருடன் நடந்துவந்திருப்பானுனல், அன்றைத்தினம் 7-மணிமுதற்கொண்டு மழை பெய்திருக்கிறபடியால் அவன் கால் சேருனது நிச்சயம். மாடிமேல் விரித்திருந்த ஜமக்காளத்திலாவது வேறெங்கேயாவது படிந்திருக்கவேண்டுமல்லவா? வந்தவனுடைய அடிச்சுவடு அங்கு எங்குமே காணப்படாததால் நான் கொண்ட அபிப்பிராயம் சரியாகவே யிருக்கவேண்டும்."

"நீ சொல்வது சரிதான். பெர்ஸிவல் கீழேவந்து மேலே போவதற்குள்ளாகக் காணுமற்போயிருக்கிறது. இடையில் ஐந்து நிமிஷ அவகாசந்தானிருக்கும். அடிச்சுவடு இதற்குள் மறைந்து போயிருக்க முடியாது. பேஷ்! நல்ல ஊஹந்தான்."

"நான் சொன்ன ஆதாரங்களில் இது ஒன்று. இதனுல் கொஞ்சம் வெளிச்சமுண்டாகலாம். மற்றொரு ஆதாரமென்னவென்றால்,—அந்த மணிச்சத்தம். இந்தக் கேசுக்குச் சாதகமாயுள்ள ஆதாரங்களிலெல்லாம் இதுதான்நிரம்பவும்முக்கியமானது. மணி ஏன் அடிக்கவேண்டும்? வந்த திருடன் தனது சாமர்த்தியத்தைக் காட்டுவதற்காக அடித்தானு? அல்லது திருடனேடிருந்த ஒருவன் திருட்டைத் தடுப்பதற்காக அடித்தானு? அல்லது மணி தற்செயலாகத் தானே அடித்ததா? அல்லது—?" என்று உடனே சாய்ந்துகொண்டு தீர்க்காலோசனைசெய்ய ஆரம்பித்துவிட்டான். எனக்கு அவனுடைய ரீதிகளெல்லாம் நன்ருய்த்தெரியுமாதலால் திடீரென்று புதிதான சில அனுமானங்கள் அவனுக்குத் தோற்றியிருக்கக் கூடுமென்று நினைத்தேன்.

நாங்கள், மூன்றடித்து இருபது நிமிஷத்திற்கெல்லாம் வாட்டர்லூ (Waterloo) வந்து சேர்ந்தோம். அங்கே நிமிஷமுந் தாமதிக்காமல், சிறிது ஆகாரஞ் செய்துகொண்டு ஸ்காட்லண்டு யார்டுக்குப் (Scotlandyard) போயினேம். ஹண்டர் முன்னடியே அட்கின்ஸனுக்குத் தந்திகொடுத்திருந்தபடியால் அவர் எங்களை

எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அவர் கட்டைக்குட்டையாய்ப் போலீஸ் உத்தியோகத்திற்குத் தக்கவரென்று சொல்லும்படியாய்த்தா னிருந்தார். முகத்தைப் பார்க்கும்போது சூடிகையாயிருக்கிற மாதிரியாகத்தான் காணப்பட்டது. ஆனால், அவர் எங்களை முகமலர்ச்சியோடு எதிர்கொள்ளவில்லை. முகம் கடுகடுவென்றிருந்தது. நாங்கள் இன்ன காரியத்திற்காக வந்திருக்கிறோம் என்பதைக் கேட்டபிறகு அவர் எங்களோடு முகங்கொடுத்துச் சரியானபடி வார்த்தை சொல்லவில்லை.

"ஹண்டர்! தாங்கள் கேசுகளில் வேலைசெய்யும் வழிகளைப் பற்றி நான் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன். மற்றவர்கள் ஓடி அலைந்து பாடுபட்டுச் சேகரித்து வைத்திருக்கிற ஆதாரங்களையெல்லாம் அப்படியே யுபயோகித்துக் கொண்டு, கேசை ஒருவழியாக முடித்துவிட்டு, நீர் முடித்ததாகவும், பிறருக்கெல்லாம் ஒன்றுந் தெரியாதென்பதாகவும் வாயடிபடித்துப் பகிரங்கப்படுத்தி விட்டு எங்களைப் போலொத்தவர்களுக் கெல்லாம் அகவுரவத்தை யுண்டாக்கி வைப்பதுதானே?"

"அப்படியா கேள்விப்பட்டிருக்கிறீர்? என் நடவடிக்கை நீர் சொல்வதற்கெல்லாம் நேர்விரோதமானது. நான் இதுவரைக் கண்டுபிடித்துள்ள 53-கேசுகளில் நாலே நாலு கேசுகளில்தான் என் பெயர் வந்திருக்கிறது. பாக்கியுள்ள 49-கேசுகளில் ஆங்காங்குள்ள போலீஸ்காரர்கள்தாம் புகழ்பெற்றிருக்கிறார்கள். நீர் இந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ளாததற்காக நான் உம்மைக் குறைகூறப் போகிறதில்லை. நீர் சிறுபிள்ளை. லோகானுபவமும் போதாது. உமது உத்தியோகத்தில் நீர் முன்னுக்கு வரவேண்டுமானால் இவ்விதம் தாறுமாறாய்ப் பேசி என்னுடன் பகைத்துக் கொள்ளாமல், என்னோடு கூட இருந்து ஒத்து வேலைசெய்யும்" என்று ஹண்டர் அட்கின்ஸனை நோக்கிச் சொன்னான்.

இதைக் கேட்டதும் அந்தத் துப்பறியும் உத்தியோகஸ்தர் கொஞ்சம் வணக்கத்தை யடைந்து, "ஏதேனும் இரண்டொருதந்திரங்களிருந்தால் கேட்கப் பிரியமுள்ளவனாய் இருக்கிறேன். இதுவரையில் இந்தக் கேசில் பிரயோஜனமொன்றுமில்லை" யென்றார்.

"நல்லது, நீர் என்னென்ன செய்தீர்?"

"நான் டாஞ்சி என்பவளையும், அவள் புருஷனாகிய அந்தக் காவற்காரனையும் பின் தொடர்ந்து விசாரித்தேன். காவற்காரன் பட்டாளத்தில் யோக்கியனாகவிருந்து வேலைசெய்து நல்ல பெயருடன்தான் வெளிவந்திருக்கிறான். அவன் நடத்தைகளில் தவறிருப்பதாகத் தெரியவில்லை. நல்ல நம்பிக்கைக்குத் தகுந்தவன்தான் என்று எல்லாரும் சொல்லுகிறார்கள். அவனுடைய விரோதிகள் கூட, அவனுடைய நடத்தைகளில் குற்றங்கூறவில்லை. ஆனால், அவன் மனைவிமட்டும் கெட்டவள்தான். அவள் இந்தக் கேசில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடும்."

"அவளைத் தொடர்ந்து பரிசோதித்தீர்களா?"

"நமது போலீஸ் துப்பறியும் இலாகாவைச்சேர்ந்த ஒருத்தியை இதற்கென்றே நியமித்தனுப்பினோம். அந்த டாஞ்சி யென்பவளுக்குக் குடிக்கிற துரப்பியாசம் உண்டு. நன்றாய்க் குடித்து விட்டு மயங்கிக் கிடக்கும் சமயத்தில் உண்மையைத் தெரிந்து கொண்டு வரும்படி யேற்பாடுசெய்திருந்தோம். ஐந்தாறுதடவை இப்படி யனுப்பியும் அந்த டாஞ்சி யென்பவளிடத்திலிருந்து எதுவும் தெரிந்துகொள்ள முடியவில்லை."

"அவள் வீட்டுக்கு அடிக்கடி தரகர்கள் வந்து கொண்டிருக்கிறார்களாமே? அது என்ன செய்தி?"

"ஆம், வந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கிகள் கொடுபட்டுப்போனதால் அத்தரகர்கள் இப்போது வருவதில்லை."

"அவளுக்குப் பணம் எங்கிருந்து கிடைத்தது?"

"அதெல்லாம் சரியாகத்தானிருக்கிறது. காவற்காரனுக்குப் பட்டாளத்திலிருந்து பென்ஷன் வரவேண்டியிருந்ததாம். அதை வாங்கித்தான் கொடுத்திருக்கிறாள். தரகர்களையும் நான் விசாரித்தேன். பென்ஷன் வாங்கிக் கொடுத்தாளென்றுதான் சொல்லுகிறார்கள். தேதியும் ஒத்திருக்கின்றது. அவர்களிடம் இப்போது அதிகப் பணப் பழக்கம் இருப்பதாகவுந் தெரியவில்லை."

"பெர்ஸிவல் காப்பி வேண்டியதற்காக மணியடித்தபோது காவற்காரனுக்குப் பதிலாக இவள் போனதற்கு என்ன சமாதானஞ் சொல்லுகிறாள்?"

"அவள் புருஷன் களைத்துப்போய்ப் படுத்திருந்ததனால் அவனை யெழுப்பக் கூடாதென்று நினைத்து அவனுக்குப்பதிலாகத் தான் போனாளாம்."

"வாஸ்தவந்தான். சற்றுநேரத்திற்குப் பின்பு பெர்ஸிவல் கீழே யிறங்கிப் பார்த்தபோது அக்காவற்காரன் தூங்கிக்கொண் டிருந்தா னென்பதனால், அவள் சொல்லும் சமாதானம் சரியாகத் தானிருக்கிறது. அப்படியானால், அவள் கெட்டநடத்தை யுள்ள வள் என்பதைத் தவிர, மற்றைப்படி அவர்கள்பேரில் குற்றமிருப் பதாகத் தெரியவில்லையே. இருக்கட்டும்; அன்றிராத்திரி அவள் ஏன் அவ்வளவு அவசரமாக வீட்டுக்குப் போனாளாம்? நீங்கள் கேட்டீர்களா? தெருக்கோடியில் நின்றுகொண்டிருந்த போலீஸ் சேவகன்கூட அவள் அவ்வளவு வேகமாய்ப் போனதைக் கவ னித்திருக்கிறானே."

"அன்றைத்தினம் வழக்கத்திற்குமேல் நாழிகையாய்விட்ட தாம். அதனால் அவசரமாய்ப் போனாளாம்."

"சரி, நீரும் பெர்ஸிவலும் அவளுக்குப் பிறகு இருபத் தைந்து நிமிஷங்கழித்துப் புறப்பட்டு அவளுக்கு முன்னே அவள் வீட்டுக்குப் போயிருக்கிறீர்களே. உங்களுக்கு முன் அவசரமாகப் போன அவள், உங்களுக்குப் பின்னால் பத்து நிமிஷங் கழித்து வரக் காரணமென்ன? கேட்டீர்களா?"

"கேளாமலா இருப்போம். 'குதிரை யோட்டத்திற்கும், கிழவி கால் நடைக்கும் இந்த முப்பது நிமிஷங்கூட வித்தியாஸ மிருக்காதா?' என்று சொன்னாள். அது சரியான சமாதானமாகத் தானிக்கிறது."

"நல்லது, அந்த டாஞ்சி யென்பவள் வீட்டிற்கு வந்தவுடன் நீங்கள் வந்திருப்பது தெரிந்தும் உங்களிடம் வராமல் நேராகச் சமையற் கட்டிற்குள் ஏன் போனாளாம்?"

"எங்களைத் தரகர்களென்று நினைத்திருந்தபடியால், அவள் எங்களிடம் கொடுப்பதற்காக அங்கே வைத்திருந்த பணத்தை யெடுப்பதற்காகப் போனாளாம்."

"இப்படியாக நீங்கள் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம்அவள் ஒரு சமாதானத்தைச் சொல்லிவிடுகிறாள். இதெல்லாம் இருக்

கட்டும். அவள் கச்சேரியைவிட்டு வீட்டிற்குப் போம்போது, வழியில் அவள் யாரையாவது சந்தித்ததாகவாவது, அல்லது அந்தச் சார்லஸ் வீதியில் போய்க்கொண்டிருந்தவர்களைப் பார்த்த தாகவாவது சொன்னளா ?"

"தெருக்கோடியில் நின்றுகொண்டிருந்த போலீஸ் சேவகனைத்தவிர அவள் வேறு யாவரையும் பார்க்கவில்லையாம்."

"நல்லது, அட்கின்ஸன்! அந்த டாஞ்சி விஷயத்தில் நீர் ஒன்றும் பாக்கி வைக்கவில்லை. கேட்க வேண்டியவைகள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் கேட்டுத்தானிருக்கிறீர். அப்புறம் நீர் செய்த வேலை யென்ன ?"

"அன்றைத்தினம் ஆபீசில் அதிக நாழிகை தங்கி வேலை பார்த்துக்கொண்டிருந்த குமாஸ்தாவாகிய சார்லஸ் என்பவரைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினேம். இந்த ஒன்பது வாரங்களாக அவரைப் பின்றொடர்ந்தும், அவரைப்பற்றி அக்கம் பக்கங்களில் விசாரித்தும் பார்த்தோம். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. அவர் நல்ல சந்ததியைச் சேர்ந்தவரென்றும் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யவே மாட்டாரென்றும் எல்லாரும் சொல்லுகிறார்கள். எங்களுக்குக் கூட அவரைப் பின்றொடர்ந்துபோவதில் மனமில்லை."

"இன்னும் ஏதாவது உண்டா ?"

"எங்களுக்கு வேறொன்றும் துப்பு அகப்படவில்லை. கேசைக் கண்டுபிடிப்பது பிரயாசமென்று விட்டுவிட்டோம்."

"பெர்ஸிவல் கிரேயிருக்கும் போதே அவர் ஆபீசிலுள்ள மணி அடித்ததாகச் சொன்னர்களே. அதைப்பற்றி உம்முடைய அபிப்பிராய மென்ன ?"

"அதைப்பற்றித்தான் நானும் யோஜித்து யோஜித்துப் பார்க்கிறேன். ஒன்றும் புரியவில்லை. 'வந்தவன் எவனுயிருந்தாலும் சரி, அவ்வளவு தைரியமாய் மணியை யடித்தது' மாத்திரம் ஆச்சரியந்தான். கைதேர்ந்த திருடனென்பதற்குச் சிறிதும் ஆக்ஷேபமேயில்லை. என்ன துணிச்சல் பார்த்தீர்களா!"

"உண்மைதான். அட்கின்ஸன்! இவ்வளவு தூரம் நீர் சொன்னதற்காக உமக்கு வந்தன மளிக்கின்றேன். திருடனைப் பிடித்து

விடக்கூடுமென்றே நினைக்கிறேன். அகப்பட்டுவிடும் விஷயத்தில் உமக்குஞ் சொல்லியனுப்புகிறேன். வெப்ஸ்டர்! நாழிகையாகி றது, வா போவோம்" என்றான்.

நாங்கள் அவ்விடம் விட்டுப் புறப்பட்டவுடன் ஹண்டரை நோக்கி, "ஹண்டர்! நாம் இப்போது எங்கே போகவேண்டும்?" என்று நான் கேட்டேன்.

"பெர்ஸிவலின் மாமனாகிய அந்த ஹேரால்டுஹர்ஸ்ட்டு என் னும் பெரிய மனிதரைக்கண்டு பேசுவதற்காக அவரிருக்குமிடத் திற்குப் போகவேண்டும்."

நாங்கள் போனசமயம் சாயங்காலமாயிருந்தாலும் நல்ல வேளைக் கடையாளமாய் அவர் கச்சேரியிலேயே யிருந்தார். ஹண் டர் தன் பெயரை ஒரு காகிதத்துண்டிலெழுதி அதை வாசற்கார னிடம் கொடுத்தனுப்பினான். அவர் எங்களை மிக்க ஸந்தோஷத் துடன் எதிர்கொண் டழைத்துப்போய் விலையுயர்ந்த ஆசனங் களைக் கொடுத்து உபசரித்துத் தாம் நடுவிலுட்கார்ந்தார். அவர் பார்வைக்குச் சுமார் ஐம்பது வயதுள்ளவர்போ லிருந்தார். சரீ ரம் மெலிவடைந்திருப்பதோடு, உருவமும் உயரமாயிருந்தது. அவர் தலைமயிர் இளநரை கண்டிருந்தது. அவர் முகத்தைப் பார்க் கும்பொழுது பிரபுத்துவம் அவருடன் கூடவே பிறந்ததுபோலத் தோன்றிற்று.

"ஹண்டர்! நான் தங்கள் பெயரைப்பற்றி அடிக்கடி கேள் விப்பட்டிருக்கிறேன். நீங்கள் வந்திருக்கிற காரியமும் இன்ன தென்று நான் தெரிந்துகொண்டேன். தாங்கள் கவனிக்கும்படி யாக இந்த ஒரே ஒரு காரியந்தான் எங்கள் ஆபீசில் நடந்திருக் கிறது. இதுவரையில் எங்கள் ஆபீசில் திருட்டுப் போயிற்றென் பது கிடையாது" என்று சொல்லி, "யாருக்காக நீங்கள் இப் போது வேலை செய்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"தங்களுடைய மருமகனாகிய பெர்ஸிவலுக்கு" என்று ஹண்டர் மறுமொழி சொன்னான்.

"துரதிர்ஷ்டமுள்ள என் மருமகனுக்காகவா? அவன் என க்கு நெருங்கிய பந்துவாயிருந்தும் நான் அவனுக்கு இவ்விஷயத் தில் எவ்வித உதவியும் செய்ய முடியாதவனாய் இருக்கிறேன்.

என்ன செய்யலாம்? இது அவன் தலையில் கல்லைப்போடத்தான் வந்திருக்கிறது."

"பத்திரம் அகப்பட்டு விட்டாலோ?"

"அப்பொழுது எல்லாம் வேறுமாதிரிதான். கேட்பானேன்?"

"தங்களை இரண்டொரு கேள்விகள் கேட்கலாமென்றிருக்கிறேன். அவ்விடத்து அபிப்பிராயம் எப்படியோ?"

"என்ன வேண்டுமானாலுங் கேளுங்கள். தெரிந்ததைச் சொல்லுகிறேன்."

"உடன்படிக்கைக்கு நகலெழுதும்படியாகத் தாங்கள் இங்கிருந்துதானே சொன்னீர்கள்?"

"இங்கிருந்துதான் சொன்னேன்."

"அப்படியானால் ஒருவரும் மறைந்திருந்து கேட்டிருக்க முடியாதே?"

"முடியவேமுடியாது."

"தாங்கள் நகலெழுதும்படி கொடுக்கப் போவதாக யாரிடத்திலாவது சொன்னதுண்டோ?"

"சொன்னதேயில்லை."

"அது நிச்சயந்தானே?"

"கொஞ்சங்கூடச் சந்தேகமில்லை."

"நல்லது; தாங்களும் சொல்லவில்லை. தங்கள் மருமகனும் சொல்லவில்லை. ஒற்றுக்கேட்டிருக்கலாமென்பதற்கும் இடமில்லையென்கிறீர்கள். ஆகவே, வந்தவன் தற்செயலாக அந்த உடன்படிக்கையைக் கண்டிருக்கவேண்டும். பார்த்ததும் அதை அபகரிக்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாகி எடுத்துப் போயிருக்கவேண்டும். இதைத்தவிர வேறு எப்படியிருக்கமுடியும்?"

"மெள்ள மெள்ள என் வாயைப்பிடுங்குகிறீர்களே. இருக்கலாம்" என்று சிரித்துக்கொண்டே அந்தக் கனவான் பதில் சொன்னார்.

ஹண்டர் அப்பால் சிறிதுநேரம் மௌனமாய்க் கண்ணைமூடிக்கொண்டிருந்துவிட்டு, "மற்றொரு முக்கியமான விஷயத்தைப் பற்றியும் நான் தங்களோடு கலந்து பேசவேண்டியிருக்கி

றது. தாங்கள் அந்த உடன்படிக்கையிற் கண்டுள்ள விஷயங்கள் வெளிவந்தால் பெரிய பெரிய விபத்துக்களெல்லாம் நேர்ந்துவிடுமென்று பயமுறுத்தினீர்களென்று கேள்விப்பட்டேனே. அது உண்மைதானு ?"

ஹொல்டுஹர்ஸ்ட்டு முகத்தைச் சுளித்துக்கொண்டு, "ஆம். பெரிய கஷ்டங்களெல்லாம் உண்டாய்விடும்" என்றார்.

"அப்படிப்பட்ட கஷ்டங்கள் இப்போது உண்டாகிவிட்டனவா ?"

"இன்னும் உண்டாகவில்லை."

"இதற்குள்ளாக அந்த உடன்படிக்கையானது பிரெஞ்சுக்காரர்களிடத்திலாவது அல்லது ருஷ்யாக்காரர்களிடத்திலாவது சேர்ந்திருக்கும் பக்ஷத்தில் நிச்சயம் இதற்குள்ளாக உங்களுக்கு அந்தச் சமாசாரம் எட்டியிராமற் போகாதே?"

"அவசியம் எட்டியிருக்கும்."

"உடன்படிக்கை களவுபோய்ச் சற்றேறக்குறையப் பத்து வாரங்களாகியும் அதைப்பற்றி உங்களுக்கு இன்னும் ஒன்றுமே தெரியாதிருப்பதனல், ஏதோ சில அசந்தர்ப்பங்களால் அப்பத்திரம் அவ்விருவர்களில் ஒருவர் கையிலும் இன்னுஞ் சேர்ந்திருக்க நியாயமில்லை யென்று ஊகிக்கும்படியாயிருக்கிறது ?"

ஹண்டர் இதைச் சொல்லவும் அந்தப் பிரபு முகத்தைச் சுளித்துச் சிரித்துக்கொண்டு, "உடன்படிக்கையை எடுத்தவர்கள் வேறு என்னதான் செய்வார்கள் ? கண்ணுடியுஞ் சட்டமும்போட்டுத் தொங்கவிட்டு அழகுபார்த்துக் கொண்டிருப்பார்களோ ?" என்றார்.

"அதிகப்பணத்தையெதிர்பார்த்துக் கொடாமலிருக்கலாம்."

"இன்னும்கொஞ்சநாள் தாமதித்தால் அவனுக்கு ஒன்றுமே கிடைக்காது. உடன்படிக்கையின் ரகஸ்யங்களெல்லாம் தானுகவே வெளியாய்விடும்."

"அப்படியா ? இது நிரம்பவும் முக்கியமான விஷயம். தாங்கள் சொல்வதைப் பார்த்தால் திருடியவனுக்கு ஏதாவது மத்தியில் வியாதி வந்திருக்கலாம்—"

"பெர்ஸிவலுக்கு வந்திருக்கிற மாதிரியாக மூளைக்கலக்கம் முதலான வியாதி வந்திருக்கலாம்" என்று சொல்லி ஹண்டரை யேறிட்டுப் பார்த்தார்.

"அப்படிக்கெல்லாம் அஸந்தர்ப்பமாக நான் நினைப்பவனல்லன்" என்று சொல்லிவிட்டு மறுபடியும், "நல்லது, நாங்கள் உங்களது அருமையான காலத்தையெல்லாம் இவ்விதம் சம்பாஷணையில் செலவழிக்கும்படி செய்துவிட்டோம், மன்னிக்கவேண்டும்; உத்தரவு பெற்றுக் கொள்ளுகிறோம்" என்றான்.

"எப்படியாவது நீங்கள் எடுத்தகாரியம் ஜயமடையவேண்டும். மற்றைப்படி திருடன் யாராயிருந்தாலென்ன?" என்று சொல்லி எங்களை வாசற்படி வரையில் வந்து மரியாதையாக வழியனுப்பினர்.

வெளியிலே வந்ததும் ஹண்டர் என்னைப்பார்த்து, "வெப்ஸ்டர்! பார்த்தாயா அவர் நிலைமையை? இவ்வளவு சம்பளம் வாங்கியும் செலவுக்குப் போதாமல் மனுஷ்யன் கஷ்டப்படுகிறான்போலிருக்கிறது. காலில் போட்டுக்கொண்டிருக்கிற பூட்ஸ் (Boots) கூட நல்லதாயில்லை. நல்லது, இனியும் நான் உன்னைத் தாமதிக்கச் செய்வது நியாயமில்லை. போய் உன் காரியங்களைப் பார்த்துவிட்டு நாளைக்கு வோகிங் வந்துசேர். நான் போய் விளம்பரத்திற்குப் பதில் வந்துவிட்டதா என்று பார்த்துக்கொண்டு வந்து சேருகிறேன்" என்று சொல்லிப் பிரிந்து போய்விட்டான்.

மறுநாள் அவன் சொன்னபடியே அவனை வோகிங் போகிற ரயில்வண்டியில் சந்தித்தேன். விளம்பரத்திற்குப் பதில் வரவில்லையென்றும், புதிதாகத் துப்புக்கள் எதுவுமே கிடைக்கவில்லையென்றும் சொன்னான். ஆனால், அவன் கவலையின்றிப் பாடிக்கொண்டு வந்ததைப் பார்க்க, எனக்கு அவன் ஏதோ ஒருவிதமாகக் கேசைக் கண்டுபிடித்துவிட்டானென்று தோன்றிற்று. நானும் நிர்ப்பந்தப் படுத்திக் கேட்கவில்லை.

வோகிங் வந்திறங்கினதும் நேராகப் பெர்ஸிவல் வீட்டுக்கே போனோம். அங்கு, பெர்ஸிவல் முதனாளிற்போலவே அன்னி யென்பவளின் பக்கத்தி லுட்கார்ந்திருந்தான். ஆனால், முதனாளைப்பார்க்கிலும் உடம்பு தேறியிருந்தான். 'எங்களைக் கண்டதும்

மஞ்சத்தைவிட்டெழுந்திருந்து, "ஏதேனும் விசேஷமுண்டா?" என்று ஆவலுடன் கேட்டான்.

"நேற்றுச் சொல்லிப் போனபடிதான். கண்டு பிடிப்பது அஸாத்தியமென்றுதான் தோற்றுகிறது. அட்கின்ஸனையும் பார்த்தேன். உமது மாமனாராகிய அந்தக் கனவானையும் பார்த்தேன். இரண்டொரு வழியிற் பிரயத்தனமுஞ் செய்திருக்கிறேன், எதாவது ஒன்று பலிக்கலாம்" என்றான்.

"அப்படியானால் உங்களுக்கு இன்னும் நம்பிக்கையிருக்கிறதுபோல் தோன்றுகிறதே?"

"கடைசிவரையிலும் எனக்கு நம்பிக்கைதான். 'அல்லன போல்-ஆவனவு முண்டு சில' என்ற பெரியோர்கள் வாக்கியத்தை நான் கைக்கொண்டவன். எதையும் கடைசிவரையிலும் ஒரு கை பார்த்துத்தான் விடுவேன்."

"நீர் மகாராஜராயிருக்கவேண்டும். இந்தமட்டும் சொன்னீர்களே! நாம் தைரியத்தைவிடாமற் பொறுமையுடனிருந்தால் உண்மை தனக்குத்தானாய் வெளிவந்துவிடுகிறது. 'ஊக்கமது கைவிடேல்' என்றவாக்கியம் வீணாகவா போய்விடும்?" என்று அன்னியென்பவள் சொன்னாள்.

"நல்லது, நீங்கள் எங்களுக்கு ஒன்றுஞ் சொல்லாவிட்டாலும் நாங்களாவது உங்களுக்குச் சொல்லுகிறோம், கேளுங்கள்" என்று பெர்ஸிவல் சொன்னான்.

"நீங்கள் ஏதேனும் விசேஷ சமாசாரம் சொல்லுவீர்களென்றே நான் எதிர்பார்த்திருந்தேன்" என்று ஹண்டர் சொன்னான்.

"ஆம். நேற்றிரவு ஒரு விசேஷம் நடந்தது. அது சாமானியமானதல்ல. அது மாத்திரம் நடந்திருக்குமானால் விபரீதமாகத்தான் முடிந்திருக்கும்" என்று சொல்லும் பொழுதே அவர் முகத்தில் ஒருவித பயந் தோன்றிற்று. உடனே அதிக மெதுவாய் ஹண்டர் முகத்தண்டை வந்து, "என்னையும் கெடுத்து, என் மானத்தையுங் கெடுத்து, என்னை அடியோடு தொலைத்து விடுவதற்காகச் சிலர் சேர்ந்து சதியாலோசனை செய்துகொண்டிருக்கின்றார்கள்" என்றான்.

"ஆ! அப்படியா?" என்று ஹண்டர் பெருமூச் செறிந்தான்.

"ஆனால், அப்படித்தான் என்று உறுதியாகச் சொல்லி விடுவதற்குமில்லை. ஏனெனில், எனக்குத் தெரிந்தமட்டில், எனக்கு இந்த உலகத்தில் விரோதியென்பவனே கிடையான். சுவப்பனத்திற்கூட நான் யாருக்கும் தீங்கு நினைத்ததில்லை. அப்படியிருக்கிறபோது, எனக்கு விரோதியாக ஒருவன் இவ்வுலகத்திலிருக்க மாட்டான் என்று சொல்லுவதில் என்ன ஆச்சரியமிருக்கின்றது? இருந்தாலும் நேற்றிரவில் நடந்ததைப் பார்க்கும்போது விரோதிகள் இருக்கிறார்க ளென்றுதான் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது."

"தயைசெய்து என்ன நடந்தது, சொல்லும்."

"நான் இராத்திரி வேளைகளில் பணிப்பெண்களில்லாமல் தனியே தூங்குவதில்லை யென்று சொல்லியிருக்கிறேனே. நேற்றிராத்திரி தான் நான் முதன்முதலில் பணிப்பெண் இல்லாமல் இங்கே தூங்கினேன். எனக்குத் தேகம் கொஞ்சம் அனுகூலமாய் இருந்தபடியால் துணை வேண்டாமென்று சொல்லி யனுப்பிவிட்டேன். ஆனால், ஒரு விடிவிளக்கு மாத்திரம் எரிந்துகொண்டிருந்தது. விடியற்காலம் இரண்டுமணி யிருக்கலாம், கொஞ்சம் கண்ணயர்ந்தேன். உடனே ஒரு சத்தங்கேட்டு விழித்துக்கொண்டேன். முதலில் அந்தச் சத்தமானது எலி பலகையைக் கறண்டுகிற சப்தம் போலிருந்தது. அப்படித்தா னிருக்குமென்று கருதிக் கொஞ்ச நேரம்வரையில் நான் அச் சத்தத்தை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தேன். வரவர அச்சத்தம் பலப்பட்டது. கவனித்துக் கேட்டபோது இரும்பு முதலிய லோகசம்பந்தமான ஒரு ஆயுதத்தின் சப்தம்போலத் தோன்றிற்று. நான் திடுக்கிட்டெழுந்து உட்கார்ந்தேன். அப்பொழுதுதான் அந்தச் சத்தம் இன்னதென்று புரிந்தது. முதலில் எலி கறண்டுவதுபோலக் கேட்டசத்தம் திருப்புளியால் கதவைத் தொளைத்த சத்தமென்றும், பிறகு இருப்புத்தாழ்க்கோலை ஒருபுறமாகத் தள்ளிய சத்தமென்றும் அறிந்துகொண்டேன். பிறகு பத்து நிமிஷம்வரையில் ஒருவித சப்தமும் கேட்கவில்லை. முதலில் உண்டாகிய சப்தத்தைக்கேட்டு நான் விழித்துக்

கொண்டேனு இல்லையா என்பதைப் பார்ப்பதற்காகக் கொஞ்ச நேரம் சும்மா இருந்திருக்கிறன்போலிருக்கிறது. அதன் பின்னர் ஜன்னற்கதவு மெதுவாகத் திறக்கப்பட்டதுபோல கிறீச் என்று ஒரு சத்தங் கேட்டது. எனக்குப் பயம் உண்டாகிவிட்டது. சரே லெனப் படுக்கையைவிட் டெழுந்திருந்து ஜன்னற்கதவுகளை யெல்லாம் திறந்தேன். ஒருவன் ஜன்னலடியிற் குனிந்துகொண்டே யோடினுன். அவன் மின்னலைப்போலப் பளிச்சென்று மறைந் தோடி விட்டபடியால் அவனது அங்கஅடையாளங்களைப் பார்க்க முடியவில்லை. அவன் ஏதோ முகத்தைமறைத்து முக்காடுபோட்டுக் கொண்டிருந்த மாதிரியாகத் தோன்றிற்று. சாயத்தைத் தடவிக்கொண்டு வந்திருந்தாலு மிருக்கலாம். நிச்சயம் சொல்ல முடியவில்லை. அவன் தன் கையில் ஒரு கத்தியை வைத்துக் கொண்டிருந்தானென்பதை மாத்திரம் நான் நிச்சயமாய்ச் சொல்ல முடியும். கத்தியும் பயங்கரமாகப் பெரிதாயிருந்தது. அவன் ஓடுவதற்காகத் திரும்பினபொழுது அக்கத்தி பளபள வென்று என் கண்ணுக்கு நன்ருகத் தெரிந்தது."

"இது நிரம்பவும் விசித்திரமாயிருக்கிறது! பிறகு நீர் என்ன செய்தீர்?" என்று ஹண்டர் கேட்டான்.

"நான்மாத்திரம் தேக அசௌக்கிய மில்லாதவனுயிருந்திருக் கும்பக்ஷத்தில் ஜன்னல் வழியாகவே ஒரே குதியாய்க் குதித்தோடி அந்த அயோக்கியனை அப்போதே பிடித்திருப்பேன். தேகத்தில் பலம் இல்லாததனுல் நான் ஒன்றுஞ்செய்யமுடியவில்லை. மணியை அடித்து வீட்டிலுள்ளவர்களை எல்லாம் எழுப்பினேன். எல்லாரும் மேன்மாடியில் படுத்திருந்தபடியால், சமையலறையில் அடிக்கும் மணிச்சத்தத்தைக் கேட்டு எழுந்திருக்கக் கொஞ்சம்நாழிகையாய் விட்டது. நான் பின்னும் பெரிய கூச்சலிட்டேன். உடனே வெளி யறையில் படுத்திருந்த என் மைத்துனராகிய ஜோஸப் ஹாரிஸன் என்பவர் ஓடிவந்து எல்லாரையும் உடனே எழுப்பிவிட்டார். பிறகு ஜோஸப் என்பவரும் என் குதிரைக்காரனுமாக மலர்ப் பாத்தியிலடித்தட மிருக்கக்கண்டு அதைத் தொடர்ந்து போனுர்கள். தறையெல்லாம் கெட்டியாய் இருந்தபடியால் கொஞ்சதூரத்திற் கப்புறம் அத்தடங் காணப்பட வில்லை யென்று திரும்பிவிட்டார்

கள். ஆனால், சாலையோரமாக இருக்கும் எங்கள் வீட்டு மரவேலி யைத் தாண்டிக் குதித்திருப்பதாகவும், அப்போது கால்வைத்த இடம் முறிந்து கிடப்பதாகவும் சொன்னார்கள். தாங்கள் வந்த பிறகு தங்களோடு யோஜனை பண்ணிக்கொண்டு ஒன்றைச் செய் யலாமென்றெண்ணி, நான் இந்த விஷயத்தைப் போலீஸுக்கு அறிவிக்காமல் இருக்கிறேன்.''

பெர்ஸிவல் சொல்லிவந்த இந்த விருத்தாந்தமானது ஹண் டருடைய மனதை முற்றிலுங் கவர்ந்து விட்டதுபோலத் தோன் றிற்று. அவன் சரேலென வெழுந்திருந்து அடங்காத ஒருவித மெய்ப்பாட்டுடன் தன் கைகளிரண்டையும் பின்புறமாகக் கட்டிக் கொண்டு அவ்வறையில் அங்குமிங்கும் உலாவினான்.

"'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்றபடி கஷ்டமெல்லாம் ஒன்று சேர்ந்துதான்வருகிறது" என்று பெர்ஸி வல் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு சொன்னான்.

"விதியையும் மதியால் வென்று விடலாமென்று சொல்வ துண்டு. அதைரியப்படாமல் நம்மாலியன்றதை நாம் பார்ப்போம். அப்புறம் தெய்வ சங்கற்பம் இருக்கவே இருக்கிறது. அதற்காக இப்போது முதற்கொண்டே விசாரப்படுவார்களோ? நல்லது, பெர்ஸிவல்! நீர் என்னோடு தோட்டம் வரையிலும் வரமுடி யுமோ?"

"வரமுடியாமலென்ன, வருகிறேன். எனக்கும் கொஞ்சம் வெயில்வேண்டி யிருக்கிறது. ஹாரிஸனையும் அழைத்துக்கொண்டு வருகிறேன்."

"நானும் வருகிறேன்" என்று அன்னியும் சொன்னாள்.

"கூடாது. ஒருவரும் இங்கு வரக்கூடாது. நீர் இப்போ திருக்கிற இடத்திலேயே இருக்கும்படி பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று ஹண்டர் சொன்னான்.

அந்த இளமடந்தை சிறிது அதிர்ப்தியுடன் முன்பு தானி ருந்த இடத்திற்போய் உட்கார்ந்தாள். ஜோஸப் மாத்திரம் எங்க ளோடு வந்து சேர்ந்துகொண்டார். நாங்கள் நால்வரும் ஜன்ன லின் வெளிப்புறமாக வீட்டைச் சுற்றிலும் பார்த்துக்கொண்டு வந்

தோம். அவர்கள் கூறியபடி மலர்ச்செடிகளின் பாத்தியில் அடிச்சுவடுகள் அங்குமிங்கும் பட்டும் படாததுமாய்க் காணப்பட்டன. ஹண்டர் அவ்வடித்தடங்களைக் குனிந்து உற்றுப்பார்த்து எழுந்திருந்து எங்களைநோக்கி, "யார்தாமாகட்டும்; இந்த அடித்தடங்களைக்கொண்டு எதுவும் கண்டுபிடிக்க முடியாது. நல்லது, நாம் வீட்டைச்சுற்றிவந்து, திருடன் எல்லா அறையையும் விட்டு இந்த அறையைக் குறிப்பிட்டு வந்ததற்குக் காரண மென்னவென்று பார்ப்போம். புத்தகசாலை, சாப்பாட்டுக்கூடம் இவற்றினுடைய ஜன்னல்கள் பெரியனவாயிருப்பதால் திருடனுக்குச் சௌகரியமாயிருக்குமே. என் அவ்வழியாக நுழையவில்லை?" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் ஹாரிஸன் என்பவர், "அந்த ஜன்னல்கள் சாலையிலிருந்து பார்த்தால்கூட நன்றாய்த் தெரியுமே" என்று சொன்னார்.

"சரியான காரணந்தான். இதோ இங்கொரு கதவிருக்கிறதே. இதன்வழியாகக் கூடப் போயிருக்கலாமே? இந்த வாசற்படி எதற்காக ஏற்பட்டிருக்கிறது?"

"வியாபாரிகளெல்லாம் இவ்வழியாகத்தான் வருவது வழக்கம். இராக்காலங்களில் உள்ளே பூட்டுப்போட்டுப்பூட்டிவிடுவார்கள்."

"இந்த மாதிரியான சப்தம் இதற்குமுன்பு எப்போதாவது கேட்டிருக்கிறதா?"

"கேட்டதேயில்லை" என்று பெர்ஸிவல் பதில் சொன்னான்.

"திருடன் வரும்படியாக ஏதாவது விலையுயர்ந்த பொருள் இருக்கிறதோ?"

"அன்னிதான் விலையுயர்ந்தபொருள் மற்றெதுவும் இல்லை."

இவ்விதம் பேசிக்கொண்டே அவ்வீட்டைச் சுற்றிலும்வந்துகொண்டிருக்கையில், ஹண்டர் திடீரென்று ஜோஸப் ஹாரிஸனைப் பார்த்து, "திருடன் எங்கேயோ வேலியைத்தாண்டி யோடின அடையாளம் இருக்கிறதென்றீர்களே. அதைப் பார்க்கலாம் வாருங்கள்" என்றான்.

ஹாரிஸன் எங்களை அந்த இடத்திற்கு அழைத்துக்கொண்டு போய் வேலி முறிந்திருப்பதைக் காட்டினார். அந்த வேலியில்

முறிந்துபோயிருந்த மரத்துண்டு ஒன்று உட்புறமாய்த் தொங்கிக் கொண்டிருந்தது. ஹண்டர் அதைக் கையிலெடுத்துக் கவனமாய்ப் பார்த்தான்.

"இது நேற்றைத்தினம் ஒடிந்திருப்பதாகவா நினைக்கிறீர்கள்? நெடுநாளைக்குமுன் ஒடிந்திருப்பதாகத் தோற்றவில்லையா?" என்று கேட்டான்.

"நேற்று ஒடிந்திருப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது" என்று ஹாரிஸன் பதில் சொன்னார்.

"தவிர, வேலிக்கு அந்தண்டைப் புறமாய்த் திருடன் குதித்தோடியிருப்பதாக அடையாளமொன்றுங் காணப்படவில்லை. ஆதலால் இதிலொன்றும் பிரயோஜனப்படாது. திரும்பவும் படுக்கையறைக்கே போவோம் வாருங்கள். அங்கேபோய் மற்றைய விஷயங்களைப் பேசிக்கொள்ளலாம்" என்றான்.

"பெர்ஸிவல் தமது மைத்துனராகிய ஜோஸப் ஹாரிஸன் என்பவரது தோளிற் சாய்ந்துகொண்டு மெதுவாக நடந்துவந்தார். ஹண்டரோ வேகமாய்க் குறுக்கே பாய்ந்துசெல்ல, நானும் அவனும் அவர்கள் வருவதற்கு முன் நெடுநேரம் முன்னதாகவே படுக்கையறையின் ஜன்னலண்டை போய்விட்டோம். அந்த ஜன்னல் திறந்திருந்தது. அதன் பக்கத்தில் ஹண்டர் நின்றுகொண்டு "அன்னி! நான் சொல்லுகிறபடி கேள். நீர் இப்பொழுதிருக்குமிடத்திலேயே இன்று பகல்முழுவதும் இருக்கவேண்டும். என்ன காரணத்தை முன்னிட்டும் இந்த இடத்தைவிட்டு ஒரு நிமிஷங்கூட அப்புறம் போகக்கூடாது. நீர் இன்று பகலெல்லாம் இந்த இடத்திலிருக்கவேண்டியது நிரம்பவும் முக்கியமானது" என்று சொன்னான்.

இதைக் கேட்டு அம் மடமங்கை மிக்க ஆச்சரியத்துடன், "ஹண்டர்! நீர் இருக்கச் சொன்னால் இருக்கத் தடையில்லை" என்று சொன்னாள்.

"இராத்திரி நீர் படுக்கப் போம்போது இந்த அறையின் கதவை வெளிப்புறமாகப் பூட்டிவிட்டுத் திறவுகோலை நீரே எடுத்துக்கொண்டுபோம். நான் சொன்னபடி தவறாமற் செய்வீரா?"

"பெர்ஸிவல் என்ன செய்யப் போகிறார்?"

"அவர் என்னோடுகூட லண்டனுக்கு வரப்போகிறார்."

"அப்படியானால், நான் மாத்திரமா தனியே இங்கேயிருக்க வேண்டும்?"

"பெர்ஸிவலின் நன்மைக்காகத்தான் நான் உம்மை இங்கே இருக்கச் சொல்லுகிறேன். நீர் இங்கே இருந்துதான் ஆகவேண்டும். என்ன சொல்லுகிறீர்? சீக்கிரம்."

அந்தப் பெண்மணி, "சரி, தாங்கள் சொல்லியபடியே செய்கிறேன்" என்று தலையை யசைக்கவும் மற்றிருவரும் வந்துவிட்டார்கள்.

"அன்னி! நீயேன் அங்கேயே அடைந்துகிடக்கிறாய்? இப்படி சூரிய வெளிச்சத்தில் வந்திருக்கக்கூடாதா?" என்று அவள் சகோதரராகிய ஹாரிஸன் என்பவர் சொன்னார்.

"என்னத்திற்கு? வேண்டாம். இங்கேயே யிருக்கிறேன்; எனக்குக் கொஞ்சம் தலைவலியாய் இருக்கிறது. ஜோஸப்! இந்த அறையிலிருந்தால் குளிர்ச்சியாயும் அனுகூலமாயுமிருக்குமென்று நம்புகிறேன். வெய்யில் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது. இங்கேயிருக்கிறேன்" என்றாள்.

இதற்குள், பெர்ஸிவல் ஹண்டரைப் பார்த்து, "ஹண்டர்! இனிமேல் என்ன செய்யப் போவதாகத் தீர்மானித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"நல்லது, இம்மாதிரியான சில்லறை விஷயங்களைக் கவனித்துக்கொண்டு முக்கியமான விஷயத்தை நாம் விசாரியாமல் விட்டுவிடுவது உசிதமல்ல. எங்களோடுகூட நீரும் லண்டன் வரை வரக்கூடுமானால் எனக்குப் பெரிய உதவியாய் இருக்கும்."

"இப்போதே திடீரென்று வரவேண்டுமா?"

"இப்படியே வரவேண்டாம். உம்முடைய மனைவியிடத்திற் சொல்லி விடை பெற்றுக்கொண்டு ஒரு மணி அவகாசத்திற்குள் வந்தாற் போதுமானது."

"எனக்கு உடம்பும் இப்போது கொஞ்சம் அனுகூலமாய்த் தானிருக்கிறது. முன்னத்தனை பலஹீனமில்லை. நான் வருவ

தனுல் உங்களுக்கு ஏதாவது சாதகம் உண்டாகக் கூடுமானுல் என்னுல் வாத்தடையில்லை. இப்படியே வேண்டுமானுலும் வருகிறேன்."

"பயனில்லாமலா கூப்பிடுவேன். நீங்கள் வருவதனுல் அநேகம் காரியங்களுக்கு அனுகூலமுண்டு."

"ஒருவேளை, ராத்திரி அங்கே தங்கும்படியாய் இருக்குமோ ?"

"அதைத்தான் நான் இப்போது சொல்ல வாயெடுத்தேன். அதற்குள்ளாக நீங்களே கேட்டு விட்டீர்கள்."

"எனக்கும் இங்கே தங்கப் பயமாயிருக்கிறது. நேற்றைக்கு வந்த பாதகன் இன்னும் வரக்கூடுமல்லவா? 'கள்ளனை குள்ளன் பாய்ந்தான்' என்ற கதையாக நான் அவனையேமாற்றி விடுகிறேன். வந்து வெறும் அறையைப் பார்த்துவிட்டுப் போகட்டும். ஹண்டர்! நாங்கள் உங்கள் மனுஷ்யர்கள். நீங்கள் எதைச் செய்யச் சொன்னுலும் செய்யத் தயாராயிருக்கிறோம். ஜோஸப்பும் என்னுடனே கூட வரலாமல்லவா? அவர் வந்தால் எனக்குச் சிறிது உதவியாயிருக்கும் என்றெண்ணுகிறேன்."

"அவர் எதற்காக? இதோ இருக்கிற என் சிநேகிதர் வெப்ஸ்டர் என்பவர் ஒரு பெரிய வயித்தியர். இவர் உம்மைப்பார்த்துக் கொள்வார். கூடுமானுல் இங்கேயே ஏதேனும் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு நாம் மூவரும் சேர்ந்துபோகலாம்."

ஹண்டர் சொல்லியபடியே எல்லாம் சரியானபடி ஏற்பாடாகிவிட்டது. சாப்பிடும் பொழுதுகூட ஹண்டரின் எச்சரிக்கையை நினைந்து அன்னியென்னும் அந்தப் பெண்மணி தன்னுல் அந்த அறையைவிட்டு வெளியே வர ஸாத்தியப்படாதென்று சொல்லிவிட்டாள். என்ன உத்தேசத்தோடு ஹண்டர் அவளை அந்த அறையிலேயே அடைத்துக் கிடக்கும்படி ஏற்பாடு செய்தானென்பது எனக்குப் புலப்படவில்லை. இதைவிட ஆச்சரியமாக அவன் மற்றொரு காரியமும் செய்தான். நாங்கள் மூவரும் ரயிலடிக்கு வந்து சேர்ந்தோம். லண்டன் போவதற்காகச் சீட்டுக்களையும் வாங்கிக்கொண்டு வண்டியிலேறினேம். வண்டி புறப்படுகிற சம

யத்தில் ஹண்டர் வண்டியை விட்டுக் கீழேயிறங்கி, "நான் இப்பொழுது உங்களோடு வரவில்லை" என்றான்.

"அப்படி என்ன காரியம் இங்கே யிருக்கிறது?" என்று கேட்டேன்.

"நான் இதைவிட்டுப் புறப்படுமுன் இரண்டொரு சில்லறை விஷயங்களைப் பார்த்துவிட்டு வரவேண்டியிருக்கிறது. பெர்ஸிவல் இங்கே யில்லாதிருப்பது சில அம்சங்களில் எனக்குச் சாதகமாயிருக்கும். வெப்ஸ்டர்! நீங்கள் லண்டன்போய்ச் சேர்ந்ததும் நேரே இவரை என் வீட்டுக்கழைத்துக்கொண்டுபோய்ச் சாப்பாடு படுக்கை முதலிய சௌகரியங்களுக்குச் சிறிதும் குறைவில்லாமற் பார்த்துக்கொள். நல்லவேளை, நீங்களிருவரும் பள்ளிக்கூடத் தோழர்களாதலின் பேச்சிற்கிடம் மிகுதியாய் இருக்கும். நான் நாளைத்தினம் காப்பி சாப்பிடுவதற்கு வந்துவிடுகிறேன். வண்டி சரியாக 7-30. க்கெல்லாம் வாட்டர்லோ வந்துவிடுகிறது. அதில் வந்து சேருகிறேன்" என்றான்.

அப்போது பெர்ஸிவல் கொஞ்சம் முக வாட்டத்துடன், "ஏதோ லண்டன் பட்டணத்திற் சில விஷயங்கள் விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டி யிருக்கிறது என்றீர்களே?" என்று சொன்னான்.

"அதை நாளைத்தினம் பார்த்துக்கொள்ளலாம். இன்றைத் தினம் நான் இங்கேயிருந்து சில முக்கியமான விஷயங்களைக் கவனிக்கவேண்டி யிருக்கிறது."

"நாளைத்தினம் சாயங்காலம் நான் தவறாமல் வந்துவிடுவேனென்று பிரியார்பிரே (Briarbrae) க்குப்போய்ச் சொல்லிவிடுங்கள்" என்றுவண்டி பிளாட்பாரத்தை (Platform) விட்டு நகர்ந்ததும் பெர்ஸிவல் சொன்னான்.

"ஏது? நான் அநேகமாய் அங்கேபோகமாட்டேன்" என்று சொல்லிச் சந்தோஷமாகத் தன் கையைக்காட்டி, "போங்கள், நான் நாளை அவசியம் வந்து சேருகிறேன்" என்றான்.

வண்டிபோகும்போது நானும்பெர்ஸிவலும்அந்தக்கேசைப் பற்றியே பேசிக்கொண்டு போனோம். ஆனால், எங்களில் ஒரு

வருக்காவது ஹண்டர் ஏன் நின்றுவிட்டானென்கிற விஷயம் புரியவில்லை.

"நேற்றைத்தினம் நடந்த கல்லலைப்பற்றித் துப்புவிசாரிப்பதற்காகத் தங்கிவிட்டார்போலிருக்கிறது. ஹண்டருக்கு அதன் யதார்த்த விஷயம் இன்னதென்று இன்னும் புலப்படவில்லை. அவர் திருடன் வந்திருக்கிறனென்று நினைத்துக் கொண்டிருக்கிறார். வந்தவன் கேவலம் திருடனல்லவென்று எனக்குத் தோன்றுகிறது" என்று பெர்ஸிவல் சொன்னான்.

"அப்படியானால், உன்னுடைய அபிப்பிராயம் என்ன?" என்று நான் கேட்டேன்.

"வெப்ஸ்டர்! இவன் மூளை கலங்கிப் பிதற்றுகிறான் என்று வேண்டுமானாலும் நினைத்துக்கொள். நான் என் மனத்திலிருப்பதைச் சொல்லிவிடுகிறேன். நேற்றைத்தினம் வந்தவன் என்னைக் கொல்வதற்காகத்தான் வந்திருக்கிறான். நான் மந்திராலோசனை சபையில் என் மாமனுக்கு வேண்டியவனயிருந்து வேலை செய்கிற விஷயத்தில் சிற்சிலருக்குச் சம்மதமில்லை. அந்த விரோதத்தை வைத்துக்கொண்டுதான் நேற்றைத்தினம் வந்திருக்கிறான். நீயே யோஜித்துப்பார். திருடனுக இருந்தால் பணங்காசு வைத்திருக்கிற இடத்தை விட்டுவிட்டுப் படுக்கையறைக்குட்பிரவேசிப்பதற்கு என்ன காரணம்? தவிர, கையில்கத்தியை வைததுக்கொண்டிருப்பானேன்?" என்றான்.

"கத்தியைத்தான் வைத்துக் கொண்டிருந்தானென்று நிச்சயமாய்ச் சொல்ல முடியுமா?" என்றேன்.

"கத்தியேதான் வைத்துக்கொண்டிருந்தான். நான் நன்ருய்ப் பார்த்தேன்" என்றான்.

"அவ்வளவு விரோதம் உன்னிடத்தி லேற்படுவதற்குக் காரணமென்ன?" என்றேன்.

"அதுதான் எனக்குப் புரியவில்லை" என்றான்.

"பெர்ஸிவல்! நீ கொண்ட அபிப்பிராயப்படியே ஹண்டரும் கொண்டிருக்கும் பக்ஷத்தில் இப்போது அவன் செய்கிற முயற்சிகளெல்லாம் பயன்படும். அப்படிக்கின்றி நேற்றிரவு வந்

தவனைத் திருடனென்பதாக மதித்திருக்கும் பக்ஷத்தில், ராஜாங்க உடன்படிக்கையைக் கண்டு பிடிப்பதற்காக அவன் செய்யும் பிரயத்தனங்களெல்லாம் முடிவில் அவலமாய்ப் போய்விடுமல்லவா. நிற்க, உனக்கு இரண்டு விரோதிகள் உயிரையும் பொருளையும் அபகரிப்பதற்காக இருக்கிறார்களென்பது என் புத்திக்கேற்க ஸங்கதமாகத் தோற்றவில்லை."

"திருடனைக் கண்டுபிடிப்பதாக இருந்தால் ஹண்டர் பிரியார் பிரே போகமாட்டாரா? நான் சொன்னதை அவர் நம்பியிருக்கிறபடியினால்தான் அவர் அங்கே போகவில்லைபோல் இருக்கிறது. எப்படியிருந்தாலும் சரி, ஹண்டரின் முயற்சி பயன்படுமென்று தோன்றவில்லை."

"ஹண்டரை இன்று நேற்றல்ல, நெடுநாளாகவே நான் அறிவேன். அவன் சரியான காரணங்களைக் கொண்டுதான் ஒரு காரியத்தில் பிரவர்த்திப்பான். அவன் செய்யும் முயற்சிகள் எனக்குத் தெரிந்தவரையில் வீண் போகவில்லை. ஒரு விஷயம் மாத்திரம் நிச்சயம். ஹண்டர் இவ்வளவு தூரம் சிரமப்படுகிறபடியால் கேசு எப்படியும் வெளிப்பட்டுவிடும். இதை நீ நிச்சயமாய் நம்பியிருக்கலாம்."

இவ்விதம் பேசிக்கொண்டிருக்கும்போதே வண்டி வாட்டர்லோ (Waterloo) வந்து சேர்ந்தது. நேரே ரொட்டிக்கிடங்குத் தெருவுக்குப் போனோம். எனக்குச் சிரமமதிகமாயிருந்தபடியால் முன்னடியே படுத்துக்கொண்டால் நல்லதென்று தோன்றிற்று. பெர்ஸிவலோ, இயற்கையிலேயே பயங்கொள்ளியாகையால், ஹண்டர் என்ன சொல்வனோ, என்று விசாரப்பட்டுக்கொண்டிருந்தான். நான் அதை எப்படியாவது போக்கடிக்க வேண்டுமென்று ஆப்கானிஸ்தானம் இட்டிலி முதலிய இடங்களில் நான் போயிருந்த காலத்தில் நான் கண்டும் கேட்டுமுள்ள அநேக அதிசயமான விஷயங்களையெல்லாம் சொல்லிப் பார்த்தேன். என்ன சொல்லியும் பயன்படவில்லை. திரும்பவும் திரும்பவும், 'கேசு என்னஆகும்? ஹண்டர் காலையில் வந்துவிடுவாரோ? பத்திரம் அகப்படாமற்போனால் நான் செய்வதென்ன? அன்னி தனியேயிருக்கிறாளே, அவளுக்கு ஏதாவது தீங்கு வந்துவிடுமோ? என் மாமன் இப்போது

என்ன செய்துகொண்டிருப்பார்?' என்று இடையிடையே கேட்கத்தொடங்கிவிட்டான். என்ன சொல்லியும் அவன் தேறவில்லை. என்னையுந் தூங்கவொட்டாமல் செய்து பன்னிப்பன்னி இவ்விஷயத்தையே பேசிக்கொண்டிருந்தான். நான் தூங்கவும் முடியாமல், விழித்திருக்கவும் மாட்டாமல் இரவெல்லாம் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தேன். ஒரு நிமிஷம் ஒரு யுகமாகத் தோன்றிற்று.

"ஹண்டரிடத்தில் உனக்கு நல்ல நம்பிக்கையுண்டுபோல் இருக்கிறது. அதனால்தான் அவர் எதைச் செய்தாலும் சரியென்று சொல்லுகிறாய்" என்றான்.

"அவன் அநேக ஆச்சரியமான காரியங்களையெல்லாம் செய்திருக்கிறான். அதனால்தான் எனக்கு அவனிடத்தில் நம்பிக்கை" யென்றேன்.

"ஆனால் இந்தமாதிரி ஒன்றுமேபுரியாமலிருக்கிற கேசு ஏதாவது அவரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதோ? இராதென்று நினைக்கிறேன்" என்றான்.

"இந்த மாதிரியா? இந்தக் கேசில்தான் போதுமான சாக்ஷியங்கள் இருக்கின்றனவென்று ஹண்டர்சொல்லுகிறானே. இதைக்காட்டிலும் பெரிதாயும், முக்கியமானதாயும், எவ்விதசாக்ஷியமும் அநுமானமுமில்லாதிருப்பதாயும் உள்ள எத்தனையோ கேசுகளை ஹண்டர் கண்டுபிடித்திருக்கிறான். ஹண்டரால் கண்டுபிடிக்கமுடியாத கேசும் உலகத்திலிருக்கிறதா என்ன?" என்றேன்.

"வெப்ஸ்டர்! நீயே இவ்வளவு உறுதியாய்ச் சொல்லுகிறபோது நான் ஏன் அவநம்பிக்கைப்படவேண்டும்? உன்னுடைய அபிப்பிராயத்தில் அவர் இந்தக் கேசைக் கண்டுபிடித்துவிடக் கூடுமென்றுதானே தோன்றுகிறது? அவர் இந்தக் கேசைப்பற்றி உன்னிடத்தில் என்ன சொன்னார்?" என்று கேட்டான்.

"அவன் என்னிடத்தில் ஒன்றுமே சொல்லவில்லை" என்றேன்.

"அதுதான் கெடுதல்" என்றான்.

"எனக்கு அப்படித் தோற்றவில்லை. காரியம் கடைசிவரையில் நிறைவேறினால்தான் அவன் நிச்சயம் என்றுசொல்வான். அது

ஹண்டருக்கு வழக்கம். இடையில் நமக்குத் தைரியமுண்டாகும் படி அவன் எதையுமே சொல்லமாட்டான். இப்போதிருக்கிற மாதிரியைப்பார்த்தால் கேசு கண்டுபிடிக்கப் படலாமென்றுதான் நான் நினைக்கிறேன். காரியம் பிரயோஜனப்படாதென்றுநினைத் திருக்கும் பக்ஷத்தில் ஹண்டர் இன்று அங்கே தங்கியிருக்க மாட்டான். ஏதோ பிரபலமான அனுமானத்தை வைத்துக் கொண்டு தான் அவன் வேலைசெய்கிறான். எல்லாம் நாளை 8-மணிக்குள் தானே வெளிச்சமாய்விடுகிறது. அதற்குள்ளாக நாம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி நெஞ்சைப் புண்படுத்திக் கொள்வானேன். சுவஸ்தமாய்ப் படுத்துத் தூங்கு. விடிந்து பார்த்துக்கொள்ளலாம்" என்றேன்.

நான் இவ்வளவு தூரம் சொன்னதின்பேரில் அவன் சரிதான் என்று ஒப்புக்கொண்டு படுக்கப்போனான். ஆனால், அவன் இருந்த மாதிரியால் அவன் அன்றிரவு கண்ணைக்கூடக் கொட்டமாட்டானென்பதை நான் தெரிந்துகொண்டேன். பெர்ஸிவல் படுத்துக் கொண்டபிறகு நானும் படுத்துக்கொண்டேன். தூக்கம் வரவில்லை. பெர்ஸிவல் கேசைப்பற்றிய யோஜனை அதிகமாய்விட்டது. அப்படியிருக்குமா, இப்படியிருக்குமாவென்று நூறுவிதமாக அந்தக் கேசைப்பற்றி ஆலோசனைசெய்துபார்த்தேன். ஒருவிதத்திலும் எனக்குத் தெளிவு பிறக்கவில்லை, ஹண்டர் வோக்கிங் ஸ்டேஷனில் தங்குவதற்கு என்ன காரணம்? அன்னி யென்பவளைப் பகல் முழுதும் ஒரு அறையிலேயே அடைத்துக் கிடக்கும்படி சொன்னதற்கு என்ன அபிப்பிராயம்! பிரியார்பிரே (Briarbrae) யிலுள்ளவர்களிடத்தில் செய்தி சொல்லும்படி பெர்ஸிவல்சொன்னதற்கு நான் 'அங்கே போகமாட்டேன்' என்று ஹண்டர் என்ன எண்ணத்தை வைத்துக்கொண்டு சொன்னான்? என்று இக்கேள்விகளுக்குச் சமாதானத்தைப்பார்த்துக்கொண்டு, ஒன்றும்சரிப்பட்டு வாராமையால் நெடுநேரம்வரையில் படுக்கையில் புரண்டுகொண்டேயிருந்து மயங்கித் தூங்கிவிட்டேன்.

காலையில் நான் படுக்கையைவிட் டெழுந்திருக்கும்பொழுது மணி 7-அடித்தது. உடனே பெர்ஸிவல் படுத்துக்கொண்டிருந்த அறைக்குப்போய் அவனைப் பார்த்தேன். அவன் என்னைக் கண்ட

தும் வேறென்றும் சொல்லாமல், "ஹண்டர் இன்னும் வரவில்லையே?" என்று கேட்டான்.

"வருகிறேனென்று சொல்லி யிருக்கிறபடியால், கட்டாயம் வந்தே தீருவான். ஒரு நிமிஷம் முந்தியாவது பிந்தியாவது இல்லாமல் சொன்னநேரத்திற்குச் சரியாக வந்துவிடுவான். இன்னும் எட்டடிக்கவில்லை" யென்றேன்.

நாங்கள் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கும்போது ஒருவண்டி எங்கள் வாயிலில் வந்து நின்றது. அதினின்றும் ஹண்டர் இறங்கினன். நாங்கள் உபர மெத்தையின்மீதிருந்து பார்க்கும்பொழுது அவனுடைய இடது கையில் துணியாற் கட்டப்பட்ட கட்டொன்றிருந்தது. அவன் முகமும் சுமுகமாக இல்லை. கடுகடுப்பாகவும் வெளுத்ததாகவு மிருந்தது. அவன் வீட்டில் நுழைந்து கொஞ்சநேரஞ் சென்ற பிறகுதான் மெத்தையின்மீது வந்தான்.

"ஏதோ அடிபட்டவர்போற் காணப்படுகிறரே" என்று பெர்ஸிவல் கேட்டான்.

"ஆம், எனக்கும் அப்படியேதான் தோன்றுகிறது. தவிர காரியமும் அனுகூலமாயிருப்பதாகத் தெரியவில்லை. இங்கேதான் தப்புக்களிருப்பதாக நினைத்து ஹண்டர்வந்திருக்கிறன்போலும்" என்று சொன்னேன்.

"சரிதான், அப்படியுமிருக்கலாம்" என்றுபெர்ஸிவல் தலையை யசைத்தான்.

இதற்குள் ஹண்டர் உயர வந்து விட்டான். அவன் வந்ததும் நான் அதிக ஆவலுடன், "ஹண்டர்! காயமொன்று மில்லையே?" என்று கேட்டேன்.

"இம்! அல்பவிஷயம். கொஞ்சமாகச் சிராய்த்தது. அதுவும் என்னுடைய அஜாக்கிரதையினல்தான் உண்டாயிற்றென்று சொல்லவேண்டும். இதைப்பற்றியென்ன? என்று சொல்லி எங்களுக்கு மரியாதை செய்யும் பாவனையாகச் சிறிது தலையையசைத்துவிட்டுப் பெர்ஸிவலைப் பார்த்து, "பெர்ஸிவல்! இதுவரையில் நான் கண்டுபிடித்த கேசுகளுக்குள்ளெல்லாம் உம்முடைய கேசொன்றுதான் நிராதாரமாய் மகா கடினமானதாக இருந்தது" என்றன்.

"உங்களாற் கண்டுபிடிக்க முடியாதென்றே நான் நினைத்திருந்தேன்" என்று பெர்ஸிவல் சொன்னான்.

"இதுவரையிலில்லாத ஆச்சரியமான அனுபவமாகத்தானிருந்தது. பெர்ஸிவல்! நீர் நினைத்தது சரியே."

"'நின் தோண்மேலடங்கிய அம்பேயென்னை யறிவித்தது' என்று ஒரு மகாகவி கூறியதுபோல, உன் கையிற் கட்டப்பட்டிருக்கிற கட்டே நீ வெகுதூரம் கஷ்டப்பட்டிருக்கிறாயென்பதைத் தெரிவிக்கின்றதே. நல்லது என்ன நடந்தது? விவரமாய்ச்சொல், கேட்போம்" என்றேன்.

"அவைகளெல்லாம் சாப்பாட்டிற்குமேல், உனக்கென்ன, வீட்டிலிருந்து தூங்கினவன் தானே? எதை வேண்டுமானாலும் கேட்பாய். நான் எவ்வளவு தூரம் பிரயாணம் வந்திருக்கிறேன் தெரியுமா? நல்லது, நான் வண்டிக்காரனுக்கு இனும் கொடுப்பதாகப் பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்திருந்தேனே, அதற்கொன்றும் பதில் வரவில்லையே? ஆனால், எல்லாத் தடவைகளிலுமா நம்முடைய ஒவ்வொரு குறியும் பலிக்கும்?" என்றான்.

இப்படி நாங்கள் வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கையிலேயே பரிசாரகன் காப்பி கொண்டுவந்தான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் மூன்று தாம்பாளங்களில் எங்கள் மூன்று பெயர்களுக்குமாக ஏதோ சிற்றுண்டி கொண்டுவந்தான். அத்தட்டுக்கள் சவுக்கங்களால் மூடப்பட்டிருந்தன. ஹண்டர் ஒரு தட்டை மிக்க ஆவலுடன் வாங்கித் திறந்தான். அதில் வாத்து முட்டைகள் இருந்தன. "பேஷ்! சமயத்திற்குத் தகுந்த ஆகாரம். வெப்ஸ்டர்! உனக்கென்ன?" என்று கேட்டான்.

"பிஸ்கோத்தும் பழங்களும்" என்றேன்.

"பெர்ஸிவல்! நீர் ஏன் ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை? அதோ இருக்கிறதே உங்களுடைய தட்டு. அதிலிருப்பது உங்களுக்குப் பிடிக்காவிட்டால், பிடிப்பதைச் சொல்லுங்கள், வரவழைக்கிறேன்" என்றான்.

"தங்களுடைய உபசாரமே போதுமானது. வேண்டாம். எனக்கு ஒன்றுமே வேண்டாம். எதுவும் எனக்கு இப்போது பிடிக்கவில்லை" யென்று பெர்ஸிவல் சொன்னான்.

"வேண்டியதைச் சாப்பிடுங்கள். வேண்டாததை யொதுக்கி விடுங்கள். அடியோடு வேண்டாமென்கிறீர்களே. நன்றாயிருக்கிறது!" என்று ஹண்டர் சொன்னான்.

"நிர்ப்பந்தம் செய்யாதீர்கள். வேண்டியிருந்தால் சாப்பிட மாட்டேனா? எனக்கு ஏதோ உடம்பு ஒரு மாதிரியாயிருக்கிறது. இல்லாவிட்டால் என்ன தடை? இவ்வளவு தூரம் சொல்லும்படி வைத்துக்கொள்வேனா?" என்று பெர்ஸிவல் கூறினான்.

"பிறகு உங்களுடைய இஷ்டம். எனக்காவது அதிலிருப்பதை யெடுத்துக்கொடுக்கக் கூடாதா? அதுகூடவா தேகத்துக்கு ஒத்துக்கொள்ளாது?" என்று ஹண்டர் விஷயமாய்க் கேட்டான்.

"எடுத்துக்கொடுக்கத் தடையில்லை. நீங்கள் சாப்பிட்டால் நான் சாப்பிட்டது போலத்தான்" என்று சொல்லிப் பெர்ஸிவல் தன்பக்கமாயிருந்த தாம்பாளத்தைத் திறந்தான். திறந்ததும், "ஆ" என்று ஒரு சப்தம் செய்துவிட்டு அந்தத் தாம்பாளத்திலிருந்ததைக் குறிப்பாக வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். அந்தத் தட்டின் மத்தியில் நீலவர்ணமுள்ள ஒரு பெரிய காகிதச் சுருள் இருந்தது. அதைப் பரமானந்தத்தோடு கண்ணிலொற்றிக்கொண்டான். மார்பிலணைத்துக் கொண்டான். ஆனந்த பரவசனாய் எழுந்து கூத்தாடினான். அவனது அக்காலத்துண்டாகிய மெய்ப்பாட்டை இன்னதென என்னால் கூறுதலரிது.

இழந்தமணி புற்றர வெதிர்ந்ததெனலானான்,
பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தான்,
குழந்தையை யுயிர்த்தமல டிக்குவமை கொண்டான்,
உழந்துவிழி பெற்றதொ ருயிர்ப்பொறையு மொத்தான்.

என்று ஒரு தெய்வக்கவிவாணர் கூறியதைத்தான் நாம் அவனுடைய மனநிலைமைக்கு ஒருவாறு ஒப்புக்கூறலாமே யன்றி வேறுவமை சொல்வதற்கில்லை. இங்ஙனம் சந்தோஷ முள்ளடங்காமல் மெய்ம்மறந்து கூத்தாடவே களைப்புமேலிட்டுப் பெர்ஸிவல் ஒரு நாற்காலியில் சித்திரம்போல அசைவறச் சாய்ந்துவிட்டான். பிறகு அவனுக்குக் களைப்பு மாற்றுவதற்கு நிரம்பவும் உபசாரம் செய்யவேண்டியதாய் ஏற்பட்டுவிட்டது.

கொஞ்சநேரங்கழித்து அவனுக்குப் பிரக்ஞை வரவும் ஹண்டர் அவனைத் தட்டிக்கொடுத்து, "திடப்படுத்திக் கொள்ளும். ஒன்றும் கிடையாதது கிடைத்துவிடவில்லையே? கெட்டுப்போனது தானே திரும்பக் கிடைத்திருக்கிறது. இதற்கு இப்படி மெய்ம் மறந்து கூத்தாடுவார்களோ?" என்றான்.

உடனே பெர்ஸிவல் ஹண்டருடைய கையை முத்தமிட்டு, "ஐயா! நீர் மகாராஜராக இருப்பீர். பகவான் உமக்கு ஆயுள் ஆரோக்கியம் ஐசுவர்யம் முதலிய எல்லா நன்மையையும் பூரணமாக அனுக்கிரகிப்பார். இந்தமட்டில் என் மானத்தைக்காத்து என்னை ரக்ஷித்தீர்களே" என்று கூறினான்.

"என்னுடைய மானமும் போகிறதாய்த்தா னிருந்தது. உம்முடைய கடமையை நீர் நிறைவேற்றுமற் போய்விட்டால் உமக்கு எவ்வளவு அவமானம் ஸம்பவிக்குமோ அதைக்காட்டிலும் நாறுமடங்கு அதிகமான அவமானம் நான் எடுத்தகேசைக் கண்டுபிடிக்காமற் போய்விடுவேனுனல் எனக்கும் ஸம்பவிக்கும். உயிரும் எனக்கு அப்பால் ஒரு துரும்புதான்" என்று ஹண்டர் சொன்னான்.

"உடனே பெர்ஸிவல் விலையுயர்ந்த அந்த உடன்படிக்கையை யெடுத்து உள் சட்டைக்குள் பத்திரமாய் வைத்துக்கொண்டான்.

"ஹண்டர்! ஏதடா இவன் சாப்பாட்டுவேளையில் கரடியை விட்டடிக்கிருனென் றெண்ணுதே. இந்த உடன்படிக்கை யெங்கேயிருந்தது? உனக்கு எவ்வாறு கிடைத்தது? கேட்டுத்தெரிந்து கொள்ளாதவரையில் என் வயிறு வெடித்துவிடும்போல் இருக்கிறது" என்று நான் கேட்டேன்.

"ஹண்டர் ஒரு கோப்பை காப்பியும் ஐந்தாறு முட்டைகளையும் சாப்பிட்டுவிட்டு ஒரு நாற்காலியி லுட்கார்ந்து அடியில் வருமாறு சொல்லத் தொடங்கினன்:—

"நான் உங்களை ரயிலிற் பிரயாணஞ் செய்தனுப்பிவிட்டு அந்த ஸர்ரே (Surrey) பக்கத்திலுள்ள மனோஹரமான இயற்கைக் காட்சிகளையெல்லாம் பார்த்துக்கொண்டே பக்கத்திலுள்ள அழகிய குக்கிராமமாகிய ரிப்ளீ (Ripley) என்னுமிடத்திற்குப்

போனேன். அங்கே ஒரு சத்திரத்திலிறங்கிக் காப்பிசாப்பிட்டு விட்டு இரண்டாந்தரத்துக்கும் கொஞ்சம் ஆகாரம் கையிலெடுத்துக்கொண்டு இருட்டினவுடன் வோகிங்கிக்குப்போய் உமது வீட்டுப் பக்கத்திலுள்ள சாலையை யடைந்தேன். அந்தச் சாலையில் ஜனப்பழக்க மடங்கினவுடன் உமது வீட்டு வேலியைத்தாண்டி உள்ளே நுழைந்தேன்."

"கேட்டுக் கதவு திறந்திருக்குமே?" என்று பெர்ஸிவல் கேட்டான்.

"திறந்திருந்தது. ஆனால், இம்மாதிரியான விஷயங்களிலெல்லாம் என் போக்குத் தனியாக இருக்கும். மூன்று சிந்தூர மரங்கள் சேர்ந்தாற்போல் நிற்கின்றனவே, அவற்றின் மறைவோடு ஒருவரும் காணாதபடி போனேன். அங்கிருந்து உம்முடைய படுக்கையறைப் பக்கமாக இருக்கும் பவளமல்லிகைச்செடி வரையிலும் தவழ்ந்து கொண்டே போனேன். இதோ என் காற்சட்டையின் முழங்கால் பக்கம் தேய்ந்து போயிருக்கிற மாதிரியையும் பாருங்கள். அந்தப் பவளமல்லிகைச் செடியின் மறைவில் ஒளிந்துகொண்ட வண்ணமாக மேல்நடக்கும் விஷயங்களைக் கவனித்தேன்.

"உமது ஜன்னலில் திரை போடப்படாதிருந்ததனால், அந்த அறையில் மேஜையின் பக்கமாக அன்னியம்மாள் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தது எனக்குத் தெரிந்தது. இரவில் பதினொன்றேகால் மணிக்கெல்லாம் அவள் தான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடிவிட்டுச் சாளரத்தின் கதவுகளையுஞ் சார்த்திக்கொண்டு படுக்கப்போனாள். அவள் அந்த அறையின் கதவைச் சார்த்தியதும், பூட்டில் சாவியை நுழைத்துத் திருப்பியதும் எனக்குக் காது கேட்டது."

"சாவியா?" என்று பெர்ஸிவல் கேட்டான்.

"ஆம். படுக்கப்போகும் பொழுது கதவை வெளியே பூட்டிட்டுத் திறவுகோலைக் கொண்டுபோகும்படி நான் அன்னிக்குச் சொல்லியிருந்தேன். அவள் நான் சொன்னவண்ணமே ஒவ்வொன்றையுந் தவறாது செய்தாள். அவளுடைய உதவிமாத்திரம் பூரணமாக எனக்கில்லாதிருந்திருக்கும் பக்ஷத்தில் இந்த உடன்படிக்

கைப்பத்திரமானது இப்போது உம்முடைய சட்டைப்பைக்குள் சேர்ந்திருக்கச் சிறிதும் நியாயமேயில்லை. இவ்விதம் அவள் வெளியே போகும்பொழுது அங்கே எரிந்துகொண்டிருந்த விளக்குக்களையும் அணைத்துப் போய்விட்டாள். நான் மட்டும் அந்தப் பவளமல்லிகைச் செடியண்டை பதுங்கிக்கொண்டிருந்தேன்.

"அப்போது என் மனதிலே இன்னவிதம் இருந்ததென்று இப்போது சொல்வது சாத்யமில்லை. ஆசை நாயகியின் வரவை நோக்கி வழிமேல் விழிவைத்துப் பதுங்கிக்கிடக்கும் சோரபுருஷன்போலவும், அறைகூவிவரும் சத்துருவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் ஒரு யுத்தவீரன்போலவும் இன்பமும் பயமுங் கலந்த உள்ளத்தனாய் நான் படுத்திருந்தேன். என்ன செய்வது? சிறிதும் தூக்கம் வரவில்லை. எடுத்த காரியம் பழுது போகாமல் முடியவேண்டுமே யென்ற கவலையினால் நான் மிக்க ஜாக்கிரதையோடிருந்தேன். பொழுதோ வளர்ந்துகொண்டிருந்தது. நரைத்தலைச் சங்கத்தின் உண்மையைக் கண்டுபிடிப்பதற்காக நாம் லண்டன் பாங்கில் பதுங்கிக்கொண்டிருந்த மாதிரியாக, வெப்ஸ்டர்! நான் சிறிதும் சந்தடிசெய்யாமல் பெட்டிப் பாம்புபோல் அந்தச் செடிமறைவில் உடம்பை வளைத்துக்கொண்டு படுத்திருந்தேன். ஏதேனும் காரியமிருந்தாலும் நாழிகையாவது தெரியாது. ஒரு வேலையுமில்லாமல் தன்னந்தனியே ஒரு செடியின்மறைவில் பதிவிருப்பதென்றால் அது எவ்வளவு கஷ்டமாயிருக்கும்? கடைசியாய் சுமார் 2-மணிக்கெல்லாம் ஒரு கதவின் தாழ்க்கோல் சத்தம் கிரீச் என்று கேட்டது. ஒரு நிமிஷத்திற்கெல்லாம் வேலைக்காரன் அறையைத் திறந்துகொண்டு ஜோஸப் ஹாரிஸன் வெளியே நிலாவெளிச்சத்தில் வந்தார்.

"ஜோஸப் ஹாரிஸனா?" என்று ஆச்சரியத்துடன் பெர்ஸிவல் கேட்டான்.

"அவர் வெறுந்தலையோடுதான் இருந்தார். ஆனால், ஒரு பெரிய கறுப்புப்போர்வைமாத்திரம் போர்த்துக்கொண்டிருந்தார். யாரேனும் வருவதாகத் தோன்றினால், அதனாலேயே சுலபமாய் முகத்தை மூடிக்கொண்டுவிடலாம். அப்படிப்பட்ட போர்வையுடன் சத்தங் கேளாதபடி சுவரின் நிழல்பக்கமாகவே மெதுவாக

முன்காலால் நடந்து ஜன்னலண்டையிற் போய் ஒரு ஆயுதத்தால் தொளைசெய்து தாழ்க்கோலைத் திருப்பினர். திருப்பிக் கதவை அகலத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார்.

"நான் பதுங்கிக்கொண்டிருக்கு மிடத்திலிருந்து பார்த்தால் அந்த அறைக்குள் நடப்பவைகளெல்லாம் நன்றாகத்தெரியும். அவர் உள்ளே போனதும் மேஜையின்மீதிருந்த விளக்கை யேற்றினர். பிறகு கதவின் பக்கமாக விரித்திருந்த ஜமக்காளத்தைப் புரட்டி அங்கிருந்த இந்தக் காகிதச் சுருளை யெடுத்தார். உடனே, அந்த ஜமக்காளத்தை முன்னிருந்தபடியே விரித்து, விளக்கையும் அணைத்து இருந்த இடத்தில் வைத்துவிட்டு வெளியே குதித்தார். இதற்குள்ளாக நான் ஜன்னலடியிற் போய்விட்டேனாதலால், அவர் குதித்ததும் நான் அவரைக் கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டேன்.

"உடனே அவர் தம் கையிலிருந்த கத்தியால்என்னைவெட்ட வந்தார். அப்பொழுது நான் அவரைப்பிடித்து இரண்டுதடவை கீழே தள்ளினேன். அப்பொழுது வெட்டின வெட்டுக்களுள் ஒன்றுதான் இது. அவர் தம்மாலானமட்டும் பார்த்தார். தப்பித்துக்கொள்ளமுடியவில்லை. பத்திரத்தைக் கொடாதபக்ஷத்தில் உயிருக்கே ஹானிவருமென்று சொன்னேன். அவர் பயந்து பத்திரத்தைக் கொடுத்துவிட்டு ஓடிவிட்டார். பத்திரம் கைக்குவந்ததும் நான் அவரோடு போராடுவதை நிறுத்தி அவரை விட்டுவிட்டு வந்தேன். இன்றுகாலையில், விஷயங்களையெல்லாம் நடந்தபடி ஒன்றுகூட விடாமல் துப்பறியும் இன்ஸ்பெக்டராகிய அந்த அட்கின்ஸனுக்குத் தந்திமூலமாய்த் தெரிவித்துவிட்டேன். அந்த இன்ஸ்பெக்டர் சுறுசுறுப்புடன் தம் பக்ஷியைப் பறந்துபோகவிடாமல் பிடித்துக்கொண்டால் நல்லது. பக்ஷி தந்திரமாய் அவர் வலையிற் சிக்கிக்கொள்ளாமல் ஓடிவிட்டாலும் நல்லதுதான். லார்டு ஹோல்டுஹர்ஸ்ட்டும், பெர்ஸிவனும் போலீஸ் கச்சேரிக்குப் போகாமல் இருக்கலாம்."

"ஆ! என்ன ஆச்சரியம்! நான் தவியாய்த்தவித்துக்கொண்டிருந்த இந்தப் பத்துவாரங்களாகத் திருட்டுப்போன இந்த உடன்படிக்கை நான் இருந்த அறையில் என் படுக்கையின் கீழே இருந்

திருக்கிறதா? என்ன அதிசயம் இது!" என்று பெர்ஸிவல் மூக்கில் விரலைவைத்து ஆச்சரியப்பட்டான்.

"ஆம்; உமது படுக்கையறையிலேதான் இருந்திருக்கிறது."

"ஜோஸப்பா! அவனா இதைத்திருடின சண்டாளன்? அவன் தானென்று நிச்சயமாய்த் தெரியுமா?"

"ஜோஸப்பின் அயோக்கியத்தனம் இவ்வளவு மட்டுமா? இன்று காலை நான் விசாரித்ததில், அவர் முன்னமேயே ஏதோ ஒருவியாபாரத்தில் தம்முடைய சொத்துக்களையெல்லாம் தோற்றவராம். எந்த அநியாயத்தைச் செய்தாவது இழந்த முதலைத் திருப்பிக்கொள்ள வேண்டுமென்று பிரயத்தனம் பண்ணிக்கொண்டிருக்கிறார். பிறர் எக்கேடு கெட்டாலும் கெடட்டும், எப்படியாவது தான் வாழ்ந்தால் போதுமென்பது அவருடைய தீர்மானமான அபிப்பிராயம். சுகாரியப் புலி. இவ்விதம் தந்நயம் பாராட்டித்திரிகின்ற அந்த ஜோஸப்புக்குச் சரியானபடி ஒரு சமயம் வாய்க்கவே, அவர் உம்முடைய மனைவியாகிய தமது சகோதரியினது க்ஷேமத்தையாவது, உமக்குண்டாகும் மானக்கேட்டையும், விபத்தையுமாவது சிறிதும் எண்ணாமல் தம் காரியத்தைப் பார்த்துக்கொண்டார்."

இதைக்கேட்டதும் பெர்ஸிவல் நாற்காலியிற் சாய்ந்துகொண்டு, "நீர் சொல்வதைக் கேட்க என் தலை சுற்றுகிறது. இவ்வளவு பெரிய அயோக்கியனா அந்த ஜோஸப்?" என்றான்.

"உம்முடைய கேசில் முக்கியமான பிரயாசமெல்லாங் கூடி ஏராளமான சாக்ஷியங்களும், பலவித அனுமானங்களும் இருந்ததைத்தவிரவேறொன்றுமில்லை. அநாவசியமும்,முன்னுக்குப்பின் ஒட்டாதவைகளுமாயிருந்துள்ள சாக்ஷியங்கள் முக்கியமான சாக்ஷியங்களைக் கண்டுபிடிக்க முடியாதபடி மறைத்துவிட்டன. எங்களுக்குக் கிடைத்த எல்லா சாக்ஷியங்களிலும், அநாவசியமானவைகளைத் தள்ளிவிட்டு, முக்கியமான சாக்ஷியங்களை வைத்துக்கொண்டு, அவைகளைப் பகுத்துந் தொகுத்தும் வரிசையாக்கிக் கேசுக்கு ஒத்துவரும்படி செய்வது மகாகஷ்டமாகி விட்டது. எப்பொழுது அன்றிரவு ஜோஸப் ஹாரிஸனுடன் வோகிங் (Woking) போவதாக ஏற்பாடு செய்திருந்தேனென்று சொன்னீரோ, அப்

பொழுதே கச்சேரிக்குவரும் வழிதெரிந்த ஜோஸப்பே தாம் ரயிலுக்குப் போகும்பொழுது உம்மை யழைக்கவந்திருக்க வேண்டுமென்று சங்கைகொண்டுவிட்டேன். பிறகு யாரோ உமது படுக்கையறையிற்புக எத்தனித்தாரென்று சொல்லவும் அவராகத்தானிருக்கவேண்டு மென்று நினைத்தேன். ஏனெனில், திருடன் வந்திருப்பதாயிருந்தால் பணங்காசு வைக்கப்பட்டுள்ள இடத்தை விட்டு, படுக்கையறைக்குட் பிரவேசிக்கமாட்டான். மேலும் என்றைத்தினம் இராத்திரி நீர் முதன்முதலில் பணிப்பெண்ணில்லாமல் தனியாகப் படுத்துறங்கினீரோ அன்றிரவு தெரிந்துகொண்டு வந்திருக்கிறான். அத்தோடுகூட நீர் ஒருவரும் எதிர்பாராதபடி பிரியார்பிரே வந்தவுடன், திடீரென்று அந்த அறையில் அதேயிரவில் வந்திருந்த ஜோஸப் ஹாரிஸனை வெளிப்படுத்தியதாக நீர் சொல்லிய விஷயமும் என் ஞாபகத்திற்கு வந்ததும், ஹாரிஸன் தான் எதையோ ஒளித்துவைத்திருந்து அன்றிரவு எடுக்க முடியாமல், நிர்ப்பந்தமாக வெளிப்பட்டுப், பிறகு பத்துவாரகாலமாக இரவில் வேறு பணிப்பெண்ணும் அன்னியும் படுத்திருந்ததனால் சமயம் வாய்க்காமல், ஒருவருமில்லாத அந்த முதலிரவில் அதை யெடுக்க முயன்றிருக்க வேண்டுமென்று தீர்மானித்தேன்.”

“நான் எவ்வளவு முட்டாள்தனம் போய்விட்டேன்.”

“நான் தெரிந்துகொண்டமட்டில் இந்தக்கேசிலுள்ள மர்மங்கள் இவைகள் தாம் என்று நினைக்கிறேன். நீர் காப்பிக்காகவேண்டிக் கீழே வேலைக்காரனிருக்கு மிடத்திற்குப் போனவுடனே ஏற்கனவே வழிதெரிந்துகொண்டிருந்தவராகிய உமது மைத்துனர் ஜோஸப் ஹாரிஸன் என்பவர் சார்லஸ் தெருவாசற்படி வழியாய் உமது ஆபீசுக்குள் நுழைந்திருக்கிறார். அங்கே ஒருவருமில்லாததுகண்டு அவர் உடனே மணியை யடித்திருக்கிறார். அந்தச் சமயத்தில் மேஜையின்மேல் வைத்திருந்த இந்த உடன்படிக்கைப் பத்திரம் அவர் கண்ணுக்குப் புலப்பட்டிருக்கவேண்டும். மேல் நோக்காக இதில் என்ன எழுதியிருந்ததென்பதை ஒருதரம் பார்த்தவுடன் இது மிகவும் முக்கியமானதொரு பத்திரமென்றும் ராஜாங்க சம்பந்தமான விஷயங்களைப் பற்றிய ரகஸ்ய உடன்படிக்கையென்றும், கைநொடித்துப்போயிருக்கிற தனக்குத் தெய்வானுக்கிரகத்

தால் கிடைத்திருக்கிற தென்றும், இதை யெடுத்துக்கொண்டு போனால் பெருத்த லாபமடையலாமென்று யெண்ணி, இதைச் சரேலென எடுத்துத் தமது சட்டைப்பையில் வைத்து மறைத்துக் கொண்டு வந்த வழியாகத் திரும்பி யோடிப்போயிருக்கிறார். கீழே படுத்திருந்த வேலைக்காரன் கண்விழித்துக்கொண்டு உம்மைப் பார்த்துத் திடுக்கிட் டெழுந்திருந்து, ‘இங்கே நீங்களிருக்கும் போது உயரவிருந்து யார் மணியை யடித்திருக்கிறார்கள்?’ என்று கேட்டு உமக்கு மணிச்சத்தத்தைப்பற்றி ஞாபகமூட்டுகிறதற்குள் ளாகச் சிலநிமிஷங்கள் ஆய்விட்டபடியால், மேலே வந்த உமது மைத்துனர் வந்தது தெரியாமல் ஓடிப்போக அவகாசமிருந்திருக் கிறது.

“அவர் உடனே முதல் வண்டியிலேயே ஏறி வோகிங்போய் தாம் திருடிப்போன பத்திரத்தைச்சாவகாசமாய்ப்படித்துப்பார்க் கையில், அது மிகவும் பெறுமானமுள்ள தென்று தெளிந்து, விலை பேசித்தீர்மானிக்கிற வரையில் பத்திரப்படுத்தி வைப்போமென்று எண்ணி அந்த இடத்தில் வைத்திருக்கிறார். உடனே நீர் திடீ ரென்று அவ்விடம் போய்விட்டீர். க்ஷணங்கூட முன்னெச்சரிக்கை யில்லாமல் நீர் உமது மைத்துனரை அந்த அறையை விட்டு அப்புறம் போம்படி சொன்னபடியால், அவர் அந்த க்ஷணமே தம் முடைய சாமான்களை யெல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு அப்பு றம் போகவேண்டியதாயிற்று. ஒளித்து வைத்திருந்த உடன் படிக்கையை அச்சமயம் மற்றைச் சாமான்களோடு எடுத்துப் போக முடியவில்லை. அன்றுமுதல் சமயம் பார்த்துக்கொண்டே குழிப்பிள்ளையைச் சுற்றுகின்ற நரியைப்போல வட்டமிட்டுக் கொண்டே யிருந்திருக்கிறார். நீரும், உமது மனைவி அன்னியும் பணிப்பெண்களும் ஸதா அந்த அறையில் இரவும் பகலும் இடை விடாது விழித்துக்கொண்டே யிருந்தபடியால் பத்திரத்தை அபக ரித்துப் போக முடியவில்லை. ஒருவருமில்லாத ஏகாந்த சமயம் எப் போது வாய்க்குமென்று ஜபம்பண்ணிக் கொண்டிருந்திருக்கிறார். ஒரு நாள் இராத்திரி பணிப்பெண்கள் யாவருமில்லாமல் நீர் மாத் திரம் தனியே படுத்திருக்கிற செய்தி அறிந்த உமது மைத்துனத் துரோகி நடுநிசியில் நீர் நன்றாய் உறங்கிப்போன சமயம் பார்த்து உள்ளே நுழைந்திருக்கிறார். உம்முடைய நல்லகாலம், அவரைப்

பிடித்த கெட்டகாலம் நீர் விழித்துக்கொண்டு விட்டீர். அன்றைக்கு மாத்திரம் நீர் சிறிது அஜாக்கிரதையாய் இருந்திருக்கும் பக்ஷத்தில் பத்திரம் அவன் கைவசமாகியிருக்கு மென்பதில்சந்தேகமேயில்லை. நல்ல வேளைக்கடையாளமாக, நீர் அன்றைக்குச் சாராயம் அதிகமாகக் குடித்திருக்கவில்லை யல்லவா ?"

"ஆம். நன்றாய் ஞாபகமிருக்கின்றது. வேண்டுமென்றே நான் அன்றைக்கு அதிகமாகக் குடிக்கவில்லை."

"நீர் மெய்ம்மறந்து மயங்கித் தூங்கவேண்டுமென்றே அன்புள்ள உமது மைத்துனர் பலமான சாராயத்தை ஊற்றித் தந்திருக்கிறார். நீர் அதைக் குடித்துவிட்டுப் பிரக்ஞையின்றி வீழ்ந்து கிடக்கப் போகிறீரென்றே அவர் எண்ணிக் கொண்டிருந்திருக்கிறார். நீர் அவர் எண்ணியபடி குடிக்கவில்லை. அது மாத்திரம் தெய்வாதீனந்தான். பத்திரம் அவ்விடத்தில் அகப்பட்டுக் கொண்டு விட்டபடியால், அதைக் கைப்பற்றுகிற வரைக்கும் அவர் அடிக்கடி அம்மாதிரி சமயம் வாய்க்கும்போதெல்லாம் உட்புகுவதற்கு முயற்சிப்பாரென்று நான் நிச்சயமாய் அறிந்துகொண்டேன். இந்த அபிப்பிராயத்தின் பேரில்தான், நான் உம்மை அவ்விடம்விட்டுக் கிளப்பி லண்டனுக்கு அழைத்து வருவதாக ஏற்பாடுசெய்தேன். நீரும் ஹாரிஸனும் தோட்டத்திலிருக்கும் போது தனியே அறையிலுட்கார்ந்துகொண்டிருந்த உமதுமனைவியிருக்கு மிடத்திற்கு நான் முன்னடியேபோனது உமக்கு ஞாபகமிருக்கலாமே. 'நீர் எங்களோடு வரவேண்டாம்; அங்கேயேயிரும்' என்று நான் உமது மனைவியிடஞ் சொன்னதும் உமக்கு நினைவிருக்குமே. ஒருவருமில்லாத சமயம்பார்த்து உம்முடைய மனைவியுடன் பேசவேண்டுமென்ற கருத்தைக்கொண்டுதான் அங்ஙனம் செய்தேன். நீங்களிருவரும் தோட்டத்திலிருந்து வருவதற்குள்ளாக நான் உமது படுக்கையறைப் பக்கம் சென்று அன்னியை நோக்கி, பகல்முழுதும் அரை நிமிஷங்கூட அவ்விடம் விட்டுப் பெயராமல் அந்த அறையிலேயே யிருக்கும்படிக்கும், நன்றாய் இருட்டிப்போனவுடன் ஒருவருமறியாமல் வெளிப்பக்கமாக அவ்வறையைப் பூட்டிக்கொண்டு வெளியே படுக்கப் போம்படிக்கும் ஏற்பாடுசெய்து, ஜோஸப் ஹாரிஸனுக்குத் தடையின்றி அவ்

வறைக்குட் பிரவேசிக்கும்படி இடங்கொடுத்தேன். ஜோஸப்ஹாரி ஸனுக்கு அவர் எதிர்பார்த்தபடி சௌகரியங்களைச் செய்து கொடுத்துவிட்டு, நான் ஏற்கனவே சொன்னமாதிரி அந்தப் பவள மல்லிகைச் செடி மறைவில் பதுங்கிக்கொண்டு கிடந்தேன்."

"எல்லாம் சரிதான், ஹண்டர்! உனக்கு அப்பத்திரம் அங்கேயிருப்பது தெரியுமானால், இவ்விதம் கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிப்பதுபோல இவ்வளவு தூரம் ஊர் சுற்றுவானேன்? உனக்கும் அது அங்கிருக்கும் விஷயத்தில் சந்தேகந்தானே?" என்று நான் கேட்டேன்.

"பத்திரம் அங்கிருக்கிற தென்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியும். வைத்தவனே எடுக்கட்டும். நாம் அறையையெல்லாம் புரட்டிக்கொண்டு கிடப்பானேன் என்பது ஒன்று. நாம் எடுத்து விடும் பக்ஷத்தில், மகாபாபியாகிய அவருக்குத் தண்டனை யில்லாமல் தப்பித்துக்கொள்ள இடமுண்டாகிவிடும், எதற்கும் கையுங்களவுமாய்ப் பிடிப்பது நல்லதென்று இந்த உபாயத்தைச் செய்தேன்."

"நல்ல காரணந்தான்; திருடவந்த அந்த ஹாரிஸன் கிரமமாக வாசற்படி வழியாகவே வந்திருக்கலாமே, அப்படிச் செய்யாமல் ஜன்னலின் வழியாய் வருவதற்கு என் கஷ்டப்படவேண்டும்?" என்று நான் திரும்பவும் ஹண்டரைக் கேட்டேன்.

"கிரமமாக வாசற்படி வழியாய் வருவதாயிருந்தால் எழு படுக்கையறைகளைத் தாண்டிக்கொண்டு வரவேண்டும், அகாலத்தில் அவ்விதம் வருவதாயிருந்தால் யாராவது கண்டு சந்தேகப்படக் கூடுமென்று கருதி அங்ஙனம் வரவில்லை. தவிர, வெளிப்பட்டு ஓடுவதற்குச் சௌகரியமா யிருக்குமென்று கருதி ஜன்னலின் வழியாய் வந்திருக்கிறான். தோட்டத்தின் வழியாய்த் தப்பித்துக் கொண்டோடுவதற்கு அதுதான் மிகச் சுலபமான வழி. வெப்ஸ்ட்டர்! இன்னும் ஏதாவது சந்தேகமுண்டானாலுங் கேளப்பா."

"ஹண்டர்! ஜோஸப் தன் கையில் கத்தியை வைத்துக் கொண்டிருந்தது என்னைக் கொல்லவேண்டுமென்ற நோக்கத்

தோடல்லவென்று சொல்லுங்கள். ஜன்னற் கதவைத் துளைப்பதற்காகவும், மற்றவைகளுக்காகவும் உபயோகமாகுமென்று கருதிக் கேவலம் ஆயுதமாகக் கொண்டுவந்தானென்பதுதானே உங்கள் தீர்மானம்?" என்று பெர்ஸிவல் கேட்டான்.

"அப்படியுமிருக்கலாம். ஆனால், கிருபாநிதியாகிய அந்த ஜோஸப் ஹாரிஸன் விஷயத்தில் அப்படி நினைக்கக்கூடாது. அவர் சமயம் வந்தால் எதையும் செய்வார். உம்மை மட்டுமல்ல. அவசியமானால் உம்முடைய மனைவியாகிய தம் சகோதரியையும் கொலைசெய்ய அவர் சிறிதும் பின்னிடைய மாட்டார். அவ்வளவு ஜீவகாருண்யமுள்ள புருஷோத்தமர் அவர்."

"அப்படியா! நல்ல மனைவி. நல்ல மைத்துனன்!"

"பெர்ஸிவல்! அன்னியை அப்படி நினைக்கவேண்டாம். உத்தமியென்று அவளைத்தான் சொல்லவேண்டும். மழைபொழிவதும், வெய்யில் காய்வதும் அவளுக்காகவே தான். மகாபதிவிரதை. அவளுடைய குணத்தினாலேயே நீர் தப்பித்தீரென்று வைத்துக்கொள்ளும். பாம்பினிடத்தில் விஷமும் ரத்னமுங் கலந்திருக்கவில்லையா? விஷத்தோடு சேர்ந்திருந்ததென்கிற காரணத்தால் நாக ரத்னத்தைக்கொள்ளாது தள்ளி விடுபவரார்? உம்முடைய மனைவிக்கிணையான மங்கையர்களும் இவ்வுலகிலிருக்கிறார்களா? 'தங்கள் நாயகரிற் றெய்வம் தவம்பிறி தில்லையென் றெண்ணும், மங்கை' உமது மனைவியே யல்லவா?" என்றான்.

பெர்ஸிவல் மிகவும் மனக்களிப்புடன் ஹண்டருக்கும் எனக்கும் வந்தன மளித்துவிட்டு விடைபெற்று ஊருக்குச் சென்றான். இப்பால் நாங்கள் கேள்விப்பட்டதில். அவன் தன் மாமனாகிய லார்டு ஹோல்டுஹர்ஸ்ட்டு என்பவருடைய ஸ்தானத்தைப்பெற்று தன் அரும்பெறற் காதலியாகிய அன்னி யென்பவளோடும், புத்திரர்களோடும் சுகமாக வாழ்ந்துகொண்டிருக்கின்றானென்று தெரியவந்தது.

ஹண்டருடைய சாமர்த்தியங்களை நன்கு விளக்கவல்ல மற்றைச் சரித்திரங்களையும் அடுத்த பகுதியில் விளக்குகிறேன். அவற்றை அங்கே கண்டுகொள்க.

முற்றிற்று.